முரசொலி

ஆசிரியர் :- மு. கருணாநிதி...



பொங்கல் மலர்

1955.

கோட்டாறு பெரியநாயகர்
அ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

சிவாஜி-கணேசன்


பத்மினி

இராகேந்திரன்

நேஷனல் புரொடக்ஷன்ஸ்

நடித்தது...

ராஜா ராணி



கதை-வசனம்.

மு.கருணாநிதி.

டைரக்ஷன்

பீம்சிங்.

ஸ்டுடியோ: நியூடோன்

உரிமையாளர்: கேவி பிலிம்ஸ் லிமிடெட்.

Erasan

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

அண்ணா தீட்டியவை

கலிங்கராணி	... 3—0—0
ரோமாபுரி ராணிகள்	... 2—4—0
கம்பரசம்	... 1—8—0
கபோதிபுரக் காதல்	... 1—4—0
இலட்சிய வரலாறு	... 1—0—0
ஆரிய மாயை	... 1—0—0
குமரிக்கோட்டம்	... 1—0—0
கற்பனைச் சித்திரம்	... 1—0—0
ஆறு கதைகள்	... 1—0—0
அறப்போர்	... 1—0—0
உலகப் பெரியார் காந்தி	... 1—0—0
தீ பரவட்டும்	... 1—0—0
பணத் தோட்டம்	... 1—0—0
சிறு கதைகள்	... 1—0—0
1858—1948	... 1—0—0
வர்ணஸ்ரமம்	... 0-12—0
நிலையும் நினைப்பும்	... 0-12—0
நாம்	... 0-12—0
அவர்கள் சந்திப்பு	... 0—3—0

கே. ஏ. மதியழகன்

நன்றி யாருக்கு ?	... 1—0—0
அறிவின் தூதர்கள்	... 0-12—0

இரா. செழியன்

ராஜாடி ராஜா	... 0-12—0
பொது அறிவு	... 0—8—0

நாவலர். நெடுஞ்செழியன்

பண்டைக் கிரேக்கம்	... 1—0—0
கண்ணீரும் செங்நீரும் வளர்த்த கழகம்	... 0-12—0
மறைந்த திராவிடம்	... 0—3—0

கலைஞர். கருணாநிதி

இரத்தக் கண்ணீர்	... 2—0—0
ஆறுமாதக் கடுங்காவல்	... 2—0—0
விடுதலைக் கிளர்ச்சி	... 1—0—0
நாடும் நாடகமும்	... 1—0—0
பரப்பிரம்மம்	... 1—0—0
முத்தாரம்	... 0-12—0
பூந்தோட்டம்	... 0—4—0

அரங்கண்ணல்

ரோம்	... 1—8—0
ரஸ்புடீன்	... 1—8—0
உடைந்த ஆசை	... 1—0—0
இதய கீதம்	... 0-12—0

ப. வாணன்

ரஷ்ய இலக்கியம்	... 1—8—0

தில்லை—வில்லாளன்

கிளிக் கூண்டு	... 1—0—0

சி. பி. சிற்றரசு

கொலம்பஸ்	... 1—0—0
சாக்கிய சிம்மன்	... 1—0—0
கணவனல்ல	... 1—0—0

★

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் ::: திருச்சி.


ஆர்.ஆர். பிக்சர்ஸ்
பெருமையுடன் அளிக்கும்
தலைகாவலி
...தமிழ்...
டைரக்ஷன்: ப.நீலகண்டன்

அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்
எங்கள் உள்ளம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!



சிறந்த வேலைப்பாடுடன்
நவீன தினுசுகளில்

தங்க நகைகள்!



வெள்ளிப்
பாத்திரங்கள்!

-: நாணயத்திற்கும் நம்பிக்கைக்கும் :-

பி. ஆர். முருகைய செட்டியார்,

★ ஜ்வல்லர் ★

விஜயபுரம் :: தஞ்சை ஜில்லா



—: தெ. 33.

எங்கள் கம்பெனியில்

தயாராகும் பட்டு, நூல்
ஜமக்காளங்கள், பைகள், பெட்சீட்,
போர்வைகளுக்கு

ஆர்டர்கள் சேகரிக்க கமிஷன்

★ ஏஜண்டுகள் தேவை. ★

எல்லா இயக்கக் கொடிகளும்
பெயர்களும் ஜமக்காளங்களில்
பொறித்துக் கொடுக்கப்படும்.
சாம்பிள்களுக்கு முன்பணம் (டிபாசிட்)
கட்டி ஏஜன்சி எடுத்துக்
கொள்பவர்கள் கீழே காணும்
விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

கார்த்திகேயன் டெக்ஸ்டைல்ஸ்,
ஜமக்காள வியாபாரம்
பவானி, (போஸ்டு)

அச்சுக்கலை இருபதாம் நூற்றாண்டில்
நாகரீகத்தின் அச்சாணியாக
இருக்கும் போது,

★★★

அந்த அழகான அச்சு வேலையில் ஈடு
படடிருப்பதற்காக நாங்கள் டெருமைப்
படுகிறோம்.

★★

அன்பர்களுக்கு
எங்கள் பொங்கல் வாழ்த்துகள்

தியாகி பிரஸ்
சுபதியா மான்சன்ஸ்
38, மவுன்ட்ரோடு
சென்னை.

ஜனவரி 5 முதல்
நடைபெறுகிறது

மேனகா

விரைவில் வருகிறது!

முதல்தேதி, செந்தாமரை

கோமதியின் காதலன்

கல்வனின் காதலி

வெறும் பேச்சல்ல

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி....

ராஜாராணி } திருச்சி...
தஞ்சாவூர்...

ராமநாதன் பிக்சர்ஸ்

காரைக்குடி

Anand...

The Asiatic Government Security Life & General Assurance Company Limited.

Registered Office :–

" PRITHVI BUILDINGS "

KEMPEGOWDA ROAD, BANGALORE CITY.

Paid - up Capital .... **Rs. 10 Lakhs**

Total Assets Exceed ... . **Rs. 93 Lakhs**

Transacts

LIFE, FIRE, MARINE, MOTOR

and

All other classes of Insurance Business

Central Office:

"PRITHVI BUILDINGS"

364-366, Netaji Road, MADRAS-1.

புதுமைக் கருத்துகள் ★ விற்பனையாகின்றன.

உரிமைக்கிளர்ச்சி	என். எஸ். இளங்கோ	... 0—8—0
பேனவீரன்	வி. சிவப்பிரகாசம் பி. ஏ.	... 0—8—0
மன்னிப்பு (நாடகம்)	தோழியர் அருண்மொழி பி. ஒ. எல்	... 1—0—0
இடிந்தகோயில்	என். எஸ். இளங்கோ	... 1—0—0
ஆச்சார்யா	தோழியர் பூங்கோதை	... 1—0—0
அருவி அழைக்கிறது	டி. ஏ. துரைராசன் பி. ஏ.	... 1—0—0
கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை		... 2—0—0

எழுதுக:- **திருச்சி மன்றம்,** தெப்பக்குளம், திருச்சி.



"சிட்டு சிரிக்கிறது...
ஜீவக்களை சொட்டுகிறது"

★

உயிரோட்டமுள்ள புகைப்
படங்கள் எடுப்பதற்கு
இதோ நாங்களிருக்கிறோம்!


★

நண்பர்களுக்கு
எங்களது
பொங்கல் வாழ்த்துகள்!

மெட்ராஸ் போட்டோ அவுஸ்,
(உரிமையாளர்: வி. ஏ. வி. ராசன்)
வேலூர்

--: பொங்கல் நன்னாளில் :--
எங்கள் மங்கள வாழ்த்துகள்.

★



முல்லைச்சரமோ முத்தாரமோ
என உங்கள் துணிகளை
வெண்மையாக்கும் சோப்புகளை
நாங்கள்தான் தயாரிக்கிறோம்.

★

786, சங்கு சோப்பு
தொழிற்சாலை, அறந்தாங்கி,
தஞ்சை ஜில்லா.



ஆடைகளுக்கு நிலா மெருகு தரும் 'சோப்' இதுபோல் வேறில்லை!

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக !



எமது
வணிகர்களுக்கும்
எமது
ஆதரவாளர்களுக்கும்
மங்களகரமான



பொங்கல் வாழ்த்துகள்

வெண்சங்கு
சீயக்காய் தூள்
குணத்திலும் மணத்திலும்
சிறந்தது

செல்வம் ராணி
ஊதுபத்திகள்
மணத்தில் சிறந்தது

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய் தூள் பாக்டரி
செல்வம் பரிமளச் சாலை,
3037-38 டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர்,



பொங்கல் திருநாளன்று எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
ஏ. எஸ். ராமன்.

கண் கண்ணாடிகள்

டாக்டரின் குறிப்புப்படி கண்பார்வைக்கும் கண் குளிர்ச்சிக்கும் புதுமாதிரியான பிரேமகளுடன் தயாரித்து உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

ராமன் ஆப்டிக்கல் அவுஸ்

அப்பா பில்டிங்ஸ், 286 சைனபஜார்,
சென்னை—1



பொங்கல் மலர்
பொறுப்பாளர்:
மூல்லை—சத்தி.

பத்திரிகை பொறுப்பாளர்:
மாறன், பி. ஏ. (ஹானர்ஸ்.)

உதவி ஆசிரியர் :
எஸ். எஸ். தென்னரசு

நிர்வாகம்:
சி. டி. எம்.

அலுவலகப் பகுதி:
சொர்ணம் (பிறைவானம்)
ராமச்சந்திரன்.

அச்சகப் பகுதி:
கி. வே. முருகன்
என். சம்மந்தம்
எஸ். பழனி
ராஜன்
டி. ஏகாம்பரம்.

ஓவியம்: இராசன்
பைண்டிங்: கே. மாசிலாமணி.

விலை ரூபாய் இரண்டு
அச்சிட்டோர்:
முரசொலி அச்சகம்
4-128 மௌண்ட் ரோட்
சென்னை—6.



புதுமுன்..

கண்கள் ...	...	9
பொங்கலோ பொங்கல் ...	...	13
அந்த ஓவியம்! ...	...	15
காலம் மாறினால்...? ...	...	16
வாழ்த்துவோம்	வாணிதாசன்	18
மறைந்தும் மறையாத மாணிக்கங்கள் ...	...	19
அண்ணா	... மூவர்ண ஓவியம்	
இவர்களுக்கு இடையே	அறிஞர் அண்ணா	23
ஏன்?	கண்ணதாசன்	28
அறிவகம்	எஸ். எஸ். தென்னரசு	32
பண்பும் பணமும்	இரா. நெடுஞ்செழியன்	41
ஓவியக்கலையே உலகப்-பொதுமொழி	பாலு சகோதரர்கள் ...	46
இராமன் குற்றமற்றவனா?	சோமசுந்தர பாரதியார்	49
மறத்தி	கருணாநிதி ...	53
நான்கு எண்ணங்கள்	மு. வரதராசன் ...	57
சிக்கல்	தில்லை-வில்லாளன் ...	60
கண்களும் காதலும்	திருக்குறள் முனுசாமி	65
எனது லட்சியம்	என். எஸ். கே. ...	69
அஞ்சலை	மா. தங்கவேலர் ...	72
ஆசியாவின் வீரஜோதி	கா. அப்பாதுரை ...	76
திராவிட மாணவர் அணிவகுப்பு	கருணானந்தம் ...	80
வெறும் பேச்சல்ல	அருண்மொழி ...	84
பத்திரிகை பலம்	ரா. வேங்கடசாமி ...	86
சிறிய நிலவும் பெரிய நட்சத்திரமும்	நா. பா. ...	89
கொடி வளர்ந்த கதை	... ...	92
ஆச்சாரியாரின் சிரார்த்தம்	கா. அன்பழகன் ...	96
நாகை தி.மு.க. ஒரு புதுமைக்கோயில்	தமிழ்ப்பித்தன் ...	102
சேர்ந்தாரைக் கொல்லி	கி.ஆ.பெ. விசுவநாதம்	105
எல்லோரும் கேட்டார்கள்	சி. பி. சிற்றரசு ...	109
கொல்லாமற் கொன்ற வறுமை	புதுவை சிவப்பிரகாசம்	113
நாவுக்கு இழிவு	இளமுருகு ...	114
அவன் ஓர் நாத்திகன்	வி. சிவப்பிரகாசம் ...	116
உரிமைக்கு வித்திட்ட உத்தமி	சத்தியவாணிமுத்து ...	119
ஆசைமுகம்	மூல்லை சத்தி ...	124
கலையும் திரையும்	ஏ. காசிலிங்கம் ...	128
நம்நாடு	வே. சண்முகசுந்தரம்	134
சிதைந்த சித்திரம்	ரவி ...	139
கேடி	இரெ. இளம்வழுதி ...	140
அன்றைய நிகழ்ச்சிகள்	எஸ்.எஸ். ராஜேந்திரன்	144
இலட்சிய பூமி	இருதயராஜ் ...	147
நினைவு அலைகள்	என். வி. நடராசன் ...	153
நக்கீரன் அறுபது	சுரதா ...	161
வெந்தணலில்	கே. ஏ. மதியழகன் ...	167
இகவாழ்வு	ப. வாணன் ...	173
பேசாத வீணை	அரங்கண்ணல் ...	176
வடபுலம் வென்ற தமிழ் வேந்தர்கள்!	என். எஸ். இளங்கோ	185
மணிமகுடம்	மு. கருணாநிதி ...	188





பொங்கலோ பொங்கல்!

கடல் கத்தும் ஞாலத்தின் உயிர் போன்றோரின் பொன்னுள்—உழவர் திருநாள்—தை முதல் நாள்! இந்த நாளிலே 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை' செய்வோரின் இல்லங்களிலே நாம் காணுகின்ற காட்சிதான் எவ்வளவு இன்பமானது!

உளி பட்டு ஒளி சிந்தும் தங்கக் குன்றுபோல குவிந் திருக்கும் செந்நெல் மணிகள்—மகன் பிறந்தபோது உண் டான மகிழ்ச்சியுடன், அதை அறுத்துச் சேர்த்தவன், அத னருகில்!

ஆமையோடு போல, உழைத்துழைத்து குறுகிவிட்ட எருது இனம்—செண்பகப் பூ மாலையிட்டு செய்நன்றி காட்டு கின்ற தோழன், அவைகளின் பக்கத்தில்!

புதுப் பானையிலே இட்ட பால் அமுதமெனப் பொங்கும் போது அவனது முகமும் குமுதமென விரிகிறது. காடு வெட்டி மேடு திருத்திய நாள்முதல், அவைகளை அறுத்து வந்து புதுக் கலத்திலிட்டு பொங்கலிடும் நாள் வரை, நடந்த நிகழ்ச்சிகள் அவன் நெஞ்சிலே சுழல்கின்றன. மண்ணுக்கு பரம்படித்துப் பண்படுத்தியது, நிலம் பழித்து நீர்பாய்ச்சியது-கனல் சொரியும் கதிரவனின் கொடுமைக்கு ஆளாகி நின்று அவைகளைக் கண்காணித்தது--முளை கண்ட காலத்து கார் கண்ட மயில்போல களிப்பிலாழ்ந்தது, பின்னர் களை கண்ட நேரத்தில் தாவிப் பாய்ந்து அவைகளைக் கொய்தெறிந்தது—இவை யெல்லாம் அவனது நினைவுக்கு வருகிறது. அவ்வளவு உழைப்பிற்குப் பிறகுதான் அவனுல் செந்நெல்மணிக் கதி ரைத் கண்டெடுக்க முடிகிறது. அப்படி உழைத்தவன், தன் னுடைய உழைப்பின் பெருமையை உணரும் நாள், பொங்கல் பெருநாள்.

தோள் வலிமையினுல் தானியம் குவித்தவன் தான் நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்த்துக் கொள்ளும் திருநாள்—இந்த உழவர் பெருநாள்!

பொதுவாக — திருநாட் காலங்களில் சிந்தை செழிக்க வைக்கும் கருத்துக்களை மனதுள்ளே கோர்த்துக் கொள்வது தான் இயல்பு.

திருமண மேடையில், கோதையைக் கைப்பிடிக்கும் காதலன், தான் கோவலனுகிவிடாமல் ஒத்த உணர்ச்சி யோடு வாழ்வு நடத்துவதாக சங்கல்பம் செய்து கொள் கிறான்.

பல்கலைக் கழகத்து பட்டமளிப்பு விழாவின்போது, தான் கற்றபடி நிற்க, கற்றவற்றை உலகிற்குப் பயன்படுத்த மாணவன் உறுதி யெடுத்துக் கொள்கிறான்.

இந்த இன்ப தினத்தன்றும் நல்ல கொள்கை யொன்றை நம் நெஞ்சு புகச் செய்ய நாம் முயல வேண்டும்.

அதோ, அந்தப் படத்திலே மாமிச மலையென, புழுதி கிளப்பிப் பாய்ந்து வருகிறது, எருமை ஒன்று. வேலினும் கூர்மையான அதன் கொம்புகளைப் பற்றி, அதை மண்ணிலே சாய்த்துவிட நினைக்கிறான், வீரன் ஒருவன்.

அந்தக் காட்டு விலங்கின் கழுத்தை யொடிக்க, பலருக்கு பட்டாள அணி வகுப்புகள் தேவைப் பட்டிருக்கின்றன— இவனோ தனிமனிதனாக, தினவு கொண்ட தோளொன்றையே துணையாகக் கொண்டு அந்த மிருகத்தின் திமிரடக்கக் களத்திலே குதித்து விட்டான்.

அந்தத் தனிமனிதனை திராவிட முன்னேற்றக் கழகமாக, அந்த மாமிச மலையை வலிமை கொண்ட வட நாட்டு ஏகாதிபத்தியமாக, எங்கே, ஒரு 'நினைவுச் சித்திரம்' தீட்டிக் கொள்ளுங்கள், பார்ப்போம்!

இந்த காட்டெருமையின் 'திமிரி'லே டாட்டா, பிர்லாக்கள் சேர்த்துக் கொடுத்த கொழுப்பு இருக்கிறது—

வெளிநாட்டு பெருந்தனக்காரர்கள் உதவிய இரும்புக் கவசமிருக்கிறது—

இத்தனையும் கொண்ட அந்த 'இமயத்தை' நாம் எதிர்க்கிறோம்—

கனத்து நிற்கும் திராவிட சமுதாயத்தின் கழுத்தறுக்கப் பார்க்கும், வடவர் ஆதிபத்யத்தை எதிர்க்கிறோம்!

இன்னும் எத்தனை நாட்களுக்குதான் 'கொடு' என்று கேட்டதும், 'இந்தா, எடு' என்று நீட்டும் இளிச்சவாயர்களாக நாம் இருக்க வேண்டும்?

"சூழ்ச்சியுள்ளத்தால் எம்மைச் சூழ்ந்திடும் கெடுமதியாளரே—ஊதலையாகி விட்டது எமதுள்ளம்!

"எம் அன்னையின் பொலிவை உருத்தெரியாமல் ஆக்கி விட்ட அடிமைத் தளையை உடைத்தெறியாமல் உட்கார மாட்டோம்"—என்ற இலட்சிய வாசகங்களை நாம் ஒரு முறை சொல்லிக் கொள்வோம்.

இஞ்சியும் மஞ்சளும் நம்மைக் கப்பியிருக்கும் இழிவைத் துடைத்தெறியட்டும்!

எங்கும் இனிக்கும் இளங்கரும்பு இனிவரும் வாழ்வை எடுத்துரைக்கட்டும்!

பொங்குக பொங்கல்!
பொங்கி எழுக இனஉணர்ச்சி!

அந்த ஓவியம்!

தென்பாண்டிக் கடலோரம் — விண்மீன்களோடு போட்டியிட கரையோரத்திலே கண்சிமிட்டி இறைந்து கிடக்கிறது மணலொடு புதைந்த 'காக்காபொன்'!

கட்டாணி முத்துகளை கருவுற்றிருக்கும் அந்த நீலக்கடல் ஓங்காரப் பெருங்கூச்சல் எழுப்பியபடி இருக்கிறது. வேங்கையைக் கண்டு வயிறு இரைக்க இரைக்க வெறுண்டு ஓடும் புள்ளிமான் கூட்டத்தைப் போல, பேரலைகள் நிலம் நோக்கி ஓடிவந்த வண்ணம் இருக்கின்றன.

முக்கனி சொரிந்து — அதனினும் இனிய முத்தமிழ் முழங்கும் இத்தமிழ் நாட்டின் ஆழம் காணமுடியாத அந்தப் பெரிய குளத்தில், யவனத்துநாவாய்களும், சாவகத்துக் கப்பல்களும், சோளக்கதிரிலே ஒன்றன் பின் ஒன்றாகப் பொருந்தியிருக்கும் தானிய மணிகளைப் போல, நங்கூரம் பாய்ச்சப் பட்டு, அருகருகே நின்று கொண்டிருக்கின்றன. பத்துப் பாட்டிலே இதைக் குறிக்கும் அழகு மிகும் உவமையொன்று காணக் கிடைக்கிறது.

கொள் தின்பதற்கு, பந்தியிலே வரிசையாய் வந்து நிற்கும் குதிரைக் கூட்டத்தைப்போல, அந்த அயல் நாட்டுக் கப்பல்கள் தமிழகத்துக் கரையை முற்றுகையிட்டிருக்கின்றனவாம்!

இந்தப் பிண்ணனிகளோடுதான் கண் கவரும் காட்சியொன்று கடலை அடுத்த மணல் வெளியிலே நடைபெறுகிறது.

செங்கதிர் எழுமுன்னே எழுந்து, கனி மொழியாளுக்கு பிரிவுகூறி, கட்டுமரத்தை மிதக்கவிட்டு கடலேகுகிறான், தமிழ்மகன் ஒருவன். அவன் கடலுக்குச் சென்றது மீன் பிடிக்க அல்ல; முத்தெடுக்க!

காற்றுக்குழலுக்கு பல விநாடிகள் ஓய்வு தந்து; மூச்சடக்கி; நிலமடந்தை அணிந்திருக்கும் நீர்க்கவசத்தைக் கிழித்தெறிந்து, சமுத்திரத்தின் அஸ்திவாரத்திற்குச் செல்கிறான், அவன்! அங்கே அலைந்து கொண்டிருக்கும் சிப்பிகளை சேர்த்தபடி மேல் முகப்பிற்கு வருகிறான்!

தென்கடல் மேயும் அந்த சிப்பிகள் பெற்றெடுத்த மதலைகள்தான் ரோம சாம்ராஜ்யத்து காமவேள் நடனசாலைகளை அலங்கரித்த கண் கவரும் முத்துகள் — எகிப்து நாட்டு எழிலரசி கிளியோபத்ராவின் சாராயக் கோப்பைக்குள் சந்திரவொளி எழுப்பிய நட்சத்திரத் துண்டுகள்!

பிரித்தெடுக்கப்பட்ட அந்த முத்துகள் யாவும் சிறுசிறு குன்றுகளாகக் குவிக்கப்படுகின்றன. பசும் பொன் முடிச்சுகள் பல பெற்று, படியால் அளந்து, வணிக வேந்தரின் மடியிலே அவனும், அவன் மனைவியுமாகச் சேர்ந்து கொட்டுகின்றனர்,

ஆழிதாண்டி தென்னகத்தின் புகழ், வெளி நாட்டிற்கு எற்றுமதியாகிக் கொண்டிருக்கும் அந்த நேரத்திலே, புலிநகர் வீரனின் பூங் கொடியாள் ஆரவாரம் எழுப்பும் கடலை சற்று திரும்பிப் பார்க்கிறாள்—ஓடிவந்த கலைப் பிளந்து அலைகளின் கூட்டம் நுரை கக்குகிறது. பூந்தாது உண்டு களித்துப்போன வண்டு களைப்புமே ஒரு ஓசை — புளித்துப்போன மதுக்குடம் எழுப்புமே ஒரு ஒலி — அதை போன்ற 'உஸ்' என்ற ஒலியை அந்த நுரைகள் எழுப்பி மறைகின்றன. பால் போன்ற நுரையும், தன் கைவிரலை அலங்கரிக்கும்' பட்டொளி பரப்புகிற முத்தும் ஒன்றாயிருப்பதைக் கண்டு அந்த மான்விழியாள் வியக்கிறாள் —


ஆனால் அருகிலிருக்கும் அவனை, பல்லி முட்டைகளைப் பழிக்கும் அவளது பற்களுக்கும், கடைந்தெடுத்த முத்திற்கும் வித்தியாசம் தெரியாது விழிக்கிறான், அவைகளுக்குள்ள ஒற்றுமை கண்டு திகைக்கிறான்!

அந்த ஜோடிப் புருக்கள் விடுவிக்க முடியாது தவிக்கும் புதிரைத்தான், நமது பொங்கல் மலரின் முகப்பு விளக்குகிறது.

ஓவியம்: 'முரசொலி'
இராசன்

காலம் மாறினால்.....


①
நான்சென்ஸ்
நான்சென்ஸ்
நான்சென்ஸ்
②
TEL OFFICE
③
④
⑤
கல்கி தீபாவளி மலர்
⑥
ஆனந்த விகடன். கல்கி
சுதேசமித்திரன். தீராவிட
நாடு பிரிவினை மலர்கள்
இங்கே கிடைக்கும்..
திராவிட நாடு பிரிவினை மலர்கள்... இங்கே கிடைக்கும்.
ஜராகத்



இப்படிக்கான் நடக்கும்...

பொழுத்துவோம்

கவிஞர் வாணிதாசன்

தங்கத்திலே வார்த்தெ டுத்த
தட்டைப் போலே செம்பரிதி
இங்கெழுந்தான்! வாழ்கதமிழ்ப் பொங்கல்!—நமக்கு
இன்றலவோ வந்ததுதைத் திங்கள்!

கங்குலைக் சீழித்தெ றிந்து
கார்குளிரை வெட்டி வீழ்த்தி
எங்கும்ஒளி பாய்ச்சுகின்ருன் பொன்னே!—வளர்
இன்பமின்பம்! இன்டமின்பம்! என்னே!

செங்கரும்பு வெட்டி வந்து
செய்யில்நெல் அறுத்து வந்து
பொங்கிடுவோம் புத்தம்புதுப் பொங்கல்!—நாம்
பங்கிடுவோம் யாவருக்கும் பொங்கல்!

மங்கையரும் கன்னியரும்
வாய்குளிரத் தமிழ்பாடி
மங்கலவிழா வெடுப்போம் வாரீர்!—தமிழ
பொங்கலுண்(டு) ஆடிடுவோம் சேரீர்!



சங்கெடுத்து ஊதிடுவோம்!
தமிழ்முரசம் ஆர்த்திடுவோம்!
சிங்கத்தமிழ்ப் பெண்களடி நாமே! இன்று
திராவிடத்தை நீடுவாழ்த்து வோமே!



'சுயமரியாதைக்காரன்' - என்ற வார்த்தை காதில் விழுந்ததும் பொதுமக்களிடமிருந்து கேலிச் சிரிப்பு கிளம்பும் அந்த நாட்களிலே, 'வீலோபோகுமா இந்த வேலையற்றோர் பேச்சு' என்ற 'திண்ணை விமர்சனம்' கனியாகப் பாய்ந்து வந்த காலத்திலே, குலையாத உறுதியுடன் கோடை இடியென கர்ஜிப்பார் — கோழையினுள்ளமும் உரம் பெறும் வண்ணம், குன்று வீழ் அருவியென என்றும் நிலைத்திருக்கும் நமது கருத்துக் கனி எடுத்துரைப்பார். அந்த அஞ்சாத நெஞ்சனும் அழகிரிசாமி, எட்டு திக்கும் புகழ் பரப்பி ஜெயபேரிகை கொட்டி வாழ்ந்த மூவேந்தர் குலத்தை வளர்த்த வீரன் துவண்டுபோன நெஞ்சினருக்கு தோள் வலிமையூட்டிய தோழன்—தொண்டன்—பட்டுக்கோட்டை நகரியக்கத்துக்கு அளித்த பட்டாளத் தலைவன்!

வேழத்தை வீழ்த்தப் பாய்ந்திடும் வேங்கையென அன்று பகைவர் அமைத்த களத்தைத் தேடித் தேடி அலைந்த அந்த தீரன், சோழன் தலைநகராம் தஞ்சையிலே இன்று கல்லறைச் செல்வமாய்—சமாதிக் குழந்தையாய் நம்மையெல்லாம் கலங்க விட்டுத் தூங்குகிறான்!

'இந்தி எதிர்ப்பு' சமயத்தில் கையிலே முத்தமிழ்க்கொடியுடன், காடுமேடுகள் பல சுற்றி அந்தக் 'காளை நிகர்த்தவன்' எதிர்ப்பு முன்னணியை பலப்படுத்திய நேரத்தில் எடுத்த படம், இது!

மறைந்தும் மறையாத



1. தியாகராயர் 2. நாயர் 3.சௌந்தர பாண்டியனர் 4. பனகல் 5. பன்னீர் செல்வம்.

மாணிக்கங்கள் !



6. (தாளமுத்து) நடராசன், 7. உடையார்பாளையம் வேலாயுதம், 8. லால்குடி நடராசன்,
9. சென்னை-பாண்டியன், 10. குமாரவேல், 11. நெல்லிக்குப்பம்-மஜீத்.

சின்னையா



கரம்பு நிலத்திற்கிடையே தஞ்சை மாவட்டம் கழனி வெளியாய் காட்சி தருகிறது, இன்று! அப்படித்தான் ஒரு காலத்தில் பழமை போதையில் மூழ்கிக் கிடந்த தஞ்சையும் இன்று பகுத் தறிவுப் பாசறையாக மிளிர்கிறது. இந்தத் திருப்பத்திற்குக் காரணமான மூலவர்களிலே முக்கிய மானவர் படத்திலிருக்கும் தோழர் சின்னையா.

மாயவரம் நடராசன் -- நாகை மணி





சந்தர்ப்பக் கோளாறுகள் பல சதி செய்த போதும், குழையாத நெஞ்சோடு, சுயமரியாதை இயக்கத்திற்கு இரு தூண்களாய், பெரியார் ராமசாமிக்குக் கிடைத்த கூர்வாளும், கேடயமுமாய் வாழ்ந்த இந்த உழைப்பின் திருவுருவங்கள் இன்று நம்மிடையே இல்லை. வசீகரத் தென்ற லன்ன இவர்களை, வாலிபம் கழியுமுன்னரே சாவு நமமைவிட்டு பிரித்துச் சென்றுவிட்டது.




"திராவிடர் தலைவர், இந்த நாட்டின் செல்வம், சிந்தை-அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடப் பேசும் செந்தமிழ்க் காவலன்—செயல் மன்னன் —சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக் கவிநடையும், புதிய உரை நடையில் கண்ட பூமான்— பூரிப்பால் தம்பிமார் படைமீது விழியோட்டும் கோமான் — திராவிடத்தின் ஒளிவிளக்கு — தன்மானத் தீபச்சுடர் — தங்கத்துட் தங்கம் — நமது தனித் தங்கம் — அறிஞர் அண்ணா"

முரசொலி பொங்கல் மலர் 1965.



'முரசொலி' பொங்கல் மலர்—1955





இவர்களுக்கு இடையே...

"படுபாவி! நீசன்! சண்டாளன்! சாஸ்திர புராணங்களைப் பழித்துக்கொண்டு, நாஸ்தீகம் பேசிண்டு நாசத்தைப் பரப்பிண்டு வரானே. பெரியவாளை பழிச்சுண்டு, அது இல்லே இது இல்லே என்று பேசிண்டு, ரௌரவாதி நரகத்துக்குப்போறவன், ஊர்ப் பிள்ளைகள் மனதைப் பாழ் பண்ணிண்டு இருக்கான்! அஞ்ஞானம்!" என்று கூறிக்கொண்டு, நம்மைக் கண்டவுடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு, அடுத்த கணமே, நமது மண்டை பிளந்து ஆயிரம் சுக்கலாகும், அல்லது பூமி வெடித்து நம்மை விழுங்கிவிடும், அல்லது, நாக்காவது அழுகிக் கீழே விழும், என்று நம்பிக்கொண்டும், மனதாரச் சபித்துக் கொண்டும் இருக்கிறார், கனபாடிகள்!

அவர் அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கிறார், அவர் நீண்ட



அண்ண.

இராகன்

காலமாகப் படித்து மனப்பாடம் செய்து வந்துள்ள, புராண சாஸ்திரங்களிலே.

அவர் அவைகளைத் தெய்வம் தந்தவை என்று நம்புகிறார்.

நம்பாதவர்கள் நாசமாக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரமாக, இராவணனை, இரணியனைக் காட்டுகிறார். அவருடைய தெய்வீக ஏடுகளிலே பிராமணர்களை நிந்தித்தவர்கள், அவர்தம் கட்டளைகளை மீறி நடந்தவர்கள், அவர்களுக்கு ஆதரவு தரத் தவறியவர்கள் ஆகியோர் அதோகதியானார்கள்; அவர்கள் மட்டுமல்ல, அவர்களிடம் இருந்த நாடுகளே நாசமாகி விட்டன என்று கூறப் பட்டுள்ளன.

எனவே அவர்கள், அனைவரும் பிராமண ஆதிக்கத்தை உள்ளம் கனிந்து வரவேற்க வேண்டும் என்று நம்புகிறார்கள்—மாறுக – யாராவது சொன்னாலே அவர்களுக்கு,



அந்தக் காதல் மலரைக கூடத்தான்.....

"இதென்ன காலத்தின் கோலமா?" என்று தோன்றுகிறது. 'விநாசகாலே விபரீத புத்தி' என்று கூறுகிறார்கள்.

"மகாப்பெரிய ஞானஸ்தரே! இவனுக்கு அர்த்தம் தெரியல்லேன்னு, அர்த்தமே இல்லேன்னு சொல்லிவிடுவதோ; சார்! பாருங்கோ நீலகிரித் தோதவர்களிடத்திலே சுராஜ்மல் கம்பெனி வைரத்தைக் கொண்டு போய் காட்டுங்கோ — என்ன சொல்லுவான் அவன்—காரட் இவ்வளவு விலை என்று தெரியுமா அவனுக்கு—அது போலத்தான், பெரியவாளுடைய சாஸ்திராதிகளை 'இவாளாலே' புரிந்து கொள்ள முடியல்லே! இவாளுக்குத் தெரியாததாலே அந்தச் சாஸ்திராதிகளுக்குப் பொருளே இல்லேன்னு உளறிக் கொட்டறு! பாருங்கோ! இப்படி பேசிண்டே இருப்பா... ஒரு நெருக்கடி, ஆபத்து, வியாதி, குடும்பக் கஷ்டம் வந்துவிட்டதானு, உடனே எல்லா நாஸ்தீகப் பேச்சும் தானுப் பறந்து போகும்—உடனே ராமா! கிருஷ்ணு! கோவிந்தா! என்று பஜிக்க ஆரம்பித்து விடுவா—பொறுத்திருந்து பாருங்கோ—" என்று கூறினர், ஆங்கில நாட்டு நடை உடை பாவனையுடன் உலவும் பார்ப்பனர்.

சீமையிலே, மதுவும் மங்கையும் தாராளமாகக் கிடைக்கும் மண்டபத்திலே மகிழ்ச்சியுடன் உலவி இருப்பான்; இவ்வளவு பேசிக்கொண்டிருக்கும்போதே கோட் பாக்கட்டில் கோல்ட்பிளேக் சிகரட் இருக்கும்!

இவருடைய கவலை, கனபாடிகளுக்கு எழும் பியது போன்றது அல்ல. இவருக்கு, புராண இதிகாசாதிகள் பொய்யுரை என்பதும் தெரியும். உலகிலே பல்வேறு நாடுகளிலே இப்படிப்பட்ட பொய்யுரைகளை அறிவாளர் கண்டித்துக் கண்டித்து மக்களுக்குத் தெளிவு உண்டாக்கியதால், அவை கேட்பாரற்றுப் போய்விட்டன; பழங்

காலத் 'தேவதைகள்' கண்காட்சிக்குச் சென்றுவிட்டன, என்பதெல்லாம் தெரியும். எனவே புராண இதிகாசாதிகளை, பழங்கால ஏற்பாடுகளை கண்டித்துப் பேசுவதால், ரோசம் வந்துவிடும் என்றே, பாபம் வந்துவிடும் என்றே, மக்கள் கெட்டு விடுவார் என்றே கனபாடிகள் போல அஞ்சுபவரல்ல; இவருடைய அச்சம், பல காலமாக இருந்துவரும் உயர்வு காரணமாகத் தன் இனத்துக்குக் கிடைத்துள்ள செல்வாக்கும் சீரும் சிறப்பும் அழிந்து விடுமோ என்பதுதான்.

இவருக்குப் புராண இதிகாசம், வேதம் சாஸ்திரம் பற்றிய கவலையே, அவை கண்டிக்கப்படும்போது மட்டுமே கிளம்பும்; மற்ற நேரமெல்லாம், ஷெல்லியும் பைரனும், டால்ஸ்டாயும், லியுங்டாங்கும் இவருடன் உறவாடுவர்! வீட்டிலே ரேடியோ பாடும், மருமான் சினிமாவிலே இருப்பான், இரண்டாம் மகள் வடுவூராரின் சிஷ்யை ஆகி, நீதிபதி ராஜ்மன்னர் முன்னிலையில் குறத்தி நடனமாடிக்காட்டி 'கலாவதி' என்ற சிறப்புப் பட்டம் பெறுவாள்! தன்னுடன் 'ஆபீஸில்' பணியாற்றுபவருடன் தாஜ் ஓட்டலுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு "இவனுக்கு ஆம்லெட் தரமாகப் போடத் தெரிவதில்லை! சார்-நல்ல ஆம்லட் சாப்பிட வேண்டுமானால் சைனீஸ் போகவேண்டும்" என்று யோசனை கூடச் சொல்லுவார்.

பார்ப்பானுங்க அக்ரமம் செய்கிறானுங்க, அநியாயம் செய்கிறானுங்க என்று சொல்கிறார்கள்-சரி-அதை விட்டு விட்டு, வேத புராணங்களைத் திட்டுவதும், தெய்வம் இல்லை, தேவதை இல்லை என்று நாஸ்தீகம் பேசுவதும்சரியாகுமா! நன்றாகப் பட்டிருக்க வேணும், அவனுங்களைப்போல் பிழைக்கும் வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும். வீணைப் பொருமைப்பட்டு என்ன பிரயோஜனம் என்று பேசுகிறார், முதலியார். அவ



வாடச் செய்ய நேரிடுகிறது-செய்கிறோம்,... துணிகிறது!

ருடைய பாண்டியாக்கும் பாங்கியில் இருக்கும் இரண்டு லக்ஷமும் அவரை அவ்விதம் பேசச் சொல்கிறது. புராணம் இதிகாசம், மூடநம்பிக்கை, பார்ப்பன ஆதிக்கம் இவ்வளவு இருந்தும் அவரால் வாழ்க்கையில் உயரமுடிந்தது;பாட்டனார்சமையற்காரனும் தகப்பனார் கொத்தனார் வேலை செய்தவராம்; இவர் கள்ளுக்கடை அருகே சிறு 'மிலிடேரி' ஓட்டல் நடத்தினார், பிறகு; "பகவான் கிருபையாலே" ஓட்டல் பெரிதாயிற்று, கள்ளுக்கடை ஏலம் எடுத்தார், பெரியஆப்காரி காண்ட்ராக்டரானார், கலெக்டர் வேண்டியவரானார், இலட்சுமி கண் திறந்தாள், கனவானானார், தனவானானதால் அடுத்தமுறை இவரையே எம் எல். ஏ, க்கு நிறுத்துவதாக உள்ளூர் காங்கிரஸ்காரர் கூட வாக்களித்திருக்கிறார்.

இவ்விதமான வாழ்வின் வளம் இவரை

பகவான் அருள்-கெட்டுவிடுமே இந்தப் பாவிகளால் என்று பயப்படுகிறார். இந்த பகவான் அருள் என்ற வாசகத்துக்குள்ளே ஒளித்துக் கொண்டிருக்கும் வஞ்சனை, மோசடி, கள்ளமார்க்கட், தப்புக் கணக்கு, கூட்டாளியை ஏமாற்றியது, கற்பழித்தது, கருவைச் சிதைத்தது, இவை எங்கே வெளியே தெரியப் போகின்றன! இவர் சீமான் – பிரமுகர் - ஊர்ப்பெரியவர்-ஆள வந்தார்களின் அணி மண்டபத்திலே கொலுவீற்றிருக்கும் நிலைபெற்றவர்.

இவர், பிழைக்கும் வழி இருக்கும் போது 'இதுகள்' ஏன், இல்லாததையும் பொல்லாததையும் பேசிக்கொண்டு கிடக்கின்றன, என்றுஉண்மையாகவேஆச்சரியப்படுகிறார்.

'பார்ப்பனர் கெட்டவர்கள், பொல்லாதவர்கள் என்று பேசுகிறார்களே, என்ன செய்துவிடுகிறார்கள் பார்ப்பனர்!" என்று கேட்கிறார், வக்கீல்போலவே!!

அவர் வக்கீல் வேலை செய்வதற்குக் காரணம் இருக்கிறது. அவர் எவ்வளவுதான் உட்காரச் சொன்னாலும் அவர் எதிரிலேஉட்காருவது கிடையாது, கிட்டுஐயர்-மானேஜர். அவ்வளவு பணிவு காட்டுகிறார். மால்மருகன் பாங்க்மேனேஜர் அண்ணாசாமி ஐயர் எவ்வளவு 'ஓவர்டிராப்ட்' வேண்டுமானாலும் தருகிறார்! இவ்வளவுதானா, இதபாவினி பார்ப்பனக்குலம் தான். ஆனால் எவ்வளவு சரளமாக நடந்து கொள்கிறாள். "நேரமாச்சு வரட்டுமா! உங்க அண்ணன் வருகிற நேரமாச்சே! போக வேண்டுமே!" என்று கூறும்போது "ஏன் இப்படி பறக்கிறீர்-அண்ணன் வந்தால் என்னவாம்-முதலியார்வாள் இருக்கார் என்று சொன்னா, சரின்னு சொல்லி விட்டு சினிமா போவமா பீச்சுக்கு போவமான்னு தான் யோசிப்பான்: உம்மிடம் பிராணனைச்சே!" என்று கூறுகிறாள், கூறி விட்டு.....!

அப்படிப்பட்டவர்களை, பொல்லாதவர்கள் என்று தூற்றித்திரிவானேன்.

புத்தியற்றதுகள்!

பிழைக்கத்தெரியாததுகள்!"

முதலியார் இப்படித்தான் பேசமுடியும்.

"தேசத்தை மீட்க, சுயராஜ்யப் போராட்டம் நடத்தி நாங்களெல்லாம் அடிபட்டு உருக்குலைந்துபோனமே, அப்போது எங்கே போயிருந்தாள் இந்த வீராதி வீராள்! பார்ப்பன ஆதிக்கம்-வடநாட்டு ஆதிக்கம் என்றெல்லாம் வகுப்புவாதம் பேசி வறட்டுக் கூச்சல் போட்டுக்கொண்டு கிடக்கிறார்கள்; இதுகளின் பேச்சை மக்கள் நம்பப்போகிறதில்லை — அடிவயிறு வலிதான் மிச்சம். தேசமே காங்கிரஸ், காங்கிரசே தேசம்! ஆட்சி எம்மிடம். இதுகளைச் சுட்டுத் தள்ளிவிட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கக்கூட எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நிலைமை தெரியாமல் இவர்கள், கழகம், கழகம் என்று வைத்துக் கொண்டு கத்திக் கொண்டிருக்கின்றனர்" என்று கர்ஜனையே புரிகிறார், காங்கிரஸ் தியாகி.

அவருக்குக் கோபம், நம்மீது அல்ல! நம்மீது கோபப்படுவது போலப் பேசுகிறார், ஆனாலும் உண்மையில் கோபம், காங்கிரஸ் தலைவர்கள் மீது!! தியாகத் தழும்புகளேற்று சுயராஜ்யம் கிடைக்க அவர் பட்டபாடு வீணாகிறது என்பதும், தன்னலக்காரருக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் ஆதரவு காட்டுவதையே காங்கிரஸ் ஆட்சி கொள்கையாக்கிக் கொண்டு ஏழையை வதைய விட்டிருக்கிறது என்பதும் தெரிகிறது, தலை இறக்கமாகவும் இருக்கிறது, கோபம் கொதிக்கிறது. இங்கிலீயில் தான் கட்டிக் காத்த காங்கிரசின் செல்வாக்கு கரைவதையும், கழகம் செல்வாக்கு அடைவதையும் காணும்போது கடுங்கோபம் பிறக்கிறது— அதை இந்தப் பக்கம் செலுத்துகிறார். கொஞ்ச நாட்களுக்குத்தான்! பிறகு, காட்ட வேண்டிய பக்கம் காட்டப்போகிறார்!! அதுவரை அவர், நம்மைத்தான் கண்டித்த படி இருப்பார்.

"உனக்கேண்டா ஊர் விவகாரம்! உனக்கென்ன தோட்டமா துரவா, பெட்டியிலே இலட்ச இலட்சமாகவா இருக்கிறது, குடும்பத்தைக் கவனிக்காமலிருக்க! படித்தோம் ஒரு வேலைக்குப் போனோம், குடும்பத்துக்கு மகிழ்ச்சி தந்தோம் என்று இல்லாமல், ஊரைத் திருத்துகிறேன், மக்களுக்குச் சேவை செய்கிறேன் என்று கூறிக் கொண்டு கிளம்பி, ஊரூராக அலைவதும், போலீசில் அடிபடுவதும், போக்கிரி வீசும் கல்லால் அடிபடுவதும், சிறை செல்வதுமாக இருக்கிறுயே—புத்தி துளிக்கூட இல்லையே—அதோ அவளைப் பாரடா

உன்னைக் கட்டிக் கொண்டு அவள் என்ன பலனடா கண்டாள்! உன் காலைக் கட்டிக் கொண்டு என்னைக் கடைவீதிக்கு அழைத்துக் கொண்டு போ என்று கொஞ்சும் உன் குழந்தையின் முகத்தையாவது பார்க்கக்கூடாதா?'' என்று பெற்றோர், பாசத்துடன் கூறுகிறார்கள்.

வாதங்களைத் தோற்கடிக்கலாம் ஆதாரங்களைக் காட்டி; எதிர்ப்புகளைச் சமாளிக்கலாம் உள்ள உரத்தால்; இந்தப் பாசத்தை வெல்வது, மிகமிகக் கஷ்டம்! புன்னகையும் பெருமூச்சுமாக பிரியத்துக்குரியவள், பார்க்கிறாள்! அந்தக் காதல் மலரைக் கூடத்தான், வாடச் செய்ய நேரிடுகிறது, செய்கிறோம், துணிந்து!!

''சில்லறை விஷயங்களில், செத்துப் போன விஷயங்களில் சிந்தனையைச் செலவிட்டுக் கொண்டு, முக்கிய பிரச்சினையை விட்டுவிடுகிறார்கள், முட்டாள்கள்! மார்க்சைப் படித்திருந்தால் இந்தத் தவறு செய்யமாட்டார்கள்—'' என்று கம்யூனிஸ்டு தோழர், கேலி பேசுகிறார்.

அவருக்கு சமுதாயம், தன் பிரச்சினைகளைத்தானே தீர்த்துக் கொள்ளும்—பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே முக்கியம், என்ற நினைப்பு.

அவர், உலகிலே கீர்த்தி பெற்ற மார்க்ஸ், என்ஜல்ஸ், ஸ்டாலின், ஆகியோருடைய பெயர்களைக் காட்டி மிரட்டுகிறார்.

பழைமை விரும்பிகளிடம் மனுமாந்தாதா, பராசார், வியாசர், வால்மீகி, என்று ஒரு நீண்ட அட்டவணையே இருக்கிறது நம்மை மிரட்ட.

திலகர், காந்தி, படேல், போஸ், இப்படிப் பெரியவர்களின் பெயர் கூறி நமது வாயடைக்கச் செய்யும் வாய்ப்பு இருக்கிறது காங்கிரசாருக்கு. நமக்கோ, பெரியார் இப்படிச் சொன்னார் என்று கூறும் உரிமையைக்கூடத் தோழர் குருசாமி பறித்துக் கொண்டார்! இப்படிப்பட்டவர்களுக்கு இடையிலே இருந்து பணியாற்றுகிறோம், என்ற நினைவு எப்போதும் நமக்கு இருக்க வேண்டும். இவர்கள் யாராலும் நமது பணி குலைந்துவிடாது.

''இவர்களெல்லாம் எம்மாத்திரம்—எமது செல்வாக்கு ஓங்கி வளர்ந்து விட்டது—எதைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்பினாலும் செய்துவிட முடியும்'' என்று கூறி நம்மைப் பற்றி அதிகமான கணக்குப் போட்டுக் கொண்டு, நாம் மேற்கொண்டுள்ள காரியம் மிக எளிது என்று எண்ணிடும், ஆர்வத்தால் நிலைமையை அறிய மறுக்கும் நம்மவர்களைப் பற்றித்தான் நான் அதிகக் கவலைப்படுகிறேன்.

பொங்கற் புதுநாள் இன்பம் பெற, முன் கூட்டி உழவன் பட்டபாடு எவ்வளவு என்பதை இன்றாவது எண்ணிப்பார்த்திட முடியுமல்லவா! எனவேதான் இன்று, நாம் காண விரும்பும் இலட்சியபூமி செல்ல நாம் எவ்வளவுபொறுப்பும் சிரமமும் சிக்கலும் நிரம்பிய பணியாற்றித்தீர வேண்டும் என்பதைத் தோழர்கள் உணர வேண்டும்என்பதற்காக, நாம் எப்படிப் பட்டவர்களுக்கு இடையே இருக்கிறோம் என்பதைச் சிறிதளவு கூறினேன். பொங்கற் புதுநாளன்று நமக்குள்ள பொறுப்பினை அறிந்திட வேண்டுகிறேன். இன்பம் பெறுங்கள், அனைவருக்கும் அது கிடைக்கும் பொன்னாள் திருவிடத்தில் பிறக்கும் பணியாற்றுவதிலே, புத்தார்வத்துடன் ஆலை பொறுப்புணர்ச்சியுடன் ஈடுபட வாரீர் என்று அழைக்கிறேன்.

முரசொலிக்கிறது-களம் அழைக்கிறது!

அங்கு செல்வதற்கான பயிற்சியைப் பாசறையில் செம்மையாகப் பெறவேண்டும் பயிற்சி அளிக்கத்தக்க பாசறையே அமைக்க வேண்டும்! அதற்கான எண்ணம் எழ வேண்டும்!

இன்று நாம் சாதித்துள்ளது இந்த எண்ணம் பெற்றிருக்கிறோமே, இதுதான்! செய்ய வேண்டியது ஏராளம்! ஏ! அப்பா! மிக ஏராளம்!

அதற்கான திறம் பிறக்க வேண்டும், என்பதற்காகவே நாம் எத்தகைய சூழ் நிலையில் இருக்கிறோம் என்பதைக் காட்டினேன்.

வாழ்க நீவிர்! என் பொங்கற்
புது நாள் வாழ்த்துகள்!

அன்பன்
அண்ணாதுரை

ஏன்?

கருவூரில்

உடலிரண்டுறவு கொள்ள
ஒரு துளி கருப்பை செல்ல
கடலென அமுத முண்டு
களிமிகச் சிலிர்த்த பாவை
வடிவு கொள் மாறுபாட்டில்
வயிறு முன் புறத்திற்றள்ள
நடை பயின்றீரைந் திங்கள்
நடந்திடக் குழவி தோன்றும்!

குழவி

அணுத் தொறும் கலைகள் தேக்கி
அலைவிழிச் சிரிப்புத் தூக்கி
கணுத் தொறும் சுகங்கள் ஏற்றி
கனிச் சுவைச் சிறுவாய் காட்டி
நினைத்தவர் முனிவோ ரேனும்
நெஞ்சினுள் அகலா நிற்கும்
தனிச் சிலைக் குழந்தை தூங்க
தாய் இமை சாத்தா நிற்கும்!



சிறு பெண்

ஐயிரு ஆண்டில் சேயின்
அகம் புறம் விரிந்து பள்ளிப்
பை யொடும் செல்வாள்; அந்தப்
பாவனை, இயற்கை அன்னை
மெய்யிடை மச்சம் துள்ளி
வேடிக்கை காட்டல் போலும்
கையிடை முல்லை தூக்கிக
களி நடம் புரிதல் போலும்!

பருவம்

இதுவரை அணையா நின்ற
இயற்கையாம் நாணப்போர்வை
பதுமையைப் போர்த்துப் போர்த்து
பலவகைச் சுவைகள் காட்ட
சதுரிலக்கணம் கூறல் போற்
தையலாள் நடக்கும் போதிற்
புதுப் புது கதைகள் எல்லாம்
புறத்தினிற் போட்டுப் போவாள்!

மணம்

சுண்டிஞல் ரத்தந் துள்ளிச்
சுகக் கவி அளக்கும் மேனி
கண்டிடும் காளை கண்கள்;
கலந்திடும் இரு நெஞ்சங்கள்!
அண்டமே அதற்குள்; வேறு
அறைவதென்! இரண்டே ஒன்றாய்
கொண்டுடல் உயிர் தழீ இக்
குளிர்க்கிடம் மறுத்தே வாழ்வார்!

மூப்பு

அன்னவர் உறவில் மீண்டும்
ஐயிரு திங்கள் போக
மின்னி ஓர் குழவி இந்த
மேதினி புரளும்! இவ்வா(று)
அன்னையும் தாதையாக
அன்னவர் வாழ்க்கை மாறும்
பின்னரும் காலம் சென்று
பெரு நரைக் கிழவோர் ஆவார்!

சாவு

மூப்பினுக் கடுத்த எல்லை
மூச்சினை நிறுத்தச் சாய்ந்து
தோப்பினில் மரம் வீழ்தல் போற்
தொலைப் புவி பயணம் போவார்!
சீப்பு வாழையிற் கொய்து
தின்றெறிந் திட்ட தோல் போற்
போய், சிலர் உடலைத் தீக்குள்
பொசுக்கிட மறைவார்; தோன்றார்!

ஏன்?

இப்படி மறைந்தார் கோடி;
என்னினும் அனைவோருள்ளும்
கற்படி சொல்போல் நின்று
கால காலங்கள் யாவும்
இப் புவி வரலாற்றிற்குள்
இருப்பவர் சிலரே; மற்றோர்
கற்பனையானார்; கோடைக்
கானல் நீர் ஆனார்! அ.ஃ(து) ஏன்?

இதுதான்

அறுதியிட்டுரைப்பன்; இந்த
அவனியின் நலமே எண்ணி
உறுதி கைக் கொள்வார்—ஆவி
உடலதற் கீவார்—போரிற்
குருதி சிந்தித் தன்னுட்டின்
கொடியினைக் காப்பார் மட்டும்
பரிதிபோல் நிற்பார்; மற்றோர்
பனியென வருவார்; போவார்!

கவிஞர்
கண்ணதாசன்




காபி கிளப்
COOL DRINKS
"சாமி பொங்கல் எனும் குடுங்க!"
" டேய், பையா! இவனுக்கு ஒரு பொட்டணம் பொங்கல் கொண்டு வந்து குடுடா
மிஸ் மாலினி எம்.ஏ கோலம் போடுகிறாள்
"இந்தாங்கோ, பொங்கலுக் குள்ளே வேறே வீடு பாருங்கோ; இந்த வீட்டை பொங்கலுக்குப் பிறகு நம்ப முடியாது"
ஏஸ்போத்து"
"ஆமா அண்ணே, நம்ப வருஷ மெல்லாம் மாடா உளச்சோமே, பொங்கலுக்கு எஜமான் எதாச்சும் வெகுமானம் குடுத்தாரா பார்த்தியா!"
"அடநம்ப எஜமான் விஷயம் உனக்குத் தெரியாதா; அவரு மாட்டுப்பொங்கல் அன்னிக்குத் தான் நம்பள கவனிப்பாரு..!"


"என்னப்பா இது, பானையெல்லாம் யானை விலை சொல்றியே! பாத்து சொல்லிக் குடுப்பா விலையை...."
சாமி வெலையைப் பார்க்காதீங்க மனைக் கொல்லைப் பூசனிங்க இது, சமைச்சி சாப்பிட்டுட்டு சொல்லுங்க!'
"அடடே ஒரு ஆளப்பா; சமையலுத அல்லப்பா இது.. திருஷ்டிக்கு உடைக்கறதுக்கு வேணும்பா!"
இது என்ன இது? இவ்வளவு நாழியா காய்ச்சிக்கிட்டு இருக்கே ன்.. இன்னும் பொங்க மாட் டேங்கறதே இந்த பால்..."
"சரிசரி இறக்கு; நிஜப்பாலா இருந்தாத் தானே பொங்கும்!"
"அண்ணே, மேட்டுத்தெரு முதலி யார் வீட்டுக்கு வெள்ளை அடிச்சியே, கூலியை ஒழுங்காக் குடுத்தாரா?"
"அட நீ என்னைத் தம்பி வயத்தெரிச் சலே களற்றே; அவன் தான் நல்ல மட்டை நாமமா சாத்திட்டானே!"
ரெஜாக்ஷ்

குமார்,

''திருந்திவிட்டேன் வந்துவிடு, வந்துவிடு என்று நீங்கள் வருந்தியழைத்த போதெல்லாம் நினைத்துப் பார்க்காத நான்—இன்று வலியவந்து உங்களது அணியில் இடம் பெறத் துடிக்கின்றேன்'' — மகிழ்ச்சிகரமான இந்தச் செய்தியைத் தாங்கி வந்த உன் கடிதத்தை, நீ எனக்கு அளித்த நற்சாட்சிப் பத்திரம் என்று கருதுகிறேன்; இயக்கத்திற்கு நீ செய்த தொண்டு என்ன என்று இடித்துரைக்க முன் வருவோரை வாயடைத்துப் போக வைக்கும் வலிமை மிக்க இலட்சிய முத்திரை என்று மதிக்கிறேன்.


பண்டைத் திராவிடரின் மாண்பு பற்றியும் கெண்டை விழி தமிழ் மாதர்களின் கலை யுணர்வு குறித்தும் பத்தி பத்தியாக உனக்கு எழுதியிருக்கிறேன்; மொகலாய மாதரசி உன்னிசாவின் மேனியை அலங்கரித்த மென்மையான தமிழாடையில் மெய்மறந்த அவுரங்கசீப் காலத்து தமிழர் வாழ்வை உனக்கு தொகுத்துக் காட்டியிருக்கிறேன்; ரோம் நாட்டு அரசிலங் குமரிகளையும் தன் வயப்படுத்திய சிங்காரத் தமிழகத்தின் தேன் வாழ்வை வரலாற்று நூலிலிருந்து எடுத்து விளக்கியிருக்கிறேன்; வானிடை மிதந்திடு தென்றலிலே, மணி மாடங்கள் கூடங்கள் னிலே, தேனிடை யூறிய செம் பவள இதழ் சேயிழையோடும் ஆடி மகிழ்ந்திட்ட 'அந்த நாள் நம்மவர்' கதையை கிழமை தவருமல் உனக்கு கிளறிக் காட்டியிருக்கிறேன். அன்று விடுத்த அந்த அன்பழைப்புகளை யெல்லாம் ஓரத்தில் அதக்கி வைத்திருந்து, ஒட்டக அசை போட்டு, இன்று பெட்டகத்தில் வைத்து பாதுகாக்கக் கூடிய உறுதிப் பட்டய மொன்றை எழுதியனுப்பியிருக்கிறாய். அன்புடைத் தோழா, அறிவகத்தின் வாசற் கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இனி உள்ளே வரலாம். உள் கட்டின் தலைவாசலில் தென் னாட்டு மக்கள் சக்திக்கு உரு அமைத்து உயிரோவியம்போல் வைக்கப்பட்டிருக்கும் தயாகத்துத் தலைவன் அண்ணாவின் படம் உன்னை வரவேற்கிறது. இறுதி முறையாக, நீ இத்துணை காலமும் கட்டுப்பட்டு வாழ்ந்த 'ஒட்டுத் துணி'க் கூடாரத்தை ஒருமுறை பார்த்துக் கொள்; தடித்த உருவங்களாய் தலையணைகளைப் போல சாய்ந்து கிடக்கும் அந்தத் தனவந்தர்களுக்கு, அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஒரு 'நமஸ்தே' போடு; இத்தனையும் செய்த பின்பு, அறிவகமாம், தாயகத்தின் விலங்கொடிக்கும் மறவர் படையின் இருதயமாம் தி. மு. கழகத்தின் தலைமை நிலையத்திற்குள் நுழை! முதலிலே அந்த நன்னாளை—அறிவகம் புகவிருக்கும் பொன்னாளை எனக்கு அறிவித்துவிடு. இதோ! அதற்கு முன்பாகவே அறிவகத்தை உன் மனக்கண்முன் நிறுத்துகிறேன்; கவனி!

அறிவகம்! இந்த வார்த்தையே உனக்குப் புதிதாகத்தானிருக்கும். நண்பா! சமாஜம், சங்கம், வாசகசாலை, ஆஸ்ரமம், என்று சொல்லியும் சொல்ல வைத்தும் பழக்கப்பட்ட உனக்கு தூய தமிழ் சொற்கள் புரியாமல்கூட இருக்கலாம். வருந்தாதே நண்பனே, காலமிருக்கிறது; தமிழை கசடறக் கற்றுத்தர கற்றறிந்த தமிழ் நாவலர் இருக்கிறார்கள்; முதலிலே இந்தக் கடிதத்தைப் படித்து முடி! நீ இரண்டறக் கலக்க இருக்கும் விடுதலை இயக்கத்தின் தலை அங்கத்தை இந்தக் கடிதம் உனக்கு ஓரளவு விளங்க வைக்கும்.

அறிவகம்

குமார், உலகத்தில் எந்த அரசியல் கட்சியை எடுத்துக் கொண்டாலும் அந்தந்தக் கட்சியின் தலைமை அலுவலகங்களுக்கு தனியான ஒரு சிறப்புப் பெயர் இருந்ததாக இதுவரை நீ அறிந்திருக்க முடியாது. நீ சார்ந்திருந்த காங்கிரஸ் இயக்கமானாலும் சரி, நித்தம் நித்தம் செத்துக் கொண்டிருக்கு





சோஷலிஸ்ட் கட்சியானாலும் சரி, வெந்ததைத் தின்று 'தெந்தினம்' பாடும் பொதுவுடமைக் கட்சியானாலும் சரி, நீ எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள். காங்கிரஸ் இயக்கமானால் காந்தி மாளிகை யென்றிருக்கலாம்; அல்லது காங்கிரஸ் பவனமென்றிருக்கலாம்; அது போலத்தான் மற்ற மற்ற இயக்கங்களில் அந்தந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக செங்கீர் சிந்திய செம்மல்களின் பெயரை வைத்திருப்பார்கள். இவைகள் அனைத்துக்கு முற்றிலும் மாறுபட்டு தனது சக்திக்கும், செயலுக்கும் இன்றியமையாத சிரசாக விளங்கும் இயக்கத்தின் தலைமை அலுவலகத்திற்கு 'அறிவகம்' என்று சிறப்புப் பெயரிட்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி, ஒரே ஒரு சமுதாய சீர்திருத்தப் பட்டறை ஒரே ஒரு பொதுவுடமைப் பூங்கா, திராவிட முன்னேற்றக் கழகம்தான் — திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டிலும் ஏன் அந்தப் புதுமுறையைக் கையாள வேண்டும் என்று உனக்குக் கேட்கத் தோன்றும் என்று நினைக்கிறேன். உலக வரலாற்றிலே இதுவரை எந்தக் கட்சிக்கும் ஏற்பட்டிராத உடனடிப் பிரச்சினைகள்—அதுவும் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள், ஐம்பெரும் கண்டங்களின் பூமி நூல் படத்தை வைத்துப் பார்த்தால்கூட தி. மு. கழகம் ஒன்றுக்குத்தான் உன்னல் வீரல் மடக்க முடியும். காரணம் என்ன? மற்ற கட்சிகள் செய்யாத எந்தப் பொதுப் பணியை தி. மு. கழகம் ஆற்றிவருகிறது? குமார், சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டாய் என்று நினைக்கிறேன் — நீகூட அன்று பகுத்துணர்ந்து பார்த்தது கிடையாது—மற்ற மற்ற கட்சிகளுக்கும் தி. மு. கழகத்திற்கும் என்ன வேறுபாடு என்பதை! எல்லா கட்சியினரும் தான் அரசியலில் உரிமை கோரி அனல் கக்கப் பேசுகிறார்கள்; நேற்று மழையில் இன்று முளைத்த காளான் கட்சியினர் கூட 'ஏதேதோ' 'தேவை தேவை' என்று கூவுகிறார்கள். ஆனால் எந்தக் கட்சிக்கும் ஏற்படாத அக்கரை, எந்த சொந்த நாட்டுக்கார மாற்றுக் கட்சியினருக்கும் தோன்றுத கவலை தி. மு. கழகத்திற்கு தன் தாய கத்தின் கலாச்சாரத்தின் மீது ஏற்பட்டிருக்கிறது. சொந்த நாட்டின் கலாச்சாரமும் நாகரீகமும் சூதுக்காரக் கும்பலால் சூரையாடப்படுவதை தடுத்தே ஆகவேண்டும்; அதற்கு எத்தகைய எதிர்ப்பு வளர்ந்தாலும் முட்டி, மோதி வெற்றி காணத்தான் வேண்டுமென்ற ஆவேசக் கனல் கொழுந்துவிட்டெரிவது தி. மு. கழகத்தினரின் உள்ளங்களில்தான். எந்தத் தீய சக்தி நமது நாகரீகத்தை நசித்திடச் செய்ததோ, எந்தத் தீய சக்தி நமது கலாசாரத்தின் மஞ்சள் கயிறை அறுத்தெறிந்து அதை விதவைக் கோலமாக்கி இன உணர்வு உள்ளவர்களின் இல்லங்களிலே மட்டும் செயல் படச் செய்ததோ, அந்த தீய சக்தியாம் ஆரியத்தை அழித்து, ஒழித்து, நீய்த்து அனைவர் உள்ளங்களிலும், திராவிடத்தின் எல்லா இல்லங்களிலும் அறிவு விளக்கு ஏற்றி அஞ்ஞான இருளை அகற்றிட அரும் பணியாற்றிடும் சிந்தனைப் பாசறை என்ற முறையிதால்தான் தி.மு.கழகத்தின் தலைமை நிலையத்திற்கு 'அறிவகம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது என்பதை முதலில் உனக்கு நான் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தலைமை நிலையம்

அறிவகம்—சென்னை, இராயபுரத்திலே உள்ள, தி. மு. கழகத்தின் இந்தத் தலைமை நிலையம், ஆதிக்கக்காரர்களின் எதிர்ப்பிலே வளர்ந்த கழகத்திற்கு இதோ மக்கள் தந்த லட்சிய அரண்-விலை ரூ. 30000 —என்று கை நீட்டிக் காண்பிக்கவும், பிறந்த இடத்தை விட்டு வெட்கமும், துக்கமும் தாளாமல் விம்மியழுத வண்ணம் வெளியே வந்தபோது 'வளருவார்களா இவர்கள்? வளர வகை இருக்கிறதா இவர்களுக்கு?' என்று 'ஜபர்தஸ்து'க் காட்டிய தோலிருக்க சுளை விழுங்கி'களுக்கு சுட்டிக்காட்டி வெற்றி மாளிகையாகவும் இருந்து வருகிறது என்பதை மறந்துவிடாதே!


அறிவகம் — கட்சியின் கொடியை மட்டும் பறக்கச் செய்துவிட்டு கும்மாளம் அடிக்கும் பட்டி மண்டபமல்ல—விளம்பரச் சாவடியல்ல-ஐ. நா-சபையைப்போல! உட் பிரிவுகள் உட்பட 111 சட்ட திட்டங்களைக் கொண்டு திருவிடமெங்கணும் இயங்கி வருகிற ஆயிரத்திற்கு மேற்பட்ட கிளைக் கழக வடங்களின் 'சிக்கலற்ற பெருமூச்சு' அறிவகத்தின் மாடியிலே இருக்கும் கட்சியின் தலைமை நிலையம். கிளைக் கழகங்களின் விவரங்கள், அங்கங்கே காரிய மாற்றும் செயல் வீரர்கள் பற்றிய சிறு குறிப்பு

கள், வரவு, செலவு அத்தனை யும் அங்கே உள்ளதை உள்ள படி காட்டும் நிலைக் கண்ணாடி கள்! பெருமைக்காகச் சொல்ல வில்லை, மாற்றுக் கட்சிக்காரர் கள் உள்நுழைந்து பார்த்தால் ஒரு எதிர்க் கட்சி இயக்கத்தின் பணிமனை இது என்று அவர் கள் சொல்லவே மாட்டார்கள். இக் கழகங்களுக்கென தனித் தனியாக பிரித்து வைக் கப்பட்டிருக்கும் குறிப்பேடு களின் அடுக்குகளும், அதற் கென பொதுச் செயலாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட பொறுப்புள்ளவர்கள் இன் முகத்தின் கீழ் குன்றுமல் இயந்திரமெனப் பணியாற்றும் பண்பும், மாற்றரின் மனதை விட்டு எளிதில் அகன்றுவிடாது. ஒருமுறை வந்துபார்! உனக்குப் புலப்படும் அந்த உண்மை!

நம் நாடு

குமார், இதுகாறும் அறிவகம் பற்றியும், அங்கே இயங்கும் தலைமை நிலையம் பற்றியும் குறிப்பிட்டு வந்தேன். இனி, இயக்கத்தின் பிரச்சார இதழ் களின் பிரதம தளபதியைப் பற்றி சொல்ல ஆசைப்படு கிறேன். பிரதம தளபதி என்று நான் குறிப்பிடுவது 'நம் நாடு' இதழ் ஒன்றைத்தான் குறிப்பிடும்.

கழகத்தின் வளர்ச்சிக்கென, நிர்வாகத்தில் திறமை மிக்க வரும், நீண்டகால இயக்க உழைப்பாளருமான பூவாளூர் அ. பொன்னம்பலனார் அவர் களின் மேல் பார்வையிலும் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் பொறுப்பாசிரியராகக் கொண்ட எழுத்தாற்றல் மிக்க வர்களின் அரவணைப்பிலும் வளர்ந்து வரும் 'நம் நாடு' இதழை நீ படித்திருப்பாய்



என்றே நினைக்கிறேன். நம்நாடு இதழ்—அதில் வெளியாகும் செய்திகள் இயக்கத்தின் கொள்கை என்று மதிக்கப்படும் பெருமை மிக்க பொன்னேடு. 'நம்நாடு' தனது ஓராண்டுப் பணியினை வெற்றிகரமாக முடித்துவிட்டு இரண்டாவது ஆண்டில் வீர நடை போட்டு வருகிறதென்றால்-இந்த வெற்றி, கழகத்தின் பெரும் சாதனைகளில் முதன்மையாகக் கருதக் கூடியது என்று தான் சொல்வேன். காரணம்; ஒரு ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்க்க, சர்வ கட்சிகளின் பலத்தை முன் வைத்து சல்லடம் கட்டிக் குதித்த காங்கிரஸ் மகாசபையே அதிகாரப் பூர்வமாக துணிந்து நடத்த முன் வராத பணியில், தோளில் அடுக்கிக் கொண்டு தெருத்தெருவாக அலைந்தாவதுபத்திரிகையை விற்றுகட்சிக்குப்பணம்சேர்ப்பேன்என்று சூளுரைத்த பொதுவுடமைக் கட்சி தோல்வி கண்ட பணியில்—மாற்றாரின் சித்தாந்தப்படி ஒரு சிறு கட்சி—தனது தினசரி இதழை துவக்கி, இடையிலே துவளவிடாது வெற்றி கண்டிருக்கிறதென்றால்—இது பெரிய சாதனையில்லையா? நீ கூடத்தான் ஒரு காலத்தில் சொன்னாய், தி. மு. கழகத்தில் கட்டுப்பாடு இல்லை யென்று! நீ கருதுகிறபடி கட்டுப்பாடில்லாத கட்சி கண்ட வெற்றியை, கட்டுத் திட்டமிக்கவர்கள் காணமுடிய வில்லையே! நீ இதற்கு என்ன காரணமாக இருக்குமென்று நினைக்கிறாயோ தெரியவில்லை: என்னைக் கேட்டால், அடக்கு முறைச் சுருவலிக்கும், எதிர்ப்புப் புயலுக்கும் இலக்காகி ஆட்டம் கொடுத்துவிடாதவை தி. மு. கழகத்தின் கொள்கைகள் என்பதுதான் 'நம்நாடு' இதழின் வெற்றிக்கு மூல காரணமென்பேன்.

நம்நாடு வெற்றி—கழக வரலாற்றில் வைரம் தீட்டப்பட்ட




தங்கத்தகடு அது குறித்து நான் எழுதுவதைக் காட்டிலும் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் எழுத்தாரத்தை அப்படியே தருகிறேன் படி. "'நம் நாடு—கழக வளர்ச்சியிலே ஒரு புதிய கட்டம். ஒரு தின இதழ் துவக்குவது புதிய கட்டமா என்று கேட்கத் தோன்றும்—ஒரு தனி மனிதர் துவக்கினால் கேட்கத்தான் வேண்டும். ஆனால் 'நம் நாடு' தனி மனிதர் பிழைப்புக்காக நடத்திப்படும் ஏடல்ல; தி. மு. கழகத்தின் சொந்த ஏடு—நம் நாடு தி. மு. கழக வளர்ச்சியிலே புதியதோர் கட்டம்-ஐயப் பாடில்லை"

இப்படிப்பட்டஓர் உணர்ச்சிமிக்க தலைவனுக்கு கீழ்க் பணியாற்றுவதை பெரும் பேறு என்று தான் நினைக்கிறேன். 'நம் நாடு—தி. மு. கழகத்தின் சொந்த ஏடு'—எனக்கு மெய் சிலிர்க்கிறது—ஆனால் உனக்கு உள்ளம் பூரிக்கவே கொஞ்சம் நாள் பிடிக்கும்.

'நம்நாடு' துவக்கப்பட்ட நேரம் மிகமிக இக்கட்டானநேரம்—தக்கோரைக் கலவாமல் தாசர்களை உருவாக்கும்புதிய கல்வித் திட்டம் புகுத்தப்பட்ட நேரம்—'நம் நாடு' இதழ் வாங்க நாதியிருக்குமா என்று அஞ்சத்தக்க அளவில் இயக்கத் தோழர்கள், தலைவர்கள் அனைவரும், இரும்பு உள்ளம் படைத்த ஆச்சாரியாரால் இரும்புக் கம்பிகளுக்கப்பால் தள்ள இருந்த நேரம்—அந்த நேரத்தில் 'நம் நாடு' பிறந்தது. இதழின் முதல் தலையங்கத்தில் பொதுச் செயலாளர் அண்ணா குறிப்பிடும் போதே 'நம் நாடு' வெளிவரும் போதுள்ள சூழ்நிலையோ, ஒரு புறம் நோக்கினால் நம்பிக்கையூட்டுவதாகவும், இன்னொரு புறம் திகிலூட்டத் தக்கதாகவும் இருக்கிறது"

"இதோ 'அழகிரி அச்சகம்!' பளபளப்பான புதிய அச்சு எழுத்துக்கள். அதோ ஒரு அச்சுப் பொறி! 'திராவிட நாடு—திராவிடருக்கே' என்று முழக்க மிடுவது போல சுழல்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

அழகிரி அச்சகம்



பிரிய சகோதரா, எதையோ சொல்ல வந்தான், எதையோ சொல்லிக் கொண்டு போகிறானே என்று நினைக்கிறாயா? அறிவகத்தில் உள்ள மூன்று அங்கங்களில் இப்போது மூன்றாவது அங்கத்திற்கு வந்திருக்கிறேன்.

அறிவகம்—பெயர் விளக்கம் அறிந்துகொண்டாய்.

நம் நாடு—இயக்க தினசரி வரலாற்றைப் புரிந்து கொண்டாய்.

இப்போது அந்த ஏட்டை வனப்புள்ளதாக்கி வெளியாக்கும் அச்சுப் பொறியைப் பற்றி சில சொல்லி முடித்து விடலாமென்று எண்ணுகிறேன்.

நீ, உள்ளூர் பாரத தேசிய சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றி யிருக்கிறாய். நிச்சயம்தான உனக்கு பகவத் சிங்கைப் பற்றித் தெரிந்திருக்கும். பாலகெங்காதரத் திலகரைப் பற்றி படித்திருப்பாய். லால லஜபதிராய், தாதாபாய் நௌரோஜி இவர்களெல்லாம் உனது கடந்த கால அரசியல் தலைவர்கள் — ஆனாலும் வட நாட்டுக் காரர்கள். தென்னாட்டிலே ஒரு வீரத் தமிழன் தாய் மொழிக்காக சாவை வரவேற்றிட்ட சத் புத்திரன் 'ஒடி வந்த இந்திப் பெண்ணே-நீ தேடி வந்த தமிழ் நாயகன் உனை ஏற்க மாட்டான் ஓடிப்போ ஓடிப்போ' என்று முழக்கமிட்ட மாவீரன் பட்டுகோட்டை அழகிரி சாமியை உனக்குத் தெரியுமா? தெரியாது. அந்த நேரத்தில் செய்தித் தாள்களில் அவர் பற்றிய செய்திகளைப் பார்த்திருந்தாலும் நீ கண்களை மூடிக் கொண்டிருந்திருப்பாய்— ஆணவத் தலைவன் ஆச்சாரியார் கோலேந்தி கொலு மண்டபம் புகுந்த காலமல்லவா அந்தக் காலம்! ஏன் அந்த அழகிரிசாமியை இப்போது நினைவூட்டுகிறேன் என்று கேட்கிறாயா? அந்த உத்தம சீலன் பெயரை தாங்கியுள்ள அச்சுப்பொறி தான் தி. மு. கழகத்தின் தின இதழை வெற்றிமுரசைத்தை-முத்திரை பதித்து அனுப்புகிறது நண்பா! இவை அனைத்தும் அறிவகத்தின் சிறு விளக்கம்.

தலைமைக் கழகம் அங்கே—அறிவகத்தில்! அந்தத் தலைமைக் கழகம், தன் பணத்தைக் கொண்டு கழகத்திற்காக கழகத்தின் இலட்சியத்தை நாடறிய வெளியிடும் தின இதழும் அந்த அறிவகத்தில் தான்!


அந்த இதழை அழகு செய்து அனுப்பும் அச்சுப் பொறியும் அந்த அறிவகத்தில்தான்!

அருமை, நண்பனே, அன்றொரு நாள் மவுண்ட் ரோடிலே தியாகராயர் மாளிகை வைத்திருந்தவர்கள் நாங்கள் என்பதை நீ கண்டிப்பாக அறிந்திருக்கக் கூடும், ஏனென்றால் உனது பாட்டன் அந்த நாள் முதற் கொண்டே பார்ப்பானரல்லாதார் இயக்கத்திற்கு வேட்டு வைக்க முனைந்திருந்தவர் என்று நான் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். தியாகராயர் மாளிகை-இன உணர்ச்சி பட்டாளத்தினர் கண்ட அந்த இரத்தினக்கால் மண்டபம், பிற்பாடு நீதிகாட்சி 'கில்ட் குல்லாய்' களின் காலத்தில் ஏலத்தில் விடக்கூடிய அளவுக்கு அவர்கள் அலட்சியமாக இருந்திருக்கிறார்கள். அந்த சீமான்களால் கைவிடப்பட்ட சிங்கார மாளிகை இன்று மீட்கப்பட்டு விட்டது: 'கொடி' கட்டி பறக்கிறது—கடலலைகள் காதோரத்தில் ரீங்காரமிடும் வண்ணம் அறிவகம் அமைக்கப் பட்டிருக்கிறது.

அறிந்துகொள் நண்பனே, அறிந்துகொள்! இயக்கத்தின் மாண்பினை இனியாவது புரிந்து கொள்! அறிவகம் வரும் நாளை அறிவித்து வை!

அன்பு
பொன்முடி






துணைச் செயலாளர்

(ஸ்டூடியோ: லட்சுமி, மாயூரம்)




துணைச் செயலாளர்

(ஸ்டூடியோ: லட்சுமி, மாயூரம்)



சட்ட திட்டக்குழு செயலாளர்

(ஸ்டூடியோ. கெம்பு, காரைக்குடி)



அ. குழு. செயலாளர்

(ஸ்டுடியோ: லட்சுமி, மாயூரம்)



பண்பும் பணமும்



நாவலர்
இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

பெருஞ்சித்திரனார் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்த தலை சிறந்த புலவர்களிலே போற்றுதலுக்குரிய ஒருவராவார். அவர் சொத்துக்களைப் பொறுத்த வரையில் மிக்க ஏழை. ஆனால் குழந்தைகளைப் பொறுத்த வரையில் ஒரு பெருஞ் செல்வர்! வருவாய் தரும் தொழில் ஏதும் அற்றவர்; எனவே வறுமை என்னும் தேள் அவரை ஓயாமல் கொட்டிக் கொண்டேயிருந்தது. அவரும் அவர் குடும்பத்தினரும் பல நாட்கள் பட்டினி கிடந்திருக்கின்றனர்; அவர் வீட்டின் அடுப்பில் உலை ஏறாமல் எவ்வளவோ நாட்கள் கழிந்திருக்கின்றன. இவ்வளவு வறுமையில் அவர் வாடினாலும் தம் மதிப்பை இழக்கவோ அல்லது தம் நிலையைத் தாழ்த்திக் கொள்ளவோ அவர் ஒரு நாளும் ஒருப்பட்டதில்லை. தன் மதிப்பை விட்டுக் கொடுத்து வளமையைத் தழுவிக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் ஏற்பட்ட போதெல்லாம், தன் மதிப்போடு கூடிய வறுமையை அணைத்துக் கொண்டாலும் அணைத்துக்கொள்வேனேயொழிய, தன்மதிப்பை விட்டுக் கொடுக்கும் வளமையை ஒரு போதும் தீண்டேன் என்ற முறையில்தான் அவர் தன்மதிப்பு வாழ்வு நடத்திக் கொண்டுவந்தார்.

வாழ்க்கையில் எவ்வளவு இடர்களும், தொல்லைகளும், துன்பங்களும் ஏற்பட்டாலும், வாழ்க்கையை மதிக்கத்தக்க மாட்சிமைப் பட்டதாகப் பேணி வளர்க்க வேண்டுமென்பதிலே அவர் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்தார். தம்முடைய புலமையை மக்களுக்குப் பயன் படுத்த வேண்டியது தம் கடமை என்றும், தம்மை வறுமையினின்றும் காப்பாற்ற வேண்டியது மக்கட் கடமை என்றும் கருதி வாழ்க்கையை ஈடேற்றி வந்தார். புலமையை மதிக்கத் தக்க மாண்பு படைத்த மன்னர்களிடம் செல்லுவதும், புலமையைப் போற்றி அவர்கள் விரும்பிக் கொடுக்கும் பொருளைப் பெற்று வருவதும் ஆன முறையில் அவர் ஒரு வாறு காலங்கழித்து வந்தார்.

பெருஞ்சித்திரனார் ஒருமுறை அதியமான் நெடுமான் அஞ்சியின் பெயரையும், புகழையும் கேள்வியுற்று அவனைக் காண சென்றார். அதியமான் ஒரு சிற்றரசன் என்றாலும் பேரறிவும், பெருந்தன்மையும், பெரும புகழும், பெரு வலியும் கொண்டு விளங்கினான். அவன் தகடூரைத் (தர்மபுரி) தன் ஆட்சியின் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். பெருஞ்சித்திரனார் தம் வருகையை அரசனிடம் தெரி

விக்குமாறு ஏவலாளர்களிடம் சொல்லியனுப்பினர். ஏவலாளர்களும் புலவரின் வருகையை மன்னனிடம் அறிவித்தார்கள். அதியமான் அரசியல் அலுவல்களிலே பெரிதும் ஈடுபட்டிருந்த காரணத்தாலோ, அல்லது வந்திருந்த புலவர் அடிக்கடி வரும் எவ்வளவோ புலவர்களைப் போன்றவொரு சாதாரணப் புலவர் என்று எண்ணிய எண்ணத்தாலோ அவரை நேரிற் கண்டு அளவளாவுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவில்லை. அவன் ஏவலாளர்களை அழைத்துப், புலவருக்கு நல்ல முறையில் பரிசுகள் கொடுத்து அனுப்பும்படி கட்டளையிட்டு விட்டு அந்த அளவோடு அமைந்து விட்டான்.

பெருஞ்சித்திரனர், தம்மை அழைத்துப் பேசித் தம் புலமையைக் கண்டு மன்னன் மகிழ்வான் என்ற எண்ணத்தோடு காத்துக் கொண்டிருந்தார். பொன் மணி ஆடை அணிகலன்கள் முதலான பரிசுகளை ஏந்திக் கொண்டு ஏவலாளர்கள் புலவரிடம் வந்து சேர்ந்து, அவற்றையெல்லாம் அவர் முன் வைத்தனர்.

புலவர், "இவையெல்லாம் என்ன?" என்று கேட்டார்.

"தங்களுக்கான பரிசுகள்!" என்று ஏவலாளர் செப்பினர்.

"யார் கொடுத்தனுப்பியவை?" என்று புலவர் சற்றுக் கடுமையான குரலில் கேட்டார்.

"மன்னர் தாம் கொடுத்தனுப்பினர்!" என்று ஏவலாளர் மறுமொழி பகர்ந்தனர்.

"மன்னன் எங்கே?" என்று கேட்டார்.

"மன்னர் உள்ளே இருக்கிறார், அவரை இப்பொழுது பார்க்க இயலாது!" என்று அவர்கள் கூறினர்.

"அப்படியானால் இப் பரிசுகளை அவனிடத்திலேயே திருப்பிக் கொண்டுபோய்க் கொடுப்பீர்!" என்று சொல்லி பரிசுகளை அப்பாற் தள்ளிவிட்டார்.

ஏவலாளர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தயங்கி நின்றனர்.

"ஏன் நின்றுகொண்டிருக்கிறீர்கள்? எடுத்துச் செல்லுவீர்!" என்று சினக் குறிப்போடு புலவர் கடுமொழி கூறினர்.

ஏவலாளர்கள் அப்பொழுதும் தயங்கியே நின்று கொண்டிருந்தனர்.

"போவீர்! போய்ச் சொல்லுவீர் நும் மன்னனிடம்! நான் என்னுடைய புலமையை விலை பேசி வாணிகம் செய்ய வந்த பரிசிலன் அல்லன்! ஊதியத்தின்மேல் கருத்தைச் செலுத்தும் வணிகன் போல் நான் வணிகன் அல்லன்! நான் வெறும் பரிசுக்காக வந்த பரிசிலன் என்று அதியமான் என்னை எண்ணிவிட்டான் போலும்! அவனிடம் நான் புலமையைப் போற்றும் பண்பைத்தான் எதிர்பார்த்து வந்தேனேயொழிய, அவனுடைய பணத்தை நான் அவ்வளவாக எதிர்பார்க்கவில்லை! எனக்குப் பண்புதான் பெரிதே யொழிய, பணமல்ல! போவீர்! போய்ச் சொல்லுவீர் மன்னனிடம்! என்னுடைய எந்தப் புலமையைக் கண்டு அவன் இந்தப் பரிசுகளை எனக்கு அனுப்பி வைத்திருக்கிறான்? இந்தப் பரிசுகளை மட்டுமே பெரியதென்று கருதியா நான் குன்றுகளையும் மலைகளையும் கடந்து இவ்வளவு தொலைவு நடந்து வந்தேன்? என்னை அழைத்துக் காணமல் தரும் பரிசுகள் உள்ளபடியே பரிசுகள் ஆகாவே! இந்தப் பரிசுகள் எவ்வளவு விலை மதிப்புள்ளனவாக இருந்தபோதிலும் என் தன் மதிப்பு இவற்றை ஏற்றுக் கொள்ள இடந்தரவில்லையே! பரிசிலரது கல்வி, புலமை முதலாய திறமைகளையெல்லாம் அறிந்து கொடுக்கப்படும் பரிசு, தீன அளவுடையதாக அவ்வளவு குறைவாகக் கொடுக்கப் பட்டாலும், விருப்பத்தோடு கொடுக்கப் படும் அப்படிப்பட்ட பரிசுதான் எனக்குத் தேவையே யொழிய, இந்த முறையில் அளிக்கும் பரிசுகள் எவ்வளவு மிக்க அளவினதாக இருந்த போதிலும் இவை எனக்குத் தேவையில்லை! போவீர்! போய்ச் சொல்லுவீர்! பகைவரால் தடுத்து நிறுத்துவதற்கு முடியாமல் அவ்வளவு அருமையான வலிமைபுடைய உம்மன்னனிடம் வலிவு ஏதும் அற்ற ஏழைப் புலவன்

இப்படியெல்லாம் கூறினன் என்று போய்ச் சொல்லுவீர்!" என்று பெருஞ்சித்திரனர் கடுஞ்சினத்தோடு கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்.

அதற்குள் புலவரின் சினக் குறிப்பைச் சில ஏவலாளர் அரசனிடம்போய் அறிவிக்க, அதியமான் நெடுமான் அஞ்சி மிக்க அச்சங் கொண்டு புலவரிடம் விரைந்து வந்தான். அதியமான் புலவரைப் போற்றிப் பாராட்டிப் பிழை பொறுக்குமாறு வேண்டினன். புலவரும் மன்னனின் கனிந்த உள்ளங்கண்டு மனம் இளகிச், சினந்தவிர்த்து, அவனோடு அன்புடன் அளவளாவி இருந்தார். அரசன் புலமைக் கேற்ற பரிசுகளை மனம் விரும்பி அளித்தான். புலவர் அவைகளைப் பெற்றுக் கொண்டு, அரசனிடம் விடை பெற்றுத் தம் ஊருக்கு ஏகினர்.

பெருஞ்சித்திரனர் தகுதிக்கு ஆக்கந்தரும் பொருளை மட்டுமே விரும்பினர்; அவ்வகையிலேயே வாழ்க்கை நடத்தினர். பணத்தை விடப் பண்பையே தாம் மதிப்பவர் என்பதைப் பெருஞ்சித்திரனர், அதியமான் நெடுமான் அஞ்சியிடம் அழகுற விளக்கிக் காட்டிவிட்டார்!

குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென் பரிசில் கொண்டனென்
சொற்கென;
நின்ற என்னயங் தருளி ஈதுகொண்டு
ஈங்களஞ் செல்க தானென, என்னை
யாங்கறிந் தனனே தாங்கருங் காவலன்?
காணுது ஈத்த இப்பொருட்கு யான்ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்; டேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே.
—(புறநானூறு-208)


[பொழிப்புரை: குன்றுகளும் மலைகளும் பல பின்னே கழிய, வந்தேன் நான் பரிசில் கொண்டேனுய்ப் போவதற்கு என்று சொல்லி, காத்து நின்ற என்னிடம் அன்பு காட்டி அருள் செலுத்தி, 'இப்பொருளைக் கொண்டு இவ்வாறு போக' எனச் சொல்ல என்னை எப்பரிசறிந்தான் பகைவரால் தடுத்ததற்கரிய வேந்தன்? என்னை அழைத்துக் காணுதே தந்த இப்பொருட்கு யான் ஓர் ஊதியமே கருதும் பரிசிலன் அல்லன்; விரும்பி தினைத் துணையளவாயினும் கொடுத்தாலும் நல்லதே; அந்தப் பரிசிலரது கல்வி முதலாகிய பொருந்திய எல்லையை அறிந்து கொடுத்துவிட்டால்.]


★

இப்படி ஏன் இருந்திருக்க முடியாது?



"இந்தக் காலத்தில் 'ஏரோப்ளேன்' இருக்கும் போது, அந்தக் காலத்தில், சீதையை தூக்கிக்கொண்டு இராவணன் ஏன் ஆகாயத்தில் பறந்திருக்க முடியாது?" என்று கனம் சுப்ரமணியம் ஒரு கூட்டத்தில் பேசியது நினைவிருக்கலாம். அப்படியிருக்க, முருகப் பிரானுக்கும் ஆறு முகங்கள் இப்படி ஏன் இருந்திருக்க முடியாது?


நடைபெற்றல்!
சொற்பமெஜாரிடியில் இருதார மண தடைச் சட்டம் நிறைவேறுகிறது.
சபாநாயகர் நந்தி தேவர்.
①
சட்டத்தை எதிர்த்து வாக் அவுட்.
தேவலோகத்து
பாஸ்போர்ட் வாங்காமல் யாரும் எந்த நாட்டுக்கும் போகக்கூடாது.
சபாநாயகர் நந்தி தேவர்.
②
சட்டத்தை எதிர்த்து வாக் அவுட்.
இராசன்


கொலை செய்பவர்கள் கடுமையாக தண்டிக்கப் படுவார்கள்.
சபாநாயகர் நந்தி தேவர்.
③
சட்டத்தை எதிர்த்து வாக்களிப்போம்.
பார்லிமெண்ட்...
கற்பழிப்பது பெரும் குற்றமாக கருதப்படுகிற மசோதாவை ஓட்டுக்கு விடுகிறேன்.
④
வோட்?
EX
சபாநாயகர் நந்திதேவர்
இராசன்



ஓவியக்கலையே உலகப் பொதுமொழி

எழுத்து மொழியின் தோடக்கம் ஓவியம்தான். மனிதன் காட்டில் வாழ்ந்து கொண்டிருந்தபோது எண்ணத்தை வெளியிட எழுத்துக்களை உண்டாக்கினன். எழுத்துக்கள் கோட்டால் வரைந்த சித்திரங்களே. மொழி நூல் அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவு இது. ஒருவனுக்கு அம்மை நோய் கண்டுள்ளது என்ற எண்ணத்தை அயலூருக்கு எழுதியனுப்பினன் காட்டுமனிதன். எப்படி? ஒரு தூலையை எழுதி அதன்மேல் புள்ளிகளை இட்டான்.

காட்டை விட்டு மனிதன் நாட்டுக்கு வந்தான். சித்திரமும் அவனோடு வந்தது. மனிதன் வளர்ந்தான். சித்திரமும் அவனோடு வளர்ந்தது. நாட்டில் எல்லோருக்கும் ஒரு மன்னன் இருந்த காலத்திலிருந்து, எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக வாழும் இக்காலம் வரை சித்திரக்கலை வாழ்ந்து வந்திருக்கிறது. இதன் வாழ்க்கை ஒரு தொடர் கதை. வளர் பிறை. இதற்கு அளிக்கப்பட்ட பெருமையோ மன்னராட்சியில் இருந்தது போல மக்களாட்சியில் இல்லை. இன்னும் காவியம் செய்யும் கவிஞர் ஆஸ்தான கவிஞராக இருக்கிறார். ஆனல், ஓவியம் தீட்டும் ஓவியர் ஆஸ்தான ஓவியராக இல்லையே.

ஆனலும் மக்கள் விழித்துக் கொண்டனர். வேறும் சித்திரத்தை வெறுக்கின்றனர். பொருளோடு கூடிய சித்திரங்களைத் தான் விரும்புகின்றனர். நாம் பண்டைய கால சித்திரத்தை போற்றுகிறோம். போற்ற வேண்டியதுதான்; அதற்காக அதைப் போல் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் எழுதிக்கொண்டிருக்கவேண்டியதில்லை. அன்று காலையில் பழய சோறு சாப்பிட்டு வந்தார்கள்; இன்று காபி சாப்பிடுகிறோம். அன்று குடுமி வைத்திருந்தார்கள்; இன்று 'க்ராப்' வைத்துக் கொள்கிறோம். அன்று புகை பிடிப்பதில்லை; இன்று புகை பிடிக்கிறார்கள். அன்று மாட்டு வண்டியிலும், நடந்தும் சென்றார்கள்; இன்று காரிலும், ரயிலிலும், விமானத்திலும் செல்லுகிறார்கள். இன்னும் நாளுக்குநாள் வசதிக்கு தக்கவாறு வாழ்க்கை முன்னேற, ஏன் கலையிலும் புதுமையைக் காண்

பிக்கக் கூடாது? முதலில் ஹோமர், சாக்ரடிஸ் வாழ்க்கையிலிருந்தும், குறள், ஐம்பெருங் காப்பியங்களிலிருந்தும், தற்கால அறிஞர்களின் வாழ்க்கையையும், பொன்மொழிகளையும் சித்திரமாகத் தீட்டி பாமரர்களுக்கும் அறிவைப் புகட்டச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் அவா. ஓயா உழைப்பினால் இன்று மக்களின் ஆதரவையும் ஆசியையும் பெற்றிருப்பதால் இந்த எண்ணம் விரைவினில் ஈடேறுமென்று நம்புகிறோம்.

உலக சரித்திரத்திலே ஓவியர்கள் ஒவ்வொருவரும் வறுமை முதலிய கஷ்டங்களை, முயற்சி வலியால் ஊடருத்து எழுந்து உயர்ந்தவர்களே. உதராணமாக; அப்பம் சுட்டு விற்றுப் பிழைத்த வன் க்ளாட் லோரைன். சாயக் காரன் டின்ரோரட்டோ. சிற்றுர் வேலை செய்தவன் கரவாக்கியோ. குடு குடுப்பைக் காரன் ஸிங்காரோ. கெயின் ஸ்பரோ நெச வாளரின் மகன். ரெயினல்டீஸ் ஆசிரியர் மகன். உலகப் புகழ்பெற்ற ஓவியர் டர்னர் மயிர் வினைஞன் மகன்.

இவர்கள் புகழடைந்தது அதிர்ஷ்டமும்அன்று; இனப்பற்றினாலும் இல்லை. இவர்கள் முதலில் தன்னலத்தை மறுத்து, வாயைக்கட்டி, வயிற்றை ஒடுக்கி முயற்சி செய்தார்கள். இவர்களுக்கு பொருள் சேர்ந்தது உண்மையானாலும், உண்மையில் அவர்கள் பொருள் தேட உழைத்தவர்களல்லர். ஒரு சித்திரத்தை பத்துநாளில் முடிப்பதற்கு பக்குவமடைய பலவருஷங்கள் பழகியிருக்கவேண்டுமே.

கண நேரத்தில் அழியும் அழகுக் காட்சியை, காலத்துக்கும் அழிபாக் களிப்புக் காட்சியாக்கும் வல்லமை ஓவியக்கலைக்குப் பெருஞ்சிறப்பளிக்கிறது.

வியாபாரிகள் விளம்பரத்திற்கு ஓவியம் வேண்டித்தான் இருக்கிறது. இக்காலத்தில் சினிமாவும், பத்திரிகையும் ஓவியத்தை விலக்கி விட்டால், நிச்சயம் பாதி உயிரை அவை இழந்து விடும்.

இலக்கியப் பணியும் அறிவுப் பணியும் புரிவோர்க்கு ஓவியக் கலை பணிபுரிந்து வருகிறது. மாளிகைகள்போல் வீடுகள் நிறைந்த பெரிய வீதியில் நடைபாதைகளில் மனிதர்கள் உறங்குவதை ஓவியம் எடுத்துக் காட்டுகிறபோது சிந்திக்காதவர் யார்? அகநானூற்றுக் காதலையும், புறநானூற்று வீரத்தையும் ஓவியக் கலை சித்திரங்களாக்கிச் சித்தரிக்கும்போது, பண்டிதர் பெரும் இன்பம், பாமரரும் பெறுகின்றனர்.

ஓவியக்கலை இன்று மனித வாழ்க்கையில் பெரும் பங்கு ஏற்றுப்பணி செய்கிறது. சித்தன்ன வாசல் சித்திரங்களும், அஜந்தாவின் அதியற்புத சித்திரங்களும் புகழை நிலைநாட்டியுள்ள நாட்டில், ஓவியக்கலை வளர்ந்துதான் வருகிறது. ஆனால் அதை உணர்ந்துபோற்றும் கலையுணர்வு மட்டும் இன்னும் பெருக வேண்டும்! காவியம் தரும் இன்பம் கற்றறிந்தவர்களால்தான் உணரமுடியும்; பெறமுடியும்! ஆனால் அதேஇன்பத்தை ஓவியமும் தருகிறது. கற்றறிந்தவர்கள் மட்டுமல்ல; எழுத்தறிவில்லாதவர்கள்கூட அந்தஎழிலோவியத்தை உணர்ந்து மகிழமுடிகிறது.

வாழ்க
கலையுணர்வு!

வளர்க
கலை தரும் இன்பம்!

★




15.12.54.

யாரால் குற்றமற்றவனே




தசரதன் சொல்படி இராமன் காட்டிற்கு சென்றபின் அவனை மீண்டும் வந்து முடிசூட வேண்டுமென பரதன் அழைக்க வந்தான். அப்போது இராமன், அரசு பரதனுக்கே உரியது என்றும், அதைத் தான் ஏற்பது தவறும் என்றும் பரதனுக்கு எடுத்துச் சொன்னான். தன்னை பட்டம் பெற ஒட்டாது தடுத்து காட்டுக்கு அனுப்பும்படி கைகேயி வேண்டியபின், பரதனை காட்டில் தன்னை அழைக்க வந்தபோது, தான் இந்த வரலாற்றை பரதனுக்குச் சொல்லும வரை இராமன் யாரோடும் பேசினதாகவோ, அவனுக்கு அவன் முன்னறியாத பரதன் உரிமையை யாரும் அவனுக்குச் சொன்னதாகவோ வான்மீகியாரும் கம்பரும் கூறவில்லை. ஆகவே பரதனுக்கு இதைச் சொல்லும் முன்னமே, தன்னை முடிசூடாமல் விலக்கி வனம்புக அனுப்பும் முன்னே அவன் இதை அறிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அப்படி முன் தனக்கு அரசுரிமை இல்லையென்றும், அயோத்தியில் பரதன் இராமல் மிதிலைக்கு அவனை போகச் செய்து, அவனுக்கோ அவன்மாதாமகனை கேகேயனுக்கோ அழைப்போ, தகவலோ இல்லாமல் இராமனுக்கு முடிசூட தசரதன் தொடங்கியபோது, இராமன் பழைய வரலாற்று உண்மையை எடுத்துரைத்து தான் முடிசூடாமல் மறுக்காத தேன்?

பரதனை வஞ்சித்து அவனறியாமல் அவனுக்குரிய நாட்டை தனக்குத் தர தசரதன் முயன்றதைத் தடுக்காமல், தான் அதை ஏற்கத் தயாராய் இருந்தானே, பரதனுக்குரியதை கிடைத்தால் அவனறியாமல் தான் அடைவதற்குத் தான் இணங்கியிருந்தான் என்பதும், கூனியால் உண்மை தெரிந்து பரதனில்லாத போது அவனுரிமையை தான் பெற வொட்டாமல் கைகேயி தூண்ட, தன் முடிசூட்டு விழா தடைபட்டு தான் வனமடைய நேர்ந்ததும் தெரிந்த இராமன், தன்னை அழைக்க பரதன் தனியே வராமல் கைகேயியும் கூட வந்திருந்ததைக் கண்டு, தான் இப்பழஞ் செய்தியை, அதையறியாத பரதனுக்குச் சுட்ட நேர்ந்தது என்பது ஒருதலை. அவள் இல்லாமல் பரதன் மட்டும் தன்னை அழைக்க வந்திருந்தால் இராமன் என்ன செய்திருப்பான் என்று நாம் எணணுதற்கில்லை. அது எப்படியிருந்தாலும் பரதனறியாமல் தான் நாடு பெற இணங்கியிருந்தான் என்பது மறுத்தற்கில்லை. தனக்குரிமை இல்லாத்தும் பரதனுக்கே உரியதமான நாட்டரசை தடுப்பாரின்றி தசரதன் கொடுக்க வந்தபோது அதைத் தான் பெற அவனிணங்கினது தவறல்லவா?

இராமன் திருமாலின் அவதாரங்களில் சிறந்தவன் என்று போற்றப்படுகிறான். சடவுளின் அவதாரமான இராமன் உண்மையறிந்த உள்ளத் தவனுய் அதற்கு மாறுகப் பெரும் தவறிழைக்கத்

தான் துணிந்ததெப்படி? இதற்கு யாதொரு சமாதானமும் வான்மீகர் வரலாற்றில் இல்லாத தோடு கம்பராலும் சொல்லப் பெறவில்லை. இது நாட்டில் இராமன் செய்த தவறு. இனி காட்டில் அவன் செய்த தவறைக் காண்போம். கிட்கிந்தையில் வாலி அரசனாக ஆள்கிறான். அவனால் துரத்தப்பட்டு காட்டிலிருந்த சுக்ரீவனை இராமன் காண்கிறான். அவன் தூண்ட, தான் வாலியை விசாரிக்காமலேயே தான் கொல்லவும், அவனரசை இளையவனான சுக்ரீவனுக்கு மூத்த முடியுடை அரசனை தான் கொன்று, அவன் நாட்டை இளையவனாகிய சுக்ரீவனுக்குத் தருவ தாக இராமன் தணிந்தானே. முதலில் சுக்ரீவன் சொன்னதை வைத்து உண்மை விசாரித்தன ராமல் வாலியைத் தான கொல்லத் துணிந்தது நேர்மையாகுமா? சுக்ரீவன் தவறற்றவன் என்றும் வாலி செய்த பிழை யாதென்றும் இராமன் வேறும் மனிதனுமிருந்தாலுங்கூட பெருந் தவ றாகுமே. அதற்கு மேல் அவனுக்குத் தகவல் கொடுத்து வாலியைப் போருக்கழைத்து நேரில் தான் அவனை போருது கொள்வதை விட்டு, அவனை அவன் தம்பி சுக்ரீவனோடு சண்டை செய்யும்படி அழைக்கச் செய்து, அவனறியாமல் தான் மறைந்திருந்து அம்பெய்தி இராமன் அவ னைக் கொன்றது நேர்மையா? அவனுக்குப் பெருமை தருமா? இனி வேறும் மனிதனில்லா மல் திருமாலின் அவதாரமான இராமன் இப் பிழை இழைத்ததற்கு நியாயமென்ன? மனித னுப்பிறந்தால் தவறிழைப்பது மனிதர்க்கியல் பாதலால் தானும் இப்பெருந்தவறு செய்ய இராமன் துணிந்தான் என்று கொண்டாலன்றி இதற்குப் பண்டிதர் கண்ட காரணம் யாதும் கூறப்படவில்லையே. இதே கேள்வியை வாலியே இராமனிடம் நேரில் கேட்கிறான். தன்னை நேரில் போருக்கழையாமல் மறைந் திருந்து இராமன் அம்பெய்தது தான் என்று இறக்கும் தருவாயில் எடுத்துக் காட்டி வாலி இடித்துரைக்கிறான். இராமனால் சமாதானம் எதுவும் கூறப்படவில்லை. வாலிக்கு முன் தகவல் கொடுத்திருந்தால் அவனும் இராமனை அடுத்து தனக்கே நாட்டைத் தரும்படி வாலி கேட்க நேரலாம்; கேட்டால் அவனைக் கொன்று சுக்ரீவனுக்குத் தான் தருவதாகச் சொன்ன வாக்கு நிறைவேற்ற முடியாமல் நேர்ந்துவிடு மாதலால் அவனை மறைந்து நின்று இராமன் கொன்றான் என்று வாலிக்காக ஒரு போலிக் காரணம் இலக்குவனால் சொல்லப்படுகிறது. தன்னைப் போருக்கழைத்த இராமனோடு போரு வதை விட்டு அவனிடம் தன் உயிரையும் நாட்டையும் இரக்க வாலி வருவான் என்று இராமன் எண்ணுவானேன்? உலக மன்னரை யும் தேவர்க்கரசனையும் வென்று, அவர் நாட்டைத் தான் கொள்ள விரும்பாமல், புகழொன்றே கருதி, தனக்குரிய நாட்டை மட்டும் ஆண்டு வரும் வாலி, இராமனிடம் அவன் தன்னைப் போருக்கழைத்தபின் அவனுக்கஞ்சி யாசகனாய் வாலி வருவான் என்று கருத இராமனுக்கு இருந்த காரணம் ஒன்றுமில்லையே. ஒருக்கால் வீரனான வாலி கோழையாய் இராமனிடம் இர வலனாக வந்து யாசிப்பானேல் இராமன் அதை மறுத்துவிடலாமே. கேட்பவர் எவர்க்கும், அவர் கேட்டதெல்லாம் கொடுப்பதாய் இராமன் கொடி கட்டவில்லையே. ஆதலால் நேரில் வாலியோடு போருது வெல்ல தனக்கு வலியின்மை அறிந்து அவனுக்கஞ்சி அவனை வஞ்சித்து நாட்டை உரிமையற்ற அவன் தம்பி சுக்ரீவனுக்குத் தந்து, அவன் துணை பெற்று தன் மனைவியைச் சிறையிட்ட இராவணனுடன் மலைவதற்கு விரும்பி, இராமன் சூழ்ச்சி செய்து வாலியைப் போருக்கு அழைக்கும்படி சுக்ரீவனைத் தூண்டி, தான் மறைந்து நின்று வாலி மேல் அம்பெய்து அவனைக் கொல்ல இராமன் துணிந்தான் என் பது தவிர வேறு நியாயம் எதுவே நாம் காணற் கில்லை. இது காட்டில் இராமன் செய்த பெரும் பிழை. இப்படி நாட்டிலும் காட்டிலும் தன்ன லம் பேணி பெருந்தவறிழைக்க இராமன் கூசா மல் துணிபவன் என்பது அவன் வரலாறு கூறும் கதைகளே கூறுகின்றன. அதைக் கேட்கும் தமிழ்ப் புலவரும் அதன் நேர்மையை ஆராய்ந் தோராமல் அப்படியே கொண்டு அவனைப் பாராட்டி வருவதற்கு நேர்ந்த நியாய மென்ன? அறிஞர் ஆராய்வராக.


மதுரையில்
மணிக்காண்கள்.



சவரத்தொழிலாளி நடிகரிடம் :

"என்ன சார், உங்க படத்துக்கு சென்சார் 'டிரபில்சே'ல் லாம் எப்படிங்க இருக்கு?"

ஓவியம் : ரெசாக்

மறக்கி

கருணை





காவிரிதந்த தமிழகத்துப் புது மணலில்
களம் அமைத்துச் சேரசோழ பாண்டிமன்னர்
கோபுரத்துக் கலசத்தில் யார்கொடிதான் பறப்பதென்று,
... இன்றுபோல் ...
போர்தொடுத்துக் கொண்டிருந்த காலமது; அந்நாளில்
ஓர் களத்தில்,

தாய்நாடுகாக்கத் தாவிப்பாய்ந்து செத்தார்
தந்தை என்ற சேதிகேட்டு, தணல்வீழ் மெழுகானாள்
தமிழகத்துக் கிளியொருத்தி!

அனல்போலும் கண்ணுடனே, அயலூர் சென்றிருந்த,
அவள்கணவனும் வந்திட்டான்!
புனல் போக்கும் விழியாலே அவள் போர்ச்செய்தி
தந்திட்டாள்!

தந்தை களம்பட்ட செய்திக்கோ தவித்தாய் என்றான்.
இல்லை அன்பா!
முல்லைசூழ் இந்நாட்டுப் படையிலோர் வீரர் குறைந்திட்டால்,
நல்ல உடையிலோர் கிழிசல்வந்தது போலன்றே?
இனித்தடையின்றி நுழைவரே பகைவர் என எண்ணினேன்;
அடைபட்ட கண்ணீர், அணை உடைத்த தத்தான்என்றாள்.

அவன்,

குகைவிட்டுக் கிளம்பும் ஒருபுலியென,
புகைவிட்டுக் குமுறும் எரிமலையென,
பகைவெட்டிச் சாய்க்கும் வாளெடுத்தான்;
சூளுரைத்தான் சுடர்முகம் தூக்கினான்;
சுக்குநூறுதான் சூழ்ந்துவரும் பகைஎன்றான்.
நாடு மீட்காமல், வீடு திரும்பேன் என்றான்!

நங்கையோ,
நகைமுழக்கம் செய்து நடந்திடுக கண்ணே என்றாள்!
திரும்பி வருவேனே இல்லையோ
எற்கும் இப்போது ஒருமுத்தம்
இந்தா திரும்பு என்றான்!
கொடுத்தான்—பின்தொடுத்தான்
பகைவர்மீது பாணம்!

★ ★ ★

போர்! போர்! போர்! எனவே
முழங்கிற்று முரச ஒலி!
பார்! பார்! பார்! அந்தப் பைங்கிளியின்
உரிமையாளன்—பகைவர்மீது பாய்ந்து
கொல்லும் வீரம்பார்!—என்று
பட்டாளத்துத் தோழரெல்லாம் வியந்துரைத்தார்!

அந்தக் கட்டாணிமுத்தாளும் கண்வழியே சிரித்திட்டாள்,
களத்தினிலே அத்தானுக்கு
அடுக்கடுக்காய் குவிந்துவரும் வெற்றிகளைக் கேட்டுவிட்டு!

★ ★ ★

கோட்டைகள் விடுபட்டன! எதிரியின்
குதிரைக் கால்கள் உடைபட்டன!
வேழப்படை முறிபட்டது! வேல்கள் பொடிபட்டன!
எம், கொற்றவன் படைகள் கொட்டும் பேரிகை
கோடையிடியெனக் கேட்குது! கேட்குது! எனக்
குதித்திட்டாள்—புதுப்பண் அமைத்திட்டாள்!

★ ★ ★

வீரர்கள் வந்தனர்—வெற்றிஉன் கணவனுக்கே என்றனர்!
வேந்தனின் தூதுவர் வந்தனர்! வாழ்த்துகள் வழங்கினர்!
வீட்டோரத்துத் தோழிகள் வந்தனர்—வெற்றி
நீட்டோலை வாசித்து மகிழ்ந்தனர்! அந்த அழகி,
ஆனந்தக்கண்ணீர் பொழிந்தாள்—அப்போது,
ஏனந்த மனிதன் வந்தானே?
இழவுச் சேதி சொல்வதற்கு!—

என்னருமைப் பெண்பாவாய்!
கண்ணல்ல--கலங்காதே!
களச் சேதி, கடைசிச் சேதி கேள் என்றான்—

அந்தோ!

மாவிலைத் தோரணங்கட்டி, மணவிழா மேடைதன்னில்
வாழ்விலேஒன்றுனேம் என்றுசொன்ன கண்ணாளன்—
மார்பிலே வேல்தாங்கி நல்ல சாவிலே வீழ்ந்துவிட்டான்—
ஆவிதான் போனபின்னும் உயிர்வாழும் ஆரணங்கு
அச்சடித்த தமிழ்ப் பதுமை—
கூவி அழுதாள்—கொத்தான மலர்
இந்தக் குடும்பம்!
அதைக் கொத்தாமல் கொத்திவிட்ட
கொடும்சாவைப் பழித்தாள்—இழித்
துரைத்தாள்! "இனி என்ன மிச்சம்!"
என்றும், கனிஅழுகிப் போனதென்றும்
கதறி அழுதாள்!

பனி வெல்லும் விழிகாட்டி,
பனவெல்ல மொழி உரைத்து,
பள்ளியறைக் கவிபாடும்
நாளெல்லாம் மண்தானே?
இனி, இது, தூங்காத கண்தானே?
என அழுதாள்! அத்தான் பிணம்
கிடக்கும் களம் நோக்கித் தொழுதாள்!

★ ★ ★






சோகத்தால் வீழ்ந்துவிட்ட அவள் காதில், வெற்றி
வேகத்தால் பகைவர் தட்டும் போர்முரசம்
பட்டதுதான் தாமதம்;
கெட்டதுதான் கெட்டது நம்குடி—முழுவதுமே
பட்டொழிந்து போகட்டும் எனஎழுந்தாள்!
மட்டில்லாப் புகழ்கொண்ட நாட்டுக்கே அன்றி
வீட்டுக்கோ வாழ்வேன் என்றுள்—
வட்டிலினுல் நாழிபார்க்கும் விதங்கண்ட தமிழ்நாட்டு மாதரசி,
தொட்டிலிலே இட்டு, தான்வளர்த்த தூயசெல்வன்
அட்டியின்றிக் கல்வி கற்க, ஆலமரத்தடி
ஆசானிடம் சென்றிருக்கும் நீனைவு கொண்டாள்!

அங்கு சென்றுள்—அம்மா எனப் பாய்ந்தான்,
அழகுமிகும் மழலைமொழி அன்புத் தங்கம்!
அப்பா, தாத்தா, ஊர் திரும்பினரோ என்றான்—

திரும்பிவந்து சாவூர் சென்றுவிட்டார்—
கரும்பே—நீயும்வா என்றழைத்தாள்
"என்ன வாங்கிவந்தார்" என்றான்!
மானம்! மானம்! அழியாத மான மென்றுள்—
மகனே! அதைச் சுவைக்க நீயும் வருக என்றுள்

வந்துவிட்டான்—குலக்கொழுந்து!
குடும்பவிளக்கு எரிந்துகொண்டே, கூறுகின்றுள்—
எதிரிகளின் படையெடுப்பால்—நம் குடும்பம் தழை
உதிர்த்துவிட்ட மரமாகப் போனதடா தம்பீ!
கவலையில்லை—களம்சென்றார்; மாண்டார்!
ஆனலும் இந்த,
நிலம உள்ளவரையில் 'மானங்காத்தார்' என்ற பெயர் பூண்டார்!
என்மகனே! நீயும் தோளில்,
பலம் உள்ளவரையில் பகையைச் சாடு!
பரணிபாடு! இதுஉன்
தாய்த் திருநாடு!—உடனேஓடு! எனத்,
தாவி அணைத்துத் தளிர் மகன்தன்னை,
சீவிமுடித்துச் சிங்காரித்து, ரத்தக்
காவிபடிந்த வாள்கொடுத்து,
"சென்றுவா மகனே, செருமுனைநோக்கி!"
என வாழ்த்திவிட்ட திருவிடத்துக்
காட்சிதனை—போற்றிப் பாடாதார் உண்டோ!—
திருமகளே! இந்தப் பூவுலகில்?...





நான்கு.... எண்ணங்கள்

நுண்ணிய முறையில்...

இராசனு-

வாழ்க்கையில் பெரிய மாறுதலோ பெரிய பிரிவோ நேரும்போது ஆழ்ந்த சில எண்ணங்கள் மேலோங்கி நிற்கும். ஒரு தொழிலை விட்டு வேறு தொழிலை மேற்கொள்ளும் ஒருவனுக்கு, அந்தப் பழைய தொழிலில் பெற்ற அனுபவங்களில் ஆழ்ந்த சில பகுதிகள் அடிக்கடி நினைவுக்கு வரும். ஓர் ஊரை விட்டு மற்றோர் ஊருக்குக் குடியேறும் ஒருவனுடைய நினைவிலும், அந்த ஊரின் அனுபவத்தில் ஆழ்ந்த சில உணர்ச்சிகள் மட்டும் மேலோங்கும். இடுக்கண் வருவதற்கு அஞ்சாமல் உயிருக்குத் துணிந்து ஒரு செயலாற்ற முனையும் ஒருவனுக்கும் தன்னுடைய நினைவில் ஆழ்ந்து உறைந்து கொண்டுள்ள சில கூறுகள் மேலோங்கி நிற்கும். உயிர் உடம்பை விட்டுப் போக ஊசலாடும் ஒருவனுடைய உள்ளத்திலும் இத்தகைய ஆழ்ந்த உணர்ச்சிகள் சில மேலெழுந்து நிற்கும். அந்தச் சில உணர்ச்சிகளே அவனுடைய வாழ்க்கையில் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவை என்பதை அனுபவ அறிவு உள்ளவர்கள் அறியலாம்.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்பவன் பெரும் போர் ஒன்று நடத்தத் துணிந்தான். பகைவர்களின் சேருக்கை அடக்க வேண்டும் என்று உறுதி கொண்டு துணிந்தான். அந்தப் போரை துணிவோடு வஞ்சினம் கூறினான்; இவ்வாறு செய்யாவிட்டால் இன்ன நிலைக்கு ஆளாவேன் என்றும் வஞ்சினம் கூறினான். இருவகைப் போர்களில் முதல் கேடு, பெரிய கேடு இது அந்தப் பாண்டிய மன்னனின் வாழ்க்கையில் [illegible] எனக் கூறுவது போல், தன்னை

துணிந்து ஆற்றவேண்டிய பெரும் போர் அது. போர் எனின் எவ்வளவோ துணிவு கொண்டு செய்ய வேண்டியது; அழிவுகளுக்குத் தயங்காமல் எடுத்ததை முடிக்கும் நோக்கம் ஒன்றே கொண்டு உயிரைப் பணயமாக வைத்து நடத்த வேண்டியது போர்.

அவ்வாறு போர் செய்யத் துணிந்து, பகைவரை அடக்குவதே தன் கடமை என்று வஞ்சினம் கூறிய போது, அவனுடைய உள்ளத்தில் ஆழ்ந்திருந்த சில உணர்ச்சிகள் வெளிப்பட்டன. "பகைவரைத் தோற்றோடுமாறு செய்வேன்; செய்யத் தவறினேனுனுல், இன்ன இன்ன கேடுகள் எனக்கு வருவனவாகுக" என வஞ்சினம் கூறித்தான் தன் வாழ்க்கையில் நேரிய கேடுகள் — பெரிய குறைகள் — என எண்ணிய நான்கு எண்ணங்கள் அப்போது வெளியாயின.

[illegible] அவர் தோற்றப் புறமுதுகு காட்டி ஓடிவிடச் செய்யாவிட்டால், இதோ என் அருகே உள்ள என் மனைவியை விட்டுப் பிரிவேனுகுக" என்றும்,

[illegible] அவர்ப் புறங் காணேனுயின் சிறந்த பேரமர் உண்கண் இவளினும் பிரிக.

என்று தன் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகளில் தன்னுடைய உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகளில் துணைவியிடம் கொண்டிருந்த பேரன்பு இந்த உணர்ச்சிகளில் வெளிப்பட்டுப் பெற்றது. வாழ்க்கையில் கேடுகள் அழிவேனுகை என்று வஞ்சினம் கூறினான். இருவகைப் முதல் கேடு, பெரிய கேடு இது அந்தப் பாண்டிய மன்னனின் வாழ்க்கையில் [illegible] எனக் கூறுவது போல், துணைவியை

விட்டுப் பிரிவதை எடுத்துரைத்தான். சிறந்த துணைவி என்றான். துணைவியை விட்டுப் பிரியாமல் வாழ விரும்பிய காதல் நெஞ்சத்தை இதனால் புலப்படுத்தினான்.

வாழ்க்கைத் துணைவியிடம் கொண்ட பேரன்புக்கு அடுத்த நிலையில் அவனுள்ளத்தில் ஆழ்ந்திருந்தது நாட்டை ஆளும் முறையில் இருந்த ஆர்வமே ஆகும். அறங்கூறவையங்களாகிய நீதி மன்றங்களே அரசனுடைய செங்கோலின் பெருமையைத் தெரிவிப்பவை. அரசனுடைய ஆட்சி, முறையானதா இல்லையா என்பதை நீதி மன்றங்களில் விளங்கும் நீதியைக் கண்டு அறியலாம். திறமை இல்லாத ஒருவனை நீதி மன்றத்தில் தலைவனாக வைத்து வழக்குகளைக் கேட்டுத் தீர்ப்பு அளிக்கச் செய்வது தீமையே விளைக்கும். அவனால் அறத்தையும் அன்பையும் காக்க முடியாது. அவனுடைய திறமையில்லாக் குறையால், நீதி மன்றத்தின் பெயர் கெட, அதனால் அரசனுடைய ஆட்சி முறைக்கே பழி ஏற்படும், பகைவரை வெல்லத் தவறினால் இத்தகைய கேடு தனக்கு வருவதாக என்று இரண்டாவதாக இதைக் குறிப்பிட்டான் அந்தப் பாண்டியன்.

> அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
> மெலிகோல் செய்தேன் ஆகுக...

மூன்றாவதாக, அவனுடைய உள்ளத்தில் ஆழ்ந்திருந்த எண்ணம் சிறந்த நண்பர்களின் உறவு. வாழ்க்கைத் துணைவியை எண்ணி, அடுத்தபடியாகத் தன் சிறந்த நண்பர்களின் உறவை எண்ணினான்.

'செயற்கு அரிய யாஉள நட்பின்?' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். வாழ்க்கையின் நன்மைக்குச் செய்யத் தக்கது நட்புப் போல் வேறொன்று இல்லை என்பது அவருடைய கருத்து. அந்தப் பாண்டியனுடைய உள்ளத்தில், மூன்றாவதாக எண்ணத் தக்க நிலையில், சிறந்தவர்களின் நட்பு—கண் போன்ற நண்பரோடு கலந்து பழகும் பேறு-அமைந்திருந்தது.

> கண்போல் நண்பின் கேளிரோடு கலந்த
> இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றே

அத்தகைய நண்பர்களின் உறவைப் போற்றிப் பாராட்டிய பாண்டியன், அந்த நட்பால் விளைந்த இன்பத்தை 'இன் களி மகிழ் நகை' என்று நான்கு செஞ்சொற்களை அடுக்கி விளக்கினான். இனியதாம்; களிப்பூட்டுவதாம்; மகிழ்ச்சியளிப்பதாம்; நகை விளைத்து இன்புறுத்துவதாம். இத்தகைய 'இன் களி மகிழ் நகை' எனக்கு இல்லாமல் கேடுவதாக என்று வஞ்சினம் கூறினான்.

நான்காவதாக, அவனுடைய உள்ளத்தில் சிறந்ததாக மேலோங்கி நின்ற எண்ணம் எது?

தான் பிறந்த குடியை நினைத்தான்; பழம் பெருமையும் அறம் பிறழாச் சிறப்பும் உடைய பாண்டியர் மரபை நினைத்தான்; குடி மக்களைக் காப்பதில் தொன்று தொட்டுச் சிறப்புற்று வரும் தென்னாட்டு வேந்தர் மரபு அவனுடைய நெஞ்சில் பெருமை பூத்து வந்தது. மற்ற நாடுகளில் இத்தகைய வேந்தர் மரபுகள் இல்லை; அதனால் மற்ற நாடுகள் தென்புலம் போல் பெருமை பெறுதவை; அவை வன்புலங்கள். "தென்புலத்தைக் காவல் புரியும் வேந்தர் மரபில் பிறந்தேன். பகைவரை வெல்லக் கருதி மேற்கொண்ட இந்தப் போரில் என் எண்ணம் நிறைவேறுவிடின், இந்த உயர் குடியில் பிறந்து நாடாளும் வாய்ப்பு எனக்கு இல்லாமல் போவதாக! பிறருடைய வன்புலமாகிய வேற்றுநாடுகளில் உள்ள அரசர் குடிகளில் ஒன்றில் மாறிப் பிறப்பேனாக" என்றான்.

> மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
> தென்புலங் காவலின் ஒரீஇப் பிறர்
> வன்புலங் காவல் மாறியான் பிறக்கே

மாறிப் பிறப்பதும் ஓர் அரச குடியிலேயே என்று அப்போதும் அவன் மனம் எண்ணியது. ஆனால் பெருமைக்கு உரிய தென்னவர் குடியில் பிறக்கும் பேற்றை நினைத்து ஏங்கினான், பிறந்த குடியின் உயர்வை உணர்ந்து அதன் பெருமையைக் காக்க விழைந்த பெரு மனமே இதற்குக் காரணம்.


> ஆர் அமர் அலற்தாக்கித் தேரோடு
> அவர்ப்புறங் காணேன் ஆயின் சிறந்த
> பேர் அமர் உண்கண் இவளினும் பிரிக;
> அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி முறை திரிந்து
> மெலிகோல் செய்தேன் ஆகுக; மலிபுகழ்...
> கண்போல் நண்பின் கேளிரோடு கலந்த
> இன் களி மகிழ் நகை இழுக்கியான் ஒன்றே
> மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
> தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்
> வன்புலங் காவல் மாறியான் பிறக்கே.
>
> (புறநானூறு, 17)

ஃ

பிரபல - திருமணம்!



















நடைபெற்ற திருமணம்...

சிக்கல்

"கனகம்-கெட்டுப்போவதில் என்னெனக்கு அவ்வளவு கிருப்தியென்று கேட்கிறீர்களா? அதுதான் பழிக்குப்பழி! சுருக்கமாகச் சொன்னால் புரியாது. அது-பெரிய கதை"...



நான்

நான் எனது சாய்வு நாற்காலியில் படுத்தபடி வான மண்டலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நிலவொளி, அந்த முற்றம் முழுதும் பரவி, வெள்ளி மணல் தெளித்தது போன்று, அழகொளி வீசச் செய்து கொண்டிருந்தது. முற்றத்தில் உட்கார்ந்திருந்த என் மனைவி, தான் பின்னிக் கொண்டிருந்த பின்னல் வேலையை விட்டு விட்டு என் அருகில் வந்தாள்.

அவள் கையில் நூல் கண்டு ஒன்று பிரிந்திருந்தது. அதனைச் சரியாகப் பிரித்துச் சுற்றிக் கொடுக்கச் சொன்னாள்.

நான் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். அது சிக்கல் நிறைந்திருந்தது. ஒன்றைப் பிரித்தால், வேறொன்றில் சிக்கல் ஏற்பட்டது.

'நிலா, பிரிக்க முடியாத சிக்கலாக இருக்கிறதே!' என்றேன் நான்.

'சிக்கல் இருப்பதால் தானே உங்களிடம் தந்தேன். அந்த சிக்கலை எடுத்து விடுகிற அளவு எனக்கும் பொறுமையில்லை என்பதாலேதான் உங்களிடம் தந்தேன். கொஞ்சம் பொறுமையுடன் சிக்கலை நீக்கி, அந்த கண்டில் சுற்றித் தாருங்கள்' என்றாள் நிலா—என் மனைவி.

மீண்டும் முயற்சித்தேன். சிக்கல் வளர்ந்ததே தவிர, சிக்கல் நீக்கக் கூடியதாக இல்லை.

'நிலா, சிக்கல் போலை போதுமா?' என்றேன்.

'சிக்கல் பற்றிய சிந்தனை எனக்கில்லை. நூல் முழுவதும் ஒழுங்காகச் சுற்றப்பட வேண்டும்' என்றாள் அவள்.

'சிக்கல் எடுப்பதனால் நூல் உருவாக இருக்காது. நூல் உருவாக வேண்டுமானால் சிக்கல் போகாது' என்றேன்.

'சிக்கலும் நீங்க வேண்டும் — நூலும் ஒழுங்காக வேண்டும்' என்றாள் அவள் மீண்டும்.

இப்படி சிக்கலான நூல் மூலம் எழுந்த உரையாடல் என்னை வேறு எங்கெங்கோ இழுத்துச் சென்று விட்டது. நூலின் சிக்கலை எடுக்க முடியாமல் தவித்தேன் நான். வாழ்க்கை நூலின் சிக்கலை எடுக்க முடியாமல் தவிப்பவர்கள் எத்தனை பேர் உலகில் என்று எண்ணினேன். என் சிந்தனை சிறகு கட்டிக் கொண்டது. அது சுற்றிப் பறந்து வந்த வாழ்க்கை மண்டல அனுபவத்தைத்தான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

கனகம்

என்னை இன்று ஊரே தூற்றுகிறது. உற்றாரோ, வெறுத்தொதுக்குகின்றனர். என்னைக் காணவும் சிலர் வெட்கப்படுகின்றனர். வேறு சிலர் கண்டாலே, முகத்தைத் திருப்பிக் கொள்கின்றனர்.

ஏன் இப்படி என்னை வெறுத்தொதுக்குகின்றனர்?



நான் இப்பொழுது வழுக்கி விழுந்தவள். ஒழுக்கம் கெட்டவள். எனக்கு அழகான ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஆனால் என் கணவரோ, சிங்கப்பூர் சென்று ஐந்து ஆண்டுகளாகி விட்டன. சும்மா யிருந்தாலே, வாயை மெல்லும் இந்த ஊராருக்கு, அவ்லும் கிடைத்துவிட்டால் சொல்லவும் வேண்டுமோ! அவல் கிடைத்த மாதிரி இந்த ஆண் குழந்தை கிடைத்து விட்டது!

இந்த ஊரார்ின் கண்களுக்கும், வாய்க்கும் பயந்துதான், ஆரம்ப காலத்தில் வயிற்றிலே கட்டி யென்று கதை கட்டிப் பார்த்தாள் என் தாய். பிறகோ மகோதரம் என்று கூறினேன் நான். ஆனால் கடைசியில் குட்டு வெளியாகிவிட்டது. சாயம் வெளுத்துவிட்டது. சந்தி சிரித்துவிட்டது. மருத்துவ விடுதியில் மகனைப் பெற்று, பெற்ற மறு நாளே விற்றும் தொலைத்தாகி விட்டது. ஆனால் இந்த ஊரார் வாய் ஓயவில்லை.

அவரோ, என்னை அண்ணன் பாதுகாப்பில் விட்டுச் சென்றார். ஆனால் அண்ணனோ, என்னை, அவரது ஆசைநாயகி அற்புத சுந்தரியோடு வாழ வைத்தார். அந்த அற்புத சுந்தரி, அண்ணனிடம் சுந்தரியாக இருப்பதற்கு முன்னால் நால்வருக்கு சுந்தரியாக இருந்தவள். அவள் ஒழுக்கம் கெட்டவள். இவள் உறவு கூடாது என்று நெருங்கியவர் எல்லாம் கூறினர். ஆனாலும் அண்ணன் வாக்கை தட்டக் கூடாது என்பதாலே, அற்புத சுந்தரியோடு இழைந்தேன். அதன் விளைவுதான் இந்த விபரீதம்! இப்படிச் சொன்னால் யார் நம்பப் போகிறார்கள்?

எனக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவனை வயது நிரம்பியவன். அவனுக்கு மணம் செய்திருந்தால்கூட ஒரு பிள்ளைக்குத்தந்தையாகியிருப்பான். தனபாலுக்கு தாயாகிய என்னைத்தான், தனபால் வயதுள்ள அந்த அற்புத சுந்தரியின் தம்பி, ஆண் குழந்தை ஒன்றுக்கு அந்திய காலத்தில் அம்மா வாக்கி விட்டான்—ஐயோ, அந்த கேவலத்தை, நான் விவரிக்க விரும்பவில்லை!

என்னை இன்று ஊர் விசாரி பென்கிறது. ஆனை



என் அண்ணனை விபசாரன் என்று கூறவில்லை. கூறுதது மட்டுமல்ல; அவரது விபச்சாரியோடு உறவு முறை காட்ட வைத்து என்னை இப்படி பழிப்பெயர் பெற வைத்துவிட்டாள் அந்த விபசாரி அதையும் ஊரார் கேட்கவில்லை!

ஆணைப் போல, பெண்ணும் என்று எங்கள் குடும்பத்தையே தூற்றுகிறார்கள்—ஆனால், ஆண் செய்த ஆரம்ப விபசாரத்தனந்தான் இதற்குக் காரணம் என்பதை மட்டும் அண்ணனும் ஒத்துக் கொள்ளவில்லை. இந்த அநியாய ஊராரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

இனி நான் இருப்பதா—இறப்பதா என்பதே பிரச்சினை. சிங்கப்பூர் சென்ற அத்தான் திரும்பி வருவாரா—வரமாட்டாரா என்பது சந்தேகமே! இருந்தாலும் என்னை விபசாரத்தனத்தில் தள்ளி, அந்த அடிப்படை விபசாரத்தனத்திற்கு முடிவு கட்டியே தீரவேண்டும்.

அற்புத சுந்தரி

கணவனில்லாமல் குழந்தை பெற்றெடுத்தாள் கனகம். அதற்கு என் தம்பிதான் காரணம் என்று கூறுகிறாள் கனகம். அதையே ஊர் முழுவதும் கூறிவருகிறாள் அவள் தாய்.

நான் விபசாரி யென்று ஊர் கூறுகிறது. அப்படியே இருக்கட்டும். ஆனாலும் வீணுக்கு விபசாரியாக வில்லை. எனது தற்பொழுதைய காதலர் அலங்கார நாதரை எப்படியும் அடைந்து விடுவது என்ற முடிவோடுதான் நான் விபசாரியானேன். நான் சினைத்தை முடித்துவிட்டேன்.

நான் ஏன் அலங்கார நாதரை தேடினேன் தெரியுமா? அவர் அழகைக் கண்டா? இல்லை. அவர் பொருளைக் கண்டா? இல்லை. அவர் கனகத்தின் அண்ணனை இருந்த ஒரே காரணத்தால்தான் அவரைத் தேடினேன்—மோடி செய்தேன். என் வலையில் வீழ்த்தினேன்.

நானே வற்புறுத்தி, வேலம்பட்டியில் இருந்த அவளை, நான் இருக்கும் வெள்ளம்பட்டிக்கு குடிவரச் செய்தேன். அவளுடன் திருவிழாக்கள் பார்த்தேன்—திரைப்படக் காட்சிகளுக்குச் சென்றேன். எல்லாம் காரியத்தோடுதான்!

ஒரு நாள் விருந்துக்கு அழைத்தேன். கனகத்தைமட்டும் தனியாக இரவு தங்க வைத்தேன். தம்பிக்கு தாலி கட்டாத தாரமாக அவளை அன்று இருக்க வைத்தேன். தம்பி, பால்ருசி கண்ட பூனையைப்போல திரிந்தான். கனகமும் நான் நினைத்த படியே, இழுத்த இழுப்புக் கெல்லாம் வளைந்து கொடுத்தாள். கடைசியில் வயிற்றிலே 'பிஞ்சு' என்றவுடன்தான் எனக்கு திருப்தி ஏற்பட்டது. அவள் அழகான ஆண் குழந்தை பெற்றுள் என்கிறபொழுதுதான் என் மனம் நிம்மதியடைந்தது.

கனகம் கெட்டுப் போவதிலே ஏன் எனக்கு அவ்வளவு திருப்தி யென்று கேட்பீர்கள்? அதுதான் பழிக்குப் பழி. சுருக்கமாகச் சொன்னால் புரியாது. அது பெரிய கதை.

எனக்கு அக்காள் அலங்காரவல்லி ஆண் குழந்தை யொன்றைக் கொன்று ஆற்றில் எறிந்து விட்டு, ஆற்றில் தானும் விழுந்து இறந்து விட்டாள். அது நடந்து இன்று பதினமூன்றாண்டுகள் முடிகின்றன. அவள் செத்த அன்று எடுத்த சபதம் இப்பொழுதுதான் நிறைவேறிற்று.

என் அக்காள் மணமானவள். அவள் கணவனோடு இருக்கையிலேயே, வஞ்சகமாகப் பிரித்து, ஆயுள் முழுதும் வைத்துக் காப்பதாக வாக்களித்து, அவளுக்கு வயிற்றில் வந்துவிட்டவுடன் ஊரை விட்டே ஓடிப்போன கனவான் கங்காதரன்தான் கனகத்தின் கணவன். அவள் குழந்தையோடு, அவர் இருந்த ஊருக்குப் போய், அவர் வீட்டிலேயே பழி போட்டாள். ஆனாலும் விரட்டி யடிக்கப்பட்டாள். அதன் பிறகுதான் அவள் கொலை செய்துவிட்டு, பிறகு தற்கொலையும் செய்து கொண்டாள். நான் அன்று சபதம் செய்தேன். 'நான், உன்னை இக் கதிக்கு ஆளாக்கியவன் மனைவியையும் இதே கதியில் ஆக்கி விட்டுத்தான் சாவேன்' என்றேன். இதோ செய்து விட்டேன். என்னை ஊரார் விபசாரி என்றாலும், என் அக்காள் அருமை தங்கை என்பாள்—அது போதும், எனக்கு!

ஆனால், அலங்காரநாதருக்கு வேறொரு கதை கட்டி விட்டேன், கனகம், ஏற்கனவே இப்படியிருந்தாள் வேலம்பட்டி கணக்கர் வேலாயுதத்தோடும் தொடர்பாம்—அதற்கு முன்னால், உறவினரிலே ஒருவனை ஆனந்தனோடும் நட்பாம்—என்று கதை கட்டி விட்டேன். அவர் என்னை நம்பியிருக்கிறார் என்பதற்கு அவரது இரவு ஒன்பது மணி விஜயம் இன்னமும் நிற்காதிருந்தே தெரிகிறது.

அலங்காரநாதர்

தங்கையாக இருக்கட்டும்; தாயாக இருக்கட்டும்; தமிழ்

குலத்துக்குரிய கற்பு நெறி தவறி விட்டால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

கட்டிய மனைவியுடன்தான் இந்தப் பெண் ஒத்தில்லையே என்பதாலேதான், சேர்த்துக் கொண்டவளோடாவது சேர்ந்திருந்தால் நம் பார்வையிலே இருப்பாளேஎன்று பார்த்தேன். ஆனால், அவள் முழுக்க முழுக்க என்னை மாற்றிவிட்டாள்.

தங்கை கனகத்தின் கணவர் கங்காதரன் சிங்கப்பூர் சென்று விட்டதாலேயேமட்டும் தான், இந்தக் குடும்பத்தை நான் கவனிக்கிறேன் என்று அர்த்தமில்லை. அவர் தாலி கட்டிய நாளிலிருந்தே என் உதவியும் ஒத்தாசையும் உண்டு. ஆகவே, சிங்கப்பூர் செல்லும் பொழுதும், பார்த்துக் கொள்கிறேன், என்று ஒப்புக் கொண்டேன்.

கற்பு என்பது இன்றைய நிலையில் பெண்களுக்கு மட்டும்தான் என்று கூற முடியும். அது ஆண்களுக்கும் வேண்டும் என்றால் நான் அடிபட்டு விடுவேன்! அதுவும் பெண்களுக்குரிய கற்பு, வேலி கட்டி, ஆள் போட்டு, கட்டுக்காவல் ஏற்படுத்தி காப்பதல்ல — பெண்ணின் மன உறுதி மூலம் காப்பாற்றப்படுவதே கற்பு. என்னால் தான் அவள் அப்படியானாள் என்று சிலர் கூறுகிறார்கள். அற்புத சுந்தரிமீது பழி அநியாயமாகக் கூறுகிறார்கள்! இதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

விக்கிரமாதித்தன் கதையிலே சுவையான ஒரு கதையொன்றுண்டு. அதாவது விக்கிரமாதித்தனும், பட்டியும் மாறு வேடத்தில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது நான்கைந்து பெண்கள் குளத்திலிருந்து நீர் முகந்து வந்து கொண்டிருந்தார்கள். அந்த ஊரில் விபசாரம் செய்தாள் ஒருத்தியென்று தூக்கு மரத்தில் மாட்டி விட்டார்கள். அதைப் பற்றிப் பேசிக் கொண்டு வருகையில், ஒருத்தி கூறினாள்: 'அவள் மூட்டாள் விபசாரம் செய்யத் தெரியாமல் செய்தாள். அதனால்தான் இந்த கதி'



"பொங்கலதுமா நீங்க ஒண்ணும் புதுசு கொண்டு வரப்படாதா?

"புதுசா? நீ இருக்கும் போது இன்னொனனு கொண்டுவந்தா சர்க்காரு புடுச்சுக்குவாண்டி!"

என்றாள். இதைக் கேட்டிருந்த விக்கிரமாதித்தராசன் அவளையே மணந்து அவள் எப்படி விபசாரம் செய்கிறாள் என்று பார்த்துவிட வேண்டும் என்றான். அப்படியே மணமும் நடந்தது. ஒரு தனி மாளிகையில் வைத்து. இரவில் கூட ஒரு பக்கத்தில் பட்டியும், மற்றொரு பக்கத்தில் விக்கிரமாதித்தனும் காவலாக படுத்திருந்தும், அவள் வண்ணான் ஒருவனோடு கள்ள நட்பு செய்து வந்தாள் என்று கதை. ஆகவே, கற்பு, காவலில் வராது. ஆகவே. என் மீது எவர் பழி கூறமுடியும்?

பெண்ணுக்குக் கற்புநெறி பற்றி பேசுகிற நான், ஆணுக்கு உரிய கற்பு நெறியில் தவறி விட்டேன். இதற்குக்காரணம் முன்பெல்லாம் கால விபரீதம் என்பேன். இப்பொழுதுதான் பருவக் கோளாறு என்று கூறும் பக்குவம் பெற்று வருகிறேன். இது தவறுதான் என்பது திருட்டுத்தனமாக உறவு கொள்வதிலிருந்து தெரிகிறது. விடுவதா தொடர்வதா என்பது தான் முடிவு கட்ட முடியாத பிரச்சினை. என்னால் மெல்லவும் முடியவில்லை. விழுங்கவும் முடியவில்லை!

கங்காதரன்

இன்று காலை கிடைத்த தந்தியும், நேற்று கிடைத்த கடிதமும் எனக்கு உண்மையைக் கூறி விட்டன.

திடீரென கனகத்திற்கு உடம்புக்கு என்ன வந்து விட்டது? ஏதோ, நடக்கக் கூடாதது நடந்து விட்டது. இது நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே தெரிந்திருக்க வேண்டியது. இப்போது தெரிந்து விட்டது. ஆனந்தன் மீது ஏற்பட்ட சந்தேகம் காலைப் பனி மாதிரி மறைந்து விட்டது. இப்போது தெரிந்து விட்டது!

அப்பப்பா! முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என் பார்கள். அது முழுக்கமுழுக்க உண்மையாகி விட்டது. ஆரம்பத்தில் இதே சிங்கப்பூரில்தான் மேரி என்பவ

ளோடு எவ்வளவு பந்தம், பாசத்தோடு வாழ்ந்தேன். அவளைத் தவிக்கத் தவிக்க விட்டு விட்டு தாயகம் சென்றேன். அங்கு மட்டும் சும்மாவா இருந்தேன்? அலங்காரவல்லியின் வாழ்வைக் குலைத்தேன் அது மட்டுமா? கூடப் பிறந்த சகோதரிகளை எவ்வளவு கொடுமைப் படுத்தினேன் — எவ்வளவு கேவலமாகப் பேசினேன்— ஏசினேன்? நான் மட்டுமா? கனகமும் சேர்ந்துக்கொண்டு பேசினாள். விபசாரி என்று கூறினோம் இருவரும். இன்று ஊரார் எங்களைத்தான் இழித்துரைப்பார்கள். பெண் மனம் ஒரு சாந்தமான எரிமலை என்பது எனக்கு அப்போது தெரியவில்லை. அதன் அக்கினிக் குழம்பு இதோ வீசியெறியப் பட்டு விட்டது! தந்தி கனகத்திற்கு நோய் என்கிறது— தபால், கனகத்திற்குக் கெட்ட பெயர் என்கிறது. என்மனமோ, அவளுக்குக், கையிலே, குழந்தையென்கிறது! ஐயோ, இது உண்மையில்லாமல் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்?

நான் திரும்பிப் போவதா? ஏன் போகவேண்டும் — அவமானத்தை பங்கு போட்டுத் தாங்கவா? கூடாது! ஐயோ, குழந்தைகள் என்ன ஆகும்? போய்த்தானாக வேண்டும்! ஐயோ, போவதா? மீண்டும் பழைய பழியை உண்டாக்கிக் கொள்வது போலவே முடியுமே! இப்போது இங்கு என்னை நம்பியிருக்கிறாளே அமிர்தம்; அவளை விட்டு எப்படிப் போவது?

நான்

மேலே காட்டியவை, எனக்குப் பத்து வருடங்களுக்கு முன்னாலே ஒரு பெரியவர் கூறிய கதையில் வரும் பாத்திரங்கள்.

அந்தப் பெரியவர் இந்தக் கதையைக் கூறிவிட்டு 'எல்லாம் அவனவன் தலைவிதி' என்றார்.

எனக்கு எரிச்சலாக வந்தது. 'எல்லாம் அவனவன் தலைக் கொழுப்பு' என்றேன்.

பெரியவர், என்னை நன்றாகப் புரிந்தவர். ஆகவே, கொஞ்சம் பொறுமையோடு பேசினார்.

'தம்பி, இந்தக் கதையில் ஒரு விசித்திரம் — எல்லாம் சாக்கடைப் புழுக்கள் மாதிரிதான் — விபசார சாக்கடையில் நெளியும் கொக்கிப் புழுக்கள் — ஒன்றைத் தொட்டால், ஒன்று ஓட்டிக் கொண்டு வருகிறது-இதைத்தான் என்னைப் போன்றவர்கள் விதி—விதியின் விளையாட்டு என்கிறோம். நீ, சூழ்நிலை — நிலைமை வழுக்கல்— என்று கூறுவாய்!' என்றார்.

'பெரியவரே! சூழ்நிலைமைக்கு அடிமையாகுபவன் மனிதனல்ல — மிருகம்—சூழ்நிலையை மாற்றியமைப்பவனே மனிதன்!' என்றேன்.

'தம்பி, உன்னை ஒன்று கேட்கிறேன் — விடுகதை மாதிரி எடுத்துக் கொண்டு பதில் கூறு. உன் பதில் விடுகதைக்கு மட்டும் பதிலல்ல - விடுவிக்க முடியாத நான் கூறிய வாழ்க்கைக் கதைக்கும் பதிலாகும். இந்த நிலைமையில் என்ன செய்வது சரியான முறையென்று கூறு பார்க்கலாம்?' என்றார்.

'கத்திரிக்கோல், ஒன்று வேண்டும்' என்றேன்.

'ஏன்?' என்றார் பெரியவர்.

'சிக்கலை அறுக்க — இது அறுத்தால்தான் முடிவிற்கு வரும். முதலில் அற்புத சுந்தரி – அலங்காரநாதர் உறவுக்குக் கத்திரிக்கோல் — பிறகு கனகம் கங்காதரன் உறவிற்குக் கத்தரிக்கோல்— இந்த இரண்டும் நடந்த பிறகு, கனகத்தின் குழந்தைகளுக்கும் விடுபட்ட இருவருக்கும் முடிச்சுப் போட வேண்டும். இவர்கள் பொறுப்பில் குழந்தைகள் காப்பாற்றப் பட வேண்டும்' என்றேன்.

அவர் சிரித்தார் — பிறகு போய் விட்டார். அவர் யாரைப் பற்றி இந்தக் கதையைச் சொன்னார் — எதற்காக என்னிடம் சொன்னார் என்பது இன்னமும் எனக்குப் புரியாத சிக்கல்தான்.

நிலா, நூலின் சிக்கலை எடுக்கச் சொன்ன பொழுது, இந்த வாழ்க்கைச் சிக்கல்தான் என் நினைவிற்கு வந்தது.

'கத்தரிக்கோல் கொண்டுவா' என உரக்கக் கேட்டேன்.

'என் காது கேட்கும்' என்று கூறிக் கொண்டே உள்ளே சென்றாள் நிலா.



"நீங்களே வர வழைத்துக் கொண்ட துன்பத்திற்கு, நீங் களே வருந்தி அழு வது சிரிப்பாகத்தான் இருக்கின்றது. எதை யும் ஆர அமர சிந் தித்து செய்ய வேண் டாமா? ஓ டோடி ஆவலோடு பார்த்தீர் களே! பிற்காலத் தில் இப்படியெல் லாம் வேதனை வருமென்பதை நினைத்துப் பார்த்திருக்க வேண்டாமா? உங்கள் செய்கை பார்ப்பதற்கு கேலி யாகவும், நகைக்க வேண்டிய தாகவும்தானிருக்கிறது."—

இப்படியாக நாயகனைப் பிரிந்திருக்கும் நாயகி ஒருத்தி பேசுகின்றாள். அழுது, அழுது நீர் வடிய வேதனைப் பட்டு கலங்கி நிற்கும் தனது கண்களைப் பார்த்து அவள் பேசுகின்ற பேச்சு—இல்லை; அவள்கேட்கின்றகேள்வி அது.

வெளியூர் சென்றிருக்கி றான் நாயகன். பிரிந்திருக்க முடியாத நாயகனை பிரிந்து தன்பப்படுகிறது, நாயகியினுள்ளம். அத் துன்பம் கண்களின் வாயிலாக வெளிப் பட்டு விடுகின்றது. இதனை இம்முறையில் அமைத்துக் காட்டு கின்றார் நமது வள்ளு வனார். வேதனைப் படு கின்ற நாயகி, அந்த நாளில் நடந்த காதல் நிகழ்ச்சியினை நினை விற்குக் கொண்டுவந்து பேசு கின்றாள்.

கண்களில் பிறந்து, கண் களினால் வளர்க்கப்பட்டு முற் றுப் பெறுவது காதல். அந்த நாளில் நடைபெற்ற காதல் வேகத்தினையும், விறு விறுப் பினையும் சுட்டிக் காட்டுகின் றாள்.



"கதும்எனத் தம்நோக்கித்
[தாமே கலுழும்;
இதுநகத் தக்கது
[உடைத்து"

அவ்வளவு ஆவேசமாக முன்பின் சிந்திக்காமல் கண்கள் அந்த நாளில் தாமே காதலனைப் பார்த்து காதல் கொண்டன என்கின்ற வேகத்தினை விளக்கவேண்டி, 'கதும் என' என்று கூறி விளக்கினர். கலுழுதல் என்பது வேதனைப் படுதல் என்பதைக் குறிக்கின்றது. நாயகன் பிரிவால் வருந்துகின்ற நாயகியின் நிலைமையினை ஒரு நாடக வடிவத்தில் அமைத்து, அந்த நாயகி தனது கண்களுடன் உரையாடுவதுபோல் காட்டப் பட்டது.

வள்ளுவனரின் காமத்துப் பால் மன நூல் ஆராய்ச்சிக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த தொன்றாகும். உள்ளங்களில் ஏற்படும் எண்ணற்ற அலை மோதல்களை அளந்துகாட்டி சிறப்பிக்கும் பல பகுதிகள் நிறைந்துள்ளது காமத்துப் பாலேயாகும்.

ஆட்வனும், பெண்ணை குத்தியும் காதலர்களாக இணைந்து வாழ அடிப்படை கருவிகளாக அமைந்துள்ள பார்வைகள் வள்ளுவனர் வரிசை முறைப்படி "பத்திற்கு" மேற்பட்டதாகக் கூறலாம்.

பார்வைகளை நோக்குகள் என்ற சொற்களினுல் குறித்துக் காட்டுவது குறட்பா முறை. சிறு நோக்கு, செற்றூர் போன்ற நோக்கு, பொது நோக்கு, நகை நோக்கு, நில நோக்கு, குறி நோக்கு, இணை நோக்கு, இரு நோக்கு என பனபோன்று பல நோக்குகள் இருந்து வருகின்றன. அத்தனை நோக்குகளும் முடிந்த பின்னரேதான் காதல் வெற்றியடையும் என்பது தேவையில்லை. ஒரு சில பார்வைகளுக்குள்ளேயே காதலர்கள் வெற்றிபெற்று பயனடைவ ரென்பதும் முடிதல் கூடும்.

இணை நோக்கு என்பது முற்றுப் பெறுகின்ற நிலையில் நடைபெறுவது என்று கூறிக் கொள்ளலாம். அச்சம் நீங்கி தெளிவேற்பட்டு, பக்குவம் வளர்ந்து, நாயகன்-நாயகியாக பாதை வகுக்கின்ற நிலைக்கு முன்னர் அஃது உண்டாகும். அப்போழ்துதான் காதலர்கள் இருவரும் பரிபூர்ண பார்வையில் சந்தித்து மகிழ்ச்சியடைகின்றனர். இதனை கூறுகின்ற குறட்பா வருமாறு:

"கண்ணொடு கண்ணினை
[நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன
[பயனு மில"—

ஆற்றல் நிறைந்த கண்களின் நுணுக்கத்தினை எடுத்துக் காட்டுகின்ற ஆசிரியர், வாய் சொற்களுக்கும் பயனில்லை, அவைகள் தேவையில்லை, அவைகளுக்கு அந்த நேரத்தில் இடமுமில்லை என்ற கருத்தில் அமைத்துக் காட்டி விடுகின்றார்.

பகைவர்கள் போன்ற தோற்றங்கள் காதல் வளர்கின்ற காலங்களில் நிகழ்தல் உண்டு. பகைவர்களென்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும் சம்பந்தா சம்பந்தமில்லாத மூன்றும் போர்வழிகள் போல நடந்து கொள்ளுவது காதலரின் பழக்கம் என்பது ஒரு குறிப்பு. இது ஆரம்பக் காலங்களில் நடைபெறுவது. பிறரறியாமலிருக்க செய்து கொள்ளுவதாகும். அப்படிப் பட்ட எண்ணத்தில் காதலர்கள் பார்த்துக்கொள்ளும் பார்வையினை பொது நோக்கு என்று கூறுவார்கள்.

"ஏதிலார் போல பொது
[நோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே உள"

இக்குறளடிகளின் சொற்கள் ஒவ்வொன்றும் சிந்தனைக்கு உரியவைகளாக இருப்பினும் அனுபவ வாயிலாகவே பெரிதும் தெரிந்துகொள்ள வேண்டியவையாகும்! 'ஏதிலார் போல'—என்று கூறியதால் காதல் எண்ணம் ததும்பி நிற்கின்ற நிலையில் பிறர் அறிதல் கூடாதென்ற எண்ணத்தினுல் நிகழ்கின்ற பார்வையாகையினுல் ஏதிலார்கள் போல (முன்னர் அறியாதவர்கள் போல) பார்த்துக் கொள்வார்கள் என்ற குறிப்பினை நயமாக வைத்துக் காட்டுகின்றார் வள்ளுவனர்.

கண்களினுல் பெற்றுத்தரப் படும் பார்வைகள் மட்டும் காதலினை வளர்ப்பதல்ல; பார்வைகளினுடன் சிற்சில நிகழ்ச்சிகளும் இணைக்கப் படுகின்றன. பெரும்பாலும் அந்தச் சிறு நிகழ்ச்சிகள்—செயல்கள் காதலியின்பாலிருந்தேவருதல் இயற்கை.

அந்த மாது பார்த்தாள். பார்வையோடு நிறுத்திவிடவில்லை. பார்வையினைத் தொடர்ந்தே பிறிதோர் சிறு நிகழ்ச்சியினைக் காட்டுகின்


ருள். அந்தச் சிறுநிகழ்ச்சியின் பயன் மிகப் பெரிதாகி விட்டதே என்கிறான் காதலன். அச்சிறு நிகழ்ச்சிதான் காதலாகிய பயிர் செழித்து வளர்வதற்கு விடப்பட்ட நீர் என்று காதலன் வாயிலாகச் சொல்லப் படுகின்றது. அச்சிறு நிகழ்ச்சிதான் யாது?

"நோக்கிய காதலி, நோக்குடனே இருந்து விடாமல், நோக்கி இறைஞ்சினாள்"– தெளிவுபடுத்தப் படுகின்றது. சுருங்கக் கூறவேண்டுமானால் இன்னும் சில காலத்திற்குள் காதலர்கள் தங்களது குறிப்பில் வெற்றிபெற்று விடுவார்களென்பதே பொருள்.

"நோக்கினாள் நோக்கி
[இறைஞ்சினாள் அஃ.தது
அவள் யாப்பினுள் அட்டிய
[நீர்"

என்று கூறுகிறது குறட்பா. 'இறைஞ்சினாள்' என்ற சொல்லினால் பெண்ணுலகிற்கே இயல்பான ஒருவித பண்பாட்டினால் மகிழ்ச்சியினை மறைத்து தலைகுனிந்தாளென்பது பெறப்பட்டது.

இப்படிப்பட்ட பார்வையும், செயலும், நல்ல முறையில் வளர்த்து வருகின்ற காதலின் வளர்ச்சியினை குறிப்பனவாகும். எனவேதான் அப்படிப்பட்ட நிகழ்ச்சி கட்டுப்பட்டுவிட்ட காதல் பயிரினை வளர்வதற்கு விடப்படுகின்ற நீர் போன்றது என்று கூறுகிறார்.



சிறு குறிப்பு ஒன்றினை இக்குறட் பாவினால் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். நீர் விடுகின்றவள்—காதல் பயிர் வளர — அம்மங்கையேயான படியினால், காதலினை வளர்க்கின்ற பொறுப்பினை பெரும் பகுதியாக அவளே ஏற்கின்றாளென்பது குறிப்பாக உணர்த்தப்பட்டதென்பதை அறிக.



இங்ஙனமாக பற்பல கருத்துக்களினடிப்படையில் பார்வைகளின் வகைகளை ஆசிரியர் கூறிச் செல்லுகின்றார். ஒரு சிறப்பான நோக்கு சிறக்கணித்த நோக்கு என்று கூறப்படுகிறது.

சிறக்கணித்த நோக்கு என்பது இரு கண்களினாலும் சேர்ந்தாற்போல் பார்க்காமல் ஒரு கண்ணை மட்டும் கொஞ்சம் சுருக்கி காதலனைப் பார்த்து நகைத்துக் கொள்ளுவதாகும். இதனையும் பெண்ணிடமிருந்தே வருவதாகக் கூறுகின்றார். "—ஒரு கண் சிறக்கணித்தாற்போல நகும்" —என்ற குறளடியினில் கருத்தினை கண்டுகொள்க.

உலகறம் போதிக்கவந்த ஆசிரியர் வள்ளுவனார் வாழ்க்கையின் பல பகுதிகளையும் விளக்கிக் காட்டுவது இயல்பேயாகும். காதலர்களின் பார்வைகளின் முழுவிளக்கங்களையும் மேலே நாம் தந்து விடவில்லை. இரண்டொரு குறிப்புக்களை மட்டும் குறித்தோம். பார்வைகள் அனைத்தையும் நூலில் கண்டு தெளிக.



எனது லட்சியம்



"எனது லட்சியம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுத நேர்ந்ததற்காக எனக்குக் கொஞ்சம் வருத்தம்கூட உண்டு. ஏனென்றால், 'எனது' என்ற வார்த்தையே மனிதர்களிடமிருந்து பெரும்பாலும் நீங்க வேண்டும் என்பதுதான் எனது லட்சியம். ஆயினும், இன்னும் கொஞ்ச நாளைக்காவது நமது நாட்டில் "எனது, உனது" போன்ற வார்த்தைகளை உபயோகித்துத்தான் ஆக வேண்டும் என்பதையும் உணருகிறேன்.

"எனது" என்ற வார்த்தையை உபயோகிப்பதில், மேலோட்டமாகத்தான் ஏதாவது நன்மையிருப்பதாகத் தோன்றுகிறது. கூர்ந்து நோக்கினால், தீமைகள்தான் அதிகம்.

கை வலித்தால், என் கை வலிக்கிறது என்கிறோம். தலையிடித்தால், என் தலை இடிக்கிறது என்கிறோம். கால் வலித்தால், என் கால் வலிக்கிறது என்கிறோம். இப்படியாக எது, எது வலித்தாலும் அதை, அதை "என்"னது "என்"னது என்று சொல்லிக் கொள்ளுகிறோம். ஆகவே, இந்த "என்" என்றால் எது என்று நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது—அதே நேரத்தில், எல்லாம் சேர்ந்ததுதான் "என்" என்றும் உணர முடிகிறது. இதையெல்லாம், நோக்கும் போது இந்த "என்" என்ற வார்த்தையும், அந்த "ஓம்" என்ற வார்த்தையைப் போல, வேலியும் மூலையும் இல்லாதவர்கள் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய வெறும் வார்த்தைதான்—என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

மேலும், இந்த 'எனது' என்ற வார்த்தை நம்மை, நமது இந்த உலகத்திலிருந்து சற்று தூரத்தில் தள்ளி வைத்து விடுகிறது. ஆனால் "நமது" என்ற பொதுமைப் பதமோ நம்மை உலகத்தோடு ஐக்கியமாக்கி விடுகிறது.

உதாரணங்களாக சிலவற்றைச் சிந்திப்போம்!

"எனது, உனது"—என்ற பேத வார்த்தையை அடிக்கடி உபயோகித்துக் கொண்டிருக்கும் தப்பதிகளை, என்றாவது ஒருநாள் நிச்சயமாக நாம் "விவாகரத்து" ஆபீசிலே சந்திக்கலாம்.

எனது, உனது, என்ற அதே பேத வார்த்தைகளை சதா பேசி, செயல் செய்து கொண்டிருக்கும் வெறும் பணக்காரர்கள், சுயமாகச் செத்துக்கொள்ளமாட்டார்கள். உணர்ச்சி மீறிய கட்சிகளோ அல்லது பேராசை பிடித்த மனிதர்களோதான் அவர்கள் சாவதற்கு உதவி புரியவேண்டும்.

இன்னும் பார்க்கலாம்.



எனது பேச்சு. எனது மூளை, எனது கருத்து, எனது தீர்க்கதரிசனம்—என்று மேடையேறிப் பேசிக் கொண்டிருந்த பேரறிவாளர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன்—கடைசியில் அவர்கள் தங்கள் கருத்துக்கு, தாங்



ஒரு சைவ சமயவாதி கேட்டு விட்டால்.....

களே கரகோஷம் செய்து கொள்ள வேண்டிய பரிதாப நிலைதான் ஏற்பட்டிருக்கிறது

இப்படியாக-

ஏற்கெனவே இருக்கும் உரிமையும், திறனும், இன்னும் பிறவும், எனது உனதுபோன்ற வார்த்தைகளை உபயோகிக்கக் காகவேனும் பேசட்டும் - அந்தக் கம்பெனி கடைசியில் விளையாட்டாகவே முடிந்து விடும் — அதை, இழுத்துப் பூட்டக் கூட இன்னெருவன் தான் வரவேண்டும்!



பேத வார்த்தையை அடிக்கடி உபயோகித்துக் கொண்டிருக்கும் தம்பதிகளை .....

கிளம்பியதுமே தாமாக மறைந்து விடுகின்றன. அதே நேரத்தில், 'நமது' என்ற பொதுவான புதுமைச்சொல்லை உபயோகிப்பவர்கள் ஏற்கெனவே தங்கள்பால் இருக்கும் ஆற்றலை இன்னும் பெருக்கிக் கொண்டவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இன்னும் ஒரு உதாரணமாக, ஒரு நாடகக் கம்பெனியைப்பற்றிச் சிந்திப்போம்.

மேலே காணப்படும், இந்த இரு தாரதம்யங்களுக்கும் காரணம், எனது நமது -என்ற இரு வார்த்தைகளுக்கு இடையே இருக்கும் தாரதம்யம்தான்!

ஆகவே...

'நமது' என்ற சொல்லுக்கே தூயதோர் சக்தி இருப்பதாக உணருகிறேன். இதை எவனுவது ஒரு சைவசமயவாதி கேட்டுவிட்டால், நமது என்ற பதத்தில் உள்ள முதலிரண்டு ந-ம-என்னும் இரு எழுத்துக்களும், ந, ம, சி, வா, ய — என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தின் ஆதிஎழுத்துக்கள்—அதனால்தான், நமது என்ற வார்த்தைக்கே அபூர்வ சக்தி கிட்டியிருக்கிறது; என்று அசட்டுத்தனமாகப் பேச நேரிட்டாலும் நேரிடலாம்! இந்த அளவுக்கு இந்த வார்த்தை, எதிரிகளையும் கவரவல்லது என்று கருதுகிறேன்.

கம்பெனி முதலாளி, கம்பெனி வேலைக்காரர்களிடம் பேசும்போது, நமது கம்பெனி, நமது வருமானம், நமது வருங்காலம், நமது குறிக்கோள்—என்ற தோரணையில் பேசவாவது செய்யட்டும்—அந்தக் கம்பெனியில் சம்பளப்பிரச்சினை முதல் சகல பிரச்சினைகளும் அறைகளுள்தான் அடிபடுமே தவிர, அம்பலத்துக்கு வராது...!

அதே முதலாளி, இது எனது கம்பெனி, எனது வருமானம், எனது வருங்காலம், எனது குறிக்கோள்—என்ற தோரணையில் விளையாட்டுக்



உலக 'மேப்'பை சுவரில் தொங்கவிட்டுக்கொண்டு.....

எனது லட்சியத்தை; இல்லை, இல்லை; நமது லட்சியத்தை எத்தனையோ சினிமாப்படங்களில், எத்தனையோ மேடைகளில், எத்தனையோ தினுசில் தெளிவாகக் கூறியிருக்கிறேன். அவற்றையெல்லாம் மிகவும் சுருக்கமான முறையில்-குறள் பாஷையில் கூறுவது என்றால், "எனது" என்ற பதப்பிரயோகம் உலக மக்களிடையே "நமது" என்றபதப்பிரயோகமாக மாறவேண்டும் என்றுதான் கூறுவேன்.



தங்கள் பேச்சுக்கு தாங்களே கர கோஷம் செய்துகொண்டு.....

'உலக மேப்'பை சுவரில் தொங்கவிட்டுக் கொண்டு, இது நமது உலகம் என்று எனக்குள் நானே ஒருநாள் சொல்லிக் கொண்டிருந்தேன். என்னையறியாத பெருமிதம் எனக்கு வரக்கண்டேன்!—உடன் அதே 'மேப்'பை நோக்கி, இது எனது உலகம் என்று எனக்குள் நானே சொல்லிப் பார்த்தேன். அப்படியே அந்த மேப்பை சுயநல எண்ணத்துடன் சுவற்றிலிருந்து கழற்றி, மேசை டிராயரில் சுருட்டி வைத்து, மேசையைப் பூட்டி சாவியை ஒளித்துவைக்கத்தான் தோன்றிவிட்டது.

எனது என்ற சொல்லை உபயோகித்துக் கொண்டிருப்பவர்கள், நமது என்று சொல்லை மட்டும் மாற்றிக்கொண்டால் போதாது. சொல் மாறுமுன், இதயம் நமதாகவேண்டும். புண்ணுக்கு வெறும்துணி கட்டிப் பயனில்லை—போடவேண்டிய மருந்தைப்போட்டு அப்புறம்தான் துணி கட்டவேண்டும். அதுபோலத்தான், முதலில் இதயம் நமதாகவேண்டும்—அப்புறம் பேச்சு நமதானால் போதும்!—இதுதான் நமது நாட்டு சீர்திருத்தவாதிகளிடம் நான் வேண்டும் ரகசியமான வேண்டுகோள்!

●

மலேயாவில்

★

★ சகல தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்-

★ திராவிட இயக்க சம்மந்தமான பத்திரிகைகள்-

★ சி.என்.அண்ணாதுரை, மு.கருணாநிதி ஆகியோரின் நூல்கள்-

★ திராவிட இயக்க சம்மந்தமான சகல நூல்கள்-

எல்லாம் எங்களிடம் கிடைக்கும்.

பி.சிவகுருபுத்தகசாலை

27, ஸ்காட் ரோட்,

தபால் பெட்டி நெ. 225

கோலாலம்பூர்.

[போன் நெ. 5509]

★ ★ ★ ★

கிளைகள்:

8, சைனு தெரு,

தபால் பெட்டி நெ. 518

பினாங்

[போன் நெ. 3197]

★ ★ ★ ★

8, சைனு தெரு,

தபால் பெட்டி நெ. 1728

சிங்கப்பூர்

காட்சி: 1

இடம்: சமணப்பள்ளி


நிலைமை: (பல்லவ சாம்ராஜியத்தில் பரவிவந்த ஆரியத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் ஒழித்துக்கட்டி, நாட்டிலே புது நிலையைப் பரப்ப முயன்றனர் புதுமைத்தாகங் கொண்டோர். இலட்சிய வீரர்களின் அணிவகுப்புக்கு கரிகாலன் தலைமை தாங்கினன். ஆரியத்தின் கொள்கைகளுக்கு யாரார் வைரியாகியிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் அழித்தொழிக்கும் எண்ணத்தோடும், ஏற்பாடுகளோடும் ஆரியரும், அவர்தம் பாதந்தாங்கிகளும் உலவினர். அமுதவர்மன் பல்லவத்தின் மந்திரி. அவனது திருக்குமரி அழகு மயில் அஞ்சனை! அஞ்சனைவுக்கு முதலிலே ஆசிரியனாகவும் பின்னர் காதலனாகவும் ஆகித் தீர்த்தான் கரிகாலன்! சங்கரப் பட்டன் பூசாரக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தான். அஞ்சனைவுக்கும் - கரிகாலனுக்கும் காதல் தொடர்பிருப்பதை அறிந்து கொண்டான் பட்டன்! மந்திரி அமுதவர்மனிடம் எடுத்துக் கூறித் தனது கருத்துக்குக் இந்தக் காட்சியை சாட்சியாக்க மந்திரியை சமணப்பள்ளியருகே அழைத்துச் செல்லுகிறான். மந்திரியும், பட்டனும் மறைவாகயிருந்துகொண்டே உள்ளே நடக்கும் நடவடிக்கைகளைக் காது கொடுத்துக் கேட்கிறார்கள்.)



கரிகாலன்: பல்லவ வீரர்களே! ஆரியப் புலி பல்லவநாட்டைவேட்டைக் காடாக்கத் துவங்கியிருக்கிறது. ஆயிரமாயிரம் ஜாதிகளையும், லட்சோப லட்சம் வைதீகக் கோட்பாடுகளையும் நம்மவர் வாழ்விலே புகுத்தித் தங்களின் சூதுக் கோட்டைக்குப் புராணிகர்கள் பாதுகாப்பு அமைத்து வருகிறார்கள். நமது கலையும், நாகரிகமுமென்ன வானவில்லா? நிலைத்து நிற்கும் நினைவுச் சின்னங்கள் தானே அவை! உலகினரின் கவனத்தைக் கட்டிப் பிடித்திழுக்கும் அந்தக் கலையைத் தான்...பெருமைக்குரிய நமது நாகரிகத்தைத் தான் தூள் தூளாக்குவதற்குத் தோள் தூக்கியிருக்கிறார்கள்.

முரசு கொட்ட; வீர ஒலி முழங்க, கையிலே வில்லும், வேலும் தாங்கியா நமை எதிர்க்க நினைப்போர் படைகூட்டிநடை

போட்டு வருகிறார்கள்? இல்லை! இல்லை! உதட்டிலே புன்சிரிப்போடும், உள்ளத்திலே புயலோடுந்தான்...அந்த வஞ்சக நெஞ்சர்கள் நம்மைசுற்றியே உலவுகிறார்கள். இல்லாததையும்...அறிவுக்கு முன்னே நில்லாததையும் கூறிக்கூறி மக்களை அறியாமைச் சிறைக்குள்ளே கைதியாக்க அவர்கள் படாதபாடு படுகிறார்கள். உழைத்தவன்—வாய்விட்டு அழுகிறான் ... முழுவாழ்வு — புதுவாழ்வு — தனக்குக் கிடைக்கவில்லையே என்று! இந்த எத்தர்கள், ஏதும் செய்தறியா சோம்பேறிகள்...வான உலகையும், வைதீகக் கோட்பாடுகளையும் காட்டிக்கொண்டே உல்லாச வாழ்வோடும், ஒய்யார நினைவோடும் உலவுகிறார்கள். இந்த நரிவாழ்வை ஒழித்துக் கட்டவேண்டும். பகைவனின் வேலுக்கும் அவனின் திடந்தோளுக்கும் அஞ்சாத நாம் அறிவுக் கண்ணை இழந்துவிட்ட குருடர்களை



கண்டா அஞ்சப்போகிறோம். மன்னன் மாமல்லன் நினைக்க மறந்ததை நாம் செயலாக்கிக் காட்டவேண்டும்.

(கரிகாலன் பேசி முடித்தக் கருத்துக்களைக் கையொலி எழுப்பி சமணப் பள்ளியிலிருந்தோர் வரவேற்றனர். கரிகாலனின் பேச்சோடு சமணப்பள்ளியின் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுபெற்றன. அஞ்சுவும் – கரிகாலனும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களைத் தொடுவதற்கு முன்பே மந்திரியும், பட்டனும் மாளிகைநோக்கிப் போய்விட்டார்கள்.)

காட்சி; 2

இடம்: மந்திரி அமுதவர்மன் மாளிகை.

நிலைமை: இருவரும் அமர்ந்திருக்கின்றனர்

பட்டன்: பார்த்தீரா புலியின் வேகத்தை! அந்தப் புயல்...மன்னனின் மாளிகைக்குக் கூட மதிப்புத்தர மறுக்கிறதே!

மந்திரி: என்மனம் வேதனைப் படுகிறது பட்டரே! கரிகாலனு இப்படி மாறிப்போய் விட்டான்! அஞ்சனுவுக்கு ஆசிரியராக வந்தவன்...அவள் உள்ளத்தைக் கெடுக்கும் துராத்மாவாக உருவெடுத்தான் என்பது மட்டுமல்ல...நாட்டிலே புரட்சிப் புயலைக் கிளப்பும் தலைவனுகவுமல்லவா மாறியிருக்கிறான்!

பட்: சந்தனக்காட்டுக்குள்ளே சர்ப்பம் நுழைந்திருக்கிறது அமுதவர்மா!

மந்திரி: சர்ப்பமென்று தெரிந்திருந்தால் உள்ளே புக அனுமதித்திருப்பேனுபட்டரே! ஏதோ ஆஸ்தானக்கவி கார்மேகத்தின் இளைய சகோதரனையிற்றே யென்று நம் பிக்கை வைத்துத்தான் என் திருமகளுக்குக் கரிகாலனை ஆசிரியனுக்கினேன். அவன் நய வஞ்சகப்பாம்பு என்பது அப்போதே தெரிந்திருந்தால்...அவனைப் பார்ப்பதற்குக் கூட அஞ்சனுவை அனுமதித்திருக்க மாட்டேனே. அவனுக்கு மதிப்பளித்த நெஞ்சை இப்போது காலால் மிதித்துவிட்டான். வளர்ந்து வரும் இந்தப் பெரு நெருப்பை என்ன செய்வது பட்டரே!

பட்டர்: பெருநெருப்புப் பரவுகிறது, அதை என்ன செய்வதென்று என்னிடமா கேட்கிறீர்கள். ராஜதந்திரி நீங்கள் ... உங்களுக்குத் தெரியாத ராஜ்ய முறைகளா எனக்குத் தெரியப்போகின்றன. அஞ்சனு நம்பிக்கிடக்கிற வாழ்வின் ஒளிவிளக்கும் அணைந்து போகுமே; அவனும் இருண்ட இதயத்தினளாகி விடுவாளே யென்று கலங்குகிறீகள் போலும்.

மந்திரி: ஆமாம்! பட்டரே...அஞ்சனு அந்த வஞ்சகனின்மீது எவ்வளவு பரிவும் பாசமும் வைத்திருக்கிறுளென்பதை அவளைச் சமணப்பள்ளியிலே பார்த்ததிலிருந்தே தெரிந்துகொண்டேன். கரிகாலனுக்குத் தீங்குதரும் திட்டங்கள் நம்மிடமிருந்து வந்தால்—அந்தப் பிரிவை...கரிகாலனுக்கு ஏற்படும் வேதனையை இவள் எப்படி சகித்துக் கொள்ளப் போகிறுளோ என்பதை எண்ணித்தான் வேதனைப்படுகிறேன்.

பட்டர்: பதட்டப் பட்டோ...நினைத்தான மில்லாமலோ காரியத்தைச் செய்யத் துவங்கினால்—விளைவுகள் ஆபத்தாக முடிந்தாலும் முடிந்துவிடும். பரவிவருகிற புதுப்புயலுக்கு

ஒரு முடிவைக் காட்டாவிட்டாலும் நாடு மீக மிக சீக்கிரத்திலே நாசமாகிவிடும். பலப்பல இந்து கோவில்களிலே கொள்ளை நடந்திருக்கிறது, பயங்கரவாதிகளால். கர்ஞ்சியிலே இரு குருக்கள் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? புராதன் இந்துமதக் கோட்டை இடிந்து தகர்ந்து வருவதைத் தானே!



மந்: ஆமாம் பட்டரே! என் சுயநலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் மிகமிக விரைவிலே சமணம் அரசபீடத்தைக்கூடகைப்பற்றி விடும். சமணத்துக்குப் புதிய போர்தகாசிரியரை மாறித்திர்ந்த கரிகாலனை நாளையே சிறைக் கம்பிகளுக்குப் பின்னே நிறுத்துகிறேன்.

பட்: சிறையிலே கள்ளிஞல்... அவனுக்கு புதிய வளர்ந்துவிடும்... தொண்டர்களும் பெருகிவிடுவார்கள். அஞ்சனவின் நெஞ்சிலே பிரும்கும் கரிகாலனின் ஓவியத்தையும் அழிக்கமுடியாமல் போய்விடும். கரிகாலனும் உயிரோடு வாழவேண்டும்...ஆனல் சமணக் கொள்கைதாங்கியாக உலவாமல்! உலவுகிற கரிகாலனைக் காணுவதற்கே அஞ்சனு கூசவேண்டும் ... வெறுக்கவேண்டும். இப்படிப்பட்ட திட்டங்களின் மூலமாகத்தான் நமது செயலை இலகுவாக முடித்துக் கொள்ளமுடியும்.

மந்: கரிகாலனை நாடுகடத்தச் சொல்லுகிறீர்களா?

பட்: அவன் நாடும் கடக்கவேண்டாம், காடும் போகவேண்டாம், இருந்த இடத்திலேயே யிருக்கட்டும்...சமணக் கொள்கை ஜோதி தொடர்ந்து செய்யமுடியாதவனை அவனை ஆக்கிவிடுகிறேன். அவனைப் பார்த்துமே அஞ்சனை அலறியடித்துக்கொண்டு ஓடும்படி செய்கிறேன்.

மந்: காலை வெட்டி இருந்த இடத்திலேயே யிருக்கும்படி ஏற்பாடு செய்யப்போகிறீரா?

பட்: காலுமிருக்கும்—கையுமிருக்கும் ஆனல் அவனல் நடமாட முடியாது. பார் அழுதவர்மா! நாளை என் திட்டத்தின் முடிவைப் பார்!

[பயங்கரமாகச் சிரித்துக் கொண்டே அழுதவர்மனின் காதிலே ஏதோ ரகசியம் பேசினன் பட்டன். அவன் முழுவதையும் கேட்டுவிட்டு தலை ஆட்டிஒத்துக் கொண்டான்.]

★

காட்சி: 3

இடம்: பூஞ்சோலை

நிலைமை:(தன் அன்புக் காதலி அஞ்சனவோடு இன்பக் கதை பேச, சோலைத் தடாகத்திலே கரிகாலன் அமர்ந்திருக்கிறன். இணைந்திருக்கும் ஜோடிப் புறுக்களின் நினைவு அவனை இன்ப உலகுக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்தது. பனி பதிந்த ரோஜா மலரிலே அதரத்தைப் பதிக்கக் காத்திருந்தான். தடாகத்துத் தாமரை, அஞ்சனை வந்ததும் உன் பார்வையை அவள் மேனியிலே பதித்துக் கொள்வாயே ... இப்போது திகட்டும் வரை என்னை ஏன் பார்க்கிறுயென்று செல்லக் கோபத்தை அவன் கண் முன்னே ஆடிக்காட்டியது. யாரோ நடந்துவரும் காலடி ஓசை; அந்த ஓசையும் மெதுவாகத்தான் கேட்டுக் கொண்டேயிருந்தது. அன்பு மயில்-அழகு நடை போட்டு வருவதாக அவன் எண்ணியிருந்தான். தன்னைக் கால் கடுக்கக் காக்கவைத்த அந்த இன்பப் புறுவுக்கு தண்டனை தர நெஞ்சிலே

விருப்பங்கொண்டான். மெதுவாக ஓசை படாமல் பின்னே நின்ற உருவத்தைக்கூட அவன் வலிய திரும்பிப்பார்க்க மனமில்லாதவனைப்போல நடித்தான். காலடி ஓசை கிளம்ப...கரத்திலே காய்ச்சிய இரும்புத் தீவட்டியோடு வந்த உருவம் கரிகாலனின் கண்களைப் பதம் பார்த்துவிட்டு...ஓடோடி ஒளிந்து கொண்டது. கரிகாலன் துடித்தான்— அப்போது திரும்பிப்பாராது நடித்த அவன், இப்போது நன்றாகவே திரும்பி அகலமாகக் கண்களை விரித்துப் பார்த்தாலும் யாரையுமே...எதையுமே தான் பார்க்கமுடியாதவனைப் போய்விட்டான். அவனது வேதனைக் குரல் சோலைக்குப் பக்கத்திலிருந்த சிறு குன்றிலே மோதி எதிரொலித்துக்கொண்டிருந்தது. சிறு குன்றின் புதரிலே...புரோகிதப் பாம்பு மறைந்திருந்தது. சங்கரப் பட்டன் சிரித்துக்கொண்டே ஆத்திரந் தீரும் மட்டும் பேசிக்கொண்டிருந்தான்.

பட்: ஆரியத்தை வஞ்சக வலையென்று கற்பனை செய்து பேசிய வாய்வீரனே!...அந்த வலைதான் இப்போது உன் கண்ணிலே வேலைப் பாய்ச்சியிருக்கிறது. அறிவுக்கண்ணை இழந்துவிட்டவர்களென்று எங்களை சமணப் பள்ளியிலே அறிமுகப் படுத்தி அமர்க்களப் படுத்தினையே...நீ இப்போது எந்தக் கண்ணை இழந்திருக்கிறாய்? உன் வாழ்வுக் கண்ணையே போக்கிக்கொண்டாய்.

[காதலனோடு களித்துப்பேச அப்போதுதான் வருகிறாள் அஞ்சனை! அசைந்தாடிவந்த 'உயிரோவியம்' அலறித்துடிக்கும் காதலனைப் பார்த்து திகிலடைந்துபோய் அவனருகிலே பாய்கிறது.]

அஞ்சனை: அத்தான்! எந்தப் பித்தனத்தான் உங்களின் கண்களை அழித்துவைத்தான்? அழகு மொழிபேசி என் அன்பரைக் காண வந்த நான்...கண்ணிழந்து துடிதுடிக்கும் காதலரையா காணுவது? சமயம் பார்த்திருந்த சதிகாரர்கள் பழிதீர்த்துக் கொண்டார்களத்தான்.....மின்னும் முக அழகிலே பொன்னெளியைப் பரப்பும் அந்த காந்தக் கண்களை எப்போது அத்தான் இனி பார்க்கப்போகிறேன்!

கரிகாலன்: என் வாழ்வுப் பூஞ்சோலையை யாரோ ஒரு புராண அரக்கன் தீக்காடாக்கி விட்டான் சுந்தரி! பைங்கிளியே! என்னைப் பாலை வனமாக்கிவிட்டான் ஒரு படுபாவி. உயிரிருந்தும் இனி நான் நடமாடும் பிணந்தானே அஞ்சனை!

அஞ்: பிணமா?..... குணக்குன்றே.....! உங்களின் கண்களை திருடியவர்களுக்கு உயிரைத் திருடிக்கொள்ளும் துணிவு இல்லாமல் போய்விட்டதே யென்பதை யெண்ணித்தான் மகிழ்கிறேன். அத்தான்.....உங்களுக்கு இன்னும் இரண்டு கண்களிருக்கிறதென்பது அந்த அவசரக்கார மூரடர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

கரி: இன்னும் இரண்டு கண்களா!

அஞ்: ஆமாம் அத்தான்! நான் உங்களின் கண்தானே; என் கண்கள் உங்களுக்குச் சொந்தமானதுதானே. அத்தான்! என் கண்ணே! என் கண்ணே என்று அடிக்கடி புகழுவீர்களே; இப்போது அந்த இலக்கண மொழிச்சு இலக்கியமாகி விட்டேனத்தான்.

கரி: என் கண்ணே! இந்தக் கோரத் தைப்பார் இதை நீ எப்படி சகித்துக் கொள்ளப் போகிறாய்?

அஞ்: அத்தான்! நீங்கள்தானே என் இன்ப உலகம். சண்டாளர்கள் சதிக் கிடங்கை உண்டாக்கியது நமக்கல்ல, அவர்களின் இன்பவாழ்வுக்குத்தான்..... வேகமான ஒரு முடிவுக் கட்டத்தை ஏற்ப்படுத்திக் கொண்டார்கள் இது மாறியான அராஜக செயல்களின் மூலமாக! இந்த குள்ளநரித்தனத்துக்கு அந்த எத்தர்கள் எதிர்காலத்திலே...புதுமையாளர் அமைக்கின்ற நீதி மன்றத்திலே பதில் கூறித்தானாக வேண்டும். நீங்கள் இப்போது வடித்த ஒவ்வொரு சொட்டு ரத்தக் கண்ணீரும்.....பயனில்லாமல் போகாதத்தான்.

கரி: சிந்திக்கும் திறமற்றோர் ஏற்படுத்திய சிக்குகளை உலக மேதைகள் அறுத்தெறிந்திருக்கிறார்கள். என் கண்களை மட்டுமல்ல.....உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் — கடைசிச் சொட்டு ரத்தத்தையுங் கூட ஆணவத்தை எதிர்க்க காணிக்கை கொடுக்க நான் தயாராகவே தானிருக்கிறேன்.

அஞ்: தயாராக யிருக்கிறோமென்று..... திருத்திச் சொல்லுங்களத்தான்.


[சூழ்ச்சியின் சிகரமாம் பட்டர் பூணூலை உருவியபடியே சிரிக்கும் சப்தம் மட்டும் கேட்கிறது] ஃஃ

(காட்சி முடிவு)

ஆசியாவின் வீரஜோதி

தென் ஆசியா முழுவதும் புகழொளி பரப்பிய தென்னாட்டுப் பேரரசுகள் பல. உலகின் பேரரசுகளுக்குள்ளே இத்தென்னாட்டுப் பேரரசுகளுக்குத் தனிப் பெருமையும், தனிச் சிறப்பும் உண்டு. ஆயினும் பல வகைகளிலும் தென்னாட்டுப் பேரரசுகளிடையேகூட்த் தலைசிறந்த, பீடும் புகழும் உடையது சோழப் பேரரசுதான் என்று கூறலாம்.

சோழ அரசரின் ஒரு மண்டலாதிபதி இலங்கையையும் அதன் மாகடல் தீவுகளையும் ஆண்டான். ஒரு மண்டலாதிபதி விந்தியத்துக்கு வடக்கே இமயம் வரை ஆண்டான். மற்றொரு மண்டலாதிபதி சுமத்ராவிலுள்ள பாலம்பாங் தலைநகரிலிருந்துகொண்டு கடாரம், அதாவது தென்கிழக்காசியா முழுவதையும் ஆண்டான.



கடலுலகும் நிலவுலகும் ஆண்ட இந்தச் சோழப் பரம்பரைக்கு ஈடாக உலகில் எந்தப் பேரரசப் பரம்பரையையும் கூற முடியாது. வீரத்திலும், ஆட்சித் திறமையிலும், அரசியல் மதிநுட்பத்திலும், கலையார்வத்திலும் சோழர் மரபில் தொடர்ச்சியாக வந்த பெரும்புகழரசர்களைப் போன்ற ஒரு கூட்டணியை நாம் எந்த நாட்டு வரலாற்றிலும் காண்பதரிதில்லை. அராபிக் கதைகளிலும், இஸ்லாமிய வரலாற்றிலும், இந்துஸ்தானத்தின் பேரரசர்கள் என்று குறிக்கப்படுகிறவர்கள் இந்தச் சோழ அரசர்களேயாவர். அந்நாளில் அவர்களுடன் சரிசமமாக நின்று ஒப்பந்தம் செய்துகொள்ளும் பெருமை உலகிலேயே ஒரு பேரரசுக்குத் தான் இருந்தது. அதுவே சீனப் பேரரசு. உலகின் செல்வம் முழுவதையும், புகழ் முழுவதையும் அந்நாளில் இந்த இரண்டு பேரரசுகளுமே பங்கிட்டுக் கொண்டன.

பெருஞ்சோதரரிடையே தலைசிறந்தவர் யார் என்று ஒரு கேள்வி கேட்டால், வரலாற்றாசிரியர்கள் எளிதில் விடை கூற முடியாது. ஒருவர் இராசராசனே சிறந்தவன் என்றுகூறலாம். இன்னொருவர் இராசேந்திரனே என்பர். வேறு சிலர் குலோத்துங்கனே என்று கூறுவர். எனென்றால் ஒவ்வொருவர்

ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்புடையவராகவே இருந்தனர். சோழப் பேரரசுக்கு அடிகோலியவன் இராசராசன். அவன் வகுத்த ஆட்சி முறையே இன்றளவும் தென்னாட்டின் அடிப்படை ஆட்சிமுறையாய் இருக்கிறது. பேரரசின் புகழை உச்ச எல்லைக்குக் கொண்டு சென்றவன் இராசேந்திரன். அந்தக் கோட்டை சரியாமல் காத்து, அதனைச் சூழ்ந்து வாரியடித்த சூழ்வளிப் புயல்களை அடக்கி, ஒளி உண்டவன் குலோத்துங்கன்.

குலோத்துங்கன் வாழ்வில் இருபகுதி உண்டு; ஒன்று சோழப் பேரரசு அவன் கைக்குள் வருமுன் உள்ள இளமைப்பகுதி. மற்றது அவன் பேரரசனபின் உள்ளபகுதி. இவற்றுள் வரலாற்றில் இடம் பெற்றபகுதி, இராசராசனுடனும் இராசேந்திரனுடனும் அவனுக்குச் சரிசமப்புகழ் தந்தபகுதி, பிற்பகுதியேயாகும். முற்பகுதி வரலாற்றில் முழுதும் விளக்கப்படவில்லை. இது இயல்பே. ஏனெனில் அது வரலாறு கடந்த பெருமை உடையது. அது வரலாறாக எழுதப்பட்டால், அது வரலாறாயிராது; தென்னாட்டின் தலை சிறந்த வீரகாவியமாய்விடும்.

குலோத்துங்கன் தந்தைவழியில் கீழைச் சாளுக்கியர் குடியில் வந்தவன். தாய்வழியில் சோழமரபுக்கு உரியவன். அவன் தாய் தன் தங்கை பெருஞ்சோழனை இராசராசனின் மகளான குந்தவை. தந்தையோ வீரபுலிகேசியின் வழியில்வந்த விசயாதித்தியன். கீழைச் சாளுக்கியர் அந்நாளில் வேங்கிநாட்டை ஆண்டுவந்தனர். வேங்கிநாடு என்பது கோதாவரி, கிருஷ்ணை நீரமாகிய இன்றைய ஆந்திர மாநிலப்பகுதி. குலோத்துங்கன் வேங்கி நாட்டுச் சிங்காசனம் ஏறுமுன், அவனுக்குப் போட்டியாக அவன் சிற்றப்பன் மகனான இரண்டாம் விசயாதித்தியன் எழுந்தான். இருவர் பூசல்களுக்கிடையே மேலைச் சாளுக்கியப் பேரரசனான விக்கிரமாதித்தியன் நாட்டையே கைக்கொண்டான்.

அப்போது சோழப் பேரரசை ஆண்டவர்கள் இராசேந்திரன் புதல்வர்கள். விக்கிரமாதித்தியனுடன் போரிட்டு ஒருவன் மாண்டான். இரண்டாவது புதல்வனாகிய இரண்டாம் இராசேந்திரன் விக்கிரமாதித்தனை முறியடித்து, கீழைச் சாளுக்கிய அரசைக் கைக்கொண்டான். ஆனால் அவன் அதில் குலோத்துங்கனை முடிசூட்டவில்லை. விசயாதித்தனையே முடிசூட்டினன். ஆயினும் வீரனான குலோத்துங்கனை அவன் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே தன்மகள் இராசசுந்தரியை அவனுக்கு மணம்செய்து கொடுத்தான். அத்துடன் கீழைச் சாளுக்கியருக்கு வடதிசையில் இருந்த கீழ்ச்சங்க அரசையும் வென்று, அந்த அரசை அவனுக்கு அளித்தான்.

குலோத்துங்கன் இப்போதும் வயதில் இளைஞனாகவே இருந்தான். கீழ்ச்சங்க நாட்டிலும் அவனுக்கு எதிர்ப்பு இருந்தது. கீழைச் சங்கரும் சோழருடன் மண உறவு கொண்டவர்களாகவே இருந்தனர். உறவினருடனே சின்னஞ்சிறு சிற்றரசுகளுக்காகப் போரிடுவதை அவன் விரும்பவில்லை. அவன் அவா மிகவும் பெரிதாயிருந்தது. ஒன்று சோழப் பேரரசராக வேண்டும்; அல்லது தன் வாள் வலிமையால் சோழப் பேரரசுப் போன்ற ஒரு பேரரசைத் தானாக நிறுவவேண்டும். சோழப்



பேரரசனுவது அப்போது எளிதாகத் தோன்றவில்லை. ஆகவே பிந்திய திட்டத்தை மனத்துட் கொண்டான். தன் இளம் புதல்வி இராசசுந்தரியை அவன் கீழச்சங்க இளவரசனுக்கே மணஞ்செய்து, அவனுக்கே அரசாட்சியைக் கொடுத்தான். அதன்பின் ஒரு சிறுபடையுடன் அவன் புதுப்புலங்கள் வெல்லப் புறப்பட்டான்.

கீழச்சங்கர் ஆண்டபகுதிக்கு வட கலிங்க நாடு என்று பெயர். அது அசோகன் காலத்தில் ஒரு பெரிய பேரரசாயிருந்தது. விக்கிரமாதித்தியன் படையெடுப்பினல், எல்லைப் புறத்திலிருந்த சக்கரக் கோட்டத்தைக் கீழச்சங்கர் இழந்துவிட்டனர். தன் சிறுபடை கொண்டு குலோத்துங்கன் அதன்மீது படையெடுத்தான். பண்டைக்காலத்திலிருந்தே வெல்லமுடியாத கோட்டைகளுள் ஒன்று என்றபெயரை அது பெற்றிருந்தது. அது காடு சூழ்ந்த, ஒப்பற்ற யானைப்படையும் கோட்டைப் பொறிகளும் உடையதாயிருந்தது. ஒரு சில நாட்களுக்குள் குலோத்துங்கன் அதைத் தூள் தூளாக்கினன். அந்த இடத்தில் தன் புதிய ஆட்சியை நிறுவினன்.

சக்கரக் கோட்டம் 'பஸ்தர்' நாட்டின் எல்லையிலிருந்தது. பஸ்தர் நாட்டினர் தம் எல்லைக் கோட்டையை இடிக்க ஒருப்படவில்லை. மலைநாட்டு வீரர்களாகிய அவர்கள் அடிக்கடி அவன் கோட்டையின் வெளியிடங்களில் வந்து சூறையாடித் தொல்லை கொடுத்தனர். ஆகவே, குலோத்துங்கன் மீண்டும் போர்க் கோலம் பூண்டான். மகாநதி கடந்து சென்று அந்த நாட்டில் வலதுசாரி இடதுசாரியாகச் சுற்றித் தன் வீரத்தின் புகழை நிலை நாட்டினன். அவன் சிறிய ஆட்சி விரிவுற்றது. மகாநதிமுதல் கங்கைவரை அவன் காலடியின்கீழ்க் கிடந்தது.

சோழப் பேரரசுக்கு இப்போதும் குலோத்துங்கன் அரசு ஒப்பானதல்ல. ஆனல் அவன் வீரம் கண்டு அவன் உறவினரான கீழ்ச்சாளுக்கிய, சோழ அரசரும், விக்கிரமாதித்தனும் புழுக்கமடைந்தனர். அவர்கள் அனைவரும் ஒருங்குகூடி அவனை வீழ்த்த எண்ணினர். இக்கருத்துடன் சோழப் பேரரசனன வீர ராசேந்திரன் தன் மகளை விக்கிரமாதித்தனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

சோழப் பேரரசுக்கு இப்போது வடக்கே புது வலுத் தோன்றிவிட்டது. ஆனல் இப்போதும் கிழக்கே கடாரத்திலுள்ள ஒரு பாதியில் சோழர் கைவரிசை மிகவும் வலுக் குறைந்ததாகவே இருந்தது. அங்கே எப்போதும் சோழர் மண்டலாதிபதிகளாக இருந்த இளவரசர் குடியில் போட்டி பூசல்கள் மிகுதியாயிருந்தன. குலோத்துங்கன் இவற்றைப் பயன்படுத்தி, சோழப் பேரரசிலேயே கீழ்பாதியைக் கைக்கொள்ள முனைந்தான்

பஸ்தர் மக்கள் குரங்குப்போர் முறையில் கைதேர்ந்தவர்கள். கீழ்ச்சங்கர் கடலில் கலஞ் செலுத்துவதில் வல்லவர்கள். இந்த இரண்டு நாடுகளிலும் உள்ள வீரர்களைக் குலோத்துங்கன் திரட்டினன். ஒரு சிறிய கப்பற்படையும், அதனுடன் கடல்கடந்து செல்லும் ஒரு நிலப் படையும் உருவாயின. ஆவலுடன்

நினைவிலிருக்கட்டும்.....

பார்ப்பனர்களால் எரிக்கப்பட்ட நூல்களில் சில :

கல்யாணக் காதை, களவு ஏடு, கலிக்கொட்டுத் தண்டு, காலகேசி, காக்கைப் பாடினியம், குலோத்துங்கன் சரிதை, குணச் சுவடி, பண் மணிமாலை, பன்னிரு படலம், பாண்டியன் மரபு, பாட்டுமடை.

★ ★ ★

ஆப்கானிஸ்தானத்திலுள்ள ஒரு நகரத்திற்கு 'தழிக்' என்று பெயர் வழங்குகிறது.

அவன் கடாரத்தின் மீது படையெடுத்தான். ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் கடாரம் வீழ்ந்தது. அவன் கடாரத்தின் பேரரசனானான்.

சோழப் பேரரசுக் கெதிராகத் தன் வலுவைப் பெருக்க அவன், இன்னொரு பேரரசின் உதவியை நாடினான். அவன் சீனப் பேரரசருடன் வாணிக ஒப்பந்தம் செய்துகொண்டு கடாரத்திலே வேரூன்றினான். அவன் ஆட்சியில் கடாரத்தின் செல்வமும், புகழும் தமிழகத்தின் செல்வத்துடனும் புகழுடனும்போட்டியிட்டன



இச்சமயத்தில் வீரராசேந்திரன் இறந்தான். அவனது சிறுவன் பெயரளவில் அரசனானான். ஆனால் உண்மையில் அவன் பெயரை வைத்துக் கொண்டு மேலைச் சாளுக்கிய அரசனான விக்ரமாதித்தியன் சோழ அரசியலில் தலையிட்டான். சேரநாட்டு மக்கள் இதற் கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். சிறுவனான அரசனைச் சோழர் குடிபெரு மக்களே கொன்றொழித்து விட்டு, குலோத்துங்கனையே சோழப் பேரரசனாகும்படி அழைப்பு விடுத்தனர்.

தன் வாள்வலியினாலே ஒரு பேரரசனாக விளங்கிய குலோத்துங்கனது ஆட்சியில் இப்போது ஒற்றுமை நிலவிற்று. சீனப் பேரரசனுடன் அவன் மீண்டும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டான். அத்துடன் அவனை மகிழ்விக்கும் எண்ணத்துடன் நாகப்பட்டினத்தில் இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட புத்தர் கோயிலுக்கு மானியங்கள் அளித்தான். விக்கிரமாதித்தனுடனும் அவன் சமரசம் செய்துகொண்டு அமைதியைநிலைநாட்டினான்.

குலோத்துங்க சோழன் நிலைநாட்டிய அமைதி, போருக்கு இளைத்த கோழையின் அமைதியல்ல. இளமையிலே ஒரு நெப்போலியனாயிருந்து முழுவயதில் அரசியல் மதியறிஞனான ஒரு அரசன் விரும்புவது அமைதியையேயாகும். சோழப் பேரரசுக்கு உலகில் ஏற்பட்ட புதிய படித்தரம் இதைக் காட்டுகிறது.

கங்கைக் கரையை ஆண்ட கன்னௌசி அரசன் அவனுக்குத் திறை செலுத்தினான்.

சயாம் நாட்டை ஆண்ட காம்போச அரசன் தன் மகனுக்குக் குலோத்துங்கன் என்று பெயரிட்டு அவனுக்குத் திறை அனுப்பினான்.

தமிழக வாணிபம் குலோத்துங்கன் காலத்தில் உலகெங்கும் பரந்து தழைத்தது. உள்நாட்டில் வாணிபத்தை வளர்ப்பதற்காகவே அவன் ஆங்காங்கே சிற்றரசர் ஆட்சியிலிருந்த சுங்கங்களை எல்லாம் ஒழித்தான். இதனால் அவன் 'சுங்கம் தகர்த்த சோழன்' என்று அழைக்கப்பட்டான். மாநில முழுவதும் நிலங்களையும் பயிர் வளங்களையும் அளவையிட அவன் ஒரு தனி அரங்கத் துறையை உண்டு பண்ணினான். 1086ல் நடைபெற்ற இந்த அளவையே இன்றளவும் நில அளவையின் அடிப்படையாக இருக்கிறது. இச்செயலால்அவன் 'நீணில மளந்த சோழன்' என்றும், 'உலகளர்ந்த பெருமாள்' என்றும் புகழப்பட்டான்.

ஆறாண்டு வளர்ச்சியின்பின் சரிந்து போக இருந்த சோழப் பேரரசைக் குலோத்துங்கன் மீண்டும் நாறாண்டு நிலை பெற வைத்தான்.

★ ★ ★ ★



திராவிட மாணவர் அணிவகுப்பு!

அன்புள்ள தம்பிக்கு,

உணர்ச்சியும் ஆர்வமும் தம்பும்பும் உன் அன்பு மடல் கிடைக்கப் பெற்றேன். அதிலடங்கியுள்ள கருத்துக்கள் என்னைக் களிப்புக் கடலுள் ஆழ்த்திவிட்டன. வருகின்ற பொங்கல் திருநாளன்று உங்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களைக் கொண்டு திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் துவங்கப் போவதாகவும், அதற்கான ஆலோசனைகளும், வாழ்த்துரையும் வழங்க வேண்டுமென என்னைக் கேட்டிருக்கிறாய்.

மூன்றும் படிவத்தில் அடிவைத்திருக்கும் உன்னுடைய இந்த அக்கரையும், பற்றுதலும் பாராட்டுக் குரியனதான்; என்றாலும், உண்மை நிலையை நீ நிறிது சிந்தித்து உணரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரான அறிஞர் அண்ணா அவர்களும் அவரது அருமைத் தம்பிமாரும் நமது மாணவர்களுக்குத் தரும் அறிவுரை என்ன? "மாணவர்கள்—அதிலும் குறிப்பாக நமது இனத்தைச் சேர்ந்த மாணவர்கள்—அரசியலில் தீவிரமான பங்கு கொள்ளக் கூடாது. மிகுந்த கவலையுடன் அரசியலை கவனித்து வரவேண்டுமே தவிர முழுமூச்சாக அரசியலில் இறங்கிவிடக் கூடாது. அவர்களைப் பொறுத்தவரை அரசியல் ஒரு பருவமடையாத மங்கை—பழுக்காத பழம். அத்தை மகளானாலும்—சொந்த மரமானாலும், சுற்றிச் சுற்றி வட்டமிடலாம், ஆனால் இப்போது தொட்டுவிடக் கூடாது; கனியும்வரை—அதாவது காலம் வரும்வரை, பள்ளிப் படிப்பு முடியும்வரை, காத்திருக்கத் தான் வேண்டும். அரசியல் வாதிகளுக்குத் தேவைப்படும் அறிவியல் கருத்துக்கள், புள்ளி விபரங்கள், சரித்திரச் சான்றுகள், இலக்கிய எடுத்துக் காட்டுகள் இவற்றைச் சேகரித்துத் தரும் ஆற்றல் மிக்கதோர் படையாக விளங்க வேண்டும். ஆனால் போராட்டங்களில், அரசியல் அமளிகளில் ஈடுபடும் முன்னணிப் படையாக மாறக் கூடாது" என்பதுதான்.

ஏன் இவ்வாறு கூறுகிறார்கள் என்றால் காங்கிரஸ்காரர்கள் செய்த மாபெருந் தவறை நாமும் செய்துவிடக் கூடாது என்பதால்தான். அந்நாளில் விடுதலைப்போர் நடத்திய காங்கிரஸ் கட்சியினர் மாணவர்களைத் தூண்டிவிட்டு ஒத்துழையாமை இயக்கம் நடத்தி அவர்கள் படிப்பைப் பாழ்படுத்தினர். இன்று ஆட்சிபீடமேறிய பின்னர் அறிஞர்களும், நிபுணர்களும் தம் சொந்தக் கட்சியில் கிடைக்காமையினால் பிறரை நாடிப் பிழைக்கும் இழிநிலை பெற்றுவிட்டனர். எனவே தான் எதிர்காலத்தில் இந்நாட்டை ஆளப்போகும் நாம் இது விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பற்பல துறைகளிலும் நமது இன மாணவர்கள் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று மேம்பாடடைய வேண்டும்.

நான் இப்படிச் சொல்லுவதால் உங்களுடைய முயற்சியைக் குறைப்பதாக எண்ணி விடாதே! இந்த ஆர்வம் அளவுடன் இருக்க வேண்டும்: படிப்பைக் கெடுக்கும் பழியை மேற்கொள்ளக் கூடாது, என்பதே என் எண்ணம்.

ஒருகாலம் இருந்தது: துடிப்புள்ள சில மாணவர்கள் தங்கள் படிப்புக் கெட்டாலும் சரியென்று முழு மூச்சாக இந்த வேலையில் இறங்கித் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கருதாது, பொதுப் பணிக்குத்


தம்மை அர்ப்பணிக்க வேண்டிய அவசியத்தில் அப்போது இருந்தனர். அவர்கள் அப்படிச் செய்துதான் இந்த மாணவர் இயக்கத்தை இன்று இவ்வளவு பெரும் அளவுக்குப் பரப்பினர். ஆனால் இன்றுள்ள நிலையில் அப்பேர்ப்பட்ட முழு நேரத் தொண்டு மாணவரிடமிருந்து எதிர்பார்க்கப்பட வில்லை. எனவே திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தைத் துவங்கும் நேரத்தில் இந்த, என் எழுத்துக்களை மறந்துவிடாதே என்கிறேன்.

இன்னொன்றையும் நீ கருதிப் பெருமை கொள்ளவேண்டும். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் இந்நாளில் மாணவர்களின் மனதைக் கவர்ந்த தனிப்பெரும் ஒரே இயக்கம். வேறு சார்புடைய மாணவர் இயக்கங்கள் இக்காலத்தில் இல்லாதொழிந்தன. ஆனால் பத்துப் பன்னிரண்டாண்டுகட்கு முன் இந்த நிலை இல்லை. மாணவர்களைத் தம்பால் கவர்ந்து தமது அரசியல் ஆர்ப்பாட்டங்களுக்கும், அமளிகளுக்கும் ஆளாக்கிக் கொள்வதற்காகக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்திய மாணவர் காங்கிரசும், கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அகில இந்திய மாணவர் சம்மேளனமும், ஆகிய இந்த இரு மாணவர் இயக்கங்கள்தான் 1943-ம் ஆண்டுக்கு முன்பு இங்கே நிலவி வந்தன. உனக்கு இப்போது இந்தப் பெயர்களெல்லாம் புதிதாகத் தோன்றும். அந்தக் காலத்தில் எல்லா மாணவர்களும் இந்த இரண்டிலொரு இயக்கத்தைத் தான் பின்பற்றி வந்தனர். அடிப்படைக் கொள்கைகளில் இவை இரண்டுக்கும் பெரும் வித்தியாசமில்லை. பொதுவாக மாணவர்களைத் தவறான பாதையில்தான் இவை செலுத்தி வந்தன. கண் மூடித் தனமான நிலையில், எதைப்பற்றியும் சிறிதளவும் சிந்திக்காமல், மாணவர்கள் வெறிபிடித்த மனத்துடன், வேலை நிறுத்தம் போன்ற விஷம வேலைகளில் அப்போதெல்லாம் அடிக்கடி ஈடுபட்டு வந்தனர், தாம் செய்வது தவறென்பதை உணராமலேயே! ஆனால் நமது மாணவர்களின் அறிவுக் கண் ணைத் திறந்து அவர்களைப் பகுத் தறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்வதற்கான சூழ்நிலைகள் 1942-ம் ஆண்டில்தான் உருவாகத் தொடங்கின.

1942-ம் ஆண்டு, இந்தியத் துணைக்கண்ட வரலாற்றிலேயே மிகவும் குறிப்பிடத் தக்க சிறப்புப் பெற்ற காலமாகும். காங்கிரஸ்காரர் பெருமையடித்துக் கொள்ளும் "வெள்ளையனே வெளியேறு" என்ற தீர்மானத்தை, உலக உத்தமர் காந்தியார் நடைமுறைக்குக் கொணர்ந்து இறுதிப் போராட்டத்தை உறுதியுடன் துவங்கியது இந்த ஆண்டில்தான். காந்தியார் கைது செய்யப்பட்டதையொட்டி நாடெங்கும் கொந்தளிப்பு மூண்டது. அவரது அகிம்சைக் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு, அவருடைய சீடகோடிகள் அராஜக வேலைகளில் ஈடுபட்டனர். தண்டவாளம் பெயர்த்தல், தந்திகளை அறுத்தல், தபால் நிலையங்கள், அரசாங்க அலுவலகங்களில் தீயிடுதல் முதலிய காட்டு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. கடையடைப்புகள், பள்ளிகள், கல்லூரிகளில் வேலை நிறுத்தங்கள்! ஆங்கில அரசாங்கத்தின் கடைசி அடக்குமுறை அளவுக்கு மீறியது. எங்கும் ரத்தக்களறி! எண்ணற்றோர் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாயினர், ஏராளமானவர் சிறைக்கேகினர். இந்த அமளிகளில் பெரும்பங்கு மாணவர்களுடையது, ஆனால் புயலுக்குப்பின் அமைதி நிலவிற்று. அந்த அமைதியில்தான் உண்மை உதயமாயிற்று.

எதையும் சாதிக்கும் இதயம் படைத்த இளைஞர் பட்டாளமான மாணவர்களைத் தங்கள் அரசியல் சூதாட்டத்தின் காய்களாக வைத்திருந்த காங்கிரஸ்காரரும், கம்யூனிஸ்டுகளும் இந்த சந்தர்ப்பத்தில் அவர்களை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். "இன்குலாப் ஜிந்தாபாத்" "கல்லூரிக்குச் செல்லாதே" "வெள்ளையனே வெளியேறு" என்ற இலட்சியச் சொற்களை முழங்காத மாணவரே அந்நாளில் இல்லை. இந்தச் சொற்களைத் தாங்காத சுவர்களில்லை-கல்லூரி மேஜை, நாற்காலி, பலகைகளில்லை. கல்லூரி நிர்வாகிகளின் கடுங்கோபத்தையும், அடக்குமுறையையும் துச்சமாய்க் கருதி இச்செயல்களில் ஈடுபட்ட மாணவர்கள் பின்னர் இதன்விளைவை அமைதியுடன் எண்ணிப் பார்த்துத் தாமே வெட்கமடைந்தனர். மாணவர்களைத் தவறான பாதையில் செலுத்திய இந்த இரு மாணவர் இயக்கங்களையும்—இந்திய மாணவர் காங்கிரஸ், அகில இந்திய மாணவர் சம்மேளனம் ஆகிய இரண்டையும் துறந்து எண்ணற்ற மாணவர் வெளியேறினர். வெளியேறிய மாணவர் உடனே குடிபுகும் நிலையில் வேறு மாணவர் பாசறை அக்காலத்தில் ஆயத்தமாகவில்லை.





1943-க்கு முன்பு மாணவர்களைத் தவருன பாதையில் இழுத்துச் சென்ற இயக்கங்கள்.....

எனினும் நமது இன மாணவர்களில் சிலர் தீவிரமாகச் சிந்தித்து வந்தனர். அவர்கள் சிந்தனைக்கு விருந்தாகப் பகுத்தறிவு இயக்கம் அமைந்தது. இக்கால இளைஞர்களின் இணையற்ற தனித் தலைவரான அறிஞர் அண்ணா அவர்கள் கலங்கரை விளக்கமாக மாணவர்களின் கண்களில் பட்டார். அண்ணா அவர்கள் 1942-ம் ஆண்டில் துவங்கிய "திராவிட நாடு" இதழும், அவர்களின் "கேட்டார்ப்பிணிக்கும், கேளாரும் விரும்பும்" சொல்திறனும் மாணவர்களைக் காந்தம்போல் கவரத் தொடங்கின.

1943-ம் ஆண்டுத் துவக்கத்தில் திருவாரூரில் தோழர்கள் மு. கருணாநிதி, தென்னன், சேலம் குகைராமன் ஆகியோர் முயற்சியால் "தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றம்" என்ற ஒரு நிறுவனம் பகுத்தறிவுக் கொள்கைகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப் பட்டது. விரைவில் இந்த மாணவர் மன்றத்தின் கிளைகள் சேலம், இராசிபுரம், நாகப்பட்டினம் ஆகிய ஊர்களிலும் தோன்றின. "முரசொலி" என்ற சிறு இதழும் [துண்டுப்பிரசுரம்] திருவாரூரில் பவனிவரத்தொடங்கி, மாணவர் எழுச்சியை முழக்கமிட்டு வந்தது. நமது இன மாணவர் இப்புதிய பாசறையில் ஆர்வத்துடன் நுழையத் துவங்கினர். பெரும்பாலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களால் உருவாக்கப் பெற்ற இந்த மாணவர் மன்றந்தான், திராவிட மாணவர் இயக்கத்தின் "விடிவெள்ளி" எனலாம். ஆயினும் இந்த இயக்கத்தின் கதிரவன் உதயமானது குடந்தையில் என்பதைக் கூறியே ஆகவேண்டும்.

காங்கிரஸ், கம்யூனிஸ்டுக் கட்சியினரின் கூட்டுறவை வெறுத்து, கொதித்த உள்ளத்தோடிருந்தநமது மாணவர்கள், ஆரிய ஆணவத்தையும் உணரும்படியான ஒரு நிகழ்ச்சி கும்பகோணம் அரசினர் கல்லூரியில் 1943-ம் ஆண்டில் நடைபெற்றது. "குடந்தை அரசினர் கல்லூரித் தண்ணீர்ப்பானை சம்பவம்" என்று அந்நாள் "சண்டே அப்சர்வர்" "குடி அரசு" முதலிய இதழ்களால் வெளியாக்கப்பட்ட நிகழ்ச்சிதான் அது. கல்லூரி உணவு விடுதியில் பார்ப்பனர்களுக்கு வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பானையிலிருந்து நீர் மொண்டு அருந்தியதற்காக ஒரு திராவிட இன மாணவர் உணவு விடுதிப் பாதுகாவலரால் ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார்.

இதைக் கேட்ட பார்ப்பனரல்லாத மாணவர்கள் மனங் கொதித்தனர்; குமுறினர்; சீறி எழுந்தனர். தக்க சமயத்தை எதிர் நோக்கிக் காத்திருந்த மாணவத் தோழர் தவமணி இராசன் அவர்கள், மற்ற மாணவத் தோழர்களான கருணைநந்தம், சொக்கப்பா, ராமதாஸ் முதலியோரின் துணையுடன், கல்லூரியிலுள்ள பார்ப்பனரல்லாத மாணவர்களை ஒன்று திரட்டி, "திராவிட மாணவர் கழகம்" என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தினர். "திராவிடர்" என்ற அந்த இலட்சியச் சொல்லை முதன் முதலாவதாக மாணவர் கழகத்துக்குச் சூட்டிய பெருமை தோழர் தவமணி இராசன் அவர்களையே சாரும். இதற்குப் பின்னர் இரண்டாண்டு கழித்துதான் சேலத்தில் திராவிடர் கழகம் உருவானது என்பது கருதத் தக்கது. "திராவிடர்" என்ற அந்தச் சொல், பல திறப்பட்ட மாணவர்களை காங்கிரஸ், கம்யூனிஸ்டு அனுதாபிகள், வைதீகர்கள், முஸ்லீம், கிறிஸ்துவ மதத்தினர்கள் ஆகிய எல்லோரையும் ஒரே அணியில் திரட்டியது. பார்ப்பன ஆசிரியர்களும் மாணவர்களும் முதலில் முறைத்தனர்; பின்னர் மிரண்டனர். கல்லூரித் தலைவராயிருந்த டாக்டர் சாக்கோ அவர்கள் அடக்குமுறை வீசிப் பார்த்தார். திராவிட மாணவர் இயக்கம் வலுத்தது. பின் அவரே அஞ்சி அடங்கிவிட்டார்.

1-12-43-ல் திராவிட மாணவர் கழகம் துவக்கப் பெற்றது. குடந்தை அரசினர் கல்லூரித் தமிழாசிரியர் திரு. ஜானகிராமன் எம். ஏ. எல். டி. அவர்கள் தலைமையில், கல்லூரிக்கு வெளியில் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்க விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினர். அன்றைய தினமே முதல் முறையாக கும்பகோணம் அரசினர் கல்லூரியில், ஆங்கிலத்தில் "புது வாழ்வு" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினர். திராவிட மாணவர்களுக்கு இரட்டை வெற்றி!


குடந்தையில் தோற்றுவிக்கப்பட்ட திராவிட மாணவர் கழகம், தென்னாட்டு மாணவர்களின் கவனத்தைப் போதுமான அளவு கவரவில்லை. இதனால் அந்தக் கழகத்தின் சார்பில் 1944-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் திராவிட மாணவர் மாநாடு கூட்டப் பெற்று, இரு நாட்கள் மிகவும் சிறப்புடன் நடைபெற்றது. இந்த மாநாடுதான் திராவிட மாணவர் வரலாற்றிலேயே ஒப்பற்றதாய் விளங்கியது. நாடு முழுதும் நமது மாணவர் நிலையை உணரத் தொடங்கியது. நமது தலைவர் பெரியார் அவர்களும் மாணவர் எழுச்சியை மதித்து அவர்களைப் பயன்படுத்தத் தலைப்பட்டார்.

மாணவர் உலக மலர்ச்சியின் எடுத்துக் காட்டான அந்த மகாநாட்டிலேதான் திரு. ஜானகிராமன், கோ. சி. பெரியசாமி, வி. அ. அரங்கசாமி,

நா. மு. மாணிக்கம் ஆகிய தமிழாசிரியர்களும், குழந்தையா, நன்னன், தியாகராசன், திருநாவுக்கரசு, கோவிந்தன் ஆகிய புலவர் மாணவர்களும், நெடுஞ்செழியன், அன்பழகன், பூ. கணேசன், இளம்வழுதி, மதியழகன் ஆகிய அண்ணாமலை பல்கலைக் கழக மாணவமணிகளும், நாட்டுக்கு அறிமுகப் படுத்தப்பட்டனர். திரு. கான் பகதூர் கலிபுல்லா, பா. தாவூத் ஷா, பேராசிரியர் முத்தையா, அண்ணல் தங்கோ, ஜனார்த்தனம், ஆகிய பெரியோர்கள் கலந்து கொண்டு விரிவுரையாற்றினர். அறிஞர் அண்ணா அவர்கள் ''ஆரியர் யார்? திராவிடர் யார்?'' என்று அறுதியிட்டுத் தக்கசான்றுகளுடன் நிகழ்த்திய சொற்பொழிவு வரலாற்றுச் சிறப்புடையதாகும். சொற்பொழிவுஆற்றியதுடன் நில்லாது மாநாடு முடிந்து பல மாதங்கள் வரையில், அங்கே நடைபெற்ற சொற்பொழிவுகளை தமது ''திராவிட நாடு'' இதழில் தொடர்ந்து வெளியிட்டு, மாணவர்களுக்கு ஊக்கமும் உணர்ச்சியும் ஊட்டிவந்தார். மாணவர் இயக்கத்துக்கு அரசியல் வர்ணம் பூசிவிடுவார்கள் நமது மாற்றூர் என்ற நோக்குடன் பெரியார் அவர்களை இந்த மகா நாட்டுக்கு அழைக்கவில்லை யென்றாலும், மாணவர் எழுச்சி கண்டு மனங்களித்த பெரியாரவர்கள் உடனே அவர்களைப் பொதுப் பணியில் ஈடுபடுத்தத் திட்டம் தீட்டினார். தன்னிடம் அந்தரங்க செயலாளராக இருந்த தோழர் கஜேந்திரன் அவர்களை அனுப்பி, நாடெங்கும் மாணவர் பட்டாளத்தைத் திரட்டி வரச் செய்தார்.

1944-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் ஈரோட்டில் முதன் முறையாக திராவிட மாணவர் பயிற்சி முகாம் பெரியாரவர்கள் ஆதரவுடன் அண்ணா அவர்களால் துவக்கப்பட்டது. குடந்தை, அண்ணாமலை நகர் கல்லூரி மாணவர்களும், மற்றும் பல ஊர்களிலுமிருந்து வந்திருந்த மாணவர்களும் அந்தக் கோடை விடுமுறையின்போது மாவட்டந் தோறும் சுற்றுப் பயணம்செய்து பிரச்சாரம் நடத்தினர். இதன் பிறகு 1949-ம் ஆண்டு வரை ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் திராவிட மாணவர் சுற்றுப் பயணம் வெற்றியுடன் நடைபெற்று வந்தது.


தடைகளையும், பெற்றோரின் அன்புத் தளைகளையும் உடைத்தெறிந்து திராவிட மாணவர் கழகம் ஆல்போல் தழைத் தோங்கி வளர்ந்தது. இதன் வளர்ச்சி கண்டு ஏராளமான ஆசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள் இந்த அணியில் துணிவுடன் கலந்து கொண்டனர். பள்ளிகள் பகுத்தறிவுப் பாசறைகளாய் மாறின. 1945-ம் ஆண்டு புதுப்பேட்டையில் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாடு, தோழர் சம்பத் அவர்களை மாணவர் தலைவராகத் தந்தது. இதன் பிறகு 1946-ம் ஆண்டு நடைபெற்ற நீடாமங்கலம் திராவிட மாணவர் மாநாடு வரலாற்றுச் சிறப்புடையது. இதைத் தொடர்ந்து திருச்சி, மதுரை, சென்னை, திருவாரூர், திருத்துறைப் பூண்டி, தஞ்சை ஆகிய இடங்களில் மாநாடுகள் வெற்றிகரமாக நடைபெற்றன. திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றமும், அதன் கிளைகளும் திராவிட மாணவர் கழகங்களாக மாற்றப்பட்டன. நாடெங்கும் ஊர்தோறும் மாணவர் கழக கிளைகள் துவக்கிப்பரவின. இயக்கம் வலுவடைந்தது. திராவிட ஆசிரியர்களும், மாணவர்களும் அரசினர் கண்காணிப்புக்கு அதிகமாக ஆளாயினர்.



'புதுவாழ்வு' என்ற தலைப்பில் அண்ணா பேசினார். மாணவர்களுக்கு இரட்டை வெற்றி.

1949-ம் ஆண்டில் திராவிட இயக்கத்தில் காரிருள் சூழ்ந்தது. சூருவளியும் வீசி ஓய்ந்தது. திராவிட முன்னேற்ற கழகம் தோன்றியது. இதனையொட்டி திராவிட மாணவர் முன்னேற்ற கழகமும் துவக்கப்பட்டு, அந்நாள்வரை திராவிட மாணவர் கழகத் தலைவராயிருந்த தோழர் மதியழகன் அவர்களே திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநாடும் சீருடன் நடந்தது.

திராவிட மாணவர் இயக்க வரலாற்றை ஒருவாறு சொல்லி முடித்து விட்டேன். ஆகவே அறிஞர் அண்ணா அவர்களின் கருத்துப்படி திராவிட மாணவர்கள் அரசியலில் நீவிரப் பங்கு கொள்ள வேண்டாம். நாட்டு நடப்புகளை நன்கு கவனித்து, எதிர்கால இன்ப திராவிடத்தை உருவாக்கும் அரும்பணிக்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். நிபுணர்களைத் தோற்றுவிப்போம். திராவிடத்தை அமைப்போம். சுதந்திர சமதர்ம சோஷலிச திராவிடக் கூட்டாட்சியைச்சமைப்போம். ஆற்றல் மிக்க அறிவுப் பட்டாளத்தின் அணி வகுப்பில் சேர, தம்பி, தயார்தானே? என் மனம் நிறைந்த வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்!



திராவிட மாணவர் இயக்கத்தின் கதிரவன் உதயமானது குடந்தையில்தான்!

வேறுபாடு ஏன்?



"பாட்டைப் படித்துப் பயன்தெரிய மாட்டாமல் ஏட்டில் எழுதி இருந்தேன் பராபரமே" என்ற பாட்டுத்தான் இந்தப் பொங்கல் திருநாளில் நினைவுக்கு வருகிறது. பேசுகிறோம், எழுதுகிறோம், படிக்கவும் செய்கிறோம். ஆனால் செயலோ ஆமை வேகத்தில் அசைந்து செல்கிறது. தாழ்ந்துபட்ட தமிழகத்தில் அழிந்து பட்ட பெண்ணின் பெருமையை அழகாக, ஆதாரத்தோடு எழுதுகிறோம். ஆனால் பயன் குறித்துச் சிந்திப்பது உங்களைப் பொறுத்த தொன்றேயாகும். ஒரு செய்தி என் நினைவிற்கு வருகிறது. நேற்று ஆசிரியை பயிற்சிப் பள்ளியின் நூல் நிலைய அறையில் அமர்ந்து உரையாடியபோது, இம்மாதம் லெனின்கிராட் நகரத்தில் பெண்கள் நலவுரிமைச் சங்க ஆண்டுவிழாக் கூட்டத்தில், திருமதி ஆன் அம்மையார் பேசிய பேச்சின் சுருக்கத்தைப் பார்த்துப் புகழ்ந்து கொண்டிருந்தோம். அப்போது மங்கை யென்ற மாணவி எழுந்து வெகு வேகமாக எங்கள் அருகில் வந்து நின்று, "மேல்நாடு, மேல்நாடு என்று எப்போதும் மேலாகப் பேசித் திரிகின்ற உங்கள் மேல்நாட்டு மோகத்திற்கு தக்கபாடம் கற்பிக்கும் நாள் எந்நாளோ? நம் நாட்டில் இல்லாத நாகரிகமா? நம் நாட்டுப் பெண்களிடம் காணப்படாத நல்லியல்பை மேல் நாட்டாரிடமா கண்டு விட்டீர்கள்? செந்நாப் புலவர் புகழேந்தியே நம் பெண்களைப் புகழ்ந்திருப்பதைப் பார்த்துமா உங்களுக்குப் புத்தி வரவில்லை?

"மேல் நாட்டிலாவது போப் பாண்டவர் பதவி பெண்களுக்குத் தரப் படுகிறதா? நம் நாட்டில் பெண்களுக்குத் தரப்படாத பதவி என்ன இருக்கிறது?" என்றுகூறி விட்டுக் கழுத்தைத் திருப்பி ஒரு வெட்டு வெட்டி விட்டுத் திரும்பினாள். எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போதுதான் சாப்பிட்டுவிட்டுத் திரும்பிய அனந்தநாயகி "சேலைகட்டிய மாதரை நம்பினால்..." என்று பாடிக்கொண்டு அசைந்தாடியபடி உள்ளே வந்தாள். நாங்கள் அத்தனை பேரும் கொல்லென்று சிரித்து விட்டோம். உடனே "இது யார்பாடிய பாட்டோ?" என்றாள், இந்திரா "இது எவனோ ஒரு சேவடித் தம்பிரான் பாடி இருப்பான்; அதற்கென்னவாம் இப்போது" என்றாளவள். இல்லை. இப்போதுதான் மங்கை புகழேந்தியார் பாட்டைக் கூறிப் படபடப் போடு பேசிப் போனாள். அதற்குள் நீ ஒரு சேவடித் தம்பிரான் பாட்டைப் பாடவே சிரிப்புத்தான் வந்தது" என்றாள் இந்திரா.

பெண்ணைப் பேயாய், பிசாசாய், பருந்தாய் மதிக்கும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்ட கொடுமைக்காரக் கும்பலுக்கு அடிவருடும் அடியார்கள் தொகை குறைந்திருக்கிறது என்றாலும், உள்ளடக்கமான அடிமைத்தனை அறுபடவில்லை. சங்ககாலப் பெண்மணிகள் வரலாற்று ஏட்டிலே வகுத்திட்ட வைரமணிக் கோவைகள் எத்தனையோ! மடமை குடிகொண்டிருந்த மேல்நாடு நம்மைப் பார்த்து மந்தகாசப் புன்னகையை வீசுகிறது. ஆனால், அறிவு கொண்ட அன்னைத் தமிழ் நாடு, ஆரியத்தால் அடக்கியாளப் படுகிறது. வஞ்சி சூழ வெஞ்சினங் கூறி வாளெடுத்துப் போர் மேற்கொண்ட வனிதாமணிகள், இன்று அஞ்சி நடுங்கி ஆரியத்தின் பிடியிலே அகப்பட்டுத் தவிக்கின்றனர். வெள்ளாளர் ஏகாதிபத்தியத்தை விரட்டியடிப்பேன் என்று, அரசனே சிறுவயல், காளையார் கோயில் முதலிய இடங்களிலே பதுங்கி இருந்து புலிபோல் பாய்ந்து பஞ்சனைப் பறக்கச் செய்தாளே வெள்ளையர் படையை, வீர கட்டபொம்முவின் தங்கை முத்துநாச்சியார், அவள் எங்கே இப்போது? தம்பியையாயினும்

தவறுசெய்த இவன் தலையைக் கிள்ளி எறிவேன் என்று நீதியோடு ஆண்ட அரசி மங்கம்மாள் எங்கே இப்போது? பகைப் புலத்திலிருந்து வந்த படை வீரர்க்குப் புறமுதுகு காட்டினனியின் அவன் பாலுண்ட இம்மார்பை அறுத்தெறிவேன் என்ற பாவையர் எங்கே? கற்பிற்கு இலக்கணம்.....''


அதற்குள் அனந்தநாயகி ''அவர்கள் எல்லாம் இதோ, இந்தச் சரித்திர புத்தகத்தின் ஏட்டிலே பத்திரமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன இப்போது? ஏதாவது நினைவுச் சின்னம் எழுப்பப் போகிறாயா?'' என்றாள். எல்லோரும் மீண்டும் சிரித்தனர். சிரிப்பொலி அடங்குவதற்குள் படித்தபடி உட்கார்ந்திருந்த வள்ளியம்மை வேகமாக எங்களை நெருங்கி வந்து ஆத்திரமாக ''ஏன் இப்படி இடி இடி யென்று சிரிக்கிறீர்கள், ஆந்தைக் கூட்டங்களே, நாங்கள் பரிட்சைக்குப் படிப்பது தெரியவில்லையா?'' என்றாள்.

அதற்குள் சுப்புலக்ஷ்மி என்பவள், ''தெரியுதே. அதனால் தான் ''சேலை கட்டிய மாதரை.....? என்று பாடினன் சேவடித்தம்பிரான். இல்லையா சரோஜினி?'' என்றாள்.

''ஆமாம், உன் போன்ற பட்டம் பெற்ற பத்தாம் பசலிகள்; பெற்ற பட்டத்தையும், படிப்பையும் பௌடர், ஸ்நோவாகப் பரிமளிக்கச் செய்கின்றனர். இன்னும் ஒரு சிலர் பானையிலே போட்டு மூடி ஊறுகாய் போட்டு மகிழ்வார். மேல்நாட்டைப் பற்றிப் பேசினால் மங்கைக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வருகிறது. அறிவுக் கண்கொண்டு ஆராய்ச்சி வாயிலாகப் பார்க்கட்டுமே மேல் நாட்டை! அப்போது தெரியும் வேறுபாடு. தொழிலாளிக்குச் சம்பள உயர்வு கிடைக்கவில்லையென்றால், 'முதலாளியின் மனம் மாறும்படி செய்யடா, என் அப்பனே!' என்று தோப்புக் கரணம் போட்டுத் தேங்காய் உடைக்கிறார்கள் நடுத்தெருப் பிள்ளையாருக்குத் தாய்மார்கள் இங்கே! ஆளுங்கட்சிக்கு எதிர்க் கட்சியாக நின்று நல்லதொரு தொழில் துறை வகுக்கும் தலைவனைத் தேர்ந்தெடுப்போம், வாரீர், வாரீர், என மக்களை ஒன்று கூட்டி அரசியலைக் கைப்பற்றும் நாரீமணிகள் அங்கே! எத்தனை வேறுபாடு! எவ்வளவு பெரிய ஏற்றத் தாழ்வு! அங்கே ஈவா அனீட்டாக்கள், சந்தோஷாக்கள், ஜட்டி ஜகன்கள்— இங்கே ஆண்டவனைத் தேடி ஆட்டுமந்தையை ஓட்டிச் செல்லும் கலா க்ஷேத்திரங்கள்! இங்கிலையில் நாடு வளம் பெற மார்க்கம் பிறப்பது எப்படியோ?

அருண்மொழி B.O.L


கொஞ்சும் மொழி பேசும் பிஞ்சுக்குழந்தை கட்கு விளையாடத் துப்பாக்கி, ஊதுகுழல், வண்ணச் சித்திரத்தை வகையாகத் தீட்டவல்ல தூரிகைகள் தரப்படுகிறது, தாய்மார்களால் அங்கே! ஆனால், தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், தாமரை மேல் வாணிகள், தாய்மாரால் தரப்படுவது இங்கே! பள்ளியிலே படிக்கும் பிள்ளைகட்கு ஒழிவு நேரங்களில், வரலாற்று ஏடுகளை, விண்ணாராய்ச்சிப் பூவாராய்ச்சிப் புத்தகங்களைப் படிக்கத் தருகிறார்கள், தாய்மார்கள் அங்கே. ஆனால் இங்கே, பட்டினத்தார் பாடல்கள், பால வண்ணன் லீலைகள், பஞ்சத்தாண்டி— பரம்பரை ஆண்டி வரலாறுகளைப் படிக்கத் தருகிறார்கள் தாய்மார்கள் குழந்தை கட்கு! எப்படி இருக்கிறது வேறுபாடு? போதுமா? இவையெல்லாம் விட்டு விட்டு மேல் நாடு மேல் நாடு என்று மோகம் கொள்கிறோம் என்று மேல் பேச்சுப் பேசிப் பழங் கதைகள் கூறி விட்டால் போதுமா? விதண்டாவாதம் பேசி, எங்களையும் படிக்க விடாது இனியாவது சும்மா இருப்பீர்களா, பரதேவதைகளே!'' என்று கூறி விட்டுப் பட்டென பறந்து சென்றாள் வள்ளியம்மை. அனந்தநாயகியும் சரோஜினியும், இவள் என்ன 'கழகமோ' என்று அடக்கிப் பேசியபடி அகன்று போயினர். ஆனால் மங்கையோ எனது விளக்கத்தை வெறும் பேச்சென்று எண்ணிவிடாது ஆழ்ந்து யோசித்தபடி அசையாமல் இருந்தாள். ஆராய்ச்சி ரேகைகள் அவள் நெற்றியை அலங்கரிப்பது கண்டு உளங் களித்தேன். தெருவிலே பேரொலி கேட்டது. பலகணி வழியாகப் பார்த்தேன். திராவிடர் திருநாள் ஊர்வலம் மைதானம் நோக்கி ஊர்ந்து போய்க்கொண்டிருந்தது. உள்ளம் பூரித்தது!



''டேய்...உண்மையைச் சொல்லிடு... நீ எப்படி அவ்வளவு பெரிய பொதுக்கூட்டத்திலே பிக்-பாக்கெட் அடிச்சே?''

''அதெல்லாம் சொன்னா புரியாதுங்க... கூடமாட நின்னு கவனிச்சாதாங்க தெரியும்!''

ஃ ஃ ஃ



பத்திரிகையின் பலத்தை சிலர் எண்ணிப் பார்ப்பதே இல்லை. இதோ...இதைப் படித்தாவது தெரிந்து கொள்ளுங்கள், பத்திரிகையின் சக்தி எப்படிப்பட்டதென்று!

அச்சகத்திலிருந்து வந்த கோலத்தில்-அதாவது ஈரங்கூட சரிவரக் காயாமல் அடுக்கப் பட்டிருந்தது அந்த தேசியப் பத்திரிகை. பத்திரிகையின் பெயர் நமக்கெதற்கு? நமக்கு விஷயந்தானே தேவை? அவ்வூரில் குறிப்பிட்ட இப்பத்திரிகைக்கு நிறைய செல்வாக்கு இருந்தது.

இன்றைய தாளில் இருந்த முக்கியமான செய்திகளாவன: என்று சொல்லிக் கொண்டுபோகத் தேவையில்லைதான். ஏனெனில் அதில் இருந்ததே சில...எல்லாமே முக்கியமான விஷயங்கள்தான்!

முதலில் பெரிய அளவு தலையங்கத்தில், சிறுவர்களை அடித்து, துன்புறுத்துதல் கூடாது என பெற்றோர்களையும், உபாத்தியாயர்களையும் ஆசிரியர் கேட்டுக் கொண்டிருந்தார். அடுத்த சிறு தலையங்கத்தில் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும் படி தூண்டிவிட்டுக்கொண்டிருந்த ஒரு போலி சமூக ஊழியனை ஆசிரியர் திட்டி எழுதியிருந்தார். அடுத்த பகுதியில் வெளியாகியிருந்த ஆசிரியரின் இன்னொரு கட்டுரையில், போலீஸ்காரர்களுக்கு பொது மக்கள் அதிகமாக உதவினால் தான், அவர்கள், அமைதியையும் நீதியையும் நிலை நாட்ட முடியும், என்று அபிப்பிராயம் சொல்லியிருந்தார்.

இவ்வளவோடு, பத்திரிகை விஷயம் முடிந்துவிட வில்லையே!

எத்தனையோ வாசகர்கள் தமது குறைகளை இந்த ஆசிரியரைப் போன்ற புத்திசாலிகளிடம் சொல்லி, நிவர்த்தி செய்து கொள்வதுண்டு. எத்தனையோ கேள்விகள்! அதில் ஒன்றுக்கு மட்டும் ஆசிரியர் அதிக சிரத்தையோடு பதில் அளித்திருந்தார். கேள்வியும் முக்கியமானதுதான்.

''எனது காதலி என்னைக் கண்டதும் ஒதுங்கி ஓடுகிறாள். அதிலிருந்து அவளுக்கு என் மீது காதல் இல்லையென்று சொல்ல முடியாது! ஆதலால் அவளை நான் ஒரு தடவை சந்திக்கவும், நிரந்தரமாக அவளை அடையவும் வழி சொல்லுவீர்களா?''—இதுதான் கேள்வி. அதற்குத் தகுந்த பதிலும்கூடவே இருந்தது.

அடுத்த விஷயத்திற்கு வந்தால்...அது பெண்கள் பகுதி. அழகை எப்படி உற்பத்தி செய்து கொள்வது என்ற ஆராய்ச்சி நடத்தப் பட்டிருந்தது அங்கே. ஒரு பெண் கேள்வி கேட்டிருந்தாள். அதற்குத்தான் இவ்வளவு விளக்கம்.

இது ஆயிற்று?

கடைசியில் ஒரு சிறு விளம்பரம். தனிப் பட்ட ஆளுக்கு அதில் இருந்த விஷயம் இதுதான்!

''அன்புள்ள ஜாக்! நீ சொன்னதுதான் சரி. என்னை மன்னித்து விடு. காலை 8-30 மணிக்கு.....இடத்தில் சந்திக்கவும். நாம் இருவரும் மத்தியானம் புறப்பட்டு விடலாம்.

—''பெனிடெனட்''



மூலம்: ஓ'ஹென்றி

தமிழில் வேங்கடசாமி

பத்திரிகையிலிருந்த முக்கிய மான விஷயங்கள் இவைதான்.

* * *

காலையில் மணி எட்டு ஆகி யிருந்தது. முகத்தில் லேசாக தாடியும், காய்ச்சலில் படுத்த வன்போல் இருந்த உடலமைப் பும் கொண்ட ஒரு வாலிபன் அந்த இடத்திற்கு வந்து, காசைக் கொடுத்து ஒரு பத்தி ரிகை வாங்கினன். இரவு முழு தும் தூங்காததால்தான் அவன் நேரங்கழித்து எழும்படி ஆகி விட்டது. 9-மணிக்கு காரியால யத்திற்குப் போகவேண்டாமா? அவசர அவசரமாக எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டான்.

பத்திரிகையை இப்போது பார்க்க அவகாசம் ஏது? அதை கோட்டுப்பையில் திணித்திக் கொண்டு கூவரத்திற்காக ஒரு கடைக்குள் நுழைந்தான். அவ னுக்கு சாதகமாகவே எல்லாம் அமைந்து விட்டதுதான் ஆச்சரி யம். ஐந்து நிமிடங்களில், அவன் வெளியே வந்து தன்னு டைய காரியாலயத்திற்கு நடை போட்டுக் கொண்டிருந்தான்.

பையிலிருந்து வெளியே நீட் டிக் கொண்டிருந்த பத்திரிகை அடுத்த திருப்பத்தில் கீழே விழுந்து விட்டது. கூடவே, அவனது புதிய கையுறைகளும் சேர்ந்துகொண்டன. அரை பர் லாங் நடந்துவிட்ட பிறகுதான், காணமல் போன கையுறை களைப் பற்றி அவனுக்கு ஞாப கம் வந்தது. பத்திரிகை போனால் என்ன? கையுறைகள் மட்டும் கிடைத்தால் போதும்! திரும்பி நடந்தான் அங்கு மிங் கும் பார்த்தவாறு!

சரியாக 8-30 மணிக்கு... இடத்திற்கு வந்தான். எதற் காக வந்தானோ அதை அவன் மறந்து விட்டு, ஒரு பெண்ணின் அன்பான அர வணைப்பில் சிக்கி திணறிக் கொண்டிருந் தான்.

"என் அன்பான ஜாக்! நீ நிச்சயமாக இங்கு வருவாய் என்று எனக்குத் தெரியும்!" என்று அவள் பேசிக் கொண்டே போக; வாலிபன், "என்ன சொல்கிறாள் இவள்?" என்று தன் மனதுக்குள் கேள் வியை எழுப்பியபடி திகைத் தான். சும்மா இருந்தாலும் தொந்திரவுதானே?

'ஆமாம், பரவாயில்லை!' என்று ஏதோ உளறிவைத்தான். என்ன உங்களுக்கும் புரியவில் லையா? பத்திரிகையில் வந்த விளம்பரம் பலனைக் கண்டு விட் டது. அவ்வளவுதான்!

காற்று லேசாக அடிக்கவே, கீழே கிடந்த பத்திரிகை தன் பிரயாணத்தைத் தொடங்கியது.

சற்று தூரத்தில் கைவண்டி ஒன்றை இழுத்துக் கொண்டு ஒருவன் வந்துகொண்டிருந் தான். அவன்தான், காதலியை அடைய பத்திரிகை ஆசிரியரி டம் வழி கேட்டவன். என்ன அதிர்ஷ்டம் பாருங்கள்! காற் றில் பறந்து வந்த பத்திரிகை, வண்டியை தள்ளிக்கொண்டு வந்தவன் முகத்தில் தாக்கியது. இறக்கத்தில் வந்து கொண் டிருந்தவன், திடீரென பத்தி ரிகை, முகத்தை மூடிக்கொண் டதால் திசை மாறிவிட்டான். வேகத்தையும் திடீரென குறைக்க முடியவில்லை.

முடிவு என்ன? விபத்துதான்! ஒரு வீட்டின் முன் பக்கத்தில் இடிபட்டு கீழே விழுந்து விட் டான். வண்டியும் சாய்ந்தது.

சப்தத்தைக் கேட்டு, வீட்டுக் குள்ளிருந்து வெளிவந்த பெண், யாரென்கிறீர்கள்? அவன் காத லியேதான்! இவனைக் கண்ட தும், "ஐயோ! நீங்களா? நீங் கள் போய்விட்டால் எனக்கு யார் கதி?" என்று கதறியவாறு அவனை உள்ளே தூக்கிக் கொண்டு போனாள், சிலர் உதவி யோடு! காதல் இனி வெற்றி காணமல் போகாது.

* * *

சரி! நாம் என் இங்கு நிற்க வேண்டும்? அதோ இன்னும் பிரயாணம் செய்து கொண் டிருக்கும் பத்திரிகையுடன் போவோம்!

கடமை தவறாமல் பணியாற் றிக் கொண்டிருந்த ஒரு ரஸ்தா போலீஸ்காரனின் கண்களில் இந்த பத்திரிகை பட்டுவிட்டது. ஜனங்கள் நடமாட்டத்திற்கு எவ்வளவு இடைஞ்சல்? இந்த எண்ணம் மனதில் எழவே, அவன் பறந்துகொண்டிருந்த பத்திரிகையைத் தாவிப் பிடித் தான். விரிந்திருந்த பக்கத்தை மடித்து சிறிதாக்கினன். படிக் கும் நேரத்தில் அவன் கண்க ளில் பட்ட விஷயம், "போலீஸ் காரர்களுக்கு மக்கள் உதவி புரியவேண்டும்" என்ற ஆசிரிய ரின் வேண்டுகோள்தான்.

ஆசிரியரும் நமக்கு சாத்க மாகத்தான் எழுதியிருக்கிறார் என்ற பூரிப்பு நிறைந்த மன தோடு மேலே நடந்தான். சிறு வன் ஒருவன் அப்பக்கமாக வந்து கொண்டிருந்தான். போலீஸ்காரன் சந்தோஷமாக இருந்தானல்லவா? அதற்கேட் டாளமாக கையிலிருந்த பத்திரி கையை அப்பையனிடம் கொடுத்து விட்டான்.

பையன் பெயர் ஜானி! பத் திரிகையை பிரித்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம், அவன் மன தில் சாதாரண மாக எழாது அதனால் அதை வீட்டுக்குக் கொண்டு வந்து போட்

டான். வீட்டில் அவனுக்கு, வயதான அக்கா ஒருத்தி! அவள் பெயர் கிளாடிஸ். அவள்தான் பத்திரிகைக்கு, "அழகு உற்பத்தி"யைப்பற்றிக் கேட்டு எழுதியவள். எளிதில் அவ்விஷயம் பத்திரிகையில் வெளியாகாதுபோல் தோன்றவே கிளாடிஸ் பத்திரிகை பார்ப்பதையே நிறுத்திவிட்டாள். இன்று பத்திரிகையில் அவ்விஷயம் விவாதிக்கப் பட்டிருக்கும் என்று தெரியுமா என்ன? கிளாடிஸ் அழகியாக முயற்சித்தாள், செயற்கை சாதனங்கள் மூலம்.

அன்றுகூட அவளுக்கு வெளியில் ஏதோ வேலையிருந்தது. என்னதான் நல்ல உடையணிந்தாலும், அவளது தோற்றம் அழகாகத் தெரியவில்லை. மேலாடை இறுக்கமாக இல்லாமல், தளர்வுற்று இருந்தது. அதில் கவர்ச்சி, பாதி போய்விடுகிறதல்லவா? சரிசெய்ய சுற்றுமுற்றும் பார்த்தாள். ஜானி கொண்டுவந்த பத்திரிகைதான் அவள் கண்ணில் பட்டது. பாதியைக் கிழித்தாள் அதில். நான்காக மடித்து ஆடைக்குள் அதைச் செருகவே, ஆடை விறைப்பாகவும், ஏன்—புது கவர்ச்சியை உண்டாக்கிக் கொண்டும் இருந்தது. நடக்கும்போது, புதிய ஆடை அணிந்தாற்போல் காஞ்சித்தின் சல சலப்பு சுருதி கூட்டியது!

சிநேகிதி ஒருத்தி, அவள் ஆடையையும், நடையையும் பார்த்து வியந்தாள். கிளாடிஸுக்கு பெருமை தாங்கவில்லை. கன்னங்கள் சிவந்தன. கண்களில் புதிய ஒளி! அதிகம் ஏன்? அவளுக்கு அழகு வந்துவிட்டது.

இதையேதான் அப்பத்திரிகை ஆசிரியரும் எழுதியிருந்தார்.



புதுமாப்பிள்ளை: *கட்டாணி முத்தே...கட்டிக் கரும்பே!*

பையன்: *அத்தான்.....அத்தான் ... பின்னடி சொன்னீங்களே அதுலே ஒரு கட்டு கொடுங்க இப்படி... அப்புறம் நான் உங்க வழிக்கு வராமே ஓடிப் போய்டுவேன்.....*

தெரிந்தோ, தெரியாமலோ அவள் அதை நடைமுறையில் அழுலுக்குக் கொண்டுவந்து விட்டாள். ஆக, செயற்கையில் இயற்கை அழகு பூரண மடைந்து விட்டது.

* * *

தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டிக் கொண்டிருந்த போலி சமூகத் தலைவன் வேறுயாருமில்லை... நம் ஜானியின் தகப்பனார்தான். சாப்பிட்டுவிட்டு ஓய்வாக நாற்காலியில் சாய்ந்த அவர் கிளாடிஸ் கிழித்தெடுத்துக் கொண்டு மீதம் விட்டுப் போயிருந்த பத்திரிகைப் பகுதியை கண்ணுற்றார். தலையங்கம் என்ன எழுதியிருக்கிறது என்று பார்க்கவா அவர் அதை கையில் எடுத்தார்? இல்லவே இல்லை!

ஒரு மூலையில் வெளியாகியிருந்த 'மூலைக்கு வேலை' பகுதியை அவர் கவனித்து விட்டார். பிறகு என்ன? நேரம் போவதே தெரியாமல் அதில் குறிப்பிட்டிருந்த புதிர்களை விடுவிக்க ஆரம்பித்து விட்டார். அது ஒரு நல்ல பொழுது போக்கல்லவா?

குறித்த இடத்தில் இந்த தலை வருக்காக, தொழிலாளர்கள் மூன்று மணி நேரத்துக்கு மேலாக காத்துக் கொண்டிருந்தார்கள். தலைவர்தான் புதிர் விடுவிப்பதில் உட்கார்ந்து விட்டாரே! வேலை நிறுத்தத்தை விட்டு விட்டு, தொழிலாளர்கள் வேலைக்குப் போகத் தீர்மானித்து விட்டார்கள். இந்தத் தலைவரை, நல்ல வேளை, அவர்கள் நம்பவில்லை!


ஆசிரியருக்கு இது ஒரு நல்ல வெற்றி இல்லையா? அவர் தலையங்கம்தான் இந்த வேலை செய்தது என எல்லோரும் நம்பினர்கள்.

அன்று மாலை, ஜானி பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்தான். பத்திரிகையின் ஒரு பகுதியை அவன் சட்டைக்குள்ளிருந்து வெளியே எடுத்தான். உபாத்தியாயர் அடித்தால், தாங்கிக் கொள்ளத்தான் அவன் பத்திரிகையை உடைக்குள் மறைத்திருந்தான். வெளியே எடுத்தவன், ஆசிரியர், உபாத்தியாயர்களையும் பெற்றோர்களையும் குழந்தைகளை அடிக்கும் விஷயமாக கண்டித்து எழுதியிருந்ததைக் கண்டு, வரி விடாமல் படித்தான். அதற்குப் பலன் இருக்கத்தான் செய்தது! எழுதியிருப்பது பத்திரிகை ஆசிரியர் அல்லவா? போலே போகிறது. இதைப் படித்த பின்னராவது நீங்கள் பத்திரிகையின் பலத்தை அறிந்து கொண்டீர்களா, இல்லையா? ஃ


'எட்டாவது அதிசயம்!'



முரசொலி பொங்கல் மலர் 1956



'முரசொலி' பொங்கல் மலர்—1955



சிறிய நிலவும் பெரிய நட்சத்திரமும்

சிமண்ட் தரையில் விழுந்த பாதரசம் சின்னஞ்சிறு துளிகளாய்ச் சிதறிக்கிடப்பதைப்போல பரந்த வானமெங்கும் நட்சத்திரங்கள் இறைந்து கிடந்தன.

எல்லையற்ற தொலைவில் நிலவுலகத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது எழில் நிலவு.

சுழலும் உலகையும் அதைச் சுற்றும் நிலவையும் கண்டுகொண்டிருந்த நட்சத்திரங்கள் சிரித்துக் கொண்டே இருந்தன—ஆமாம்; கேலிச் சிரிப்புதான்! மண்ணுலகையும் அதை வலம் வரும் வெண்ணிலவையும் பார்க்கப் பார்க்க நட்சத்திரங்களுக்குக் கற்பனை கற்பனையாக எண்ணங்கள் மலர்ந்த வண்ணமிருந்தன. பார் வேந்தனைச் சுற்றும் பாவேந்தன்..... செச்சே... அரசமரத்தைச் சுற்றும் அழகுமங்கை.....அல்ல அல்ல...செக்கைச் சுற்றிவரும் சுக்காய் உலர்ந்து போனமாடு...ஆமாம்; இப்படிப்பட்ட கற்பனைகள் நட்சத்திரங்களின் மனதில் பூத்த வண்ணமிருந்தன. அவ்வளவு நட்சத்திரங்களின் உள்ளத்தையும் அப்படியே வெளிப்படுத்துவதைப் போல இரண்டு நட்சத்திரங்கள் பேச்சைத் துவக்கின.

ஒன்று வெள்ளி நட்சத்திரம்.

மற்றது மஞ்சள் நட்சத்திரம்.

''எவ்வளவு உயரத்தில் இருக்கிறோம் நாம்! எள்ளத்தனை மதிப்பாவது நம்மிடம் காட்டுகிறதா இந்த வெள்ளி நிலவு?'' என்று சற்று வருத்தம் கலந்த சினத்துடன் கேட்டது மஞ்சள் நட்சத்திரம்.

''மதிப்பா? நிலவா? நமக்குக் காட்டுவதா?'' என்று சொல்லிக் கடகடவென்று சிரித்தது வெள்ளி நட்சத்திரம்.

''பௌர்ணமியில் காய்ந்து, அதற்குப் பிறகு தேய்ந்து, அமாவாசையில் மாய்ந்துபோகும் அற்ப நிலவின் மதிப்பு நமக்குக் கிடைத்தாலென்ன, கிடைக்காவிட்டாலென்ன? பெரியவர் சிறியவருக்கு வணக்கம் செலுத்தினால் அது சிறியவருக்குப் பெருமை! சிறியவர் பெரியவருக்கு வணக்கம் செலுத்தினால் அப்போதும் சிறியவருக்குத்தான் பெருமை! பெரியவருக்குப் புதுப்பெருமை வந்து சேர்வதில்லை. உருவில் பார்த்தால்—நிலவு ஒரு மணல்துளி—நட்சத்திரமாகிய நாமோ பெருமலை! அப்படியிருக்க, வட்டநிலா நம்மை வணங்கினாலும் பெருமை நமக்கல்ல, நிலவுக்குத்தான்! ஆகவே, நிலவு நம்மை மதித்தாலென்ன?'' என்று கண்ணைச் சிமிட்டியவாறு பேசிற்று வெள்ளி நட்சத்திரம்.

''ஆமாம் ஆமாம்! அவன் நிலை என்ன? நம் நிலை என்ன? அவன் உண்டாகாத காலத்திலிருந்தே நாம் உயரத்தில் இருக்கிறோம். உருவத்திலும் பருவத்திலும் தகுதியிலும் திறமையிலும் நாம்தாம் உயர்ந்தவர்கள். நிலவு ஒரு துண்டுக் காகிதம். நட்சத்திரமாகிய நாமோ கட்டுப் புத்தகம்! துண்டுக் காகிதம் வணக்கம் செலுத்தாவிட்டாலென்ன?—கட்டுப் புத்தகத்தின் கௌரவம் குறைந்தா விடப் போகிறது?'' என்று மஞ்சள் நட்சத்திரம் தனக்குத்தானே தேறுதல்



மொழி கூறிக்கொண்டது. ஆனலும் அதன் மனம் நிறைவு பெறவில்லே.

"அற்ப நிலவுதான்! ஆனல்..." என்று இழுத்தது மஞ்சள் நட்சத்திரம்.

"ஆனல் என்றல் என்ன நண்பா? அவசியமற்ற ஆனல் என்ற சொல் எதற்கு? அற்பமானதுதான் நிலவு! அதிலென்ன ஐயம்? விஞ்ஞானி, உலகுக்கு விளக்கியுள்ள உண்மையாயிற்றே இது. நிலவு அற்பமானதுதான். நட்சத்திரக் கூட்டமெல்லாம் சேர்ந்து கூட்டம் போட்டு விஞ்ஞானிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்; இல்லேயில்லே; நட்சத்திரக் கூட்டமெல்லாம் சேர்ந்து ஒரு மாநாடே கூட்டி, அதில் விஞ்ஞானியை வர வழைத்து, இதயம் குளிரக் குளிர வரவேற்பு பாடி, இதழ்கள் சிதறச் சிதற மாலேகள் சூடி, நன்றி அறிவிப்புத் தீர்மானமே நிறைவேற்றி அளிக்கவேண்டும். ஆமாம்; எவ்வளவு பெரிய உண்மையை, எவ்வளவு பெரிய மடமையில் ஆழ்ந்திருந்த மக்களுக்கு எடுத்து விளக்கினர் விஞ்ஞானி! வெள்ளேத் தாமரைபோல் மலர்ந்துள்ள பெரிய நிலவு உண்மையில் சின்னஞ் சிறிய து. அந்த வெள்ளேத் தாமரையில் தேன் உண்ணச் சுற்றிப் பறக்கும் வண்டுக் கூட்டம் போல் சிதறிக் கிடக்கும் சின்னஞ்சிறு நட்சத்திரங்கள் உண்மையில் ஒவ்வொன்றும் நிலவைவிட, ஆயிரம் மடங்கு, லட்சம் மடங்கு, ஏன்—கோடி மடங்கு கூடப் பெரிது என்ற உண்மையை விஞ்ஞானிதான் உலகுக்கு எடுத்து விளக்கினர். நிலவு அற்பமானதுதான். அற்ப நிலவுதான். ஆனல் என்று இழுக்கிருயே நண்பா, என்? ஏன் அந்த ஆனல் போடுகிருய்?" என்று கம்பீரமாகக் கேட்டது வெள்ளி நட்சத்திரம்.



ஆண் காக்கை: அடியே — என்னடி இது? என்னேக் கும் போல குழந்தை களுக்கு திதிப்பா வேப்பம் பழம் கொண்டாராம, கரும்பு கொண்டாந் திருக்கே?...

"அற்ப நிலவுதான்! ஆனல்.....ஆனல்..... மண்ணுலக மக்கள் பெரியவர்களாகிய நம்மை விட்டுவிட்டுச் சிறியவனேத்தான் போற்றுகிருர்கள்" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறியது மஞ்சள் நட்சத்திரம்.

"என்ன நண்பா? என்ன நீ சொல்லுகிருய்?" என்று கலக்கம் நிறைந்த குரலில் கேட்டது வெள்ளி!

"ஆமாம் நண்பா! மண்ணுலகம் பெரிய நட்சத்திரத்தைப் போற்றுவதில்லே; சிறிய நிலவைத்தான் போற்றுகிறது. மாற்ருந்தாய் பிள்ளேயைப் போல் நம்மை யெல்லாம் எட்டி உதைத்து விட்டுத் தன் பிள்ளேயைப் போல் மண்ணுலகம் நிலவைத்தான் பாராட்டுகிறது—சீராட்டுகிறது. ஆமாம்—மண்ணுலகம் நிலவைத்தான் பாராட்டுகிறது—சீராட்டுகிறது. சகிக்க முடியாத இந்த உண்மையைச் சமாளித்துத்தான் ஆகவேண்டும் நண்பா!" என்று அழு குரலிலேயே பேசத் தொடங்கியது மஞ்சள்!

"மண்ணுலகிலுள்ள மக்கள்தானே....." என்று கேலியாகப் பேசியது வெள்ளி. "நட்சத்திரங்களாகிய நாமெல்லாம் விண்ணுலகில் வாழ்பவர்கள்! விண்ணுலகத்தாராகிய நாம் மண்ணுலக மக்களேப் பற்றி எண்ணுவதை விட்டுத் தள்ளுவோம்" என்றது வெள்ளி.

"நட்சத்திரங்கள் விண்ணுலகில் வாழ்வது உண்மைதான். ஆனல்....."

"ஆனல்—என்ன?"

"மண்ணுலகமும் விண்ணுலகில்தான் வாழ்கிறது."

"என்ன?!"

"அந்தரத்தில் சுற்றிச் சுழலும் பந்தல்லவா மண்ணுலகம்! மண்ணுலகத்திலிருந்து பார்த்தால் நட்சத்திரம் விண்ணுலகில் வாழ்வது தெரியும். நட்சத்திர உலகிலிருந்துபார்த்தால் மண்ணுலகம் விண்ணுலகில் வாழ்வது நன்கு தெரியும். நமக்கெல்லாம் அது நன்கு தெரிகிறதே! மண்ணுலகிலுள்ள மக்களென்றல் என்ன? விண்ணுலகில் சுழலும் மண்ணுலக மக்கள் தாமே அவர்கள்! அப்படிப் பார்த்தால் நம்மைப் போல் அவர்களும் விண்ணுலகத்தார்தாம்! அந்த மக்கள், என் நண்பா, பெரிய நட்சத்திரத்தை மதிக்கவில்லே — சிறிய நிலவைத்தான் மதிக்கிறார்கள், கொண்டாடுகிறார்கள், பாராட்டுகிறார்கள், சீராட்டுகிறார்கள்! ஐயோ....."

"அழாதே நண்பா—அழாதே! உன் அழுகையைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது."

"மக்கள் நிலவுக்குக் கொடுக்கும் மதிப்பு, பாராட்டு, சீராட்டு....."

"என்னதான் அப்படிக் கொடுக்கிறார்கள்?"


"நண்பா! நிலவை மக்கள் மதிப்பது, பாராட்டுவது, சீராட்டுவது உனக்குத் தெரியும். என்றலும் அதை எண்ணிப் பார்ப்பதுகூட உனக்கு ஏக்கத்தைத் தரும்—துக்கத்தைத் தரும். அத

னுல்தான் மக்கள் நிலவைப் பாராட்டுவதை அறிந்தும் அறியாதவன்போல் பேசுகிறாய். இல்லேயா நண்பா? உண்மை இதுதானே! நமக்குள் என்ன? சொல்—சொல் நண்பா!'' என்று மஞ்சள் நட்சத்திரம் சொன்னதும், வெள்ளி நட்சத்திரம் மௌனமாகியது. அதன் கண்ணில் நீர் துளிர்த்தது. மஞ்சள் நட்சத்திரம் பேச்சைத் தொடர்ந்தது.

''மக்கள், நிலவுக்கு அளிக்கும் பெருமை மகத்தானது. தளர் நடைபோடும் குழந்தையிலிருந்து தடியூன்றித் தள்ளாடி நடக்கும் தாத்தா வரை, ஆண்டியிலிருந்து அரசன் வரை, கதவடைக்கும் கருமியிலிருந்து அள்ளிக் கொடுக்கும் வள்ளல் வரை, பாட்டாளியிலிருந்து பாவாணன் வரை, இவர்கள் மட்டுமா.....?ஒருவனுக்காக வாழும் பத்தினியும், பலரால் வாழும் பரத்தையும், வண்ணத்தையும் எண்ணத்தையும் கலந்து கண்ணுக்குமுன் காட்சியை உருவாக்கும் சித்திரக்காரனும், கல்லுக்கு உருக்கொடுத்து அதில் உயிர் தொடுத்துப் பேச வைத்து அதைக் காணவரும் மனிதர்களேக் கற்சிலேகளாக்கும் சிற்பியும், நாட்டு வரலாற்றைக் கணக்குப் புத்தகமாக்கும் சரித்திரக்காரனும், அதே வரலாற்றைக் கவிதைப் புத்தகமாக்கும் காவியக் காரனும், காலத்தைக் கட்டைவண்டி என்று திட்டிக் கொண்டிருக்கும் சோம்பேறியும், அதே காலத்தைப் பறக்கும் சிட்டு என்று சிறக்கக் கூறும் செயலாளியும், இவர்கள் மட்டுமா...? சூழ்ச்சியை வாளாக்கி வீசும் எத்தனும், அந்த வாள்வீச்சிக்குப் பலியாகும் ஏமாளியும், எண்ணுவதையெல்லாம் எப்போதும் பேசிக் கொண்டிருக்கும் பித்தனும், எப்போதும் எண்ணத்துடனேயே பேசிக் கொண்டிருக்கும் சித்தனும், உடலே மறக்கச் செய்து உள்ளத்தை உவகை உலகில் பறக்கவைக்கும் கலேஞனும், உள்ளத்தைத் துறந்துவிட்டு உயிரைப் பறக்கவைக்கும் கொலேஞனும்,.....பலபடக் கூறுவானேன்... கண் படைத்தோர் எல்லோரும் விண் படைத்த வெள்ளி நிலவுக்கு அள்ளிக் கொடுக்கும் பெருமை அளவிட முடியாதது—ஆமாம்; அளவிட முடியாதது!

''.....உவமை கூறுவோர் சொல்லேக் கவனித்தால் உண்மை புரியும். நிலவில்லாத நீலவானம் போல் என்பார்களே தவிர, விண்மீன் இல்லாத விரிந்தவானம் என்று சொல்லக் கேட்பதில்லே. பெருமை யாருக்கு? நட்சத்திரத்துக்கல்ல—நிலவுக்குத்தான்!

''.....சித்திரப்பாவைபோல் நின்று சித்தம் கவர்ந்த சிங்காரியிடம் தித்திக்கும் முத்தமிழ் காதல்மொழி பேசும் கட்டிளங்காளே, ''நீள் விழியே! உன்முகம் நிலவுதான்!'' என்று கூறும்போது, சிறப்பு நட்சத்திரத்துக்கல்ல, நிலவுக்குத்தான் கிடைக்கிறது! அன்னே அமுதை ஊட்டும்போது, அதோடு அன்பையும் அழகு தமிழையும் கலந்து ஊட்டும்போது, அவற்றையெல்லாம் விலக்கிவிட்டு அடம்பிடிக்கும் சிறுவன், ''அம்மா! அம்மா! அந்த நிலவை எனக்குப் பிடித்துத்தா!'' என்றுதான் கேட்கிறான். நட்சத்திரத்தைப் பிடித்துத்தா—நான் அதோடு விளேயாட வேண்டும் என்று கேட்பதில்லே. பெருமை யாருக்கு? நட்சத்திரத்துக்கல்ல, நிலவுக்குத்தான்!



கைதி நீ-1: சேலம் ஜெயில் தாண்னேசரி; இது என்னு ஜெயிலுண்ணே, பொங்கல துமா ஒரு புது சட்டிகூட தரமாட்டேங்கிருன்களே...


கதாசிரியர்கள் தாங்கள் படைக்கும் காதலர்களே நிலவுவீசும் இரவுக்கு நிச்சயமாக இழுத்து வந்த பிறகுதான் நிம்மதியடைகிறார்கள். திரையில் காவியம் வரையும் ஓவியர்கள் பரந்த வானத்தில் பவனி புறப்படும் பால்நிலவைப் பலவேறு நிலேயில் நீட்டிய பின்னர்தான் திருப்தியடைகிறார்கள். கவிவாணர்களோ விண்ணில் இளம்பும் வெண்ணிலாவைக் கண்ணுல் கண்ட பிறகு தான் கவிதையே ஊற்றெடுக்கிறது என்கிறார்கள். அன்புடை நெஞ்சம் கலந்த பண்புடைக்காதலர்கள் தங்கள் காதலுக்குச் சாட்சியாக உயர்ந்த வானத்தில் உலாவும் நிலாவைத்தான் நிறுத்துகிறார்கள். இலட்சியத்தின் வெற்றியில் இதயத்தைப் பதித்துவிட்ட செயல் வீரர்கள், மண்டிவரும் இருளில் மலரும் நிலாவைக் கண்டு தான் மாண்டுவரும் நம்பிக்கையை மீண்டும் மலரச் செய்து கொள்ளுகிறார்கள். துயரச் சுவைக்கு உயர்ந்த சிகரமாம் பாரிமகளிர் தாம் பாடிய பாட்டில் ''அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்'' என்று நிலவுக்குத்தான் அழியாத பெருமை தந்துள்ளனர்.

''முழுமை நிலா அழகு நிலா முளேத்தது விண் மேலே—அழுத முகஞ் சிரித்ததுபோல்—அல்லி விரிந்தாற்போல்'' என்று கவியரசர் பாரதிதாசன் வானத்தைப் பார்த்ததும் நிலவைத்தான் பாடுகிறார்! அதுமட்டுமா? ''நிலவே! நீ, முன் நடந்ததைக் கூறுவாய்—மெய்யாய்க் கூறுவாய்! இலகு செந்தமிழையும் உன்னையும் கூட்டி இயற்கை அன்னே வளர்த்திலேயோ பாலூட்டி?'' என்று

கொடி வளர்ந்த கதை :



அவர்களும் -- நாமும் !



நட்சத்திரத்தோடு அல்ல, நிலவோடுதான் புரட்சிக்கவிஞர் பேசுகிறார். வான்புகழ் வள்ளுவர் கூட நலம்புனைந்துரைக்கும் அதிகாரத்தில் நிலவின் எழிலைத்தான் பெரிதாய்க் கூறுகிறார். நட்சத்திரத்தைப் பற்றியும் வள்ளுவர் கூறுகிறார். என்றாலும் அதனால் நட்சத்திரங்களுக்குப் பெருமையல்ல, சிறுமைதான் கிடைக்கிறது. மண்ணிலுள்ள பெண்ணின் முகத்தையும் விண்ணிலுள்ள வெண்ணிலவையும் பார்த்து, ''பெண்ணின் முகம் எது?—வெண்ணிலவு எது?'' என்று தங்களால் வேறுபாடு தெரிந்துகொள்ள முடியாதால்தான் நட்சத்திரங்கள் கலங்கின என்று வள்ளுவர் கூறும்போது, நட்சத்திரங்கள் வேறு பாட்டுணர்வு தெரியாத முட்டாள்களாகின்றன! அந்தோ.....மக்கள் நிலவுக்கு அளிக்கும் பெருமை மகத்தானது—மகத்தானது!'' என்று மஞ்சள் நட்சத்திரம், குற்றுலத்து நீர் வீழ்ச்சியைப் போல் குபுகுபுவென்று பொழிந்து கொண்டிருந்தது!...''போதும்—போதும்!'' என்று வெள்ளை நட்சத்திரம் கையால் தன் இருசெவிகளையும் பொத்திக்கொண்டு கத்தியது! மஞ்சள் நட்சத்திரம் திடீரென்று பேச்சை நிறுத்தி மௌனமாகியது.

மண்ணுலக மக்கள் நிலவுக்கு என்தான் இவ்வளவு மதிப்பு தருகிறார்கள் என்று எண்ணி, மஞ்சளும் வெள்ளியும் மண்டையை உடைத்துக் கொண்டன. எண்ணி எண்ணி இறுதியில் இரண்டு நட்சத்திரங்களும் ஒரு முடிவுக்கு வந்து சேர்ந்தன. மண்ணுலகிற்கே சென்று மக்களிடையே உலவி, நிலவுக்கு அளிக்கும் பெருமை எதனால் வருகிறது என்பதை ஆராய்ந்து உணர வேண்டும் என்று மஞ்சளும் வெள்ளியும் முடிவு செய்தன. முடிவு செய்துவிட்டால் போதுமா? திட்டத்தைச் செயலுருவாக்குவதற்கு எண்ணி எண்ணி மீண்டும் ஒரு திட்டம் போட்டன. கணநேரம்தான்—திடீரென்று மஞ்சளும் வெள்ளியும் உருவில் குறைந்துகொண்டே வந்து இறுதியில் இரு மின்மினிகளாயின. அந்த மின்மினிகளும் திடீரென்று அவ்விடத்தில் மறைந்து போயின! ஆமாம், அவை மண்ணுலகத்திற்குப் போய்விட்டன—நிலவுக்குக் கிடைக்கும் மதிப்பின் மூலத்தை ஆராய்வதற்கு அவை மண்ணுலகம் போய்விட்டன.

மண்ணுலகத்திலே.....

அகன்று விரிந்த வீதியைப்போல் வெண்மலர் விரிந்த ஆறு படுத்துக்கிடந்தது. தண்ணீர் வற்றிய—வெண்மணல் விரிந்த அந்த ஆற்றில் சின்னஞ்சிறு கூட்டங் கூட்டமாக மக்கள் கூடியிருந்தனர்; பந்தி பந்தியாகக் குந்தியிருந்தனர்! பாடிவரும் நிலவு விண்ணில் உலவிக் கொண்டிருந்தது. ஓடிவரும் தென்றல் மண்ணில் ஆற்றில் கூடியிருந்த மக்கள் உடலோடு குலவிக் கொண்டிருந்தது. கூடியிருந்த அந்த மக்கள், ஆம்—நிலாச்சாப்பாடு சாப்பிடவே அங்கு வந்திருந்தனர். சாப்பாடு தொடங்கியது.

இரு மின்மினிகள் அந்தக் கூட்டத்தில் அவர்கள் தலைக்கு உயரே சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன.

''அடடா! அருமையான சாப்பாடு. அருமையான சாப்பாடு!'' என்று ஒருவன் சொன்னன். பேசிக்கொண்டே அவன் சாப்பிட்டான். சாப்பிட்டுக் கொண்டே அவன் பேசினன். ''இதைச் சமைத்தவர் கைக்குச் சந்தனம்தான் பூசவேண்டும். என்ன அருமை! சாப்பாடு என்ன அருமை!'' என்று பூரித்துப் போனன் அவன். பக்கத்திலிருந்தவன் உடனே பளிச்சென்று பதிலளித்தான்: ''அருமை, சாப்பாட்டில் இல்லையடா, சாப்பாட்டில் இல்லை அருமை! இலையிலிருக்கும் சாப்பாட்டின் அருமை இந்த இடத்தில்தான் இருக்கிறது. சாப்பாட்டின் சுவை, சமையற்காரனுடைய திறமையால் அல்ல, வானத்துச் சந்திரனின் அருமையால்தான்! இது நிலாச் சாப்பாடு அப்பனே! தெரிகிறதா?'' என்று சொல்லிச் சிரித்தான் அவன். எல்லோரும் கடகடவென்று சிரித்து அந்தப் பதிலை ஒத்துக் கொண்டனர்.

''அதனால்தான் நிலவைப் போற்றுவோம்; நிலவைப் போற்றுவோம் என்று இளங்கோவடிகள் பாடினார்!'' என்று அப்பளத்தைக் கடித்துக் கொண்டே ஒரு சீலம்புச் செல்வர் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

இந்தப் பேச்சையெல்லாம் இதுவரை கேட்டுக் கொண்டிருந்த அந்த இரண்டு மின்மினிகளும் அவ்விடம்விட்டு விரைவாகப் பறந்து சென்றன.

இரு மின்மினிகளும் சிறிது தொலைவு வந்ததும் ஓர் இடத்தில் திடீரென்று நின்றன. சில இரட்டை மாட்டுவண்டிகளைச் சில மனிதர்கள் பூட்டிக் கொண்டிருந்தனர். ''நிலவு கிளம்பி நெடுநேரம் ஆயிடுச்சப்பா—இப்போ வண்டியைக் கிளப்பினால்தான் விடிய விடிய ஊர் போய்ச் சேரலாம். உம்—சீக்கிரம்!'' என்று ஒருவன் வண்டியைப் பூட்டிக் கொண்டே அடுத்த வண்டியைப் பூட்டிக் கொண்டிருப்பவனைப் பார்த்துச் சொன்னன்.

சிறிது நேரத்தில் மாடுகளின் கால்கள் இடம்விட்டுப் பெயர்ந்தன—சக்கரங்கள் உருளத் தொடங்கின. எல்லா வண்டிகளும் கிளம்பி விட்டன. மாடுகளின் கழுத்திலிருந்த சலங்கைகளிலிருந்து 'கலகல' நாதம் உதிரத் தொடங்கியது. வண்டிக்காரர்களின் நாவிலிருந்து தெம்மாங்கே கிளம்பியது! ''நிலாவுக்கு ஒரு கும்பிடு போடனும் அண்ணேன்! இந்த நிலா இல்லாவிட்டா நாமெல்லாம் வண்டியிலே இராப்பயணம் தொடங்கியிருக்க முடியுமா? அருமையான நிலா

அழகான நிலா!'' என்று மாட்டை ஒரு கையால் தட்டிவிட்டுக் கொண்டே கூறினன். அதுவரை அங்கு சுற்றிக்கொண்டிருந்த மின்மினிகள் வேறிடம் நோக்கிப் பறந்தன.

இரவு மேய்ச்சலுக்காக ஒரு சின்னஞ்சிறு மாட்டுமந்தையை இரண்டு மூன்றுபேர் ஓட்டிச் சென்று கொண்டிருந்தனர். குதிப்பும் பாட்டுமாக அவர்கள் போய்க் கொண்டிருந்தனர். மின்மினிகள் அவர்களையும் தொடர்ந்தன.

வானத்தில் நிலவு ஊர்ந்து கொண்டிருந்தது. திறந்த வயல் வெளியில் சிறந்த அரங்கு ஒன்றில் கூத்து — அல்ல அல்ல — உயர்ந்த நாடக மொன்று நடந்துகொண்டிருந்தது. வயல் வெளி நிறைய மக்களும், மக்கள் நிறைய மகிழ்ச்சியும் பொங்கி வழியக் கண்ட மின்மினிகள் இரண்டும் அங்கேயும் சற்று நேரம் சுற்றிவந்தன.

வேறொரு இடத்தில் வீட்டின் முன்புறம் நின்று கொண்டு தங்கச்சிலை போன்ற தாய் ஒருத்தித் தந்தச்சிலை போன்ற குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு அதற்கு, வெள்ளிக் கிண்ணத்திலிருந்து பால் சோற்றை வானத்திலிருந்த பால் நிலாவைக் காட்டிய வண்ணம், ஊட்டிக் கொண்டிருந்தாள். அந்த இரண்டு மின்மினிகளும் அங்கேயும் சற்று நேரம் சுற்றி வந்தன.

இன்னொரு இடத்தில் நிலவில் படகில்—காதலர் உலவிக் கொண்டிருந்தனர், மற்றொரு இடத்தில் தெருத் திண்ணையில் பெரியவர்கள் அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். வீதியில் நிலவொளியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அங்கெல்லாம் அந்த இரண்டு மின்மினிகளும் சுற்றி வந்தன; அவர்கள் நிலவைப் பற்றிப் பேசியதையெல்லாம் உற்றுக் கேட்டன. அது மட்டுமா? கடற்கரையில் நிலவில் உலவ வந்தவர்கள், சோலையில் மகிழ்ந்திருக்கக் கூடியவர்கள், புன்செய் நிலத்தில் ஏர் செலுத்தும் உழவர்கள், ஏற்றம் இறைக்கும் மனிதர்கள் எல்லாருடைய பக்கங்களிலும் அந்த மின்மினிகள் இரண்டும் சுற்றிப் பறந்தன. நிலவின் உலகிலே எங்கெங்கே மனிதர்கள் கூடியிருந்தாலும், எத்தகைய செயலிலே அவர்கள் ஈடுபட்டிருந்தாலும், அங்கங்கெல்லாம் அவர்களைச் சுற்றிப் பறந்தன அந்த மின்மினிகள்; நிலவைப் பற்றி அவர்கள் பேசியதெல்லாம் உற்றுக் கேட்டன.

இறுதியில்.....

இரண்டு மின்மினிகளும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. ''நிலவின் புகழுக்குக் காரணமென்ன என்பது புரிகிறது'' என்பதை அவற்றின், பார்வை ஒன்று மற்றொன்றுக்குப் புரிய வைத்தது. விடுவிடுவென்று அந்த மின்மினிகள் இரண்டும் உயரே பறந்தன—கண் நேரத்தில் மறைந்தன! வான்த்தில் காலியாக இருந்த அந்த இரண்டு இடங்களிலும் மஞ்சள் நட்சத்திரமும் வெள்ளி நட்சத்திரமும் வந்து தோன்றி, ''அப்பாடா! மண்ணுலகப் பயணம் முடிந்தது. எண்ணத்தில் இருந்த இருள் விடிந்தது!'' என்று ஒரே குரலில் சொல்லிப் பெரு மூச்சு விட்டன.

''நண்பா! மண்ணுலக மக்கள் சிறிய நிலவைப் போற்றுகிறார்கள். பெரிய நட்சத்திரத்தைப் போற்றுவதில்லை. காரணம் புரிந்ததா?'' என்றது வெள்ளி! மஞ்சள், சஞ்சலத்தோடு உண்மையைச் சொல்லியது:

''அலைகடலில் மலரும் கதிரவன் மலைவாயிலில் விழுந்து மறைந்த பிறகு மண்ணுலகில் இருள் மண்டிவிடுகிறது. மக்கள் திண்டாடுகிறார்கள். மலர்கிறது நிலா! கலைகிறது காரிருள்! மக்கள் கொண்டாடுகிறார்கள் நிலவை! இப்படி ஒரு சிறுவன் படித்துக் கொண்டிருந்தானே—இதுதான் உண்மை!'' இதைக் கேட்ட வெள்ளி இறுதியாகப் பேசிற்று:

''ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் கூடினாலும் உலகத்தின் இருள் விலகுவதில்லை. ஆனால் ஒரே ஒரு நிலவு எழுந்தால் போதும்; ஒடி ஒளிகிறது இருள்—ஒளியில் குளிக்கிறது உலகு! நிலவின் ஒளி—சொந்தமாக இல்லாவிட்டாலும் இரவலாக இருந்தாலும், பாருக்குப் பயன்தருகிறது—பரவசம் தருகிறது—எனவே பாராட்டு கிடைக்கிறது! பெரிய நட்சத்திரத்தை விட்டு விட்டுச் சிறிய நிலவை மக்கள் போற்றுவதன் உண்மை இதுதான்!.....''

வெள்ளி திடீரென்று பேச்சை நிறுத்தியது. மண்ணுலகிலிருந்து ஓர் இனிய இசை காற்றில் வந்து கொண்டிருந்தது. இரண்டு நட்சத்திரங்களும் இமையடித்துக் கொண்டே அந்தப் பாட்டைக் கூர்ந்து கேட்டன.

''முழுமை நிலா அழகு நிலா
முளைத்தது விண்மேலே
அழுதமுகஞ் சிரித்ததுபோல்
அல்லி விரிந்தாற்போல்!...''

★ ★ ★ ★ ★ ★ ★



ஆச்சாரியாரின் சிரார்த்தம்

வருகிறது பொங்கல் புது நாள்! புத்தாண்டின் முதல் நாள்! பொன் கொழிக்கும் நன் னாட்டின் விழாநாள்! தமிழர் வாழ்வில் ஓர் இன்பநாள்! தமிழ கத்தின் பட்டி தொட்டிகளி லும், நாடு நகரங்களிலுமே மட்டுமின்றி, கேரள கன்னட ஆந்திர வட்டாரத்திலும் இந் நாள் திருநாளேயாம்! தென் னாட்டார், திராவிடத்தின் கண் மணிகள் சென்று வாழும் இட மெல்லாம், வடநாட்டிலும், கடல் கடந்த கண்டங்களிலும், தீவுகளிலுங்கூட இவ் விழா கொண் டாடப்படுகிறது! வாழ்க அம்மக்கள்! வளர்க அவர் தம் இன்பம்!!

இந்நாளில், விழாவிலே மகி ழும் எல்லோரும் செய்யத் தக்கதும், சிறந்த பயன் நல்கக் கூடியதும் யாதென எண்ணலா னேன்.

''தமிழரின் தனி விழா தவிர்த்து வேறு பண்டிகை எதையும் ஏற்கமாட் டோம் என்னும் உறுதி கொள்ளட்டும்!'' என் றெண்ணினேன். பிற பண் டிகைகள் ஒழிந்த பின்னர் இவ்வுறுதிக்குப் பொருள் இருக்காதே என்ற ஐயம் பிறந்தது.

''தமிழ் மொழி ஒன்றைத் தவிர பிற மொழி எதுவும் தமிழ கத்தில் ஆதிக்கம் செலுத்த விடோம்'' என்று ஒவ்வொரு வரும் முழங்கட்டும் என்றெண் ணினேன். அந்நிலை தோன்றிய பின்னர்...?-என்ற கேள்வி பிறந் தது.

''திராவிடநாடு திராவிட ருக்கே என்னும் சூள் உரைத்து, உரிமைப் போர் தொடுக்க உறுதி கொள்ளட்டும்'' என்று கருதலானேன். சில ஆண்டு களில் நாடு நமதாகிவிடும்! அதன் பின்னரும் இது பொருந் துமா?—என்ற வினு எழுந்தது.

இவை ஒவ்வொன்றும், ஒவ் வொருவரும் எண்ணிச் செய லாற்ற வேண்டிய கொள்கை கள்! பொங்கல் நாளில் ஒவ் வொருவர் உள்ளத்திலும் பூத் திட வேண்டியவை. ஆனல் எந்நாளும், எக்காலமும் மேற் கொள்ளத் தக்கதான ஒன்றை, இந்த விழா நாளில் கருதச் செய்ய வேண்டும் என்ற அவா மேலும் வளர்ந்தது.

எந்நாளும் பயன்படத்தக்கது எது? எவருக்கும் எந்நிலையிலும் துணையாகத்தக்கது எது? காலம் பல சுழன்றாலும், மாற்றங்கள் பல நிகழ்ந்தாலும், மனிதனை மனிதனுக வாழச் செய்ய வல் லது எது?—என்னும் கேள்விகள் முகிழ்ந்தன. 'அறிவு'—'அறிவு' என்பதே விடையாகக் கிடைத் தது.

''அறிவைப் போற்று''— என்றது நா. 'அப்படிக் கூறி னுல் போதுமா' என்றது மனம். ''அறிவைப் போற்றுதல்''— வழிமுறை அறியாதவர்களாலும், கல்வி கேள்வி பெருதவர்களா லும், வளமும் வாய்ப்பும் அற்ற வர்களாலும், இயல்வதில்லை என்பதோடு; அதன் இயல்பை யும் விளக்கிக் கொள்ள முடி யாதே என்று கவன்றேன்.


எனவே அதைவிடத் தெளி வாக, அதே நோக்கத்தை நிறை வேற்றும் நல்வழியாக எதைக் கூறலாம் என்றெண்ணலா னேன்! எண்ணம் வீணுக வில்லை! திருக்குறளைப் படித் தால் அறிவைப் போற்று தல் கூடும் என்பது புலனு யிற்று. எனவேதான் 'திருக்குறளைப் படி' என்று கூறமுற்பட்டேன் உடனே தடுக்கிட்டது என் உள்ளம்!

'திருக்குறளைப் படி'- இப்படி அண்மையில்

பேராசிரியர்
க. அன்பழகன் M.A

ஒருவர் கூறியது என் நினைவிற்கு வந்தது, ஆம், சொன்ன வரை நினைத்தாலே — நடுக்கம் ஏற்படும் நல்லறிவாளர் எவருக்கும்.

தினமணி 'கதிர்' தீபாவளி மலரில்தான், "திருக்குறளைப் படி" என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை தீட்டி இருந்தார் முன்னாள் கனம் ஆச்சாரியார். அந்தக் கட்டுரையிலேதான் திருக்குறள் கருத்தையும், உலகியல் உண்மையையும் திரித்துக்கூறி, திதிக்கும் சிரார்த்தத்திற்கும் ஆதரவு தேடியிருந்தார்.



ஆச்சாரியார், திதியையும், திவசத்தையும் கைக்கொள்வதையோ, ஆதரிப்பதையோ, அல்லது விரும்பினால் தனக்கே கூடத் தானே சிரார்த்தம் செய்து கொள்வதையோ யாரும் கண்டிக்கவில்லை, தடுக்கவில்லை! ஆனால், சிரார்த்தம், திதி, திவசம் ஆகியவைகளை எல்லோரும் செய்துவர வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக, திருக்குறளில் காணப்படும் தெய்வ நம்பிக்கையைத் துணைக்கழைத்து அதன் மூலம் திருக்குறளையே தமது கொள்கைக்கு ஆதாரம் போலக் காட்டியுள்ள போக்கையே கண்டிக்க வேண்டிய வர்களாக இருக்கிறோம்! திதி செய்யச் சொல்வதற்காகத் திருக்குறளைப் படிக்கச் சொல்வதை என்னவென்று எண்ணுவது என்பதுதான் தெரியவில்லை! பேதமை, புல்லறிவாண்மை; நயவஞ்சகம், நச்சு மனப்பான்மை, கண்ணன்காட்டிய வழி இவற்றுள் எதுவோ, எல்லாமோ—அதுவாதல் வேண்டும். அந்தப் பழிக்கஞ்சாக் கட்டுரையைக் கண்டதாலேயே— 'திருக்குறளைப் படி' என்று கூற எண்ணியதும், நான் துணுக்குற்றேன்.

அதிலேதான்— தந்தைக்கு மகன் செய்யும் கடமை 'திதி' என்பதை வற்புறுத்த — ஒரு கதை புனைகிறார் அந்த அரசியல் பாகவதர்.

"புவனேசுவரி என்ற ஊரில், சுப்பராயன் என்னும் வாலிபன் ஒருவன், நினைவற்ற இளமையிலேயே பெற்றோரை இழந்து விட்டவன், ஊரார் சொன்னதைக்கேட்டுத் தன் தகப்பனார் இப்படித் தனக்கு வேண்டிய தெல்லாம் வைத்துவிட்டு மேலுலகம் சென்றாரே என்று, தவறாமல் தகப்பனாருக்கு ஆண்டுதோறும் திதி செய்துவந்தான்.

அப்பொழுது அவன் வீட்டுக்கு விருந்தினராக வந்த ஒரு பண்டிதர் சொன்னாராம், "என்னத்துக்காக இந்தத் திதி செய்கிறாய்? உனக்குத் தகப்பனார் என்று ஒருவர் இருந்ததில்லை, யாரோ ஒருவர் சொன்னதைக் கேட்டு வீண்செலவு செய்கிறாய். தகப்பனார் என்கிற கட்டுக் கதையை நம்பாதே", என்று.

அந்த இளைஞனோ, "இந்த வீட்டைத் தந்தவர் அவர் தானே? அவர் கட்டித்தானே இது உண்டாயிற்று! இந்தப் பசுமாடு எப்படி வந்தது? இந்தப் பணம் எப்படிக் கிடைத்தது? இவையெல்லாம் — என் தந்தை இருந்து — தேடிக் கொடுத்ததால்தானே?" என்றானும். அந்தப் பண்டிதரோ, வீடு கல்லாலும், களிமண்ணாலும் ஆயிற்று, கொத்தன் கட்டினான்; மாடு சந்தையில் விலைக்குக் கிடைக்கும்; பணம், அரசாங்கம் முத்திரை போடுவதால் உண்டாகிறது; இதனால் (தகப்பன் உண்டென்று) ஏமாந்து போக வேண்டாம்! ஊரார் சொல்லும் கதையைக் கேட்டு யாரும் ஏமாந்துபோக வேண்டியதில்லை" என்றாராம்.

அந்த வாலிபன்—சுப்பராயன் — தந்தை இருந்ததைப் பற்றிச் சந்தேகம் கொண்டு, பண்டிதர்சொல்வதை நிச்சயம் என்றெண்ணி, சிரார்த்தம் செய்வதை நிறுத்திவிட்டானாம்!

தந்தை என்றொருவர் இருக்கவில்லை என்று சொல்லவந்த பண்டிதர் தான், இடையிலே அந்த வாலிபனைப் பார்த்துச் சொல்கிறாராம், "நீபடித்துக் கொஞ்சம் அறிவு சம்பாதிக்க வேண்டும். திருக்குறளையாவது படி" என்று,

கதை எப்படி? கற்பனை என்ன அற்புதம்! இவர் தாம் அதி நுட்ப அறிவாளி என்று போற்றப்படும் ஆரிய மேதை; போதாக்குறைக்கு கல்கியின் குரு, அறிவு விளக்கத்திற்காக எழுதப்படும் கட்டுரையைத் தான்—இங்கே கதையாக்கியுள்ளார் — சொல்வதை முறையாகச் சொன்னால் அதிலுள்ள "ஓட்டை உடைசல்கள்" வெளிப்பட்டுவிடும் என்பதால் முதலில் "விருந்தினராக ஒருவர் வந்தார்" என்று தொடங்கி பின்னர்தான் அவரை ஒரு பண்டிதர் என்று (இடையிலே) கூறுகிறார். தொடக்கத்திலேயே பண்டிதர் என்று கூறிவிட்டால், ஏன் ஒரு பண்டிதனை இவர் இப்படிச் சித்தரிக்கிறார் என்று ஐயம் எழுந்துவிடுமே!

ரிக்கிறார் என்ற கேள்வியும், வொறுப்பும், எற்படுமே என் றெண்ணியே சிறிது சிறிதாக— தம் உள்ளத்தை வெளியிடுகிறார். உண்மையில்—இந்தக் கதையை சிந்தித்தால், பண்டிதன் ஒரு வன் பாமரனே ஏமாற்றினன் என்றே, பண்டிதனையே ஒரு முட்டாள் என்றே சித்தரித்துக் காட்டுவதுதான் இதன் நோக் கம் என்பது புலப்படும்.

இன்று நாட்டிலே உள்ள தமிழாசிரியர்களில் பெரும்பா லோரும் ''திருக்குறளைப் படி'' என்று, குரலெழுப்பி வருவதை உலகறியும். அந்தக் குரலுக்குக் குறை கற்பிப்பதும், அவர் களது உயர்ந்த நோக் கத்தை இழிவாக்கிக் காட்டுவ தாமே, இந்த எடுத்துக் காட்டுச் செய்தியிலே, ஒரு ''பண்டித ரை''ப் புகவிட்டிருப்பதாகும். இனி அச்செய்தியைக் கவனிப் போம். தந்தை இருந்தாரா? என் ற கேள்வியே யாருக்கும்எழாது. தமிழருக்கு நிச்சயமாக அந்த ஐயம் எழவே இடமில்லை. ஆரி யருக்குங்கூட, 'நியோகோ'என் னும் பிள்ளை பெற்றுக் கொள் ளும் முறையும், புத்திர கா மேஷ்டியாகம் செய்யும் வழக்க மும் இருந்ததால் — யார் தான் உண்மைத் தந்தை என்பது, வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாமே தவிர — தந்தை ஒருவன் இருந்தான், என்பது குறித்து ஐயம் ஏற்பட இட மில்லை; அற்பருக்குக்கூட வீனே யக்கூடாத இந்த ஐயம் ஆச்சா ரியாருக்கு வினைந்தது தான் ஏனோ?

சிரார்த்தம் செய்து வந்த இளை ஞன், பண்டிதரின் பேச்சைக் கேட்டு சிரார்த்தத்தை நிறுத்தினை ஞன்! அவன்—தன் தகப்பனார் வேண்டியதெல்லாம் வைத்து விட்டு மேலுலகம் சென்றாரே என்று தவருமல், திதி செய்தா னும். வேண்டியதை யெல்லாம் வைக்காமல் போயிருந்தால் செய்திருக்க மாட்டான் போலும்! அல்லது மற்றவர் களுக்கு அப்படி நேர்ந்தால் அவர்கள் திதி செய்யா விட் டால் அது குற்றமாகாது என் பதை ஆச்சாரியார் ஒப்புக் கொள்வார் போலும்! போகிற தகப்பனார் மேலுலகந் தான் போனார் என்பதும் அவனுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. அவ்வளவு தெரிந்தவனுக்குத் தான் — பண்டிதரின் மயக்க மொழியால்—தகப்பனார் இருந் ததே சந்தேகமாகி விட்டதாம்.

தந்தை இருந்தார், இறந்தார்- தாய் மறைந்தார்— என்பதா லேயே ''திதி'' எப்படி அவசிய மாகும் என்ற கேள்வி எழாமற் போகாது. 'திதி' போன்ற சடங் குகள் செய்வது, பெற்றோரை நினைவில் வைத்து வருவது நல் லது என்கிறார். பெற்றோரை நினைவில் வைத்து வருவது நல் லது தான்-பெரும்பாலோருக்கு! ஆனால் ஒழுக்கமும் — நற்பண் பும் இல்லாத, தீய செயலுக்கு உடந்தையாக நின்ற பெற் றோர்கள் ஒரு சிலரேனும் இருப் பரன்றே! அவர் தம் பிள்ளைகள் அவரை நினைவில் கொள்வது எப்படி நற்பயன் அளிக்க முடி யும்?—மேலும், நினைவில் கொள் வதென்பது, அச்சடங்குகள் செய்தால்தான் இயலுமா? வேறு வழியாக நினைவில் கொள் ளுதல் இயலாதா? பல்வேறு சம யங்களில் பெற்றோரைப் பற்றிய நினைவு தோன்றுவதில்லையா? பெற்றோருக்கு விருப்பமான பல வற்றை மக்கள் பல்வேறு சம யங் களிலும் நிறைவேற்றுவ தைத்தான் நாம் கண்டதில்லை யா? தந்தையின் நினைவால் பள் ளிக்கூடம், தாயின் பெயரால் மருத்துவ மனை மற்றும் அறச் செயல்கள் எல்லாம் - எதைக் காட்டும்? இவை யெல்லாம் — நன்றியாகாதோ? சிரார்த்தமும்- திதியும் தான் நன்றியின் அடை யாளமாமோ?

இந்தக் கற்பனையால் மக்க ளிடம் உண்டாக்க விரும்பும் எண்ணம் தெளிவாகிறது. ''இன்று பண்டிதர்கள்—பாமர சுப்பராயன்களைத் தேடிப் பிடித்து, ''திருக்குறளைப் படி'' என்ற திரையை விட்டுக் கொண்டு, 'தந்தை இல்லை' என் பது போன்ற பொய்யான கருத் தைப் பரப்பி வருகின்றனர்?'' என்று தூற்றுவதே அவர் நோக் கம். அதை நேரடியாகச் சொல்ல அவருக்கு நெஞ்சு உர மில்லை; நேர்மை இல்லாத விடத்து 'உரம்' எப்படி இருக்க முடியும்?

''நீ படித்துக் கொஞ்சம் அறிவு சம்பாதிக்க வேண்டும். திருக்குறளையாவது படி'' என்று சொன்னாராம் அந்தப் பண்டிதர். எந்தப் பண்டிதரும்—'குறளை யாவது படி'என்று கூற மாட் டார், அவர் படித்தவராஞல்! வேறு எந்நூலும் அதற்கிணை யில்லாததாலே. அதையாவது படி என்று கூறுவது எப்படி இயல்பாகும்? வேறு மத ஏடு களையே பெரிதென மதிக்கும் மனப்பான்மையினர் வேண்டு மானால். அவற்றை மதிக் காத ஒருவனிடத்துப் பேசும்போது-தமது, கருத்தை வலியுறுத்த அது கருவியாகும் என்று கருதினால்—'திருக்குறளை யாவது படி' என்று கூறுவர். ஆனால்—மதவாதியல்லாத ஒரு பண்டிதர் ஏன் அப்படிக் கூறப் போகிறார்? திருக்குறளை—மட்ட மென்று எண்ணுபவராஞல் தான் அப்படிக் கூறமுடியும்!

எனவே ஆச்சாரியார் காட்டு வது போல், குறளையாவது படி, என்று கூறுபவர் அல்ல சீர் திருத்த வாதிகள். மிகத் தெளி வாகவே கூறுகின்றனர்—மத நூல்களைப் படிப்பது பயன் தராது—எனவே குறளைப் படி என்று. ஆச்சாரியார் அங்கே நிறுத்தவில்லை, தமது அறிவுரை யை. ''தந்தைஉண்டு!'' என்னும் உண்மையைத்தாம் நிலைநாட்டி விட்டதாலேயே. 'கடவுள் உண்டு' என்பதையும். அத னோடு இணைத்து நிலைநாட்ட முற் படுகிறார்.

ஐயோ, பாவம்! தள்ளாத வயதில்—சுடுகாடு ''வா, வா'' என்றும், நாடும் வீடும் ''போ, போ'' என்றும் சொல்லும் காலத்தில், 'கடவுள் இல்லை' என்று யாரோ...சிலர் சொல்லு வதை விட்டுவைக்கக் கூடாது என்று தீர்மானித்து—கடவுள் உண்டு.—அதிலும் திருவள்ளு


வர் கடவுள் உண்டு, என்று நம் பினர் எள்பதற்கு ஆதாரங்கள் பல காட்டப் புகுகின்றார். திரு வள்ளுவரை—நாத்திகர் என்று யார் சொன்னார்களோ தெரிய வில்லை!

வள்ளுவர் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் இறை இலக்கணமாகக் கூறியவற்றை விவரித்து—அவற்றை ஒத்த கருத்துக்களாக "நம்மாழ்வார் பாசுரத்தில்காணப்படுபவற்றை யும் எடுத்துக் காட்டி, அத் துடன் 'கீதா வாக்கியங்களை'யும் இணைத்து— அப்படிப் பட்ட இறைவனை வள்ளுவர் வழி பட்டார் என்பதைச் சொல்லி மகிழ்கிறார். இடையிலேயே— "இந்தப் பாட்டுக்களைப் படிக் கும் போது, திருவள்ளுவரும் நம்மாழ்வாரும் ஒன்றுகப்பேசிக் கொண்டே பாடினர்கள்போல் தோன்றுகிறது"— என்றும் பெருமைப்படுகின்றார்.

உண்மையில், வள்ளுவருக் குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர் நம்மாழ் வார். குறள் கருத்தை அப் படியே தாமும் மேற்கொண்டு பாடியிருப்பது இயல்பேயாகும். மேலும் வள்ளுவர் மதங்கட் கிடையிலே பொதுமையான கொள்கையை ஆய்ந்து கண் டவர். அவரது கொள்கையின் பொதுமையினால், அவை பின் னர் எல்லாச் சமயத்தாராலும் கைக்கொள்ளப் பட்டிருப்பது இயற்கை. இரண்டு பேருக்கும் உள்ள கொள்கை வேற்று மையை அறிய விரும்பினால் நம் மாழ்வார் பாசுரத்தில் வரும், கொள்கை—கருத்துக்களில். எவை எவை திருக்குறளில் இடம்பெற வில்லை என்று காண வேண்டும். மாறுக—நம்மாழ் வரைப் போல வள்ளுவர் என்று எண்ணவும், இருவரும் ஒரு காலத்தவர் என்று ஐயுறவும், இருவருக்கும் வேற்றுமை இல்லை என்று கருதவும் இட மாகும்படி, இருவரும் பேசிக் கொண்டே பாடினர்கள் போல் தெரிகிறது என்பது உண்மை யைக் குழப்புவது ஆகும். நல் வாய்ப்பாக, வள்ளுவரும், கண் ணனும் பேசிக்கொண்டேதான் குறளும், கீதையும் இயற்றினர் என்று கூறவில்லை, இந்த மாம் பலத்து முனிவர்.

மேலும், கடவுள் வழி பாட்டை வற்புறுத்த, 'வகுத் தான் வகுத்தவகை யல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த் தல் அரிது"...என்னும் குறளைக் காட்டுகின்றார். அதற்குப் பரிமேலழகர் வரைந்துள்ள உரை,

'ஐம்பொறிகளான் நுகரப் படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும். தெய்வம் வகுத்த வகையானல் லது நுகர்தலுண்டாகாது." என்பதாகும். வகுத்தான்-என்



பது இறைவன் என்றார் ஆச்சாரி யார்; தெய்வம் என்பது இறை வனைக் குறிக்கும் என்பதைப் போன்றே இயற்கையையும் குறிக்கும். மேலே—வகுத்தான் —என்பது 'ஊழ்' என்னும் நியதி யைச் செலுத்துபவன், என்ற பொருளில் என்பது அவர் கருத்து. ஆனால் 'ஊழ்' என்பது என்ன என்பது ஆராயப்பட வேண்டும்.

'ஊழ்' என்பது "இருவினைப் பயன் செய்தவனையே சென் றடைவதற்கான நியதி'! ஊழ், பால், முறை, உண்மை, தெய் வம், விதி—என்பன ஒரு பொருட்கிளவி, என்றார் பரிமே லழகர், இதனால் ஊழ் விரிந்த பொருளுடையது, சிறிது சிறிது வேறுபட்ட பலவற்றை உள் ளடக்குவது என்று உணரலாம். இவற்றுள் உண்மை, முறை, நியதி என்பவற்றின் பொருள் தெளிவு. தெய்வச் செயல் என்று கூறும்போது—எதிர் பாராதது (ஆக்சிடென்ட்) என்ற பொருளில் வழங்கும். விதி — என்பது இரு வினைப் பயனைக் குறிப்பது என்று கூறப்படினும் — ஒழுங்கு, நிகழ்ந்து செல்லும் ஆறு, வழி - என்ற பொருள்களையும் தரும். பால்—என்பது விதியைக் குறிப் பிடுவதோடு பகுப்பையும், (நன்மை, தீமை,) இயற்கையை யும் குறிக்கும். எனவே—ஊழ் என்றால் குறித்த ஒரு தன்மை யையோ, ஒரு பொருளையோ, ஒரு நிலையையோ மட்டும் குறிக் கும் என்று கொள்ள வியலாது.

மேலும், 'ஊழ்' என்பது எவற்றைக்குறிப்பிடப் பயன் பட்டுள்ளது என்பதை நோக்கு வோமானால், அதன் பொருள் தெளிவாகும். "பிறப்பினால் விளையும் இயல்பு, (குணம், தன்மை, ஆற்றல் வேறுபாடு கள்); சூழ்நிலையின் விளைவு (பயன்); இயற்கையின் ஆற் றல்; மனிதனின் அறிவு ஆற்ற லுக்கு அப்பாற்பட்ட (எல்லாக் காலங்களிலும் அவனுடைய முயற்சிக்கு உட்படாத) பொதுத் தன்மை; எதிர்பார தவை; எதிர்பார்த்தும் நிறை வேறுதவை" என்பவற்றையே ஊழ் குறிக்கின்றது. இதனை, இறைவன் என்று கூறுவது எப் படிப் பொருந்தும்? 'இறை வன்' என்றே கொள்ளினும் அதனால் வழிபாடு செய்வது தான் என்ன பயனைத் தரும்?

உண்மையில் அக்குறளின் கருத்து—வகுத்தான் என்ப தற்கு — இறைவன் என்பது அன்று. 'வகுத்தான் என்ப தற்கு, உலகியலை நன்குணர்ந்து ஒவ்வொருவரும் இன்புற்று வாழும் வழி இன்னது என்று தெளிந்து, அறம் பொருள், இன்பங்களை வகுத்துரைத்த வன்—என்றே பொருள் தரும். அதன்படி, அக்குறள்-கோடிப்

பொருள் ஈட்டினார்க்கும் (மிகுதியான பொருள்களை முயன்று சேர்த்தவருக்கும்) அறம், பொருள், இன்பங்களை இன்னது என்று வகுத்த அறவோன் அவற்றை வகுத்துக்காட்டிய முறையே அல்லாமல், வேறு வகையினால், அந்தப் பொருள்களை (அதனால் ஆம் பயனை) துய்த்தல் (நுகர்தல்) இல்லை—என்றே பொருள் தரும்.

மிகுதியான பொருள் சேர்க்கும் வாய்ப்பு (ஊழ்) பெற்றவரும், அதனை முறைப்படி பயன்படுத்தினலன்றி, அதனலாகிய நற்பயனை (இன்பத்தை) எய்தமாட்டார் என்பதாம். ஊழின் பயன், பொருள் எனினும்—அதுவும் அறநெறியில் நிற்பதால்தான் இன்பம் நல்குவதாகும் என்றது, 'ஊழ்' என்பதனால்—அது தமக்கே உரியது—தாமே இன்பமும் எய்துவோம் என்ற எண்ணத்தில் தவறு செய்யாமல் தடுப்பதற்கேயாம்.

இஞ்ஞான்று சில செல்வர்-(பொருள் நிரம்பப் பெற்றோர்)-வறியார்க்கு ஒன்று உதவ மனமில்லாத இடத்து—'எல்லாம் அவரவர் ஊழ் வினை' என்று கூறித் தவறான செருக்குக் கொள்வதைக் காணவில்லையா? இந்த மனப் பான்மையை மறுக்க வந்ததே அக்குறள்.

அதற்குமேலும் ஆச்சாரியார் சொல்கிறார் — சிரார்த்தத்தைத் தெய்வத்தின் துணைகொண்டு நிலைநாட்ட "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்னும் குறளை எடுத்தாள்கிறார்.

இறந்தவர்களை "மறவாமல் சில சடங்குகள் செய்து நினைவில் வைத்து வருவது நலம் என்கிறார் திருவள்ளுவர். குறளில் தெய்வம் மட்டுமல்ல, சிரார்த்தம் செய்வது கூட நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறது"

இது ஆச்சாரியார் தரும் விளக்கம்.

இதில், 'தென்புலத்தார் யார்?' என்னும் தமது நூலில் இதை தக்க சான்றுகள் தந்து மறுத்துள்ளார். அவரது கருத்தின்படி—தென்புலத்தார் என்பது. தமிழரின் முன்னோரை—உலக நாகரிகத்தின் தந்தையராக விளங்கிய தென்னாட்டு மக்களைக் குறிக்கும். அவர்க்குக் காட்டும் நன்றி—அவரது நாகரிகப் பண்பாட்டைக் காத்து வளர்த்து நிற்றலாகுமேயன்றி — திதிச் சடங்குகள் ஆகா. அந்நூலைப் பயில்வோர் உண்மை தெளியலாகும்.

இக் குறளுக்கு உரைகண்ட வ. உ. சிதம்பரனார் அவர்களும் —தென்புலத்தார் — என்பது அழகிய அறிவினையுடையவரான மெய்யறிவாளரையே குறிக்கும் என்றார். அதன்படி அந்தணர். அறவோர் என்றே கொள்ள வேண்டும்.

பல்கலைப் புலவர், கா. சு. பிள்ளை அவர்கள்—தென் புலத்தாரென்பார்—தமிழ் நாட்டுப் புலவரெனவும், தமிழர் குருமாரெனவும், கூறுவாருமுளர். என்றார்.

எனவே, தென்புலத்தார் தமிழ் இனத்தின் முன்னோரையோ, அன்றி அவர்தம் உயர்வுக்குத் துணையான மெய்யறிவாளரையோ குறிக்குமேயன்றி —தனித்தனி ஒவ்வொருவருக்கும் உரிய பெற்றோர் முதலோரைக் குறிப்பதாகாது, இச் சொல்லே, அவர்களைக் குறிக்கவில்லை எனில்,—'சிரார்த்தம்'—'திதி'—'சடங்கு' இவையெல்லாம் திருக்குறளில் நல்லது என்றுசொல்லப்பட்டிருக்கிறது என்பது எப்படிப்பட்ட கயமை ஆகும் என்றெண்ணிப் பாருங்கள்.

அக்குறளில் தெய்வம் என்று சொல்லப்பட்டிருப்பதும்—தேவர் என்ற கருத்திலோ—கோயிற்சிலைகள், அவைகட்கு செய்யும் திருவிழாக்கள், அருச்சினைகள் முதலியவற்றைக் கருதியோ சொல்லப்பட்டதன்று. தெய்வம் என்பது தெய்வம் உறைவதாகச் சொல்லப்படும் உயிர்களை யெல்லாம் குறிக்கும். உயிர்த் தொண்டே அதன் நோக்கம். அல்லாமலும் தெய்வம்—என்பது தெய்வச் செயலுக்கு ஆளானவருக்கு உதவுவதைத் குறிக்கொண்டதாம். தெய்வச் செயலாவது, பஞ்சம்—வெள்ளம், நிலநடுக்கம், எரிமலை வெடித்தல், கடற்கோள் முதலான பல. இவைகளால் துன்புற்றோர் யாவரேயாயினும் அவரைக் காத்தலையே—தெய்வக் கடமை என்றனர்.

எனவே — அக்குறளின் கருத்து இதுவாகும் :—

தென்புலத்தார்— தமிழர் முன்னோர். (அல்லது) மெய்யறிவாளர். தெய்வம்—தெய்வத் தன்மைக்குச் சான்றும் உயிர்கள் (அல்லது) தெய்வச் செயலுக்கு ஆளான உயிர்கள், விருந்து—விருந்தினர், (முன்னர் அறிமுகம் ஆனவரும் ஆகாதவரும்.) ஒக்கல்—உறவினர், தான்—தான் (தன்னினும் பிரிக்க முடியாத மனைவி, மக்கள் ஆகியோர்.) என்ற—என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து ஆறு ஓம்பல்—இவ்வைந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல், தலை—இல்லறத்தானுக்குச் சிறப்புடைய அறமாகும்.

எனவே—குறளின் கருத்து—ஆச்சாரியார் நோக்கத்திற்கு இடந்தரவில்லை என்பது விளங்கும். மேலும், பக்தியை வற்புறுத்த, "பசி, தாகம், அன்பு, இணை விழைச்சு — இவற்றைப் போல் கடவுளுக்குப் பக்தி செலுத்தும் ஆசையும் ஒரு இன்றியமையாத பிரகிருதத் தத்துவம்" என்று குறிப்பிடுகிறார். பிரகிருதத்துவமாவது இயற்கைத் (சுபாவம்) தன்மை. அது என்றும் கெடாது நிலைக்குமாதலின்—பசிக்கு உணவு தருவது போல், கடவுளை வழிபடும் இயற்கைப்பசிக்கும் உணவு தர வேண்டும். இல்லையேல் மூளைகெட்டுப்போய், துயரமும்

மனக் கோளாறும் வந்துசேரும் என்று அச்சுறுத்தவும் முனை கிறார்.

ஆண்டவன் அவசியமில்லை என்று சொல்லி நன்றுகவே இருப்பவர்கள் உண்டு. 'தானு கவே யோக க்ஷேமம் நடை பெறும்—கொஞ்ச காலத்துக் குப் பிறகு—?' என்று கேள்வி கேட்டு, 'அனர்த்தம் தான்!'—என்று முடித்துள்ளார் ஆச்சாரி யார்.

யாருக்கு? என் பது தான் விளக்கவில்லை, அவருக்கேயா-அல்லது அவரது வார்த் தையை நம்பியவர்களுக்கா? என்பது நாளடைவில் தெரியும்.

பக்தி—பசியையும் தாகத்தை யும் போன்றது என்பது உண் மையானால்—அதற்கு வாதிட ஓர் வழக்கறிஞர் ஏன்? அதை வலியுறுத்த இந்த அதி மேதை கள்—நாள் தவறாமல் வாதிடுவ தேன்? பசி வந்தால் சாப்பிட தவறுதீர்கள் என்று சொல்ல ஒரு திருக்கூட்டம் வேண்டுமா? குழந்தைகூட அழுகிறதே! பெரியவர்கள்—அதற்கென்று தானே அல்லும் பகலும் பாடு படுகின்றனர். எனவே—பக்தி —இயற்கைத் தேவை என்பது நிலை நாட்ட முடியாததாகும். இயற்கை தத்துவமாக இருந் தால்—அது தானுகவே இடம் பெற்றுவிடும்.

அதை நிராகரித்தால் மூளை கெட்டுப் போய், துயரமும் மனக் கோளாறும் வந்து சேரும் என்பதும் நிறுவப்பட்ட உண் மையல்ல; மாறுக பக்திமான் களுக்கு வேண்டுமானால் பல ரகப் பைத்தியங்கள் பிடித்துள் ளதை நமறிவோம். மது முதல் மாது வரையில் தலைக்கேறி— ஆடையின்றி அலைவது வரை யில்—பக்தி கொண்டவர் களிலே சிலருக்கு இயல்பா யிற்றே என்பது மறுக்க முடி யாத உண்மை.

மேலும் பக்தியற்ற காரணத் தால் பைத்தியம் (மனக் கோளாறு) கொண்டவர் என்று யாரைக் குறிப்பிட முடியும்? பக்தி கொள்ளாதவர் கூட அல்ல, கடவுள் மறுப்புக் கொள்கையினராய் வாழ்ந்த சிலர் கூட—இங்கர்சால் போல-இறுதி நாள் வரை-அறிவுச் சுட ராகவே விளங்கியுள்ளனர் என் பது உலகங் கண்ட உண்மை.

எனவே 'அனர்த்தம்' அறிவுப் பாதையில் செல்பவர்க் கல்ல என்பதை ஆச்சாரியார் அல்ல—அவரை நம்பிக் கிடப்பவர்கள் உணரவேண்டும். மற்றும் மனக் கோளாறு இல்லாமல், மூளை கெடாமல் வாழத் தேவைப்படு வது—பக்தி அல்ல; பகுத்தறிவு! நயவஞ்சகமல்ல! நல்ல மனம். ஆச்சாரியருக்கு - வேண்டுவது அந்த நல்ல மனமே;

'நல்ல மனம்' — எந்நோயும் தீர்க்கும் நன் மருந்து, அந்த 'நல்ல மனம்'—பகுத்தறிவோடு இணைந்து செயற்படுங்கால் விளையும் நன்மையே — உலகம் வாழ வழி செய்யும். மக்கள் மக்களாக உலவத் துணையாகும். அதற்காகவே ஒவ்வொருவரும் திருக்குறளைப் படிக்க வேண் டும்!

எனவே தான் திருக்குறளைப் படி!—என் று இத் திருநாளில் கூற விழையும் நான், எச்ச ரிக்கை விடுக்கிறேன். திருக் குறளைப் படிப்பவர்கள்—அதன் உரையெனச் சொல்லப்படுப வற்றை எல்லாம் நம்பி விட வேண்டாம். ஆச்சாரிய புருஷர் கள் கதைப்பதை யெல்லாம் உண்மை யென்று கொண்டு விட வேண்டாம். திருக்குற ளைத் திரித்துக்கூறுபவர் என்றும் இருப்பர்.

எனவே திருக்குறளைப்படி! அதன் பொருளைச் சிந்திக்கத் தவருதே! அறிவைப் போற்றும் வகை யறிந்து அதனைக் கல்! கற்றவழி நட! நன் மனத்தோடு முயற்சி செய்! நாட்டிற்கு நல் வாழ்வுஅளி!-என்று ஒவ்வொரு வரையும் கேட்டுக் கொள்வதே எனது பொங்கல் வேண்டு கோளாம்;

வாழ்க நீவிர்!—வளர்க நும் இன்பம்!

* * *

புத்தக ஆர்டருக்கு 1955-ம் வருடத்திய பாக்கெட் காலண்டர் இனம்!

கூர்வாள்! குமுறும் கோடையிடி !!முழங்கும் முரசம்!!!

தமிழகத்திலே தவழ்ந்தோடி வரும்

தண்புனலோடை

கட்டபொம்மன்

[வீர வரலாறு—நாடக உருவில்]

"அமலன்" தீட்டித்தரும் திகட்டாத தீந்தமிழ்ச் சொல்லோவியம்

இருவர்ண முகப்பு — விலை ரூ. 2-8-0

கிடைக்குமிடம்:-

ஸ்ரீ வாணி விலாச அச்சகம்

திருப்பாதிரிப்புலியூர்.



நாளை தீர்க்க ஓர் புதுமைக் கோவில்

தமிழ்ப் புத்தாண்டு


நாம் நாகை தி. மு. கழக அலுவலக கட்டிடத்தில் நுழைந்தோமானால் நம் கண்ணில் முதலில் படுவது உயர்ந்த இடத்தில் உள்ள அறிஞர் அண்ணாவின் உருவப் படமே. அதன் அருகில் திராவிடநாடு படம் வரையப்பட்டுள்ளது. அப்படத்தில் தமிழகம், ஆந்திரம், கன்னடம், கேரளம், முதலான மொழிவழி நாடுகளை விளக்கி, அவைகள் திராவிட இன வழி ஒன்றுபட்டு திராவிட சோஷலிஸ ஜனநாயக குடியரசு மலர வேண்டுமெனும் நமது குறிக்கோள் விளக்கப்பட்டுள்ளது. அண்ணாவின் படத்திற்கும் கீழ் நாவலரும், அறிஞரும், கலைஞரும் ஒன்று சேர்ந்து உள்ள படம் உள்ளது. அதனடியில் இந்திய துணைக்கண்ட வரலாறு எனும் சரித்திரப் படம் காட்சி அளிக்கிறது.

நமது இயக்கத் தலைவர்கள் எல்லோருடைய படமும், பாரதிதாசன், அழகிரி, சௌந்தரபாண்டியன், சேலம் இராமசாமி, திரு. வி. க., மறைமலையடிகள், வ. உ. சி., பாரதி படங்களும் உள்ளன. வட பகுதியின் மேல்புறத்தில் ஓவியக் கண்காட்சி அமைந்துள்ளது. திராவிடர் அன்று—எனும் ஓவியம் இமயத்தை வென்று தமிழ் மன்னர் கொடி நாட்டிய நிகழ்ச்சியும், ஆரியர் புறங்காட்டி ஓடிய செய்தியும் விளக்கப் பட்டுள்ளது. திராவிடர், இன்று—எனும் ஓவியம் ஆரிய சூழ்ச்சியினால் — வீரத்தால் அல்ல — திராவிடர்கள் வீழ்த்தப்பட்டு, வர்ணஸ்ரமத்திற்கு அடிமையாகி, மத போதையில் மூழ்கி, பழனிக்கும், திருப்பதிக்கும் சென்று காவடி எடுப்பதும், அழகிய தலைமுடியை மொட்டை அடித்துக் கொள்வதுமான இந்நிலை விளக்கப்பட்டுள்ளது.

அடுத்தது; விஞ்ஞானிகள், அறிஞர்கள், உலகைத்திருத்திய உத்தமர்கள் முதலானோர் படங்கள் ஓவியமாக்கப்பட்டுள்ளன. அடுத்த படம் "மாஜிக் கடவுள்கள்" (ஐரோப்பா) அண்ணாவின் நூலில் கண்ட படி ஓவியமாக்கப்பட்டுள்ளன. பக்கத்தில் "அண்ட சராசரங்களின்" அளவுகளும், அதனருகில் பன்றியிலிருந்து பலவற்றையும் கடவுள்களாக வணங்கும் ஆரியர்களின் முறையும் பட மூலம் தரப்படுகிறது.

ஆரியமாயையிலிருந்தும், வடவரின் அரசியல் ஆதிக்கத்திலிருந்தும் விடுபட்டு, உனது நாடும், பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ், மற்றும் பல நாடுகள்போல் சுதந்திரமுடன் வாழ முடியும் என "திராவிடமும் பிற நாடுகளும்" எனும் ஓவியம் வலியுறுத்துகிறது.

அப்பகுதியிலேயே திரு. வி. க., மறைமலையடிகள், பாரதிதாசன், வேமன்னா, கார்ல் மார்க்ஸ், வாஷிங்டன் முதலானோர்களின் பொன்மொழிகள் அவர்களே கூறுவது போல வரையப்பட்டுள்ளன. அடுத்து திராவிடத்தின் இயற்கைக் காட்சிகள் உள்ளன.



இப்பொழுது நாம் கழகத்தின் மேற்குப் புற சுவற்றிற்கு வந்து விட்டோம். தமிழகத்தின் கைத்தறி ஆடைகள், திராவிடக் கலைகள், சிற்பங்கள் முதலியனவும், தமிழ் நாட்டில் மாஜிகளாக வேண்டிய

கடவுள்கள் (கண்ணன், ருத்திரன் மற்றும் பல) கண்காட்சியில் உள்ளன. அடுத்து பெரிய உலகப் படம் —அருகில் ஆசியாவின் இனவாரி விளக்கப் படம்-- ஜப்பானின் வளம் — பாகிஸ்தானின் தலைநகரம்- இலங்கையில் விழா; முதலான படங்கள் நாமும் ஏன்தனித்து வாழக்கூடாது என அறிகின்றன. அதனடியில் "டில்லி சாம்ராஜ்யங்களின் அழிந்த கோட்டைகள்" உள்ளன. அடுத்து — டில்லியில் ராமலீலா விழாவில் இராவணன் உருவம் கொளுத்தப்படுவதும், அதை எல்லாம் தெரிந்த நேரு பார்த்து மகிழ்வதும், எவ்வளவு வெட்கக்கேடு என்பது விளக்கப்படுகிறது, படத்தின் மூலம்! இராவணனை அங்கே இழிவு படுத்தும்போது ஆரிய இராமனை—கோழையை, நாம் ஏன் இழிவுபடுத்தக்கூடாது எனும் எண்ணம் தான் மேலோங்கி நிற்கிறது. இதைக் காணும் தோறும்! "காட்டுமிராண்டி—நேரு" எனும் சித்திரம் மிகமிக அருமையானது. நாகர்களுடன் நேரு — அப்படம் நமக்கு நினைவுறுத்துவது என்ன? யார் காட்டுமிராண்டி என்பதுதான்!

மற்றும் ஆபிரகாம் லிங்கனின் அனுபவ உரை, இராமலிங்க அடிகளின் இடிந்துரை, காந்தியாரின் அறிவுரை, புத்தரின் பொன் மொழி, வள்ளுவரின் வாய்மொழி யாவும் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்திய துணைக் கண்டத்தில் உள்ள மாநிலங்களும், அரசியல் சட்டமும், தி. மு. க. சொற்பொழிவாளர்கள், புரட்சி நடிகர்கள் படங்களும், பிறநாட்டு பிரதமர்கள் (பிரிட்டன், சீனா, அமெரிக்கா, ருஷ்யா, எகிப்து) படங்களும், ஒரே படத்தில் மூவர் (அண்ணா, இரா. நெ., மு. க.) மூன்று கோணங்களில் உருவமும் தெரியக்கூடிய படமும் உள்ளன.

இவ்வளவு சிறப்புகள் நிறைந்த காட்சிகளையும் பார்த்துவிட்டு விரைவில் வெளிவருவதற்கோ மனம் வருவதில்லை.

பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில், நூலகமும் படிப்பகமும் நடைபெற்று வருகின்றன. தினசரி, வார, மாத இதழ்கள் பெரும்பாலானவை வருகின்றன. நூற்றுக் கணக்கானவர்கள் தினசரி படிப்பகத்தின் மூலம் பயன்பெற்று, அறிவு விளக்கம் பெறுகின்றனர்.

கழக கட்டிடத்தில் அழகிரி சொற்பயிற்சி மன்றமும், நாகை வட்ட (தாலுகா) தி. மு. கழகமும் அமைந்து, பணியாற்றி வருகின்றன.


இம்முறையிலே எல்லா தி. மு. கழக அலுவலகங்களும் சீருடனும் சிறப்புடனும் அமைய வேண்டுமென்பதுதான் எமது பேரவா. அப்பொழுது நமது நோக்கமும், குறிக்கோளும், படித்தவர்களிடமும், பாமரர்களிடமும், அதிவேகமாகப் பரவும் வாய்ப்பு உள்ளது.

நாகை தி. மு. க. அலுவலகத்திற்கு, 1954-ம் ஆண்டில் வருகை தந்து, பார்வையிட்டு, கழகக் குறிப்பு புத்தகத்தில் அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, என். வி. நடராசன், மதுரை எஸ். முத்து, முதலியோர் பாராட்டியுள்ளனர்.


அறிஞர் அண்ணா, இது ஓர் "சிறு கல்லூரி போல் உள்ளது" என்றும், நாவலர் நெடுஞ்செழியன் "மூற்போக்கு அரசியல் இயக்கம், அலுவலகத்தை எப்படியெல்லாம் சீரும் சிறப்புமாக வைத்து நடத்தவேண்டுமென்று ஆவல் கொள்ளுமோ, அந்த சீரும் சிறப்பும் ஒருங்கே களிநடம் புரியும் காட்சியைக் கண்டேன்" என்றும், கலைஞர், "வாடகை இடம்தான், சொந்த இடத்தைக் கூட அவ்வளவு சுந்தரமாகவும் — அறிவுச் சுடர் ஒளிவிடும் நிலையமாகவும் வைத்திருக்க முடியாது" என்றும், தோழர் என். வி. நடராசன், "இது ஓர் சிறந்த அறிவுக் களஞ்சியமாக காட்சியளிக்கிறது" என்றும், புகழ்ந்துள்ளார்.

வாழ்க திராவிடம்!

வளர்க தமிழ்மொழி!



இப்படி இருந்திருந்தால்...?



சேர்ந்தாரைக்கொல்லி

K.A.P. விசுவநாதம்.

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்" என்பது திருக்குறளில் உள்ள ஒரு குறள்.

சினம் என்பது மக்களுக்கு வேண்டாத வைகளில் ஒன்று என்று இக்குறள் கூறுகிறது.

சினம், சுடும்-என்ற சொற்களோ முதலும் முடிவுமாகக் கொண்டிருப்பது சினத்தின் பண்பையும் குறளின் நயத்தையும் விளக்கிக் கொண்டிருக்கிறது.

தீ சுடும் என்று நாம் பிள்ளைகளை எச்சரிப்பதுபோல சினம் சுடும் என்று வள்ளுவர் நம்மை எச்சரிக்கிறார்.

கோபம் கொண்டவனுடைய குருதி, நரம்பு, நெஞ்சு, மூச்சு அனைத்தும் கொதிக்கும் என்பதை அறிந்தே ஆசிரியர் "சுடும்" என்ற சொல்லை பயன்படுத்தியிருக்கிறார் என்று தெரிகிறது.

சினம் 'சுடும்' என்று கூறி, அதனை நெருப்பாகக் காட்டி, அதற்குச் சேர்ந்தாரைக் கொல்லி என்று ஒரு பெயரையுமிட்டு, அப்பெயராலேயே அதன் இழி தொழிலையும் விளக்குகின்ற ஆசிரியரின் திறமை எண்ணி எண்ணி வியக்கக்கூடிய ஒன்று.


நிலத்தை அறைந்தவன் கை, வலி எடுக்கத் தப்பாததுபோல சினத்தைச் சேர்ந்த மக்கள் கேடு அடையத் தப்புவதில்லை என்பதை வலியுறுத்தவே அதற்கு "சேர்ந்தாரைக் கொல்லி" எனப் பெயரிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சினம் பிறந்தவிடத்தை மட்டுமின்றி அது புகுந்த விடத்தையும் கொல்லும் என்ற கருத்தும் 'சேர்ந்தாரைக் கொல்லி' என்ற சொற்றொடர் வெளிப்படையாகவே விளக்கிக் கொண்டிருக்கிறது.

நெருப்பு ஏடுத்தவனை யும் அடுத்தவனையும் சுடுவதுபோல, சினம், கொண்



டவனையும் கொடுத்த வனையும் அழிக்கும் என்ற பொருளை 'சேர்ந்தாரைக் கொல்லி' என்பதில் சிலேடையாகக் கண்டு மகிழுங்கள்.



சினம் கொண்டு வைவது சுடுவதை ஒக்குமா என்ற ஐயப்பாடு எவருக்கேனும் ஏற்பட்டு விடலாம் என்று எண்ணியே வள்ளுவர் அதனை, "நாவினாற் சுட்ட" என்ற சொற்களால் அடுத்து ஒரு குறள் மூலம் விளக்கியிருக்கிறார் போலும்.

சினம் ஒருவனிடத்தில் சேரும். அவனைக் கொண்டு மற்றொருவனைக் கொல்லும். பிறகு தன்னைச் சேர்ந்தவனையும் கொலைத் தண்டனைக்கு ஆளாக்கிக் கொல்லும் என்ற நிகழ்ச்சிகளை "சேர்ந்தாரைக் கொல்லி" என்பதில் கண்டு நடுங்க வேண்டியிருக்கிறது.

சினம் தாக்கியவனை, தாக்கப்பட்டவனை மட்டுமின்றி இவ்விருவரையும் சேர்ந்தவர்களை யெல்லாம் சேர்ந்து துன்பப்படுத்தும் என்ற பொருளும் "சேர்ந்தாரைக் கொல்லி" என்பதில் சேர்ந்தே இருக்கிறது.

நண்பர், பகைவர், இரண்டுமற்ற பிறர்–ஆகியவர்களை மட்டுமின்றி 'சினம்' இனத்தையும் சுடும் என்று இக்குறள் கூறுவது ஒரு பயங்கரமான அறிவிப்பு ஆகும்.

கோபம் கொண்டவனை விட்டு அவனது சுற்றத்தார் விலகிப்போய் விடுவர். அவன் தனித்து நின்று வருந்துவான் என்பதை 'சினம் இனத்தைச் சுடும்' என்ற சொற்கள் நமக்கு நன்குக அறிவிக்கின்றன.

"சினம் இனத்தைச் சுடும்" என்று வள்ளுவர் அழுத்திக் கூறுவதிலிருந்து அன்பு இனத்தைத் தழுவும் என்பதை அவர் கூருமற் கூறுவதாகக் கொள்ள வேண்டும்.

இனத்தைச் சுடுவது, மக்கள் பண்புமல்ல; மரத்தின் பண்புமல்ல. மரம் மரத்தையும், மக்கள் மக்களையும், சுட்டுத் தொலைப்பதில்லை. ஆனால் நெருப்பேறிய மரங்கள் தன் இனத்தைச் சுட்டழிப்பதுபோல, சினம் ஏறிய மக்களும் தன் இனத்தைச் சுட்டழிப்பர் என்று இக்குறள் கூறுவது வியக்கக்கூடியதாகும்.

"இன்பத் தெப்பமாயிருப்பினும் சரி; அதிலுள்ள மரம் தன்னினமாயிருப்பினும் சரி; சிறிதும் சிந்தியாமல் நெருப்பேறிய மரங்கள் சுட்டுத் தீய்ப்பதுபோல சினம் ஏறிய மக்களும் இனமென்றும் நல்லோர் என்றும் கருதாமல் பகைத்துத் தீய்த்து விடுவர்" என்று இக்குறள் கூறி அபாயத்தைக்காட்டி எச்சரித்தாலும், உவமை நயம் காட்டி நம்மை மகிழ வைக்கிறது.

சுடுகின்ற செயல் நெருங்கி நடைபெறுவது ஆதலின், 'சுடும்' என்ற சொல்லுக்கு இனத்தார் விலகிப்போய் விடுவர் என்று பொருள் காண்பதைவிட இனத்தார்நெருங்கி நின்றே பகைத்துக் கொண்டிருப்பர் என்று பொருள் காண்பது நயமாகத் தோன்றுகிறது.

இல்லறத்தாரை மட்டுமல்ல; துறவறத்தாரையும் இச்சினம் பற்றுமானால் அது அவருடைய தவத்தையும் அழித்து, பிறவிக் கடலைக் கடக்க உதவுகின்ற பேரின்பத் தெப்பத்தையும் அழித்துவிடும் என்பதை இக்குறளால் அறியலாம்.

தீப்பற்றிய மரங்களைத் தன்னினம் என்று கருதி இரக்கமனம் படைத்து ஏற்றிச் செல்லும் தெப்பமானது தானே அழிவதைப் போல, சினம் கொண்ட மக்களை இனம் என்று கருதி தன்னிடத்தே வைத்து ஆதரிக்கும் மக்களும் அழிந்தொழிவார்கள் என்ற பேருண்மை இக்குறளில் புதைந்து கிடக்கிறது.


பேய் கொண்ட, கள்ளுண்ட, பித்துண்ட, தாக்குண்ட மக்கள் அனைவருமே அறிவிழந்து நிற்பர். ஆனால் சினம் கொண்ட மக்களோ வாழ்விழந்து அழிவர் என்று வள்ளுவர் கூறுவது அதன் கொடுமையைக் கடுமையாகக் காட்டுகிறது.

'சினம் என்பது எடுத்தவரைச் சுட்டு அடுத்தவரைக் கொன்று, சேர்ந்தவரை அழித்து, சேராதவரைத் தீய்த்து, இனத்தையும் பகைத்து, இன்ப வாழ்வையும் கெடுக்கும் ஒரு கொடு நெருப்பு ஆதலின் அதனைக் கொள்ளாதிருப்பது நல்லது, என்பது இதன் திரண்ட கருத்து.

வளர விரும்பும் மரங்கள் நெருப்பேற்கக் கூடாது; வாழவிரும்பும் மக்கள் சினம் ஏற்கக் கூடாது என்பது இக்குறளின் முடிவு.

இவ்வொரு குறளில் இவ்வளவு கருத்துகள் இருக்குமானால் இன்னும் 1329 குறள்களில் எவ்வளவு இருக்கும்? எடுங்கள் குறளை! படியுங்கள் நன்றாக! உணருங்கள் உண்மையை! அவ்வளவோடு நின்றுவிடாதீர்கள். செய்கையில் செய்துகாட்டி சிறப்பெய்தி வாழுங்கள்.

வாழட்டும் தமிழகம்!





எல்லோரும் கேட்பார்கள்

பார்த்ததை, படித்ததை, பிறர்சொன்னதை, காற்றின் அசைவை, கடலின் கொந்தளிப்பை, தாரகையின் தோற்றத்தை, அதன் இடம் மாற்றத்தை, வானத்தை, வானவில்லின் அற்ப ஆயுளை, அரசியலை, சட்டத்தை, ஆண்டவனை, அவனுக்கு அடங்கி நடப்பவனை, இயற்கையின் எழிலை, கருநிறக் கடலை, மழையை, பனியை, கடுங்குளிரை ஏன் என்று கேட்டார்கள், இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

அந்த, ஏன்? எப்படி? என்ற வினு வெழுப்பிய அனைவருமே ஆராய்ச்சிக் கோட்டையின் தலைவாயிலைத் திறந்தவர்கள். அந்த மகா மேதைகளின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் உலகுக்களித்து விட்டுச் சென்ற செல்வம், அனைத்தையுமே சுருங்கக் கூறுகிறது இச்சிறு கட்டுரை.

'நீயேன் மன்னன்? நான் ஏன் வேறும் மனிதன். நீ செய்த சட்டங்கள் எங்களைப் போன்ற மனிதர்களின் மன முத்திரையைப் பெற்றிருக்கிறதா? 'ஆம்' எனில்; நீ மன்னனாக இருக்க முடியாது. நான் எக்காலத்துக்கும் மனிதனாகவே இருக்க முடியாது. ஏன, இன்னமும் சொல்ல வேண்டுமானால், உங்களை மலையுச்சியிலேயும், எங்களை அதன் அடிவாரத்திலேயும், நிறுத்தியிருக்கும் அந்த எழுத்தினால் அவைகள் சட்டங்களாகவே யிருக்கமுடியாது. அவைகள் நீட்டியகரங்களில் நான் அடங்கவும் முடியாது. ஆகவே இதோ சமுதாய ஒப்பந்தம் என மன்னன்முன் நீட்டினேன், மக்களுக்கும் படித்துக் காட்டினேன். ஒடிப்போ என்று உரத்த குரலோடு விளம்பினேன் வேந்தன். தற்காலிகமாக ஒடினேன் நூசோ. ஆனால் என்றும் அரச பரம்பரையே தோன்றுவண்ணம் கில்லெட் டினில் சிக்கித் துண்டு துண்டாக ஒடிற்று மன்னன் உடல்.


* * *

குலுங்க குலுங்க சிரித்தான் குள்ளநரி மனம் படைத்த கோ வேந்தன், விலா வெடிக்கச் சிரித்தான் வேத புத்தகங்களைக் கடித்துத் தின்றுகொண்டிருக்கும் நீண்ட அங்கி அணிந்த இரண்டுக்கால் செல்லு. இவர்கள் இருவரையும் பார்த்து உள்ளம் வெடித்து வெளிக்கிளம்பிய சிரிப்பை பெட்டியிலிட்ட பாம்பென்றடக்கி விட்டனர் பக்கத்தில் நின்ற வேண் சாமரம் வீசிகள்.

இவர்கள் அனைவரையுமே பார்த்து இடியென முழங்கினான் வேறொருவன். 'என் கையில் செங்கோல் இருக்கும்வரை கடல் கூட கொந்தளிக்காது,' இப்படி கிளம்பினான் மன்னன், பக்கத்தில் வீற்றிருந்த பாதிரியாரைப் பார்த்துக் கொண்டே! ஆம்; ஆம்; என் கையில் சிலுவையிருக்கும்வரை சிறுத்தையும் சிறுநரியாகிவிடும். என்றான் மதகுரு. "ஒரு பக்கம் செங்கோல், மற்றோர் பக்கம் சிலுவை அந்த இரண்டையுமே சாய்த்துவிடும் என் எழுதுகோல். மக்களின புறத்தையடக்க செங்கோல், அகத்தையடக்க சிலுவை—உங்கள் இருவரின் அகம்பாவத்தையடக்க இதோ எழுதுகோல், புரிந்ததா?" எனக் கேட்டான் ரத்த எழுத்தாளன் வால்டேர். உன் எழுதுகோல் என்ன செய்யும்? இது கண்ணையுருட்டி காவலனும், மணியை யுருட்டிய மதகுருவும் கேட்ட கேள்வி.

'பாஸ்டிலி, என்ற பயங்கர சிறைச்சாலை யைத் திறந்துவிடும்.' இன்று அந்த நிரபராதி





இயற்கை நீட்டும்...

சித்தாந்தம், புல்லர்களே, பூதளத்தை, செல்வச் சீமான்களே, லோகத்தைக் கட்டியாண்டு தொண்டிருந்த செருக்கடை, முதலாளிகளே, முழுத்தரை எல்லாரையுமே இழுத்துக் கீழே தள்ளியது. அந்த கருணை உள்ளம் கொண்ட கார்ல் மார்க்ஸ் உலக வரலாறெனும் தாய் ஈன்ற குழந்தை.

கள் உங்கள் பாதுகாப்பில் இருக்கும் கைதிகள்! நானே, அவர்களே மக்கள் அணிவகுப்பை மன்னன் மாளிகை நோக்கி நடத்திச் செல்லும் படை வீரர்கள்" என்றான் எழுதுகோல் வேந்தன் வால்டேர். வென்றது பேனா, வீழ்ந்தது செங்கோல், சிலுவை எல்லாம்.


இருதயம் இருக்கவேண்டிய இடத்தில் இரும்புப் பெட்டியிருக்கிறது. இருதயம் மெல்லியது., இரும்புப் பெட்டி கடினமானது. ஆகவே இருதயத்தால் இரும்புப் பெட்டியைத் திறக்கமுடியாது. 'இதோ சம்மட்டி–அடித்து நொறுக்குங்கள். அதனுள் இருப்பதை அனைவருமே பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்ற ஒரு புனிதமான சித்தாந்தத்தைக் கண்டுபிடிக்க இருபதாண்டுகள் நூல் நிலையத்திலேயே காலத்தைக் கழித்தான். உடல் தளர்ச்சியுறும் வரையில், தலை நரைத்துப் போகும்வரையில், ரத்தம் வெளுத்துப் போகும் வரையில், கண்களின் ஒளி மங்கி நீர்க்கொட்டும் வரையில் படித்தான்', ஏழ்மையின் காரணமாக பல நாட்கள் உணவில்லாமலே படித்தான். ஏழைகளின் துயர் துடைக்க இந்த ஏழை தன் கண்களே கசக்கிக் கொண்டே படித்தான். தன் அருமைக் குழந்தையின் சவ அடக்கத்துக்குப் பெட்டி செய்யப் பணமில்லாமல் தன் மேல்அங்கியை விற்று சவ அடக்கம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்ட போதும் வருவாய்க்கு வகை தேடாமல் படித்துக் கொண்டே இருந்தான். புத்தாடை உடுத்தி மக்கள் புத்தாண்டு விழாவை தெருக்களில் குதூகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்த போது தன் கவனம் விழாவில் கலக்காமலே படித்தான். இறுதியில் அந்தப் பேரறிவாளன் அளித்த

சிப்புயல் மோதட்டும், டான், நீபர், போகவா என்ற ஆறுகளில் ரத்தவெள்ளம் ஓடட்டும் ராம நோவ் குடும்பத்தார் எனும் ஜார் மன்னன் தலை உருளட்டும். அவன் குடும்பத்தையும் உயிரோடு விடாதீர்கள், அந்த பரம் பரையெனும் விஷவிருட்சத்தை வேரோடு களைந்தெறியுங்கள். நாட்டின் அவமானச் சின்னங்கள் நாசமாகட்டும். அந்த நாசகாலர்கள் வீழ்ச்சி கண்டு நல்லோர்கள் மனம் பூரிக்கட்டும். செம்படை நம்பக்கம். கடற்படை, தரைப்படை கைகட்டி நிற்கிறது நம் கட்டளைக்கு. எடுங்கள் வாளை, எறியுங்கள் மன்னன் கழுத்தில். சர்வாதிகாரம் இன்றோடு சாயட்டும் சர்வஜன நோக்கம் ஈடேறட்டும். உடைந்தது இரும்புப்பிடி. ஓங்கிற்று நமது கொடி. ஆண் மார்த்தீகம் பேசிய அயோக்கியர்கள் சிலர், அதை அப்படியே சட்டமாக்கித் தந்த அரசர்கள் பலர். அந்த சட்டங்களே நமது உலகாயுத வாதத்தால் உடைப்போம்" என்று வீறு கொண்டெழுந்தான் விளாடிவாஸ்டாக் நகரிலே ஒரு வீரன்! அந்தப் புரட்சி யுகன் ஈன்ற போர்வீரன்தான் லெனின்.

"உடலில் தீப்பிடித்துவிட்டது. தலையால் சம்மதத்தைத் தெரிவிக்கலாம். தீயிலிருந்து மேலே எடுத்துவிடுங்கள் அந்தத் தீயை"

"இப்படி கட்டளையிட்டான் மன்னன். பிணத்திடம் கருணைகாட்டா நரியைப்போல் ஒப்பியும் ஒப்பாமலும், 'உம்', என்றான், பாதிரி. இப்போதாவது உன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா. மன்னித்துவிடுகிறோம்" என்றான் மன்னன். வெந்த உடலோடு, வேதனைக் குரலோடு, ஆனால், உறுதியான உள்ளத்தோடு 'மன்னரே! உமக்கும் முடிவு உண்டு. மதகுருவே! உம்மையும் சுமந்துச் செல்ல

எழிற் கரங்கள்!



சவப் பெட்டி காத்துக்கொண்டிருக்கின்றது. எல்லாருமே இறக்க வேண்டியவர்கள்தான். இதில் எள்ளவும் சந்தேகமில்லை. ஆனால், நான் இறவாக் கொள்கைகளுக்காக இறக்கிறேன். ஏற்றத் தாழ்வுள்ள இந்த இடத்தை விட்டு எல்லாரையுமே சமமாகக் கருதும் ஈமக்காடு செல்கிறேன். ஆகவே என் முடிவை மாற்றிக்கொள்ள முடியாது. எனக்கு முன்பே தீயில் தள்ளப்பட்டு சாகடிக்கப்பட்ட புருனோவின் சந்ததி நான், ஆகவே அந்த தீரவான் சென்ற வழி செல்கின்றேன்." என்று மீண்டும் ஆவேசமாகத் தீயில் குதித்துவிட்டான் ஜான் விக்லிப்.

உலக மறுமலர்ச்சித் தொடக்கத்தின் கர்த்தாக்களிலே இரண்டாவது இடம் பெற்றவன் இந்தப் பாட்டாளி. வேகும் நெருப்பிலே வெந்து காட்டி மடமையைப் பிடிசாம்பலாக்கியவன் புருனோ. அன்று அவன் முடிவைக் கண்டு, துடித்ததைக் கண்டு எள்ளி நகையாடியவர்களின் சந்ததிபார் இன்று துள்ளித் துள்ளித் துடிக்கின்றனர். என்றாலும் இன்று புருனோவின் ஜான்விக்லிப்பின், ஜான் பாட்லியின் பூதவுடல்கள் இல்லை. புகழுடல்கள் இருக்கின்றன.

கிரேக்கத்தின் கலைக் கோயிலின் தலைவாயிலிலே கம்பீரமாக நிற்கிறான் ஓர் தத்துவஞானி, ஏதென்ஸ் நீதிமன்றத்தார் அவன் வாயில் நஞ்சையூற்றி நெஞ்சையடைத்து விட்டோம் என எக்காளமிட்டனர். இல்லை, இல்லை. அவன் நெஞ்சடைத்துவிடவில்லை. இருபத்தி நான்கு நூற்றாண்டுகளாக, ஆர்க்டிக் முதல் அண்டார்டிக் வரையிலும் பேசிக்கொண்டிருக்கின்றான். பள்ளி பல்கலைக்கழகம், பாராளுமன்றம், நீதிமன்றம், சேதிமன்றம், அறிஞர்கள் அவைக்களம் எல்லா இடங்களிலுமே பேசிக்கொண்டிருக்கின்றான்.

நீதியின் நண்பனாய், நேர்மையின் தோழனாய், ஏழ்மையின் இருப்பிடமாய் எங்கும் காணப்படுகிறான். செல்வாக்கித்த சமுதாயம் தனக்களித்த தண்டனைக்குப் பரிசாக சேத்துக் காட்டினான். சாகப்போகும் அவர்கள், சாகடித்துவிட்டோம் என்றனர். இல்லை அவன் சாகவில்லை, உலக உணர்வின் கெள்விக் குறி அவன்தான். அவன் கேள்விக் குறிகளுக்கு விடைகாண விரைந்தோர் சாகவிடமாட்டோம் என்றனர். கேள்வியையே புரிந்துக்கொள்ளாத அறிவிலிகள், சாகடிப்போம், என்றனர். அநீதி நீதியைத் தற்காலிகமாகத் தாண்டிற்று. சாக்ரடீஸ் சாகடிக்கப்பட்டான். நஞ்சுண்டு மாண்டான். கெஞ்சிக்கேட்டு உயிர் வாழ்வான் என்று நினைத்து அவன் இறப்புக்காக வாக்களித்தவர்களின் எண்ணம் திசை மாறிற்று. தாங்கள் இழைத்த தவறுகளுக்குத் தக்க தண்டனையாகத் தங்களைத் தாங்களே தற் கொலை செய்துகொண்டனர். குவலயத்தின் கண்ணீர் கிரேக்கத்தில் கடலெனப் பொங்கிற்று. அழுதனர், புரண்டனர். எனினும், அவனைக் காண முடியவில்லை. அவன் இன்றிருந்தால் கோடிப் பொன் கொடுத்தாயினும் காப்பாற்றுவேன் என்று பெருமைபடப் பேசுகிறது பூதலம் எனினும் இறந்தவனை எழுப்பும் வித்தை ஒன்றுதான் இன்னும் மனிதனுக்கு எட்டாத அதிசயமாயிருக்கிறது, அன்றந்தமாபெரியோன் விட்டுச் சென்ற ஒரு சில கருத்துக்கள் பல ஆயிரமாய் பல்கோடியாய் அணுவாய், அணுவுக்கணுவாய் ஆராய்ச்சி மன்றங்களிலே உலவிக் கொண்டிருக்கின்றன. அத்தகு மேதைதான் உலகத்தில் முதல் வினை எழுப்பியவன். சிந்தனைச் செல்வன். தர்க்க வாதத்தின் தந்தை. சிந்தனைக் சிலந்திக் கூடென்றான மக்களுக்கு செங்கதிரோன் சுடர்காட்டி மக்களைச் சேமமுறவைத்த செந்நாப் புலவன் சாக்ரடீஸ்.

அம்மையே! உன் கூந்தல் அழகை அவனி

யோர் காணட்டும். அதை முக்காடிட்டு மறைக்காதே. ஐரோப்பாவின் நோயாளி என்கின்றனர் நம் நாட்டை. யாசாஜங்கிஸ்கான் காலமுதல் இன்றுவரை இந்த ஈனப் பெயர்தான் இருக்க வேண்டுமா? அரேபியாவின் அருளாளன் அல் அமீன் நபிகள்பிரான் முகம்மத் முஸ்தபா ரசூல்சல் அல்லல்லாஹு அலைவ சல்லம் அவர்களின் ஆணையாகச் சொல்கின்றேன். அச்சத்தைவிடு. ஆயுதத்தை எடு. நாணத்தை விடு. நீதிவழியாகப் போ. தலை நிமிர்ந்துநட, தாங்க முடியாத அவமானச் சொற்களால் தாக்குண்டிருக்கும் நமது நாடு மேன்மையடையட்டும். நாட்டிற்கு ஆண்கள் ஒரு கண். பெண்கள் ஒரு கண். நீங்கள் இருளில் மறைவதால் நாடு ஒரு கண்ணிழந்த பொட்டையாய்விடும். இருவரும் நாட்டின் இரு காதுகள். அதில் ஒன்று செவிடாய்விடக் கூடாது. இருவரும் இரண்டு கால்கள். அதில் ஒன்று கொண்டியாய்விடக்கூடாது. இருவரும் நாட்டின் இரு கைகள் போன்றவர்கள். அதில் ஒன்று முடமாய்விடக் கூடாது. முக்காட்டை எடு. முகத்தைக் காட்டு. கற்பு கெட்டுவிடும் என்றெண்ணுகிறாயா, அந்தப் பேதமை எண்ணத்தைக் கனவிலும் கருதாதே.

தருக்கிதந்த செல்வத் திருமகளே! அழகின் குன்றே! அசைரியப்படாதே. இஸ்லாம் என்றால் அமைதி, முஸ்லீம் என்றால் உறுதி என்பதை நீ அறியாயா? ஒருநாளும் உன் கற்புக்கு பங்கம் வராது. பிஸ்மில்லா இற்ற ஹமான் இற்றஹீம் என்பதைக் குறிக்கும் எண்ணல்லவா எழுநூத்தி எண்பத்தி ஆறு. அதோபார், வெள்ளை ஜோடியை. கணவனை விட மனைவி எவ்வளவு கம்பீரமாகக் கைவீசி நடக்கிறாள்.

இந்த உலகத்தின் மனித குலத்தைப் பார்க்கும்போது இவற்றை ஈன்றதெல்லாம் தாய்க் குலமாகிய நம்குலமன்றே என்று மனம்பூரிக்கின்றாள். நமக்கேது தக்காரும் மிக்காரும் என்று அவள் மனம் பொங்கிப் பூரிப்படைகின்றது. தன்னை இகழ்வான் தன்னைப்பெற்ற தாயையே இகழ்ந்தவனுவான் என்ற பெருமிதம் அவளை மகாமேருவாக்கி இருக்கிறது.

பெரியோர்களே! உக்கா அடித்தடித்து உங்களுக்குத் தெரியாததை தெரிந்தவர்கள் போல் கத்தாதீர்கள். அன்புடையோரே! பங்கி அடித்தடித்து வம்பை விலைக்கு வாங்காதீர்கள். பக்கீர்களே! "ஈ நுழையா காட்டுக்குள்ளே எண்ணூறு எருமை புகுந்தது," என்று வடிக்கட்டிய பொய்யை அறிவுச் சந்தையிலும் சரி, ஆளிருக்கும் இடத்திலும்சரி, எங்கும் விற்காதீர்கள். இனி விலை போகாது. ஈயே நுழைய முடியாத காட்டில் எண்ணூறு எருமை எப்படியப்பா நுழையும் என்று கேட்டுவிடுவார்கள். ஆகவே கட்டுங்கள் மூட்டையை என்று கேட்ட துருக்கியின் தந்தை அடாடர்க் முஸ்தபா கெமால் பாசூா தன் கண்ணெதிரிலேயே கண்டான் திருந்திய கவின் பெரும் நாட்டை. ஐரோப்பாவின் நோயாளி என்றிருந்த விளம்பரப்பலகை திருப்பப்பட்டது. வல்லரசு துருக்கி என்று வேரோர் பக்கம் எழுதப்பட்டுவிட்டது. ஒரு கையில் வாளும் மற்றோர் கையில் பிறைக் கொடியுடன் டார்ட்டாரி குதிரையின் மேல் பவனி வந்த அந்தக் கீர்த்தி வேந்தன் பச்சைக் கொடியின் நிழலிலே அச்சமில்லாமல் உறங்குகின்றான்.

நீதிபதியவர்களே! என் வழக்கை விசாரிக்க வேண்டும். நீதிபதி கேலி சிரிப்பு சிரிக்கின்றார். தங்கள் சிரிப்புக்குக் காரணம் தெரிந்துக் கொள்ளலாமா?— இது அடிமையின் கேள்வி. காரணம் தெரிவிக்க வேண்டியதுதான். "ஏன், நம் வழக்கு இன்னும் விசாரணைக்கு வரவில்லை என்று யோசிக்கின்றாயா? முதலில், உனக்கு வழக்குத் தொடுக்கும் உரிமை உண்டா என்று தெரிந்துக் கொண்டாயா?" "ஏன் நான் மனிதனல்லவா?"-நீதி மன்றமே கட்டிடம் அதிரச் சிரித்தது. 'எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே'— அடிமையின் ஆச்சரியம்! "நிதானமாகச் சொல்கின்றேன் கேள். அமெரிக்கச் சட்டப்படி நீ மனிதனே அல்ல," "பிறகு என்னதான் நான்"—இது அந்த வழக்காளியின் கேள்வி. 'அமெரிக்க நாட்டுச் சீமான்கள் வீட்டில் இருக்கும் தட்டு முட்டுச் சாமான்கள், மேஜை நாற்காலிகள், குப்பைமேடு, சோழிக்கூண்டு, பிள்ளைகள் விளையாடும் பொம்மை, பந்துகள் போன்றவன் நீ. அந்த சாமான்களால் வழக்குத் தொடுக்க முடியுமா? நீயே சொல்.' 'முடியாது. பிறகு என்னதி?' எனப் புலம்பினன் ஏழை. 'உன் விதிபோல் நடக்கும்'—இது நீதிபதியின் உபதேசம். இந்தச் செய்தியைப் படித்தான் ஒரு நெட்டையானவன் தன் பத்தொன்பதாவது வயதில்.




குப்பனும், கோமளவல்லியும் !

"தாமரை பூத்த குளத்தினிலே—முகத்
தாமரை தோன்ற முழுகிடுவாள்! அந்தக்
கோமளவல்லியைக் கண்டுவிட்டான்—குப்பன்
கொள்ளை கொடுத்தனன் உள்ளத்தினை!"

— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

ஓவியம் : கே. மாதவன்





கொல்லாமற் கொன்ற வறுமை

புதுவை - சிவப்பிரகாசம்


'பொங்கல் நெருங்கிற்று! புதியதோர் சேலை
எங்கே?' என்றனள் என்னரு மனைவி!
குழந்தைக ளெல்லாம் கூடி நின்றே
அழகிய உடைகள் ஆளுக் கோர் விதம்
வாங்கித் தரும்படி வற்புறுத் துரைத்தன!
ஏங்கிய நெஞ்சிற் கிச்சொல் இடியெனத்
தாங்கொணாத் துயரைத் தந்து வருத்திற்று!
தேங்கிய நீரைச் செவ்விழி சிதறிற்று!

வளவயற் செல்வம் மனையகம் சேர்த்த
உளநிறை மகிழ்வால்—உற்ற வாழ்விற்
சீர் நலஞ் சேர்த்துச் செம்மைப் படுத்தவும்
ஊர் நலங் காணவும் ஒய்வு கிடைப்பதால்—
இனி வருங் காலம் இதம் பல தந்து
நனி மகிழ் வினைக்கும் நன்னா ளாதலால்—
கடுந்துய ரேகக் கதிரோன் மீண்டும்
வடபுடலப் பெயர்ச்சி தொடங்குநா ளாதலால்
தமிழர் அந்தத் தைமுதல் நாளை
அமைவுறத் திருநாள் அருநாள் பெருநாள்
என்றே வகுத்தனர். இந்த நன்னாளில்,
நன்பா லடிசில் நலமுட னருந்திப்,
பொன்னவிர்ந் தொளிரும் புத்துடை யுடுத்தி
அன்பால் மக்கள் அகமகிழ்ந் திடுவர்!

இந்த நிலையை இனிதடைந் திட, என்
செந்திரு வதனச் சேய்களும் மனைவியும்
விரும்புவ தியற்கை! வீழ்ந்த வாழ்வினால்
பெருந் துயர் கொண்டே பீடழிந் திடுமநான்,
என்ன செய்குவேன்? இப் பெரு நாளில்
அன்னவர் முகமும் அகமும் சோந்திடச்
செய்வ தழகோ? சீர்த் தமிழ் நாடே,
உய்வழி காணேன் ஒன்றும்! அவர்கள்,
என்னை நம்பியே வாழ்பவர் ஆதலால்,
என்ன பதில்நான் இயம்பிட வல்லேன்?

அந்தோ! அந்தோ! அருமனை மக்களோடு
சிந்தை மகிழ்ந்திடும் சீர்த்திரு நாளில்,
பொல்லா வறுமையே, எனைக்
கொல்லாமற் கொன்று நீ மகிழ்ந் தனையே!





நாவுக்கு இழிவு

காடு! எங்கு பார்த்தாலும் மரங்கள்! நீர்ச்சுனையோ, கனி மரமோ காண முடியாத காடு! கண்கள் எட்டியதூரம் கண் ணோட்டம் செலுத்திப் பார்த் தாலும் சுரீரென தைக்கும் கரு வேல மரங்கள்தான்! நாட் டிலே மக்கள் தொகை கோடிக் கணக்கிலே உண்டு. ஆனால் தன்மை? அதேபோன்ற காடு! சின்ன மருது வேட்டையில் அதிக விருப்பம் உடையவன். குதிரைமீதேறினன், வில்லம்பு டன். காட்டை நோக்கி விரைந்தது வழக்கத்திற்கடிமை யான அந்தக் குதிரை. காட் டிலே கண்டது கலைமான் ஒன் றைத்தான் முதலில். அதைத் துரத்தியபடி சென்றனவன். மானின் ஓட்டம் அவனை மைல் கணக்காக இழுத்துக்கொண்டு வந்து விட்டது. தன்னந் தனிய ஞை ஓடி வந்த வேகம், தூரம் இரண்டும் சேர்ந்து குதிரையை நுரை தள்ளச் செய்து கீழே விழ வைத்து விட்டது. குதிரை சாய்ந்தது — சின்னமருது வின் மனம் அதனலும் சாயவோ, சலிப்படைய வோ இல்லை. மானின்மீது மாறுத பார்வை—குதிரை களைத்தாலென்ன, கால் கள் என்று கருதியபடி காற்றிலும் கடுகி ஓடிக் கொண்டிருந்தான். மானை அம்பெய்து பிடிப்பதென் றால் எப்போதோ எய் திருப்பான். மானுக்கும் மர ணத்தைப் பரிசாகக் கொடுத் திருப்பான். அவன் விரும்பி யது மான்குட்டியை உயிருடன் பிடிக்க வேண்டுமென்பதே. ஆகவே ஓடினன், ஓடினன், ஓடிக்கொண்டேயிருந்தான். அதன் முடிவு?

களைத்துக் கானகத்து கட் டாந்தரையில் கண்கள் சுழல, கருத்து கலங்க மயங்கி விழுந் தான். கொஞ்சம் தண்ணீர் தேவை அவனுக்கு! அங்குயார் இருக்கிறார்கள் தண்ணீர் கொடுப்பதற்கு? அவன் நினை வும் 'எவராவது வரமாட்டார் களா? தண்ணீர் கேட்கலாம்' என்று எண்ணவில்லை. தனது தாகத்துக்குத் தண்ணீர் வேண்டுமென்று பிறரிடம் யாசிப்பது "நாவுக்கு இழிவு" என்றுதான் எண்ணினன் அவன். வள்ளுவன் வழிவந்த தமிழன் அல்லவா? அவன் மன தில் வள்ளுவன்தான் வாழ்ந்து கொண்டிருந்தான். "ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்"— பசுவுக்கு கொஞ்சம் தண்ணீர் கொடு என்று கேட்பதே நாவுக்கு இழிவென்ற தமிழ் மானம் படைத்த அவன், தனக் குத் தண்ணீரென்று கேட்க ஒப்புவானா? இசையுமா இத யம்?

சின்னமருது பாண்டியன் சிவ கங்கையை ஆண்ட சகோதரர் களில் சின்னவன். வீரத்தின் இருப்பிடம். வீரபாண்டியக் கட்டபொம்மனைப் போலவே உறுதியும், உணர்ச்சியும் கொண்டு, வெள்ளையரை எதிர்த்த வீரன். ஊமைத்துரை இவர்களிடந்தான் தன் பிற் காலத்தில் தங்கியிருந்தது.

சின்ன மருது பாண்டியன் மயங்கிய நிலையிலிருக்கும்போது அங்கு ஒரு கிழவி வந்தாள். எதற்காக? சுள்ளி பொறுக் கவே தான். தள்ளாத வயதில் என் இந்தத் தொல்லை? அவளுக்கு மக்களில்லையா? இருக் கிறார்கள் ஏராளம்! அப் படி இருந்தும்வந்தாள். அதுதான் தமிழ் மானம். 'உழைத்து உண்பவன் தமிழன்' அப்படி வாழ்பவனே மனிதன், என்ற தத்துவம் — தன்



மானம் - தமிழர்களுடைய பரம்பரைச் சொத்து! பொது உடமையர் என்று கூறிக் கொள்ளுபவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும், தமிழர்களுடைய பழைய நிலையை, கொள்கையை! அந்தப் பெரிய பாட்டிதான் உண்ணும் உணவுக்காக தன்னுயிரையன்ற உழைப்பை உதவ வேண்டுமென்ற உறுதியால் சுள்ளி பொறுக்க வந்தவள் அவளது அந்தத் தள்ளாத பருவத்தில் செய்யக்கூடிய வேலை அதுதான்!

கட்டாந்தரையில், காளைப் பருவத்தினன்., களைப்புடன் கண்மூடி காட்சி தருவதைக் கண்டாள். கடுகி நடை போட்டு நெருங்கினாள்—கலங்கினாள். தன் கஞ்சிக் கலயத்தை எடுத்து அவன் வாயருகில் கொண்டு சென்றாள் ஊட்டுவதற்கு. அவனே தன் கையால் அதைத் தடுத்து நிறுத்தினான். "தண்ணீர்ச் சுனை பக்கத்திலிருக்கிறதா?" என்று மெள்ளக் கேட்டான். அவளோ,



"தண்ணீர் இங்கு கிடையாது. மூன்று மைல் தூரம் சென்றால் தான் பக்கத்துக் கிராமத்தில் கிடைக்கும். கஞ்சி தண்ணீராகத் தானிருக்கும்"; என்று கூறினாள். தண்ணீர் அண்மையிலில்லை என்பதை அறிந்ததன் பின் பானை ஓலையும், கருவேலமுள்ளும் கொண்டுவரச் சொன்னான். பாட்டி முதலில் திகைத்தாள். பைத்தியமோ என்று சந்தேகப்பட்டாள். பின் அவள் கேட்டபடி ஓலையையும், முள்ளையும் கொண்டு வந்து கொடுத்தாள். "உன் பெயரென்ன?" என்று கேட்டான். "தாயம்மாள்" என்றாள். "நீ தாய் அம்மாளேதான்" என்று கூறிவிட்டு ஓலையில் அந்த முள்ளால் ஏதோ எழுதி, அவளிடங் கொடுத்துவிட்டு கஞ்சியைக் குடித்துக் களைப்பைத் தீர்த்துக் கொண்டான்.



அந்த ஓலையில் சின்ன மருதுபாண்டியன்,, அந்தக் காடும் அதையடுத்த கிராமமும் கூழுக்காக தாயம்மாளுக்குச் சாசனம் செய்திருந்தான். இன்றும் முகவை மாவட்டத்தில் அந்த ஊர் "கூழூர்" என்று வழங்கிய படி இருக்கிறது. கூழுக்காகக் கொடுக்கப் பட்டதால் "கூழூர்" எனும் காரணப் பெயர் பெற்றிருக்கிறது.

பசி—களைப்பு இருந்துங் கூட தானமாகப்பெற அவன் தமிழ் நெஞ்சம் இடந்தரவில்லை. தமிழன்நாவுஇழிவுக்கு உறைவிடமாவதை விட இன்னும்யார்இல்லாது போயினும்பரவாயில்லை என எண்ணிய சான்றோனின் தமிழ்ப் பரம்பரை தான்நாமும்என்றுகூறும்போது, உணர்ச்சியும், பெருமையும் ஏற்படுவது இயற்கை! அந்தப் பண்பு நிறைந்த வாழ்க்கையை எட்டிப் பிடிக்க ஏறு நடை போட்டு உறுதி மொழி எடுப்பதற்கு முரசொலிக்கிறது! முந்துவீர் இன்றே முதுபெருந் தமிழுக்குரிய மறவர்களே! ஃ

அமெரிக்க, பிரிட்டிஷ் நாடுகளில் வெளியாகும் தங்களுக்குத் தேவையான எந்தப் பத்திரிகையானாலும் சந்தா விவரத்திற்கும் மற்ற விபரத்திற்கும் உடனே எழுதுங்கள்.

அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள்:

சேலம் அட்வர்டைசிங் சர்வீஸ்,
சுகை, சேலம்.

மூவர்ண முகப்புடன் காதல் புரட்சி ஏடு!


கோ. வேந்தன் தீட்டிய

பிரிக்க முடியுமா?

விலை அணா-12

வேந்தன் பதிப்பகம்
அர்ச்சனாபுரம்
(அமாந்தூர் அஞ்சல்)
(வழி) பள்ளிக்கொண்டா
(வா. ஆ. மாவட்டம்)

அவன் ஓர் நாத்திகன்!



விசுவபாரதிகுமரன் B.A.

அவன் லண்டன் நகரில் நுழையும்போது காலை பத்து மணி யிருக்கும். பனி பெய்து கொண்டிருந்தது. ஒல்லியான உடல் அமைப்பு. கிழிந்த ஆடைகள். அவன் கண்களில் மட்டும் ஒளி வீசிக்கொண்டிருந்தது. உலகிலே பெரிய நகரம், என்று லண்டனைப் பற்றிப் பேசுவோர் கூறுவதை அவன் கேட்டிருந்தான். உண்மை தான். அது பெரிய நகரமாகத்தான் இருந்தது. காலை நேரமாக இருந்ததால் நகரில் சுறுசுறுப்பு காணப்பட்டது. எல்லோரும் போகிறார்கள். அவசரமாக நடந்து கொண்டிருந்தனர். ஆனால் இவன் எங்கே போவது? உறவினர்கள் யாரும் கிடையாது. லண்டனில் அவனுக்குத் தெரிந்த பெரிய மனிதர்கள் யாரும் கிடையாது.

கையில் இருந்த சில்லறைக் காசுகள் செல வாகிவிட்டன. என்ன செய்வதென்று அவ னுக்கு விளங்கவில்லை. இரண்டு நாட்களாக அலைகிறான். பார்த்தால் பரிதாபம் உண்டாகும் நிலையில் காணப்படும் இந்த வாலிபனைப் பார்த்து மனம் இரங்கி வேலை கொடுப்போர் யாரும் இல்லை. மனித இனத்திடம் அனுதாப உணர்ச்சி ஏராளமாக இருக்கிறது. ஆனால் தேவைப்படும் போது அந்த உணர்ச்சி வெளிப்படுவது கிடை யாது. வீட்டை விட்டு ஓடிவந்து விட்ட இந்த இளைஞனை அவனைப் பெற்றவர்கள் யாரும் தேடிவர வில்லை. 'தொலைந்தது பீடை' என்று அவர்கள் கூறினர்.

சார்லஸ் லண்டன்மாநகர வீதிகளில் வேதனை யுடன் சுற்றிக் கொண்டிருந்தான். அவனது முழுப் பெயர் சார்லஸ் பிராட்லா. ஆங்கில நாட் டில் மறுமலர்ச்சி இயக்கத்தை துவக்கி வைத்த பேறு பெற்றவன். பேராற்றல் படைத்த அறி ஞன். பிற்காலத்தில் சார்லஸ் பிராட்லாவின் கொள்கைகளை எதிர்த்துப் போராடியவர்கள் ஏராளம். மாட்சிமை தங்கிய மன்னர்பிரான், அந்த மன்னரைச் சுற்றி கொலு வீற்றிருந்த பிரபுக்கள், இவர்கள் இருவரின் சுகபோக வாழ் வுக்கு பாமர மக்களைப் பலியிட்ட குருமார்கள், பொது மேடைப் பேச்சாளிகள், அரசியல் வாதி கள், அறிவாளிகள் என்று தங்களைத் தாங்களே கூறிக் கொண்டவர்கள், இத்தனை பேரும் சார் லஸ் பிராட்லாவை எதிர்த்துப் போர் தொடுத் தார்கள். அவனை வெல்ல முடியாது தோல்வி யுற்றனர். ஆனால் இப்போது பதினேழு வயது இளைஞனை சார்லசுக்கு வேலை கொடுப்போர், அன்புடன் அழைத்து ஒரு ரொட்டித் துண்டை யும் ஒரு கோப்பை தேநீரையும் கொடுப்போர் கிடையாது.

அவன் ஏன் வீட்டை விட்டு ஓடிவந்தான்? திருடினனை?—இல்லை.

வறுமையா? அது அவன் பிறந்தது முதல் அவன் கூடவே வளர்ந்து வந்த தோழன் ஆயிற்றே, இப்போது அதனால் அவனுக்குப் புதிய ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை.

தாய் தந்தையுடன் சண்டையா. இல்லையே?

பின் ஏன் அவன் வீட்டை விட்டு ஓடி வந்தான்.

ஒருநாள் சார்லஸ், பைபிள் படித்துக் கொண்டி ருந்தான். அதிலே அவனுக்கு சந்தேகம் ஏற் பட்டுள்ளது. முன்னுக்குப் பின் முரணை கருத் துக்கள் பின்னிக் கிடப்பதைக் கண்டான். தனக்குப் போதனை செய்த பாதிரியாருக்கு தனது சந்தேகங்களுக்கு விளக்கம் கோரி கடி தம் ஒன்று எழுதினான். அதுதான் அவன் செய்த குற்றம். "பரமனின் அருள் வாக்கில் குற்றம் கண்டு பிடிக்கிறானே பாவி" என்று பாதிரிமார் சீறினர். சில நாட்களுக்குள் அவன் நாஸ்திகன் என்று நிந்திக்கப்பட்டான்.

பிறந்த ஊரையும், பெற்று வளர்த்த தாய் தந்தையர்களையும் விட்டு விட்டு லண்டனுக்கு ஓட வேண்டியதாகி விட்டது.


1850-ம் ஆண்டு விஞ்ஞானத்தின் உதவியினால் ஆங்கில நாடு அதிகமாக முன்னேறுத நேரம், தொழிற் புரட்சியின் அலைகள் முழுதும்அங்கே

இன்னும் வீசத் துவங்கவில்லை. ஆனால் ஆங்கிலேயனின் மனதிலே எண்ணப் புரட்சி ஆரம்பமாகி யிருந்த நேரம். ஆங்கில நாட்டு மறுமலர்ச்சிக்கு வித்தூன்றிய 'சார்டிஸ்ட்' இயக்கம் அந்த நாட்டின் மூலை முடுக்குகளில் தனது பிரச்சாரத்தைச் செய்து வந்தது. சார்டிஸ்ட் இயக்கத்தை வெளிப்படையாக பலர் ஆதரிக்க முன் வரவில்லை. ஆனால் சரர்டிஸ்ட் இயக்கம் சிறிது சிறிதாக வளர்ந்து கொண்டே வந்தது.

இளைஞன் சார்லஸ் லண்டன்மாநகரின் வீதிகளில் அலைந்து கொண்டிருந்த நேரத்தில் அந்த நகரத்தில் சார்டிஸ்ட் இயக்கத்தினர் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் யாரிடமாவது சென்று உதவி பெறலாமா என்று சார்லஸ் யோசனை செய்தான். வேலை செய்வது என்றால் 'என்ன உனது படிப்பு' என்று கேட்டால் அவன் பாராட்டத்தக்க பதில் எதையும் சொல்ல முடியாது. அவனது படிப்பு ஏழாவது வகுப்புடன் நின்று போய்விட்டது. வளமையான உடல் அவனுக்கு கிடையாது. காற்று கொஞ்சம் அதிக வேகமாக அடித்தால் கீழே விழுந்து விடும் அளவுக்கு அவன் உடல் அமைப்பு மெல்லியதாக இருந்தது. எந்த வேலைக்கும் தகுதியில்லையே என்றால் பிச்சை எடுக்கலாமே என்று அவன் கருத முடியாது. அவன் உள்ளத்தில் தன்மானம் நிறைந்திருந்தது, இப்போது அவன் வீதிகளில் திரிகின்றான். அவன் ஊரில் அவன் ஒரு மேடைப் பேச்சாளி என்று பெயர் பெற்றவன். எழுகு உள்ளம் படைத்தவன். எதிர்ப்புக்கு அஞ்சாதவன் என்று அவன் போன்ற இளைஞர்கள் சார்லசைப் பாராட்டியிருக்கிறார்கள். இவ்வளவையும்விட நாஸ்திகன் என்ற பட்டப் பெயர் ஒன்று அவனுக்கு கொடுக்கப் பட்டிருந்தது. இந்த நிலையில் சார்லஸ் யாரைப் போய்ப் பார்க்கலாம் என்று எண்ணும் போது லண்டனில் சார்டிஸ்ட் இயக்க வாதி என்று புகழ் பெற்றிருந்த ஜோன்ஸ் என்பவரைப் போய் உதவி கேட்பது என்று முடிவு செய்தான்.

சார்லசின் வேலை தேடும் படலத்தைக் கேட்ட ஜோன்ஸ் மிகவும் பரிதாபப்பட்டார். ஒரு வார காலம் தன் வீட்டில் தங்கி உணவு உட்கொள்ளலாம் என்றும் அதற்கு மேல் தன்னுடைய பொருளாதாரம் இடம் தராது என்றும் வருத்தத்துடன் கூறி இந்த ஒருவார காலத்திற்குள் வேலை ஒன்று தேடிக் கொள்ளுமாறு அவர் கூறினர். சார்லசுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதுதான் ஜோன்சின் கருத்து. அவர் ஏழை; அவர் மட்டுமல்ல. உலகில் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்னவர்களில் பெரும்பான்மையினர் ஏழைகளாகவே இருந்திருக்கின்றனர். அந்த பொது உண்மைக்கு ஜோன்ஸ் மட்டும் விதிவிலக்கல்ல.

ஒரு வாரத்திற்குள் சார்லஸ் வேலை ஒன்றைத் தேடிக்கொண்டான். மெச்சத்தகுந்த வேலையுமல்ல. முதல் போடும் வியாபாரமும் அல்ல. முதலில்லாத வியாபாரம். அதுதான் அவன் தேடிக்கொண்டிருந்தது. நிலக்கரி வியாபாரம் செய்வது என்று அவன் முடிவு செய்தான். நிலக்கரி வியாபாரம் என்றால் நிலக்கரியை வாங்கி விற்பனை செய்வது அல்ல. ஊரிலே யாருக்கு



ஏராளமாக நிலக்கரி தேவை என்று விசாரிப்பது; அவர்களிடம் ஆர்டர் பெறுவது; நிலக்கரி இடத்தில் சென்று அதன் முதலாளியிடம் அந்த விபரத்தை எடுத்துச் சொல்லி தான் கொண்டு வந்திருக்கும் ஆர்டருக்கு நிலக்கரியை ஒரு வண்டியில் ஏற்றிச் சென்று ஆர்டர் பெற்றவரிடம் கொடுப்பது. இப்படியாக வியாபாரிக்கும் வாங்கும் நபருக்கும் இடையே சார்லஸ் தூது சென்றான். கமிஷன் வியாபாரியானான்.

இங்கிலாந்து சார்லஸ் பிராட்லாவை தனது வலிவு அனைத்தையும் செலுத்தி போற்றியிருக்கிறது. புத்துலகச் சிந்தனையாளன், சீர்திருத்த செம்மல், என்றெல்லாம் ஆங்கில நாட்டு மக்கள் சார்லஸ் பிராட்லாவைப் போற்றியிருக்கிறார்கள். அதே நேரத்தில் நாஸ்திகன், நானிலத்தின் விரோதி, கர்த்தனின் பெருமையை புழிக்கும் எத்தன்; என்றெல்லாம் சார்லஸ் பிராட்லாவை ஆங்கிலேயர் தூற்றியுமிருக்கின்றனர். இன்றோ சார்லஸ் நிலக்கரி கிடங்குகளிலே நின்று பேரம் பேசுகிறான். வாரம் ஒன்றுக்கு பத்து ஷில்லிங்குகள் அந்த இளைஞனுக்கு கிடைத்ததாம்.

அந்தோ, பரிதாபம் என்று தோன்றுகிறது அல்லவா?

இப்படிப் பார்த்தால் நாம் அடிக்கடி அந்தோ பரிதாபம் என்று சொல்ல வேண்டி வரும். உலகில் அறிஞர்கள் என்று போற்றப்படுவோர் பலருடைய வாழ்வு பரிதாபகரமானதாகவே இருந்திருக்கிறது.

ஏழைகளின் வாழ்வு உயர வேண்டும். இல்லை என்ற சொல்லே உலகில் நிலவக்கூடாது என்று விரும்பிய காரல்மார்க்ஸ் லண்டன் மாநகரில் "மூலதனம்" என்ற புத்தகத்தை எழுதினார். அதை எழுதும் போது அவருடைய வீட்டில் இருந்த கடைசி சாமான் வரை விற்கப்பட்டு விட்டதாம். பல நாள் பட்டினியாகவே இருந்திருக்கிறார் என்று சரித்திரம் சொல்லுகிறது.

இத்தாலிய மக்களுக்கு ஒரு காலத்தில் வழி காட்டியாக விளங்கினவன் முசோலினி. அவன் சொல்லுக்குப் பணியாதார் யாருமில்லை என்னும் அளவுக்கு அந்த பாசிசத்தின் தலைவன் ஒரு நாள் பசியின் கொடுமை தாங்காது பூங்கா ஒன்றில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த இரண்டு பெண்களிடமிருந்து ரொட்டிகளை திடீரென்று பாய்ந்து எடுத்துக் கொண்டு ஓடினான் என்று சரித்திரம் சொல்லுகிறது.

அமெரிக்க நாட்டின் ஜனதிபதியாகும் வாய்ப்புப் பெற்ற ஒருவர் தனது சிறுவயதில் பத்திரிகை விற்றுப் பிழைத்தார் என்று காண்கிறோம்.

உலகைத் திருத்திய உத்தமர்கள் பலர் வறுமையிலே பிறந்திருக்கிறார்கள். வறுமையிலே வாழ்ந்திருக்கிறார்கள், வறுமையிலேயே மாண்டு போயிருக்கிறார்கள்!

சார்லஸ் பிராட்லா செய்த வியாபாரம் சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கையில் காணக் கிடைக்காத நிகழ்ச்சியல்ல. ஆனால் அந்த வியாபாரம் துவக்கப்பட்டதும்—முடிவுற்றதும் பலர் வாழ்க்கையிலே காணப்படாத நிகழ்ச்சிகள். பசி அந்த வியாபாரத்தை ஆரம்பித்து வைத்தது. அவன் வளர்த்த கொள்கை அவனுக்கு அரை வயிற்றுக் கஞ்சி வார்த்துவந்த அந்த வியாபாரத்தை நிறுத்திவிட்டது.

மூலதனம் இல்லாது நடந்து வந்த நிலக்கரி வியாபாரத்தில் சார்லஸ் வெகு தீவிரமாக ஈடுபட்டான். சார்லசின் வியாபாரத்தில் பெரும் பகுதி ரொட்டிக் கிடங்கு ஒன்றில் நடைபெற்று வந்தது. ரொட்டிக் கிடங்கின் முதலாளியின் மனைவிக்கு பிராட்லாவைப் பார்த்தவுடன் பரிதாப உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. லண்டனின் பெரிய ரொட்டி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அவளுடைய கணவனுடையது. நாள் தோறும், அங்கே பதினைந்து டன்னுக்குமேல் நிலக்கரி செலவாயிற்று என்று தெரிகிறது.

சார்லசுக்கும் நிறைய கமிஷன் கிடைத்துக் கொண்டிருந்தது. எப்படியோ சார்லஸ் பிராட்லாவைப் பற்றிய முழு விபரங்கள், அந்தப் பெண்மணிக்குத் தெரிந்துவிட்டது. சார்லஸ் நாஸ்திகன் என்றும், பைபிளைப் பழிப்பவன் என்றும், அதன் காரணமாக ஊரை விட்டு விரட்டப்பட்டவன் என்றும், யாரோ சிலர் அந்த அம்மாளிடம் கூறிவிட்டனர். அவ்வளவுதான். "லபோ லபோ" என்று வயிற்றில் அடித்துக் கொண்டாள், அந்த மாது சிரோன்மணி. 'பாவியிடமா நிலக்கரி வாங்குகிறேன், பரமனே!' நான் நரகத்துக்கல்லவோ போகவேண்டும் என்று புலம்பினாள்.

மறு நாள் சார்லஸ் நிலக்கரி எவ்வளவு தேவை என்று தெரிந்து கொள்ள ரொட்டிக் கிடங்கிற்கு வந்தான். சார்லசைக் கண்டதும் அந்த அம்மாள் அவசரம் அவசரமாக வாயிற்படிக்கு ஓடிவந்தாள்.

"நாஸ்திகன் என்றால் யார் என்று என்னையா கேட்கிறாய்? நீ நாசமாபோக! உன்னிடம் பேசுவதே பாவம். அட பாவி, உன் கையினால் நிலக்கரியைத் தொடாதே. அதன் பாவம் ரொட்டியையும் ஒட்டிக் கொள்ளப் போகிறது. போ! வெளியே. எனக்கு நிலக்கரி தேவையில்லை. என் முன் இனிமேல் வராதே. இந்த ஊரைவிட்டே ஓடிவிடு" என்று அந்த மாது கூச்சலிட ஆரம்பித்து விட்டாள்.

கூச்சலிட்டது மட்டுமல்ல; கொண்டு வந்த நிலக்கரிக் கூடையை அவனது தலையிலே கவிழ்த்தாள்.

சார்லஸ் வேதனையுடன் வெளியேறினான். வாரம் ஒன்றுக்குப் பத்து ஷில்லிங் வருமானம் அளித்து வந்த வியாபாரம் சார்லசை விட்டுப் போய்விட்டது. ஆம்! சார்லஸ் பிராட்லா அதற்குப் பின் நிலக்கரி வியாபாரியாக வாழ்ந்தது கிடையாது. உலகத்தின் புகழ் பெற்ற நாஸ்திக வாதிகளுள் முதலாமவன்—என்றே பெயர் வாங்கியிருக்கிறான்.



நாகரிகம் வளர்ந்த ஆரு யிரம் ஆண்டுகட்கு மேல், ஏன்—மனிதன் தோன்றிய அறுபதாயிரம் ஆண்டுகளா கவே பெண் ஆணைவிடத் தாழ்ந்தவளாகவே கருதப் பட்டாள்—தாழ்த்தவும் பட் டாள். பெண்ணே தலைவியா யிருந்து வந்த தாய்வழி சமு தாயம்தான் உலகத் தோற் றத்திலிருந்து வந்துள்ளது என்று மார்கன், ஜெங்கல்ஸ் போன்ற பேரறிஞர்கள் தங் கள் நூல்களில் கூறியுள்ள னர். உலகில் எத்தனையோ பாகங்களில் பெண்கள் உட லுழைப்பில் கடினமான வேலைகளைச் செய்து வந்தார் கள்—செய்தும் வருகிறார் கள். ஆனலும் ஆணே உயர்வடைகிறான். கல் வி யில் பெண்ணிற்கு ஆணை விட குறைந்த சலுகைகளே தரப்பட்டன; வீட்டு பரா மரிப்புக்கோ கூலி கிடை யாது; வெளி வேலைகளிலும் ஆணைவிட குறைந்த ஊதி யமே! அரசாங்க அலுவல் களிலோ—அன்றி அரசியல் கட்சிகளிலோ பெண் இடங் கொள்ள முடியாது. 90 ஆண்டுகட்குப் பி ற கே உரிமை ஏற்பட்டதே தவிர, அதற்கு முன் அந்த உரிமை யும் கிடையாது. இது பதி னெட்டாம் நூற்றாண்டில் நிலவிய பெண்களின் நிலை.

உரிமைகள் பல உருவங் களில் உலகையே ஆட்டிப் படைத்த நேரம்—பிரஞ்சு புரட்சிக்குப் பிறகு 1792-ம் ஆண்டில் பெண்களின் வாழ்வு 'புழுதிமேடு' என்றி

சத்தியவாணிமுத்து

ருந்த காலை, 'பெண் உரி மைக்கோர் பரிவு' என்று ஒரு பெண்குரல் கேட்டது. ஒலி எழுப்பியவள் இதற்கு முன் ஊர் பேர் தெரியாத ஏழை பெண் எழுத்தாளர். மேரி ஓல்ஸ்டோன் கிராப்ட் பழமை உலகத்தில் வீசப் பட்ட வெடிகுண்டு. காண தைக் கண்ட ஆச்சரியம்— அருவெறுப்பு — அ ல ற ல் போன்ற எல்லாவித உணர்ச் சிகளும் ஒன்று சேர்ந்து வர வேற்றன அந்த புதிய வெளி யீட்டை.

மேரி ஓல் ஸ் டோ ன் கிராப்ட்—அவளுக்கு முன் எத்தனையோ பெண்கள் பெ ண் ணி ன த் தி ற் கு பெருமை தேடித்தந்துள்ள னர். அரசிகளாகவும், கவிக் குயில்களாகவும் அரசியல் தலைவிகளாகவும் இருந்திருக் கிறார்கள். ஆனலும் பெண் ணுரிமைக் குரலை எழுப்பிய வள் நமது மேரிதான்.

மேரி 1757-ல் லண்டன் நகரில் ஆக்ஸ்டன் கிராமத் தில் பிறந்தவள். சிறுமியாக இருக்கும்போதே பெண்ணி னத்திற்கு பாடுபட எண் ணங் கொண்டாள். இரக்க மற்ற அரக்கன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட தனது தமக்கையை அ வ னி ட மிருந்து பிரித்து அக்காவின் துன்பத்தைத் து டை த்த பெருமை மேரியின் நற் தொண்டுக்குமுடியமைத்தது

ஸ்கே என்பான் மேரியின் இதயங் கவர்ந்தவன்—தன் தோழியின் உதவியால் தனது காதலனுக்கு வேலை தேடிக் கொடுத்தாள் மேரி.

வாழ்க்கைச் சகடம் உருண்டது. ஆனாலும் அவளது ஜீவலட்சியம் பெண்ணுரிமைக்குப் போரிடல் என்பதை அந்த மாது சிரோன்மணி மறந்தாளில்லை. தனது குடும்பபாரமும், இதுகாறும் தனக்கு துணைபுரிந்த தனது தோழியின் குடும்பபாரமும் மேரியை அழுத்தின. என்றாலும் ஏழ்மையில் உழன்று கொண்டே அந்தஇலட்சியப் பெண்மணி 'பெண் கல்விக்கான சிந்தனைகள்' என்றநூலை எழுதி முடித்தாள் அவளுடைய உழைப்பு பெற்றெடுத்த தலைக் குழந்தை அந்த அறிவுக் கருவூலம் தான்! அதற்குப்பின் அவளால் எழுதப்பட்ட புத்தகங்கள் பல வெளியிடப் பட்டன. மேரி தன் வாழ்வின் இறுதிக்கட்டம்வரை 'பெண்ணுக்குச் சமஉரிமை தரும்வரை இந்த மண்ணுக்குக் கேடுதான்' என்றுரைத்துக் கண்மூடிய புரட்சிக்காரிகைகளில் ஒருத்தியாகவே திகழ்ந்தாள்.



மேரி சாகும்போது வயது 38! சாகக் கூடாத பிராயம் தான் அது! இந்த சண்டாளச் சாவுதான் சத்புத்திரிகளின் உழைப்பின் பயனைக் கண்ணுரக் காணவிடுவதில்லையே!

மேரியின் புதுமை குலையாத எழுத்துக்களுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. மொத்தத்தில் பெண்ணுரிமை என்னும் விதை தூவப்படுமுன் அதற்காக நிலத்தைப் பண்படுத்தியவள் மேரியே எனலாம்.

அதன்பின்னரே பெண்ணுரிமை பல இலக்கியகர்த்தாக்களின் கவனத்தையும் கவர்ந்தது. இப்சன், தனது 'பொம்மை வீடு' என்ற நாடகமூலம் பெண்களின் உரிமைக்கு உலகையே அறை கூவி அழைக்கிறார். கணவனால் பொம்மையாக்கப் பட்டு கூண்டுக் கிளியென வாழ்ந்து பிறகு தானே 'விடுதலை வாழ்விற்கு' பறந்து சென்ற ஓர் புரட்சிப் பெண்ணின் கதையே இப்சனின் பொம்மை வீடு.

பெர்னட்ஷாவின் நாடகங்களில் பெரும்பாலும் பெண்மை மணம் வீசுவதைக் காண்கிறோம்.

இப் பெரு முன்னேற்ற வெள்ளத்திற்குக் காரணமான முதல் நீர் தெளித்தது மேரி ஒல்ஸ்டோன் கிராப்டின் 'பெண்ணுரிமைக்கோர் பரிவு' என்னும் நூலே. ஆரம்பத்தில் பல எதிர்ப்புகள் இருந்தாலும் இன்று உலகம் அதை ஏற்றுக் கொள்கிறது.



"என்னடி, சுப்புப் பாட்டி! **கன்னிப் பொங் கலதுமா** பேசாம உட்கார்ந்திருக்கியே! நீ வரல்லியா?"

ஓவியம்: ரெசாக்



புகைப் படம்: மதருஸ் போட்டோ ஹவுஸ், வேலூர்.

கூடை முறம் கட்டுவோம்;
குறி சொல்ல மாட்டோம்!



— ஓவியம் : கே. சேது, மாயூரம்.

வல்லவனைத் தேர்ந்தெடுக்க
வனிதையர் கூட்டம் !

கலைமான் கூட்டம்—காட்டுப் பிறவி கள்தான். இருந்தாலும் அவை கடைப் பிடிக்கும் திருமண முறை வியக்கத்தக்கது. பெண்மானின் கூட்டத்துக்கு தலைமைவகித்துச் செல்லும் ஆண்மான், எதிரே வேறொரு ஆண் மானைப் பார்த்து விட்டால், அந்தக் காளையரிடையே உடன் போர் துவங் கும். கூர் கொம்புகள் போர் வாட்களா கின்றன. போரின் முடிவு...? வென்ற வனுக்கு மணமாலை சூட காத்திருக் கின்றன பெண் மான்கள். பண்டைய தமிழக அரச குலத்தினரின் 'சுய ம்வர'த்தை நினைவுறுத்தும் அந்த அழகுச் சித்திரம்தான் மேலே!



மாலைநேரம்! வானம் மப்பும்—மந்தாரமுமாக இருந்தது. நான் அந்த நெடுஞ்சாலையில் நடந்து கொண்டிருந்தேன். வானத்தில் இருண்ட மேகங்கள் இங்கும்—அங்கும் அலைமோதிக் கொண்டிருந்தன, என் உள்ளத்தைப் போல! பிசு பிசு என்று மழைவேறு தூறிக் கொண்டிருந்தது. இவைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் அர்த்தமில்லாமல்—நான் நடந்து கொண்டிருந்தேன். அடுக்கடுக்காக என் வாழ்வில் ஏற்பட்ட தோல்விகள்—அதன் காரணமாக ஏற்பட்ட ஏமாற்றம்—அதன் விளைவாக உண்டான ஏக்கம் என் இதயத்தை பிழிந்து கொண்டிருந்தது. காலத்தின் கோலத்தால் நானை செய்த தவறுகள்—சூழ்நிலையினல் நான் செய்த தவறுகள்—அதனல்என்இன்பக்கனவுகள் எல்லாம் சிதைந்து போனதை நினைத்து—நினைத்து என் இதயம் அழுது கொண்டிருந்தது.

அழுது—அழுது ஈர்த்துப்போயிருந்த என் இதயத்துக்கு சிகரெட் புகையினல் சூடேற்றிக் கொண்டே நடந்து கொண்டிருந்தேன். சீமைச் சரக்கால் சிங்காரித்துக் கொண்டிருக்கும் சென்னை நகரின் எல்லையைக் கடந்து விட்டதையும் உணரவில்லை. அந்த சாலையில் இருந்த கடையிலிருந்து,

"ஆசைமுகம் மறந்துபோச்சே
இதையாரிடம் சொல்வேனடி—தோழி
நேசம் மறக்கலாச்சே : நெஞ்சம்
நினைவுமுகம் மறக்கலாமோ....."

என்ற கோகிலத்தின் குரல் என் சிந்தையைக் கவர்ந்தது. ஆசைமுகம்-ஆமாம்! என் இதய வானில் வட்டமிட்ட அந்த முழு நிலவு—என் வாழ்வின் விடிவெள்ளி-இனிக்க இனிக்கப் பேசி என்னை இன்பபுரிக்கு அழைத்துச்சென்ற இன்பவல்லி — காந்தள் விரல்களால் என் கன்னத்தை வருடி—ரோஜாஇதழ் போன்ற தன் அதரத்தால் முத்தமிட்டு — "கண்ணுளா! எத்தகைய இன்னல்கள்வந்தாலும் என்னை மறவாதீர்"—என்று கூறி, கோர்த்த முத்துபோல் கண்ணீர்விட்ட அந்த கண்ணழகி இன்று எங்கே? ஒருநாள் என் வாழ்வில் விளையாடிவிட்டு எங்கேயோ ஓடிவிட்டாள். தேடித் தேடி அலைகிறேன். அவளைக் கண்ட பாடில்லை. எந்த வல்லூறுஅந்தமாடப்புறுவை கொத்திச் சென்றதோ? "அய்யோ! பாவி என்னை மோசம் செய்து விட்டானே; இனி எதற்கு எனக்கு வாழ்வு "என்று குளத்தையோ அல்லது ஒருமுழ கயிற்றின் உதவியையோநாடிவிட்டாளா? என்விழியிலேபுகுந்து என் இதய மேடையில் சதிராடிய அந்த சிங்காரியை இனி காண்பேனு? என் இதயக் கோயிலில் வைத்து, நித்தம் நித்தம் பூஜை செய்யும் அந்த ஆசைமுகம் எனக்கு கிட்டாத தேன் தானு? எட்டாத நிலவுதானு? கடந்த காலத்தின் நடந்துபோன நிகழ்ச்சிகளில் என் நெஞ்சம் இணைந்துவிட்டிருந்ததால்—வானம் இருண்டு மழை பொழிய ஆரம்பித்ததையும் நான் உணரவில்லை. சீறி சீறி அடித்தது காற்று. சுரீர் சுரீரென்று தைத்தது மழைத்தூறல்கள். மரங்களின் மஞ்சத்தையும் நான் தஞ்சம் அடைய இயலாத வாறு அவைகள் ஆடிக் கொண்டிருந்தன. பளிச்—பளிச் சென்று மின்னிய ஒளியில் சாலைக்கு அடுத்து இருந்த தென்னஞ் சோலையில் ஓர் வீடு என் கண்களில் பட்டுத் தெரித்தது. நான் அதை நோக்கி நடந்தேன். அந்த தென்னம் தோட்டத்தின் செப்பனிட்டப் பாதை என்னை அந்த வீட்டுக்கு அழைத்துச்சென்றது. கதவு மூடப்பட்டிருந்தது. உள்ளே தெரிந்து கொண்டிருந்த விளக்கு எனக்கு வழி



காட்டியது. நான் தாழ்வாரத்தில் ஒதுங்கினேன். என் காலடியோசையைக் கேட்டோ — என்னவோ ''யாரது?'' என்ற குரல் உள்ளேயிருந்து வந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். கதவில் பொருத்தப்பட்டிருந்த சிறிய கம்பி ஜன்னலின் ஊடே என் விழியைச்செலுத்தினேன். ஒரு முழுவட்ட நிலவு அங்கே தெரிந்தது. கூரிய இரு விழிகள் என்மேல் பாய்ந்தன. யாரது...? என்ற குரல் சிறிது அதட்டலாகவே வந்தது. நான் கதவிற்கு அருகில் சென்றேன். 'மல்லி' என்று கத்திவிட்டேன் என்றே நினைக்கிறேன்—ஆமாம்—அவள்தான்; அவளேதான்! என் இதயத்திலிருக்கும் அந்த அழியாத சித்திரம்தான்—பாசத்தையெல்லாம் என்மேல் கொட்டிய அந்த ஆசை முகமேதான்.

''ஓ! நீங்களா? உள்ளே வாருங்கள்'' என்று கூறியவாறே கதவைத் திறந்தாள். என் விழிகளால் அவளை விழுங்கியபடியே நான் உள்ளே நுழைந்தேன்.

''உட்காருங்கள். இந்தாருங்கள் டவல்—துவட்டிக் கொள்ளுங்கள். என்ன? உங்கள் உடல் நடுங்குகிறதே-நன்றாக மழையில் நனைந்து விட்டீர்கள்-சற்று இருங்கள். நொடியில் சூடாக காப்பிகொண்டுவருகிறேன்''என்று கூறியபடியே அவள் துள்ளி ஓடினாள். அவளின் உடல் அசைவிலே நான் மெய்மறந்து போனேன். அருகில் இருந்த நாற்காலியில் எப்படி நான் உட்கார்ந்தேனோ; எனக்கே புரியவில்லை. என் மனத்திரை முன்னே அந்த நாள்-படக்காட்சிப்போல் ஓட ஆரம்பித்தது.

* * *

நான் அப்போது பட்டாளத்தில் பெரிய பதவியில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அம்முறை வழக்கம்போல் சேலத்தை அடுத்துள்ள ஓகனக்கல் காவேரியில் என் 'யூனிட்' முகாமிட்டிருந்தது.

அடர்ந்த காடு, ஆங்காங்கே சிறு குன்றுகள்-அவைகளைத் தழுவியபடி ஓடும் காவேரி—தபதபவென்று விழும் நீர்வீழ்ச்சி—அகண்ட காவேரி அங்கு 'ஆடுதாண்டு'மளவுக்கு குறுகிக் கூனி ஓடும் அற்புதக் காட்சி—புள்ளிமான்கள் துள்ளி ஓடும் அழகு—சிறு சிறு குன்றுபோன்ற யானைக் கூட்டம்—கண்களுக்கு நிறைந்த விருந்தாக இருந்தது. நான் அங்கிருந்த காட்டிலாக்கா மாளிகையில் தங்கியிருந்தேன். என்னைப்போல வேறு சிலரும் அங்கு தங்கியிருந்தனர். அவர்கள் தங்களது ''பாவ மூட்டைகளை'' காவேரியில் கழுவ வந்தவர்கள்.

நான் கையில் கேமிராவுடன் புறப்பட்டேன். இயற்கை அன்னையின் எழிலை என் சிறிய பெட்டிக்குள் அடைத்த வண்ணம் காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்த கண்களுக்கு ஒரு 'அற்புதக் காட்சி' தென்பட்டது.

'ஹோ' என்ற இரைச்சலுடன் நீர் வீழ்ச்சி விழுந்துகொண்டிருந்தது. அதற்கு அருகில் ஓர் நவநாகரீக நங்கை அலை அலையாக சுருண்டு நீண்ட கூந்தலைக் கோதியபடியே நீர்வீழ்ச்சிமேல் தன் விழியைப் பதியவைத்து நின்றுகொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆகாயக் கலர் ஆர்கண்டிவாயல் புடவையும்—அதற்கு எடுப்பாக இரத்த சிகப்பு வெல்வெட் சோலியும்—அவளின் அழகுக்கு மெருகு ஏற்றியது. ஓர் காட்டு ரோஜாவை அவள் கூந்தலில் சொருகி இருந்தாள், ''நான் சிகப்பா—அல்லது அவளின் கன்னங்கள் சிகப்பா'' என்று அந்த ரோஜா கேட்பதுபோல் இருந்தது. அவளின் கன்னங்களில் முத்து முத்தாக இருந்த தண்ணீர்த் துளிகளும்—அந்தக் காட்டு ரோஜாவில் இருந்த பனித்துளிகளும் சூரிய ஒளியில் வைரம்போல் மின்னின. ஒரு அருமையான போஸ் கிடைத்ததை விட்டு விடுவேனா? அவளை—அந்த வனராணியை என் காமிராவில் சிறைபிடிக்க முற்பட்டேன். கிளிக்! அவ்வளவுதான். அந்த பேசும் கிளியை என்



கூண்டில் அடைத்துவிட்டேன்.

'கிளிக்' என்ற சத்தத்தைக் கேட்டவுடன் அவள் திரும்பினாள். என் கோலத்தைக் கண்டதும் அவளின் கண்கள் கனலை எழுப்பிற்று.

''மன்னிக்க வேண்டும்—நான் சிலை என்று நினைத்து.....''

''சிலையாவது கலையாவது, பெண்களைப் படம் எடுப்பதுதான் உமது வேலையோ?''

''இல்லை, இல்லை'' என்று கூறிய வண்ணம் அவளை நெருங்கினேன். என் விழிகளை என்னாலேயே நம்ப முடியவில்லை. ஆமாம்—அவள்—மல்லிகா-என்னுடன் படித்தவள்—என் கல்லூரித் தோழி.

''என்ன? மல்லி, என்னைத் தெரியவில்லையா?''

''மல்லியாவது, முல்லையாவது''.....

அவள் இதழ் ஓரத்தே குறுநகை தவழ்ந்து ஓடியது. சிறிது தைரியம் வந்தது எனக்கு. ''நீங்கள் செய்த தவறுக்கு என்ன தண்டனை தெரியுமா? கேமிராவைக் கொடுங்கள். உங்களைச் சிறை பிடிக்கின்றேன் .....' என்றாள் சிரித்தபடியே.

''ஆமாம்; நீங்கள் எங்கு இங்கே வந்தீர்கள்?'' என்றேன்.

''இந்த 'கள்' எல்லாம் எனக்குப் பிடிக்காது என்பதை மறந்து விட்டீர்களா?''

''மறக்க முடியுமா? மல்லி. கல்லூரி சாலையிலும்—சோலையிலும் நாம் கழித்த அந்த இன்ப நாட்களை மறப்பதா? காலம் என்னும் பெரும் 'பாவி' நம்மை பிரித்து விட்டான்—மீண்டும் இந்த அடர்ந்த காட்டிலே நம்மை சந்திக்க வைத்திருக்கிறான்.''

''ஆமாம்; நானும் என் தந்தையும் திடீரென்று இங்கு வந்தோம்.....''

''அப்பா என்ன வேலையில் இருக்கிறார்?''

''அவருக்கு மாப்பிள்ளை தேடும் வேலை.....'' கல கல வென்று சிரித்துக்கொண்டே கூறினாள். வெட்கத்தால் அவளின் ரோஜா கன்னங்கள் சிவந்து விட்டன.

'நல்ல வேளை' என்று கூறிக்கொண்டே அவளை நெருங்கினேன். இருவரும் பேசிக் கொண்டே—பழைய சம்பவங்களை நினைவு படுத்திய வண்ணம் ஒரு இன்ப உலகில் சஞ்சரித்துக் கொண்டே — நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். எங்கள் இருவரின் கைகளும் பின்னிக் கொண்டிருந்ததை நாங்கள் நீண்ட நேரத்திற்குப் பின்தான் உணர்ந்தோம். அகண்ட ஆலமரம் எங்களுக்கு அபயம் அளித்தது. அதன் நிழலிலே நாங்கள் அமர்ந்தோம். சல சல வென்று ஓடும் சிற்றாற்றின் ஓசை, குழலோசையைப் போல் இனித்தது. குளு குளுவென்று வீசிய தென்றல் எங்களுக்கு கிளுகிளுப்பை ஊட்டியது.

'மல்லி' என்றேன் நான்.

'அத்தான்' என்றாள் அவள்.

என் இரு கைக்குள் அடங்கிவிட்டாள் அவள். என் கன்னங்களை வருடியபடி இருந்தன அவளின் தளிர்க் கரங்கள். அவளின் மாம்பழக் கன்னங்களை என் உதடுகளால் எச்சில் படுத்தினேன். எங்கேயோ ஒரு இன்பலோகத்துக்கு-உயர உயர பறந்து கொண்டிருந்தோம்.

இயற்கையும்-பருவஉணர்ச்சியும்-எங்களை பழிவாங்கிக் கொண்டது. நான் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே கூசினேன். அவள் 'சரே' லென்று எழுந்து ஓடினாள். அவள் அணிந்திருந்த அந்த காட்டு ரோஜா இதழ்கள் பறந்தபடியே கீழே விழுந்தது. நான் ஓடிச் சென்று எடுத்தேன். அதில் இருந்த முள் என் விரலை குத்தி இரத்தத்தை ருசி பார்த்தது-விரலை மட்டுமா? என் இதயத்தையே குத்தி இரத்தத் தடாகமாக்கி விட்டது. வெகு தூரம் சென்ற பின் அவள் என்னை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். அவளின் கண்கள் ''என்னைக் கைவிடாதே'' என்று கெஞ்சின.

''சே! என்ன காரியம் செய்து விட்டோம்'' என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். மனம் அமைதியில்லாமல் தத்தளித்தது. நெருப்பு போல் சுட்டது அந்த நினைவு! கால் போன போக்கில்—அந்த காட்டில்—மாலை வரை சுற்றிக் கொண்டிருந்தேன். மீண்டும் அவள் முகத்தில் எப்படி விழிப்பது; அவளும் பக்கத்து அறையில் இருப்பாளே என்று நினைத்த வண்ணம் என் அறையைத் திறந்தேன். ஒரு கசங்கிய கடிதம் கீழே கிடந்தது. அதைப் பிரித்தேன்.

''கண்ணாளா!

பருவ உணர்ச்சிக்கு இயற்கையின் இரக்கமற்ற தன்மைக்கு நாம் பலியாகி விட்டோம். என் தவறு உங்கள் தவறு என்று சர்ச்சை செய்ய தேவையில்லை. நாம் இருவருமே தவறு செய்து விட்டோம். அந்தத் தவறை நாம் சாதகமாக்கிக் கொள்வோம். என்னை கைவிடாதீர்கள். அவசரமாக அப்பா புறப்பட்டுவிட்டார். ஆகவே நானும் என் உயிரைப் பிரிந்துச் செல்கிறேன். என்னைப் பழிச் சொல்லுக்கு ஆளாக்காதீர்கள்

அபலை, மல்லி''

நான் வெளியே ஓடிவந்து விசாரித்தேன். அவர்கள் காலியிலேயே போய்விட்டார்கள் என்ற தகவல் கிடைத்தது.

எப்பக்கம் எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் மல்லியை என் இல்லத்து ராணியாக்கிக்கொள்வது என்ற திட நம்பிக்கையுடன் புறப்பட்டேன்.

சேலத்தில் எனக்கு திடுக்கிடும் செய்தி காத்திருந்தது. என்னை என் யூனிட்டுடன் பர்மா போர் முனைக்குப் போகும்படி தலைமை நிலையத்திலிருந்து கட்டளை வந்திருந்தது.

* * * *

என் தாயகத்தை விட்டு—பர்மா காடுகளிலே பகைவர்களை எதிர்த்து போரிட்டுக்கொண்டிருந்த நேரத்திலே கூட மல்லிகாவை நினைத்து நினைத்து நெகிழும் என் நெஞ்சு. அந்த ஆசை முகத்தை அடையும் நாள் எந்நாளோ—அந்தத் திருநாள் என்று வரும் என்று எண்ணி எண்ணி ஏங்குவேன்.

தாயகம் திரும்பியதும் அவள் மாலை சூட்டி வரவேற்பாள்—பின் இருவரும் மணமாலையை மாற்றிக்கொள்வோம் என்ற இன்ப நினைவில் போர்முனையின் துன்பங்கள் எல்லாம் எனக்கு தூசாகத்தெரிந்தன. இட்லர் இருக்குமிடம் தெரியவில்லை, ஜப்பான் சரணைதியடைந்து விட்டது என்ற வெற்றிச் செய்தியை ஒரு நாள் காலைக் கதிரவன் கொண்டுவந்தான்.

நாங்கள் இன்பவெள்ளத்தில் மிதந்தவாறு தாயகம் திரும்பினோம். போர்க்களத்திலிருந்து வெற்றியோடு திரும்பிய எங்களை வரவேற்க ஆயிரமாயிரம்பேர் கூடியிருந்தனர். யார் யாரோ என்னை வரவேற்றார்கள். ஆனால், அவள்..... அவள்.....அவள் எங்கே? மலைபோல மாலைகள் குவிந்தன. ஆனால் அவைகள் அவளின் ஒரு மாலைக்கு ஈடாகுமா? நான் விரைந்தேன் அவளைத்தேடி. இழுத்துப் பூட்டப்பட்ட கதவுகள் எனக்கு பதில் அளித்தது. அவளும் அவளின் தந்தையும் எங்கு சென்றார்கள் என்று தகவல் கொடுக்க யாரும் தயாராக இல்லை.


* * * *

அன்று முதல் அவளைத் தேடித் தேடி அலைந்தேன். இன்று அவளை நாடியே வந்துவிட்டேன்.

மகிழ்ச்சியால் என் உள்ளம் துள்ளியது. என் இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன. உணர்ச்சிப் பெருக்கால்—திடீரென்று ஏற்பட்ட மகிழ்ச்சியால் என் உடல் நடுங்கியது. கைகள் துடித்தன. கண்கள் சிவந்தன. அவளை—என்னுடையவளை அணைத்துக் கொள்ள. என் உதடுகள் துடித்தன, அவளின் கோவைக் கனியை ருசிக்க.....

அவள் கையில் காபி டம்ளரோடு வந்தாள் 'மல்லி' என்று கூறிக்கொண்டே என் கைகளை விரித்தபடி அவளை நெருங்கினேன். அவள் கையிலிருந்த டம்ளர் கீழே விழுந்தது. 'ஆ' என்று கூச்சல் இட்டபடியே ஓடி அங்கே மஞ்சத்தில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை எடுத்து மார்போடு அணைத்து முத்தமிட்டாள்.

மழலை மொழி பேசும் அந்தக் குழவியின் "குவா, குவா" என்ற சத்தம் என்னை "போ போ" என்று துரத்தியது. நான் வாயிற்படியை நோக்கித் திரும்பினேன். ஃ



கலையும் கிரையும்

சினிமா! ''ஐயையோ! சினிமாவா? கூடவே கூடாது—பார்க்காதீர்கள்—வீணைக் கெட்டுப் போவீர்கள்''—சிறந்த ராஜதந்திரிகள், அரசியல் விவேகிகள் என்று சொல்லப்படும் சில கிழவர்களின் கூக்குரல் இப்படி! ''சினிமாவைத் தடை செய்யுங்கள்—எங்களது குழந்தைகள் கெட்டு விடுகிறார்கள்''—இது டெல்லித் தாய்மார்களின் விண்ணப்பம் அரசாங்கத்துக்கு. இருந்தும் மக்கள் பார்க்கிறார்கள் இந்த சினிமாவை. தினம் தினம் கணக்கற்றவர்கள் தியேட்டர்களின் முன்பு 'கியூ' வரிசையில் காத்துக்கொண்டுதானிருக்கின்றனர். ஊர் ஊராக புதுப்புது தியேட்டர்களும், டென்ட்களும் வளர்ந்து கொண்டுதானிருக்கின்றன. பத்துப் பன்னிரண்டு மைல்கள் நடந்தாவது சென்று சினிமா பார்த்தே தீருவது என்ற நிலையிலிருக்கிறான், ஒரு சாதாரண பட்டிக்காட்டான் கூட! அறிவாளிகள் என்று சொல்லப்படும் ஒரு சிலரின் எதிர்ப்பு, பொதுமக்களின் ஆதரவு,—இந்த சூழ்நிலையில்தான் வளர்ந்து வருகிறது சினிமா, நம் நாட்டைப் பொறுத்தவரையில்.

சினிமா விரோதிகளின் முதற்கூற்று சினிமா ஒரு கலையேயல்ல—இரண்டாவது, அது இன்று மக்களிடைகிழ்த்தரமான உணர்ச்சிகளைத்தூண்டி விட்டு, அவர்களைக் கெடுத்து வருகிறது—மூன்றுவது அது வெறும் பொழுது போக்கு சாதனம் என்ற இவைகள்தான்.

சினிமா ஒரு கலையா? இந்த ஐயப்பாடு படித்தவர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது. சாதாரண மக்கள் கலையைப்பற்றிய சர்ச்சைகளிலேயே இறங்குவதில்லை. அவர்கள் தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு செய்கை அல்லது காரியம் நல்லதா கெட்டதா என்பதுதான். இலக்கியம், நாடகம், இசை, நடனம், சிற்பம், ஓவியம் போன்ற கலாசாதனங்கள் அல்ல சினிமா. அது ஒரு சாதாரண இயந்திர சாதனம், சாவி கொடுத்து விட்டால் குதிக்கின்ற விளையாட்டுப் பொம்மைபோல. அவ்வளவுதான்.—இப்படி ஒரு தவருன எண்ணம், படித்தவர்களிடையில்!

கலை என்றால் என்ன? ஒருவன் தான் அனுபவித்துணர்ந்த உணர்ச்சி பாவங்களை, வேண்டுமென்றே கற்றவர்களையும் அனுபவித்துணரும்படி செய்யும் சாதனம் அல்லது செய்கை கலை என்று சொல்லப்படுகிறது. இந்த விளக்கத்தில் யாருக்கும் அபிப்பிராயபேதமிருக்கக் காரணமில்லை.

எந்தெந்த சாதனங்கள் அல்லது செய்கைகள் உணர்ச்சி பாவங்களை வெளிப்படுத்துகின்றனவோ, அந்த உணர்ச்சி பாவங்களை மற்றவர்களும் பார்த்தோ, கேட்டோ, படித்தோ அனுபவித் துணரும்போதுதான் அந்தந்த சாதனங்கள் அல்லது செய்கைகள், கலை என்று சொல்லப்படுகின்றன.

இலக்கியங்கள் மூலமாக ஆசிரியன், தான் அனுபவித்துணர்ந்த உணர்ச்சி பாவங்களை பிறரும் அனுபவித்துணரும்படி செய்கிறான். நாடக ஆசிரியன் நாடகத்தின் மூலமாகவும், நடிகன் தனது நடிப்பின் மூலமாகவும், ஓவியன் தனது சித்திரங்கள் மூலமாகவும், சிற்பி தனது சிற்பங்கள் மூலமாகவும் உணரும்படிச் செய்கிறான்; இதனால் இலக்கியம், நாடகம், இசை, நடனம், சிற்பம், ஓவியம்



போன்றவைகள் கலை எனப் போற்றப்படுகின்றன.

அதுபோலவே, சினிமா மூலமாகவும் உணர்ச்சி பாவங்கள் வெளியிடப்பட்டு, அதைப் பார்க்கும் மக்கள் அவ்வித உணர்ச்சி பாவங்களை தாங்களும் அனுபவித்துணரும்படி செய்ய முடிகிறது. எப்படி கதாசிரியனால் கோபம், துக்கம், சிரிப்பு முதலிய உணர்ச்சிகளைப்படிப்பவர்களின்உள்ளத்தில் கொண்டுவர முடிகிறதோ, எப்படி நாடகத்தின் மூலம் பார்ப்பவர்களின் உள்ளத்தில் உணர்ச்சியலைகளை கொத்தளிக்கச் செய்ய முடிகிறதோ, அது போலவே சினிமா மூலமாகவும் இவ்வித உணர்ச்சி பாவங்களைக் கொண்டு வர முடிகிறது மட்டுமல்ல: இலக்கிய ஆசிரியனுக்கு கிடைக்காத சௌகரியங்கள், நாடக ஆசிரியனுக்கு இல்லாத வசதிகள், சினிமாவின் மூலம் அதை ஆக்குவோனுக்கு கிடைக்கிறது. அவைகளை வைத்துக் கொண்டு நல்லவித உணர்ச்சிகளை மக்கள் அனுபவிக்கும்படி செய்து, மக்களின் ஒருமை மனப்பான்மையை வளர்க்க முடிகிறது. இப்படி மக்களின் நாகரிகத்தை வளர்க்க, பண்பாட்டை ஓங்குவிக்க, பயன் படும் சினிமா, கலையல்ல வென்றால் இலக்கியம், இசை, நாடகம், சிற்பம், நடனம், ஓவியம் இவைகள்மட்டும் கலைகளாயிருக்க முடியுமா?



ஆனால், சினிமா விரோதிகளின் கூற்றே சினிமாவினால் மக்கள் கெட்டுவிடுகிறார்கள் என்பது. ஏன்? இலக்கியத்தாலும்தான்! மக்கள் கெட்டுவிடமுடியும் தினம் தினம் நூற்றுக்கணக்காக காமவெறி, கொலைவெறி கதைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றனவே. அவைகள் என்ன செய்கின்றன? தாராசசாங்க நாடகம் பார்க்கும் மக்கள் கெட்டுவிட முடியாதா? கெட்ட உணர்ச்சிகளைத் தூண்டி, அந்த உணர்ச்சிகளிடம் மக்களை மோகம் கொள்ளும்படி செய்வதினால் மக்கள் கெட்டு விடுகிறார்கள் என்கிறோம்.

எப்படி இலக்கியம், நாடகம், சிற்பம், ஓவியம் முதலியவைகளினால் கெட்ட உணர்ச்சிகளைத் தூண்ட முடிகிறதோ, அப்படி சினிமாவினாலும் கெட்ட உணர்ச்சிகளையும் தூண்ட முடிகிறது. அதை நல்ல உணர்ச்சிகளைத் தூண்டும்படி அல்லது வெளிப்படுத்தும்படி உபயோகப்படுத்து! அதை விட்டுவிட்டு சினிமா மகா மட்டமானது-அது ஒரு கலையே அல்ல — ஒழிக்கப்பட வேண்டியது என்றால சொல்பவர்கள் ஏதோ மறைமுக எண்ணங் கொண்டவர்களாக இருக்கவேண்டும்; அல்லது கலை உலக அறிவு இல்லாதவர்களாயிருக்க வேண்டும்; இல்லை, பிறரை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டு தங்களை ஏமாற்றிக் கொள்பவர்களாயிருக்க வேண்டும்.

இன்னொன்று: இப்போதெல்லாம்சினிமாவில்ஈடுபட்டிருப்பவர்களே, பன்னிப் பன்னி உரத்தக் குரலில் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். சினிமா ஓர் பொழுது போக்கு சாதனம் என்றும்இன்னும் சிலர் அது வெறும் பொழுது போக்கு சாதனம் மட்டும்தான் என்றும்!

அப்படியானால், இலக்கியம் பொழுது போக்கு சாதனமா? நாடகம், சிற்பம், இசை, ஓவியம் எல்லாம் வெறும் பொழுது போக்குக்காக ஏற்பட்டவைகள்தானா? அதற்காக இவைகள் தேவையா? யாரும் அப்படிச் சொல்வதில்லை. இவர்கள் மக்களின் முன்னேற்றத்துக்கு, பண்பாட்டை உயர்த்த, மக்களிடை சகோதரத்துவத்தையும், அன்பையும், ஒருமை மனப்பான்மையையும் வளர்க்க தேவை யென்பது அறிஞர்கள் யாருடையவும் ஒருமைப்பட்ட முடிவு.

ஆனால் சினிமா மட்டும் இதற்கு மாறுபாடான கருத்தில் உலாவுவானேன்? விளையாட்டுகள், சர்க்கஸ், குதிரைப் பந்தயம் முதலியன போன்ற பொழுது போக்கு சாதனம் மட்டும்தானா சினிமா? இல்லையே — மக்களை முன்னேறவைக்கும், பண்படவைக்கும், உணர்ச்சி பாவங்களை வெளிப்படுத்தும் ஓர் உயர்ந்த சாதனமாயிற்றே—பின் ஏன் இப்படிப்பட்ட கருத்து? வைதீக மனப்பான்மை கொண்ட படித்த சிலருக்கு, தாங்கள் நீண்ட நாட்களாக சிறுகச் சிறுக வளர்த்து வந்த பழமை மனப்பான்மை, குருட்டு நம்பிக்கைகள், சினிமா மூலம் குறுகிய நாட்களில், அடித்துச் செல்லப்பட்டுவிடுமோ என்ற பயம் அவர்களை சினிமா ஓர் சிறந்த கலையல்ல என்று சொல்லவைக்கிறது. அவர்களிலும் சிலர் இப்போது, அது வெறும் பொழுது போக்கு சாதனம், அதில் கருத்துக்களை புகுத்தக்கூடாது,—(இதிலும் தங்களுக்கு மாறுபாடான கருத்துக்களை மட்டுந்தான் புகுத்தக் கூடாது இவர்களுக்கு: மூட்டாள்தனத்தை எவ்வளவு வளர்த்தாலும் கவலையில்லை; போற்றுவார்கள்)—என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அதுவும் செல்லாக் காசாகிவிடும் என்ற ஐயம் தோன்றவே, பின்னும் சிலர், "ஐயோ! சினிமாவில் ஒரே பிரச்சாரத்தை புகுத்துகிறார்களே! இதை தடை செய்ய வேண்டும்" என்று கதற ஆரம்பித்திருக்கிறார்கள்.

எது பிரச்சாரம்? ஒரு விஷயத்தை மக்கள் மனதில் நன்றாக பதிய வைப்பதற்காக, காரண



[குளோஸ் ஷாட்]

காரியங்களால், விளக்கமாக எடுத்துச் சொல்வது. சொல்லிவருவது பிரச்சாரம் இல்லை: உண்மையற்ற கூற்றுகளை, செய்திகளை, கருத்துக்களை அடிக்கடி திரும்பத் திரும்ப சொல்லி மக்களை ஏமாற்றுவதுதான் பிரச்சாரம் என்றால் ஒரேயடியாக பிரச்சாரமே கூடாது என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும். அப்படி யாரும் சொல்வதில்லையே! பாவம்! பிரச்சாரத்துக்கென்று இலாக்காக்களையே வைத்திருக்கிறது நமது அரசாங்கம். அதனால் பிரச்சாரம் என்பதற்கு கருத்துக்களை பலரிடையே பரப்புவது என்ற விளக்கம்தான் சரியானது. பிரச்சாரத்தில் நல்லதும் இருக்கலாம், கெட்டதும் இருக்கலாம், எல்லாச் செய்கைகளிலும் இருப்பது போல, நல்ல பிரச்சாரம், மக்கள் முன்னேற்ற மடைவதற்குரிய மார்க்கங்களை எடுத்தியம்புவது. கெட்ட பிரச்சாரம் மக்களிடையே குரோதத்தையும் வெறுப்பையும் வளர்க்கக்கூடிய கருத்துக்களை வெளியிடுவது. கெட்ட பிரச்சாரம் கூடாது என்று சொல்லலாம்; ஒத்துக்கொள்வார்கள். ஆனால் பிரச்சாரமே கூடாது என்றால் அதற்கு என்ன அர்த்தம்? தங்களுக்கு பிடிக்காதவைகளெல்லாம் கெட்ட பிரச்சாரங்களா? மக்களை முட்டாளாக்கும், நம்பமுடியாத பைத்யக்காரத்தனமான விஷயங்களை பன்னிப் பன்னி சொல்வது பிரச்சாரமில்லையா? மகாவிஷ்ணு பன்றியவதாரமெடுத்து பூமியை பாயாக சுருட்டிக் கொண்டு பூமியின் ஒரு பாகமாகிய கடலுக்குள்ளேயே (பூமியிலேயே) போய் ஒளிந்து கொண்டார் என்பது போன்ற கதைகளை சினிமாவில் காண்பித்து, மக்களை நம்பவைப்பது முட்டாள்தனமான பிரச்சாரமில்லையா? இதற்கு தெய்வீகக் காரணங்காட்டி ஏழைகளை ஏமாற்றுவது இதற்குத்தானே. இப்படிப்பட்ட கருத்துக்களை




[குளோஸ் ஷாட்]

மக்களிடையே பரப்புவதற்குத்தானே சினிமா? இவைகளெல்லாம் பிரச்சாரங்களில்லையா? பிரச்சாரம் என்ற வார்த்தையை மிகவும் மாறுபாடான கருத்துக்களில் வெளியிட்டு மக்களை குழப்பமடையச் செய்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து வெளியாகும் உண்மை.

இனி, கலைகளுக்கெல்லாம் சிறந்தது எனப்படுவதும், உயர்ந்த இடத்தைக் கைப்பற்றி யிருப்பதுமாகிய இலக்கியம் எப்படி சினிமா மூலம் முழுமையை அடைகிறது என்பதையும், அதனால் சினிமாவும் ஓர் சிறந்த கலாசாதனம் என்ற ஸ்தானத்தைப் பெறுகிறது என்பதையும் அதனால் சினிமா வெறும் பொழுதுபோக்கு சாதனம் என்கிற கூற்று அடிபட்டுப் போகிறது என்பதையும் பார்ப்போம்.

எப்படி இலக்கிய கர்த்தா தனது கற்பனைகளை யெல்லாம் கொட்டி சொல்லலங்காரச் சிறப்புகளால் சிறந்தகருத்துக்களை எடுத்தியம்பி, படிப்போரின் உள்ளத்தைக் கவர்ந்து, உணர்ச்சி பொங்கும்படிச் செய்து, நாமும் அவற்றை அனுபவித்துணரும்படி இலக்கியத்தின் மூலம்



[மிட் - ஷாட்]

செய்கிறோமே, அதுபோல சினிமா மூலமாகவும் ஆசிரியனது உணர்ச்சிகள் வெளியிடப்பட்டு, பார்ப்பவர் அனுபவித்துணரும்படிச் செய்ய முடிகிறது. நாடகத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவுதான் வெளிக்காட்ட முடியும்—அது ஒரு குறுகிய இடத்திற்குள் (நாடக அரங்கத்திற்குள்) அடைபட்டு விட்டதால். ஓவியம், சிற்பம், நடனம், இசை இவைகள் மூலமாகவெல்லாம் ஒரு சில தனிப்பட்ட உணர்ச்சி பாவங்களைத் தான் வெளிக்காட்ட முடியும். ஆனால் சினிமா மூலமாக இலக்கியச் சுவைகளை அப்படி அப்படியே கொண்டுவர முடிவது மட்டுமல்ல; இலக்கியத்தால் செய்து முடிக்க முடியாத, பார்த்து அனுபவிக்கும் தன்மை சினிமா மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

ஒரு உதாரணம்—சிறப்புக்குரிய நமது பழம் பெருங் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலிருந்து ஒரு சிறு காட்சியை எடுத்துக் கொள்வோம். கொலையுண்ட கோவலன் மனைவி கண்ணகி, பாண்டியன் நெடுஞ்செழியன் முன் ஆத்திரமும் அழுகையும் பொங்கியவாறு வந்து நின்றாள். அவள் நின்ற நிலையும், பாண்டியன் கொண்ட

கோலமும் விளக்கவந்த் அடிகள்,
காவியுகு நீரும், கையில் தனி சிலம்பும்
ஆவிகுடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும்
கண்டஞ்சி
கூடலான் கூடாயினன்.

என்று கூறுகிறார்.

முன்பின் தெரியாத பெண்ணைருத்தி எதிரில் வந்து நிற்கிறாள். பார்க்கிறான் வேந்தன். கண் களிலிருந்து வடிந்து கொண்டிருக்கும் கண்ணீர் தெரிகிறது. சலனமடைகிறான். அழும்படி அக் காரிகைக்கு என்ன துன்பம்; யார் விளைவித்ததோ —என்று உற்று நோக்குகிறான். அவள் கையில் ஒற்றைச் சிலம்பு—அரசனின் திகைப்பு அதிகரிக் கிறது. பிணம் போன்ற அவளது தோற்றம்— அச்சமே குடிகொண்டு விடுகிறது மன்னன் மனதில். அப்போதுதான் கவனிக்கிறான் அவிழ்ந்து கிடக்கும் அவளது கருங் கூந்தலை. அந்தக் கணமே நெடுஞ்செழியனும் பிணம் போன்ற நிலையடைகிறான். கண்ணீர், தனிச் சிலம்பு, உயிர் நீங்கிய உடம்பு, அதைச் சூழ்ந்தி ருக்கும் கரிய இருள்—பார்க்கிறான் பாண்டியன்



[மிட்-லாங்-ஷாட்]

—உடனே பிணமாகிவிடுகிறான். இவ்வளவு அழகாக இளங்கோ அடிகளைத் தவிர வேறு யாராலும் கவிதை புனைந்திருக்க முடியாது.

முதலில் கண்ணகியின் கண்ணீரைக் காண் பித்து, பிறகு அவளது கையிலுள்ள ஒற்றைச் சிலம்பைக் காண்பித்து, பிறகுதான் அவளது முழு உருவத்தையும் நம் கண்முன் நிறுத்து கிறார், அடிகள்—அதன் பிறகு, அவளது உடம் பைச் சூழ்ந்து, காடு போன்று பறந்து, புழுதி படிந்து, அவிழ்ந்து கிடக்கும் கருங் கூந்தலையும், அதைக் கண்டு அஞ்சி பிணம்போலான நெடுஞ் நெழியனையும் காண்பிக்கிறார்.

அடிகளின் உள்ளுணர்வை சினிமா மூலம் எப்படி பிரதிபலிக்க முடிகிறது என்பதை பார்ப்போம்—முதலில் பக்கத்து காட்சியில் (க்ளோஸ் ஷாட்) கண்ணகியின் முகத்தில் வடிந்து கொண்டிருக்கும் கண்ணீரைக் காண் பித்து, அடுத்து அதே போன்ற பக்கத்து காட்சியில் அவளது கையிலுள்ள ஒற்றைச் சிலம்பைக் காண்பித்து, பிறகு கண்ணகியின் முழு உருவத்தை மத்தியக் காட்சியில் (மிட் ஷாட்) காண்பித்து, கடைசியாக காடு



[தூரத்துக் காட்சி]

போன்று விரிந்து கிடக்கும் கருங் கூந்தலை யுடைய கண்ணகி முன் நிற்க, சிம்மாதனத்தில் நெடுஞ்செழியன் திகைத்தவாறு உட்கார்ந் திருப்பதை மத்திய தூரக் காட்சியில் (மிட் லாங் ஷாட்) காண்பிக்கவும் — இப்படி நான்கு அடிகளால் விளக்கிய அந்த சூழ் நிலையை, சினிமா மூலம் நான்கு காட்சிகளில் நாம் பார்க்க முடிகிறது. இவ்வளவு விளக்கமாக காவிய இரசனைகளை சினிமா தவிர வேறு எந்த கலா சாதனங்களாலும் வெளிப்படுத்த முடிகிற தில்லை.

இதோ இன்னொன்று; உயர்ந்த சிறுகதை எழுத்தாளனாகிய புதுமைப் பித்தனின் சிறுகதை யொன்றில் ஓரிடம் "கல்யாணி." வயது சென்ற கோயில் புரோகிதன் ஒருவனுக்கு இரண்டாம் தாரமாக வந்து வாய்த்த யுவதியின் மனக் குமுறலை விளக்குமிடம்,—கிழவனின் உதாசீனம் யுவதியின் உள்ளத்தை, அவளது வாழ்க்கையில் குறுக்கிட்ட சர்மா என்ற யுவன் ஒருவன் பால் இழுக்கிறது. ஆனால் கடமையுள்ளம் தவறுக்கு அஞ்சுகிறது.

"இருளில் வழி தெரியாது தவிக்கும் பாத சாரி, ஏதாவது ஒன்றைத் தனது நம்பிக் கைக்குப் பாத்திரமானது என்று சங்கற்பித் துக்கொண்டு அதை நோக்கி செல்வது போல், தன் கணவர் நித்யம் பூஜை செய்யும் கோவிலுக்குச் சென்று கலங்கிய உள்ளத் திற்கு சாந்தியை நாடினாள். கோவில் மூலஸ் தானத்தின் இருளுக்கு இவளது மன இருள் தோற்று விட்டதாகத் தெரியவில்லை. மூலஸ் தானத்தின் மங்கிய நிலவொளியில் லிங்கம்



[மத்தியக் காட்சி]

தெரிவது போல் சர்மாவின் முகம்தான் அவள் அகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.''

இதை சினிமாப் படமாக கற்பனை செய்து பார்ப்போம். வழி தெரியாது தவிக்கும் பாதசாரி-இங்கு கல்யாணி, தள்ளாடியபடி தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான கோயில் நோக்கி வீதி வழியாக சென்று கொண்டிருக்கிறாள். இது தூரத்துக் காட்சியில் — கோயில் கோபுரம் தூரத்தே இருட்டில் மங்கலாகத் தெரிகிறது, விளக்கமின்றி வீடுகளும் அப்படியே—

அடுத்தது கோயில் மூலஸ்தானத்தின் எதிரே கல்யாணி கை கூப்பியவாறு நிற்பது. இது மத்யக் காட்சியில்! எதிரே விக்ரகம். அதைச் சுற்றிலும் இருள். மங்கலாக தீபம் ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது. அந்த வெளிச்சத்தில் லிங்கம் தெரிந்தும் தெரியாததுமாக காட்சியளிக்கிறது.


அடுத்தது பக்கத்துக் காட்சியில் மூலஸ்தானத்தின் தீபவொளியில் லிங்கம் தெரிகிறது, சிறிது விளக்கமாக—

அடுத்தது, அதுபோன்ற பக்கத்துக் காட்சியில் கல்யாணி தொழுது கொண்டு நிற்பது—

அடுத்தது, அது போன்ற பக்கத்து காட்சிதான்—அதில் லிங்கம் தெரிகிறது. லிங்கத்தின் மேல் கொஞ்சம் கொஞ்சமாக சர்மாவின் முகம் தெரிய ஆரம்பிக்கிறது. (சூப்பர் இம்போஸிங் ஷாட்)

இப்படி, சினிமா மூலமாக இலக்கிய சிறப்பு கலை விளக்கமாக எடுத்துக்காட்ட முடிகிறது. ஆசிரியன் தன் எழுத்து வன்மையால் திறனோடு வெளிப்படுத்திய உணர்ச்சி பாவங்களை நேரிலேயே பார்த்து அனுபவிக்க முடிகிறது. இப்பேற் பட்ட சிறந்த சினிமாக் கலையை வெறும் பொழுது போக்கு சாதனம் என்று கூறினால் அதை என்ன வென்று சொல்லுவது?

இதைச் சொல்லும் இக்கும்பல்கள் இதற்கு சாதகமாகக் காட்டும் காரணங்களில் இன்னென்று, கலை கலைக்காக என்பது. அதாவது இலக்கியம் இலக்கியம் என்பதற்காகத்தான்; நாடகம் நாடகம் என்பதற்காகத்தான் இருக்கிறதாம் — வேண்டாம். அவர்கள் எண்ணப்படியே, கலை கலைக்காக என்றால், கலை கலை வளர்ச்சிக்காக, கலை முன்னேற்றமடைய என்றே வைத்துக் கொள்வோம் — நாடகம் வளர்ச்சி அடைவதற்காக, முன்னேற, நாம் நாடகம் பார்க்க வேண்டுமா? புத்தகங்கள் பெருக வேண்டும் என்பதற்காக புத்தகங்கள் வாங்குவார்களா யாராவது? விளக்குகள் வியாபாரம் ஆகவேண்டும் என்பதற்காகவா விளக்கு வாங்குகிறோம்? இருள் அகற்றி ஒளிப் பெறத்தானே! அப்படிச் சொல்வது போலல்லவா இருக்கிறது! படங்கள் வசூலில்லாது போய் விட்டால் சினிமா வளர்ச்சி எங்கு குன்றிவிடுமோ என்று பயந்து கண்டிப்பாக, நாம் சினிமா பார்த்துதான் தீரவேண்டும் என்று சொன்னால் எப்படி



[குளோஸ் ஷாட்]

யிருக்கும்?'' பட முதலாளிக்கு காசு சேருவதற்காக நாம் சினிமா பார்க்க வேண்டுமா? நன்றாயிருக்கிறதே கூற்று!'' என்றுதான் சொல்லத் தோன்றும். கதை—கதை என்ற, பெயருக்காகவோ கதை வளர்ச்சிக்காகவோ இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. அதைப் படித்து நாம் பயன் பெறும் வழியில் அது அமைய வேண்டும். இலக்கியம் கலை உருவம் பெற வேண்டுமானால் இவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

ஆனால், கலை கலைக்காக என்று சொல்லும் போது இவைகள் பயனற்றவைகளாய், வெறும் சொற்கோவைகளாய், வெறுமையாய் விடுகின்றன. ஆகையால் கலை கலைக்காக அல்ல, மக்களுக்காக—மக்கள் மேன்மையுற என்பது உறுதிப் படுகிறது. இது சினிமாவுக்கும் அப்படியே பொருந்தும். சினிமா சினிமாவுக்காக அல்ல—அதாவது வெறும்பொழுதுபோக்குக்காக அல்ல-மக்களுக்காக, மக்கள் வளர்ச்சியடைய என்றாகிறது.

இருந்தும், ஒரு சிலரால் ஏன் கலை கலைக்காக என்று கொள்ளப்படுகிறது? இவர்கள் பிறரை ஏய்த்துப் பிழைக்கிறவர்கள்—தங்களுடைய சுகபோக சோம்பேறி வாழ்க்கைக்காக பெரும்பான்மை மக்களை முட்டாள்களாக, அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற மமதை எண்ணத்தினால், இதை ஆதரித்து, பிரச்சாரப் படுத்தி, விவரித்து செய்யப்படும் காரியங்கள் ஒவ்வொன்றையும் இவர்கள் கலை என்று போதித்துவர ஆரம்பிக்கிறார்கள்.

யாருக்கும் புரியாத (ஏன், எழுதியவனுக்கே



[குளோஸ் ஷாட்]

புரியாத) கற்பனைகளை, காப்பியங்களை, கவிகளை, ஓவியங்களை, புகழ்ந்து பேசுகிறார்கள். அதற்காகத்தான் கலை கலைக்காக என்ற கொள்கையை வலியுறுத்தி வருவதும். சாதாரணமாக கண்காட்சி சாலைகளில் பார்க்கலாம், ஜனங்கள் கூடி நின்று சில சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதை. அப்போது ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வார்கள்: "என்னடா எழுதியிருக்கிறான் இந்தப்படத்தில்?" என்பான் ஒருவன். மற்றவன், "போடா அதெல்லாம் உனக்கு ஒன்றும் விளங்காது. இது எழுதியவன் இந்தியாவிலேயே பெரிய ஆர்டிஸ்ட்; தெரியுமா அது?" என்பான். (பாவம்! அவனுக்கும் இது விளங்காதுதான்.) இப்படி தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் ஓர் கலை.

நாம் அடிக்கடி பார்க்கலாம் படித்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிலரிடையில்; ஹிந்தி அல்லது ஆங்கிலப் படம் ஏதாவது தொன்றைப் பார்த்துவிட்டு வருவான் ஒருவன். அவனிடம் "படம் எப்படி?" என்று கேட்டால் "பிரமாதம்" என்பான். "என்னடா பிரமாதம்" என்றால் "போடா! என்ன ஆக்டிங்! என்ன சாங்ஸ்! என்ன டெக்னிக்! பிரமாதம் போ!" என்று கூத்தாடுவான். "அதுசரி, என்னடா கதை?" என்று கேட்டால் "சாதாரண கதைதான். எனக்கு சரியா சொல்லத் தெரியவில்லை" என்பான். உண்மையிலேயே அவனுக்கு ஒன்றும் புரிந்திராது; படமும் பிடித்திருக்காது. இருந்தும் சொல்வான் படம் பிரமாதம் என்று. ஹிந்திபடம் மோசம், நன்றாக இல்லை என்று சொன்னால் எங்கே தன்னை பட்டிக்காட்டான், படிக்காதவன் என்று மற்றவன் கருதிவிடுவானோ என்ற பயம் அவனை அப்படிச் சொல்ல வைக்கிறது. இப்படி தன்னைத்தானே முட்டாளாக்கிக்கொள்ளும் ஒரு கலை.

இன்னொருவன் புத்தகம் படித்துக்கொண்டிருப்பான். அவனிடம் போய் "ஏய், என்ன புத்தகம் படிச்சுக்கிட்டு இருக்கே?" என்றால் உடன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு "சும்மா இப்படி படிச்சுக்கிட்டிருக்கேன்" என்பான். "என்ன கதை? யார் எழுதியது? எப்படி இருக்கு? நன்றாயிருக்கா?" என்று கேட்க ஆரம்பித்தால், "இதெல்லாம் யார் போய் பார்த்துகிட்டு! நேரம் போகல்ல, எதையாவது படிப்போம்னு படிச்சுகிட்டிருந்தேன். கதையிலே என்ன என்ன இருக்குதுன்னு அதையெல்லாம் யார் போய்க் கவனிச்சுக்கிட்டு. சரி-சரி வா போவோம்" என்று எழுந்து வந்துவிடுவான்.

இப்படி ஓர் மனநிலை படித்தவர்களிடையில் உருவாகி வளர்ந்து வருவதை நீங்கள் பார்க்கலாம். ஏன் இந்த நிலை? இவர்கள் கதையை கதைக்காக படிக்கிறார்கள். சினிமாவை சினிமாவுக்காக பார்க்கிறார்கள். பேச்சை பேச்சுக்காக கேட்கிறார்கள். அதாவது பொழுதுபோவதற்காகத்தான் இவர்கள் படிக்கிறார்கள்; பார்க்கிறார்கள்; கேட்கிறார்கள். இவைகளை படித்து, பார்த்து, கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுவதில்லை இவர்களுக்கு. ஏன்? இவைகள் நமது அறிவு வளர்ச்சிக்காகத்தான், நமது தேவைக்காகத்தான், நமது முன்னேற்றத்துக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; உருவடைந்திருக்கின்றன என்ற எண்ணம் பாழ்பட்டுப்போனதால்தான். அதாவது கலை கலைக்காக என்ற எண்ணம் உரம் பெற்று கலை மக்களுக்காக என்ற எண்ணம் பட்டுப்போன காரணத்தால்தான்.

கலை மக்களுக்காக என்ற உண்மையைத் தெரிந்துகொண்டால் ஏமாற்றத்துக்கு ஏது வில்லை. இந்தக் கலை எந்த விதத்தில் பயன்படுகிறது? பயன் அளிக்கிறதா, இல்லையா? இக் கதையில் நல்ல கருத்துக்கள் இருக்கின்றனவா, இல்லையா? அந்த நாடகம் அறிவை வளர்க்கிறதா, இல்லையா? மக்களை ஒழுக்கமுடையவர்களாகத் தூண்டுகிறதா இல்லையா? என்ற இரண்




[சூப்பர் இம்போஸிங் ஷாட்]

டில் ஒன்றுக்கு முடிவுக்கு வரச் செய்யும்—பயன் இல்லை யென்றால் தூர எறிந்துவிடலாம்; இக்கருத்து மக்களை மடமையிலேயே வைக்க வேண்டும் என்று விரும்புகிற பூர்ஷுவா வர்க்கத்துக்கு, வைதீகப் புரோகிதர்களுக்கு, சோம்பேறிகளுக்கு வெறுப்பாகத் தோன்றுகிறது. அதனால்தான் இவர்களால் இதற்கு மாறுபாடான கருத்துக்கள் பன்னிப் பன்னி சொல்லப்பட்டு வருகின்றன. படித்தவர்கள் என்று சொல்லப்படும் ஒரு சிலரால் சினிமா வெறும்பொழுது போக்கு சாதனம் என்று பிரசாரப்படுத்தப்படுவதும், இதனாலேயே. இந்த தவறான எண்ணம் மாற வேண்டும்—மாற்ற வேண்டும். சினிமா வெறும் பொழுதுபோக்கு சாதனமல்ல, அது ஓர் சிறந்த கலை—அதை மக்கள் நல்வாழ்வு சிறப்புற, வீழ்ந்தவரை எழுப்ப, அன்பை வளர்க்க, பண்பாட்டை மேன்மையுறச் செய்ய பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டே இக்கட்டுரை எழுத நேர்ந்தது. அதற்கு ஊக்கு வித்து உதவிய முரசொலி ஆசிரியருக்கு என் நன்றி. ஃ



நம்நாடு: அரசியலும்

காஞ்சிபுரம், மதுரை இன்னும் பல இடங்களிலிருந்தும் ஆயிரம், ஆயிரம் மக்கள் தங்கள் புராதன நெசவுத் தொழிலில் சொல்லொணாத் துன்பம் அனுபவித்து இப்போது அந்த தொழிலும் இல்லாமல் போதிய உணவு, வீடு, உடையின்றி, சென்னை நோக்கி வேலை நிமித்தம் வந்து, வேறு வழியின்றி மனைவி மக்களை காப்பாற்ற வழியறியாது, பிச்சைக்காரர்களானவர்கள் அநேகம். சொற்ப விலைக்கு துணியைத் தயார் செய்து, இவ்வளவு பேர்களையும் வேலையில்லாது செய்து விட்ட மில் முதலாளிக்கும், வெளி நாட்டு பணக்காரர்கட்கும், உடந்தையாக இருந்த அரசாங்கத்தை நோக்கி தங்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று நெசவாளிகள் கேட்க, அரசாங்கம் அவர்களை அரசியல் எதிரிகளால் தூண்டப்பட்டவர்கள் என்று கருதப் பட்டதும் உண்டு. சிலர் இறந்தனர் வறுமை காரணமாக. பலர் இன்றும் வழியில்லாது தவிக்கின்றனர். வீவசாயம், வாணிகம் வேறு பல தொழில்கள் செய்து வாழும் மற்ற தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் வறுமை மேலிட்டால் வருந்துபவர்களே. இதற்குக் காரணம் அரசியல் அல்லது பொருளாதாரக் கோளாறு. என்று சுலபமாகப் பிரித்துக்கூற முடியாது. தென்ஞட்டில் ஏழைகள் அதிகம். பஞ்சம் மிகுதி. ஆனால் நல்ல ஆறுகள் ஓடுகின்றன. கனிப் பொருள்கள் புதைந்து கிடக்கின்றன. அறிவாளிகள் மிகுதி காரணத்தால், யார் அறிவாளி, யார் அறிவாளி இல்லை என்று சொல்வதே கடினமாகி, வட இந்தியா சென்றபிறகுதான் பலருக்கு, தான் அறிவாளி என்று நிச்சயமாக சொல்லிக் கொள்ளும் தன்மை ஏற்படுகிறது. நம் நாட்டின் ஒரு பகுதியாம் மைசூரில் பொன் கிடைக்கிறது. ஆனால் தமிழனும் கன்னடியர்களும் மலாயா, சிலோன் முதலிய நாடுகளில் சிறிய ஊதியத்திற்கு அடிமையாக வாழ்கின்றனர். இப்படித்தான் தமிழனும் மற்றைய திராவிட மொழிகளைப் பேசும் மக்கள் அனைவரும் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து விட்டனர். அவர்கள் ஏழ்மை உண்மையிலேயே ஒரு சிக்கலான அரசியல்—பொருளாதாரப் பிரச்சினை. சுமார் அறுநூறு ஆண்டுகள் நம் நாடு மற்றவர்களால் சுரண்டப்பட்டு வந்துங்கூட இன்றும் அது புதைந்து கிடக்கும் செல்வம் நிறைந்ததாகத்தானிருக்கிறது. நம்முடைய இன்றைய அரசாங்கம் வெளி நாட்டார் நலத்திற்காக பாடுபடும் கருவியாகிவிட்டது. இது நம்நாடு, நமது அரசாங்கம், நம் பொருளியல் என்று எற்படும் வரையில் நம் மக்கள் உண்மையான, நிலையான, போதிய வாழ்க்கைச் சாதனங்களை அனுபவித்து வாழ முடியாது. அன்று வரிச்சுமை பொறுக்க முடியாமலும், ஆங்கில மக்கள் தன் நாட்டு கனிப் பொருள்களையும், விவசாய செல்வத்தையும் அபகரித்துக் கொண்டு போகிறார்கள் என்று தோன்றியதும் அமெரிக்க நாட்டு மக்கள் வரி கொடுக்கா இயக்கத்தையும், பிறகு இங்கிலாந்துடன் சுதந்திரப் போரையும் தொடர்ந்து நடத்தினர். அவர்களுடைய நியாயமான கோரிக்கையை புரிந்துகொள்ள முடியாத நிலைமையில் இங்கிலாந்து நாட்டு மன்னன் மூன்றும் ஜார்ஜ் நேரிடையில் சண்டையில் ஈடுபட்டான். நியாயந்தான் வென்றது, அவர்கள் சுதந்திரம் பெற்றார்கள் என்ற காரணத்தால் இன்று அமெரிக்க மக்கள் உலகத்திலேயே சிறந்த செல்வந்தர்களாகவும், வெளி நாடுகளுக்கும் உதவும் பண்புடையவர்களாகவும், மற்றைய மக்களின் சுதந்திரத்திற்காக பாடுபடுபவர்களாகவும் இன்று விளங்குகிறார்கள். சிலருக்கு இன்றைய அமெரிக்க அரசாங்கத்தின் பொருளாதாரப் போக்கு




பீடிக்காதிருக்கலாம். ஆனால் எவரும், அமெரிக்காவின் சுதந்திரப் போர்தான் அம்மக்களை செல்வமும் அறிவும் மிகுந்த ஒரு பெரும் சமுதாயமாக வேண்டிய உதவி செய்தவிட்டது என்பதை மறுக்க மாட்டார்கள். கிழக்கு ஐரோப்பாவிலே முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெரும் அரசியல் புரட்சி ஏற்பட்டது. வெளிநாட்டு மக்களை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும் இருந்த சிரத்தை அந்நாட்டு மன்னனுக்கு மக்களின்மேல் இல்லை. ஒரு ஏழை சமுதாயமான இரஷிய மக்கள் ஜார் அரச பரம்பரையை அடியோடு ஒழித்தனர். சுதந்திரத்தைக் கருதியல்ல, மற்றைய வெளிநாட்டுத் தூண்டுதலாலும் அல்ல, தங்களுக்கு நிச்சயமாக வருங்கால நிலைமை உயரும் என்ற நம்பிக்கையாலுங்கூட அல்ல. அவர்கள் புரட்சி செய்தது! ருஷிய நாட்டுச் சரித்திரத்திலேயே என்றும் காணாத ஏழ்மையும், அந் நிலைமை பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குச் சீர்கேடு அடைந்ததும் தான் அவர்களது புரட்சிக்குக் காரணம். இன்று இரஷிய நாட்டைக் கண்டு அமெரிக்கா பயப்படுகிறது. அதை எதிர்த்துப் போராட துணை தேடுகிறது. இரஷிய நாட்டு இன்றைய அரசியல் அமைப்போ அல்லது அவர்கள் மக்களை இயந்திரங்களாகக் கருதுவதோ பலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். அப்படியிருந்தும் கூட இரஷியாவின் இன்றைய பொருளாதார நிலை முன்னுள் நிலையை விட மிகச்சிறந்தது என்பதையும், அதற்குக் காரணம் அவாகளுடைய 1917-ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசியல் வெற்றி என்பதையும் மறந்துவிட முடியாது. நம் அருகில் உள்ளதும், நம்மைப் போல பழங்கால விவசாய சமுதாயமுமான சீன மக்கள் அமெரிக்க நாட்டுக்கு வேலை செய்யும் கூலியாட்களாகவும், அவர்களுடைய பண்டங்களை வாங்கி உபயோகிக்க மட்டும் தெரிந்து கொண்டு, அப்பொருள்களை உற்பத்தி செய்ய வகையற்றவர்களாக இருந்த காரணத்தால் அந்நாடு முன்புஏழ்மையின் சிகரமாக இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் அரசியல் சுதந்திரம் பெற்றனர். அத்துடன் தங்கள் பொருளாதார நிலைமை மாறும் என்ற நம்பிக்கையும் பெற்றனர். சீனர்களும், இரஷ்யர்களைப் போலத்தான் தனிமனிதனுடைய சுதந்திரத்தை மதிக்காதவர்கள் என்று கூறலாம். ஆனால் அவர்களுடைய 'பொருளாதார'ப் புது வாழ்வு, அரசியல் சுதந்திரத்திற்குப்பிறகுதான் ஏற்படுகிறது என்ற உண்மை நன்கு புலப் படுகிறது.

ஆகவே நம்நாடு தனித்தியங்க வேண்டிய அவசியத்தை மிகைப் படுத்திக் கூற முடியாது. தென்னாடு ஒரு தனி நாடாக முடியுமா?—என்ற கேள்விக்கு விடை கூறுதல் அரசியலிலேயே ஈடுபட்டிருக்கும் தலைவர்களால்தான் முடியும் என்றாலும், ஒரு நாடு தனித்தியங்க வேண்டிய தேவைகள் என்ன என்பதை 'அரசியற்கலை' வழி கண்டு அறியலாம். அந்தத் தேவைகள் ஐந்து எனலாம். ஒன்று, ஒரு நிலப்பரப்பு. இரண்டு, அங்கேயே தங்கி வாழ விரும்பும் மக்கள் தொகை. மூன்று, அவர்களை ஒன்றுகப்பிணைக்கும் பூர்வீகம், கலை, மொழி, சமுதாயக் குறிக்கோள்கள், மனிதத்தன்மை முதலியன. நான்காவது அவர்கள் நம்பியும், கட்டுப் படுத்தவும், விரும்பியும் இருக்கும் அரசு. ஐந்தாவது, அரசைச் செலுத்த அரசாங்கம். இவையனைத்தும் பெற்றதே ஒருதனிநாடு. நமக்கு வேண்டிய நிலப் பரப்பும், மற்றைய இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் தன்மை நமக்கு உண்டு. ஆகவே அரசு அமைக்க விடா முயற்சியும். சீரிய நோக்கமும்தான் தேவை. நம் நாட்டின் நிலப்பரப்பை விட மிகச்சிறிய எத்தனையோ நாடுகளைக் காண்கிறோம். ஆகவே நாடு சிறியது, மக்கள் தொகையிக்க குறைவு ஆகிய ஒரு

தனிநாடு ஆக முடியாக என்று சொல்லி நம் மக்யளின் கோரிக்கையை யாரும் நிராகரிக்க முதுயாது. ஆனால் அடிக்கடி இத் தனிநாடு கோரும் மாகள் அவர்கள் பொருளாரி தாரக் கொள்கையை சயாகக் கூறவில்லை என்றோ அல்லது அவர்களுடைய பொருள் நிலை சிறந்த தாகத் தனிநாடாக இயங்குகின்றபோது இருக்காது என்றும் ஒரு சிலர் கூறலாம். அதற்குக் கீழே கண்ட விடை யிறுக்கலாம்.

முதலாவதாக இன்றைய அரசியல் அமைப்புப்படி என்ன நிலை என்று கவனித்துப் பிறகு தனி நாடான பிறகு என்ன நன்மை உண்டாகும் என்று கவனிப்போம்.



இந்திய அரசியலமைப்பின் கீழ் நம் நாட்டு மக்களுக்குத் தனித்தியங்கும் சுதந்திரம் இல்லை. நம்நாடு என்று குறிப்பிடுவது தெலுங்கர் வாழும் ஐதராபாத், கன்னடியர் வாழும் மைசூர் தமிழர் வாழும் சென்னை, மலையாளிகள் வாழும் திருவிதாங்கூர் என்ற பிரிவுகளைக் கொண்ட ஒரு பரந்த நிலப்பரப்பு. இவ்விடங்களில் இன்று நடக்கும் அரசாங்கத்தின் பொருளாதார அதிகாரம் இந்திய அரசியல் அமைப்பின் ஏழாவது தபசில் உள்ள யூனியன் பட்டியல், மாகாணப் பட்டியல், கூட்டுப் பட்டியல் என்ற மூன்று பட்டியல்களில் மாற்ற முடியாத நிலையில் மாகாண அரசாங்கங்களுக்கு மிகக் குறைந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. அணுசக்தி உற்பத்தி முதல் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் வரை யூனியன் பட்டியலில் கூறப்பட்டிருக்கிறது. இரயில்வேக்கள், தபால், தந்தி சாதனங்கள், நாணயம் செய்யும் முறை, வெளி நாட்டு வியாபாரம், மாகாணங்களுடன் வியாபாரம், வருமானவரி முதலிய அதிகாரங்கள் யூனியன் அரசாங்கத்திற்குத்தான் உண்டு. இது போதாது என்று "பொது நலனுக்காக எக்கைத்தொழில்களை யூனியனின் மேலதிகாரத்திற்கு உட்படுத்துதல் உசிதமாக இருக்கும் என பார்லிமெண்டு சட்டத்தினால் அறிவிக்கிறதோ அக்கைத்தொழில்கள்" யூனியன் அரசுக்கு உட்படும் (இந்திய அரசியல் அமைப்பு ஏழாவது தபசில், ஜாபிதா 1, எண் 52) என்பது போன்ற புதிர்கள் அநேகம் உண்டு. இங்கிலீயில் மாகாண அரசாங்கங்களுக்கு "புதைத்தலும், இடுகாடுகளும்; தகனம் செய்தலும், சுடுகாடுகளும்" [எண் 10 ஜாபிதா 2] என்ற ஒரு பொறுப்புத்தான் அவர்களால் பூர்த்தி செய்யக் கூடியதாயிருக்கிறது. "ஊனமுற்றோர்க்கும் வேலைக்குத் தகுதியற்றவர்களுக்கும் வசதியளித்தல் (எண் 9.), கால்நடைகளைப் பேணுதலும் பாதுகாத்தலும்...(எண் 15,)" என்பது போன்ற காரியங்களைச் செய்ய உண்மையிலேயே வருமானமில்லாத ஏழை அரசாங்கங்கள் என்ன செய்யமுடியும்? இப்படியில்லாமல் ஒரு தனித்தியங்கும் நாடு தன்னுடைய சொந்த மத்திய பாங்கியையும், தன்னுடைய சொந்த நாணயத்தையும், போக்குவரத்து, தொழில், விவசாயம் முதலியவற்றைப் பேணும் சக்தியையும், தேவையான வருமானத்தை உடையதாயுமிருக்கும். மேலும் நம் நாட்டு அரசியல் அமைப்பு, அதிகாரம், வருவினம் முதலியவற்றை யூனியன் வைத்துக் கொண்டு, உழைப்பு, செலவு முதலியவற்றை மாகாண அரசாங்கங்களுக்கு கொடுத்திருப்பது பழைய முகலாய சாம்ராஜ்யத்தை மறுபடியும் தோற்றுவிக்கும் டில்லி வாசிகளின் முயற்சியாகத்தான் தோன்றுகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது, உண்மையிலே அது ஒரு நாட்டுப் பொருளாதாரத் திட்டம் என்று கூறத் தகுதியற்றது. ஒவ்வொரு மாகாணங்களும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து சாதாரணமாக ஐந்தாண்டுகளில், வரவு—செலவு கணக்குப்படி எவ்வளவு செலவு செய்யுமோ அந்தத் தொகையைக்கூட்டித்தான் முதலில் 2069 கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாக ஒரு திட்டம் தீட்டினர்கள். சாதாரண வரவு—செலவு முறையை ஒரு பெரிய திட்டமாகக் கருதுவது பொருளாதாரப் போக்கற்றக் கொள்கை. மேலும் நம் நாட்டுக்கு வேண்டிய அளவுக்கு அத்திட்டமும் பயன்படவில்லை.

நம் நாட்டின் செல்வவளம் இலங்கை, பாகிஸ்தான், பர்மா, இங்கிலாந்து உட்படஎந்த நாட்டிற்

கும் குறைவானதல்ல. நம் நாட்டின் நிலப்பரப்பு 168 ஆயிரம் சதுர மைல்கள். அதில் வாழும் மக்கள் 76 மிலியன். நம் மக்கள் எல்லோருக்கும் நல்லவேலை கிடைக்குமானால் நாட்டின்செல்வம் இன்றைய அளவைவிட பத்துமடங்கு அதிகமாகும். இன்று ஒரு தனிமனிதனுக்கு ஒரு ஆண்டுக்கு 248 ரூபாய்தான் வருமானம் கிடைக்கிறது. இந்த ஏழ்மைக்குக் காரணம், 76 மிலியன் மக்களில் 49 மிலியன் மக்கள் விவசாயத்தை நம்பியிருப்பதும், அதிலும் 24 மிலியன் மக்கள் வருமானமே யில்லாமல் மற்றைய விவசாயிகளை நம்பி வாழ்வதுமாகும். தொழிற் சாலைகளில் 13 மிலியன் மக்கள்தான் வேலை செய்கின்றனர். அவர்களும் அநேகமாக துணி, தோல் பதனிடுதல், சிறு கடைகளில் வியாபாரம் செய்தல் முதலிய வேலைகளில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். கனிப் பொருள்கள் எடுத்தல், மின் சாரக் கருவிகள் செய்தல், இரும்பு எஃகு செய்தல், இரசாயனப் பொருள்கள் தயாரித்தல், சிமெண்டு, காகிதம் செய்தல், அச்சடித்தல் முதலிய வேலைகளில் 2 மிலியன் மக்கள்தான் வேலை செய்கின்றனர். கனிப் பொருள் எடுக்கும் வேலையில் 90 ஆயிரம் மக்களே பணியாற்றுகிறார்கள்.

இந்தத் தொகை சென்னையிலுள்ள 'லிக்னைட்' (நிலக்கரி) சுரங்க வேலை நடக்கும்போது சுமார் 5 மடங்கு அதிகரிக்கப்படும். அங்கிருக்கும் மொத்த நிலக்கரி அளவு 2 ஆயிரம் மிலியன் டன்கள். அவ்வளவு நிலக்கரியையும் நாம் இங்கிலாந்தைப் போல் பெரிய தொழிற்சாலைகளை நடத்த உபயோகப்படுத்த முனைந்தால்கூட நூறு ஆண்டுகளுக்குமேல் பயன்படும். நம் நாட்டில் ஜிப்சம், மாங்கனிசம், டைட்டேனியம், தோரியம் முதலிய அபூர்வப் பொருள்கள் அதிகமாகக் கிடைக்கிறது. உலகத் தேவையில் 75 சதவிகிதம் வரையில் அபூர்வமான "மாங்னஸைட்" என்னும் அணுசக்திப் பொருள் திருவிதாங்கூரில் கிடைக்கும். இந்தப் பொருள் உலகத்திலேயே நம் நாடு, மலேயா ஆகிய இரண்டு இடங்களில்தான் உண்டு. குரோமைட் 11 ஆயிரம் டன்கள் வரை ஒவ்வொரு ஆண்டும் நம் நாட்டில் உற்பத்தியாகிறது. இந்திய நாட்டுப் பொன் உற்பத்தி அவ்வளவும் நம் நாட்டில் கிடைப்பதுதான். 1947 ஆம் ஆண்டில் 1,71,705 அவுன்சு உற்பத்தி செய்யப் பட்டது. அதில் கார்வால் என்ற பிரதேசத்தில் கிடைத்த 2 அவுன்சு பொன் தவிர மற்றைய 1,71,703 அவுன்சு பொன்னும் சாம்பியன் ரீப், மைசூர், நந்தியாதுர்க், ஓரிகம், சித்தூர் முதலிய நம் நாட்டிலுள்ள ஐந்து இடங்களிலே கிடைத்திருக்கிறது. உண்மையிலேயே இது பொன் வீளையும் பூமிதான்.

மேலும் ஜெர்மனிபோன்ற நாடுகள் தனக்கு வேண்டிய 26 வகைக் கனிப் பொருள்களில் ஒன்று அல்லது இரண்டை மட்டும் தங்கள் நாட்டுச் சுரங்கங்களிலிருந்து எடுத்துக் கொண்டு, மற்றைய கனிப் பொருள்களை இறக்குமதி செய்து, உலகத்திலேயே சிறந்த தொழிற்சாலைகளாக விளங்கும்போது, கனிப் பொருள்களும், மக்கள் அறிவும், ஆற்றலும், தன்னம்பிக்கையும் உடைய நம்நாடு அவைகளைவிடச் சிறந்து விளங்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆராய்ச்சியாளர்கள் மிகுதியாக நம் சமுதாயத்திற்குத் தேவை. ஜி. டி. நாயுடு போன்ற விஞ்ஞானத் தொழில் நுணுக்கம் தெரிந்த பெரியோர்களையும் பயன் படுத்திக் கொள்ளும் நாள் வர வேண்டும். மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட நம்நாடு உழைப்பில் இன்றைய ஜப்பானியர்களையும், ஆங்கிலேயர்களையும் போலவும், கடல் வாணிபத்தில் நம் பழைய சோழ மக்களைப் போலவும், விளங்கலாம்.


வேண்டுவது முயற்சி. பிறப்பு காரணமாக சமுதாயத்தில் அடிமைகளும், சுரண்டிவாழ்பவர்களும் நம்நாட்டில் காணமுடியாத பழையனவாக வேண்டும். பொருளியல் முறைப்படி வறுமையை ஒழிக்க வேண்டும். அரசியல் — பொருளாதாரப் பிரச்சினையான இம் முயற்சியில் ஈடுபடும் மக்கள் அனைவரும், நம்பெரும் மதிப்புக்குரிய முன்னோர்களும், சமுதாய வீரர்களுமான சர். பி. டி. தியாகராயச் செட்டியார், டாக்டர் நடேச முதலியார், திரு ஒ. டி. தணிகாசலம் செட்டியார், அவர்கள் செய்த சேவைகள் அனைத்தும் வீண்போகாது காத்து, அவர்கட்கு நன்றி கூறும் முகத்தான் ஒவ்வொரு தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மகனும், மகளும் செயல் ஆற்ற வேண்டும். ❀

எல்லோரும் கேட்டார்கள்.....

[112-ம் பக்கத் தொடர்ச்சி]

'உம், பத்து பவுன் எட்டு ஷில்லிங்குதான்; கேளுங்கள், விட்டு விடப் போகிறேன்; ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம்' இப்படி கேட்கிறது கூச்சல். திருப்பிப் பார்த்தான். சந்தையில் என்ன பொருள் ஏலம் போடுகிறார்கள்? அதுவா, ஆப்பிரிக்கா காட்டு மிருகங்களை, கருப்பு நிற நீக்ரோக்களை. கொடுமை, கொடுமை. குமுறுகிறது நெஞ்சம்.

எப்படியோ ஐக்கிய அமெரிக்காவின் பதினைந்தாவது குடியரசுத் தலைவனாகி விட்டான், அவன். இனி நீக்ரோ, அமெரிக்கப் பள்ளிகளில் படிக்கலாம், சட்டம் பயிலலாம், வழக்கறிஞராகலாம், நீதிபதியாகலாம், தளபதியாகலாம் என்று வெள்ளை மாளிகையிலிருந்து தன் வெள்ளையுள்ளத்தைத் திறந்து காட்டிவிட்டான். அந்த மனிதாபிமானி ஆப்ரகாம் லிங்கன், வாஷிங்டன் நகரிலே நாற்பத்தி ஐந்தடி சிலையுருவிலே கம்பீரமாக வீற்றிருக்கின்றான். அவன்தான் அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்த ஆதிகர்த்தா. ❀


பிள்ளை வரம் : இரு காட்சிகள்
ராஜன்

சிறைதந்த சித்திரம்

-ரவி-

செந்தமிழ் நாட்டவர் ஆளவந்தார்— இனிச்
சிறப்புறும் தமிழென் றெண்ணமிட்டோம்—உளம்
நொந்திட இந்தியை நுழைத்ததனால்— தமிழர்
சிந்தையைப் போருக் கழைத்துவிட்டார்!

ஒடுக்கல் பட்டவர் ஆளவந்தார்— இனிக்
கொடுப்பார் சுதந்திரம் என்றிருந்தோம் —உண்மை
தடுத்திடும் சட்டமே போடுகிறார்—பதவி
பிடித்திடத் தேர்தலை நாடுவதால்!

ஏழையர் தோழர்கள் ஆளவந்தார்—இனி
ஏழையர் வாழுவர் என்றிருந்தோம் — குடிக்கும்
கூழையும் குடித்திடல் தட்டிவிட்டார்— வயிறு
கூனிய முதுகுடன் ஒட்டிடவே!

சென்னையை ஆள்பவர் தென்னாட்டார்— மக்கள்
சிறப்பினில் வாழுவர் என்றிருந்தோம்—வடவர்
சொன்ன சொல்லையே கேட்கின்றார் — திராவிடர்
இன்ப வாழ்வினைக் கொய்திடவே!

வேற்றுமை யொறுத்தவர் ஆளவந்தார்—உலகு
போற்றவே ஆளுவர் என்றிருந்தோம் — மதச்
சீற்றங் கொண்டோரிடம் சேர்ந்துவிட்டார்—நச்சு
ஊற்றுப் பொய்கையில் சார்ந்துவிட்டார்!

எத்தனை கனவுகள் கண்டிருந்தோம் —நாடு
முத்தமிழ்ச் சுவையுடன் வாழுமென்றே—எண்ணச்
சித்திரத் தெழிலைச் சிதைத்துவிட்டார்— மக்கள்
சித்தம் மிகவும் பதைபதைக்க!



இளம்வழுதி M.A.B.L.

கொள்ளிடக்கரையில் அமைந்துள்ள கிராமங்களில் செழிப்பு கொழிப்பது நாணலூர்தான். நஞ்சை நிலங்கள் தஞ்சைத் தரணியின் பெருமையைப் பேசும் அளவுக்குப் பெயர் வாய்ந்த இடம். சோழ மன்னர்கள் தங்கள் பக்தியைப் பாருக்குப் பறைசாற்ற, அழகான சிற்பக் கோவிலையும் அங்கே அமைத்துச் சென்றுள்ளனர். கோவில் சாதாரணமானதல்ல; 'பாடல் பெற்ற—புகழ் வாய்ந்த சிவன் கோவில். மன்னர்கள் ஆதரவு பெற்ற சிவனாயிற்றே, பஞ்சையாகவா இருப்பார்! தங்க முலாம் பூசப்பட்ட கலசங்களும், வெள்ளி வாகன வகையருக்களும், 'டால'டிக்கும் வைர நகைகளும் அந்த நியாகப் பெருமானுக்கு ஏராளம். சுமக்க முடியாத பாவத்தைக் கழுவ வரும் பக்தர் கூட்டம் ஆண்டவன் மீது, கேவலம், பொன்னையும் பொருளையும் சுமத்திச் சென்றனர். ஆண்டவனே வேண்டுமென்றும் வாய் திறக்கவில்லை; வேண்டாமென்று வேதாந்தமும் பேசவில்லை; சுருக்கமாகச் சொன்னால், ஆண்டவர் இனத்தில், நாணலூர்தியாகப் பெருமான் ஒரு பெரும் புள்ளி. ஆண்டுதோறும், சிறப்பான திருவிழா; திவ்யமான அலங்காரங்கள்; தேரோடும் வீதிகளில் 'ஜே ஜே' என்று ஜனக் கூட்டம்; வாண வேடிக்கைகளும் சதிர் கச்சேரிகளும் சிறப்பு அம்சங்கள். ஏழாம் நாள் உற்சவத்தன்று மண விழாக் கோலத்தில் ஐயன் தன் பத்தினிமார் புடைசூழ நகர்வலம் வரும்போது அந்தக் கனே சொட்டும் முகதரிசனத்தை ஒரே ஒரு முறை நாத்தழும்பேறிய நாத்திகர் கூட்டம் தரிசிக்குமேயானால், பக்த சிகாமணிகளாக மாறித் தானாக வேண்டும்—என்று பண்டாரக் கூட்டம் பகல் நேரங்களில் பஜனை மடங்கள் தோறும் பேசிக் கொள்ளும்.

* * *

இவ்வளவு பக்திப் பிரவாகம் பெருக்கெடுத்தோடிய நாணலூரில் பிறந்த கந்தனை அறியாதார் கொள்ளிடக்கரையில் யாரும் இருக்கமுடியாது. கந்தனைக் கட்டித் தங்கம் என்று சொல்லும் மக்களும் இருந்தார்கள்; கந்தன் ஒரு கேடி என்று போலீஸ் ரிகார்டும் இருந்தது.



ஆனால் அது பழங் கதை. இப்போது கந்தன் ஒரு சீர்திருத்தக் காரன். ஏழைகளின் இதயத்தை உணர்ந்தவன். சேரிகளுக்குப் போவான்; ஏழை வாழ வழிவகுப்பான்; 'கோவில் எதற்கு? குளம் எதற்கு?' என்று அடித்துக் கேட்பான்; மனித முயற்சிதான் முக்கியம் என்று சாதிப்பான்; கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மத்தியில் சிறந்த தலைவனாக உலவ ஆரம்பித்தான்; 'ஏழைக்குத் தோழன்—ஆகையால் பணக்காரனுக்கு வைரி. மக்களைச் சிந்திக்கத் தூண்டுகிறான்—ஆகையால் மதத்துக்கு விரோதி' என்று பண முதலைகளும் மத எருமைகளும் கந்தன் மீது போராட கச்சையை வரிந்து கட்டிக் கொண்டிருந்தனர். அவன் மீது அழியாத கறையாக பூசப்பட்டிருந்த 'கேடி'ப் பட்டம் அவர்களுக்குக் கேடயமாக-வாளாக உதவியது.

* * *

கந்தனுக்குக் கேடிப் பட்டம் சூட்டப்பட்டதே ஒரு வேதனையான சம்பவம். கந்தனுக்கு 20வயதாக இருக்கும் போது, ஒரு நிலப் பிரபு வீட்டில் கண்ணயமாக ஒரு காவல் காரனாக வேலை பார்த்து வந்தான். ஒரு நாள் இரவு—அமாவாசை இருட்டு-காவல்படுத்திருந்த இடத்தில் ஏதோ அரவம் கேட்கவே எழுந்து கவ

னித்தான். இரண்டு கரிய உருவங்கள் முக்காடிட்ட வண்ணம் மறைந்து மறைந்து செல்வது போல் இருந்தது. உடனே சத்தம் செய்யாமல் கந்தனும் பின்னாலேயே போனான். நெல் சேமித்து வைத்திருந்த களஞ்சியம் பக்கம் உருவங்கள் ஊர்ந்தன. கந்தனுக்கு ரத்தம் ஜில்லிட்டது போன்ற உணர்ச்சி—வருவது வரட்டும் என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு அவனும் போனான். அங்கே மூன்றாவது உருவம் ஒன்று காத்திருந்து முதலிரு உருவங்களோடு கலந்து கொண்டது. ஏதோ பெரிய கொள்ளை நடத்த சதி நடப்பதாக எண்ணிய கந்தன், தன் படுக்கையில் அவசரத்தில் விட்டுவந்த டார்ச் விளக்கை ஓடி எடுத்துவந்து வெளிச்சத்தை வீசினான். வீசினவன் அப்படியே வெலவெலத்துப் போய் விட்டான். விஷயம் வேறொன்றுமில்லை. என்னவோ ஏதோ என்று பயந்து வந்த கந்தன் கண்டது, கணக்கப் பிள்ளை கந்தசாமி, கோடி வீட்டு கோமளம், முதலாளி முத்துச்சாமி ஆகியவர்களைத்தான். தன் அந்தரங்கத்தில் வேண்டுமென்றே வேலைக்காரன் தலையிட்டு விட்டதாக முதலாளி பேயாட்டம் ஆடினார், கந்தனை அன்று காவலுக்குப் படுக்க வேண்டாம் என்று கணக்கப்பிள்ளை கந்தனை எச்சரிக்க மறந்ததை அறியாமல்! விளைவு-மறு நாள் ஒரு மூட்டை நெல்லை களவு செய்து விட்டான் என்று போலீஸாரால் கந்தன் குற்றம் சாட்டப்பட்டான். தான் குற்றமற்றவன் என்று எவ்வளவோ வாதாடியும் பயனில்லை. சந்தர்ப்ப சாட்சியங்கள் அவனுக்கெதிராக சதிராடின. கடைசியில் சட்டம் தன் இரும்புக் கரங்களை நீட்டி, கந்தனைச் சிறையில் தள்ளிற்று. சிறையிலிருந்து வெளிவந்த அவனை சமூகம் ஒதுக்கிற்று. பழைய குற்றவாளி என்று போலீஸாரின் சந்தேகக் கண்கள் அவன்மீது மொய்த்தன. பிறகு பல சில்லறைத் திருட்டுக்கள்! வேலையில்லாக் கொடுமையின் விளைவு—அதற்கும் பிறகு அவனைப் பல திருட்டுகளுக்குப் பொறுப்பாக்கி சிறையில் தள்ளுவதும், வெளியே இழுப்பதுமாக பல நாடகங்கள் நடந்தன. கடைசியில், கேடி என்ற கிரீடத்தைச் சூட்டி, நாணலூர் வட்டாரத்து முடிசூடா மன்னனாக ஆக்கி வெளியே விட்டார்கள். மனித சமூக அமைப்பில் தீண்டாதவனாகக் கருதப்பட்டாலும், நாளடைவில் தன் பழைய கால வாழ்க்கைப் பாதையை மாற்றி, ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி நல்ல மனிதனாக ஆகிக் கொண்டு வந்தான்.

* * *

ஒரு நாள் காலை நாணலூர் கிராமமே அல்லோல கல்லோலப்பட்டது. தியாகப் பெருமான் ஆலயத்தில் கன்னம் வைத்து பெரும் பொருள் களவாடப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் சுற்று வட்டாரங்களில் பரவியது. தங்க நகைகளும், வைரக் கற்களும், பரம்பரை பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்டு வந்த அரிய பல பொருள்களும் அள்ளிச் செல்லப்பட்டன என்ற செய்தி யாரைத்தான் திடுக்கிட வைக்

இவைகளெல்லாம் தேர்தல் சின்னங்களாக இருந்தால்...



அபேட்சகர்கள் யாராயிருக்கலாம்?

[விடை அடுத்த பக்கம்]

காது! கோயில் பெருச்சாளிகள் வேலையோ, அல்லது பழக்கப்பட்ட பழைய குற்றவாளிகள் வேலையோ என்றும் எங்கும் பேசப்பட்டது. போலீஸ் உயர்தர அதிகாரிகள் நாணலூரில் முகாமிட்டனர். கோவிலில் களவு போனது ஒன்றுதான்; இரண்டா? பல லட்சமல்லவா! துப்பறியும் நிபுணர்கள், சென்னையிலிருந்து விரைந்தனர். சாமான்யக் களவா? சர்வேஸ்வரனிடமே யாரோ கைவரிசையைக் காட்டியிருக்கின்றனர். அவர்கள் கண்கள் அகிந்துதான் போகும் என்று சாபமிட்டனர் சானுப் பாட்டிகள். ஆனால், களவு பற்றித் தடயமோ, துப்போ, சிறிதும் கிடைக்கவில்லை. தர்மகர்த்தாக்கள், பூசாரிகள், மடப்பள்ளி வீரர்கள், காவல்காரர்கள் ஆகியோரெல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்து நடந்து அலுத்துவிட்டனர். கடைசியில், வழக்கு கைநழுவப் படுமோ என்ற நிலையும் ஏற்பட்டது என்றும் சொல்லலாம். மத வாதிகள், கேடி கந்தன் மீது கண் வைக்கச் சொல்லி தாபமிட்டனர். 'கோயிலை எதிர்க்கும் கந்தன் ஏன் அதைச் செய்திருக்கக்கூடாது?' என்பது அவர்களது அங்கலாய்ப்பு.

அவர்களுக்கு ஏற்றாற்போல், இன்ஸ்பெக்டர் சோணைசலம் அந்த ஊரில் பதவியேற்றார். காலையில் எழுந்தவுடன் கட்டு கட்டாக விபூதி அணிந்து சிவப் பழமாகக் காட்சியளிப்பார்; திருப்புகழ் பாராயணம் செய்வார்; கொல்லாமை நல்லது என்று போதிப்பார்; ஆனால் கடமை என்று வந்து விட்டால் கடுகளவும் பிசகமாட்டார். இப்படிப்பட்ட அதிகாரியிடம் தூது கோஷ்டி வந்தது கந்தன்மீது புகார் மூட்டையைத் தூக்கிக் கொண்டு. கடமை தவறு வீரரான சோணைசலமும், கந்தன் மீது அவரை அறியாமலேயே துவேஷம் கொண்டு விட்டார். அவன் கேடி என்ற காரணத்தால். அவனே எப்படியாவது கோவில் கொள்ளை வழக்கில் இழுத்துவிட முழு மூச்சோடு வேலை செய்ய ஆரம்பித்தார்.

* * *

சோழ குண்டாம் பாளையம், நாணலூருக்குப் பக்கத்திலுள்ள சிறு நகரம். கடைத் தெருவில் ஒரு நாள் யாரோ ஒரு காஷாய தாரி கஞ்சா போதையில் தள்ளாடிச் சென்றவன், ஒரு பெண்ணைக் கையைப் பிடித்து இழுக்க, அவள் குய்யோ முறையோ எனக் கத்த, கடைசியில் போலீஸ் வரை விவகாரம் சென்றது. சாமியாரை லாக்காப்பில் சோதிக்க, பல அதிசயங்கள் போலீஸாருக்காக காத்திருந்தன. நாணலூர் தியாகப் பெருமான் கோவில் திருட்டில் சம்பந்தப்பட்ட பல நகைகள் அவனிடம் கிடைத்தன. அவன் பெயர் இருள கோவிந்தன் என்றும், அவன் ஒரு பழைய குற்றவாளி என்றும் புலப்பட்டன.

இன்ஸ்பெக்டர் சோணைசலத்தின் மூளை 'போட் மெயில்' வேகத்தில் வேலை செய்தது. பல பழைய கேடிகளை கைது செய்து லாக்காப்பில் வைத்தார். கேடி கந்தனையும் உள்ளே வைக்க ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி எண்ணி பூரிப்படைந்தார். திடீரென அன்று இரவு தன் குடிபடைகளுடன் கந்தன் வீட்டின் மீது படையெடுத்தார். அப்போதுதான் வெளியே போய்விட்டு வந்த கந்தன், படுத்து அலுப்பில் உறங்கிக் கொண்டிருந்தான். கதவு தட தட வென தட்டப்பட்டது. திறந்த அவன் கண்கள் மூட மறுத்தன; இந்த மாதிரி போலீஸ் ஜபர்தஸ்தைக் கண்டே அவனுக்கு 6, 7, ஆண்டுகளாவது இருக்கும். அதிகம் வளர்த்துவானேன், சடங்குகள் ஒழுங்காக நடத்தப்பட்டு, உள்ளூர் லாக்கப்பில் வைக்கப்பட்டான் கந்தன். தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும், எந்த விதமான குற்றமும் புரியவில்லை என்றும், திரும்பத் திரும்ப வாதாடிப் பார்த்தான். சுவர்களுக்குக் கேட்கும் சக்தியிருந்தாலாவது, கேட்டிருக்கும். இன்ஸ்பெக்டர் மனதை இரும்பாக்கிக் கொண்டு, காதை செவிடாக்கிக் கொண்டு அமர்ந்திருந்தார். கந்தனை சிக்க வைக்க சாட்சியம், தடயம், சந்தர்ப்பம் சரியாக அமைய வேண்டுமே என்று அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது கந்தனுக்கு எப்படித் தெரியும்!

* * *

அன்று மாலையே கைது செய்யப்பட்ட பல கேடிகள், கந்தனின் பழைய சகாக்கள். பொருமையும் அதிருப்தியும் இல்லையென்றால், மனிதன், இந்த இருபதாம் நூற்றாண்டு மனிதன் என்று சொல்லிக் கொள்ள முடியுமா? கந்தனின் சகாக்களில் பலர், அவனுடைய திருந்திய போக்கு கண்டு, அதிருப்தியும் பொறுமையும், கொண்டனர். கந்தன் தங்களிடை இல்லை யென்றதும், அவர்களுக்குக் கை யொடிந்தது போலிருந்தது. எடுத்த எந்த காரியமும் உருப்பட்டதில்லை; ஆனால் எந்தக் காரியத்தையும் எடுக்காமல் இருந்ததில்லை. வயிறும் வாயும் இருக்கும் வரை வாழ்க்கைச் சக்கரம் ஓடியாக வேண்டுமல்லவா! ஆகையால் தங்களை விட்டுப் பிரிந்து, ஊருக்கு உழைக்கும் கந்தன் ஏதோ

இவர்கள்தான்
அந்த
அபேட்சகர்கள்!

1-ராமசாமி படையாட்சி
2-சுப்ரமணியம்
3-பக்தவத்சலம்
4-பிரகாசம்
5-ஆச்சாரியார்
6-காமராஜர்
7-ஜெயப்பிரகாஷ்
8-பட்டம் தாணுப்பிள்ளை
9-நேரு
10-ஜீவானந்தம்

தனாத காரியம் செய்து விட்ட தாக எண்ணி அசுயை அடைந் திருந்தனர். இந்த சூழ்நிலையில் இன்ஸ்பெக்டர் சோணைசலம் அவர்களிடை புகுந்தார். மனித மனம் என்பது பற்றி பால பாட முதல், பல்கலைக் கழக பாடம் வரை படித்தவராயிற்றே அவர்!

கந்தனைக் குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொன்னர். அவனோ சிரிப்பதைத் தவிர வேறெதை யும் பதிலாகத் தருவதில்லை. அல் லது, 'தடயமும் கிடையாது; தகவலும் கிடையாது; தாறு மாறுக உளறுமல் தயவு செய்து போங்கள்,என்று சீறிவிழுவான். கடைசியில் இன்ஸ்பெக்டர் தன் மனசாட்சியை மறந்து, ஒரு பயங்கர முயற்சியில் ஈடு பட முனைந்தார். ''நீ குடி இருக் கும் வீட்டிலேயே களவு போன நகைகளைக் கைப்பற்று கிறேன். நீயும் தான் கொள்ளைக் காரன். என்ன சொல்கிறாய், கந்தா?'' என்று மிரட்டவும் செய்தார். ''வீண் கதை பேசா தீர், வெளியே செல்லும்'' என்று முகத்திலடித்தான். கையா லல்ல; வார்த்தையால்.

* * *

சகா கைதிகளில் மேகையன் என்பவன் சற்று வாய்த்துடுக்கு. அவனை அணுகினர் சோணை சலம்; ஏதோ ரகசியம் பேசிப் போனர். பிறகு நடுச் சாமத் துக்கு மேல், மீண்டும் அங்கே வந்தார். கந்தனின் நண்பனை இருந்து துரோகியானவன் மேகையன். எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர், காவலாளிகள் உட்பட. தான் செய்யும் காரியம் தகாது என்று தெரிந்திருந்தும், ஏதோஒரு லட் சியத்தைச் சாதிக்கப் போகும் வீரனைப் போல் வந்த இன்ஸ் பெக்டர் மேகையனை எழுப் பினர். சிறு சத்தமும் செய்யா மல் அவனும் வெளியே வந் தான். வந்தவனிடம் ஏதோ ஒரு நகையைக் கொடுத்தார். சுற்று முற்றும் பார்த்தார். மீண்டும் ஏதோ அவன் காதருகே ரகசி யம் சொன்னர். மேகையன் கை யில் பச்சைத்தான் ஒன்றும் மடங்கியது. மேகையன் வெளி யுலக மனிதனானன்.

அரிக்கன் லாந்தர் மினுக் மினுக்கென்று எரிந்து கொண் டிருந்தது; கொட்டு கொட் டென இன்ஸ்பெக்டர் கண் விழித்துக் கொண்டிருந்தார். கள்ளனை நம்பி ஒரு ஆபத்தான காரியத்தில் இறங்கி விட் டோமே என்று அடிக்கொரு தரம் பெரு முச்செறிந்து கொண்டார். புன்னகை ஒரு விநாடி முகத்தில் அரும்பும்; மறு விநாடி பீதியும் பிரமையும் முகத்தைக் கவ்வும். காவலாளி களும் தங்கள் கடமையில் தவ றாமல் தூங்கிக் கொண்டிருந்த னர்! கடைசியில் 'அப்பாடா' என்று பெரு மூச்சு விட்டார். மேகையன் அவசர அவசரமாக உள்ளே நுழைவதைக் கண்டு. ஏதோ எவரெஸ்டு சிகரத்தை எட்டி விட்டவன்போல் சோணை சலத்திடம் உளறினன். இன்ஸ் பெக்டரும் தன் கிருபா கடாட் சம் அவனுக்கு என்றென்றும் உண்டு என்று அபயக் குரல் கொடுத்துச் சென்றார். கந்தன் சுகமாக தன் கொட்டடியில் உறங்கிக் கொண்டிருந்தான்.

* * *


பொழுது புலர்ந்தது; போலீஸ் ஸ்டேஷன் தூள் பறந்தது; இன்ஸ்பெக்டர் அதிகாரம், அட்டகாச மெல்லாம் கண்ட கான்ஸ்டபிள்கள் கூட அஞ்சி னர். ''கூப்பிடு கந்தனை'' என்று



கர்ஜித்தார். கந்தன் வந்ததும், ''கேடிப் பயலே, பொய்யா சொன்னாய்! கோவில் கொள்ளை வழக்கில் சம்மந்தப்பட்ட ஒரு தடயம் உன் வீட்டிலிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. என்ன சொல்கிறாய்?'' என்று முறைப்பாகவே கேட்டார். உள்ளபடியே முதலில் பயந்த கந்தன், பிறகு சமாளித்துக் கொண்டான். அவனும் அலட் சியமாகவே பதிலளித்தான். பிறகு கைவிலங்கிட்டு, அந்தப் பரிதாபத்துக் குரியவனை-அவன் ஒரு காலத்தில் கேடி என்ற ஒரே காரணத்தால், அவனு டைய வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள் போலீஸார். அவன் வீட்டில் அவனைத் தவிர வேறு யாரும்தான் இல்லையே! வீடு முறைப்படி சோதனையிடப்பட் டது. யாரும் எதிர்பாராத வண் ணம், வீட்டின் உள் கூரை யிடுக்கில் அம்மன் கழுத்தில் ஜொலிக்க வேண்டிய ஒரு வைர நெக்லஸ் ஜோலித் துக் கொண்டிருந்தது. கந்த னுக்கு எதுவும் பேசமுடிய வில்லை; 'அநியாயம்; அக்ரமம்' என்று கத்தவோ கதறவோ கூட அவனுக்குத்திராணியில்லை. போலீஸ் புலி என்று பெய ரெடுத்த சோணைசலமா இப்ப டிச் செய்தார் என்று அங்க லாய்த்துக் கொண்டான். ''ஒரு முறை ஒரு தவறு செய்துவிட் டால், மீண்டும் திருந்தவே மாட்டானா? சமுதாயம் என்று தான் திருந்துமோ! வறுமையும் வேலையில்லாக் கொடுமையும் என்றுதான் ஒழியுமோ! ஊரில் உலவிவரும் பல பெரும் புள்ளி களின் வாழ்க்கை ஏடுகளைப் புரட்டினால், எத்தனை கிரிமினல் வழக்குகள் தாக்கல் செய்ய முடியும், கேடி என்ற ஒரு வார்த்தை தரும் தகவலை விட்' என்றுதான் கந்தன் குமுறினன். முடிவு என்ன? மூன்று வருஷ கடுங்காவல் கைதி, பழைய கேடி கந்தன்.

திடுக்கிட்டு எழுந்த நான், கண்ட கனவை எண்ணிப் பார்க்காமலிருக்க முடியவில்லை. இப்படியும் இருக்குமா என்று வியப்பில் ஆழ்ந்தேன்.

எலுமிச்சைக் கிழங்கு



1938 என்று நினைக்கிறேன்; நான் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலம் அது – மாணவர்களாகச் சேர்ந்து ஒரு நாடகம் நடத்துவது என முடிவு செய்தோம். நாடகத்துக்குக் கதை வேண்டுமே! அந்த நேரத்தில் பாகவதர் நடித்த சிந்தாமணி சினிமாப் படம் வரக்கணக்கில் ஓடிக் கொண்டிருந்தது — ஆகவே அதையே நாடகமாக நடத்துவது எனத் தீர்மானிக்கப் பட்டது. சிந்தாமணி சினிமா பாடல்களை யெல்லாம் அப்படி அப்படியே பாடுவேன், நான். அடிக்கடி என்னைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள் எனது மாணவ நண்பர்கள். சிந்தாமணி படத்தில் உள்ள வசனங்களையும், பாகவதரைப் போலவே, காப்பி யடித்துப் பேசிக் கொண்டுதிரிவேன் அதனாலேயே சிந்தாமணி நாடகத்தில் பிள்ளைமங்கள் வேடத்திலே நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எங்கள் திட்டப்படி இரண்டு மாணவர்கள் சிந்தாமணி சினிமாவை நாலைந்து தடவைகள் பார்த்து, அதிலுள்ள வசனங்களைத் தப்புந் தவறுமாய்க் காப்பியடித்துக் கொண்டு வந்து விட்டார்கள். ஒத்திகை விடாமல் நடந்தது. நாடகத்துக்கான உதவிகளை யெல்லாம் உபாத்தியாயர்களே எங்களுக்குச் செய்தார்கள். ஒத்திகையிலே எனக்கு நல்ல பெயர் கிடைத்து விட்டது. ஏனெனில் படத்திலே பாகவதர் எந்த வசனத்தை உச்சரிக்கும்போது எதைக் கையைத் தூக்குகிறாரோ—எந்தப் பக்கம் திரும்பி எப்படி எப்படிப் பேசுகிறாரோ — அதையெல்லாம் அப்படி அப்படியே காப்பியடித்து அதேமாதிரி நடித்து விடுவேன் நான்.

நாடகம் நடந்தது. எனக்கு வயதுபத்து. சிந்தாமணியாக நடித்த பையனுக்கோ வயது பதினைந்து. என்னை விட இரண்டடி உயரம். நாடகம் ஒரே வேடிக்கைதான். ஒரு முக்கியமான கட்டம். சிந்தாமணியை பில்வமங்கள் பார்த்து விட்டான்—விரகதாபத்தோடு பாடுகிறான்—

"பேசுந்தரமோ காதல் பரவசமானால், தேகம் மறந்தேன்; லோகம் மறந்தேன்" என்று. படத்திலே பாகவதர் இதைப் பாடும்போது, வலது காலைத் தூக்கி ஒரு ஆசனத்தின் மேல் வைத்துக் கொண்டு, கன்னத்திலே வலது கையை வைத்தபடி பாடுகிறார் — நாடகத்திலே பேசுந்தரமோ கட்டம் வந்து விட்டது. ஆர்மோனியக்

S.S. ராஜேந்திரன்.

காரர் பாட்டை ஆரம்பித்துக் கொடுத்தார். நான் பாட வில்லை. மேடைக்குப் பக்கத்திலே இருந்தவர்கள் நான் பாட்டை மறந்து விட்டேனே என்று நினைத்து, 'பேசுந்தரமோ! பேசுந்தரமோ' என்று "குசு குசு" பாணியில் நினைவு படுத்தினார்கள். நான் பாடாமல் நின்றது பாட்டை மறந்து விட்டதால் அல்ல—கன்னத்திலே கையை வைத்துக் கொண்டு, காலைத் தூக்கி ஆசனத்தின் மீது வைத்துக் கொண்டல்லவா 'போஸ்' கொடுத்துப் பாடவேண்டும், சினிமாவிலே பாகவதர் பாடியிருப்பதுபோல! - மேடையிலே அந்தச் சமயத்தில் ஆசனம் இல்லை; ஆகவே பாட்டை நினைவு படுத்தியவர்களை ஒரு பார்வையால் அடக்கி விட்டு, நான் ஏதோ தவறு செய்யாதது போலவும், ஸ்டேஜ் ஏற்பாடு செய்தவர்கள் தவறு செய்துவிட்டது போலவும், முகத்தைச் சுளித்துக் கொண்டு உட்பக்கம் நோக்கி...'உஸ்..... ஆசனம்; ஆசனம் கொண்டு வாருங்கள்" என்று ரகசியமாகக் கூறி, மேடையில் நின்றபடியே ஜாடை காண்பித்தேன். உடனே உபாத்தியாயர், ஓரத்திலே வைக்கப் பட்டிருக்கிற ஒரு சீன் தட்டியில் தலையையும், உடலையும் மறைத்துக் கொண்டு, ஆசனத்தை நீட்டினார். நான் அதை வாங்கி வந்து வசதியான ஓர் இடத்திலே போட்டு விட்டுப் பிறகு பாட்டைத் துவக்கினேன். ரசிகர்களுக்கு அன்று நகைச்சுவைக்குப் பஞ்சமில்லை.

★ ★ ★

1941-வது வருஷம். மதுரையில் அப்போது நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்த பாலசண்முகானந்த சபையாரின் (டி. கே. எஸ். சகோதரர்களின் நாடக சபை) நாடக சபையிலே சேருவதற்காக நானும் எனது சிற்றப்பாவும் மேலமாசி வீதியிலே நடந்து வருகிறோம். லேசாக தூறிக் கொண்டிருந்த மழை திடீரென்று அதிகமாக ஆரம்பித்தது. நாங்கள் மழைக்காக ஒரு வீட்டுக்குள் ஒதுங்கினோம். அங்கே "டி. கே. எஸ். சகோதரர்கள் தங்கியிருக்கும் வீடு எது?" என்று விசாரித்தோம்.



"என்ன, என்ன? இந்த வீடு தான்" என்று கூறிக் கொண்டே திருவாளர் டி. கே. பகவதி அவர்கள் வெளியே வந்தார். "என்ன வேண்டும்?" என்று கேட்டார். நான் நாடக சபையில் சேர வேண்டுமென்றேன் ... எங்களை அவர் உள்ளே அழைத்து உட்கார வைத்தார். எனது கோரிக்கைக்கு என்ன பதில் சொல்லப் போகிறாரோ என்ற ஆவலுடன் — துடிக்கும் நெஞ்சத்துடன் நான் உட்கார்ந்திருந்தேன். திரு பகவதி என்னை ஏற இறங்கப் பலமுறை பார்த்தார். கடைசியில், இனிக்கும் பதிலையும் தந்தார். "கூட்டத்தில் ஒருவகை மேடையில் வந்து போகட்டுமே' என்று முணுமுணுத்தார். அன்று முதல் நான் பாலசண்முகானந்த சபையில் ஒரு பால நடிகனானேன்.

★ ★ ★

அப்போது கும்பகோணம் வாணி விலாஸ் தியேட்டரில் எங்கள் கம்பெனியின் சிவலீலா நாடகம் நடந்து கொண்டிருந்தது. எனக்கு நாடகமே மனப்பாடம். எடுபிடி வேடங்களே தாங்கி நடித்துக்கொண்டிருந்த எனக்கு என்னமோ மாதிரியிருந்தது. நேராக திரு டி. கே. சண்முகம் அவர்களிடம் சென்று "தங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்றேன். "என்ன? பேசு" என்றார். நான் நமது நாடகத்தில் எனக்கு ஒரு நல்ல வேடம் வேண்டும் என்றேன். 'நீயே சொல்லு! என்ன வேடம் போடுகிறாய்?' என்றார். நான் கொஞ்சநேரம் யோசித்து விட்டு, "நீங்கள் போடுகிற வேடத்தை நான் போடுகிறேன்" என்றேன். அவர் கையைப் படைந்த தோடு மகிழ்ச்சியும் அடைந்தார். என் முதுகில் தட்டிக் கொடுத்து, "சரி! நாளைக் காலையில் ஒத்திகை பார்த்து விட்டுப் பிறகு சொல்லுகிறேன்" என்றார்.

அடுத்த நாள் பரீட்சையில் தேறி அவர் தாங்கிய வேடத்தில் நான் நடித்தேன். "வசனங்களை கணீர் கணீரென்று தெளிவாகப் பேசுகிறான், ராஜேந்திரன்' என்று அடிக்கடி கூறி அப்போது டி. கே. எஸ். பெருமைப் பட்


டுக்கொள்வார். அதன் பிறகு அவர் ஓய்வு பெற்றுக் கொண்டு அவருக்குப் பதிலாகச் சில நாடகங்களிலே கதாநாயகனாக நடிக்கிற அளவுக்கு என்னை வளர்த்து விட்டார். டி. கே. எஸ். சகோதரர்களுக்கு என்மேல் இருக்கிற அன்பையும், எனது வளர்ச்சியிலே அவர்களுக்கிருக்கிற அக்கரையையும், என்னால் எபபோதும் மறக்கவே முடியாது.

காலேஜிலே படித்து விட்டு, அரசாங்க அலுவலிலே இருக்கிறவர்கள், எப்படித் தங்கள் பள்ளி வாழ்க்கையை எண்ணி மகிழ்கிறார்களோ, அதைப்போல நான் நினைத்து நினைத்து மகிழ்வதெல்லாம், டி. கே. எஸ். சகோதரர்களின் நாடக சபையிலே, என் இளமைப் பருவத்திய நிகழ்ச்சிகளைத் தான்!


திரு. டி. கே. சண்முகம் அவர்கள் தமிழிலே ஆர்வமும், சீர்திருத்தக் கருத்தும், சுயமரியாதைக் கொள்கையும் கொண்டவர். என்போன்ற நடிகர்களைப் பகுத்தறிவு வாதிகளாக வளர்த்து விட்டவர் டி. கே. சண்முகம்தான்! அவர்களால்தான் அறிஞர் அண்ணு அவர்களின் நட்பு எங்களுக்குக் கிடைத்தது.

ஈரோட்டிலே, பெரியார் தலைமையில் அறிஞர் அண்ணு அவர்கள், தன் தோழர்களுடன் சந்திரோதயம் நாடகத்தை நடித்தார்கள். டி. கே. எஸ். அவர்கள் உட்பட நாங்கள், அனைவரும் மேடைக்குள் இருந்தபடியே, அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்தோம். அதுவரை அண்ணு அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, நேரில் பார்த்ததில்லை. ஈழத்து அடிகளைப் பார்த்து அவர்தான் அண்ணுவாக இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு. ஒருவரிடம் போய் "அண்ணு என்பது யார்?" என்று கேட்டேன். அவர் அமைதியாக... "ஏன்? நான் தான்" என்றார். நான் கேட்டது அண்ணு விடம்தான். என்னைச் சமாளித்துக் கொள்ள அந்த நேரத்தில் நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்?

*



இலட்சிய பூமி



இருதயராஜ். M.A.

அரசியல் அறிஞர்கள் ஒரு நாட்டுக்கு இலக்கணம் கூறும்போது, அதற்கு நான்கு சிறப்பான இயல்புகள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். முதலாவதாக, ஒரு நாட்டில் மக்கள் கூட்டாக வாழ வேண்டும். மக்களே இல்லாத பிரதேசத்தை நாடு என்று அழைக்க முடியாது. அங்கு அரசும் ஏற்படாது. ஒரு நாட்டின் சிறப்பு அதன் மக்கள் தொகையையும் அவர்களின் தரத்தையும் பொறுத்திருக்கும்.

இரண்டாவதாக, ஒரு நாட்டுக்கு இயற்கையாகவே ஏற்பட்ட எல்லைகளும் மற்ற நாடுகளிலிருந்து பிரிக்கப்பட்டு தனி நாடாக இயங்குவதற்கு இயற்கையான அரண்களும் வேண்டும். இவ்விதம் அமையப் பெற்ற நாடு சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். மூன்றாவதாக, நாட்டை ஆளுவதற்கு ஒரு அரசாங்க அமைப்பு வேண்டும். அவ்வித அரசாங்கம் முடியாட்சியில் மன்னராலும், பிரபுக்களாட்சியில் பிரபுக்களாலும், குடியாட்சியில் குடிமக்களாலுமே நடத்தப்பட்டு வரலாம். அரசாங்கம்எத்தகையதானாலும் அதன் ஆணைக்கு மக்கள் எல்லோரும் அடங்கி நடக்கும் விதத்தில் அது அமையப் பெற்றிருக்க வேண்டும். நாட்டிலே அமைதியை நிலைநாட்டி குடிகளின் உயிரையும், சொத்தையும் பாதுகாத்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்து, பகைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவது அரசாங்கத்தின் கடமைகள். இந்த அரசாங்கம் எப்பொழுதும் ஒரே அமைப்பாகவோ, அல்லது குறிப்பிட்ட ஒருவரிடமோ, அல்லது ஒரு சிலரிடமோ இருக்க வேண்டியதில்லை. அதன் அமைப்பு முறை மாறலாம். ஆனால் எந்த முறையாயினும் ஒரு அமைப்பு முறை அவசியம் இருக்க வேண்டும்.



கடைசியாக, ஒரு நாடு சுவாதீனமாக இருக்க வேண்டும். தன் எல்லைக்குள் தன் அரசாங்க ஆணைக்குப் போட்டியில்லாமலும், பிற நாட்டினரின் தலையீடோ அல்லது உத்தரவுக்கு உட்பட்டோ ஒரு நாடு இருத்தல் கூடாது. சுவாதீனமில்லா விட்டால் அது அடிமை நாடேயாகும்.

இம் மாதிரி நான்கு இயல்பான குணங்களையும் உள்ள நாட்டை ஒரு அரசு என்று குறிப்பிடுகின்றனர் அரசியல் நிபுணர்கள்.

ஒரு இலட்சிய நாடு,—எல்லோரும் விரும்பத் தக்க நாடு, எப்படியிருக்க வேண்டும் என்று பல்வேறு காலங்களில் பல அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்றனர். திருக்குறளில் பொருட்பாலில் ஒரு நாடு எப்படியிருக்க வேண்டும், அதனை ஆளும் அரசன் எத்தகையவனாயிருக்க வேண்டும், அவன் எப்படி ஆளவேண்டும், அந்நாட்டிலுள்ள மக்கள் எப்படி வாழ வேண்டும் என்பவைகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

வள்ளுவர் விரும்பியநாட்டின் குணங்களையும் நோக்கங்களையும் ஆராயும்பொழுது இருபதாவது நூற்றாண்டில் அரசியல் நிபுணர்களால் புதிதாகக்கருதப்படும் கருத்துக்களையும், இன்னும் பலர் இன்றைய நாளிலும் சிந்தித்திராத பல காரியங்களையும் இருபதுநூற்றாண்டுகளுக்கு முன்னரே எப்படி வள்ளுவர்

கூறிப் போயிருக்கிறார் என்று நினைக்கவே வியப்பாயிருக்கிறது.

வள்ளுவர் விரும்பிய இலட்சிய நாடு, தனக்குத் தேவையான சகலவிதமான பொருள்களையும் தானே உற்பத்தி செய்து கொள்ளும் திறமையுற்றதாயிருக்கும். பிற நாடுகளை அண்டிப் பிழைக்கும் அவல நிலையில் தள்ளப்பட்டிருக்கும் நாடு நாடாகாது.

நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளம் தரு நாடு

தன் சுய தேவையையே பூர்த்தி செய்து கொள்ள முடியாத ஒரு நாடு அவசியம் அயல் நாட்டின் உதவியைத் தேடத்தான் வேண்டி வரும். பொருளாதாரத் துறையில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இயந்திரங்களோ அல்லது தொழில் திறமையுள்ள நிபுணர்களுக்கோ, அல்லது விவசாய விருத்திக்கு விதைக்காகவோ, அல்லது கருவிகளுக்காகவோ, அல்லது நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பிற நாட்டினரை அண்டி அவர்கள் தயவுக்காக கையேந்தி நிற்கும் நிலை ஏற்பட்டாலோ, அந்நாடு சீக்கிரம் அடிமை நாடாகிவிடும். உபகாரம் செய்பவர்கள் விருப்பம்போல் நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். உணவுக் கொடுத்துதவும் நாட்டுக்கு விரோதமாகச் செல்ல மனத் துணிவின்றி, நல்லவைக்கும் கெட்டவைக்கும் கூட அந்நாட்டின் பின்னேயே செல்லவேண்டி வரும் என்பதினாலேயே வள்ளுவர் அப்படி கூறியிருக்கிறார். வளங்குன்றி பிற நாட்டு உதவியை எதிர்பார்த்து நிற்கும் நாடு நாடெனப் படுவதற்கே தகுதியற்றது என்றார்.

அதனால்தான் நாடெனத் தகுதியுள்ள ஒரு நாட்டில் வற்றாத வளமிருக்க வேண்டும். பிற நாட்டினருக்கும் தேவைப்பட்டதைக் கொடுக்கும் திறனிருக்க வேண்டும். கொடுப்பதால் குறையாதத் தன்மை இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது நல்லதொரு நாடாகும்.

பெரும் பொருளால் பெட்டக்கதாகி
[அருங்கேடடால்
ஆற்ற விளைவது நாடு.

என்றார். அப்படி வளம் பொருந்தியதாக ஒரு நாடு இருந்தால்தான் பகையால் போர்மூண்ட போதிலும், மழையின்றி குறைவேற்பட்ட போதிலும், அல்லது மழை அதிகமாகி வெள்ளத்தால் சேதமுற்ற போதிலும், விளைவிற் குன்றாது விளைந்து நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். தேவைக்கு மேல் பொருள் உற்பத்தியாகி பிற நாட்டவருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் குறையாமல் இருந்தால்தான் அயல் நாட்டினருடன் வாணிபம் செய்ய முடியும். அதனால் லாபம் வரும். அதனால் அரசாங்கத்துக்கும் வரியின் மூலம் வருமானம் அதிகரிக்கும். அதைக்கொண்டு மக்கட் தேவைகளை அரசாங்கம் பூர்த்தி செய்ய முடியும்.

ஒரு நாட்டுக்கு நில வளம் மட்டும் இருந்தாற் போதுமா? நீர் வளமும் அவசியம் இருக்க வேண்டும்.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.


இயற்கையாகவே நீர் வளமும், அது பற்றுமற்போனாலும் அல்லது மழை பெய்யத் தவறி விட்டாலும் கெடுதல் வராதபடி, செயற்கையாக நீர்த்தேக்கங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் முதலியவைகளால் நீர் வளமும் பெறுதலோடு, இவ்வளவுக்கும் சாதகமாய் வாய்ந்த மலையும், வற்றுத ஜீவநதிகளும், நல்ல பாதுகாப்பான மலைகளும் அரணும் அமைந்திருக்க வேண்டும், ஒரு நாட்டிற்கு. அப்படி இருந்தால்தான் அந்நாட்டுக்குப் பகைவரால் கேடு பிறக்காது.

ஒரு நாட்டில் எல்லா வளமுமிருந்து அங்குள்ள மக்கள் தகுதியற்றவராயிருந்தால் அதனால் கேடு விளையும். பொருளை உழைக்கமுடன் உற்பத்தி செய்யும் தகுதியுடையவரும், மிஞ்சிய பொருளை பிற நாட்டினரிடம் கொடுத்து வாணிபம் செய்யும் திறம்படைத்தவரும், அதனால் வரும் ஊதியத்தை அடைந்து செல்வராகியும் தம் தகுதி குறையாது, பண்பு மாறாது, தரம் கெடாது வாழும் மக்கள் ஒரு நாட்டில் இருக்க வேண்டும் என்ற கருத்துப்பட,

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

நல்ல வளமும் தக்க மக்களும் ஒரு நாட்டில் இருந்தாலும், அந்த நாட்டை ஆளுபவர்கள்



பார் முழுதும்...

புகைப்படங்கள்:

தங்கள் பொறுப்பை உணராமல் நடந்தால் அந்த நாடு எப்படி நல்ல நாடாகும்? ஆகவே நல்ல தொரு நாட்டில் நாடாள்பவர்களும் தங்கள் கடமைகளைச் சரிவர செய்ய வேண்டும். மக்கள் நல்வாழ்வு வாழ வழி வகுக்க வேண்டியது ஆளுபவரின் முதல் பொறுப்பு. முடியாட்சியாயினும், குடியாட்சியேயாயினும், மக்களின் வாழ்க்கை வளம் பெற்றிருந்தால்தான் அது சிறந்ததாகக் கருதப்படும். அதனாலேயே வள்ளுவர்,

வானோக்கி வாழும் உலகெல்லாம்;மன்னவன்
கோல்நோக்கி வாழும்குடி—என்றார்.

ஆக உயிர்கள் வாழ்வதற்கு வான் பொழியும் மழை எவ்வளவு அவசியமோ, அதுபோல ஒரு நாட்டின் மக்களுடைய நல் வாழ்விற்கு அருள் நிறைந்த ஆட்சி தேவைப்படுகிறது.

ஒரு நாட்டில் குறைவின்றி திருப்தியுடன், மகிழ்வுடன் மன்னனைப்போற்றி வாழும் மக்களை, ஒரு வேந்தனுக்கு அத்தியாவசியமாகத் தேவைப் படும் ஆறு அங்கங்களில் ஒன்றாகக் கருதுகிறார் வள்ளுவர்.

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

பலம் பொருந்திய படை வீரர்களையும், திற முடைய தளபதிகளையுமுடைய படை, மிக மிகத் தேவை ஒரு வேந்தனுக்கு. அதற்கு அடுத்தபடியாக அவனுக்கு தன்னை அன்புடன் போற்றி வாழும் குடி மக்கள் தேவை. திருப்தி யின்றி, நாட்டின் ஆட்சியிலே குறைகள் கண்டு, அரசன் குடிகளின் கஷ்டங்களை உணராமல் இருப்பது கண்டு, உள்ளத்திலே குமுறிக்கொண் டிருக்கும் குடிகளையுடைய ஒரு வேந்தன், உண்மையிலேயே ஒரு குமுறும் எரிமலையின்மீது வாழுபவனைப் போலத்தான். குமுறும் எரிமலை ஒரு காலத்தில் கனலைக் கக்கியே தீரும். அது போல மக்களுடைய விருப்பத்துக்கு விரோத மான விதத்தில் மன்னனின் போக்கு இருந்தால், அது புயலைக் கிளப்பியே தீரும். நாட்டிலே அமைதி இராது. அதனால்தான் பல முள்ள படைக்கு அடுத்ததாக குடிமக்களை அரசனுக்குத் தேவையான ஆறு அங்கங்களில் ஒன்றாக வள்ளுவர் வகுத்திருக் கிறார். அதுவும் திருப்தியுள்ள குடி மக்கள் தேவை என்கிறார்.

ஆங்கமைவு எய்தியக் கண்ணும்
பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு.

மக்களிடையே திருப்தி இல்லா விட்டால் குழப்பங்கள் தோன்றி நாட்டிலே இயற்கையாக இருக்கும் நலன்களையும், மற்றும் அதிகப் பொருள் செலவில் உண்டாக்கப்பட்ட செயற்கை நலன்களையும் அழித்துவிடும். அதனால் தான் அமைதியுள்ள நாடே நல்ல நாடு என்றார்.

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு அங்கங்களையும் கொண்ட அரச னுடைய கடமை யாது?

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதரசு.

பொருள் வரும் வழிகளை ஆராய்ந்தறிந்து, அவை களைக் கையாண்டு, வந்த பொருளைச் சேர்த்து, அதைக் காத்து, காத்தவற்றை வகுத்துச்செலவு செய்தல்—இவைகள் மன்னனின் கடமைகள்.

கடைசியாகக் கூறப்பட்ட அந்த 'வகுத்தல்' என்ற கடமைதான் மிக முக்கியமானது ஆளுப வருக்கு. நாட்டிலே உற்பத்தியாகும் செல் வத்தை வகுத்தல் என்பது, மக்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வுக்கிடமின்றி ஒரு சிலர் உற்பத்தி யான செல்வத்தையெல்லாம் சேர்த்துக்கொள்ள வும், மற்றும் பலர் உழைத்தும் ஊதியமின்றி வாடவும் விடக்கூடாது. ஒருவன் விதைக்கவும் மற்றொருவன் அதை அறுத்துச் செல்லவும், ஒரு வன் அறுத்ததை மற்றொருவன் அளந்து பார்த்து அகமகிழ்ந்து அனுபவிக்கவும் விடக் கூடாது.

'வகுத்தல்' என்பது வேந்தனுக்குரிய மற் றொரு கடமையையும் குறிக்கும். மக்களிட மிருந்து அவர்கள் வருமானத்துக்குத் தக்கவாறு வசூலிக்கும் வரிப் பணத்தை வகுத்துச் செலவு செய்தல் வேண்டும். அதாவது, வரி வருமா னத்தை தக்க விதத்தில் வகுத்து, முக்கியமான காரியங்களுக்காக முதலிலும், மற்ற தேவை களுக்கும், பணிகளுக்கும் ஏற்றபடியும் தக்க படியும் செலவு செய்ய வேண்டும்.

வெளி நாட்டுப் படையெடுப்பிலிருந்து மக்க ளைக் காப்பதுதான் முக்கிய கடமை என்று நினைத்து, அதற்கே வரி வருமானத்தில் பெரும் பகுதியை செலவிட்டால் அது அறிவுடைமை ஆகாது.



ஏர் முனையிலே!

மதருஸ் போட்டோ ஹவுஸ், வேலூர்.

வரி விதிக்க அதிகாரம் இருக்கிறது என்பதால் அரசாங்கம் யதேச்சாதிகாரமாக மக்களைத் துன்புறுத்தும் வழியில் நடந்து கொள்ளக் கூடாது. மக்களிடமிருந்து வரி தண்டுவதென்பதே ஒரு தனிக் கலை. மக்களுக்கு நோவாமல், அவர்களிடையே அதிருப்தி ஏற்பட்டால் வரி தண்டுவது சுலபமல்ல.


வரி விதிப்பு பற்றிய எல்லா கருத்துகளையும் ஒன்று சேர்த்தாற்போல் இரண்டடிகளில் நயம்பட எடுத்துரைத்திருக்கிறார் திருவள்ளுவரும்:

வேலோடு நின்றானிடு வென்றது போலுங்
கோலோடு நின்று னிரவு

கொடுங்கோல் அரசன் குடிகளை வருத்தி பொருள் வேண்டுதல், வழிப்போக்கனைக் கள்வன் வருத்திப் 'பொருள் கொடு' என்று கேட்பதைப் போல என்று சொல்லியிருக்கிறார்.

கொள்ளைக்காரனிடம் நியாயம் பிறக்குமா? வழிப்போக்கர்களின் கொடுக்கும் சக்தி, தாங்கும் சக்தி இவைகளைப் பார்த்தா பணம் பிடுங்குவான் வழிப்பறிக்காரன்? அதுபோல மக்களை நியாய வரம்புக்கு மீறி அரசாங்கம் துன்புறுத்தி வரி வசூலிப்பது, கொள்ளைக்காரர்கள் மலிந்த காடாக மாற்றிவிடும் நாட்டை!

கோலை மேற் கொண்டாரிற் கொடிதே
யலை மேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து



'யாரோ தேசிய பாஷை தெரியாத பயல்—
பிரதேச பாஷையிலே கத்துகிறான்—
நீ வாருமய்யா!

என்று மற்றொரு குறளில் கூறியிருக்கிறார். பொருளை விரும்பி குடிகளை அலைக்கழிக்கும் வேந்தனுடைய செயல், கொலைத் தொழிலை மேற்கொண்டவரின் செயலை விடக் கொடியது என்றார்.

அநாவசியமாகக் குடிகளைத் துன்புறுத்திப் பணத்தை வரியாக வசூலித்து அதையும் மக்களுடைய தேவைகளுக்காக செலவிடாமல், தன் சொந்த போகபாக்கியத்துக்காகவும், வேடிக்கை கேளிக்கைகளுக்காகவும் வீண் விரயம் செய்தால் ஏழைக் குடிகள் வருந்துவர்—கண்ணீர் விடுவர்.

ஏழைகள்தானே — அபலைகள்தானே; அதிகாரம் உள்ளமட்டும் அவர்களை ஆட்டிப் படைக்கலாம். மிரட்டிப் பணம் பிடுங்கலாம். அவர்களால் என்ன செய்யமுடியும்? அழத்தானே முடியும்! அவர்களுடைய அழுகை-கூக்குரல் நம்மை என்ன செய்யும்?—என்ற எண்ணம் ஒரு நாட்டை ஆளுபவருக்கு இருந்தால், அந்த நாடு நிச்சயமாக நாசப் பாதையிலே செல்லும். அதனால் தான்:

அல்லல் பட்டு ஆற்று தழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

ஏழைகளைத் துன்புறுத்தி அவர்களிடமிருந்து வரிப் பணத்தைத் தண்டி, அவர்களை வேதனைக்குள்ளாக்கி, அலைக்கழித்து, அவர்கள் அது ஆற்றுது கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும்படி செய்தால் அதைவிட நாட்டை நாசக்குழியில் வீழ்த்தப் பயங்கரமான பகைவன் வேறொருவன் இருக்க முடியாது.

முன்னாட்களில், வெளிநாட்டினரின் படையெடுப்பு, உள் நாட்டுக் குழப்பம், காட்டு மிருகங்கள் நாட்டிலே புகாதபடி பார்த்துக் கொள்ளுவது போல சில அடிப்படைக் காரியங்கள் மட்டுமே ஆளுபவருக்கு இருந்தன. மக்களின் அன்றாட வாழ்க்கையிலே அவர்களின் ஆட்சி புகுந்ததில்லை. ஆனால் இன்றோ இந்தக் கொள்கைக்கு ஆதரவு இல்லை.

மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய எல்லா உயிர்ப் பிரச்சினைகளிலும் அரசாங்கத்துக்குப் பங்கு உண்டு இந்நாளில். மக்கள் எந்த அளவுக்கு அரிசி சாப்பிடலாம் என்பது முதற் கொண்டு அரசாங்கத்துக்கு நிர்ணயிக்க அதிகாரம் உண்டு என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆகவேதான் மக்கள் ஆட்சி என்ற வெறும் ஜனநாயக அமைப்பிலே இன்று மக்கள் மயங்கி விடுவதில்லை. மக்கள் ஆட்சி, உண்மையிலே, நடை

முறையிலே மக்களின் நலத்திலே அக்கரையுள்ள ஆட்சியா என்று தட்டிப் பார்க்கின்றனர். மக்களில் எவரும், தாழ்ந்தவனுயினும், உயர்ந்தவனுயினும், மனிதத் தேவை எதற்காகவும் ஏங்கி அதை அடைய முடியாமல் அல்லல் படுவதை அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது என்று எல்லோரும் இன்று நினைக்கிறார்கள்.

அதனுல்தான் இன்று வறுமையின் காரணத்தால் எத்தனே கோடி மக்கள் நாட்டில் வாழ்ந்தாலும், அவர்களில் எவரும் வாழ்க்கைக்குத் தேவையான எந்த ஒரு நலனையாவது பெறமுடியாமற் போனுலும், அந்த நலன்களே அமைத்துத் தராத அரசாங்கமே பொறுப்பாளியாக்கப்படுகிறது.

வெறும் போலீஸ் ஆட்சியிலிருந்து மக்கள் தேவைகளேப் பூர்த்தி செய்யும் பணியே அரசாங்கத்தின் அலுவல் என்று எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் நிலே உலகில் எற்படுவதற்கு பல நூற்றாண்டுகள் பிடித்தன.

ஆனுல் வள்ளுவரோ எனில் ஒரு நல்ல நாடு எப்படியிருக்கவேண்டுமென்று இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறார்.

உறுபசியும் ஓவாப்பிணியும் சேறுபகையும்
சேரா தியல்வது நாடு—என்று.

தன் நாட்டை நோக்கிப் பகைவன் படையெடுத்து வருவது தெரிந்தால் எப்படி மன்னன் பதைப்பானே, படையெடுப்பைத் தடுக்கவும் அந்தப் பகைவனே வெல்லவும் ஆயத்தம் செய்வானே, அது போன்றே, நாட்டில் பசி, பஞ்சம், பட்டினி, பிணி, நோய் இவைகளே அண்டவிடக் கூடாது. அவன் நாட்டை அழிக்கத் தேடும் பகைவனேப் போலவே இவைகளேக் கருதவேண்டும். அவ்வித மின்றி அவைகளே அரசன் அலட்சியமாகக் கருதினுல் நாட்டிலே பஞ்சைகள், பராரிகள், வேலேயற்றவர்கள், இவர்களின் தொகை பெருகும். இந்தத் தொகை பெருகினுல் ஆட்சி பீடத்துக்கே அசைவு ஏற்பட்டு விடும். அதனுல்தான் வெளியிலிருந்து படையெடுத்து வந்து தாக்கி அழிவு செய்யும் பகைக்கு சமமான பெருந்தீங்காக பசி, பிணி போன்ற கேடுகளே வைத்துக் கூறியிருக்கிறார். தன் மக்களேப் பகைவர்களின் படையெடுப்பிலிருந்து காப்பது மட்டுமே கடமை என்று மன்னன் மனதில் கொள்ளாது, தன் குடிகளே பஞ்சத்திலிருந்தும் பட்டினியிலிருந்தும் விடுவிக்க வேண்டும் என்கிறார்.

நல்லதொரு நாட்டுக்கு அழகைத் தருபவைகளாக நோயின்மை, செல்வம், விளேபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்லகாவல் என்ற இந்த இலட்சணங்களேக் கூறுகிறார் வள்ளுவர். மற்றெரு குறளில். உண்மையிலேயே இந்த இலட்சணங்கள் பொருந்தி இருந்தால், வள்ளுவர் கூறும் இந்த அணிகலன்களே அணிந்திருந்தால், அதுவே சிறந்த நாடாகும்.

பிணியின்மை செல்வம் விளேவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து

உறுபசியும் ஓவாப்பிணியும் ஒரு நல்ல நாட்டில் தலேகாட்டக் கூடாது என்று வள்ளுவர் சொல்லுவதற்கு காரணமென்ன? இக்கேடுகள் இரண்டும் வறுமையிலிருந்து பிறப்பவை. வறுமை என்பது மக்கள் வாழ்க்கையில் காணப்படும் ஒரு கோர நிலே. சமுதாயத்தையே செல்லரிக்கச் செய்து ஒரு நாட்டையே நிலேகுலேயச் செய்யும் பெருங்கேடு.

உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, தரித்திரக் கொட்டிலிலே மக்கள் தத்தளிக்கும் நிலே—தலே முறை தலே முறையாகச் சமுதாயத்திலே கடைசிப் படியிலே நின்று கொண்டு உழைத்தலுத்து உருக்குலேந்து உணவின்றி தவிக்கும் கூட்டமாகிக் கஷ்டமனுபவித்துத் தற்குறிகளாய், தாசர்களாய், தரித்திரர்களாய் திகைத்துக் கிடைக்கும் நிலே—பாடுபட்டுப் பசித்துப் பதைப்போரின் பரிதாபக்குரல் எழும்பும் நிலே—இதைத்தான் வறுமை என்று அழைக்கிறோம்.

வறுமையைப்போல் கொடியதொரு கேடு ஒரு நாட்டுக்கு வேருென்றுமில்லே. மற்ற துன்பங்கள் நேர்ந்தால் அவைகளுக்குப் பரிகாரம் உண்டு. ஆனுல் வறுமை வந்து விட்டாலோ எல்லா துன்பங்களும் ஒரு நாட்டை தேடி வந்து சேரும். வறுமை வளர்ந்தால் மனிதன் தன் பண்புகளேயே மறந்து விடுவான். தன் நிலே மறந்து செய்யத் தகாத காரியங்களேச் செய்வான். கொலே செய்யத் தெரியாதவன், கொலே செய்யவும் அஞ்சான். அதனுல் வறுமையை ஒருநாட்டில் வளரவிடுவது குமுறிக் கொண்டிருக்கும் எரிமலேயைக் கண்டும் கவலே கொள்ளாமலிருப்பது போன்றது. வறுமையைத் தீர்ப்பதற்கு வழி வகுக்காமலிருப்பது, வித்தியைக் காட்டி வாழமுடியாதவர்களிடம் வெறும் வேதாந்தம் பேசுவது, எரிமலேயை எண்ணெயை விட்டு அவிப்பதற்கு முயற்சிப்பது போலாகும். இதுதான் சரித்திரம் காட்டும் உண்மை. பராரிகள் ஒரு நாளேக்கு விழிப்படைந்து படை திரட்டினுல் அவர்களே வெல்லும் படை எதுவும் இல்லே; சரிந்துபோன சாம்ராஜ்யங்கள், மண் மேடான மாளிகைகள், மண்ணிலே உருண்ட மன்னர்களின் மணிமுடி தரித்த தலேகள்—எத்தனே எத்தனேயோ இருக்கின்றன, உலக சரித்திரம் காட்டும் சாட்சியங்கள்—வறுமையிலே வாடியவர்கள் வீறு கொண்டெழுந்து சாதித்த சாதனேகள் இவை. அதனுல்தான் வள்ளுவர் விரும்பிய நாட்டில் வறுமைக்கு இடமில்லே.

★

அனைத்தையும் ஒப்புகிறார்கள்; ஆனால்.....?

நாம்:

கொட்டிக் கிடக்கும் தாரகைகளினி டையே அந்த ஒற்றை நிலவு பவனி வருவது எத்துணை இன்பமளிக்கின் றது! காதலர்கள் கனிரச இதழ்களைப் பொறுத்திப் பார்க்கவும், காவிய கர்த் தாக்கள் கற்பனைக்கு மெருகு தரவும் ஏற்ற நேரம்! இயற்கையின் எழிலே எழில்!

★

அதோ, அந்தப் பூக்கடையில் பார், மல் லிகைப் பூக்களுக்கிடையே ஒரு ஒற்றை ரோஜா இருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது!

★

ஆண்களில் "கோவலன்" உள்ளம் கொண்டேன்; இல்லறத்தை அரித் துத் தின்னும் செல்லுப் பூச்சிகள்.

★

ஆகாயம் நீல நிறம்.

★

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையைத்தான் இன் றைய அறிவுலகம் ஏற்கும்.

தார்மீக இந்துக்கள்:

பூர்ணச் சந்திரன் ஆட்சி செலுத்துகிறான். இந்த நேரத்தில் நிலாச் சாப்பாடு தின் றால் திவ்யமாக இருக்கும். கஜேந்திர மோட்சம்கூட இந்த நேரத்தில் தானே!

★

சீரங்கநாதர் கையில் வைத்திருக்கும் பூச்செண்டு மிக நேர்த்தியாக இருக் கிறது. என்னதான் மல்லிகைப்பூ அதிகமாக இருந்தாலும், ஒற்றை ரோ ஜா, ஒற்றை ரோஜாதான்.

★

ஏக பத்தினி விரதம் சாலச் சிறந்தது.

★

நிறத்தில்—சமுத்திரத்திற்கு ஆகாயம் ஆதாரமா, ஆகாயத்திற்கு சமுத்திரம் ஆதாரமா? இரண்டும் நீல நிறம் தான்!

★

???

நாம்:

மக்கள் குரலே மகேஸ்வரன் குரல்!

★

சுதந்திரம் பிறப்புரிமை!

★

தென்னாடு வடநாட்டுக்கு அடிமைப் படக்கூடாது.

'தேசியத்தார்':

ஜனசக்தியே ஜனநாயகம்!

★

பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய் யோம்!

???

நாம்:

தொழில் நிலையங்கள் தேசிய மயமாக வேண்டும்.

★

தொழிலாளர் வாழ்வு உயரவேண்டும்.

★

தென்னாட்டு வரிப் பணம் டில்லிக்குப் போகக் கூடாது.

பொதுவுடமையாளர்:

தொழிலாளர் துயர் நீங்க தொழில் நிலை யங்கள் தொழிலாளர் கையில் இருக்க வேண்டும்.

பாட்டாளி வர்க்கம் கவனிப்பாரற்று இருக்கக் கூடாது.


???




சேரன் செங்குட்டுவன்
அணிதேர்ப்புரவி ஆட்
பெரும் படையுடன் ஆண்டு
கொண்டிருந்த நாள்...

—ராசன்—





கங்கைக்கரை-
வேங்கராம் கனகவும்
விசயவும், கவிதை-
நெய்யும் தமிழ்ப்புல
வனிடம் தமிழர் வீரக்
கைப் பழித்தனர்!



வெள்ளி மாடத்திலே
வேண்மாளுடன் வீற்
றிருந்த வேந்தன் -
புலவர் தந்த செய்தி
கேட்டு...


புலியெனச் சீறினன்.



கொலுமண்டபத்தில்
போர்க்குரல்
கொடுத்தான்...





குயிலாவுவக்கில் புல்லர்கள் பணிந்தனர்



தமிழர் வீரத்தின் மீது
வீசினர் ஒரு சொல்-
இப்போது தாக்குகிறர் கல்!



கங்கைகொண்ட சோழபுரத்திலே விளையாடினான்-
தமிழன் காவிரியின் ஓரத்திலே
புகழ் பாடினான்...

நேஷனல் புரடக்ஷன்ஸ் "ராஜா-ராணி"யில் சில காட்சிகள்!

நினைவு அலைகள்

என்.வி.நடராசன்

அருயிர்த் தோழர் கருணாநிதி அவர்களே ஆசிரியராகக் கொண்டு பணியாற்றி வரும் "முரசொலி" முதன் முதலாக திராவிடர் திருநாளன்று அளிக்க யிருக்கும் சிறந்த கருத்துப் படையலே, உருவாக்கும் பணியிலே எனது பங்கினையும் செய்தாக வேண்டுமென்று பணித்தார்.

நமது அண்ணா அவர்களும், மற்ற நண்பர்களும் பலவித தலைப்புகளிலே அளிக்கும் இவ்வரிய கருத்து விருந்தில் "நினைவு அலைகள்" என்னும் "சட்னியை" எளியேன் அளிக்க முன்வந்துள்ளேன். சுவைப்பீர்களாக.

* * *

பொது வாழ்வில் — அதிலும் அரசியல் துறையில் பெற வேண்டிய அனுபவமிருக்கிறதே, அதை நினைத்துக் கொண்டால், சிரிப்பும் வருகிறது; அச்சமும் ஏற்படுகிறது. அதிலும் மிகப் பெரிய தலைவர்களிடம் பழகும்போது ஏற்படும் சம்பவங்கள், அனுபவத்திலும் அனுபவமாகக் காட்சியளிக்கும்!

யான் முதன் முதலாகக் காங்கிரசில் பணியாற்றிய போது பழகிய அரசியல் தலைவர்களில் ஒருவரைப் பற்றிக் கூறினால், எப்போதும் அவரைக் குறை கூறுவதே வாடிக்கையாகிவிட்டது என்று நண்பர்கள் கருதக்கூடாது; அது போன்றே இறந்துவிட்ட பின் புகழுவது சகஜம் என்றும் எண்ணக்கூடாது. ஆச்சாரியார் — சத்தியமூர்த்தி! இருவருமே பார்ப்பனர்கள்தான்; என்றாலும் திராவிடர்களைத் தலை தூக்கா வண்ணம் இன்றளவும் கண்ணுங் கருத்துமாய் தந்திரங்களைக் கையாண்டு வருபவர் ஆச்சாரியார். காலஞ் சென்ற சத்தியமூர்த்தி அவர்களிடமும் வகுப்பு வெறி யிருக்கத்தான் செய்தது. என்றாலும் காங்கிரசில் பார்ப்பனரல்லாதாரும் ஓரளவு தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணமும் அவரிடமிருந்தது. சுருங்கக் கூறவேண்டுமானால், ஆச்சாரியாரால் முன்னுக்குக் கொண்டு வரப்பட்ட தென்னாட்டுக் காங்கிரஸில் திராவிடர் ஒருவரைக் கூட காணமுடியாது. ஆனால் சத்தியமூர்த்தி அவர்களின் சீடர் என்று அன்றைய நாளில் கூறப்பட்ட தோழர் காமராசர், இன்று முதலமைச்சராகவும், பனிரெண்டு ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராகவும் இருக்கும் வாய்ப்பினைப்பெற்றார். முன்னாள் மேயரும் எனது நண்பருமான தோழர் டி. செங்கல்வராயன் அவர்களே நாடறியச் செய்ததும் சத்தியமூர்த்தி அய்யரிடமிருந்த ஓரளவு நல்ல எண்ணமேயாகும்.

இதைக் கொண்டே ஆச்சாரியாரை அளந்துவிட்டதாகக் கருதக்கூடாது. திராவிடர் இயக்கத்தை (பார்ப்பனரல்லாதார் கட்சி) அழித்தொழிக்க ஆச்சாரியார் போன்றவர்கள் சத்தியமூர்த்தியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்ட சம்பவங்கள் ஏராளமுண்டு. சத்தியமூர்த்தி வெளிப்படையாகப் பேசுவார். அப்படிப் பேசுவது கோபத்தை உண்டாக்குவதாயினும், உள்ளத்தில் வஞ்சகமிருக்காது. ஆனால் ஆச்சாரியாரோ அதற்கு நேர்மாறான குணமும் செயலும் உடையவர்.

1936-ம் ஆண்டு இறுதியில் என்று கருதுகிறேன். டெல்லி சட்டசபையில் முதலாளிகளுக்குச் சாதகமாயும், தொழிலாளர்களுக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியதான 'மோடி மசோதா' என்ற பெயரால் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. சத்திய மூர்த்தி அன்றைய டெல்லி சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர். மசோதா விவாதத்திற்கு வந்தது. 2 நாட்களாக சத்திய மூர்த்தி அவர்கள் கடுமையாக எதிர்த்துப் பேசினார், தொழிலாளர்களுக்கு ஆதரவு தந்து.

மூன்றாவது நாள் அந்த மசோதாமீது ஓட்டு எடுக்கப் பட்டது. முதலாளிகளுக்குச் சாதகமாக மசோதா நிறைவேறி விட்டது. ஓட்டு எடுப்பின் போது காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டசபையில் இல்லை. உறுப்பினர்கள் மட்டுமென்ன; அவர்களின் தலைவர் சத்திய மூர்த்தி அய்யரே சபையிலே காணோம். இதனை நன்கு பயன் படுத்திக் கொள்ள எண்ணி, சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியினர்–குறிப்பாக அண்ணா அவர்கள் 'காங்கிரசார் தொழிலாளர்களுக்குச் செய்த துரோகம் பாரீர்' என்று ஒவ்வொரு வட்டம் வட்டமாகப் பிரச்சாரம் செய்தனர். சென்னை வந்து சேர்ந்த சத்தியமூர்த்தி அவர்கள், ஆச்சாரியார் தலைமையில், கடற்கரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசினார். காங்கிரஸ் தலைவராயிருந்தாலும், சத்தியமூர்த்தி அய்யர் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. அப்போதுயான் சென்னை பெத்து நாயக்கன்பேட்டை காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாகவும், சத்தியமூர்த்தியைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினனாகவும் இருந்தேன். எனினும் தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்த சத்தியமூர்த்தியைச் சும்மா விடுவதா என்று மனம் கொதித்து கூட்டத்தில் சென்று எழுத்து மூலமாகக் கேள்வி கேட்டேன். கூட்டத் தலைவர் ஆச்சாரியாரல்லவா? முறைப்படி அவரிடம் கொடுத்தேன். அவர் அதைப் படித்துவிட்டு, 'உனக்கு பதில் தனியாகச் சொல்லுகிறேன்' என்றார். 'என்னைப் பற்றி அக்கரையில்லை; பொது மக்களுக்கு விளக்கம் கூறச்சொல் எங்கள் சத்திய மூர்த்தி அவர்களை' என்றேன். 'ஆகட்டும்' என்று கூறிவிட்டு சிறிது நேரத்திற்கெல்லாம் அக் கேள்விக்கு பதில் கூறுவதாக எழுந்திருந்து என்னைப் பைத்தியக்காரனாக ஆக்கிவிட்டார். அதாவது என் கேள்வியை அந்த அளவுக்கு "கோட்லே" வேலை செய்து நையாண்டியும் செய்தார். பொது மக்களும் கைதட்டி ரசித்தனர். எனக்குக் கோபம் பிரமாதமாக வந்துவிட்டது. உடனே ஒலி பெருக்கி முன் நின்றுகொண்டு பேச ஆரம்பித்தேன். தோழர் டி. செங்கல்வராயன் வேண்டாமென்று தடுத்தார். எனினும் எனது கேள்வியைப் படித்துவிட்டுப் பேசினேன். எந்தப் பொது மக்கள் ஆச்சாரியாரின் நையாண்டிக்குக் கை தட்டி என்னைத் தவருகக் கருதினார்களோ, அதே பொது மக்கள் உண்மையை அறிந்து ஆச்சாரியாரை பரிகாசத்திற் குள்ளாக்கிவிட்டனர். அந்தக் கூட்டத்திலே, அன்றைய காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியைச் சார்ந்த சீனிவாச ராவ், சுயமரியாதைக் கட்சித் தோழர்களான என். தண்டபாணி, பண்டிதர் திருஞானசம்பந்தம், கே. சிவதானம், டாக்டர் கணேசன், புலவர் செல்வராஜ் போன்றவர்களும் வந்திருந்தனர். அவ்வளவுதான்; கூட்டம் எனது பேச்சோடு, அற்ப ஆயுளில் முடிந்துவிட்டது. இதற்கிடையில் சத்தியமூர்த்தி அய்யரும் சென்றுவிட்டார். உடனே மேடையை விட்டு இறங்கினேன். ஆச்சாரியார் என் கையைப் பிடித்து 'நில்' என்றார். உண்மையிலேயே எனக்கு சற்று அச்சம் ஏற்பட்டது. காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாக இருந்தும் இப்படிச் செய்துவிட்டோமே என்று எண்ணினேன்.

உடனே ஆச்சாரியார் கடற்கரை ஓரமாக என்னை அழைத்துச் சென்றார் தனியாக. அப்போது அவர் எனது விவரங்களைக் கேட்டுவிட்டு என்ன சொன்னார் தெரியுமா! "உனது தைரியத்தையும் உறுதியையும் கண்டு சந்தோஷப்படுகிறேன். பொது வாழ்வில் இந்த மாதிரி உறுதி வளரவேண்டும்." என்று சொல்லிக் கொண்டே தட்டிக் கொடுத்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. தோழர் சத்தியமூர்த்தி அவர்களின் எதிரிலே இப்படிப் பேசியவர்—பின்னல் இவ்வாறு கூறுகிறாரே—என்று திடுக்கிட்டேன். பிறகுதான் உண்மை தெரியவந்தது! சத்திய மூர்த்திக்கும், ஆச்சாரியாருக்கும் பிடிக்காதாம்! அதனாலேதான் கூட்டத்தில் குத்தலாகப் பதில் கூறி எனக்கும்கோபம் வரச் செய்து சத்தியமூர்த்தியை ஓட்ட மெடுக்கச் செய்தாராம்!

இப்படிப் பல சம்பவங்கள் உண்டு. பார்ப்பனரான சத்திய மூர்த்தி அய்யர் விஷயத்திலேயே இப்படியென்றால், பார்ப்பனரல்லாத தலைவர்களை மட்டம் தட்டுவதில் எவ்வளவு சூழ்ச்சி களைச் செய்திருப்பார்! மற்றவர்களை விட்டு ஆழம் பார்ப்பதில் கைதேர்ந்தவர் ஆச்சாரியார்! ஆனால் ஒரு பெரிய தலைவரிடம் இவ்விதகுணம்இருப்பது சரியாதவரு என்பதைத்தான் காலம் பதில் கூறியிருக்கிறது. உச்சநிலையில் இருக்கவேண்டிய ஆச்சாரியார், இன்றுபரமபதம்விளையாட்டைப்போலபாதாளத்தில் வீழ்ந்திருப்பதுஅவரிடம் குடிகொண்டிருக்கும் இந்த "மகாகேட்டிக் காரத்தனம்"தான்!தொழிலாளர் தலைவர் திரு.வி.க. அவர்களிடம் அரசியல் விஷயமாகப் பேசும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது கூறுவார். "நாயக்கருக்கும் எனக்கும் காங்கிரஸ் விஷயத்திலே வேற்றுமை யுண்டு. ஆனால் அவரை மனப்பூர்வமாக நம்புவேன். ஏன், டாக்டர் வரதராஜலு நாயுடுவைக் கூட ஓரளவு நம்பலாம். ஆனால் இந்த ஆச்

சாரியாரை மட்டும் நம்பவே கூடாது; புரிந்து கொள்ளவும் முடியாது. சொல்லமுடியாத விஷம்" என்று கூறுவார்.

தோழர் சத்தியமூர்த்தி அய்யரிடம் தென்னாட்டவர் என்ற உணர்ச்சி எப்போதும் இருந்து வந்தது. ஏன், ஆச்சாரியாரிடமும் தான் அந்த எண்ணம் இருக்கிறது; ஆனால் தன்னை வடநாட்டவர்கள் மட்டந்தட்டும் போது அதைச் சரிகட்ட அந்த உணர்ச்சியைப் பயன்படுத்துவார். மற்ற நேரங்களில் அக்கொள்கைகளுக்கு என்று நாகர்த்தனம் புரிவார்!

சத்தியமூர்த்தி அய்யர் வைதீகத்தில் கொண்டவர்தான். அதற்காக சட்ட சபையிலும் போராடியிருக்கிறார்! ஆச்சாரியாரோ பழமை வெறி கொண்டவரல்ல என்று எப்படியோ பெயரெடுத்து விட்டவர். ஆனால் நடைமுறையில் ஆச்சாரியார்தான் பழமை வெறியை வளர்க்கும் பட்டராக இயங்கிவருகிறார்! வைதீகப் பார்ப்பனர்களைவிட ஆச்சாரியார் போன்றவர்களாலேயே மனித குலத்துக்கு இழுக்கு நேரிடுகிறதென்பதையும் இப்போது அறியலாம்.

1938-ம் ஆண்டு இந்திஎதிர்ப்புப் போராட்டத்தின் போது நாடெங்கும் தமிழர் கழகம் துவக்கப்பட்டது. அது சமயம் கட்டாய இந்தியை எதிர்த்து நான் காங்கிரசிலிருந்து விலகி, சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பழகியவனாகிவிட்டேன். பெத்து நாயக்கன்பேட்டை திருப்பள்ளி வீதியில் தமிழர் கழகக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்துகொள்ள மாவீரர் சர். பன்னீர் செல்வம் வருகை தந்திருந்தார். முதலில் நான் பேசினேன். "நீதிக் கட்சித் தலைவர்கள் பொது மக்களிடம் பழகுவதையும் அவர்கள் முன் நின்று பேசுவதையும் கவுரவக் குறைவாகக் கருதியிருந்தனர். அதன் விளைவுதான் இன்று நீதிக் கட்சி சீர்குலைய நேரிட்டது. செய்த நன்மைகளை எடுத்துக் கூறவும் தயங்கினர். இன்று நமது பன்னீர் செல்வம் அவர்கள் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கிறார். இந்தப்பழக்கம் இதற்கு முன்பே யிருந்திருந்தால் ....." என்று பேசி முடித்தேன்.

உடனே சர். செல்வம் எழுந்திருந்து, "நண்பர் நடராசன் சொன்னது முற்றிலும் உண்மை. ஆனால் ஒரு திருத்தம் கூற விரும்புகிறேன். நாங்கள் முன்னமேயே இவ்வாறு பேச வந்திருப்போம். ஆனால் வராத தற்குக் காரணம் நடராசன் போன்ற உழைப்பாளர்கள் காங்கிரசிலேயிருந்த காரணத்தினால்தான். அன்று பேசியிருந்தால் எங்களைச் சும்மா விட்டிருக்க மாட்டார்களே காங்கிரசிலுள்ள தமிழர்கள். நாங்கள் பார்ப்பனர்களுக்குப் பயந்து கொண்டு பொது மேடைகளிலே பேசுவதற்கு அஞ்சியதாக எவரும் கருதி விடக்கூடாது. காங்கிரசிலுள்ள நமது தமிழர்கள் இப்போதுதான் ஓரளவாவது மேன்மையை உணர ஆரம்பித்துள்ளனர். இனி நாங்கள் தாராளமாகப் பேசுவோம். பேச வேண்டிய அவசியமும் இருக்கிறது என்றார். நான் அப்படியே ஸ்தம்பித்துவிட்டேன். அவர் கூறியதில் முழுக்க முழுக்க உண்மை யிருந்தது. ஏனெனில் (1937-ம் ஆண்டுக்கு முன்) ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டம் சென்னையிலே—குறிப்பாக பெத்துநாயக்கன் பேட்டையிலே நடக்கிறதென்றால் அங்கே கேள்வி கேட்கும் முதல் ஆள் நான்தான். குழப்பம் விளைவிப்பது என் வழக்கமில்லை. அந்த அளவுக்கு என் உடல் வலிவு பெற்றது மல்ல. கேள்வி கேட்பேன்—ஆனால் எப்படியோ கூட்டம் கலைந்து விடும். ஆகவே சர். செல்வம் அவர்கள் கூறிய அந்த வார்த்தைகள் எனக்கு தலையில் குட்டுவது போலிருந்தன.

சர். செல்வம், நிறைந்த குடமாக விளங்கினர். அவர் இயக்கத் தோழர்களிடம் காட்டும் பாசமும் பரிவும் அலாதியானது. அதைவிட இயக்க வளர்ச்சியிலே, கொள்கையிலே காட்டும் மதிப்பும் கண்ணியமும் அளவிட முடியாதது. 1938-ம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டின் போது (இந்தி எதிர்ப்பு இயக்கம் நடைபெற்ற சமயம்) பெரியார் அவர்களை சென்னைச் சிறையில் அடைத்து வைத்தனர் ஆச்சாரியார் ஆட்சியினர். பெரியார் தலைமைவகிக்க வேண்டிய அம்மாநாட்டில், அவருக்கு பதிலாக, அவரது தலைமை உரையை சர். செல்வம் ஆற்றினார். என்ன வீரம்! தன்னடக்கம்! அழுத்தந் திருத்தமான பேச்சு! அவர் கண்ணீர் வடித்துக்கொண்டே பேசினார்: "நமது தலைவரை சிறையிலடைத்துவைத்து நம்மையும் மிரட்டுகிறார் ஆச்சாரியார். நான் கேட்கிறேன், இதோ அருகிலிருக்கும் சிறைக் கதவுகளைத் தகர்த்தெறிந்து பெரியாரை மீட்க முடியாத நம்மால்?" என்று கனத்த குரலில் பேசினார். அப்பப்பா— எப்படி சொல்ல முடியும்! அந்த மாநில மாநாட்டிலே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கானவர்களும் "முடியும்-முடியும்! இதோ இப்போதே தலைவரே; உத்தாவு தாருங்கள்" என்று கொதித் தெழுந்தனர். அந்த எழுச்சியை அடக்க சர். செல்வம் அவர்கள் பட்டபாடு சாதாரணமானதல்ல. உடனே அவர் "எனது நண்பரும் முதலமைச்சருமான ஆச்சாரியார், இந்த எழுச்சியைக் கண்டாகிலும் திருந்தட்டும்" என்று மண்டையிலடித்ததுபோலக் கூறினார். தலைவருக்குப் பதிலாக கடமையுணர்ச்சியுடன் இவ்வளவு தொண்டாற்றியவரும் நமது தலைவர்தான் அன்று. அதே போல சர். செல்வம் எங்கே கட்சித் தலைவராக ஆகிவிடுகிறாரோ என்று வயிற்றிலடித்துக்கொண்ட சில வக்ரகபுத்தி கொண்டவர்களும் கட்சித்தலைவர்கள் என்ற பேரால் இருக்கத்தான் செய்தனர். தலைவர் பதவி வகிப்பது மட்டுமே தங்களது பாக்கியம் என்று கருதிய அவர்கள் இன்று மனித உருவத்திலே திரிகிறார்களே

தவிர — மக்களின் மனதிலே இடம் பெற்றவர்களில்லை. ஆனால் அம்மாநாட்டிலே சிந்தனையிலாழ்ந்து, இயக்கத் தொண்டிலேயே கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டிருந்த நமது அண்ணா அவர்களைச் செயலாளர் பதவி தேடி வந்தது. அப்போதும் அவர் தன்னடக்கத்திலிருந்து மாறினாரில்லை.

* * *

தலைவர் சவுந்திர பாண்டியனார்-கண்ணியமே உருவாய் அமைந்தவர். அபிப்ராய பேதங்களுக்காக முகம் கோணுது அனைவரையும் நேசிக்கும் பண்பாளர். இயக்கத்தில் சேர்ந்த பிறகு, சில சமயங்களில் சவுந்திர பாண்டியனாரின் கருத்துக்கு மாறுக—(அதுவும் அவர் எதிரிலேயே) நடக்க வேண்டிய சம்பவங்கள் ஏற்பட்டன. அச் சம்பவங்களுக்காகப் பிறகு வருந்தினேன் என்றால், அக் கருத்து வேற்றுமை எத்தகையதாய் இருக்கும் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள். பின்னர் அவரைப் பார்க்க நேரும் போதெல்லாம் ஒளிந்து கொள்வேன் என்றாலும் ஒரு முறை அவர் என்னைக் கண்டு பிடித்து விட்டார். ''நடராசன்! ஏன் என்னைக் கண்டதும் நழுவுகிறீர்?'' என்று கேட்டுக்கொண்டே தட்டிக் கொடுத்து-''உன் கருத்தை அல்லது பெரியார் அவர்களிடம் கொண்டுள்ள பாசத்தைக் காட்டினீரே தவிர என் மீது தனிப்பட்ட கோபமா உங்களுக்கு? அதேபோலநானும் அதை எப்படி தவருகக் கருத முடியும்? அபிப்ராயபேதத்தை மனதார வரவேற்கிறேன். எது சரி என்பதை காலம் உணர்த்தும்'' என்றார்.

சேலம் மாநாடு — நீதிக் கட்சி — திராவிடர் கழகமாக மாறிய மாநாடு. அது மட்டுமா? சர்க்கார் அளித்த பட்டத்தை ஏற்றுள்ளவர்கள், அதை துறக்க வேண்டும்-சர்க்காரால் நியமணம் பெற்ற எந்தப் பதவியானாலும் ராஜிநாமா செய்ய வேண்டும்—என்ற தீர்மானம் ஒன்று அண்ணா அவர்களால் கொண்டுவரப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இத்தீர்மானம் நீதிக் கட்சித் தலைவர்களில் சிலரை கலக்க வைத்தது. இந்தத் தீர்மானம் ஏன் கொண்டு வரப்பட்டது—எப்படி உருவாகியது என்பதை விளக்கின் விரியும். பெரியார் அவர்களைத் தலைமைப் பதவியிலிருந்து விரட்ட, சென்னை..... ஆற்றங்கரையோர மாளிகையிலிருந்து எண்ணங்கள் உருவாயின. எனவே சேலம் மாநாடு நடைபெறு முன்பே இயக்கத் தோழர்களிடம் பரபரப்பு ஏற்பட்டதில் ஆச்சரியமில்லையல்லவா?

மாநாட்டுக்கு முதல் நாளே சேலத்திற்கு சவுந்திரபாண்டியனாரும் தோழர்கள், வி. வி. ராமசாமி, கே. எ. பி. விசுவநாதம், பி. பாலசுப்ரமண்யம் போன்றவர்கள் வந்திறங்கினர். அதுபோலவே அண்ணா அவர்கள் என்னைப் போன்ற தோழர்களுடன் ஒரு நாள் முன்னதாகவே சேலம் சேர்ந்து, ரோசு அருணாசலம் அவர்கள் இல்லத்தில் தங்கினர். சவுந்திர பாண்டியனாரும் மற்றவர்களும் முனிசிபல் பங்களாவில் தங்கியிருந்தனர். மாநாட்டுக்கு முன் இரவு அண்ணாவைக் கூப்பிட்டனுப்பினார் பண்டியனார் அவர்கள்.

அண்ணா அவர்களுடன் நாங்கள் சென்றோம். பட்டம், ராஜிநாமா தீர்மானம் பற்றி விவாதம் நடந்தது. இத்தீர்மானங்களை நாளைய மாநாட்டில் கொண்டுவர வேண்டாமென்று பாண்டியனார் வற்புறுத்தினர். அண்ணா அவர்கள் இசைந்தாரில்லை. உடனே பாண்டியனாருக்கு கோபம் வந்துவிட்டது. ''என்ன அண்ணாதுரை; நீ கட்சியில் வந்து சேர்ந்தது எங்களை விரட்டவா?'' என்றார். அண்ணா புன்சிரிப்புடன் ''தாங்களே அவ்விதம் நினைத்தால் நான் என்ன சொல்லுவது? நீங்கள் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என்பதே எனதுஎண்ணம்'' என்றார். 'அப்படியானால் உங்கள் தீர்மானத்தை வாபஸ் பெறுங்கள்; அல்லது தள்ளிப்போடுங்கள்' என்றார். இறுதியாக அண்ணா 'முடியாது' என்று கூறிவிட்டார். அந்த நிமிஷம்வரை இத்தீர்மானம் உருவானது எப்படி என்பது பாண்டியனாருக்குத் தெரியாது. அடுத்தநாள் மாநாட்டிலே அத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது; ஆனால் அதைச் செயல் முறையில் கொண்டுவர ஆறுமாத தவணை கொடுப்பதென்றும் அதற்குள் ராஜினமா செய்துவிடவேண்டுமென்றும் (திருத்தத்துடன்) அண்ணா அவர்களாலேயே கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. பாண்டியனாருக்கு இது ஓரளவு திருப்தியையும் அளித்தது. பிறகு மாநாட்டிலே பெரியாரே தலைவராக இருக்க வேண்டுமென்று பாண்டியனார் பேசியபோது, எல்லோர் மனதையும் உருகச்செய்தது. ஏன், அனைவருமே கண்ணீர்விடித்தனர். பிறகு பட்டம் ஒழிப்புத் தீர்மானம் எவ்வாறு உருவாயிற்று என்பதைப் பாண்டியனாரும் அறிந்தார். அதன் காரணமாக அண்ணா அவர்களிடத்தில் மேலும் பாசமும் மதிப்பும் அவருக்கு வளரலாயிற்று.

* * *


பெரியார் அவர்களும், தொழிலாளர் தலைவர் திரு.வி. க. அவர்களும் தனியாகக் கூடிப் பேசும்போது பார்க்கவேண்டுமே! இருவரும் கொள்கையில் வேறுபட்டு மேடைகளிலே, எடுகளிலேகூட காரசாரமாகக் கண்டித்துப் பேசி, எழுதி வந்தபோது சமயத்தில் கூடி, தனிப்பட்டு கலந்து பேசும்போது காட்டும் பரிவு, பாசம் இருக்கிறதே; சொல்லி முடியாது. கொள்கை வேறுபாட்டிற்காக நட்புரிமைக்கு எவ்வகையிலும் இழுக்கு ஏற்படக் கூடாதென்ற பண்பு இருவரிடமும் நிறைந்திருந்தது. ஆனால் அவர்கள் இருவரும் ஒரு விஷயத்தில் மட்டும் இரட்டையர்களாவர். 'பெரிய மனிதர்கள்' என்றால் தாட்சண்யத்திற்காக விட்டுக்கொடுத்து விடுவார்கள். அதுமட்டுமல்ல; உடனிருப்பவர்களை மனசாட்சிக்கு விரோதமாகக் கண்டிக்கவும் செய்வர்.

பெரியார் அவர்களையும், அண்ணா அவர்களையும் கழகத்தையும் எப்போதுமே வசை

பாடிக்கொண்டே யிருப்பவர் ஒருவர். (அவர் பெயரைச் சொல்வதற்கில்லை) அதேபோல திரு. வி. க. அவர்களிடம் பேசும்போதும் மற்ற காங்கிரஸ் தலைவர்களை யெல்லாம் கண்டபடி பேசுவார் அந்த மனிதர்! திரு. வி, க. அவர்களுக்கு அவர் மீது மிகவும் கோபம்! ஆனால் என்ன செய்வார்? மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவஸ்தைப்படுவாராம்! ஒரு நாள் அந்த மனிதர் என் எதிரே கழகத்தையும், பெரியார், அண்ணு ஆகியோரையும் தடித்த வார்த்தைகளால் தாக்கிப் பேசினார். எவ்வளவு சொல்லியும் திருந்தவில்லை அவர். என்னையும் அறியாமல் எனக்குச் சக்தி ஏற்பட்டுவிட்டது. அந்தமனிதருக்கு தக்க பாடம் கற்பித்தேன். அடுத்த நாள் அவர் திரு வி. க. அவர்களிடம் சென்று அழுதாராம்! திரு. வி. க. அவர்கள் 'நடராசன் இவ்வளவு போக்கிரியா, இங்கே வரட்டும், புத்தி புகட்டுகிறேன்' என்று சொன்னாராம். இதை கேள்வியுற்று நானே சென்றேன். புன்முறுவலுடன் வரவேற்றார். 'நேற்றையசெய்தி அறிந்தேன். மிக்க மகிழ்ச்சியுற்றேன். என் மனது குளிர்ந்தது' என்றார். இந்த செய்தி எப்படியோ அந்த மனிதருக்குத் தெரிந்தது. நடராசன் எவ்வளவோ மேல்; இந்த திரு. வி. க. மகாமோசம்-என்று சபித்தாராம். அந்த சம்பவத்திலிருந்து அந்த மனிதர் யாரையுமே கேவலமாகப் பேசுவதில்லை-திருந்தினர், பிறகு ஏற்ற நண்பராகவும் ஆகிவிட்டார்.

அதுபோலத்தான் பெரியார் அவர்களும். இயக்கத்திற்கு மாறாக இயக்கத்திலிருக்கும் ஒரு சிலரால் மாநாடு அல்லது பொதுக் கூட்டம் என்று நடக்கும். பெரியாருக்கு இது பிடிக்காது, இயக்கம் சிதைந்துவிடும். என்ற எண்ணத்தால், உடனிருக்கும் தோழர்களிடம் கூறுவர். உணர்ச்சி வயப்பட்ட தோழர்கள் அம் மாநாட்டிற்கோ அல்லது கூட்டத்திற்கோ சென்று கேள்வி கேட்க ஆரம்பித்து மாநாட்டுக்கே முற்றுப் புள்ளி வைத்தாகிவிடும். இவ்வித நிகழ்ச்சிகளில் பெரியாருக்கு மிகவும் வேண்டிய 'பெரிய மனிதர்கள்' பங்கு கொண்டிருப்பர். அவர்கள் உடனே பெரியாரை அணுகி வருத்தப்படும்போது, பெரியார் தமது தோழர்களை மிகவும் கண்டிப்பார். ஏன், பத்திரிகையிலே கூட நான்கு வரி எழுதியும் விடுவார். எனினும் நாட்கள் சில சென்றதும், அந்த பெரிய மனிதர்கள் என்போர் உண்மை அறிந்து பெரியாரின் சீடர்களே ஓரளவுக்கு நல்லவர்கள்; இவரை நம்பினால் அதோகதிதான் என்று அங்கலாய்ப்பார். வேறு வழியின்றி அந்த பெரிய மனிதர்கள் மீதே நேரடியாக பாணம் தொடுக்க ஆரம்பித்து விடுவார் பெரியார். ஆனால் இவ்வளவும் இயக்க வளர்ச்சிக்காகவே இருக்குமேயல்லாது வேறில்லை. இப்படிப்பட்ட சம்பவங்களில் நானும் சிக்கித் தவித்திருக்கின்றேன்.

மற்றுக் கட்சியினரிடம் எவ்வளவுதான் குறைபாடுகளிருப்பினும் நட்புரிமையைப் பெறுவதில் அண்ணு அவர்களிடம் நிறைந்துள்ள பண்பு அலாதித் தன்மை வாய்ந்ததெனின் மிகையாகாது. நேரில் மட்டுமல்ல, சம்மந்தப்பட்ட மாற்றுக் கட்சிக்காரர் ஒருவர் இல்லாத சமயமும் அவரைப்பற்றிப் பேசும் போதுகூட வார்த்தைகளில் கண்ணியம் நிறைந்திருக்கும். அதை இன்று கூட மாற்றுக் கட்சியிலுள்ள தலைவர்கள் ஒப்புக் கொள்வர். அது போலவே தனக்கு ஒருவர் நண்பர் என்பதற்காகவே கொள்கையை விட்டுக் கொடுத்து தனக்கு ஆதரவாகயிருக்க வேண்டும் என்று கருதவே மாட்டார். அதைவிட அவர்களிடமுள்ள கொள்கையின் உறுதியைக் கண்டு பாராட்டத்தான் செய்வார்.



கடலே, வாழி!

அடிவான நெடுங்கடலின் கீழிருந்து
அரும்புகின்ற மலரைப் போல் எழும்புகின்ற
விடிவானப் பொன்விளக்கின் பரிதியெல்லாம்
விளையாடும் கடலின்மேல் அலைகளெல்லாம்
கடிவாளம் அறுபட்ட குதிரையைப் போல்
கரையோரம் ஓடிவரும் — அடடா இந்த
கடலோரக் காட்சியெலாம் — மகிழ்ச்சியூட்டி
கவியெழுதத் தூண்டுதுகாண்! கடலேவாழி!

—இராம. தண்டபாணி.


1936-ம் ஆண்டு சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் நடை பெற்றது. அண்ணா அவர்களும் நானும் பெத்து நாயக்கன் பேட்டை வாசிகளே. அப் போது நான் காங்கிரஸ் இயக்கத்தில் பணியாற்றுகிறேன் எனினும் அண்ணாவிடம் நட் புரிமையுண்டு. எனக்கு மட்டு மல்ல; அதே பெத்துநாயக்கன் பேட்டை வாசிகளாகிய தோழர்கள் டி. செங்கல்வரா யன் (முன்னாள் மேயர்) சி. கோபாலரத்தினம் (சென்னை ஜில்லா காங்கிரஸ் செயலாளர்) ஆகியோரிடமும் நெருங்கிய நேசமுண்டு. இன்னும் சொல் லப்போனால் தொழிலாளர் சங்க விஷயத்தில் அண்ணா அவர்களி டம்தான் எல்லா உதவிக்கும் செல்லுவேன். எனினும் அந்தத் தேர்தலில் அண்ணா ஜஸ்டிஸ் கட்சியின் சார்பிலே நின்றதால், நான் காங்கிரஸ்காரன் என்ற முறையில் அவரைக் கடுமை யாக எதிர்த்து வேலை செய் தேன். தேர்தல் நடைபெறும் வரை அடிக்கடி அண்ணாவை சந்திப்பேன். எனினும் அவர் எனது கொள்கையை மாற்றிக் கொள்ளுமாரோ,என் தேர்தலைப் பற்றியோ ஒரு வார்த்தையும் பேசமாட்டார். எப்போதும் போலவே நட்புரிமை காட்டித் தான் வருவார். அந்த பண்பு தான் அண்ணா அவர்களின் பொது வாழ்வுக்கே சிறந்த அஸ்திவாரமாய் அமைந்தது என்று கூறுவேன். அது போலவே சகிப்புத்தன்மையில் அவரிடம் போட்டியிட எந்தத் தலைவராலும் முடியாது. திரு. வி. க. அவர்கள் அடிக்கடி கூறுவார், பொது வாழ்வில் சகிப்புத்தன்மை வேண்டும் என்று. அப்பேர்ப்பட்டவர்கூட சில சமயங்களில் அமைதி யிழந்ததுண்டு, ஆனால் அண்ணா என்ற சொல்லுக்கு சகிப்புத் தன்மை யென்று கூறினாலும் பொருத்தமுடையது என்ற அளவிற்கு இன்றளவு பொதுப் பணியில் கடைப்பிடித்து வரு கிறார். இதற்கு ஏராளமான சம்பவங்களைக் கூறமுடியும். ஆனால் ஏடு இடந்தராதல்லவா! அதுமட்டுமல்லாமல் எனக்கும் இப்போது நேரமில்லையே!

அண்ணா அவர்கள் சகிப்புத் தன்மையே உருவாய் அமைந்த வர் என்பதற்காக அவரை யாரும் எளிதில் ஏமாற்றி விடவோ, கொள்கையிலிருந்து நழுவச் செய்யவோ இயலாது என்பதையும் குறிப்பிட விரும்பு கிறேன். இவ்வித சகிப்புத் தன்மைக்கான காரணங்களில் ஒன்று பெரியார் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றியதால் கிடைத்த பரிசு என்றும் கூற லாம்.

ஆகவே இவ்வாறு பலதிறப் பட்ட தலைவர்களின் குணமும், பொதுப் பணியில் உள்ளவர் களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்குமென்றே இக்கட்டு ரையை வரைந்துள்ளேன். நமது அண்ணா, முன்பிருந்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகியது மட்டுமல்ல; அவர் களின் நற்பண்பையும் அதே நேரத்தில் சில தொல்லைகளையும் உடனிருந்து அனுபவித்து வந்த தால்தான் 1929-ம் ஆண்டில் துவக்கிய நமது உரிமைப் போரைத் தொடர்ந்து நடத்தும் கோட்டையாக தி. மு. கழ கத்தை உருவாக்க முடிந்தது. எனவே மேலே எடுத்துக் காட்டப்பட்ட அன்றைய நிகழ்ச்சிகள் தி. மு. கழகத் தோர்கள் மேலும் குடும்பப் பாசத்துடன், மற்றவர்களின் ஏசுதலைப் பற்றி கவலைப்படாத சகிப்புத்தன்மையுடன் நமது லட்சியப் பாதையில் நடை போட துணையாய் இருக்கு மென்று நம்புகிறேன்.

வாழ்க திராவிடம்!

★★★





'நிராவிட இந்தியா'வில் வந்து புகுந்தோர்:

1.	ஆரியர் ...கி. மு. 2500	7.	பட்டாணியர் 11-வது நூற்றாண்டு
2.	பாரசீகர் ... ,, 500	8.	அஹோம்ஸ் 13 ,,
3.	கிரேக்கர் ... ,, 300	9.	டுர்ரானிஸ் 18 ,,
4.	பார்த்தியர் ,, 100	10.	மொகலாயர் 16 ,,
5.	ஹூனர் 6-வது நூற்றாண்டு	11.	போர்ச்சுகீசியர் 15 ,,
6.	அராபியர் 8 ,,	12.	ஆங்கிலேயர் 17 ,,

[பேராசிரியர் ஹுமாயுன் கபீரின் 'அவர் ஹெரிட்டேஜ்' புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.]



1. சோலையில் ஓர் நாள்

கூடுகட்டப் பாடுபடா குயிலின் கூட்டம்
கூவுகின்ற சோலைதனில் உலவிக் கொண்டே,
பாடுவதும், அங்குள்ள அழகு தன்னைப்
பார்ப்பதுவு மாயிருந்தான, பாண்டி வேந்தன்.
காடுபடு திரவியங்கள், ஐந்தில் ஒன்றைக்
கண்டெடுத்தேன் பாருங்கள் என்று கூறி,
ஆடுமயில் இறகுதனைக் காட்டிக் கொண்டே,
அவனருகில் பட்டத்து அரசி வந்தாள்.

செங்கரும்புத் தமிழ்ப் பேச்சுத் தந்து, கண்ணால்
சுடுகின்ற பெண்ணரசி, தன்னை நோக்கி,
கங்கை கொண்ட கோச்சோழன் மகளே! எந்தன்
கரத்திற்கு எட்டுகின்ற நிலவே! கேட்பாய்:
மங்கையர்கள் மாமரத்தைக் கண்ணால் பார்த்தால்,
மாமரமே பூத்திடுமாம்! பெண் உதட்டில்,
பொங்குகின்ற வெண்சிரிப்பைக் கண்டால்; கொம்பில்
படர்முல்லைக் கொடிகூட மலரும் என்பர்!

எங்கேனீ மரத்தைப் பார், உன்னைக் கொஞ்ச
எதிர்பார்க்கும் என்னைப்பார்'' என்று கூறித்
தங்கநிற அங்கத்தைத் தொட்டான். தொட்ட
தமிழரசன் உதடுதனை, உதட்டால் தொட்டாள்.
மங்கையவள் கருங்கூந்தல் மீதி ருந்த
மலர் ஒன்றை அவன்எடுத்து நுகர்ந்து, மீண்டும்
சிங்காரப் பின்னல்தனில் அதைப் புதைத்துச்
சிந்தனையில் ஆழ்ந்திட்டான்; மௌன மானான்.

'மென்காற்றுல், மேலாடை நழுவினாலும்,
மன்னன்கைப் பட்டு அது நழுவ வேண்டும்'
என்கின்ற நினைவோடு இருந்த; அந்த
இலவம்பூ வாயழகி, அவனை நோக்கி:
'மன்னவரே! ஒளிவீசும் மணியே! இந்த
மௌனமஏன் காட்டுகின்றீர்?' என்று கேட்க;
'ஒன்றுமிலை, கூந்தலுக்கு சுயமாய் வாசம்
உண்டாஎன் னுள்நினைவில் ஆழ்ந்து விட்டேன்.'

நக்கீரன் அறுபது



பெருவேந்தன் இவ்வாறு உரைக்க; அந்தப்
பொன்பதுமை, பூமலி வேந்தைப் பார்த்து,
கருமணிபோல் போலிருக்கும் கூந்தல் பற்றிக்
கண்மூடும் இரவினிலே, இரண்டு பேரும்
விரிவாக ஆராய்வோம். எனக்கு, இந்த
வேலைதனில், ஏதேனும் கதைசொல் லுங்கள்,
அரசேஎன் றுள்'' மனைவி. மன்னன் சொன்னான்.
அந்திவெயில் சாய்ந்தவுடன் திரும்ப லுற்றார்!

★

2. நக்கீரன்கவலை

அதி வேகமாய் ஓடும் குதிரை தன்னை;
அரபியர்கள் நம்நாட்டுக் கனுப்பு கின்றார்.
மதுவூறும் கனிவர்க்கம், வெண்கற் பூரம்,
மற்றவர்கள் அனுப்புகின்றார், பூணூல் மக்கள்;
பொதியமலைச் சந்தனத்தை அரைப்ப தற்குப்
பெருவட்டக் கல்அனுப்பி, புதிய முத்தம்
பதிவாக்கப் பெண்டிரையும் அனுப்பு கின்றார்.
பாண்டியனே, அவர்வலையில் வீழு கின்றார்.

★

பார்ப்பனர்கள், நம்நாட்டு அரசாங் கத்தில்,
பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டு, நம்மை
வேர் பறித்து வருகின்றார். இதனைப், பாண்டி
வேந்தனுக்கு எத்தனையோ முறை உரைத்தும்,
நீர்மீது கொள்ளிதனை வைத்தல் போன்ற,
நிலையேதான் ஆயிற்று! பயனே இல்லை,
ஊர் மக்களோ, ஆர்ய தாச ரானார்.
உரைத்தாலும், அதை உணர ஆட்கள் இல்லை,


··கிளிஞ்சுக்குள் முத்துக்கள் வைத்து மூடிக்
கிலுகிலுப்பை போல்ஆட்டும் மதுரை மூதூர்,
அளிக்கின்ற செல்வத்தைப் பிறர் பறித்து
அனுபவிக்க நம்மவர்கள் பசியால் வாடித்
தளர்வது ஏன்? தென்னாட்டில் மத உணர்ச்சித்
தலைதூக்கக் காரணம்யார்?'' என்று கேட்டுக்
கிளர்ச்சிசெய, செய்தாலும் ஆத ரித்துக்
குரல் கொடுக்க, தலைவர்களுக் கறிவே இல்லை.

★

இனையவரும், முதியவரும் தம் உடம்பின்
எடைபார்க்க முயல்கின்றார் அன்றி, நன்கு
வளர்ந்துளதா நம்மறிவு? நேற்றைக் கின்று
வாழ்வினிலே உயர்ந்தோமா? என்று, தங்கள்
வளர்ச்சிதனை ஒப்பிட்டுப் பார்ப்ப தில்லை.
மந்திரியோ அரசாங்க மண்டபத்தில்
குளம், தீர்த்தம் இவைபற்றிப் பேசு கின்றார்.
குடுமிகளோ, மன்னவனே மயக்கு கின்றார்.

★

மதம் வேண்டும் என்கின்றார்! மதமா வேண்டும்?
மதிவேண்டும். அதுபெருக்கும்கல்விவேண்டும்
சதமல்லவாம் வாழ்வு! சதமா இல்லை?
சமதர்மம் வரவில்லை. அதனால் தொல்லை,
பதர் உள்ள பக்கத்தில் தமிழன் — செந்நெல்
பட்டறையின் பக்கத்தில், பூணூல் பாப்பான்.
இதுசரியா? இதுமுறையா? இருக்க லாமா?
எனக்கேட்போர்எத்தனைபேர்; நமதுநாட்டில்?



இவ்வாறு, நக்ரகீன், தன்பக் கத்தில்
இருந்திட்ட மைத்துனனைப் பார்த்துச்
சொன்னன்.
அவ்வளவை யுங்கேட்டுக் கொண்டி ருந்த
அன்னவனே. நக்கீரன் தன்னை நோக்கி,
'இவ்வாரு நம்நாடு இருள வேண்டும் '!
எனஎண்ணி நாம்இங்கே ஏங்கு கின்றோம்.
அவ்வளவு எத்தர்களும் பூரிக் கின்றார்.
அறிஞர்களும் அறியாமல் சிரிக்கின் றாரே !

★

என்றிட்டான் வியப்போடு. கீரன் கேட்டு,
என்செய்வ தென்றிட்டான், வருத்தத் தோடு.
'சென்றுவர வேண்டும்நாம் வெளியே' என்று
சொல்லிக்கொண் டேகூடம் விட்டே
ழுந்தான்.
மன்றத்தார் தந்திட்ட ஓலை தன்னை,
மனையாட்டி அவனிடத்தில் வந்து தந்தாள்.
சென்றதிசை முழுவதிலும் கீர்த்தி ஓங்கச்
செய்துள்ள நக்கீரன், அதைவா சித்தான்.

★

எழுத்தின்மேல் இருந்திட்ட பார்வை தன்னை,
இளம்மனைவி தோள்மீது பதிய வைத்தான்.
பழக்காடு போன்றவளோ, கணவன் கண்கள்
பார்ப்பதனைத் தன்விழியால் பார்த்து நின்றாள்.
பிழையில்லா முழுநிலவே ! இன்றைக் கென்ன
பலகாரம் என்றுஅவன்; அவளைக் கேட்க;
இழையிடையாள், இனிமேல்தான் செய்ய
வேண்டும்
என்றுரைத்தாள், 'அப்படியா!' என்று, கீரன்;

★

உன்தம்பிக் கும்எனக்கும் மட்டும்; நீபோய்
உருசியுள பலகாரம் செய்க என்றான்.
'என்வயிறு பட்டினியா ? எனக்கு !' என்றாள்.
அதற்கந்த நக்கீரன் நகைத்துக் கொண்டே,
'தின்னுதற்கா உனக்கொன்றும் இல்லை, நீதான்,
தினந்தோறும் புளி—சாம்பல் தின்கின் றாயே !'
என்றிட்டான். மைத்துனனே, உடன் பிறந்தாள்,
இப்போது கர்ப்பமெனப் புரிந்து
கொண்டான்,

★

சித்திரத்திற் கொப்பான அவளும்; கீரன்
சொன்னஉண வின்பொருளைப் புரிந்து
கொண்டு,
முத்துப்பல் முகந்தெரியச் சிரித்துக்
கொண்டாள்,
முதுபுலவன், அவசரமாய் வெளியேசென்றான்.
"அத்தானே உன்கணவர். அவரோ; நாட்டின்
அறிஞர்க்கெல் லாம்அறிஞர் ! உன் வயிற்றில்
தொத்தியுள ரத்தினமோ, சக்ர வர்த்தி.
தாய்மாமன் நான்; பத்து மாதம் போனால்!"

ஆசையொடு இவ்வாறு தம்பி சொன்னன்,
அதைக்கேட்ட படிமங்கை அறைக்குள்
சென்றாள்.
வாசத்தை வெளியாக்கும் மலர்க ளோடு,
வாசலிலே வந்தொருத்தி, 'அம்மா' என்றாள்.
பூசைக்கோ, சாமிக்கோ, இது வரைக்கும்
பூவாங்கி அறியாத அந்த மங்கை;
ஆசைக்கும், மஞ்சத்தில் தெளிப்ப தற்கும்,
அவசரமாய் மலர் வாங்க, ஓடி வந்தாள் !

★

3. பாண்டியன் கேள்வி

அரசன்ஒரு பக்கத்தில். மற்றோர் பக்கம்,
அமைச்சர்களைத் தாங்குகின்ற ஆச னங்கள்.
ஒருபக்கம் யாழ்ப்பாணர். வேறோர் பக்கம்,
வேய்ங்குழலின், துவாரத்தின் வரிசை போல,
வரிசையொடு அமர்ந்துள்ள புலவர் கூட்டம்.
மன்றத்துச் சேவகர்கள், தூணுக்குத் தூண்.
ஒருகொம்பி. லேதொங்கும், கனியைப் போல,
உயரத்தில் தொங்குகின்ற பொன் முடிப்பு !

★

பேர்பாடி னன்ஒருவன். பாண்டி வேந்தன்
புகழ்பாடி னன்ஒருவன்; கலிவெண் பாவால்.
தேர்பாடி னன்ஒருவன். போரில் கண்ட
செயம்பாடி னன்ஒருவன். வைகை ஆற்று,
நீர்பாடி னன் பாணன். வேந்த னோடு
நின்றபடி, புலவரெலாம், கடவுள் மீது
ஓர்பாட்டுப் பாட, நக் கீரன் மட்டும்,
உயர்வான செந்தமிழைப் பாடி நின்றான்.

★

அரசன்முதல் அனைவருமே அமர்ந்தார்; பாட்டு
அடங்கியபின், அவரவரின் ஆச னத்தில்.
பெரும்புலவன்; தமிழ்ச்சங்கத் தலைவன்;
வெல்லும்
பேச்சறிந்த நக்கீரன்; எழுந்து நின்று,
அரசரையும், அமைச்சரையும், அதற்குப்
பின்னர்,
அங்கிருந்த புலவரையும் உற்று நோக்கித்
'தரைமெச்சும் புலவர்களே!' என்றான். சங்கத்
தமிழ்மெச்சும் புலவரெலாம், அவனைப்
பார்த்தார்.

★

கடவுளுக்கு நம்மைப்போல் உருவம் உண்டா ?
குளிர்ந்தமலர் அழகுதனைக் கண்டு, இன்பம்
அடைவதெது? மணிவிழியா? மனமா? யாவும்
அழிவதுஏன்? பறப்பதெது? இறகா? காலா?
இடிமின்னல், இரவுபகல், எதனால்?—என்னும்
இதுபோன்ற கேள்வியைப்போல்; இன்னோர்
கேள்வி.
முடிந்தழகு பார்க்கின்ற கூந்த லுக்கு,
மணமுண்டா? மன்னர் இதுபோல்கேட்
கின்றார்.

கனவுகள்ஏன்காண்கின்றேரும்?நம்மைப்பார்த்துக்
கேட்டார்கள் இவ்வாறு, விளக்கம் தந்தோம்,
மனிதன் ஏன் சாகின்றான் ?—இதுவும் நம்மை
மடக்குதற்குக் கேட்டதுதான், மலைக்க
வைத்தோம்.
சனகமுனி, நுரை என்றால் என்ன? என்றார்.
தண்ணீரின்நோய்என்றோம்,புகழப்பட்டோம்.
இனிமையிலே சிறந்ததெது ?தமிழா? பெண்ணின்
இருஉதடா? கேட்டார்கள், எண்ணம்
சொன்னோம்.

★

மகனுக்கு தந்தையைப்போல், கடவுளுக்கு
மாதா பிதாஎங்கே? பதிலே இல்லை.
'இகவாழ்வு பொய்என்றால், உனக்கு ஏனோ
எங்களது மண் உலகம்?கேட்டோம் ஓட்டம்!
நகைபோட்ட பத்தர்களே! கருங்கல் லுக்கு
நகைஎதற்கு? எனக்கேட்டோம். இதற்கும்
ஓட்டம்.
சுகம் யார்க்கு? இது பற்றி இந்த மாதம்
சபைஏறி வாதிட்டோம் – நாமாதோற்றோம்?

★

எதிர்த்தோரை நாம் வென்றோம், தோற்ற
மக்கள்
எடுத்தார்கள் பெரு ஓட்டம்! எதனால்? இந்த
விதம்நிகழக் காரணம்யார்? நாம்தான் இந்த
வெற்றிதனைத் தந்ததெது? கேள்வி அன்றோ?
இதன்பயனை நாம்நான்கு உணர வேண்டும்,
எனவேதான், இதுபற்றிச் சொல்லி வந்தேன்.
மதிபெருக வேண்டுமெனில், கேள்வி கேட்கும்
வழக்கத்தை ஒடிக்காமல் வளர்க்கவேண்டும்.

★

வேள்வியிலே வளர்ந்தோர்கள் பழமையான
வேதத்தைப் பெரிதாகப் புகல்வர். நாமோ
கேள்வியிலே வளர்ந்தவர்கள். அறிவு ஊட்டும்
கேள்விஎனில் அது நமது மூச்சு! வீணே
நாள்கிழமை திதிவாரம் பார்த்தி டாமல்,
நாளைக்கே, இதற்குவிடை அளித்தல் நன்று.
ஆள்கின்ற வாள்வேந்தர்,இதைச்சொல்வோர்க்கு
ஆயிரம்பொன் பரிசளிக்க, முன்வந் துள்ளார்.

★

''கைநீட்டி, எனக்குதவி செய்க'' என்றால்
கட்டாயம் மன்னன்கை கொடுக்கும். ஆனால்,
கைநீட்டி இரந்துண்டு வாழ்தல்; எந்தக்
காலத்தும், தமிழர்க்கு இருந்த தில்லை!
மெய் காட்டி, குடுமியிலே சுருக்கு காட்டி,
முப்பட்டை நாமங்கள் தீட்டிப், பிச்சைப்
பை நீட்டி, பரதேசிக் குரலைக் காட்டிப்
பிழைப்பதெலாம், நெற்றியிலே பிறந்தோர்
செய்கை!

அறிவுக்கு வேலைதரும் புதிய கேள்வி,
அளித்துள்ளார் நம்அரசர். இனிமேல், உங்கள்,
திறமைதனைக் காட்டுங்கள். விடை கிடைத்தால்
தமிழில்ஓர் புதுஎண்ணம் சேர்ந்த தாகும்.
இறவாத புகழ்வேண்டும். உலக வாழ்வில்
இனிப்பாக இருப்பதற்குச்செல்வம்வேண்டும்.
மறவாதீர், இப்போது சொன்ன பேச்சை,
மறுநாள்யாம் சந்திப்போம்'' என முடித்தான்.

★

4. பொன் ஆசை

பரிசுதரப் படும் என்ற அரசன் பேச்சைப்
பறைசாற்றி னான் ஒருவன், வீதி தோறும்.
அரசர்தரும் பொன்பரிசு பற்றி, மக்கள்
அங்கங்கே நின்றபடி பேச லுற்றார்.
'எருமை என நான்பருத்தேன், அன்றி, கல்வி
எனக்கேது? எழுத்தறிவு எனக் கிருந்தால்,
ஒருகை நான் பார்த்திடுவேன்,'' என்று ஊரில்
மூடர்களும் மூடர்களும் பேசிக்கொண்டார்.

★

''தின்பண்டச் சிறுவர்களைப் பார்த்துக் கேட்கும்
சிறுகேள்வி. இதில் வெற்றி பெற்றே தீர்வேன்.
என்று ஒரு வன்சொன்னான். கேட்டோன்
சொன்னான்;
''இது அற்பம் என்றெனக்குத் தோன்றவில்லை.
பொன்'முடிப்பு ஒன்றேதான்.அந்தப் பொன்னைப்
பெறுதற்குப் போட்டியிடப் பலபேர்; நீயும்
மன்றத்து மாணவன்தான், எனினும்; எல்லா
மழைத்துளியும் முத்தாகி விடுமா தம்பி?''

★

கண்ணுக்கு அழகுதரும் கூந்தல் பற்றிக்,
கல்யாணம் செய்தவனை, நண்பன் கேட்டான்.
''கண்ணப்பா இதுபற்றி எனக்கு, சின்ன
கடுகளவும் தெரியாது. காரணங் கேள்;
எண்ணெயிட்டுத் தலைவாரிப் பின்னிக் கொள்ள
இயற்கையிலே என் மனைவிக் கேது கூந்தல்!''
கண்ணையன் இவ்வாறு சொன்னான்—வந்த
கண்ணப்பன் பேசாது திரும்பி விட்டான்.

★

5. வஞ்சகன் குரல்

நாடுடைய மன்னவனைக் கெடுக்க எண்ணும்,
நயவஞ்சக் கூட்டத்தில், நரியாய் நின்றேன்.
தோடுடையோன் இல்லத்தில், இருட்டில்
சென்று,
திருடப்போய் உதைபட்டு வந்தோன். கல்வி
ஏடுடையோன் நிலையத்தில் சென்று, அந்த
ஏடுகளைத் தீயிட்டு எரித்து வந்தோன்.
கேடுடையோன், சிவன்கோவில் குருக்கள்;
பாம்புக்
குணமுடையோன், பரமசிவன் என்னும்
பார்ப்பான்.

ஊர்மக்கள் மதிப்பாக நினைக்க வேண்டின்
உணவைவிடப், பகட்டான உடைதான்
வேண்டும்.
பார்ப்பாரப் பரமசிவன், இதை உணர்ந்து,
புதியதொரு பட்டாடை உடுத்திக் கொண்டு
பார்வதியின் பக்கத்தில் வந்து நின்றான்.
பார்வதி—யார்? பரமசிவன் மனைவி. நல்ல
பேர்பெற்ற புதுமைப் பெண். எதனில்?போற்றும்
பண்பாட்டிலா? இல்லை, அழகில்! கூத்தில்!

★

பனிதின்னும் சூரியனைக் கிழக்கு வானம்
பிரசவித்த சமயம், கண் ணுடி பார்த்து,
வனப்புள்ள கூந்தலினை, இரு கூ ருக
வகிடெடுத்துக் கொண்டிருந்தாள் அந்த
மங்கை.
பனங்காயின் மேலேஓர் வெள்ளை நூலைப்
போட்டதுபோ லேதலையில், கோடு காட்டித்
தினந்தோறும் தலைவாரிப் பின்னிக் கொள்ளும்
சிவன் மனைவி, தன்கணவன் கோலம் பார்த்து;

★

முக்கியமாய் வேண்டியதே, உங்கட் கிந்த
மேனிஅலங் காரஉடை! இவள் ஒருத்தி,
எக்கேடு கெட்டால்தான் உங்கட் கென்ன?
என்கனவு உங்களுக்கா தெரியும்? நானே,
சுக்கைப்போல் தினம் காயப் பிறந்தேன். நீங்கள்
சுகங்காணப் பிறந்தீர்கள், உலக வாழ்வில்!
எக்களிப்பு உங்கட்கு; எனக்கு ஏக்கம்.
இருட்டருகில் நான்! நீங்கள், ஒளியின் பக்கம்!

★

அழகில்லாப் பெண்டிரெலாம்; கையில், காலில்,
ஆபரணம் அணிந்தபடி செல்வின் றார்கள்.
நிழல் வண்ணத் தோலுடையோர் உடலின் மீது,
நிறங்காட்டும் தங்கநகை, தினம்பார்க்
கின்றேன்.
கிழவயது வந்தோரின் காதில் கூட.
கல்வைத்த தோடென்னே! மாட்டல் என்ன!
பழம்போன்ற என்அங்கம் மட்டும், அந்தப்
பாக்கியத்தைப் பெறவில்லை; மற்றோர் போல.

★

கத்து கடல் முத்துதரும் மாலை கேட்டேன்,
கல்வைத்து இழைத்திட்டகம்மல்கேட்டேன்'
சித்திரமே, உனக்கில்லா நகையா? இன்னும்
சிலநாட்கள் நகரட்டும், என உரைத்தீர்.
முத்தமிடும் போதெல்லாம், ஆசை வார்த்தை
மொழிகின்றீர், ஏமாறு கின்றேன், வீணே,
சத்தமிட்டு என்னபயன்? எனது ஆசை,
சாகும்வரை நிறைவேறப் போவ தில்லை!

வருத்தத்தோ டிவ்வாறு உரைத்தாள் மங்கை,
வாலிபனே, அதுகேட்டு, அவளைப் பார்த்து.
பருவத்தால்; பழஉதட்டால்; பார்வை தன்னைப்
பசிஎடுக்க வைக்கின்ற அழகால்; ஒவ்வோர்
இரவினிலும் எனைஇனிக்க வைக்கும் மாதே!
உள்ளபடி உரைக்கின்றேன், உனக்கு;
வாழைக்
குருத்தைப்போல் ஆடைகளும்; நகையும்,
வாங்கிக்
கொடுக்கத்தான் எனக்காசை; முடிய
வில்லை!

★

கல்லாலே செய்ததொரு சிலையைக் காட்டிக்
கடவுளென நம்பவைத்துப் பிழைத்து
வந்தோம்,
சொல்லாலே இந்நாட்டை வசிக ரித்த,
சிறப்பான பேரறிஞர், பெரியார் போன்றோர்
நல்லறிவு புகட்ட,அதைக் கேட்டுக் கேட்டு,
நாட்டினிலே மாந்தரெலாம் விழித்துக்
கொண்டார்.
எல்லோரும் எதிர்க்கின்றார் நம்மை—நாட்டை
ஏய்ப்பதற்கு நமக்கினிமேல் வழியே இல்லை.

★

பரமசிவன் இவ்வாறு, பார்வ திக்குப்
பக்குவமாய் நிலைமைதனைக் கூறி வந்தான்.
தருமிஎனும் பரமசிவன் மைந்தன், அந்தத்
தருணத்தில் அங்குவந்து, 'அப்பா அப்பா'
சுருண்டகரும் குழலுக்குப் பூவைப் போல
சுயமாக மணம்உண்டா? இதுதான்
கேள்வி.
சரியான பதில் சொன்னால், பொன் முடிப்புத்
தருவாராம் நம்அரசர் என்று சொன்னான்.

★

சொன்னவுடன் மனையாட்டி, சிவனைப் பார்த்துத்
'தீட்டுங்கள் கவி'என்றாள். தீட்டித்
தந்தான்.
பொன்கிடைத்தால், அப்போது, என் கழுத்தில்,
புதியநகை மின்னும்'என எண்ணி மிட்டாள்
''பொன்கிடைத்தால் அப்போது என்கல்யாணம்,
பிரமாதந் தான்''என்று நினைத்தான் பிள்ளை,
மன்னனைப்போய் பார்என்றான் தந்தை; ஏட்டை
மைந்தன்'எடுத் தான், எழுந்தான்; மன்றம்
நோக்கி!

★

6. கவிஞன் தீர்ப்பு

மாதத்திற் கோர்தடவை மரண மாகும்
வட்டிநிலா, இருதடவை இருண்டுங் கூட,
மேதைஎனப் பேர்பெற்ற உங்க ளாலே,
விடைகூற முடியவிலை, என்கேள் விக்கு!
ஈதறிந்தால், பிறநாடும், அந்த நாட்டில்
இருந்துவரும் புலவர்களும், பரிக சிப்பர்.
மூதறிஞர்; மேதாவி: என்று உம்மை
மொழிந்தேனே; என்முட்டாள் தனமா''
என்றான்,

ஆர்ப்பரித்தான், ஆசனத்தில் அமர்ந்தான்;
வேந்தன்.
அப்போது குருக்கீள்மகன் அங்கு வந்து,
ஓர்ஓலையைத் தந்தான், அதனை வாங்கி,
வாசித்தான் வள்வேந்தன். வியந்தான்;
பின்னர்
சீர்தூக்கும் புலவரெலாம் அதனைப் பார்த்துச்
செம்பொன்னைத் தருவதற்குச் சம்ம
தித்தார்.
பேர்பெற்ற நக்கீரன் மட்டும், ''வேந்தே,
பிழையுள்ள பாடல்இது'' என்று
சொன்னான்.

* * *

''கொங்குதேர் வாழ்க்கைஅன ஆரம் பிக்கும்,
கவிதையிலே குற்றமென்ன கண்டீர்'',
என்று
அங்குள்ள நிதிஅமைச்சர் அவனைக் கேட்டார்.
அழகுதரும் வெண்ணிலவு, களங்கத் தாலே,
பங்கமடை வதுபோல; இந்தப் பாட்டும்,
பொருள்குற்றத் தால்பெருமை இழக்கு
தென்றான்.
தங்கமுடி மன்னவனும்; மன்றத் தாரும்;
தங்களது தீர்ப்புதனை மாற்றிக் கொண்டார்.

* * *

எண்ணமெலாம் சிதறுண்டு தருமி சென்றான்.
இவன்சென்ற பின்அங்கு, ஆடு மேய்க்கும்
பெண்ஒருத்தி வந்திட்டாள். கவிதை தந்தாள்.
பனைஓலைக் கவிதைதனைப் பலரும் பார்த்தார்.
எண்ணங்கள் வைத்தெழுதும் கீர னுரே!
இக்கவிதை சரிதானு? என்றான் வேந்தன்.
வண்ணமலர் மங்கைக்கே பரிசு தன்னை
வழங்கிடுவோம் — இவ்வாறு கீரன்
சொன்னான்.

* * *

பொன்முடிப்பைத் தன்கையால் வேந்தன்
தந்தான்.
பிறகுஅவன், நிதிஅமைச்சர் தன்னை
நோக்கித்—
தென்கடலின் முத்தெடுத்துத் தருக, இந்த
சிங்கார மங்கைக்கு; என்றான். வெள்ளை
அன்னநடை அழகிக்குப், புதிய பட்டம்
அறிஞர்சபை அளிக்கட்டும்'' என்றான்
மன்னன்.
பொன்பெற்றுப் புகழ்பெற்ற பூங்கோ தைக்குப்
'புலவர்மணி' எனப்பட்டம் தந்தான் கீரன்.

* * *

தமிழுக்கு இன்றுஒரு வளர்ச்சி என்று
தார்வேந்தன் பெருமையொடு சொன்னான்.
ஆம்ஆம்,
அமுதுக்கு நிகரான தமிழில் எண்ணம்,
அதிகரிக்க வைத்துள்ள இந்த மங்கை;
நமதுகடல் மெச்சுகின்ற முத்து!'' என்று
நெடுங்கையூர் அவிநயனர் எழுந்து சொன்னார்.
''சமைக்கத்தான் பெண்டிர்க்குத் தெரியும்என்று
சொன்னவர்கள் தோற்றினம்'' என்றான்
பாண்டி.

காவியத்தால் நாட்டுக்கு நன்மை செய்யக்
கருதிடுவோர்; மலரைப்போல் சீக்கி ரத்தில்,
ஆவியற்றுப் போகின்ற கவிதை நூற்கள்
அளிப்பதிலே பயனில்லை. வெற்றி இல்லை.
யாவருக்கும், எப்போதும், பயன் அளிக்கும்
எண்ணங்கள் மிகவைத்து; திறமை சேர்த்து;
சாவதற்குள் குறையில்லாப் பெருநூல் ஒன்று
தந்திட்டால், அதுபோதும் புகழ் நிலைக்க!

* * *

யாரும்இவ் வார்த்தைதனை மறுக்க வில்லை,
என்பதனால் மீண்டும்நான் கூறு கின்றேன்;
ஈரநிலா முகமுடைய இந்த மங்கை,
இயற்றியுள இக்கவிக்கும் சாவு இல்லை.
கூருடைய வேள்விழியாள், நம்ஆத் தானைக்
கவியாக இருக்கட்டும்'', என்றான் கீரன்.
ஊரதிரப் போர்வேந்தன், சம்ம தத்தை
உரைத்திட்டான். நக்கீரன் சபை
கலைத்தான்!

* * *

7 ஆரிய சபதம்

மதிப்பற்ற ஏடுதனை எடுத்துக் கொண்டு,
மனந்தளர; மதிஇருள; மௌனத் தோடு;
அதிவேக மாய் இல்லம் ஓடி வந்து,
அம்மை அப்பன் முன்நின்றான், பருவப்
பிள்ளை.
சதிராடும் பார்வதியும்; சிவனும்; நின்ற
தருமிதனைப் பார்த்தார்கள். அவனி டத்தில்,
புதுவாழ்வைத் தருகின்ற பொன்னும், இல்லை!
பார்வையிலும் உற்சாக உணர்ச்சி இல்லை!

* * *

மெதுவாகத் தன்மகனைப் பார்த்துப், புள்ளி
மான்விழியாள்; ''கவிஎன்ன ஆயிற்''
றென்றாள்,
''முதிராத ஓர்விதையை மண்ணில் நட்டால்,
முளைத்திடுமா?'' அந்நிலைதான் ஆயிற்
றென்றான்.
அதைக்கேட்டுப் பரமசிவன். ''விளக்க மாக
அறிவிப்பாய்'' என்றிட்டான், உடனே
மைந்தன்;
''புதிதாக நீர்எழுதித் தந்த செய்யுள்
பொருட்குற்றம் உள்ளதுவாம்'' என்று
சொன்னான்.

* * *

சுவையுள்ள தாய்ப்பாலில் நஞ்சா? நன்கு
சிந்திக்கத் தெரியாத பேச்சுக் கும்பல்!
எவன் சொன்னான், என்கவிதை தவறு என்று?
இந்நாட்டை ஆள்பவனா?-இல்லை-''பின்னர்க்
கவிவாணன் சொன்னானா?''—ஆம்—''அந்தக்
கருத்தற்ற மடையன்யார்?''—கீரன்—''என்ன!
புவிமெச்சும் வடமொழியைத் தமிழா வெல்லும்
பார்க்கின்றேன் நான்'' என்று எழுந்தான்
பார்ப்பான்.

8 வைகை வென்றது

காற்றுதனில், தென்றல்போல்; வீரர் ஏந்தும்
கருவிதனில், கூர்வாள்போல்; உறுப்பில்
கண்போல்;
ஆற்றலிலும், அறிவினிலும், சிறப்பு வாய்ந்த
அகத்தியனார்; தமிழுக்கும் நமக்கும்; மேகம்
ஊற்றுகிற மழைபோல, உதவி செய்து,
வந்ததனை நாமெல்லாம் அறிவோம். அன்னார்,
நேற்றுவரை நம்மோடு இருந்தார், இன்று
நமைவிட்டு, மண்ணுக மாறி விட்டார்.

★

எவரையுமே கேளாமல், ஆர்யக் கல்வி
ஏற்பாடு செய்தவரை எதிர்த்தார். வென்றார்.
அவர் எலும்பு, மண்ணுக்குள் மக்கி னாலும்,
அவர்கீர்த்தி, மண்ணின்மேல் உலவும்!''
என்று,
சவமான புலவர்க்கு அனுதா பத்தைத்
தெரிவித்துக் கொண்டிருந்தான், ஓர்
கூட்டத்தில்
புவிமெச்சும் நக்கீரன், அந்தப் போதில்
பார்ப்பாரப் பரமசிவன் அங்கு வந்தான்,

★

தெக்கணத்துப் பேரறிஞன் கீரன் தன்னைச்,
சிவன்கோவில் சிலைகழுவும் பார்ப்பான்
பார்த்து:
நக்கீரன் நீர்தானே? என்றான், அந்த
நற்புலவன், 'ஆம்' என்றான். உம்மி டத்தில்
முக்கியமாய் வாதிடவே வந்தோம்'' என்றான்.
'மிக மகிழ்ச்சி இப்போதே தொடங்கும்'
என்றான்.
மக்களெலாம் பேசாமல் பதுமை யானார்.
வந்தவனே வாய்திறந்துபேச லுற்றான்.

★

''பிழையற்ற 'கொங்குதேர்' என்னும்
பாட்டைப்
பார்டியவன் நான்தான்காண்'' என்றான்.
''ஓஹோ!
மழைத் தண்ணீர் சுடும்என்று, எம்மி டத்தில்
வாதமிட வந்தீரோ'' என்றான் கீரன்.
விழலுக்கு நீர்போலப் பயனில் லாது,
விண்பேச்சுப் பேசாதீர்; வேதந் தன்னைப்
பிழையின்றிக் கற்றவன் காண்! எம்மை, யாரோ.
பித்தன்என எண்ணுதீர்; வெற்றி காண்போம்,

★

குழலுக்கு வாசமிலை என்றீ ராமே?
குழலுக்காவாசமிலை ?''கேட்டான் பார்ப்பான்
குழலுக்கு ஒலியின்றி வாசம் ஏது?
குழல்என்ன சந்தனத்தின் கிளையா ?''என்றான்,
''பிழைபுரியா நக்கீரன். பெண்ணின் கூந்தல்
பற்றியன்றே கேட்கின்றேன்'' என்றான்
பார்ப்பான்.
''நிழல் வண்ணக் குழலுக்கு, சுயமாய் வாசம்
நிச்சயமாய்க் கிடையாது'' என்றான் கீரன்.

''விண்ணுலக மங்கையரின் கூந்த லுக்கு,
வாசமுண்டு என்கிறதே வேதம்'' என்றான்.
''வண்ணமலர் வைத்திருப்பர்; இல்லா
விட்டால்,
வாசனைக்கே வழியில்லை.'' என்றான் கீரன்.
''மண்ணகத்து மனிதன்நீர்; நீரா, எங்கள்
வேதத்தைப் பழிக்கின்றீர்! வேதம் கூறும்,
எண்ணத்திலா குற்றம்! இல்லை இல்லை,
எதிர்க்கின்ற உம் கருத்தே குற்றம்'' என்றான்.

★

குடுமிதனை உள்மறைத்து வேட மிட்டுக்
கொண்டிருந்த பூணூலன். ''மான்கூட்டத்தின்
இடையில்ஓர் செந்நாயை நிறுத்தல் போல,
எங்களது செந்தமிழில்; செத்துப் போன
வடமொழியின் வார்த்தைகளை, இழுத்து வந்து
வைக்கின்ற ஆரியனே! உன்வே தத்தின்,
மடமைதனை நீ உணரவில்லை! நாட்டில்,
மதியுடையோர் மறுக்கின்றோம்' என்றான் கீரன்

★

மீட்டிவரும் யாழ்தன்னில் இருக்கும் தந்தி,
முழுவதுமே அறுந்தாற்போல், வாயடங்கி,
ஒட்டமெடுத் தான்அங்கு நின்ற பார்ப்பான்.
ஒட்டி வந்த அவன்மீசை வீழ்ந்த தாங்கே!
கூட்டத்தில், அதைஒருவன் எடுத்துக் காட்ட
கைகொட்டிச் சிரித்தார்கள் இருந்த மக்கள்.
பாட்டெழுதும் தொழிலுடைய கவிஞன்,
பின்னர்ப்
பரிகாசக் குரலோடு பேச லுற்றான்:

★

தமிழரெலாம் வீரத்தை விளக்கிக் காட்டத்
தன்முகத்தில் 'சுயமீசை' வைத்துக் கொள்வர்.
இமயமலை வட்டாரம் விட்டு வந்தோர்,
ஏய்ப்பதற்கு, ''வேர்இல்லா மீசை'' வைப்பர்
அமுதாங்கச் சோழனுக்கு மீசை உண்டே,
அது போல ராமனுக்கு மீசை உண்டா ?
அமைதியொடு கேளுங்கள்'' என்று, மீண்டும்
அறிவித்தான்,பொதுமக்கள் கேட்டுச்சென்றார்.

★

''ஆண்வலிமை உள்ளோரைத் தேடிக் கொண்டு
அடிக்கடிஇப் பூவுலகம் வந்தி றங்கும்,
வான்உலக மங்கையரின் கூந்த லுக்கு,
வாசமுண்டாம்!அவர்தலையில் வேண்டுமானால்,
பேன் இருக்கும்! ஈறிருக்கும்! எண்ணெய்
இன்றிப்
புளிபிடித்த நாற்றந்தான் இருக்கும்!'' என்று,
மீன் கொடியின் கீழிருந்து, கீரன், இந்த
வார்த்தைகளைத் தனக்குத்தான் சொல்லிக்
கொண்டான்!

★

நிலவு தூயவிலே...

K.A. மதியழகன்

எத்தனையோ தூரம் நடந்து வந்துவிட்டான். ஊர்க் கோடியிலேயுள்ள ஆலமரத்தின் உச்சியும் அவன் கண்களில் தென்பட ஆரம்பித்தது. இரவெல்லாம் நடந்திருக்கிறான். இருள் அவனுக்குத் தெரியவில்லை. குளிரும் அவனைப் பாதித்ததாகக் காணேம். கிழக்கு வானில் உதய சூரியன் எழுந்து இரண்டு பனை உயரம் போய்விட்டான். வானத்திரையில் எத்தனையோ வர்ண ஜாலங்களைத் தீட்டிக் காட்டினான். அவற்றையெல்லாம் கவனிக்க அவனுக்கு நேரமேது! நினைப்பேது. அவனுக்கிருந்த ஒரே கவலையெல்லாம் ஊர் சேர வேண்டும். வேறு நாளாயிருந்தால் இயற்கையின் எழில் நடனத்தில் லயித்திருப்பான். இன்றைக்கு அவனது நிலை அதுவல்ல. காரணம் எவளை அவன் வாழ்வில் வசந்தத்தை வீசச் செய்ய கைப்பிடித்தானோ, அவளை மணமான அன்றே பிரிந்த துர்பாக்கியவான் அவன். நாட்டின் கட்டளை போருக்கழைத்தது. மணக்கோலத்தைக் களைந்து போர்க் கோலம் பூண்டான். போகக் களத்தில் புதுமணப் பெண்ணுடன் புரள வேண்டிய அவன் போர்க்களத்திலே போரிட்டான். ஆண்டுகள் மூன்று உருண்டோடிவிட்டன. அந்த அபாக்கியவதியின் நினைவுச் சித்திரம் அவன் நெஞ்சை விட்டு அகலவில்லை. போர்க் களத்திலே எதிரிகள் வீசிய அம்புகளை அவன் சமாளித்திருக்கிறான், பெருமிதத்துடன். ஆனால் அந்த புன்னகைக்காரி வேல்விழியால் அவனது விலாப் புறத்தைக் கொத்த வரும் போது, அதனைத் தடுக்க கவசமேது. ஆற்றலேது? போரிலே அவனுக்கு வெற்றிதான். முழு மகிழ்ச்சி அவனது உள்ளத்தில். ஆனாலும் அவனுக்கு ஏதோ குறை. அவளது மடியிலே அவனது தலையைப் புதைத்துக் கொண்டு நிசப்தமான இரவு முழுவதும் அவனது வீரதீர பராக்கிரமங்களை இனிக்க, இனிக்க அவளுடன் பேச வேண்டும் என்பது அவனது ஆசை, இன்னும் எத்தனை ஆசைகளோ!!

ஆலமரமும் வந்துவிட்டது. அதைத் தாண்டி ஊருக்குள்ளே இரண்டு தெரு நடந்தால் அவனது இல்லம். யார் கண்ணிலும் படாமல் திடீரென்று வீட்டிற்குள் நுழைந்து அவனது ஆசைக்கினியவளையும் அன்னையையும் ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கடிக்க வேண்டும் என்பது அவனது பேராசை. பத்தடி நகர்ந்திருப்பான். அவன் கண்ட காட்சி அவனாலேயே நம்பமுடியவில்லை. ஊர்ச்சாவடி. அங்கு பெரும் ஜனத்திரள். பஞ்சாயத்து கூடியிருக்கிறது. ஊர்ப் பெரியதனக் காரன் நீதிபதிகள் வரிசையிலே தலைமை வகிக்கிறான். இன்னும் கொஞ்சம் அருகே நெருங்கினான். எல்லாக் கண்களும் இவனை நோக்குகின்றன. அந்த கண்களிலே மகிழ்வு ஒளியையல்ல; பரிதாபத்தைக் காண்கிறான். நிலைமை மேலும் குழப்பமாகிறது. குற்றவாளிக் கூண்டு தெரிகிறது. அங்கே நிற்பது வேறு யாருமல்ல. அவனது இதயக் கூண்டிலே சிறை வைக்கப்பட்டிருக்கும் கோமளவல்லியேதான். அவள் முகத்திலே சோகம் கப்பியிருக்கிறது. கண்களில் ஒளி சுடர் விடவில்லை. தேங்கிய குளமாகக் காட்சியளிக்கிறது.

கணவனுடன் உடலுறவு கொள்ளாதவள்-அவள் ஐந்து மாத கர்ப்பிணி. விபசாரக் குற்றம் சாட்டப்பட்டு, வெட்ட வெளியில் நிறுத்தப்பட்டிருக்கிறாள். அவளோ, வேதனைப் படுவதாகவும் காணேம். வெட்கப்படுவதாகவும் காணேம். அச்சம் அவள் முகத்திலே இல்லை. அமைதி தாண்டவமாடுகிறது. அந்த மண்டலத்தில் விபசாரக் குற்றத்திற்கு தண்டனை மரணம். ''பலாத்காரமாக கற்பழிக்கப்பட்டேன்'' என்று கூறி எந்தக் கயவனையாவது காட்டினால் அவள் மன்னிப்புப் பெற மார்க்கமுண்டு. உயிர் தப்ப வழியுமுண்டு. அவளோ ஊமையாக நிற்கிறாள். ஏதாவது கேட்டால் சில சொற்கள்தான் உதிர்க்கிறாள், ''நான் கர்ப்பவதி. அதற்குமேல் ஒன்றும் சொல்லத் தயாராக இல்லை. எனது நிலைக்குக் காரணம்; எவராலும் அடக்க முடியாத உணர்ச்சிப் போராட்டத்தின் விளைவாய் ஒரே நாள் நான் நடந்துகொண்ட செயல். வைராக்கியத்தின் வேந்தனும் விசுவாமித்திரனையானாலும் அந்த நிலையில் தப்பியிருக்க மாட்டான். தவறியே இருப்பான்,'' இவை தவிர வேறேர்

வார்த்தை சொல்ல மறுக்கிறாள். நீதிபதிகளிலே ஓர் உத்தமர், அறிஞர், சமுதாயத்தின் கோளாறுகளைக்குணப்படுத்தும் மருந்து தேடிக் கிடந்த வித்தகர், அவர் சொல்லுகிறார் ''அந்தப் பெண்ணின் செயலுக்குக் காரணம் சந்தர்ப்பமும் சூழ் நிலையும் செய்த சதி, அவளை மன்னித்துவிடலாம்'' என்று. அவரின் வார்த்தைகள் பெரிய தனக்காரன் மூளையிலேயும் மற்றவர்கள் அறிவிலும் ஏறுவதாகக் காணேம். அவளுக்கு மரண தண்டனை விதிக்கப் படுகிறது. மறு நாள் அது நிறை வேற்றப்பட வேண்டும்.

மறுநாள் காலை. மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு மன்றம் கூடியிருக்கிறது. ஊர் மக்களுக்கு உத்தமரின் வார்த்தைகளிலே அனுதாபம் இருந்தது. அவர்களென்ன நீதிபதியா? பிரதம மந்திரியா? அந்த மண்டலத்து வழக்கம் மரணதண்டனையை மனுளனே நிறை வேற்ற வேண்டும். கூர்மையான வாளொன்று அவள் கொழுநனிடம் கொடுக்கப் படும். குற்றவாளியென நிரூபிக்கப்பட்டவளை பீடத்திலே நிறுத்தி, அவளது தலையையும் உடலையையும் இரண்டு துண்டாக அவன் வெட்ட வேண்டும். இந்த போர் வீரனே திகைப் படைந்தான். நீதிமன்றம் உத்தரவிடுகிறது அந்த உதவாக் கரையை இரண்டு துண்டாக்கு என்று. அவனது உள்ளம் கேட்கிறது; 'நீ எத்தனை எத்தனை துடியிடையாள், தோகை மயிலாள், தேன் மொழியாள், தேக காந்தியாளிடம் சொக்கிக் கிடந்தாய்; அரவணைப்பிலே மகிழ்ந்தாய்; அட்டகாசம் புரிந்தாய், நீ போர் வீரனைத் திரிந்தபோது'' என்று. ''இவளை ஏன் கொலல வேண்டும்? இவளுடன் வாழ வில்லை. விலக்கி விடுகிறேன்'' இப்படி சொல்கிறான். நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது இவன் கடமையே தவிர இவன் விருப்பத்தை நிறைவேற்றவா நீதிமன்றம் இருக்கிறது? பச்சாதாபம் மிக்க தாய் குலத்தினர் சிலர், 'அந்தத் தவறியவளை வேண்டுமானால் தண்டியுங்கள். அவன் வயிற்றிலே வளரும் வாயில்லாப் பூச்சியை, கர்ப்பத்திலே யிருக்கும்மதலையைக் கொல்ல உங்களுக்கேது உரிமை?'' என்று கேட்கின்றனர். யார் கேட்டாலென்ன, அந்த காரிகை பலி பீடத்தின் முன்னால் நிறுத்தப் பட்டாள். கணவன் என்ன காரியம் செய்ய போகிறோம். என மருண்டான். போதை மருந்து அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் கையிலே கொடுவாள் கொடுக்கப்பட்டது. இன்னும் ஓரிரு வினாடிகளில் அவள் தலையும் முண்டமும் இரத்தத் தடாகத்தில் மிதக்கும். அப்போதும் அவள் மன்னித்து இரக்கம் காட்டுங்கள் எனக் கெஞ்சவில்லை. எதற்கும் துணிந்தவளாய் காணப்படுகிறாள். அவள் தலையை சாய்த்து விட்டாள் கணவனும் கத்தியை ஓங்கி விட்டான். மயிர் கூச்செரியும் சந்தர்ப்பம்! ஒரே மௌனம். அந்த மௌனத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு பொக்கை வாய் கிழவி, வெறி பிடித்தவள் போல் பேச ஆரம்பித்தாள். கணவனின் கத்தி, கட்டிய மனைவியின் கழுத்தைப் பதம் பார்க்க வில்லை. அவனது கரத்திலே இருக்கிறது. கிழவி பேசுகிறாள்: 'எழுபது ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அப்போது எனக்கு வயது பதினேழு. ஒரு நாள் நல்ல பூர்ண வெண்ணிலவு. நானும் எனது தோழிமார்களும் நமது ஊர்க் கோவிலிலே நிலாச் சோறு ஒன்று நடத்தினோம். என்னை யொத்த குமரிகள் நெடு நேரம் கூடி விளையாடினோம். குறும்புகள் பேசினோம். கும்மியடித்தோம். பாட்டுக்கள் பாடி இன்ப நாதத்திலே மிதந்தோம். இனிய தென்றல் எங்களைத் தழுவியது. பேசிக் கொண்டே படிக்கட்டுகளிலே உறங்கி விட்டோம். எனது தோழிமார்கள் ஒவ்வொருவராக வீட்டுக்குச் சென்று விட்டனர், என்னை ஆழ்ந்த உறக்கத்தில் விட்டு விட்டு. திடிரென விழித்தேன். விழித்த நிலையில் இரண்டு காமுகர்களின் முரட்டுப் பிடியிலே சிக்கி கசக்கப்படுவதைக் கண்டேன். என்னை விடுவித்துக் கொள்வதற்கு முயலுவதற்கு முன்பு எனது கன்னி அழிந்து விட்டது'' என்றாள். உடனே நீதிபதிகள் அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்து வெறி பிடித்தவள் போல், ''உங்கள் நீதிமன்றத்திற்கு தலைமை வகிக்கிறானே பெரியதனக்காரன், இவன் தான் அந்த இரண்டு காமுகர்களில் ஒருவன்'' என்று மேலும் உரக்கக் கத்தினாள். கூட்டத்தில் ஒரே பரபரப்பு ஏற்பட்டது! ஊர்ப் பெரிய தனக்காரன் அப்போது அங்கு இல்லை. கிழவி கதையைத் தொடங்கியவுடனேயே மெள்ள நழுவி விட்டான். யாரும் அதை கவனிக்கவில்லை. கிழவி மேலும் தொடர்ந்தாள்;

''மற்றோர் காமுகன் யாரென்று தெரிய விரும்புகிறீர்களல்லவா? அவர் எனது கணவர். ஆச்சரியமாக இருக்கிறதா? எனது கன்னி அழிக்கப்பட்டதும் எனது அன்னையிடம் சென்று விம்மிவிம்மி அழுதேன்.

விபரத்தைச் சொன்னேன். அம்மா, அப்பாவிடம் அழுகுரலில் கூறினாள். அப்பா பெரிய போக்கிரி. ஊரிலே யாருக்கும் அவரைக் கண்டால் பயம். ஆனால் நியாயமானவர், இரண்டு துடுக்கு சிறுவர்களையும் பிடித்து மிரட்டினார். ஒருவனை என்னை மணக்கச் செய்தார். மற்றவனை ஊரை விட்டு விரட்டினார் இந்த ஊர் பெரியதனக்காரன் அவர் உயிரோடிருக்கும் வரை ஊருக்குள்ளே காலடி எடுத்து வைக்கவில்லை''

கிழவியின் கதை மக்கள் மன்றத்திலே பெரிய மன மாறுதலை ஏற்படுத்தியது. நீதிபதிகளே மன மாறுதல் அடைந்தனர், முதலிலே சொன்ன உத்தமர் கூறியநியாயத்தைத ஆதரித்தனர். உத்தமர் கூறியபடி ''சந்தர்ப்பமும் சூழ்நிலையும் செய்த சதி'' எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

போர் வீரனின் மனைவிக்கு விடுதலை மட்டுமல்ல. முன்னால் உரிமைகளுடன் போர் வீரனுடன் புது வாழ்வு வாழ அனுமதியும் கொடுக்கப்பட்டது.

''தைரியவல்லியம்மா நீ! உணர்ச்சிக்கு அடிமைப்பட்ட உனது நிலையை ஒளிவு மறைவில்லாமல் உரைத்தாயே! உண்மையை மரணத்தின் தலைவாயிலிலும் மறைக்காமல் உலகத்துக்கு உரைத்தாயே. உத்தமி! உனது உதாரகுணத்திற்கு எனது வாழ்த்துக்கள், நீ எனது மகளாகப் பிறந்திருந்தால் என் உள்ளம் கர்வத்தால் கள் வெறி கொண்டிருக்குமம்மா'' என்று உத்தமர் தீர்ப்பிலே குறிப்பிட்டார்.

போர்வீரன் பக்கம் திரும்பினார். ''வீரனே, தீர்ப்பு வழங்கியாகிவிட்டது. அதனை நிறை வேற்றுவது உனது கடமை. உனது உத்தேசம் என்ன?''

போர்வீரன்! ''உத்தமரே, நான் ஓர் போர்வீரன் கட்டளைக்குக் கீழ் படிந்து கடமையை நிறைவேற்றுவது போர் வீரன் இலக்கணம். தவிக்கவிட மாட்டேன் இந்த தளிர் மேனியாளை. அவளது பிள்ளைக் கனியமுதையும் எனது மதலையென பாவிப்பேன்'' என்று கூறி மரணத்திலிருந்து தப்பிய மங்கையை தழுவி நின்றான்.

எங்கே என்கிறீர்களா, இங்கே தான். எப்போது என்கிறீர்களா — வேதகாலத்தில்; வேதகாலத்தில் இவ்வளவு வேகத்துடன் தீர்ப்புக்கூற எந்த விவேகி இருந்தான். எப்படி முடிந்தது என்கிறீர்களா? பிறகேன் இன்றைய விபரீதம் என்கிறீர்களா? எல்லாம் உண்மைதான். விவேகி இருந்ததும் உண்மை; விபரீதம் இருப்பதும் உண்மை. எந்த ஊரில் என்கிறீர்களா? — சொல்ல முடியாது. தெரியாததால் அல்ல; உண்மை அழிக்கப்பட்டதால். காரணம் வெந்தணல்!

இந்திய உப கண்டத்தில் புரோகிதர்களின் கொட்டம் உச்ச நிலையிலே யிருந்த நேரம். நால் வருணம் சதிராடியது.

ஆலயங்களில் மணியோசை கேட்டது. யாக குண்டங்களிலே புகை எழுந்தது. பாவ புண்ணியம் பேசப்பட்டது. அந்த லோக வாழ்விற்கு அங்குள்ள புரோகிதற்கு தட்சணை தாம்பூலம், கட்டளை, காணிக்கை வழங்கப்பட்டது. நடனமாதுக்கள் கோவிலிலே நடனமாடினர். சோம்பேறிகள் கோவில் பெருச்சாளிகளாயினர்.



மக்களோ, தங்கள் ஆடுமாடுகளைத் தின்னவரும் வனவிலங்குகளிடம் ஆற்றலுடன் போரிடுவர். கள்ளர்கள், கொள்ளைக் கூட்டத்திடம் காப்பாற்றிக் கொள்வர். ஆனால் அவர்கள் ஆற்றல், அறிவு, தைரியம், மதத்தரகரின் முன்பு—இடிக்கும் மின்னலுக்கும், புயலுக்கும், பெரு வெள்ளத்திற்கும், பேய்க்கும் பிசாசுக்கும் மதத்தைக் காரணங்காட்டி மருட்டிய மதோன்மத்தரிடம்-மண்டியிட்டது. பெண் மாயப் பிசாசம், பெண் பிறப்பு பாவம், ஆணுக்கு அடிமை பெண்-என்ற கவைக்குதவாக் கருத்துக்கள் சமுதாயத்திலே செல்வாக்குப் பெற்றது. சிறிவரும் புலியதனை முறத்தினாலே, அடித்துத் துரத்தும் ஆற்றலிருக்கும் பெண்களுக்கு, தங்கள் கற்பைச் சூரையாட வரும் கபட வேஷதாரிகள், கடவுள் பெயரைச் சொல்லித் திரியும் கயவரிடம் தப்பும் வழியறியார், சினங்கொண்ட சிங்கத்திடம் சண்டையிடுவர். நரிக் குணங் கொண்ட புரோகிதரிடம் மண்டியிடுவர்.

மதத்தின் கொடுமையும் மகளிர் அடிமையும் கண்ட ஓர் புது மணத்தம்பதிகளுக்கு இந்த சமுதாயத்தின் மீது கோபக் கனல் மூண்டது. தாங்களே உண்மையை உணர வேண்டுமென்ற பெரும் யாத்திரை கிளம்பினர்.

வனமிருகங்கள் நிறைந்த ஆரணியத்தின் நடுவே சென்று கொண்டிருந்தனர். வேடுவர் சிலர் சிங்கங்கள் இரண்டை வேட்டையாடிக் கொண்டிருந்தனர். உயர்ந்த மரத்தில் இருவரும் ஏறினர்.

வில்லிலே நாணேற்றி அம்பைத் தொடுக்கக் காத்திருந்தனர். அநுபவம் நிறைந்த வேடுவர் சிலர் ''பெண்சிங்கத்தைமுதலிலேகொல்லுங்கள்; பெண்சிங்கத்தை முதலிலே கொல்லுங்கள்'' என்று கத்தினர். எல்லா அம்புகளும்பெண் சிங்கத்தின் மீது ஒரே நேரத்தில் பாய்ந்தன. அடுத்தசில விநாடிகளில் ஆண் சிங்கமும் வேட்டையாடப்பட்டது. கீழேயிறங்கிய தம்பதிகளுக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டது. வேடுவனுரே, முதலில் 'பெண்சிங்கத்தைக் கொல்வதற்குக் காரணமென்ன? என்று வினவினர். 'முதலில் ஆண்சிங்கத்தைக் கொன்றிருந்தால் பெண்சிங்கம் சும்மா இருக்காது. எங்களில் சிலர் உயிரையாவது மாய்திருக்கும்' என பதிலிறுத்தனர். வேடுவர் செயலுக்கும் வேதியக் கூட்டத்தின் செயலுக்கும் வித்யாசமில்லை எனஉணர்ந்தனர். வேடுவரைப்போலவே மதவாதிகளும் பெண்ணை, பைசாசமாக்கி, கோழையாக்கி, பாவமாக்கி அடிமைப்படுத்தியதால், ஆணையும் வெறும் சூதாட்டக்காயாக, பொம்மையாக பயன்படுத்த முடிந்தது என்ற முடிவுக்கு வந்தனர்.

அந்த முடிவுக்கு மற்றொரு சம்பவமும் ஆதாரமாய் அமைந்தது. தவம் செய்து கொண்டிருந்த முனிபுங்கவர் ஒருவனின் பர்ணசாலைக்குச் சென்றனர். தங்களுக்குள்ள அறிவு தாகத்தையும் தங்கள் யாத்திரையின் நோக்கத்தையும் விளக்கினர். முனிபுங்கவர் மோன நிலையிலிருந்து கண் திறந்து ஆண் மகனைப் பார்த்து 'உனக்கு ஞானோபதேசம் செய்கிறேன். ஆண்டவன் சந்நிதானத்தில் பெண் இருக்கக்கூடாது. பெண் பைசாசம்; அவளைப் போகச்சொல்' என்றார். ஆண் மகன் ''ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானந்தானே; பெண்ணை இழிவு படுத்துவது சரியல்ல'' என்றான். முனிபுங்கவருக்கு கோபம் பீறிட்டது. ''சாணிக்



காலையிலே எழுந்திருச்சி
கஞ்சித் தண்ணி குடிச்சவுடன்.....

குழியை தோண்டுவதால் மாணிக்கமா கிடைக்கும்?'' என்றார்.

அவனுக்கும் ஆத்திரம் பீறிட்டது. ''பெரியவரே, உளறுதீர்'' என்றான். முனிவர் தமது தபோ வலிமையினால் அவன் மனைவியை பஸ்பம் செய்வதாக பயமுறுத்தினார். மனைவியோ, மருளவில்லை. 'நடக்கட்டும், முனிவரே' என்று எதிரே நின்றாள். முனிபுங்கவரின் கண்கள் கொவ்வைப் பழமாயின. தீப் பொறி பறக்க கண்களை உருட்டினார். தமது தோல்வியை நினைத்து வெட்கித் தலைகுனிந்தார். அவரது சீடர்களோ விதண்டாவாத தம்பதிகளை நையப் புடைக்க ஆரம்பித்தனர். வேடிக்கை பார்த்த வழிப் போக்கர்கள் அவர்களைக் காப்பாற்றினர்.

அந்தத் தம்பதிகளின் பெயர் சாருவாகன் — சாரிணியாகும். நாலாயிரம் வருடங்களுக்கு முன்பு சண்டமாருதமென வளர்ந்த சனாதனத்திற்கு எதிராக ''நாலு வேதமேது? நாலு ஜாதி எப்படி நாதன் கட்டளையாகும்? எங்கே சொர்க்கம்? எங்கே நரகம்?'' என்று சமர் புரிந்தவர் சாருவாகர். இவர் தான் ஆரம்பத்திலே நீட்டியுள்ள சம்பவத்தில் நிர்ப்பு வழங்கிய உத்தமர்.


இந்த உத்தமரின் பார்ப்பனிய எதிர்ப்புக் கருத்துக்கள் மக்கள் மன்றத்திலே குடியேற ஆரம்பித்தன. பார்ப்பனியம் செத்து



ஆடுவோமே பள்ளு பாடுவோமே,
சுதந்திர திராவிடம் அடைந்துவிட்டோம் என்று!

விடுமோ என்ற பயங்கர நிலை ஏற்பட்டது. இவரது எழுத்துக்கள், கருத்துரைகள், தீக்கிரையாக்கப்பட்டன. எனினும் அவர்கள் வெற்றிபெற வில்லை. அவரது கருத்துக்கள் பவனிவர ஆரம்பித்தது.

ஒருநாள் இரவு. சாருவாகர் குடியிருந்த வீட்டிலே பெருந் தீ! வீட்டிற்குள் சாருவாகர்! வெந்தணலில் அவரது உடல் சாம்பலாகியது. வைதீகம் அவரைப் பற்றிய எல்லா ஆதாரங்களையும் அக்கினிக்கு இரையாக்கியது. எல்லா ஆதாரங்களையும் அழித்தது. பார்ப்பனியம் சிங்காதனம் ஏறியது—இன்னும் சிரஞ்சீவியாக இருக்கிறது. சாருவாகரைப் பற்றிய ஆதாரங்களெல்லாம் தத்துவ விளக்கங்களில் அவருக்கு விரோதமாய் எழுதியிருப்பவைதான். வைதீகம் அன்றைய தினம் சாருவாகரை ஒழித்ததானால் அந்த கருத்துக்கள் ஒழிந்து விட்டன என்று கருதியது. சாருவாகரின் கருத்துக்கள் சாகாது; வெற்றி பெருமல் போகாது என்பதை அவரது சாம்பல் புழுதி நினைவுப்படுத்தியதை வெற்றிக் களிப்பிலே மறந்து விட்டனர். ஒன்று சொல்வோம், வைதீகத்திற்கும் அதன் காவலர்களுக்கும்: ''எதை அவர்கள் அழிக்க முயன்றனரோ அது வெந்தணலில் வேகாதது, வெள்ளத்தாலே போகாதது, வெற்றி பெறப்போவது.'' ∴



இந்திய உப கண்ட வரலாற்றைப் படிக்கும்போது மஹெஞ்சாதாரோ ஹாரப்பா முதலிய நகர்ப் புறங்களில் வாழ்ந்த நம் மூதாதையரின் நாகரீகம் மிகவுச்சி குளிர வைக்கிறது. அதற்குப் பின் மூன்று சங்கங்களுக்கிடையில் திராவிடத்தில் வாழ்ந்த தமிழர்களின் உயர்ந்த வாழ்க்கைநிலை நமக்கு பெருமை தருகிறது. சாவகத்தை கட்டியாண்ட தமிழன் கிரேக்க நாட்டிலேகூட வாணிபம் செய்து செல்வம் சேர்த்து, அறுபத்தி நான்கு கலைகளையும் பயின்று, வசந்த விழாவும், வாணிபக் கூத்தும் நடத்தி, திராவிடம் பூராவும் இன்பமயமான வாழ்க்கை நடத்தினான் என்று அறியும்போது உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் கி. மு. மூன்றாவது நூற்றாண்டோடு இந்த இன்ப வாழ்க்கை மறைகிறது. அதன் பிறகு ஆரியர் நாகரிகமும், அவர்கள் ஆதிக்கமும் வட இந்தியாவிலிருந்து திராவிடத்தின் தென் கோடி வரை ஆட்கொள்வதையும் காண்கிறோம்.

கி. பி. ஒன்றாம் நூற்றாண்டிலிருந்து திராவிடத்தின் வரலாறு, இந்திய உப கண்டத்தோடு ஒன்றாக்கப்பட்டு, அதன் பிறகு ஒரே இருள் படர்ந்த நூற்றாண்டுகள் தொடர்கின்றன.

மக்கள், அவர்கள் வாழ்க்கை இன்பம், அவர்கள் நாட்டுப்பற்று, மனிதாபிமானம் எல்லாம் வரலாற்றிலே காணப்படுவதில்லை. எல்லா விதமான மனித உணர்ச்சிகளும் மறைக்கப்பட்டு, சாம்ராஜ்யங்கள் ஏற்பட்டாலும், அழிந்தாலும், அதைப் பற்றிய கவலையின்றி, ஏர் பிடித்தகையோடு எடுப்பார் கைப்பாவையாகிறான் இந்திய உப கண்டத்து மனிதன். சென்ற மூவாயிரம் ஆண்டுகளாக அவன் வரலாற்றில் தென்படுவதேயில்லை. அதற்கு பதில் அவனை ஆட்டக்காயாக்கிய கொள்ளைக் கூட்டத்தினரும், அரசியல் ஆதிக்கக்காரர்களும், அவனுக்கு பர உலகம் தேடித்தர புறப்பட்ட கடவுட் பிரதிநிதிகளும்தான் சரித்திரத்தின் பக்கங்களை நிரப்புகின்றனர்.

இந்த நாட்டிலே நடந்த உள்நாட்டு யுத்தங்கள் ஏராளம். அப்பொழுதும் நாட்டுப் பற்று கொண்ட மக்கள் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. காரணம், வலுத்தவன் சுலபமாக பல நூற்றாண்டுகள் நாடு பூராவும் ஆண்டுவிட்டு இறந்திருக்கிறான். அதேமாதிரி வெளி நாட்டிலிருந்து படையெடுத்தவர்கள் ஏராளம். அப்படி வந்தவர்களும் ஒருவித சிரமமின்றி பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்திருக்கின்றனர்.

சமீப காலத்திலே சென்ற ஐந்து நூற்றாண்டுகளில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளையே எடுத்துக் கொள்ளுங்கள்.

முதல் முகலாயன் இபின் காசிம் எழு

நூறு சூதிரை வீரர்களோடு இந்தியாவில் நுழைந்தான். எந்தவித எதிர்ப்புமின்றி, இவ் வளவு பெரிய உப கண்டம், அந்த எழுநூறு போர் வீரர்களிடம் சரண் புகுந்தது. முக்லாய சாம்ராஜ்யம் முன்னூற்றைமபது ஆண்டுகள் ஒருவித சிரமமின்றி ஆட்சி செய்து விட்டுப் போனது. அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் அரசியல் அதிகாரம் செலுத்தும் முறையில்தான் ஏற்பட்டதே சவிர நாட்டுப் பற்றுக் கொண்ட மக்களின் எதிர்ப்பு இருந்ததாக சரித்திரம் கிடையாது. அதுமாத்திரமில்லை. சுமார் பத்து கோடி, அதாவது அப்போதைய இந்தியாவில் மூன்றிலொரு பங்கு மக்கள் முஸ்லீம்களுமாயிருக்கின்றனர். டார்ஜிலிங்கிலிருந்து காயல்பட்டிணம் வரை மத மாற்றம் நடந்திருக்கிறது. வாள்முனையிலோ, சவுக்கடி கொடுத்தோ ஏற்பட்ட மத மாற்றமாக இருக்க முடியாது இது. இவ்வளவு கோடிகணக்கான மக்கள் மதம் மாறியிருக்கின்றனர் என்பது ஒன்றே அந்த மாதிரியான முறையில் இஸ்லாம் பெருகவில்லை என்பதை குறிக்கும்.

அடுத்தாற்போல் வந்த வெள்ளையன் வரலாறு எல்லோருக்கும் நன்கு தெரியும். வியாபாரம் செய்து பிழைக்க வந்த ஒரு கம்பெனி; ஒன்றுக்கும் உதவாதவன் என்று அதனால் அனுப்பப்பட்ட கிளைவ் இந்திய உப கண்டத்தையே காலனி நாடாக்கிவிட்டான். கிளைவ் பொய்க் கையெழுத்திட்டு, மீர்ஜாபருக்கு லஞ்சம் கொடுத்தே இந்தியாவைக் கைப்பற்றி விட்டான் என்பர். அது உண்மையோ, இல்லையோ கிழக்கிந்திய கம்பெனியின் பட்டாளம் பூராவும் இந்தியரைக் கொண்டதுதான். இதை யாரும் மறுக்கமுடியாது. இப்படி எங்கிருந்தோ வந்த ஒரு சில வெள்ளைக்காரர்களோடு சேர்ந்து கொண்டு இந்தியர்களில் சிலர் நாட்டையே காட்டிக் கொடுக்க காரணமென்ன? சென்ற நூற்றாண்டிலிருந்த பொருளாதார நிலைமை என்பார் சிலர். எந்தக் காரணமாக இருந்தாலும் 'நாட்டுப் பற்று' 'இனப் பற்று' ஏதாகிலும் தளியாவது இந்த சம்பவங்களிலே காணப்படுகிறதா?

இப்படி வரலாற்றை ஆராய்ந்து கொண்டே போனால் சென்ற இருபது, இருபத்தைந்து நூற்றாண்டுகளில் நமது மூதாதையர்கள் கொஞ்சம் கூட நாட்டுப் பற்று இனப் பற்று, மொழிப் பற்று, பொதுவாக மனிதனுக்கு இருக்க வேண்டிய நல்ல உணர்ச்சிகள் எதுவுமே இல்லாமல் வெறும் பரக் கட்டைகளாக வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பது நன்கு புலப்படும்.

கி. மு. ஐந்தாவது நூற்றாண்டிலே யவனத்திலே முத்தும், பவழமும் விற்றுக் கொண்டிருந்த திராவிடன், நாவாய் ஓட்டி தூரக்கிழக்கில் ஆதிக்கம் செலுத்திய தமிழன், நால்வகை நிலங்களிலே பலவகை விளையாட்டுகள் விளையாடி இன்பத்தையே வாழ்க்கையின் எல்லைக் கோடாக வைத்திருந்த தமிழன், ஏன் கி. மு. மூன்றும் நூற்றாண்டிற்குப் பின் தேய்ந்து போனான்? அதுவும் கி. பி. ஒன்றும் நூற்றாண்டிற்குப் பின் அவன் வரலாறே தலை கீழாக மாறி "யார் வந்தாலென்ன, யார் போனாலென்ன?" என்று உலகத்தைப் பற்றியே கவலைப்படாமல் சிறுகச் சிறுக உணர்ச்சியிழந்து, கலாச்சாரமிழந்து, பண்பிழந்து வெறும் சோம்பேறியான காரணம் என்ன? நாட்டு முன்னேற்றமும், மக்கள் நலனில் அக்கறையும் கொண்ட எவரும் இந்த கேள்விக்கு பதில் தேடாமல் இருக்க முடியாது. இந் நாட்டு மக்கள் நல்வாழ்வடைய திட்டமிடுபவர் எவரும், அவர்கள் வாழ்விழந்த காரணத்தை ஆராயாமல் எந்தத் திட்டமும் தீட்டி பயனுமில்லை.

இந்த ஆராய்ச்சி எண்ணத்தோடு இந்திய உப கண்டத்து வரலாற்றை உற்று நோக்கினால் இந்த நாட்டு மக்கள் உணர்ச்சியிழந்த காரணம் நன்கு புலப்படும்.

அதுதான் இன்றைய தேசீய தோழர்கள் பெருமையோடு கூறிக்கொள்ளும் "இந்தியாவின் ஆத்மார்த்திக வழி!" ஆம்! ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் வந்து குடியேறிய ஆரியர் சில நூற்றாண்டுகளில் இந்தியா பூராவும் தங்களுடைய வேத வழிக்குள் புகுத்திவிட்டனர். வேத வழியில் நம்பிக்கை வைத்து அதைப் பின்பற்ற ஆரம்பித்த மக்கள் தங்களுடைய நாடு, வாழ்க்கையின்பம், மொழி எல்லாவற்றையும் மறந்து, ஆண்டவன் போட்ட எழுத்தை யாரால் மாற்ற முடியும் என்ற கர்மவினையில் நம்பிக்கை வைத்து, போகிற

கதிக்கு புண்ணியம் தேட ஆரம்பித்தனர். கடலுக்கடியில் முத்தெடுத்து அதையவனத்தின் வீதிகளிலே விற்று, சேர்த்து வந்த செல்வத்தினால் சிறார்களே மகிழ வைப்பதைவிட ஊர்க் கோடியில் கோயில் கட்டி, அதில் உயர்ந்த ஜாதி யானை—பூஜை செய்யச் சொல்லி பூலோகத்தை விட்டு மறையும்போது சிவலோகம் நேராகச் செல்ல வழி தேடுவதே மேலான செயல் என்று எண்ணினர். அதன் பலன் அவர்களுடைய வாணிபம் அழிந்தது. வாணிபம் போனது என்றவுடன், கூடவே செல்வமும் சென்றுவிட்டது. வாழ்க்கையில் இன்பம் தேடுவதே பாபம் என்று அவனுக்கு மதம் போதித்த காரணத்தால், பொன் வெறுத்த அவன் பெண்ணையும் வெறுத்தான். அதற்கு அடுத்த கட்டமாக மண்ணையும் வெறுக்க வேண்டியது அவன் கடமைகளில் ஒன்றாகியது. இப்படி பொன், பெண், மண் மூன்றும் வெறுத்த மனிதப் பண்பற்ற சந்நியாசியாக இந்திய உபகண்டத்து மனிதன் மாறினான். இவைகளையெல்லாம்விட இந்து மார்க்கத்தின் முக்கியமான "கர்ம வினை" தத்துவம் அவன் வாழ்க்கையையே மாற்றியமைத்தது. மனிதயத்தனத்தில் எதுவுமே நடப்பதில்லை; எல்லாம் அவன் இட்ட விதிப்படிதான் நடக்கிறது. "முன் ஜென்மத்தில செய்ததை இப்போது அனுபவிக்கிறோம்; இந்த ஜென்மத்தில் செய்வதற்கு அடுத்த ஜென்மத்தில் அனுபவிக்கப் போகிறோம்!" "அவனன்றி ஓரணுவும் அசையாது!" என்ற வேதாந்தங்கள் மக்களுடைய வாழ்க்கையில் வேரூன்றிப் போயின. ஆண்கள் உயர்ந்த வகுப்பினராகவும், அவர்களே சோதிக்க பெண்களே கடவுள் படைத்திருப்பதாகவும் மக்கள் நம்பினர். "பெண்ணை மாயப் பிசாசம்" என்று வாழ்வின் அடிப்படையே தகர்த்து எறியப்பட்டது. சர்மவினையிலிருந்து தப்பி, ஆண்டவனடியை சேர பக்தி மார்க்கமும், அதற்கு ஆக்கம் தேட நாடு பூராவும் கோயில்களும் ஏற்படுத்தப்பட்டன. கோயில்களே கண்காணிக்கவும், கர்மவினை கழுவும் சடங்குகளே நடத்திச் செல்லவும் ஆரியர் தேவகுலத்தவராகி, பிராமணராயினர். மற்றையோர் கீழ் ஜாதியினர். நாட்டிலே ஏற்படுத்தப்பட்ட நாலு ஜாதிகள் ஆயிரக்கணக்கில் பெருகின. ஆனால் பிராமணேத்தமர்கள் மாத்திரம் ஒன்றுபட்டு நின்று விட்டனர்.

இப்படி நாடு, மொழி, வாழ்க்கை எதையும் பற்றி கவலைப்படாமல், வானத்தைப் பார்த்து கைகூப்பிய வண்ணம் இந்நாட்டு மக்கள் நின்றுகொண்டிருந்த காரணத்தால் தான், இபின் காசிம் எழுநூறு குதிரை வீரர்களோடு இந்தியாவைப் பிடித்திட்டான். லண்டன் நகர சாக்கடைகளில் உழன்று கொண்டிருந்த கிளைவால் ஒரு காலனியையே உண்டாக்க முடிந்தது!

நாட்டிலே முன்னேற்றம் காண விழையும் எந்த பொதுநல ஊழியனும் வரலாறு கூறும் இந்த சம்பவங்களை கவனிக்காமலிருக்க முடியாது.

மக்களை நாகரீகப்படுத்தி, அறிவுடையவர்களாக்கி, அவர்களை கூட்டுணர்ச்சியில் நாட்டின் செல்வத்தை பெருக்கும் பல்வேறு துறைகளில் ஈடுபடச் செய்வதே எங்கள் நோக்கம் என்று கூறுகிறார் நேரு பண்டிதர்.

தலைவரைப் பின் பற்றி நமது தேசீயத் தோழர்களும் "பாரீர், எங்கள் ஐந்தாண்டுத் திட்டங்களை! எத்தனைத் தொழிற்சாலைகள், எவ்வளவு நீர்த் தேக்கங்கள். இன்னும் பத்தாண்டுகளில் செல்வம் செழிக்கும் நாடாகும், இந்தியா!" என்று தம்பட்டமடிக்கின்றனர். அதே நேரத்தில் நாட்டு மக்களின் உண்மை நிலையுணராமலிருக்கின்றனர். பார்க்கப்போனால் வெட்கப்படுகின்றனர். அப்படிப்பட்ட ஏமாற்றத்தில் ஆளாகி இருப்பவர்களை திருத்தி, "வாழவுதான் நிச்சயம்; வாழ்க்கையின்பமே மனித குறிக்கோள்" என்ற எண்ணத்திற்கு அவர்களைக் கொண்டு வராதவரை எந்த ஐந்தாண்டுத் திட்டமும் நாட்டின் ஜீவ சக்தியில் என்ன மாறுதல் செய்ய முடியும்? வெள்ளைக்காரன் ஒலிபெருக்கி கொண்டு வந்தால் அதை வைத்துக் கொண்டு கதா காலட்சேபம் செய்வது போல், இந்தத் தேசீயத் தோழர்கள் தயாரிக்கும் மோட்டாரும், ஏரோப்ளேனும் ஒரு சில காவி வேஷ்டிதாரிகளின் க்ஷேத்ராடனத்திற்குப் பயன்படும். வேறெந்த விதத்திலும் நாட்டின் மறுமலர்ச்சிக்கு தொழிற் பெருக்கம் என்ன செய்யும்? வெள்ளைக்காரன் இருநூற்றாண்டுகள் ஆண்ட போது வராத 'மறுமலர்ச்சி' இந்தத் தேசீயத் தோழர்கள் தீட்டும் திட்டங்களினாலா வரப் போகிறது?

ஆனால் இத்திட்டங்களினால் இருவகையான வர்களுக்கு நல்ல லாபம் ஏற்படுகிறது.

முதல் வகுப்பார் இந்திய முதலாளி வர்க்கம். வெளிநாட்டு கோடீஸ்வரர்களுடன் கூட்டுச் சேர்ந்து இந்திய அரசாங்கத்தின் உதவியில் உள்நாட்டு முதலாளி வர்க்கம் வேகமாக வளர்ந்து வருகிறது. ஐரோப்பிய கண்டம் சென்ற இரு நூற்றாண்டுகளாக முதலாளி வர்க்கத்திடம் அனுபவித்த கொடுமைகளின் மறு பதிப்பு இங்கும் வெளியிடப் படும்.

அடுத்தபடி இந்த ஐந்தாண்டு திட்டங்களினால், தேசீயத் தோழர்கள் வசதி பெறுவர். மக்களுக்கு 'கண்ணன் காட்டிய வழி'யையும் "சக்ரவர்த்தி திருமகனே"யும் காட்டிக் கொண்டே இருந்தால் அவர்களுடைய நன்மதிப்பை பெற்றுக் கொண்டே இருக்கலாம். அபின் சாப்பிட்டு பழக்கப் பட்டு போனவனிடம் அரைப்பலம்கஞ்சாவின் அருமையைபேசினால்தான் நல்லவனுக முடியும். அதைப்போல இந்தியாவின் ஆத்மார்த்திகப் பெருமையைக் கூறிக் கொண்டே இருந்தால் மனித உணர்ச்சி இழந்து, மத உணர்ச்சி மேல்பட்டுப் போன மக்களிடம் நல்ல பிள்ளையாகி விடலாம்.

உலகத்திலே எங்கும் காண முடியாத துறவறவண்ணமும், சாதிமுறையும் இந்த நாட்டிலே இன்னும் விடாப்பிடியாக இருக்கிறது. இதை விடப் பேராபத்தாக, அந்த காட்டுமிராண்டி எண்ணங்கள் "உலகத்திலேயே உயர்ந்த ஆத்மார்த்திகத்துறை" என்று பெருமையாக வேறு பேசப்படுகிறது!

இவைகளுக்கு பக்க மேளம் கொட்டும் வேலையில் தேசீயத் தோழர்கள் ஈடுபட்டு விட்டனர். காந்தியின் ராமபஜனை யிலிருந்து உதித்து தேசீயம் ஆத்மார்த்திகத்திலே போய் ஐக்கியமாகியதில் ஆச்சரியமில்லை.

இப்படிப் பட்ட சூழ்நிலையில் இந்நாட்டு மக்கள் இழந்து விட்ட 'ஜீவசக்தி' திரும்ப அவர்களுக்கு வருமா? சர்வதேசீய அரங்கில் ஒரு குழப்பம் ஏற்பட்டு அமெரிக்கா இந்தியாவை அடிமைப படுத்துகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அடிமைப் படுத்துகிறது என்றால், முன் நாட்களைப்போல் அமெரிக்காக் காரனே இங்கு வந்து ஆளத் தேவையில்லை. சியாங்கின் சீனா அமெரிக்காவிடம் அடங்கிக் கிடந்தது போல் பொருளாதாரத் துறை மூலமாக இந்தியா அடக்கப் படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படிப் பட்ட நேரத்திலே இந்நாட்டு மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியும், ஆவேசக் கூச்சலும், தோன்றுமா? போர்டு ஸ்தாபனத்தோடு பேரம்பேச பிர்லாபறப்பாரே தவிர, வருகிற கப்பலே மூழ்கடிப்போம் என்று கடற்கரை யோரம் செல்லக்கூடிய மக்கள் கூட்டம் இருக்குமா? இன்னும் வேண்டுமானால் நேரு பெருமூச்சோடு அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாத வாறு எதிர்ப்பார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவருக்குப்பிறகுஎந்தத் தலைவர் சியாங் நிலையைவிட உயர்ந்த வராவார்?

வருங்காலத்தை மனதில் கொண்டு இந்திய உபகண்டத்து வரலாற்றை ஆராய்பவர்கள் மிக வருத்தத்தோடுதான் இந்த கேள்விக்கு பதில் கூற வேண்டும்

தற்பெருமை நம் கண்களை மறைக்கக் கூடாது. வெட்கம் நம் வார்த்தைகளை விழுங்கக் கூடாது. உண்மையை ஒளிக்காமல் கூற வேண்டும்.

நாம் சரித்திரத்தின் வாயிலாக அறிந்து கொண்டதெல்லாம் நம் இனம் ஒரு காலத்திலே இந்திய உபகண்டம் பூராவும் நாகரீக வளர்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருந்தது. இடைக்காலத்தில் ஆரியர் வரவால் நமது இனத்திற்கு இருந்த 'உயிர்சக்தி' அடியோடு மறைந்தது என்பதுதான்.

இப்படி இருட்டறைக்குத் தள்ளப் பட்ட மக்களை அறிவொளி வீசும் பரந்த உலகத்திற்கு அழைத்து வந்தாலொழிய இந்த இனத்திற்கு உயிர் ஏற்படாது. நாடும், நாட்டிலே வசிக்கும் மக்களும் நல்வாழ்வு பெற்று இன்பத்தின் எல்லைக்குச் செல்ல வேண்டுமானால், இந்த இக வாழ்வு நிச்சயம் என்பதும், அதிலே இன்பம் தேடுவதுதான் மனிதப் பண்புக் கேற்றது என்பதும் நமது இனத்திற்கு கவனப்படுத்தப் படவேண்டும். வாழ்க்கையில் வசதியும், நாமும் நமது பரம்பரையும் நல்வாழ்வுமடைய வேண்டுமானால் மக்களிடையே அறிவொளி வீசப்பட வேண்டும். மனித குலத்தின் சீரிய பண்புகளான ஒழுக்கம், ஒற்றுமை, இன உணர்ச்சி, மொழி அபிமானம், நாட்டுப் பற்று இவைகள் நம் நாட்டில் வேரூன்றப் படவேண்டும். அதற்கு அடிப்படையாக இன்று வேரூன்றிப்போயிருக்கும் 'பரவாழ்வு' சித்தாந்தம் மண்ணோடு பிடுங்கியெறியப் பட்டு 'இக வாழ்வு' தத்துவம் பிடித்திடப் படவேண்டும். இந்த ஒரு வேலையை நாம் செய்து விட்டு போனால்கூட போதும், வருங்காலப் பரம்பரை நம்மை வாயார வாழ்த்தும்.



"காத்திருந்து காத்திருந்து கண்களெல்லாம் பூத்துப் போய்விட்டன...!"

"எனக்காகவா...?"

"பின் யாருக்காக?"

"நிலத்திலே நெளியும் புழு, நீல வானத்திலே மிதக்கும் நட்சத்திரத்தை எட்டிப் பிடிக்க முடியுமா?"

"தொட்டு விளையாட முடியாத தூரத்தில் மின்னிச் சிரிக்கும் விண்மீன்கூட தரையைத் தழுவத் தாவி வருவதுண்டு..."

"உண்மையாகவா!"

"உறுதியாக அன்பரே!"

"குப்பைமேட்டுக் கோழி நான்..."

"இல்லை, என் இதயக் கோபுரத்தின் இன்ப விளக்கு!"

"அல்லி! நீ, மாடிவீட்டு மந்தமாருதம்..."

"ஆனால் தேடிக் கொண்டு வருகிறேன் இந்தத திரவியத்தை!"

"ஏற்குமா இந்த உலகம்?"

"ஏற்றுக் கொண்டது என்னுடைய இதய உலகம்!"

"அமர்ந்து ஆட்சி புரிய அந்தஸ்து வேண்டுமே..."

"காதல் ராஜ்பத்துக்கு அந்தஸ்து வேண்டியதில்லை, அன்பரே... அன்புதான் செங்கோல். இதயம்தான் சிம்மாசனம். நீங்கள்தான் என் மகுடபதி..."

"ஒன்றுமே புரியவில்லை, எனக்கு!"

"இனி – எதுவுமே புரிய வேண்டாம், நமக்கு!!"

★

விழித்துக் கொண்ட அமுத வாணனின் நெற்றியெல்லாம் வியர்வைத் துளிகள் வழிந்தோடின! அரசமாடத்தின் உச்சியிலே அயர்ந்து தூங்கிய அவன் தனக்கேற்பட்ட இன்பக் கனவை அசை போட்டவாறு, எழுந்து வந்தான் நிலா முற்றத்துக்கு. தேனருவி பாய்ந்தோடும் தென்றல் சோலையும், தீந்தமிழைப் போட்டிக்கிழுக்கும் குயிலின் நாதமும், அவன் உள்ளத்துக்கு 'மோகன ராகம்' போலிருந்தன. தளிர்க்கரம் நீட்டி

தமிழிசை மீட்டி, கொவ்வை இதழ் காட்டி கொத்தித் தின்பதுபோல, வானத்து நிலாவின் ரேகைகள் அவன்மீது வந்து விழுந்த படியிருந்தன! அண்ணாந்து பார்த்தான். தலைநகர் பொன்னாடு, அன்று முழுமையும் நடாத்திய 'பொங்கல்' விழாவின் மகிழ்ச்சியால், தூங்கிக் கொண்டிருந்தது. "அமைதி தாலாட்டும் இந்த நேரத்தில்—அல்லியின் வீட்டில்...!" என்று நினைத்தான். தன்னைப்போல அவளும் இன்பக் கனவு கண்டு, எழில் மாடத்துக்கு வந்துநின்று, ஏங்கிக் கொண்டிருப்பாள் என்று எண்ணினான். அப்படி எண்ணியபோது, அவன் தலை, ஆனந்தச் சுமையால் குனிந்தது! தன்னுடைய உயிருக்கும் புகழுக்கும் வழிகாட்டியான வீணையைப் பார்த்தான்; ஆசைக் காதலனின் இன்ப விரல் உடல் முழுதும் தளாவியபின், களைத்துத் தூங்கும் காதலியைப் போலக் கிடந்தது அந்த வீணை! ஏனெனில், அன்றைய பகலில், ராஜ சபையில், தலைசிறந்த கலாநிகழ்ச்சியாக இருந்தது—அமுதவாணனின் வீணாகானம்தான். நேற்றுக் காலையில் பொன்னாட்டுத் தலைநகரின் எல்லையை மிதித்தபோது அவனைப் பற்றி யாருமே அக்கறை காட்டவில்லை. அரச மன்றத்துக்குள் நுழைய அனுமதி கூட தர மறுத்துவிட்டார்கள்! உள்ளே ஆனந்த வாரத்துடன், ராஜ சபையின் இசை மணிகள், காலம்பொழிந்து கொண்டிருந்தபோது, சாலையோரத்திலே நின்று கொண்டு தன்னுடைய வீணையை எடுத்து, உள்ளத்து வேதனையை, ஒலி மயமாக்கினான். அரச சபையில் தன் ஆற்றலைக் காட்டி, உலகம் போற்றும் உன்னதக் கலைவாணன் என்கிற பட்டயத்தைப் பெறுவிட்டாலும், உயிர் வாழ்வதற்கு வேண்டிய சன்மானத்தையாவது பெறலாம் என்று தான் வந்தான்! அந்த ஆசை, பட்டுப்போய் விட்டது. கடைசி தடவையாக, தன்னுடைய கண்ணீரை வீணையின் வழியாக வெளிப்படுத்திவிட்டு, அந்த வீணையையும் அரசமனைக்கு எதிரிலேயே சுக்கு நூறாக்கி விட்டு திரும்பிப் போய்விடுவதென்னும் ஆத்திரத்துடன் வீணையை மீட்டினான்! உள்ளே ஆனந்த வெள்ளம்; வெளியே தனி வீணையின் சோகக் குரல். ஆனந்தத்தையும் மீறிக் கொண்டு சோக நாதம் அரண்மனைக் குள்ளே ஓடலாயிற்று. மன்னன் கண்டார் மயங்கியின் காதுகளில், சிட்டுக் குருவியின் கீச்சுக் குரல் போல, எட்டிற்று. சிம்மாசனத்திலிருந்து நேரே எழுந்து வந்தான்! சபையே, திகைத்தது! வாயிலுக்கு வந்து பார்த்த போது, நூறு மரத்தினடியில் ஒன்றன் குஞ்சு போல உட்காந்து கொண்டு வீணையை மீட்டிக் கொண்டிருந்த அமுதவாணன் தென்பட்டான். வேதனை வெள்ளத்தின் எல்லை, உடைப் பெடுக்கப் போகிற நேரம் அது! எந்த வீணையை உயிரினும் பெரிதாக மதித்து இத்தனை ஆண்டுகளும் பாதுகாத்து வந்தானோ அந்த வீணையை வீசியுடைக்கப் போகின்ற வேளை! மன்னனின் கரங்கள், அமுதவாணனைத் தடுத்தன. அரச சபைக்குள் நுழைந்தான். இசைத்தான். பலன்தான் மாலை நேரத்துக்குள் அவனுக்குக் கிடைத்த அரண்மனை வாசம்! அரச மேதையாக்கப் பட்ட, அவனை... அப்பப்ப!... பேட்டி கண்டோர் எத்தனை பேர், பெருமை மாலைகளைச் சூட்டியோர் எத்தனை பேர். அப்படி வந்தவர்களிலே ஒருத்தர்தான் ஆஸ்தானப் புலவர் அதிமதுரம். ஒரே காம்பில் மூன்றத்த இரண்டு புஷ்பங்கள் போல, அவருக்கு இரண்டு செல்விகள். ஒருத்தி அல்லி! இன்னொருத்தி ஆதி!! அவர்களில் அல்லியுடன் வந்தார்—அமுதனை பார்த்தார். ஒரு நாளைக்குத் தன்னுடைய இல்லிற்கு எழுந்தருள வேண்டுமென்றே தனக்கே உரித்தான புலவர் பாணியில் அவனை அழைத்தார். அப்போதுதான் அல்லியை அவன் கண்டான்! அதிமதுரம், அவனை இல்லிற்கு அழைத்தது கூட அல்லிக்காகத்தான்!! அல்லிக்கும் அமுதனுக்கும் 'முடிச்சு'ப் போட்டு விட்டால்...? தன் மகள் அரண்மனையிலே உலவுவாள்! பொன்னாட்டின் இசை மணிக்கு மனைவியாவாள்!!—என்று, வெற்றி பெற்ற அமுதன் மீது வேந்தன் விழி பதிந்ததுமே, திட்டம் போட்டு விட்டார். அதனால்தான், தனியாக வராமல் தன்னுடைய மகளோடும் வந்தார். அமுதனின் கண்கள் அல்லி மீது பாய்ந்ததுமே தன்னுடைய நினைப்பு, கனியாகி விட்டது என்ற களிப்புடன் திரும்பினர்! கூத்தர், பொன்னாட்டுப் புலவர்களில் ஒருவர். அதனால் அதிமதுரமும் அவரும் எலியும் பூனையுமாயிருந்தனர். கூத்தருடைய மகளை கொன்றை நாட்டு அரண்மனை ஓவியன் மணந்தான். அதனால் அவருடைய செருக்கு அதிகமாகி விட்டதாக எண்ணினர்; அதி

மதுரம்! அதனை மட்டந்தட்ட இப்போது, அமுதன் மருமகனைப் போகிறான்!! அதுவும், ராஜசபையின் ஒரே இசை மணி அமுதன்-ஆனந்தத்துக்கு அளவும் உண்டா?

★

"மந்தி கூடக் கிடைக்காது என்று இருந்தேன்; மயிலல்லவா, கிடைத்துவிடும் போலிருக்கிறது!"

"அடுத்த வீட்டுக் குயிலைப் பற்றி நமக்கென்னங்க-புலவர் ஐயா!—அக்கரை?"

"கீழே கிடக்கிற கொடிக்கு தாவிப் படர கிளையிருக்கக் கூடாதடா! அதனால்தான், அவன் ஆசையை மண்ணுக்க வேண்டும் என விரும்புகிறேன்..."

"போட்டியும் பூசலும் தென்னாட்டுப் புலவர்களின் தொத்து நோய் என்கிற பொது இலக்கணத்துக்கு நீங்களிரண்டு பேராவது விதிவிலக்காயிருக்கக் கூடாதா?"

"இந்த இலக்கணம் எல்லாம் எனக்குத் தெரியும்! அவனைப் போல் நானும் புலவன். என்னைவிடப் புகழுடன், இந்த நாட்டில் அவன் உலவுவதைப் பார்க்க நான் ஒன்றும் தெய்வம் அல்ல; மனிதன்!!"

"மரக் கட்டையாகக் கூடாது பாருங்கள்! அதனால் தான் சொல்லுகிறேன் - அன்பால், எதையும் வெல்லலாம். ஒரு முறை உடைத்துவிட்ட சட்டியைப் பிறகு ஒன்றுக்கிட முடியாது.

"புலவர் நடையில் எனக்கே புத்தி போதிக்க வந்துவிட்டாயா,-கீர்த்தி! தீர்மானமாகச் சொல்லுகிறேன். என்திட்டப்படி நடந்தால் தெடுநாளாக நீ சேட்டு வருகிறபடி உன்னைப் பற்றி பாட்டுக்கட்டித் தருவதோடு இந்தக் காசு மூட்டையும் கிடைச்சும், உனக்கு! முடியாது என்று நீ மறுத்தால், அதற்காக நான் மயங்கி விடப்போவதில்லை; இந்த மூட்டையை வீசியெறிந்தால் வேறு எவனுவது கிடைக்காமலா போகபோகிறான்...'

"என்னமோ சொன்னேன்! அதனால், முடியாது என்று மறுத்ததாக நினைத்துக் கொள்ள வேண்டாம், புலவர் ஐயா—!!"

அமுதவாணன் அல்லியைப் பற்றிக் கனவு கண்டு விட்டு நிலா முற்றத்தைக்குப் பெரு மூச்சுகளை வழங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில், கூத்தர் இல்லத்தில் கீர்த்திக்கும் அவருக்குமிடையிலே, இப்படி உரையாடல் நடந்து கொண்டிருந்தது. அதிமதுரம் வீட்டுக்கு நாட்டின் இசைமணி அமுதவாணன் மருமகனுவதா? தன்னைவிட மேலான அந்தஸ்தில் அந்த அதிமதுரம் ஆவதா? என்கிற ஆத்திரம்கூத்தருக்கு. அதனால் கீர்த்தியை அம்பாக்கினர்! சலனமற்ற உள்ளத்தைச் சர்ப்பக்காடாக்குவதாயிற்றே, பொறுமை!-அந்தப் பொறுமைப் புலி, புலவர்களுக்குச் சொந்தமாமே! அதனால்தான், கீர்த்தி நழைந்தான்-இருவருக்குமிடையில்! கீர்த்தி, பொன்னாட்டிலேயே சிறந்த மருத்துவன். அவனுக்குத் தெரியாத வைத்தியமில்லை என்று பேசுவார்கள்!—காசே பிரதானம்! என்பதுதான் அவனுடைய லட்சியம். அதோடு மருத்துவத் தொழிலில் வல்லவனை தன்னைப்பற்றிய பெருமைகளை புலவர் ஒருவரைக் கொண்டு பாடல்கள் மூலம் சுவடிகளில் ஏற்றிவிட வேண்டுமெனும் ஆசையும் உண்டு. அதோடு புலவர் நூற்கள் யாத்து சேமித்திருந்த சிறு காசுகளையெல்லாம், முடிச்சாக்கி, வேறு நீட்டுகிறார் அவனிடம்.

"கீர்த்தி! உன்னைத்தான் நம்புகிறேன்..."

"நம்பினோரை நாசம் செய்தறியாதவன் நான்!"

"விரைவில் முடிய வேண்டும்..."

"கவலைப்படாதீர்கள், புலவரய்யா!"

'கூடிய சீக்கிரம் மன்னர் 'சாபராஜ்ய வீணையரசன்' என்ற விருதை வழங்குவதற்காக, எல்லா நாடுகளுக்கும் ஓலை அனுப்பப் போகிறாராம்"

"அனுப்பட்டுமே!"

"அனுப்பட்டுமா? அட அடி மூட்டாள்! அப்படியொரு போட்டி இந்தப்பொன்னாட்டில் நடந்தால், இவனை வெல்லயாரால் முடியும்... இசையில் மன்னனுயிருக்கிறானே - மகாபாவி!? எப்படியாவது வெற்றி மாலை சூடிவிடுவான். பிறகு அந்த அதிகாரம்..."

"அதெல்லாம் ஒன்றும் நடக்காது புலவரய்யா. நாற்பத்தெட்டு நாட்கள்-பிறகு பாரும் என் வேலையை!"

"அது என்ன கணக்கு நாற்பத்தெட்டு நாட்கள்!"

"அதுவா...? இதெல்லாம் என் தொழில் ரகசியம். உங்களுக்கேன்! எப்படியாவது அந்த விழா, இன்னும் நாற்பத்தெட்டு நாட்கள் கழித்து வருவது போல செய்யுங்கள்..."

நாற்பத்தெட்டு நாட்கள்...

★

என்று, அமுதவாணன் நாட்களை விரலில் வைத்துக் கொண்டிருந்தான். அதே போல அதிமதுரப் புலவரும், கூத்தரின் நினைவு வரும் போதெல்லாம், அசதிக்குப் பிறகு, தான் கட்டப்போகிற கோட்டைகளைப் பற்றிய கனவில் ஆழ்ந்திருந்தார். ஆலை, கூத்தருக்கோ, எப்படியோ மன்னர் கண்டார்மயங்கியை மயக்கி, 'சாம்ராஜ்யப் போட்டி'யைத் தள்ளிவைக்கச் செய்து விட்டோம்! நாற்பத்தெட்டு நாளில், அந்த கீர்த்தி சொன்னபடி செய்ய வேண்டுமே— என்கிற கவலை குடைந்தது. கீர்த்தி, சொன்ன வாக்கை நிறைவேற்றத் தவறவில்லை! கூத்தரிடம் காசு பெற்ற மறுநாளே, அமுதவாணனின் மாளிகைக்குச் சென்றான். இடையில், அதிமதுரத்தின் இல்லத்துக்கு அமுதவாணன் சென்றிருந்ததையும், அங்கு அமுதவல்லியோடு அவன் பேச விரும்பியதையும் ஆனால், அந்த அளவுக்கு அதிமதுரம் அனுமதிக்கவில்லை யென்பதையும் உணர்ந்து கொண்டான். அதிமதுரம் ஏன் அனுமதிக்கவில்லை? — என்கிற இரகசியத்தை அவரது சிஷ்யன் சின்னப் புலவர், தெரிவித்திருந்தார், கீர்த்தியிடம். சின்னப் புலவர், கம்பராமாயணத்தைப் படித்ததோடு நில்லாமல்

"வாமமேகலையுறவளர்ந்த..! தையும் ரசிக்க ஆரம்பித்து, உடம்பெல்லாம் 'இந்திர' மயமாக்கிக் கொண்டதால், அவருக்குக் கீர்த்தியின் தயவு வேண்டியிருந்தது. ஆதலால், அதிமதுரத்தின் உள்ளத்தை, எடுத்துச் சொன்னான். "அது, இது; வானத்திலேயிருக்குது பாரு, கீர்த்தி—நிலா! அதைத் தூரக்கயி நந்து பார்க்கிறப்ப, இருக்கிற ஆர்வம், தொடக் கிடைத்து விட்டால், ஏற்ப டாது. எப்பவுமே, எட்டாத பொருளுக்குக் கொட்டாவி விடுகிறதுதான் மனித குணம்! எங்க புலவரய்யா, மனித குணங்களை யெல்லாம் அறிந்த பாட்டு முடைகிறவரல்லவா? அதனால்தான் இந்தத் தந்திரத்தைக் கையாளுகிறார். இன்னைக்கு போல, அமுதவாணனுக்கு அடிக்கடி இங்கே விருந்து நடக்கும்-அல்லிகூட, அலங்காரத்தோடு, அங்கு மிங்கும் நடந்து கொண்டிருப்பா. ஆனா, அமுதவாணனும் அவளும தனியாகச் சந்திக்க மட்டும் விடமாட்டார். அல்லி, என்ன சின்னப் பெண்ணு?—என்று கேட்பே. அப்பாவுக்கு அடங்கிய பெண்ணு!" என்று விபரமாக விளக்கினான். விபரம் கேட்ட கீர்த்தியின் மூளை வெகு வேகமாக வேலை செய்தது. வினாவு, மறு நாள் காலைபிலேயே, அரண்மனை வாசத்திலேயிருந்த அமுதவாணன் முன் ஒரு நரித்தோம்பன் தோன்றினான்! – வழக்கமான பாட்டு, சேட்டை, நரிப்பல், பாசிமணி இத்யாதிகளுடன். அல்லியின் சிந்தனையில் ஆழ்ந்திருந்த அமுதனை, தொம்பனின் சேட்டைகள் குலைத்தன.

"யாரப்பா, நீ?"

"தெரியலிங்களா! நரித் தொம்பன்!"

"அது தெரிகிறது; எங்கிருந்து வருகிறாய்? - என்று கேட்கிறேன் நீயார்?"

"சந்தணமலை அந்தணனுங்க!"

"அந்தணனு! ஆளைப்பார்த்தா அப்படித் தெரியலியே!"

"ஆளைப்பார்த்து எடை போடாதீங்க, சாமி! இந்த அகில உலகுக்கும் அஞ்சாத சாதி நாங்க!!"

"என்ன வேண்டும் உனக்கு?"

"நீங்க வேண்டும்!"

"நீங்க வேண்டுமா? என்னப்பா நீங்க வேண்டும்! என்ன சொல்லுகிறாய்?"

"புலவரய்யா வீட்டிலே பொண்ணு கட்டிக்கப் போற உங்களுக்கு இதுகூடத் தெரியலிங்களே—நீங்க வேண்டும்னு நான் சொன்னதுக்கு அர்த்தம், 'எப்போதும் உங்க தயவு இருக்க வேண்டும்' — என்கிறது..."

"சரிதான்! பெரிய ஆளாயிருக்கியே...என்ன இருக்கிறது உன்னிடம்?"

அமுதவாணன் கேட்டதுதான் தாமதம்! தன்னுடைய தோல் பைக்குள் கிடந்தவைகளை ஒவ்வொன்றாய் எடுத்து வைத்து, இது கோரோசனை... இது குங்குமப்பூ...இது கஸ்தூரி...என்று அடுக்க ஆரம்பித்துவிட்டு, கடைசியில் ஒரு புட்டியிலிருந்த சந்தனத்தூளை எடுத்துக் கொடுத்தான். அதை முகர்ந்து பார்க்கும் போது, அமுதனுக்கு ஆனந்தமாயிருந்தது!

"சாமீ! இந்த சந்தனத்தைத் தினந்தோறும் உங்களுடைய இரண்டு கைகளிலும் பூசிக்கிட்டுப் போனாப் போதும் — நெஞ்சிலேயிருக்கிற பெண்ணு மஞ்சத்திலே சாயும்! விலகி ஓடுறவ, அருகிலே வந்து உட்காருவா! தவறாம, பூசிக்கிட்டு வாங்க— பிறகு பாருங்களேன், இந்த சந்தண மலை அந்தணன் சங்கதியை. இன்னும் நாற்பத்

தெட்டே நாள்! அப்புறம்... ஹும்...ஐயா, என் கண்ணி லேயா அகப்படுவாரு?"

"ஏன்! அகப்படாமல் எங்கே போயிடப்போறேன்...?"

"சாம்ராஜ்ய வீணைப் போட்டியிலே ஜயம் பெற்றதும், புலவரய்யா பெண்ணைக் கொடுக்கப் போராரு... அரசர். பெரிய அரண்மனையும் ஆஸ்தியும் வழங்கப்போகிறாரு ... அப்புறம்கூடகோபுரம், கொஞ்சிடும் மணிவி இவைகளை விட்டு இந்த ஏழைங்க பக்கம் திரும்பியாப் பார்க்கப்போறீங்க!" என்று சொல்லிவிட்டு, அத்தொம்பன் போய்விட்டான். அமுதன் அடுத்த நாற்பத்தெட்டு நாட்களுக்குப் பிறகு தன்னை வந்து சந்திக்கும்படி, அவனை வலியுறுத்தியபோது, தொம்பன் உள்ளுக்குள் சிரித்துக் கொள்ளாமலில்லை.

★

வெளி நாட்டு 'வீணைமணி'களுக்கெல்லாம், கண்டார் மயங்கியிடமிருந்து ஓலை சென்றது. அந்த ஓலையை, கூத்தரே அருகிருந்து எழுதிக் கொடுத்தார். அங்கம்...வங்கம்....கலிங்கம்....சிங்களம்.... சோநாடு...பாண்டிய நாடு... என்று எழுதும் போதெல்லாம் அவர் அறியாமலே அவருடைய உடுகள் திறந்து மூடிக் கொண்டன அரசன், 'புலவரே! உமது புன் சிரிப்புக்குப் பொருளென்ன?' என்றும் கேட்டான 'இத்தனை நாட்டு இசை மன்னர்களும் வந்து, நமது புதுவாணரிடம் புறமுதுகிடும் ஓடும் காட்சியை நினைத்தேன். என்னை அறியாமலே சிரிப்பு வந்து விட்டது மன்னவா — வெற்றிக் கொடி ஏந்திவரும் வீரனை எதிர்நோக்கும் தேனிதழாளின் திவ்யமுகம் மலர்வதைப் போல!' என்று உவமான உவமேயத்துடன் கூறிவைத்தார். அரசனும் 'ஆம்! ஆம்!' என்று தலையசைத்தான். அவ்விதம் அமுதவாணன் தலையசைக்கவில்லையே ஒழிய அல்லியின் வீட்டில், "இசைத் திறமை எப்படி யிருக்கப்போகிறது தெரியுமா அல்லி? எல்லோரும் நமது மாப்பிள்ளையிடம் தோற்றோடப் போகிறார்கள்— பார்!!" என்று பேசிக் கொண்டிருந்த அதிமதுரப் புலவரின் வார்த்தைகளைக் கேட்டபோது, அமுதவாணனும் தலை குனிந்தபடியே தனது மனக்கண்முன் அந்தக் காட்சியைக் கண்டான். அதனால், துணிந்து, அல்லியையும் எதிர்கால மாமனாரையும் அடிக்கடி பார்த்தான். அதிமதுரத்தின் இல்லத்துக்கு அனுதினமும் செல்லத்தவறவில்லைஅமுதன். தொம்பன், தந்த சந்தனம் வேறு இருக்கிறதே!! அதை இரண்டுகால்களிலும் தடவியவாறு, அங்கு செல்லுவான். அவன் வரவுகாணுமுன்பே, வாயிலில் அதிமதுரமும் அவளது மகளும் வரவேற்பர். அங்கே அமர்ந்தபடியே பேசி அவனை, வெளியிலே அனுப்பிவிடுவர்..... அவனுக்கோ பெருவேதனை! அதிமதுரத்துக்கோ ஆசையை தூண்டி விடுகிறோம்—என்ற பெருமிதம்! இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன எல்லோருக்கும். கூத்தரும் அடிக்கடி சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு அமுதனைப் போய் பார்த்துப் என்ன ஆகிறதோ! என்று பெருமூச்சு விடுவார். கீர்த்தியைக் கூப்பிட்டு, எல்லாம் சரியாக நடக்குமா? என்று கேட்டுக் கொள்வார். என்னப்பன் ஈஸ்வரன்-கைலாசவாசன்- கருணை கடாட்சம் எப்படி இருக்கிறதோ! என்று பெருமூச்சு விடுவார். அதிமதுரத்தின் திமிர் அடக்கப்பட்டுவிட்டால் பார்வதிநாதனுக்கு ஒரு பெரிய அந்தாதியே பாடி காணிக்கை செலுத்துவதாக பிரார்த்தித்துக் கொண்டார். அந்தநாள் வந்தது. பொன்னாடு முழுமையும் 'சாம்ராஜ்ய வீணைப்போட்டி' யைப் பற்றி அறிவிக்கப்பட்டது. மன்னன் கண்டார் மயங்கியே, நேரில் சென்று எல்லா காரியங்களையும் கவனித்தார். நாடு எல்லா வளத்திலும் சிறந்து கிடந்ததால் அரசனுக்கு ஒவ்வொரு ஆண்டும் இது போன்ற கலை விழாக்களை நடத்தித் தன் நாட்டின்செழிப்பைக்காட்டிக் கொள்வதுதான் வேலை! ஒவ்வொரு வருடமும் யாராவது ஒரு வெளி நாட்டு இசை வாணன்தான்பரிசைத்தட்டிக் கொண்டு போவது வழக்கம். இந்த ஆண்டோ?—பரிசு பொன்னாட்டுக்கு உறுதி யென்ற பூரிப்பில் ஆழ்ந்து கிடந்தான், மன்னன்! அதனால் பிரமாதமான ஏற்பாடுகள் நடைபெற்றன. அமுதனும், தன்னுடைய வீணையின் மீது, தினசரி விரல்களை ஓட விட்டுக்கொண்டிருந்தான். — நாளை இசை விழா நாள். அமுதவாணன் இல்லத்துக்கு அதிமதுரம் வந்தார். நாளைக்கு நடக்கப்போவதை நினைத்து பெருமகிழ்ச்சியுடன் அளவளாவினர்மாப்பிள்ளை;மாப்பிள்ளை- என்று சொல்லிச் சொல்லி பூரித்தார். கூத்தரின் கர்வத்

துக்கு நாளை முடிவு கட்டப் படும் என்ற குதூகலத்துடன் சென்றார். மறுநாள்! அரச மண்டபத்தின் அலங்காரங்கள் கண்ணைப் பறித்தன ... ஒவ்வொரு நாட்டு கலைவாணர்களும் அந்தந்த நாடுகள் சீரும் சிறப்புடன் அனுப்பி வைத்திருந்தன ..... யாளை மீதேறி ஒருவரும், குதிரை பூட்டிய ரதத்தில் ஒருவரும், முத்துப் பல்லக்கில் இன்னுமொருவருமாக வந்து கூடிக் கொண்டிருந்தனர். எல்லோரையும் கண்டார்மயங்கியின் அமைச்சர்களும், புலவர்களும் வரவேற்று ஆசனத்தில் அமர்த்திக் கொண்டிருந்தனர். அழுதவாணனும் அன்று விடியற் காலையிலேயே எழுந்து ஒரு தரம் வீணையை மீட்டிப் பார்த்தான். பிறகு காலைக் கடன்களை முடித்து விட்டு, அரசன் அனுப்பிவைத்திருந்த ஆடைகளால் அலங்காரம் செய்து கொண்டு, நரித்தொம்பன் கொடுத்துப் போன சந்தனத்தூளை எடுத்தான். அது கொஞ்சம்தான் இருந்தது. இன்னும் கொஞ்சம் இருந்தால் என்ற நினைப்புடன், அதில் நீரைக் கலந்து கரைத்து, தன்னுடைய இரண்டு கைகளிலும் எடுத்துப் பூசினான். என்ன ஆச்சரியம்! அதைப் பூசியதுதான் தாமதம், விரல்கள் ஏன் இப்படி நடனமாடுகின்றன—அவனையறியாமலே கை நரம்புகள் ஏன் அப்படி அடித்துக் கொள்கின்றன. என்றும் அறியாமல், நினைத்தான், அழுதன். ஐயோ! ஐயோ!! என்று வலி பொறுக்கமாட்டாமல் அலறினான். கொஞ்ச நேரத்துக்கு முன்பு வாழைத் தண்டினைப் போல் காட்சி அளித்த அவன் கரங்கள், சுடப்பட்ட கத்திரிக்காயைப் போல் ஆகி விட்டன. முழங்கைக்குக் கீழ் அப்படியே வளைந்து வில்லைப் போல ஆகிவிட்டன. விரல்கள் ஒவ்வொன்றும் சொல்ல முடியாத அலங்கோலத்துடன் மடங்கிப் போய்விட்டன! இப்படி அப்படி அசையவில்லை! தன்னுடைய இரண்டு கைகளையும் வெட்டி எடுத்து விட்டு, இரண்டு இரும்புக் கைகளை வைத்திருப்பது போல அழுதன் உணர்ந்தான். படுக்கையில் சாய்ந்து, புழுப்போலத் துடித்தான்.

தூரத்தே அரண்மனையிலிருந்து கிளம்பும் எக்காளச்சப்தம் அவன் செவியில்மோதி அவனை அலைகடல் திரும் பாக்கிற்று! விழாவை யொட்டி போடப்பட்ட வேட்டுச் சப்தங்கள் ஒவ்வொன்றும் அவன் தலையிலே பேரிடிகள் போல விழுந்தன! அரண்மனையிலே அடிக்கப்பட்ட நாழிகை காட்டும் மணியின் ஒலி, இன்னும் சிறிது நேரத்தில் உன மானம் மரியாதை யெல்லாம் பறக்கப் போகிறது—என்று எச்சரிப்பதாக இருந்தது. எழுந்து வீணையின் அருகில் போனான்! எடுத்துப் பார்க்க எண்ணினான்! கைகளை நீட்டவும் முடியவில்லை-'ஐயோ' அலறிய ஒலி அந்த மாளிகையையே அதிரடித்தது. அங்கிருந்த ஒவ்வொரு சிற்பங்களும் அவனைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தன. ஆகாயமும் பூமியும் நெருங்கி மோதிக் கொள்வது போலவும், தான் இடையில் அகப்பட்டுக் கொண்டு இன்னும் சிறிது நேரத்தில் பொடிப் பொடி ஆகப் போவது போலவும் அவனுக்குத் தோன்றிற்று. 'ஐயோ! இந்த நிலையில் நான் எப்படி வீணையை மீட்ட முடியும்? இந்த நிலையில் என்னைப் பார்த்தால், என்னை மணக்க அவள் தான் சம்மதிப்பாளா? அந்த மதுரப் புலவர்தான் ஒப்புவாரா? ஐயோ! நான் யாருக்கும் கேடு செய்ததில்லையே... கேடு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைத் தொட்டு அறியேனே நான் .....ஐயோ! இந்த நேரத்திலா, எனக்கு இப்படி நேர வேண்டும். இரவெல்லாம் எப்படி யெப்படிக் கனவுகள் கண்டு கொண்டிருந்தேன், என்று அலறினான் அழுதன்! முகத்தைத் தூணில் மோதிக் கொண்டான்!! இன்னுஞ் சிறிது நேரத்துக்குள், அரண்மனைக்கு அழைத்தேக யாராவது வந்து இந்தக் காட்சியைக் கண்டால்...? அவனால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. அந்த அவமானத்தை!..." ஊம்!...இந்த ஊரை விட்டு இப்போதே ஓடிவிடவேண்டும். கொல்லிமலை, விருலிமலை, எங்காவது போய்க்கைக்கு ஏற்பட்ட அலங்கோலத்தைப் போக்கிக் கொண்டுதான் திரும்ப வேண்டும், என்கிற முடிவுக்கு வந்தான். நேற்று இரவு அவனுக்குப் போகப் போக்கியங்களை அள்ளி வழங்கிய அரண்மனை அமைதியுடனிருந்தது. அங்கேயிருக்கிற பொருள்களில் எதையும் அவன் எடுத்துப் போக விரும்பவில்லை. ஆனால், வீணை...! அதை எபபடி எடுத்துப் போவது? தொட்டுத் தூக்க வேண்டிய கரங்களோ வளைந்த வில்லாகி விட்டன! மீட்டி நாதம் எழுப்பிய விரல்களோ மடங்கிப் போய்க் கிடக்கின்றன! எப்

படி எடுப்பது?—வேதனைக்கு மேல் வேதனையாக இருந்தது, அவனது நிலை. பல்லால் கடித்துத் துக்க முடியுமா!—நரம்புகள் அறுந்து போய்விடுமே!! கடைசியில் எப்படியோ கக்கத்தில் வீணையை வைத்தபடி, எழுந்தான்—புயலில் உலர்ந்த மரம்போல, புறப்பட்டான்.

அரண்மனையிலே, சூறிப் பிட்ட நேரமும் தாண்டிவிட்டது. இன்னும் அமுதவாணன் வராததைப் பற்றி எல்லோரும், பேசத் தொடங்கினர்கள். புத்தாடை உடுத்தி ஆனந்தத்தோடு வந்திருந்த அதிமதுரப் புலவர், நம்பிக்கை நாதம் நரம்புகளில் தெறிக்க அமர்ந்திருந்தார். அப்போது அங்கே ஒரு வரிசையில் அமர்ந்திருந்த கூத்தரிடம் வந்து, கீர்த்தி இரகசியமாக ஏதோ சொன்னான். கூத்தரின் முகம் கோடி சூரியப் பிரகாசமுடையது போலாயிற்று! மன்னன் கண்டார் மயங்கிக்கோ எதுவும் புரியவில்லை. அமைச்சர் அன்பு நாதரை அழைத்து, உடனே அமுதவாணனை அழைத்து வருமாறு சொன்னார். சென்றவர், சில விநாடிக்கெல்லாம் திரும்பி வந்து, மன்னனிடம் அங்கே அமுதவாணன் இல்லை யென்ற செய்தியைச் சொன்னார். கண்டார் மயங்கிக்கு எதுவும் புரியவில்லை! சபையிலோ, வெளிநாட்டு விற்பன்னர்கள் எல்லாம், தயாராயிருந்தனர். இப்போது என்ன செய்வது? 'இன்னும் சில கடிகைகளில் விழாவை ஆரம்பித்து விடலாம்' என்று அறிவித்து விட்டு, அரசன், சபாமண்டபத்துக்கு அருகேயிருந்த தன்னுடைய ஆலோசனை அறைக்கு விரைந்தான். புலவர்கள் இருவரும் கூடப் போயினர். அரசன், கேட்டான்...

"எங்கே போயிருப்பான் அந்த அமுதவாணன்!!'

"வேறெங்கு போயிருக்கப் போகிறார்-வேந்தே! எல்லாம் நமது அதிமதுரனரின் அதிசயத் திருவினையாடலாகத்தானிருக்கும்!!"

"என்ன ஓய் — கூத்தரே! என் தலையை உருட்டாவிடில் உறக்கம் வராதோ—உமக்கு?"

"நான் என்னய்யா உருட்டுவது! அந்த அமுதவாணனே நீரும் உமது பெண்ணும் விரட்டிக் கொண்டு திரிவதைப் பற்றித்தான் ஊரே சிரிக்கிறது!!"

"நாவை அடக்குமய்யா—நாவை அடக்கும். இல்லையென்றால்...!"

"வசைபாடி ஒழித்து விடுவீரோ! வாலைச் சுருட்டிக் கொள்ளும்...என்னிடம் காட்டினால் ஒட்ட நறுக்கிவிடுவேன்..."

"குலசாமன் தூதுவனே! கூசையில்லா வீடே! யாரைப் பார்த்துச் சொன்னாய் அப்படி?"

புலவர்களுக்குள் ஏற்பட்ட 'போர்' சகிக்க முடியவில்லை மன்னனுக்கு! இருவரையும் சமாதானப் படுத்தி விட்டு, கூத்தரிடம், கேட்டான்—"ஏன், கூத்தரே! வீணை, அதிமதுரத்தின் மேல் பழி சுமத்தலாமோ! அதற்கு, இது தானா நேரம்?"

"வேறென்ன வேந்தே! அமுதவாணன் எப்பேற்பட்ட இசைவாணன்...அவனால் பொன்னுட்டின் புகழ்முடிக்கு புதுமெருகு ஏற்படப் போகிறதென நீங்களும் இந்த நாடுமே கருதிக் கொண்டிருக்கிறது... அவனே மருமகனுக்கிக் கொள்ள வேண்டும் என்ற பேராசையால் கொத்திக் கொண்டேயிருந்தால்... எந்த மனிதனுக்குத்தான் சலிப்பு வராது! புகழும் வேண்டாம், பொருளும்வேண்டாம், இந்தப் பொல்லாதவர்களிடமிருந்து தப்பினால் போதும் என்று ஓடி விட்டான்..."

"உண்மையா, அதிமதுரம்? உமது மகளை, அமுதனுக்கு மணமுடிக்க ஆசைப்பட்டதுண்டா...நீர்?"

"அந்த ஆசையிருந்தது உண்மை-ஆனால்...!"

"அதுபோதும்! அதுபோதும்!! ஆனால் ஏன் அழைக்கின்றீர்... செய்த சதிக்குத் திரை போடவா?"

"வேந்தே! சதியெதுவும் செய்யவில்லை, நான். மகளுக்கு அவனை மணமுடிக்க நினைத்தது உண்மை."

"அமுதன் அல்லியை மணப்பதற்குத் தயாராகயிருந்தான் என்றுகூடச் சொல்வீர்!"

"அதிலென்ன சந்தேகமா? என் மகனை மணக்க எத்தனையோபேர் போட்டி போட்டபோது அவன் மட்டும் என்னமுற்றும் துறந்த முனிபுங்கவனோ? உண்மையைச் சொன்னால், அல்லியைப் பார்த்ததிலிருந்தே-அவனுக்கு-அவள்மீது உயிர், அரசே, உயிர்!"

"காக்கைக்குத் தன் குஞ்சு குயிலாகத் தோன்றுவதில் வியப்பில்லைதான்!"

"வரம்பு மீறுகிறீர் கூத்தரே!-வரம்பு மீறுகிறீர்..."

"இல்லை! உண்மையைச் சொல்லுகிறேன்..."

"சொல்லித் தெரிவதில்லை உண்மை-செயலில் காட்ட வேண்டும். அரசே! இவருடைய மகனை மணக்க, இந்த நாட்டில் யாருமே சம்மதிக்க மாட்டார்கள் என்று சொல்கிறேன் நான். அரைப் பைத்தியத்தைக் கட்டிக் கொள்ளக் கூடிய முட்டாள்களின் பூமியாகி விடவில்லை; பொன்னுடு"

"அரசே! என் மீதும் என் மகள் மீதும் அபாண்டத்தைச் சுமத்த நீங்களும் அனுமதிப்

பது—என்னையல்ல!—என் தமிழைப் பழிப்பது போலிருக்கிறது...''

அரசன், தலையிட்டான்! அதன் பலனுக, தான் கூறியது மெய் என்பதை நிரூபிக்க புலவர் கூத்தர், காரசாரமாகச் சபதம் செய்தார். ''அரசே! இன்னும் இரண்டு திங்களில் இவருடைய பெண்ணுக்கு இவர் திருமணம் செய்து காட்டிலுல், அன்றைய தினமே நான் கவிதை எழுதும் தொழிலைக் கைவிட்டு விடுவதாகச் சத்தியம் செய்து தருகிறேன்—''

''இரண்டு திங்களென்ன; இன்னும் பதினைந்து தினங்களில் செய்து காட்டுகிறேன்...''

''இல்லையென்றால், நான் சத்தியம் செய்ததுபோல, இவரும் கவிதை பாடுகிற தொழிலை விட்டுவிட வேண்டும்...''

''ஓ! தயார்!!''

''அப்படி மீறி, ஒரு முறையாவது கவிதை எழுதிவிட்டால்—அரசே! ஆயுள் முழுதும் உங்கள் சிறைச்சாலைக்குள் தள்ளிட வேண்டும் நீங்கள்''

''சரி!''—என்றார், அதிமதுரம். வேந்தனே, விழித்தான்! சாதாரண சம்பவம் — இதற்கேன் இவ்வளவு பெரிய சபதம் எடுத்துக் கொண்டார்கள் என்று விளங்கவில்லை, அவனுக்கு! எதிரே யிருந்த திருவள்ளுவர் படத்துக்கு முன், இரண்டு புலவர்களும் சத்தியம் செய்துவிட்டுப் பிரிந்தார்கள். 'சாம்ராஜ்யப் போட்டி'க்கு வந்திருந்த இசை மணிகளுக்கு செலவு கொடுத்துவிட்டு, கண்டார் மயங்கியும் அரண்மனை சென்றான். கவலையோடு சென்ற அதிமதுரம், தன் மகளுக்கு மணாளனைத் தேட அதிகக் கஷ்டப்படவில்லை. முன்பு ஒரு முறை தன் மகளைக் கேட்டிருந்த சீரகச் செட்டியாரைப் பிடித்தார். சீரகச் செட்டியார்—செக்குகளைப் போட்டு, எண்ணெய் ஆட்டி, அதன் மூலம் ஏழடுக்கு மாடியும் ஏராளமான செல்வமும் பெற்று வாழ்பவர். அரண்மனைக்குள் நுழையும் அந்தஸ்தும், அரச நேசமும் அவருக்குக் கிடைக்கவில்லையே ஒழிய, ஆள் சரியான ஆள்தான். செய்தி அறிந்த கூத்தர், எப்படியாவது திருமணத்தைத் தடுக்க கீர்த்தியை மீண்டும் அம்பாக்க விரும்பினார். ஆனால், அவன் மறுத்துவிட்டான்—

''புலவரய்யா! உங்க பேச்சைக் கேட்டு, அந்த அமுதவாணனைக் கெடுத்ததே போதுங்க.....அடடா!.....அன்னைக்கு அவன் கிடந்து துடிச்சதை நினைச்சா; இன்னொரு தரம் யாருக்கும் தீங்கு செய்யற திலேங்கிற முடிவுக்கு வந்து விட்டேன்...'' என்று தீர்மானமாகத் தெரிவித்துவிட்டான், கீர்த்தி. என்ன செய்வார், கூத்தர்? வசைபாடி அழிக்கவா முடியும்! அதனால், துடித்தார்—ஒவ்வொரு நாளும். இவருடைய மனத் துடிப்பின் காரணமாகத் திருமணம் நின்றுபோய் விடவில்லை. கலியாண அழைப்பை, கூத்தருக்கு அனுப்பி வைத்தார் அதிமதுரம். திருமணத்துக்கு அரசனும் வந்திருந்தான். வெகு விமரிசையோடு, கலியாணம் முடிந்தது. அல்லிக்கும், சிரகச் செட்டியாருக்கும். திருவள்ளுவர் முன் சபதம் செய்ததுபோல், தான் இனிக் கவிதை எழுதுவதில்லை யென்று, வெட்கத்தோடு, உறுதிமொழியும் தந்தார் அரசனிடம்! கூத்தப் புலவர்!!—ஆனால், அவருக் கேற்பட்ட அருயையால், கரத்தை இழந்த, அமுதவாணனை, கொல்லிமலைச் சாரல் வில்லியர்களை நாடிச் சென்று கொண்டிருந்தான்—இழந்த கரங்களைப் பெறும் மூலிகைகளை நாடி. அவன் வாய். 'அல்லி! அல்லி!'—என்று உச்சரித்தபடியே இருந்தது.

* * *

புலவர் கூத்தர், கவிதை புனைவதில்லை என்று செய்த சத்தியம், மருத்துவன் கீர்த்திக்கு எட்டியதுதான் தாமதம், தூக்கி வாரிப்போட்டது, அவனுக்கு. 'தன்னைப் பற்றி கவிதைகள் எழுதி, சுவடிகளில் ஏற்றுவதாகச் சொன்னரே!' என்கிற எண்ணத்தில், ஒட்டமும் நடையுமாய், அவருடைய இல்லத்துக்கு வந்து சேர்ந்தான். கூத்தர், சோகமாயிருந்தார் வீட்டில்! புலவரின் முடிவைக் கேட்ட பின், சின்னப் புலவரும் கனிந்திருக்கிற தோட்டம் எதுவென்று பறந்து விட்டார். கூத்தருக்கோ, வேறு யாரும், துணை கிடையாது. கீர்த்தியைக் கண்டதும், வேதனையுடன் பேச ஆரம்பித்தார்! அப்போதும் அவருக்கு அந்த நச்சு உள்ளம் போகவில்லை. அதிமதுரத்தை அழிக்க கீர்த்தியிடம் திட்டம் கேட்டார். கீர்த்தி, முன்பு போலவே மறுத்துவிட்டான்! அதோடு, ''புலவரய்யா! உங்க சபதம், சத்தியம் எல்லாம் எனக்குத் தெரியாது. என்னைப் பற்றி கவிதை எழுதி ஏட்டிலே யேற்றுவதாகச் சொல்லியிருக்கீங்க — நீங்க. என்ன சொல்றீங்க, நீங்க!''—என்றான்.

''கீர்த்தி! சத்தியத்தை மீறினால், அரசதண்டனை கிடைக்குமேடா-''

''இரகசியமா ,எழுதிக்கொடுங்க...!''

''பாடலைக் கண்டதுமே, அது யார் தீட்டியதென்பதைக் கண்டு கொள்வாரேடா-அரசர். அவா தெரிந்து கொள்ளாவிட்டாலும் இந்த அதிமதுரம் விடமாட்டாரேடா-இலேசில்!''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது! என் புகழ் என்றைக்கும்இருக்கணும்-அதுக்கு உங்க பாட்டு வேணும்-பொன்னுட்டிலேயிருக்கிற இரண்டு புலவர்களில், அதிமதுரத்திடம் நான் போய் கேட்க முடியாது. உங்களைத்தான் கேட்கமுடியும். எழுதித் தரப் போறீங்களா! இல்லையா!!''

''எழுதிக் கொடுத்தால் அரச ஆணை வாட்டுமேடா!''

''நீங்க எழுதிக் கொடுக்க லேன்னாலும், அரச ஆணை வாட்டத்தான் போகுது! தெரியுங்களா... புலவரய்யா!... எழுதிக் கொடுத்தீங்க, நான் பேசாமெ போயிடுவேன், இல்லே! அரசசபைக்குப்போய்எல்லாவற்றையும் சொல்லிடுவேன்...''

புயல்! தீ!!-இரண்டும் தெளிவாகத் தெரிந்தது, கூத்தருக்கு. ''இன்று போ-நாளை, வா'' என்று கம்பர் பாணியில்போகச் சொல்லி விட்டு, யோசனையிலாழ்ந்தார், கூத்தர், எப்படிச் செய்தாலும்- குற்றம் வெளிப்படும்! என்ன செய்வது? நீண்ட நேரம் யோசித்தார்-அமுதவாணன், அல்லி, அதிமதுரம், அரசன், கீர்த்தி- எல்லோரும் எதிரே நின்று பேசுவது போல இருந்தது. கண்களிரண்டிலுமிருந்தும் நீர் வழிந்தோடிற்று! ஏடு எடுத்தார்-இதை எழுதினார்

''வினை வித்தார்-
வினை அறுத்தார்!''

வீட்டுக்குள் போனார். மறுநாள் காலையில் அவருடைய கடைசிஎழுத்தாக இந்தநூறுக்கு மட்டுமே கிடந்தது ஏராளமான கவிதைகளைத் தீட்டிய கூத்தர் ஒரு முழக்கயிற்றுக்கு இரையாகிக்கிடந்தார்!! ''தன்னுட்டுக்கு, தன்னுடைய கடைசிக் கவிதையைக்கூட அவரால் வழங்க முடியாமற் போயிற்றே இந்தப் பாழும் பொருமைப் புயலால்'' என்று கண்டார் மயங்கி கண்ணீர் வடித்தார்.

அதே சமயத்தில் கொல்லிமலை வில்லியர்களிடம் பெற்ற மருத்துவ முறையால், இழந்த கரங்களைப் பெற்ற ஆனந்தத்துடன்—பொன்னுட்டில் நடை பெற்ற நிகழ்ச்சிகள் எதையும் அறியாதவனை, அமுதவாணன், ''அல்லியைச் சந்திப் போம்! இனி, 'சாம்ராஜ்ய இசை மணி' ஆவோம்!'' என்கிற ஆனந்தக் கண்ணீர் இமைகளை நனைக்க, பொன்னுட்டுத் தலை நகரின் எல்லையை மிதித்தான், கையிலேந்திய வீணையுடன், அதிமதுரத்தாரின் இல்லத்துக்கு விரைந்து வந்து கொண்டிருந்தான்! தெருக்கோடி திரும்பியதுமே, அவருடைய வீட்டிலிருந்து வந்த நாதகானமும், அவருடைய வீட்டுக்குச் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களும் கண்ணில்பட்டன. ஒன்றுமே புரியாதவனாய் திகைத்துப் போய் நின்ற அவனை, அதிமதுரம் வீட்டுக்குச் சென்று திரும்புவோர் பேசிக் கொண்டு சென்ற மொழிகள், திகைக்க வைத்தன. அன்று அதிமதுரப் புலவரின் வீட்டில்—புது மணத் தம்பதிகளின் முதல் இரவு நாள் —சாந்தி கலியாண தினம். அமுதவாணனின் தலையில் ஆயிரம் சம்மட்டிகொண்டு அடிப்பது போலிருந்தது! உயர்ந்த இசையை ரசிக்கும் நேரத்தில் திடீரென ஒரு அபஸ்வரம் எழுப்புவதைப் போலாயிற்று — அவனுக்கு. திகைத்தான்! இந்தச் செய்தியைக் கேள்விப்படவா, காடு, மலைகளைக் கடந்தேன்—படாத கஷ்ட மெல்லாம் பட்டேன்—எவ்வளவு ஆசைகளை ஊட்டினர், அந்த அதிமதுரம்—நான் சூட வேண்டிய மலர், இன்னொருவனுடைய கரத்திலா?—இப்படியெல்லாம் எண்ணியபடியே அருகேயிருந்த அரசமரத்தடியில் சாய்ந்தான். அவனுடைய உள்ளத்தில், எரிமலையும் பூகம்பமும் போட்டியிட்டன. மின்னும் நட்சத்திரமும், வீசிடும் காதலும், நிலவின் ஒளியும், ஒரே வார்த்தையை ஒலிப்பது போலக் கேட்டது. பழி! பழி!! பழிக்குப் பழி !!!— என்று, அவனுடைய அங்க நாடியெல்லாம் அடித்துக்கொண்டது. எழுந்தான்!! அதிமதுரப் புலவரின் வீட்டைப் பார்த்தான்!! அவன் மனதில் புகுந்து கொண்ட இருளைப் போல், விளக்குகள் யாவும் அணைக்கப்பட்டுக் கிடந்தது. அவர் வீட்டு மச்சியில் மங்கலான தூண்டா விளக்கின் வெளிச்சம் மட்டும் தெரிந்தது.. இதற்கு முன் எத்தனையோ முறை அந்த வீட்டுக்கு வந்து போயிருக்கிறான் என்றாலும், வாசலோடு திரும்பியவனை ஒழிய ஒரு முறைகூட வீட்டுக்குள் அடிவைத்து எங்கே என்ன யிருக்கிறது என்பதைக் கூட அறிந்தவனல்ல... ஆயினும் ஒரு தைரியம்! எழுந்தான்! எப்படியோ, மாடிக்குள் வந்துவிட்டான் - ஆந்தையைப் போல, அடிமேல் அடிவைத்துச் சென்று கொண்டிருந்த அவன் கண்களில் தூண்டா விளக்கு எரியும் அறை தென்பட்டது. எட்டிப்பார்த்தான்... எழிலே உருவெடுத்ததுபோல அல்லி தூங்கிக் கொண்டிருந்தாள்...அருகே!... கூர்ந்து கவனித்தான், யாரும் இல்லை. அவள் கணவன்...? முதலிரவு நாளாயிற்றே! எங்கே போயிருப்பான்...? வானத்து நிலவு அறைக்குள் கோலம் போட்டுக் கொண்டிருந்தது! காதல் காற்று மெதுவாக வீசிக் கொண்டிருந்தது!! எங்கே போயிருப்பான் அவள் கணவன்...? என்றெண்ணியபடியே கதவில் கை வைத்தான்—தாழ்ப்பாள் போடப்படாததால், அது திறந்தது. உள்ளே சென்றான்! கட்டிலருகே போய் விட்டான்!! காட்டு மல்லிகை—சிட்டுக் குருவி—தேன் கூடு—தென்றல் சோலை... — இப்படியெல்லாம் வர்ணித் திருப்பான் வேறு நேரமாயிருந்தால், ஆனால் இப்போது — நெருங்கினான்! அவ்வளவு தான்—அவனது காட்டுப் பிடியிலேயே சிக்கிய அவள் திகைத்தாள், கூச்சலிட எண்ணினாள்—'பெப்பே! பெப்பே!!' எனும் கூச்சல் மட்டும் வெளிவந்ததே ஒழிய, எவ்வித சப்தமும் வெளியில் வரவில்லை... அவன் பசி அடங்கிற்று! மிருக வெறி தணிந்தது!... பழி வாங்கி விட்டதாக ஓர் அமைதி தவழ்ந்தது!! அவளோ! நடுங்கிய உடலுடன் ஒரு மூலையிலே போய் நின்றாள் — கண்ணீர்த் வடித்தபடியே நின்றாள்.

''நீலி! இப்போது வடிக்கிறாயே, கண்ணீர்! இது போல சிறிது நேரத்திற்கு முன்பு—நீ திருமணம் செய்து கொண்ட சேதியைக் கேள்விப்பட்ட போது நான் எப்படிக் கண்ணீர் வடித்தேன்—தெரியுமா? உன்னை அழித்துவிட்டேன்—ஒருவனுக்கு நீ மனைவியானாய் என்ற பின், எந்தக் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள பெண்கள் ஆசைப்படுவார்களோ—அந்தக் கற்பைச் சூறையாடி விட்டேன். இதோ போய் விடுவேன் என்றெண்ணாதே! நீ கசங்கிய கனியாகிவிட்டாய்

[218-ம் பக்கம் பார்க்க]



வடபுலம் வென்ற தமிழ் வேந்தர்கள்..

என். எஸ். இளங்கோ.

இந்திய வரலாற்றை எழுதப் புகுந்த வரலாற்று ஆசிரியர்கள் செய்த மாபெரும் தவறு ஒன்றுள்ளது. வட நாட்டை கேந்திரமாக வைத்து, கங்கைக் கரையிலே தன் எண்ண ஓட்டத்தை நிறுத்தியேசான் 'பாரத நாட்டு' வரலாற்றை எழுதியுள்ளனர். இந்தியா முழுவதும் பரந்து கிடந்தது அசோகனின் ஆட்சி—அதற்கு முன் எந்தக் காலத்திலும் இந்தியா ஒன்றுபட்டிருந்ததில்லை என்றெல்லாம் பெருமைப் படுவர். வடக்கே இமயம் முதல் தெற்கே வேங்கடம் வரை, மேற்கே காந்தாரம் தொடங்கி கிழக்கே காமரூபம் வரை அவன் வெண்கொற்றக் குடையின் கீழே இருந்தது என எழுதி மகிழ்வர். குப்தர்களின் பொற்காலத்தைப் போற்றிப் புகழ்வர். அவர் தம்மைக் கண்ட சீன யாத்ரீகர்களை மேற்கோள் காட்டுவர். கனிஷ்கர்களின் வரலாற்றைப் பக்கம் பக்கமாக வரைந்து காட்டுவர். எனினும் அவர்கள் ஒரு போதும் தென்னகத்து வேந்தர்களைப்பற்றி எழுதியதே இல்லை.

வரலாற்று ஆசிரியர்கள் மனித குலத்துக்கு, குறிப்பாக திராவிடர்க்கு, சிறப்பாக சரித்திரத்துக்கு செய்த மாபெரும் துரோகம் இது. வெள்ளையர் எழுதிய இந்திய சரித்திரம் தவறானது எனக் கூறிடும் வரலாற்று வல்லுனர் செய்த மன்னிக்க முடியாத குற்றம். ஆளும் வர்க்கத்தினர் ஆளப்படும் வர்க்கத்தினரின் பெருமைகளை மறைக்கும் சூழ்ச்சித் தந்திரம். அடிமைப் படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு தென்னாட்டு வேந்தர்களின் வடநாட்டு திக்விஜயங்களை — அவர்கள் பெற்ற வெற்றி விருதுகளை ஒருக்காலும் ஒப்புக்கொண்டதில்லை.

காளிதாசன் எழுதிய ரகுவம்சத்தில், அந்தக் காவிய புருஷன் ரகு நடத்திய திக்விஜயத்தை ஆராய்வர்—அதில் குப்தர்களின் வெற்றியைக் காண்பர்! காளிதாசனின் நாவன்மையைக் கொண்டு குப்தர்களின் ஆட்சிக் காலத்தை 'பொற்காலம்' எனக் குறிப்பிடுவர். தென்னாட்டின் பிரசித்தி பெற்ற இலக்கியங்களில்—புறநானூறு, சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி போன்ற வளம்பெற்ற இலக்கியங்களில்வரும் சரித்திர நிகழ்ச்சிகளை எடுத்தாள மறுப்பர். காளிதாசனின் ரகுவம்சத்தில் சரித்திர நிகழ்ச்சிகளை காண்பவர்கள், கம்பனின் காவியகதில் வரும் தென்னிலங்கை வேந்தர்களின் செல்வச் சிறப்புகளை கவனிக்க மறுப்பதேன்?

இந்திய சரித்திரத்தை ஆராய்ந்து முடிவு கட்டிய வின்சென்ட் ஸ்மித் என்பான் தன்னுடைய சரித்திரப் புத்தகத்தின் முக விளக்கமான முகவுரையில் கூறினான்:

"இந்திய நாட்டின் சரித்திரம் இதுகாறும் வட இந்தியாவைகேந்திரமாகக் கொண்டு எழுதப் பட்டு வந்துள்ளது. இது தவறு. தென்னாட்டின் வளம் பொருந்திய இலக்கியங்களை ஆராய்ந்து, தென்னாட்டை கேந்திரமாக வைத்தே தான் இந்தியசரித்திரம்எழுதப்பட வேண்டும். எனக் குப்பின்னே சரித்திரம்எழுதும் சரித்திர மாணவர்கள் வளம் பொருந்திய தென் மொழி கற்று, அந்த இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதினால் தான் இந்திய சரித்திரம் பூர்த்தியடையும்' என்று! இந்த அறிவுரையை எந்த இந்திய ஆராய்ச்சியாளனும் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை!

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சேர நாட்டை ஆண்டு வந்தான் சேரன் செங்குட்டுவன். அவன் இமயத்திலே எடுத்த கல்லை கங்கையிலே நீராட்டி, கனக-விசயர் சுமந்துவர நாடு திரும்பினான். இந்தக் கல்லைக் கொண்டுதான் பத்தினித் தெய்வம் கண்ணகிக்கு சிலை வடித்தான் என்பர். இன்றும் அக் கண்ணகி தெய்வத்தின் திருவுருவம் (கிராங்கனூரில்) கொடுங்கோனூரில் காணலாம். ஆண்டுக்கு ஒருமுறை அத்தெய்வத்துக்கு நடை பெறும் திருவிழாவில் – வடபுலம் சென்ற அவ்வீரக்கதை சொல்லப்படுகிறதாம்!

பிற்காலத்தில், சோழ மன்னர்களால் எழுப்பப்பட்ட தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தின பிரகாரத்தில் சிற்பங்கள் பல காணலாம். அவை சுவை கூர்ந்து கவனிப்போருக்கு ஒரு சிற்பம் தெரியும். கனகனும் – விசயனும் கல் தூக்கி வரும் காட்சி ஒன்று சித்தரிக்கப்பட்டிருக்கும்! கைகளிலே கயிறு பூட்டி, தமிழ் மறவர்கள் இழுத்துவர வடபுல வேந்தர்கள் தலை குனிந்து வரும் அந்த சிற்பம் சரித்திரத்தின் ஒரு பகுதி.

யார் இந்த கனகனும் விசயனும்? இளங்கோவடிகளை எடுத்துக் கூறுவர் — சேரன் செங்குட்டுவனின் பரணி பாடுவர் - ஆயினும் கனகனும் விசயனும் அவர்கள் கண்ணிலே நிற்க மறுப்பர்! சிலம்பின் செல்வர்கள் சிலப் பதிகார அழகிலே மயங்கினரோ, சிலம்பின் ஒலியிலே காது செவிடுபட்டனரோ, அறியோம். சிலப்பதிகார காலத்தினையும் சேர மாவீரன் செங்குட்டுவன் காலத்தையும் அறுதியிட்டுக் கூறமுடியும். அதுகாலை வடபுலத்தில் இருந்த மன்னர்களை ஒற்று நோக்கின் கனகனையும் விசயனையும் காணவா முடியாது! சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள், வடபுலத்தில் மிக கீர்த்தி பெற்றிருந்த குஷான் பேரரசனை **கனிஷ்கன்** தான் வடமொழி ஒலி நீங்கி **கனகன்** ஆனான் என்பர். கனிஷ்கனின் கதை தெரியும் சரித்திர மாணவர்களுக்கு. ஆனால், அவன் தமிழ் வேந்தனுக்கு அடிமைப்பட்ட கதை-கொடுங்கானூர் வரை கல் சுமந்து சிறை பட்டிருந்த கதை அவ்வளவாகத் தெளிவாக்கப்படவில்லை. அதே காலத்தில் இந்தியாவுக்கு வடக்கே கோட்டான் என்றழைக்கப்பட்ட பிரதேசமிருந்தது. அக்காலத்தில் ஆட்சி பீடத்தில் இருந்தவன் பெயர் விஜய கீர்த்தி. இந்த விஜய கீர்த்திதான் செங்குட்டுவன் கல் சுமத்தி வந்த விஜயன்! சரித்திர வரலாற்றில் இருள் படர்ந்த காலங்கள் இருந்திருக்கின்றன. கூடவும் சரித்திர ஆசிரியர்கள் வேறு கறுப்புச் சாயம் பூச முயன்றால் தெளிவான வரலாற்றை நாம் எங்கே பெற முடியும்?

தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான தி. நா. சுப்பிரமணியம், இந்தக் கூற்றை ஒப்புக் கொண்டுள்ளார். அவர் கூறுகிறார்:

"செங்குட்டுவன் வடநாடு சென்று இமயமலையை அடைந்து, நடுவில் உள்ள மன்னர்களை வெற்றி கொண்டு, கனக விசயரை சிறைப்பிடித்து, தமிழ்நாடு வந்ததை அவர்கள் சரித்திர நிகழ்ச்சியாகக் கொள்வதில்லை!... இந்தச் செய்தியை நாம் இன்றைக்கு உள்ள சரித்திர புத்தகங்களில் காண முடியாது. இதற்குக் காரணங்கள் பல உள்ளன. எனினும் அவற்றுள் முக்கியமானவைகள் சிலவற்றை சொல்லலாம். முதலாவதாக, நம் நாட்டு சரித்திரம் இன்னும் ஆராய்ச்சியாளர்களால் விருப்பு வெறுப்பற்று முடிவு செய்து எழுதப்படவில்லை. இரண்டாவதாக, வடநாட்டு ஆராய்ச்சியாளர்கள் தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சியிலே அதிகமான கவனம் செலுத்துவதில்லை தவிர தமிழ் நாட்டு மன்னர்கள் வடநாட்டிலே கொண்ட வெற்றியை அவர்கள் ஒப்புக் கொள்வதே இல்லை!"

* * *

செங்குட்டுவன் கனக விசயர் தலையிலே கல் சுமத்தியதோடு தன் ஆவலை பூர்த்தி செய்துகொண்டான். பிற்கால சோழ மன்னர்களோ வடநாட்டை வென்றனர். அப்பிரதேசத்தை தன் ஆட்சியின் கீழேயே நீடிக்க வைத்துக் கொண்டிருந்திருக்கின்றனர் என்பதற்கு நீடித்த ஆதாரங்கள் இருக்கின்றன.

சோழ மன்னர்களின் வடநாட்டு வெற்றி, இராஜேந்திரன், அவன் மகன் இராஜராஜன் ஆகிய இருவருடைய கல்வெட்டுகளிலும் குறிக்கப்பட்டுள்ளது.

வடநாடு மிகமிக வலிமை குன்றியிருந்த சமயமது. திறமையான அரசர்கள் யாரும் அங்கு இல்லை. இதனை நன்கு அறிந்த கஜினி முகமது என்பான் படைதிரட்டி வடநாட்டை அடிக்கடி அச்சுறுத்தி வந்தான்.

ஒருமுறை அல்ல; இருமுறை அல்ல அவன் இந்திய மண்ணிலேசூறையாடியது. பதினேழு முறைகள்! ஒவ்வொரு முறையும் அவன் கைப்பற்றிய நவரெத்தினங்கள் பல ஆயிரம் ஒட்டகங்களில் ஏற்றி காபூல்

பிரதேசத்திற்கு கொண்டு போகப்பட்டன. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் அக் கொள்ளைக்காரன் கால் படாத இடமே இல்லை. கடைசிமுறையாக குஜராத் நாட்டில் உள்ள சோமநாத புரத்து ஆலயத்தை சூறையாடுகிற வரையில் அவன் ஓயவே இல்லை. இந்த கோந்தளிப்பான காலத்தில்தான் தமிழ்ப் பேரரசன் ஒருவன் வடநாடு சென்று வெற்றிவாகை சூடிய குறிப்பு ஒன்று சரித்திரபுத்தகங்களிலே காணக் கிடைக்கிறது. ஒரு வேளை மாற்றானுக்கு அடிபணிந்து விட்ட கோழை மன்னர்கள். சென்னைட்டுப் பேரரசர்களிடம் தஞ்சம் புகுந்திருக்க வேண்டும். அவ்வரசர்களுக்கு பாதுகாப்பு அளிக்க, இந்திய மண்ணை மீட்டுக்கொடுக்க, தமிழ் வேந்தர்கள் சங்கநாதம் எழுப்பினர் போலும்!

கஜினி முகம்மது தன்னுடைய பனிரெண்டாவது படையெடுப்பின்போதுதான் கன்னேசியைக் கைக் கொண்டிருக்கிறான். அப் படையெடுப்பு நடந்த காலம் கி. பி. 1018 என்பர் வரலாற்று ஆசிரியர்கள். இராஜேந்திரன் தன் மகனுக்கு பட்டம் கட்டி சோழ சிங்காதனத்தைத் தந்தகாலம் கி.பி. 1012. அவன் வடநாட்டுபடையெடுப்பு நடந்தகாலம் 1022. இதனை ஒப்பிட்டுப் பார்க்கிறவர்களுக்கு கஜினி முகம்மது படையெடுப்பின் போது வடக்கே சென்றவன் இராஜேந்திரச் சோழனே என்பது நன்கு புலனாகும்.

கஜினி முகம்மதுவின் படையெடுப்பை சமாளிக்க முடியாது சரணாகதி அடைந்தான் கன்னேசி அரசன் இராஜ்யபாலன். இராஜ்ய பாலனின் இழிநடத்தையை கண்ணுற்ற பிற மன்னர்கள், அவனுக்கு உறவினனான திரிலோசன பாலனை கன்னேசி மன்னனாக அங்கீகரித்தார்கள். (கி. பி. 1019 மார்க்காலத்தில்) இந்த அரசியல் சூழ் நிலையில்தான் தென்னகத்து மாவீரன் இராஜேந்திரன் வடபுலம் நோக்கி தன் போர் முரசு செய்திருக்கிறான். திண்டிவனத்தில் அகப்பட்டிருக்கும் சாசனம் ஒன்று அந்தக் கன்னேசிப் படை பெடுப்பை விளக்குகிறது.

இராஜேந்திரன் கன்னேசி வெற்றியைக் கொண்டாட ஒரு பெரிய தலைநகரையே உண்டாக்கினான்! தன்தந்தை இராஜராஜன் தஞ்சாவூரில் கட்டுவித்த பிரகதீஸ்வரர் ஆலயத்தினும் மிகச் சிறப்புற்றதாய் ஒரு பெருங் கோயிலையும்உண்டாக்கினான். அந்த நகருக்கு தன் வெற்றியைக் குறிப்பிடும் வகையில் கங்கைகொண்ட சோழபுரம் என்ற பெயரையும் சூட்டுவித்தான். அந்தக் கோயில் பிரகாரங்களில் பல சாசனங்களை செதுக்குவித்தான். அவைகளில் ஒன்றில்தான் தன் உறவினர்கள், இராஜகுமாரர்கள் முதலியோருக்கு அளித்த பட்டங்கள், பதவிகள் முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

அரசவம்சத்தைச் சேர்ந்த ஒருவன் கன்னக்குச்சி காவலனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். இப்படி கன்னேசிக்கு காவலனாக நியமிக்கப்பட்டவனுக்கு 'சோழ கன்னக்குச்சியரசன்' என்ற பெயரும் இருந்து வந்திருக்கிறது.

மீண்டும் பல ஆதாரங்களை நாம் காட்ட முடியும். கன்னேசியை கஜினி முகம்மது கைப்பற்றியபோது முடியிழந்த மன்னன் இராஜ்ய பாலன் பிரதிஹாரப் வம்சத்தைச் சேர்ந்தவன். இந்த வம்சத்தைச்சேர்ந்த ஜகதீபாலன் என்பவன் தன் மனைவி, மகளுடன் சோழ நாட்டில் சிறைபட்டிருந்திருக்கிறான். இந்த ஜகதீபாலனின் மகளை இலங்கை அரசன் ஒருவனுக்கு மனைவியாக்கியிருக்கிறான் சோழமன்னன்.

ஜகதிபாலனை சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியான இலங்கைதீவின்வடபகுதிக்கு காவலனாகவும் நியமித்திருக்கிறான். வடபுலத்தை வெற்றிகொண்டு, முடியிழந்த மன்னனை தென் இலங்கை நாட்டுக்கு அரசப் பிரதிநிதியாக அனுப்பி நாடாண்ட சிறப்பை என்னென்று கூறுவது?

கன்னேசியில் பிரதிகராசத்தின்வீழ்ச்சிக்குப்பிறகு காகதவால வம்சத்தினர் குறுநில மன்னர்களாக இருந்திருக்கின்றனர். இம்மன்னர்கள் கூட சோழ மன்னர்களாலேயே சிங்காசன உரிமை பெற்றிருக்கிறார்கள். இவர்களும் சோழமன்னர்களின் தலைமையை ஒப்புக்கொண்ட சிற்பம கட்டும் குறுநில மன்னர்களாக இருந்திருக்கவேண்டும். கங்கைகொண்ட சோழ புரத்தில் கிடைத்திருக்கும் காகதவால சாசனம் இதனையே வலியுறுத்தும்.

இவைகளினால் எல்லாம் நாம் தெரிந்து கொள்வது என்ன? வட இந்தியா—ஏறக்குறைய இன்றைய இந்தியா (பாகிஸ்தான் நீங்கலாக)—ஒரு காலத்தில் சோழமன்னர்களின் வெண்கொற்றக் குடையின் கீழ் இருந்தது என்பதே. இதனை சரித்திர ஆஷாட பூதிகள் மூடிமறைக்கலாம். எவ்வளவு நாளைக்கு அவர்கள் உண்மையை மூடிமறைக்கமுடியும்? புதிய சகாப்தம் தோன்றிக்கொண்டிருப்பதை மறந்துவிட்டனர் போலும்!

★


மலர்

மகுடம்

முன் குறிப்பு :

நேரி காரல்லி எழுதிய "டேம்போரல் பவர்" என்னும் நாவலிலுள்ள ஒரு அரசனின் பாத்திர அமைப்பு என்னை மிகவும் கவர்ந்தது. அந்த பாத்திரத்தை மையமாக வைத்தே நான் இந்த நாடகத்தைப் பின்னியிருக்கிறேன்.

காலம் : வாளும் வேலும் படைக்கலனும் — பனை ஓலையே எழுத்துச் சாதனமாய் இருந்த பழைய காலமல்ல — பாளையக் காரர்கள் உலவிய இடைக்காலமுமல்ல; இடைக்காலம் நவீன காலத்துக்கு மாறிக் கொண்டிருக்கும் காலம் — அதையே பின்னணியாக வைத்திருக்கிறேன்.

இதோ—மணிமகுடபுரியின் நுழைவு வாயில்—நீங்கள் இனி தடையின்றி நுழையலாம்!



காட்சி 1.

[இரவு நேரம்—மணிமகுடபுரியின் மாட வீதியில் ஒரு தெரு விளக்குக் கம்பத்திலே சாய்ந்தபடி ஒரு மனிதன் நின்றுகொண் டிருக்கிறான்.....அப்போது கையிலே பத்திரிகைக் கட்டுகளுடனும் ஒரு ரோஜா மலருடனும் ஒரு குள்ளமான மனிதன் அங்கு ஓடிவருகிறான். வந்தவன், விளக் கடி மனிதனிடம் ஓடிவந்து,]

குள்ளன் : பொன்னழகன் மட்டும் தனியாக வந்து கொண்டிருக்கிறான்...நம்ப நாடகத்தை ஆரம்பிக்கலாமா ?

விளக்கடி மனிதன் : ஓ...ஆரம்பிக்கலாம்!... உலகப்பா !...ஜாக்ரதை !...நான் சொன்னதை யெல்லாம் மறந்துவிடாதே...!

குள் : அதெல்லாம், ஒத்திகைப்படியே சரியா செய்வேன்...

[என்று கூறிவிட்டு குள்ள மனிதன் பத்தி ரிகைக் கட்டுடன், வேறிடம் போய் ஒளிந்து கொள்கிறான். விளக்கடி மனிதன், தன் உடை களை சரிபார்த்துக் கொண்டு, நீண்ட மீசையை சரியாக முறுக்கி விட்டுக்கொண்டு, கன்னத் தின் மேற்புறத்தில் பெரியதும், கரியதுமாக வளர்ந்திருக்கும் மருவைக் கையால் தடவிய படியே ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். அப்போது குள்ள மனிதன், தான் குறிப்பிட்ட பொன்னழகன் என்னும் ஆள் அருகே வருவதைப் பார்த்துவிட்டு, விளக்கடி மனிதனிடம் வந்து,]

குள் : மக்கள் தொண்டன் பத்திரிகை வேணுமா; மக்கள் தொண்டன்! வில்லை இரண்டே பணம்தான் !.....மக்கள் தொண்டன் !.....வில்லை இரண்டே பணம்தான் !...மக்கள் தொண் டன் !...

[விளக்கடி மனிதன், கவனிக்காததுபோல் நிற்கிறான். அப்போது பொன்னழகன் என்பவ னும், அந்தப் பக்கம் வருகிறான். குள்ள மனி தன், விளக்கடி மனிதனிடம் வந்து நின்று, அவன் ஆகாயத்தைப் பார்த்து சிந்திப்பது போலவே, தானும் ஆகாயத்தைப் பார்த்து சிந் திப்பது போல நடித்து,]

குள் : ஏ, சந்திரனே! நீ ஒரு கற்கண்டுக் கட்டி! உன்னைச் சுற்றி இந்த நட்சத்திர எறும் புகள், மொய்த்திருக்கின்றனவே ஏன் ? ஆகா— இதோ, இந்த ஆகாயத்து வெள்ளை எறும்புகளை எண்ணப் போகிறேன் — ஒன்று! இரண்டு! மூன்று! நான்கு! ஐந்து! ஆறு!...

(விளக்கடி மனிதன், சிரித்தபடி குள்ளனின் முதுகில் தட்டிக் கொடுத்து,)

வி. மனிதன் : என்னப்பா! நட்சத்திரங்களை எண்ணுகிறாயா ?...ஆறு வரையில்தானே இது வரை எண்ணியிருக்கிறாய் ?...

குள் : ஆறு என்றால் ஆறு லட்சம் எண்ணி யிருக்கிறேன்.

வி. மனிதன் : சந்திரன்—ஒரு கற்கண்டு— நட்சத்திரங்கள் அதைச் சுற்றியுள்ள எறும்புகள்! சபாஷ்! நல்ல கற்பனை...

குள் : அதுவும் என் சொந்தக் கற்பனை—

வி. மனிதன் : மிகவும் சரி! ஆனால்—இந்தக் கற்கண்டை, இந்த எறும்புகள் தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருக்கின்றனவே; எறும்பு களின் குணம் அதுவல்லவே — கற்கண்டின் மேலேயே போய் மொய்த்துவிட வேண்டுமே!

குள் : அதென்னமோ எனக்குத் தெரியாது— பெரிய தத்துவ ஞானியும், மக்கள் தொண்டன் ஆசிரியருமான, ஸ்ரீஜத் அரிஹரநாதன் அவர்கள் எழுதியிருக்கிறார் — இதோ, பத்திரிகை! (நீட்டுகிறான்)

[விளக்கடி மனிதன் பத்திரிகையை வாங்கு கிறான்-இந்த உரையாடல்களை பொன்னழகன் என்னும், அந்த கட்டுமஸ்தான தேகமுள்ள மனிதன், தனது குறுந் தாடியைத் தடவியபடி ரசித்துக் கொண்டு ஒதுங்கி நிற்கிறான்]

வி. மனிதன் : (குள்ளனிடம்) அப்படியே! மக்கள் தொண்டன் ஆசிரியர், சந்திரனைக் கற் கண்டு என்றும் நட்சத்திரங்களை எறும்புகள் என்றும் கூறினார் அல்லவா? இப்போது நான் ஒன்று கூறுகிறேன் கேள்! சிலந்தி வலை பார்த் திருக்கிறாய் அல்லவா ?

குள் : அது என்ன அத்திப்பூவா ? ஆடிப் பிறையா ? பார்த்திருக்கிறேன்.

வி. மனிதன் : அந்த சிலந்தி வலையை ஞாப கம் வைத்துக் கொண்டு, இப்போது ஆகாயத் தைப் பார்! அழகான, குளிர் மயமான அந்தப் பூரண சந்திரன், ஒரு சிலந்தி போலவும்—அந்த ஒளிவிடும் நட்சத்திரங்கள், சிலந்தி வலையில் சிக்கி உயிர்விடும் பூச்சிகளைப் போலவும், காட்சி தருகின்றன அல்லவா ?

குள் : ஆமாம்—ஆமாம்!

வி. மனிதன் : இதைப் போலத்தானிருக் கிறது நம்முடைய நாடும்! அதாவது ஆட்சி பீடமானது...

குள் : சந்திரனைப் போலவும், ஐனங்கள் நட்சத்திரங்களைப் போலவும்...

வி. மனிதன் :...என்று மக்கள் தொண்டன் பத்திரிகை எழுதும்! நான் சொல்லுகிறேன்:

ஆட்சி பீடம் சிலந்தி போலவும், மக்கள், அதன் வலையில் சிக்கிவிட்ட பூச்சிகள் போலவும் என்று!

குள்: சரியான பேச்சு—ஒரு வேளை நீங்கள், அந்த மக்கள் மன்றத்து உறுப்பினரோ?

வி. மனிதன்: இல்லை—இது என் சொந்த அபிப்பிராயம்—உனக்கு மக்கள் மன்றத்தைப் பற்றித் தெரியுமா?

குள்: தெரியுமே—பொன்னழகன் என்பவர், பெரிய தலைவர்! நல்ல பேச்சாளி! தியாகி! அதேபோல அல்லி என்று ஒரு பெண்மணி—அவளும் நன்றாகப் பேசுவாள்! அவர்கள் நடத்துகிற சங்கம், ஆட்சி பீடத்தை மாற்றி, ஜனங்கள் நாட்டை ஆளவேண்டும் என்று பிரச்சாரம் செய்கிறது! நான்கூட நினைக்கிறேன் — இந்த அரசனைக் கொன்றுவிட்டால் நாடு உருப்பட்டுப் போய்விடும்!

வி. மனிதன்: அவசரப்படாதே! அரசன் என்ன செய்வான், பாபம்! அமைச்சரும், அரசகுருவும் ஆட்டிவைக்கிறபடி ஆடவேண்டிய பொம்மை அவன்! அதிகாரமனைத்தும் சீமான்கள் சபைக்கு இருக்கிறது! நீட்டிய இடத்தில் கை எழுத்துப் போட்டுவிட்டு — அரண்மனையிலே சுகவாசியாக வாழ வேண்டியதுதான் அரசனுக்குத் தரப்பட்டிருக்கும் உரிமை! ஆகவே, அரசனைக் குறைகூறிப் பயனில்லை! நாட்டை நாசமாக்கும் அழிவு சக்திகள் எங்கேயிருக்கின்றன என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும்! அந்த அழிவு சக்திக்கு ஆதரவு அளிக்கும் பிற்போக்கு சக்தி இதோ, உன் கையிலே இருக்கிறது!

(குள்ளன் தன் கையிலுள்ள ரோஜா மலரைப் பார்த்துக் கொள்கிறான்)

குள்: ரோஜாப்பூவா?

வி. மனிதன்: இல்லை! நீ விற்பனை செய்து பிழைக்கிறாயே; இந்த மக்கள் தொண்டன் பத்திரிகை! இது ஒரு பிற்போக்கு சக்தி! கண்ணை மூடிக் கொண்டு, ஆட்சி பீடத்தை ஆதரித்து, மக்களை சந்தியில் நிறுத்தும் இந்த ஏட்டுக்கு மக்கள் தொண்டன் என்று பெயர்! ஆட்சி பீடம், மக்கள் சுமக்கமுடியாத வரிகளைப் போட்டபோது, இது மக்கள் பக்கம் நிற்பதில்லை! அரசகுரு—ஆண்டவன் பெயராலும், மதத்தின் பெயராலும் மக்களிடம் உண்டுபண்ணும் சச்சரவுகளை இந்த மக்கள் தொண்டன் இதுவரை கண்டித்ததில்லை! அரசனை தெய்வ அவதாரம் என்று கூறிவிட்டு, அரசன் பெயரால் நடத்தப்படும் அக்கிரமங்கள் அத்தனைக்கும் இந்த ஏடு துதி பாடிக்கொண்டேயிருக்கிறது! முதலில் இந்த ஏடு, அழிக்கப்பட வேண்டும் தம்பீ— அழிக்கப்பட வேண்டும்!

குள்: நீங்கள் சொல்வது மிகவும் உண்மை! உங்கள் பேச்சைக் கேட்ட பிறகு, இந்தப் பத்திரிகையை விற்கவும் எனக்கு மனம் வரவில்லை! சே! இதை விற்று பிழைப்பது மானத்தை விற்று பிழைப்பது போல!—

(பத்திரிகைக் கட்டுகளைத் தூர எறிகிறான்)

[இந்த நிகழ்ச்சிகளையும் உரையாடல்களையும் தூர இருந்து, கவனித்த பொன்னழகன் இவர்களிடம் நெருங்கி வருகிறான்.]

வி மனிதன்: யார் நீங்கள்?

பொன்னழகன்: புதுமை நிறைந்ததும்-நாட்டுப் பற்று மிகுந்ததுமான உங்கள் உரையாடல்களை கேட்டுக் களிப்புற்ற ஒருவன்—நீங்கள் யார்?

வி. மனிதன்: நான் ஒரு நாடோடி!—

பொன்: பெயர்?

வி. மனிதன்: புதுமைப்பித்தன்—

பொன்: பொருத்தமான பெயர் - புதுமைப் பித்தரே!.....மணிமகுடபுரிதானே தங்களின் சொந்த நாடு!.....

புதுமைப்பித்தன்: ஆமாம்—தாங்கள்?

பொன்: பொன்னழகன் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா?.....

புதுமை: யார்? பொன்னழகன்—பொதுமக்கள் தலைவர் பொன்னழகன்—நீங்கள் தானே?

குள்: அடேடே—நீங்களா?—நான், பொதுக் கூட்டத்தில் பார்த்திருக்கிறேன் — அடையாளம் தெரியாமல் போய்விட்டது!...

புதுமை: கிடைத்தற்கரிய வாய்ப்பு! — உங்களைப் போன்ற உத்தமர்களை சந்திப்பதும் உரையாடுவதும் எத்துணை உற்சாக நிகழ்ச்சி தெரியுமா?...

பொன்: அதைப் போலவே நானும் மகிழ்கிறேன், ஒரு ராஜாங்க விரோதியை சந்திக்கிறோம் என்ற எண்ணத்தில்!

புதுமை: நாமெல்லாம் அரசாங்கத்திற்கு விரோதிகள் அல்லவே—மக்களுக்கு நண்பர்கள்; அவ்வளவுதான்!.....பொன்னழகரே! ஒரு வேண்டுகோள்! நிறைவேறுமா?..... தங்களோடு இணைந்து நின்று தாயகத்தின் மேன்மைக்குத் தொண்டாற்ற விரும்புகிறேன்...

பொன்: நிச்சயமாக நிறைவேறும், தங்கள் ஆசை! எங்கள் சங்கத்தில் அங்கத்தினராகவே ஆகும் தகுதியுடையவர் தாங்கள் என்பது என் நம்பிக்கை!

வாலிபன்: நானும் கூட சேரலாமா?.....

பொன்: எங்கள் கூட இருக்கலாம் — சில மாதங்களுக்குப் பிறகே, நீ அங்கத்தினராகலாம்— உன் பெயர்?.....

வாலிபன்: அதான் — பெரிய விசேஷம்!... நான் பிறந்தவுடனேயே எங்க அப்பா அம்மா செத்துவிட்டார்கள்! செத்தவர்கள் எனக்குப் பெயராவது வைத்துவிட்டுப் போகக் கூடாதா? —அதனால் பெயரில்லா மனிதன் நான்?—

பொன்: உனக்கு ரோஜா மலர்மீது பிரியமாக்கும்?

வாலிபன்: ஆமாம்!

பொன்: நீ ஆளோ கருப்பு! உனக்குப் பிரியமோ சிகப்பு ரோஜா மீது!—

வாலிபன்: என்ன பண்ணுவது, கருப்பு ரோஜா கிடையாதே!—

புதுமை: நீ தான் கருப்புரோஜாவாக இரேன்!—உனக்கு இனிமேல் பெயரே, கருப்பு ரோஜா—

பொன்: சரியான பெயர்— ம்—போகலாமா? — கருப்பு ரோஜா வா வா!.....

(கருப்பு ரோஜாவும், புதுமைப் பித்தனும் ஒருவரை யொருவர் பார்த்து, புன்னகை புரிந்து கொண்டு, பொன்னழகன் பின்னே நடக்கிறார்கள்)

* * *

காட்சி—2

[மக்கள் மன்றம்—அதே இரவு—அல்லியும் தொண்டர்களும் கவிஞரும் இருக்கிறார்கள்]

"பேரன்பு கொண்டவரே, பெரியோரே, என் பெற்ற தாய்மாரே, நல் இளஞ்சிங்கங்காள்!"

என்று தொடரும் பாரதிதாசன் பாட்டைப் பாடுகிறார்.

அல்லி: அருமையான கவிதை—கவிஞரே!... பாம்புக் கூட்டம் போராடும் பாழ் நிலத்தைப் புதுக்கியவர் யார்?—எழுச்சி நிறைந்த கேள்வி— இந்த கேள்வி மணிமகுடபுரியின் மக்கள் இதயத்திலே கிளம்புமானால்—"யார்"-யார்" என்ற கேள்விக் குறி — அங்கிங்கெனாதபடி எங்கும் தோன்றிவிடுமானால்—ஒரே நாளில் மணி மகுடம் -மக்கள் மகுடமாகி விடும்!

கவிஞர்: அல்லி! கவிஞனின் நெஞ்சிலே பிறந்த கவிதைக் குழந்தை உன்னைப் போன்ற வீரப் பெண்மணிகளால் தாலாட்டி வளர்க்கப் படவேண்டும்!

அல்லி: தாலாட்டுவதா? அய்யோ...எழுச்சி மயமான கவிதைக் குழந்தைகளை நான் தாலாட்டி தூங்கவைக்க மாட்டேன்—மக்கள் இதயமெனும் தாழ்வாரத்திலே தவழவிடுவேன்— வேல் கைக் கொடுத்து வென்று வா என அனுப்புவேன்—கவிஞரே— இப்படி உணர்ச்சிக் காவியங்களை, ஏழைகளை வாழ்விக்கும் உரிமைப் பாடல்களை, கோழையையும் கொள்கை வீரனாக்கும் கவிதை வரிகளை.....எழுதி எழுதிக் குவியுங்கள்!—குனிந்து கிடக்கும் விடுதலை உணர்ச்சி, கொடி யேந்திக் கிளம்பட்டும்!—கூனன் நிமிரட்டும்—குருடன் கண் பெறட்டும்-ஊமை பேசட்டும்—உரிமை வெல்லட்டும்!.....ஊரும், உலகமும் வாழட்டும்!.....

(அப்போது பொன்னழகன் — புதுமைப் பித்தன் கருப்பு ரோஜா மூவரும் வருகிறார்கள்)

பொன்: அல்லி!—இவரைத் தெரியுமா உனக்கு! இவர் பெயர் புதுமைப் பித்தன்?

அல்லி: வணக்கம்—

புது: வணக்கம்—

பொன்: தற்செயலாக சந்தித்தேன்—ஆனால் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாயிற்று! இவர்— புரட்சிக் கருத்துக்கள் கொண்டவர்—ஆட்சி பீடம், மக்கள் கைக்கு மாற வேண்டுமென்பதிலே என் கொள்கையும், மக்கள் மனவளம் பெற வேண்டும்; அப்போதுதான் அவர்கள் ஆட்சிபுரியத் தகுதியாவார்கள் என்பதிலே உன் கொள்கையும் கொண்டவர்—

அல்லி: சுருக்கமாகச் சொல்லுங்களேன்— மொத்தமாக என் கொள்கை கொண்டவர்—

கறுப்பு ரோஜா: மன்னிக்க வேண்டும்—தலைவர் என்னை அறிமுகப்படுத்தத் தவறிவிட்டார்— இல்லை; மறந்து விட்டார்—நான் தான் கறுப்பு ரோஜா! கிட்ட தட்ட உங்கள் கொள்கையுடையவன்—என்னையும் இங்கே அங்கத்தினராக.....

பொன்: நான் தான் முன்பே சொன்னேனே; நீ அங்கத்தினராக—இன்னும் ஆறுமாதம் செல்லும்—அது வரை நீ வேண்டுமானால் இங்கே இருக்கலாம்—அல்லி! புதுமைப் பித்தரை நமது மன்றத்தின் அங்கத்தினராக ஆக்குவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையுமில்லை.....

அல்லி: பிறகென்ன? மன்றத்தின் சட்ட திட்டங்களைக் கூறிவிட்டீர்கள் அல்லவா?.....

புது: எல்லாம் முடிந்து விட்டது-கையெழுத்துப் போட வேண்டியதுதான் பாக்கி—

(அல்லி, ஒரு புத்தகத்தை எடுத்து வந்து அதில் கையெழுத்துப் போட நீட்டுகிறாள். புதுமைப் பித்தன், பேனாவைக் கையில் வாங்குகிறான்...)

அல்லி: தயவு செய்து உறுதி மொழி எடுத்துக்கொண்டு.....

புது : என்ன உறுதி மொழி?.....

அல்லி : இதோ சொல்லுகிறேன் — திருப்பி சொல்லுங்கள்—

புது : ஆகட்டும்—

அல்லி : மணி மகுடபுரியின் மக்கள் நலத் திற்காகவும், அவர்கள் விடுதலைக்காகவும் பாடு படுவேன்.

புது : மணிமகுடபுரியின் மக்கள் நலத்திற்கா கவும், அவர்கள் விடுதலைக்காகவும் பாடுபடு வேன்.

அல்லி : மக்களுக்காக செய்யவேண்டிய எந்தப் பணிகளையும், மக்கள் மன்றத்தின் கட் டளைப்படி செய்வேன்.

புது : மக்களுக்காக செய்யவேண்டிய எந்தப் பணிகளையும், மக்கள் மன்றத்தின் கட்டளைப்படி செய்வேன்.

அல்லி : நாட்டு விடுதலைக்காக, உயிரைத் தர வும் தயங்கமாட்டேன்.

புது : நாட்டு விடுதலைக்காக, உயிரைத் தரவும் தயங்கமாட்டேன்.

அல்லி : உம்—கையெழுத்துப் போடுங்கள்.

புது : உம்—கையெழுத்துப் போடுங்கள்—

அல்லி : (சிரித்தபடி) இல்லை—கையெழுத்துப் போடுங்கள், என்கிறேன்.

புது : மன்னிக்கவும். (என்று கூறியபடி கையெழுத்திடுகிறான்).

* * *

காட்சி 3.

[அமைச்சர்வீடு. அவரதுமகள் கலாராணி யின் அறை. கலாராணி, தூங்கிக் கொண்டி ருக்கிறாள். கதிரவனின் ஒளி, பலகணி வழி யே அவள் படுக்கையில் பாய்கிறது. அவ ளது தோழி வஞ்சி, காலை உணவுகளை எடுத்துக் கொண்டு, அறைக்குள் பிரவேசிக் கிறாள். கலாராணி, தூங்கிக் கொண்டிருப் பதைப் பார்த்து...]

வஞ்சி : கலாராணி—கலாராணி! சரிதான்— சந்திரனை அணைத்துக் கொண்டு தூங்கிய உனக் குக் கதிரவனின் கரம் பட்டும் எழுந்திருக்கமனம் வரவில்லை போலும்!...

கலாராணி : (சோம்பல் முறித்து எழுந்தபடி) என்னடி இது? சந்திரனை அணைப்பதாவது; கதிரவனின் கரம் படுவதாவது?...

வ : நிலவு எழுந்ததும் படுத்து விட்டாய்— சூரியன் கிளம்பியும் விழிக்கவில்லை! அதைத் தான் கவிதை நடையில் சொன்னேன்.

கலா : கவிதை நடையில் சொன்னயாக்கும்— சந்திரனை அணைப்பது—கதிரவன் கரம் படுவது— நான் என்ன தாரையா?...அல்லது தாமரையா?... நல்லவேளை, இரண்டு பேரோடு விட்டாயே; இன்னும் மூன்று பேரைச் சொல்லாமல்! இதோ பார்; வஞ்சி!...இனிமேல் இம்மாதிரி கண்ணை மூடிக்கொண்டு கவிதை நடையில் உளறுதே!

வ : கண்ணை மூடிக்கொண்டு நான் ஏன் உளறுகிறேன்? அப்படிக் கனவிலே உளறுவது, இந்தக் கலாராணிதான்!

கலா : கனவிலே உளறினேனா? என்னடி உளறினேன்?...

வ : அய்யோ—அதைச் சொல்ல எனக்கே வெட்கமாயிருக்கிறது!...

(வஞ்சி, கலாராணியைக் கிண்டல் செய்யும் பாவனையில்...)

கண்ணாளா! உங்கள் இன்பமுகம் மறந்து போச்சே!...இத்தனை நாள் என்னை ஏன் பிரிந்து சென்றீர்கள்?...ஆகா!...என்மீது உங்கள் கரம் படுவது; அய்யோ—என்னை மெய்மறக்கச் செய்கிறதே! வான விளக்கு எரியும்போது, வீட்டு விளக்கு எதற்காக? நிறுத்திவிடட்டுமா? அன்பரே! சுவாமி! பிராணநாதா!...ஆருயிரே! என்னை மறக்கமாட்டீர்களே? இந்த ஜென்மத் தில் மட்டுமல்ல; எல்லா ஜென்மங்களிலும் நாம் சேர்ந்தே பிறப்போம் .....இரட்டைக் குழந்தைகளாக!...

கலா : சீ!...இப்படியெல்லாம் உளறியிருக்க மாட்டேன்—நிகற்பனை செய்கிறாய்; குறும்புக் காரி!...

வ : சரி, போகட்டும்!...ஆமாம்—கலாராணி!... கொஞ்ச நாளாகவே ஏதோ சிந்தனையில் இருக் கிறாயே; என்ன அது?...

கலா : ஒன்றுமில்லையடி!...உன்னிடம் சொல் லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன்... பிறகு சொல்லுகிறேன்.


வ : "கா"வன்ன விஷயம்தானே, கலாராணி!

கலா : போடி!..... (கலைந்து கிடக்கும் கூந்தலை சீவிக் கொள்ளுகிறாள்)

வ : சரி!...முதலில் சாப்பிடு.

கலா : அதுசரி; பல்கூட துலக்க வேண் டாம் போலிருக்கிறதே!

வ : முத்துக்களை துலக்குவானேன்? முல்லை அரும்புகள் என்பார்களே பற்களை; துலக்கி னால் கசங்கிவிடுமே—



சீனத்தில் குரலெழுப்பிய சன்யாட்சென்—இன்று மோனத்தில் ஆழ்ந்திருக்கும் வீடு!

கலா: ஏ, கவிதைப் பைத்யம்—இரு, இரு—வருகிறேன்!

(கலாராணி, பல் துலக்க அறையைவிட்டு வெளியேறுகிறாள். அமைச்சர் குணசீலர் அறைக்குள் வருகிறார். அவர் வஞ்சியிடம்)

குணசீலர்: என்ன வஞ்சி — கலாராணி எங்கே?...

வ: இப்போதுதான் உதயமானாள் — காலைக் கடன் என்னும் மேகத்தில் மறைந்திருக்கிறாள்—வந்துவிடுவாள்!...

குண: இரவு அதிக நேரம் விழித்துக்கொண்டிருந்தாளா? எங்கே போனீர்கள்? அரண்மனைக்கா? அரண்மனையில், அரசரை சந்தித்தீர்களா? அரசரோடு கலா பேசினாளா? பேசும்போது நீயும் கூட இருந்தாயா? என்ன பேசினார்கள்? திருமண விஷயமாக ஏதாவது அரசர் வாய்திறந்தாரா? கலாராணி அதற்கு சம்மதம் தெரிவித்தாளா? சம்மதத்தைக் கேட்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தாரா? அரசரும் கலாவும் எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்?...

வ: உங்களது ஆயிரம் கேள்விகளுக்கு அடியாள் சொல்லும் ஒரே பதில் என்னவென்றால், கலாராணி அரண்மனைக்குப் போகவுமில்லை—அரசரைப் பார்க்கவுமில்லை—

குண: என்ன? போகவில்லையா?—வஞ்சி—உன்னிடம் எத்தனை தடவை சொல்லிவிட்டேன்—அரசரையும், கலாராணியையும் சந்திக்க வைத்து, இருவரிடையே காதலை உண்டுபண்ண வேண்டியது உன் கடமை என்று எத்தனை தடவை சொல்லி விட்டேன்—

வ: பிடிவாதத்திற்கு மருந்து ஏது பிரபு? நான் எவ்வளவுதான் சொன்னாலும், அவள் அரசரை சந்திக்க விரும்புவதேயில்லை—

குண: வஞ்சி—அரசர்மீது அவளுக்கு எப்படியும் காதல் ஏற்பட வேண்டும்—

வ: என்ன செய்வது? தங்களுக்கு அரசர்மீது ஏற்படும் காதல் கூட அவளுக்கு ஏற்படவில்லை.

குண: எனக்கு அரசர் மீது அல்ல காதல் — மணிமகுடபுரியின் சிம்மாசனத்தின் மீது! அரசர்—கலாராணி திருமணம் நடந்து விட்டால்—என்னுடையமருமகன் மணி மகுடத்தை ஆளுகிறான் என்பேன் — பிறகு — என்னுடைய பேரன் ஆளுகிறான் என்பேன்!... மணிமகுடபுரி கொலுமண்டபத்தின் மீது இந்தக் குணசீலரின் குலக் கொடியல்லவா படரும்—

வ: கவலைப்படாதீர்கள் பிரபு!—அரசனுக்கு நான் எப்படியும் வலை வீசுகிறேன்—

குண: என்ன, நீயா?...

வ: ஆமாம்—கலாராணி என்ற வலையை வீசுகிறேன்—

குண: சபாஷ் வஞ்சி—அந்த வேலையை உன்னிடம் ஒப்புவித்து விட்டேன்—வெற்றிகரமாகச் செய்!—அரசருக்கும் கலாராணிக்கும் விரைவில் விவாகம் நடைபெற வேண்டும்—

வ: அதற்கு நான் பொறுப்பு—

குண: பேரன் பிறக்க வேண்டும்—

வ: அதற்கு நான் பொறுப்பல்ல — பேத்தி கூட பிறக்கலாம்—

[அமைச்சர் அறையை விட்டு சிரித்தபடி போகிறார்.]

(திரை)

* * *

காட்சி—4

[சீமான்கள் சபை கூடுகிறது. சீமான்களும், அமைச்சர் குணசீலரும், இருக்கிறார்கள். தனி அழைப்பின் பேரில் குருநாதரும், 'மக்கள் தொண்டன்' ஆசிரியர் அரிஹர நாதரும் அமர்ந்திருக்கிறார்கள்]

சபையை விட்டு சிறிது தூரத்தில் பொது மக்கள் அமர்ந்திருக்கிறார்கள். அங்கே-பொன்

னழகன், புதுமைப்பித்தன், அல்லி முதலி யோர் இருக்கிறார்கள்.

குணசீலர்: பெருமைக்குரிய சீமான்களே!... மணிமகுடபுரியின் பிரதிநிதித்வம் வாய்ந்த இந்த சபை, இன்றையதினம் செய்யவேண்டிய தீர்மானங்களிலே மிக முக்கியமானது-தேவாலயம் ஒன்று நிர்மாணிப்பதைப் பொறுத்தவிஷயமாகும். மணிமகுடபுரியிலே, உலகம் கண்டு வியக்கக் கூடிய அளவுக்கு ஒரு அதிசயம் இருப்பது நமக் கெல்லாம் பெருமையாகும். அத்தகைய சிரஞ் சீவித் தன்மை வாய்ந்த அதிசயம், நாம் புதிதாகக் கட்ட இருக்கிற தேவாலயமாயிருக்கட்டும். நாம் நினைக்கிற அளவுக்கு பிர்மாண்டமான முறை யிலே ஆலயம் கட்ட, தலைநகரிலே இடவசதி இல்லை. அதைப்பொறுத்து—தலைநகரின் ஒரு பகு தியான கொடிக்கால் நகரை காலிசெய்துவிட்டு, அங்கே கோயிலைக்கட்டலாம் என்று ஒரு யோச னையும் இருக்கிறது. இந்த யோசனை ஏழை பங் காளரான நமது குருநாதரின் யோசனையாகும்-கொடிக்கால் நகரில் கோயில் எழுப்புவது சம்பந் தமாக அனைவரும் தங்கள் யோசனைகளைக்கூறி-தெய்வீகம் பொருந்திய இந்தத் தீர்மானத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டுகிறேன். இது பற்றி நல்ல யோசனைகள் கூறுவதற்கு பொது மக்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

(அமைச்சர் அமருகிறார்)

1. சீமான்: ஆண்டவனுக்கு ஆலயம் கட்ட யார் ஆக்ஷேபிக்கப் போகிறார்கள்—தாராளமாகச் செய்யலாம்—

2. சீமான்: யாரையும் யோசனை கேட்கத் தேவையில்லை-குருநாதர் இஷ்டம் போல், எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் கோயில் அமைக்கலாம்.

3. சீமான்: ஆலயம் தொழுவது சாலவும் நன்று! — கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்—

குண: மகேசன் காரியத்திற்கு மறுப்பே இருக்காது என எண்ணு றேன்...மிகவும் மகிழ்ச்சி—

(பொன்னழகன் எழுகிறான்)

பொன்: கொடிக்கால் நகரத்தில் கோயில் கட்டுவதை நான் எதிர்க்கி றேன்.

குண: என்?.....


பொன்: கொடிக்கால் நகரம்—

ஏழைகள் பகுதி—ஆயிரம் குடிசை கள் அழிக்கப்பட்டு, அங்கே ஆலயம் கட்டுவது அனுமதிக்க முடியாத செயல்! வெற்றிலை பயிரிட்டு வயிறு வளர்க்கும் ஏழைகள் எங்கே போவார்கள்? ஆயிரம் குடும்பங்களின் கதி என்ன? அந்தக் குடி சைகளுக்கு உயிரூட்டும் கொடிக்கால்கள் அழிக் கப்பட்டால் குமுறியெழும் வறுமைத் தியை அணைப்பதற்கு யாராலும் இயலாது —குழந்தை குட்டிகளோடு ஏழைகள் தவிக்க — கொட்டு மேளத்தோடு தேவாலயத்துக் கும்பாபிஷேகம் நடைபெறுவதை மனித இருதயம் படைத்த யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். தேவனுக்கு ஒரு ஆலயம் தேவையானால், வேறிடத்தைத் தேர்ந்தெடுங்கள். குடிசை வாழ்வோரின் வயிற்றிலே மண்ணைப் போடாதீர்கள்—

குண: இவ்வளவு பெரிய நாட்டிலே அந்த ஆயிரம் குடிசைக்காரர்களும் வசிப்பதற்கா இட மில்லை?

பொன்: அதே கேள்வியைத் திருப்பிக் கேட் டால்? இவ்வளவு பெரிய தேசத்திலே—தேவ னுக்கு ஆலயம் அமைக்கவா வேறு இடமில்லை? என்ன பதில் சபையோர்களே; இதற்கு என்ன பதில்? ஏன்—அந்த ஏழைப் பூச்சிகள் மீது உங் களுக்கு என்ன கோபம்? பருவத்தால் கெட் டாலும், செழிப்பின்றி செத்தாலும், கொடிக் கால் வரி கொடுத்துத்தான் தீர வேண்டுமென்று கட்டாயப்படுத்திப் பெற்றுக் கொள்கிறீர்கள். வியர்வை கொட்டிப் பயிரிடும் வெற்றிலைக்கு முக்கால் பங்கு வரி செலுத்தி, கால் பங்கு வரு மானத்திலே காலத்தை ஓட்டுகிறார்கள், அந்தக் கதியற்றவர்கள் — திடீரென்று திசைமாறி ஓட வேண்டும்; அங்கே தேவாலயம் கட்டப்போகி றோம் என்று திடீர் உத்தரவு போடுவது இரக்க மற்ற செய்கை — ஆயிரம் குடும்பங்களை ஏக காலத்தில் சாக அடிக்கும் கொலை வெறிக் கொள்கை! தயவு செய்து கொடிக்காலை ஒழித்து கோயில் கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டுகிறேன்—

ஆண்டு வந்த மஞ்சுக்களால் சீனத்தில்
நீண்டு விட்ட பெரும் சுவரே!



குண : இதற்கு குருநாதர் அவர்களே பதில் சொல்வார்—

(குருநாதர் எழுகிறார்)

குரு : கொடிக்காலே அழிப்பது கூடாது என்று ஒரு குரல் கேட்கிறது!—கேலிக்குரிய குரல்! கோயில் தேவையில்லே என்று கூறுவதற்கு பயந்து கொண்டு, கொடிக்கால் நகரத்து மக்களே கேடயமாக்கிக் கொண்டு அலறிய கேலிக் குரிய குரல்! இது போன்ற நாத்திகக் கொள்கை பரவி விட்டது என்பதற்காகத்தான் ஆலயம் அவசரமாகத் தேவைப்படுகிறது என்கிறேன் நான்! ஆயிரம் குடிசைகள் அழிந்து விடுமாம்—ஒரு ஆத்மா அங்கலாய்க்கிறது அதற்காக! அழியட்டுமே! ஒரு ஆலாயம் கட்டுவதால் ஆயிரம் குடிசைகள் அழியலாம்—அதே நேரத்தில் மணிமகுட புரியின் லட்சோப லட்சம் மக்களுக்கு மோட்சப் பாதை திறக்கப்படுகிறது என்பதை மறந்துவிடலாமா? பலர் வாழ சிலர் தங்கள் வாழ்வை தியாகம் செய்யத்தான் வேண்டும்! — தேவாலயம், கொடிக்கால் நகரில் அமைந்தே தீர வேண்டும்!

புது: மறுக்கிறேன்-மறுக்கிறேன்!

குண : என்ன?—கொடிக்கால் நகரில் தேவாயம் அமையக்கூடாது என்று?

புது : இல்லே—தேவாலயமே தேவையில்லே என்கிறேன் நான்!.....

குரு : ஆ!—பச்சை நாத்திகம் படமெடுத் தாடுகிறது!...அவனைவிட இவன் மோசம்! அவனுவது இடத்தை மறுத்தான் — இவன் இறைவனையே மறுக்கிறான்!...

புது : குருநாதரே! "இறைவன் மறுப்பு"— "நாத்திகம்"—என்கின்ற சில சொற்களே வைத்துக்கொண்டு, அறிவியக்க வாதிகளே வேட்டையாடாதீர்! கோயில் தேவையில்லே யென்பது நாஸ்திகம் என்று யார் சொன்னது? கூறும் கேட்போம் — மணி மகுடபுரியின் கோயில் எண்ணிக்கை எவ்வளவு? புள்ளி விபரத்தோடு கூறட்டுமா? தலே நகரத்திலே மட்டும்—ஐநூறு ஆலயங்கள்! தேசம் முழுவதும் ஆறுயிரம் ஆலயங்கள்! இந்த ஆறுயிரம் ஆலயங்களுக்கும் செலவிடப்படும் மொத்தத் தொகை அறுபது கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு! அந்த ஆலயங்களிலே—நிலமாக, அணிமணிகளாக, வைரக் கிரீடங்களாக முடங்கிக் கிடக்கும் பணம் எவ்வளவு—முன்னூறு கோடி ரூபாய் குருநாதரே; முன்னூறு கோடி ரூபாய்! பாலின்றித் தவிக்கும் பாலகர்க்குப் பலனில்லாமல்—வேலியின்றி வாடும் வாலிபர்க்கும் பலனில்லாமல்—எலும்பாய்த் தேய்ந்து, எறும்பாய் உழைத்து, இரும்பால் உள்ளங் கொண்ட சீமான்களிடம் சித்ரவதைப்படும் ஜீவன்களுக்கு உபயோகமில்லாமல்—தேர்களாய், தேவாலயக் கோபுரங்களாய், வெள்ளிக் கலசங்களாய், மேடிட்டுக் கிடக்கும் முன்னூறு கோடி ரூபாய்! —மணி மகுடபுரியின் பொக்கிஷத்திலும் இல்லாத பணம்! இது போதாதென்று, இன்னும் ஒரு கோயிலா?—யார் கேட்டது?—யாருக்குத் தேவை புதிய கோயில்?

குரு : ஆண்டவனே கேட்டார்!—

புது : ஆறுயிரம் கோயில் போதாதென்று?—

குரு : ஆமாம்—

புது : ஆயிரம் வீடுகளே அழித்துவிட்டு, தனக்கு ஒரு கோயில் கேட்டாரா?

குரு : ஆமாம்—

புது : அப்படிக் கேட்டவர் ஆண்டவனுயிருக்கமாட்டார்! — ஆண்டவனுக்கு சொல்லப்படும் லக்ஷணப்படி அவருக்குத் தேவையானது ஆலயமல்ல! நல்லவர்களின் இருதயமே அவருக்கு ஆலயம்! அவருக்கு வீடு! அவருக்கு மாளிகை! ஆண்டவன் என்னமோ மணி மகுடபுரி முழுவதும் தேடிப் பார்த்து வாடகைக்குக்கூட ஒரு வீடு கிடைக்காமல்—குடும்பத்தோடு அலேவது போலவும்—அதற்காகக் கவலேப்பட்டு, அவசரமாக வீடு கட்ட குருநாதர் முன் வந்தது போலவும் இந்த சீமான் சபை கருதுவது—சிரிப்புக்குத் தான் இடமாகும்!—தயவுசெய்து இந்த எண்ணத்தை விட்டுவிட வேண்டுகிறேன்—

சீமான்-1 : அவமதிப்பு! அவமானம்! குருநாதரைக் கேலி பேசுகிறான் — உடனே வெளியேற்றுங்கள் அவனே!—

குண : பொது மக்கள் அபிப்பிராயம் வழங்குவது நிறுத்தப்பட்டது!—இனி தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கப்படும் — இந்த சபையிலே சீமான்களேத் தவிர வேறு யாருக்கும் வாக்குரிமை இல்லேயாததால்—அனேவரும் அமைதியாயிருக்க வேண்டும்—

புது : அமைச்சர் அவர்களே! கொஞ்சம் யோசியுங்கள்!...ஆயிரம் வீட்டுக்காரர்கள் நாதியற்றுப் போய்விடுவார்கள்! — ஆண்டவனே விரும்பாத செயல் இது!—அன்பைக் கொன்று புதைத்து, அங்கே எழுப்பும் ஆலயத்திலே 'அன்பே கடவுள்' என்று எழுதாதீர்கள்!—எங்கள் வேண்டுகோளே—ஏழைகளின் குரலே மதிக்காமல் தீர்மானம் நிறைவேறுமானால்...

குண : புரட்சி நடக்குமோ?—

புது : நடக்காது!—ஆனால், புகையும் எரிமலே என்று பொங்குமோ அதுவும் தெரியாது!—ஆயிரம் குடிசைகள் நிர்மூலமாக்கப்பட்டு,

அங்கே ஆண்டவன் எழுந்தருளுவானேயானால்—அதற்குப் பெயர் ஆலயமென்று கூறுவார்கள், அறிவுடையோர்? ஆண்டவனுக்கு அர்ச்சிக்கப் படும் மலர்களிலே ஆயிரம் வீட்டுக்காரர் சிந்திய ரத்தக்கரை படிந்திருக்கும்! — அவனுக்குக் காட்டப்படும் தூப தீபங்களிலே தாய்மார்களின் தூயர முகந்தான் தெரியும்—தூயஜோதி தெரியாது!—பச்சரிசிப் பொங்கலும், பாயசமும் படைப்பீர்களே ஆண்டவனுக்கு — அந்தப் பொங்கல்— பச்சை சிசுக்களின் உடலைப் பொடியாக்கி செய்யப்பட்ட நைவேத்யமாகத் தானிருக்கும்! — ஆலயத்து மணியிலே தெய்வீக ஒளி கிளம்பாது அமைச்சரே; அனுதையாக விரட்டப்பட்ட ஆயிரம் குடிசைகளின் சோகத் தொனிதான் கிளம்பும்!—பக்தி ரசக் கீர்த்தனை கேட்காது பகவான் சன்னிதானத்திலே! வாழ் விழந்த பாட்டாளிகளின் ஒப்பாரி கேட்கும்! புலம்பல் கேட்கும்! அழுகுரல் கேட்கும்! தேவாலயம், தேம்பி அழுவோர் பெருகிவிட்ட பிணக்காடாகும்—சுடுகாடாக மாறும்—மயான பூமியாகத் திகழும்! வேண்டாம்—ஆண்டவன் கோயிலில் அழுக்கும், இழுக்கும் வேண்டாம்—ஆண்டவன் பெயரால் ஆண்டவனுக்கு களங்கம் தேடாதீர்கள்!—

குண: நிறுத்து! இனியும் பேசினால்—நிதான மிழப்போம்—கைது செய்யவேண்டிய நிலை பிறக்கும். தீர்மானம் நிறைவேறப் போகிறது. அமைதியாக இருக்க முடியுமானால், உள்ளே அனுமதிக்கிறேன். இல்லையானால்.....

புது: நாங்கள் வெளியேறுகிறோம்! அமைச் சருக்கு சிரமம்—வேண்டாம்! ஆண்டவனே! நீ இருந்தால் கேள் இந்த அக்கிரமக்காரர்களை அய்யோ—ஆயிரம் வீடுகளை எரித்துவிட்டு, அங்கே நீ இருந்து சிரிக்கப் போகிறாயோ—அடுக்குமா, உனக்கு இந்த அநியாயச் செயல்? சிரி! நன்றாகச் சிரி! ஏழைகளின் கண்ணீரில் நீந்திக் கொண்டே சிரி! ஏழைகள் சமுதாயமே—நீ அழு! ஆண்டவன் சிரிக்கப் போகிறான்—அந்த ரத்தினிலே, இருக்க இடமின்றித் தொங்கும் அவனுக்கு அரசாங்கத்தார் ஆடம்பரமான ஆலயம் அமைக்கப் போகிறார்கள்!—ஆகவே, எதிர்க்க முடியாத ஏழையே! ஏமாற்றப்பட்ட தோழனே! நீ அழு! அழு! இளி! அஞ்சு! குனி! பிதற்று!—புலம்பு! ஒப்பாரிவை! கண்ணீர் உனக்கு மட்டும்தான் சொந்தம்—அதை யாரும் அபகரிக்க முடியாது! ஆகவே அழு நண்பா; அழு! உனக்கு விடுதலையே கிடையாது; இந்த சீமான்கள் இருக்கும்வரை!—இந்த குருநாதர்கள் இருக்கும்வரை! உனக்கு விடுதலையே கிடையாது—விடுதலையே கிடையாது!—

(புதுமைப்பித்தன் வெளியேறுகிறான்)


குண: பொதுமக்கள் அனைவருமே வெளியேற வேண்டும்—உம், உடனே!

(அனைவரும், பொன்னழகன், அல்லி உட்பட வெளியேற்றப் படுகிறார்கள்)

குண: (பத்திரிகை ஆசிரியரைப் பார்த்து) மக்கள் தொண்டன் பத்திரிகை ஆசியர் ஸ்ரீஜத் அரிஹர நாதரைக் கேட்டுக் கொள்கிறேன்... இங்கு நடந்த சம்பவங்கள் எதுவும்.....

அரிஹர நாதர்: (குழைவோடு)...நிச்சயமாக பத்திரிகையில் வெளியிடமாட்டேன் என்று

ஆபத்பாந்தவன்!



இந்த சீமான்கள் சபையில் உறுதிகூறுகிறேன்—யாரும் கவலைப்படத் தேவையில்லை!—ஹி...ஹி ஹி ... (பல் இளித்தல்)

குரு : ம்... நிர்மானம் நிறைவேறட்டும்!

காட்சி 5-

[மக்கள் மன்றம்-புதுமைப்பித்தன், பொன்னழகன், அல்லி, கவிஞர், மற்றும் தொண்டர்கள், கரும்புரோஜா! அல்லி பேசிக்கொண்டிருக்கிறாள்]

அல்லி : நீர்மானத்திலே அரசன் கையெழுத்திட்டு விட்டால், கொடிக்கால் நகரத்து மக்கள் இருக்க இடமின்றித் தவிக்கப் போகும் தாங்கொணாத வேதனைக் காட்சிகளைத்தான் நாம் காணவேண்டும் கொடிக்காலை அழித்துக் கோயில் கட்டுவதும், குடிசை வாழ் தோழர்களின் குரல் வளையை நெறிப்பதும் ஒன்றுதான்-என்பதை கோலோச்சும் குணாளர்கள் இப்போதும் மறுப்பார்கள்; இனி எப்போதும் மறுப்பார்கள். அந்தக் கோணங்கிகள் வழிக்கு வர, நமது கண்டனக் கொடி நாடெங்கும் பறக்க வேண்டும்.

பொன்ன : கொடி பறந்து பயனில்லை—கண்டன முழக்கம் கடல்அலைபோல் கொந்தளித்தும் பயனில்லை—நான் சொல்லுகிறேன்; வேந்தனுக்கு இப்போது ஓலை அனுப்பவேண்டும். "கொடிக்கால் நகரை அழிக்கும் நீர்மானத்தில் நீர் கையெழுத்திடலாகாது! மீறி கையொப்பமிடு வீரேயானால்; உமது உயிருக்கே ஆபத்து நேரிடும்!" என்பது போல் எச்சரிக்க வேண்டும்!...

புதுமை : நண்பர் தருவது பலாத்கார மார்க்கம். அமைதியான முறையிலே காரியம் சாதிப்பதையே நான் விரும்புகிறேன்.

பொன் : மயிலைப் போய் இறகு கேட்பது—மதயானையிடம் இதோபதேசம் செய்வது—மலைப் பாம்புக்கு மகுடி ஊதுவது—இம்மாதிரி அமைதி, இப்போது தேவையில்லை.....

புதுமை : மயிலிடம் இறகுப் பிச்சை—மதயானையிடம் உபதேசம்—மலைப்பாம்பிடம் மகுடி—இவைகளை எல்லாம் நான் அமைதி என்று கூறவில்லையே—அறிவீனமான செய்கைகளுக்குத்தான் இவைகள் எடுத்துக் காட்டுகள். நான் கூறும் அமைதி அரசியல் நாகரீகத்தைப் பொறுத்தது! அரசியலிலே தலைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கண்யத்தைப் பொறுத்தது! தங்கள் முடிவுப்படி அரசனின் உயிருக்கு நீங்கு மூட்டி விட்டால், அரசன் கொல்லப்பட்டு விட்டால், நமது எண்ணங்கள் சுலபமாக ஏற்றம் பெற்று விடுமா? அப்போதுதான் நம் மார்க்கத்திலே, மலைக்கத்தக்கத் தடை எற்படும்.

'கொள்கைக்கு விரோதமானவர்களை யெல்லாம் கொன்றுவிடும் கோஷ்டியினர்' என்ற பழிச் சொல், நமது தூய்மை சேர் நற்கொள்கைகளை நாட்டிலே பரவ விடாமல் தடுத்துவிடும். நான் கேட்கிறேன்—கொல்லப்பட வேண்டியது அரசனை?...

க. ரோஜா : இல்லை—அந்த குருநாதர்!...

புதுமை : அவருமல்ல; ஆசிரியர் அரிஹரநாதருமல்ல! அமைச்சர் குணசீலருமல்ல!... கொல்லப்பட வேண்டியவை குருட்டு எண்ணங்கள்!... இருட்டு நினைவுகள்! புலியைக் கொல்லாவிட்டால், அதன் பாய்ச்சலைத் தடுக்க முடியுமா? பாம்பை அடிக்கா விட்டால், அதன் விஷப்பல்லிலேயிருந்து தப்ப முடியுமா?—என்று கேட்பீர்கள்!... புலியும் பாம்பும் வாழும் காட்டை, நாட்டுக்கு நடுவிலே வைத்துக் கொண்டு, புலி—புலி என்று கிலி கொள்வதில் என்ன லாபம்?... அதனால், முதலில் அழிக்கப்பட வேண்டியது காடு! இருட்டு உள்ளம்! குருட்டு எண்ணம்! அவை அழிக்கப் பட்டால்-காடு நாடானால்—கவலை தொலையும்—புதர் ஒழிந்தால், புலியும் பாம்பும் ஒழியும்!... அந்த நிரந்தரமான நிம்மதிக்குப் போராடவேண்டுமென்பதுதான் என் கொள்கை!...

அல்லி : ஆமாம்-அவர் கூறுவது உண்மை!... ஒரு அரசனைக் கொன்று விட்டால் நாளை இன்னொரு அரசன் வரப் போகிறான்—அவனையும் கொன்று விட்டால், மறுநாள், மற்றொருவன் வரப் போகிறான். இப்படி நாம் கொலை செய்வதும், புதிய அரசர்கள் வருவதுமாக இருந்தால், கொலைவாளைக் கீழே வைக்க நமக்கும் நேரமிருக்காது: கொலுமண்டபமும் அரசனில்லாமல் காலியாக இருக்காது!

பொன் : அப்படியானால் மகுடமே ஆளட்டும்: மக்களாட்சி தேவையில்லை என்கிறீர்களா?

புது : இல்லை...இல்லை...ஒரு அரசனை ஒழித்துப் பயனில்லை.....அரச பரம்பரையே ஒழிய வேண்டுமென்கிறேன். பரம்பரையை ஒழிப்பதென்றால், புராண காலத்து பரசுராமனைப் போல கையிலே கோடாரி தூக்கி, கண்ட அரசர்களையும் கொல்வதென்பதல்ல பொருள்! அரசனிடமிருந்து பெறுகிற உரிமையை மக்கள் காப்பாற்றக் கற்றுக் கொள்ள வேண்டும்! ஒரு அரசனை மிரட்டியோ, அல்லது பணியவைத்தோ, அல்லது நம் கொள்கைக்குத் திருப்பியோ-அவனிடமிருந்து நாட்டாட்சி, மக்கள் கைக்கு மாற்றப்பட்டு, சில நாட்களில் மக்களாட்சியில் கோணல் ஏற்பட்டு, மீண்டும்-மன்னராட்சியே மேல்என்ற நிலைமை வந்து விடக்கூடாது! நிரந்தரமான மக்களாட்சி ஏற்பட மக்கள் உள்ளம், பண்படுத்தப்பட வேண்டும்!...உதாரணமாக, மணிமகுடபுரி மக்களுக்கு, அரசன்மீதும், அரசாங்கத்

தின் மீதும், சீமான்கள் சபை மீதும் இருக்கிற ஆத்திரம்-அந்த குருநாதர் மீது இல்லையே ஏன்? நம்பிக்கை! மன வளமில்லாத குறையால் மண் டிக் கிடக்கும் மூட நம்பிக்கை! மன்னன் சாய்க்கப்பட்டு, மக்களாட்சி மலரும் போது, இந்த குருநாதர்கள், மகேசனின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு, மறுமலர்ச்சித் தோட் டத்திலே மாடுபோல் நுழைவார்களேயானால்; மக்களாட்சி நீண்ட நாள் வாழுமென்று நினைக் கிறீர்கள்? வாழாது நண்பரே; வாழாது!...அந்த ஆட்சி, அலி ஒருவனுக்கு அழகான பெண்ணை திருமணம் செய்து வைத்த கதையாக முடிந்து விடும்!

அல்லி : அழகான பேச்சு! அருமையான விளக்கம்! மக்கள் மன்றம், புதிய கருத்துக்களை இன்று பெற்றது!...பொன்னழகரும். இதை மறுக்க மாட்டார் என்றே நம்புகிறேன்...

பொன் : (சிரித்தபடி) எப்போதும் உன் கட்சிதானே ஜெயிக்கும் அல்லி! அதோடு உனக்கு சரியான துணையும் கிடைத்து விட் டது!.....

புது : சரி...எனக்கு கொஞ்சம் வேலையிருக் கிறது—பிறகு வருகிறேன்-கருப்பு ரோஜா! வா போகலாம்!...

[அல்லி, புதுமைப்பித்தன் போவதையே பார்த்துக்கொண்டிருக்கிறாள் — இதுவரையில் ஒரு மூலையில் மௌனமாக உட்கார்ந்திருந்த கவிஞர் திடீரென உரக்கப் பாடுகிறார்...]

"அணையுடைத்து வரும் ஆற்றையும்
நம்பலாம்!
புயல் காற்றையும் நம்பலாம்!...
சீறி வரும் பாம்பையும், செந்தேளையும்
நம்பலாம்.....இந்த சங்கத்தில்
நுழைந்துவிட்ட புதுமைப் பித்தன்
என்னும் பொய்யனை நம்பலாகாதே!"

(மன்றத்தினர் திகைப்பு)

அல்லி : என்ன ? (திகைப்பு)

பொன் : கவிஞரே!...(ஆச்சரியம்)

கவிஞர்: நெருப்பிலே நீர் கொட்டினாலே; அவன் நேர்மையின் திருவுருவம் என்று எண்ணு நீர்கள்!...

அல்லி : என்ன சொல்கிறீர்கள் — புதுமைப் பித்தனைப் பற்றி ?...

கவிஞர் : அமைதியின் வடிவமல்ல அவன்; ஆபத்தின் சொரூபம்! அரசாங்கத்து ஒற்றன்!...

பொன் : ஆ!...அரசாங்கத்துக்கு ஒற்றன்...

கவிஞர் : ஆமாம்.....நானே நேரில் பார்த் தேன்!...அவன் மீது எனக்கேற்பட்ட சந்தேகம் தெளிவாயிற்று. அரண்மனைப் பக்கம் அடிக்கடி போய் வருகிறான் என்று கேள்விப்பட்டேன்— பின்தொடர்ந்தேன்; நேற்றிரவு அவன் அரண் மனைக்குள் நுழைந்ததை நானே கண்டேன்— இதில் ஐயத்திற்கிடமேயில்லை!

பொன் : ஆகா! ஏமாந்து விட்டோம்—அவ சரப்பட்டு மன்றத்திலும் அவனை உறுப்பின ராக்கி விட்டோம்—நல்ல வேளை; இப்போதா வது எச்சரிக்கை செய்தீரே; கவிஞரே! மிக நன்றி! மிக நன்றி!.....

அல்லி : எனக்கென்னமோ, புதுமைப் பித் தனை அரசாங்க ஒற்றன் என்று கூற முடிய வில்லை!.....


கவிஞர் : அப்படியானால், ஐந்தாம் படைத் தலைவன் என்று கூறு!அல்லி! நீ புதுமைப்பித்தனை நம்புவது தவறு! அவன் வந்தது முதல் நீ பொன் னழகனைக்கூட அலட்சியப்படுத்தி விட் டாய்!...

அல்லி: கவிஞரே!...மன்னிக்க வேண்டும்— புதுமைப்பித்தனை நான் மதிப்பது உண்மை— அதே நேரத்தில் பொன்னழகரை என் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதை மறந்து விட மாட்டேன். நான் இந்த மன்றத்தின் நிர்வா கத் தலைவியாக இருக்கலாம்—ஆனால் பொன் னழகர்தான்...எனக்கு அன்றைக்கும் தலைவர்! இன்றைக்கும் தலைவர்!—இனி. என்றைக்கும் தலைவர்!—

பொன் : அல்லீ!...புதுமைப்பித்தனைப் பற்றி சிக்கிரம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்; நாளைய தினம்; நமது மன்றத்தின் ரகசிய செயற்குழு கூட்டப்பட வேண்டும்—ஆக வேண்டியவை களைக் கவனி—நான் கொடிக்கால் நகருக்குப் போய் வருகிறேன்!...

[பொன்னழகன்போகிறான். அல்லி வாட்டம் மடைகிறாள்]

(திரை)



காட்சி 6.

அரசன் மாளிகை

[வாயிற்புரத்திலே மெய்காப்பாளன் உலவிக்கொண்டிருக்கிறான். குள்ளமான உருவமும், குறுகுறுப்பான பார்வையுமுடைய அவன், அங்குயாரோ வருவதை கவனித்து விட்டு, உஷாராக நிற்கிறான். அமைச்சர் குணசீலர் வருகிறார். மெய்காப்பாளன் வணங்குகிறான்.]

குணசீலர்: அரசரைப் பார்க்க வேண்டும் என்று சொல்!...

மெய்: அதிகாரப் பூர்வமாகவா?..... அல்லத.....

குண: அதிகார பூர்வமாகத்தான்...

மெய்: இதோ ஓடிப்போய் சொல்லுகிறேன்.

(உள்ளே போகிறான். மீண்டும் வெளியே வந்து,)

மெய்: இதோ—இப்போதே வருவதாகச் சொல்லுகிறார்—தாங்கள் இங்கே அமர வேண்டுகிறேன்—

(அமைச்சர், உட்காருகிறார்.)

மெய்: என்ன? புதிய விஷயமோ?...

குண: நீ அரசருக்கு மெய்காப்பாளன் தானே?

மெய்: ஆமாம்.

குண: அந்தக் காரியத்தோடு இரு!..... இதிலெல்லாம் தலையிட்டுக்கொண்டு தவிக்காதே! என்ன விஷயமாக நான் வந்தால் உனக்கென்ன?...

மெய்: அபச்சாரம், மன்னிக்கவும்—கூமிக்கவேண்டும்!...இல்லே...அந்த தேவாலயம் கட்டுவதைப்பற்றி...

குண: ஆமாம்—அதைப் பற்றித்தான்—நீயா கட்டப் போகிறாய்?...(கோபமாக)

மெய்: அய்யோ நானு.....அதெல்லாம் கட்டுவதற்கு கொத்தனார்கள் இருக்கிறார்கள்; குடியேற குருமாதர்கள் இருக்கிறாகள்!...

குண: ஏய் உலகப்பர்!...நீ வரவர தலை கீழாய்த்தான் நிற்கிறாய்.....மரியாதையாக இரு!...

மெய்: அய்யோ—நான தலைகீழாய் நிற்பதே இல்லிங்க பிரபு; சிரசாசனம செய்கிற நேரத்தைத் தவிர!...

குண: மரியாதையாக இரு!...

மெய்: மண்டையிட்டு, அனுமார் போலவா?

(அதுவேல பார்வனே செய்கிறான்.)

குண: மன்னரிடம் பணி செய்கிறோம் என்ற மமதை—இரு இரு! அவரிடமே கூறி உனக்கு சரியான...

மெய்: வேண்டாம்—வேன்டாம்—பிரபூ!... என்னே மன்னித்து ஆட்கொள்ளுங்கள்—ஏதோ கிறுக்குத்தனமாக சொல்லிவிட்டேன். அரசருக்கு இதுமாதிரி நான் செய்யும் வேடிக்கையெல்லாம் மிகவும் பிடிக்கும்—உங்களுக்கும் ஏதோ பிடித்திருக்கிறது என்று நினைத்து...

குண: எனக்கென்னடா பிடித்திருக்கிறது பேயா? பிசாசா?...

மெய்: இல்லிங்க...நான் எது சொன்னாலும் தப்பு எடுக்கிறீங்களே; என்னே மன்னித்துவிடுங்க பிரபு!...என் வேலைக்கு வெடி வைத்து விடாதீர்கள் சாமீ!...அபச்சாரம்! அபச்சாரம்!...அடியேன் சிறியேன்—இனி பிழை புரிவேன்!...

(கன்னத்தில் போட்டுக் கொள்கிறான்.)

குண: உன்னே மன்னிக்கிறேன்—போய்த் தொலை! இனிமேல் இப்படியெல்லாம் செய்யாதே!...போய்ப்பார் அரசர் வருகிறாரா என்று!

மெய்: உத்திரவுங்க.

(என்று தனக்குள்ளாக அமைச்சரை கிண்டல் செய்துகொண்டே, உள்ளே போகிறான். அமைச்சர், காத்திருக்கிறார். மெய்காப்பாளன் வந்து)

மெய்: பிரபூ! அரசர் வருகிறார்!

(அமைச்சர் எழுந்து நிற்கிறார். அரசன் வருகிறான். அழகான அரும்பு மீசையும், கம்பீரமான உருவமும் கொண்ட அரசன் மணிமாறன், ஏறத்தாழ புதுமைப்பித்தனின் சாயல் பொருந்தியவனாகவே இருக்கிறான். பெருமிதத்தோடு நடந்துவரும் அரசனை, அமைச்சர் வணங்குகிறார்—அரசனும் வணங்கிவிட்டு, ஆசனத்தில் அமருகிறான்.)

அரசன்: குணசீலரே! என்ன விசேஷம்?... எல்லோரும் நலம்தானே?.....கலாராணி சௌக்கியமா?...

குண: சௌக்கியந்தான் அரசே!.....தங்களைப் பார்க்கவேண்டும் என்று துடித்துக கொண்டேயிருந்தாள்.

அர: அப்படியா?...ம்!...ராஜரீகங்கள் எல்லாம் எவ்வாறு நடைபெறுகிறது...சீமான்கள் சபையில் ஏதாவது புதிய தீர்மானங்கள் உண்டா?...

குண: உண்டு! அதில் கையெழுத்து பெறுவதற்காகத்தான் வந்தேன்!...

அர: என்ன தீர்மானம்?...

குண : தேவாலயம் ஒன்று கட்டுவதற்காக...

அர : கட்டவேண்டியதுதான்!.. சிலாக்கியமான காரியம்...மக்களுக்கு உடனடியான தேவை தேவாலயம்தான்!...இந்த திவ்யமான யோசனைக்கு சொந்தக்காரர் யார்?...

குண : குருநாதர்தான்!...

அர : அதுதானே பார்த்தேன்; வேறு யாரும் ஆண்டவனுக்குத் தேவையான அவசிய விஷயங்களை உணர முடியாதே—சபாஷ்! ...தேவாலயம் கட்டுவதனால், திரவியம் அதிகம் வேண்டுமே!

குண : பொக்கிஷத்திலே கொஞ்சமிருக்கிறது; போதாவிட்டால், தேவாலய வரி ஒன்று விதிக்கவும் உத்தேசம்!

அர : உத்தமம்!... அமைச்சரே!...ஏதோ ஒரு ஆற்றில், அணைக்கட்டு இல்லாத காரணத்தால் அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு, ஜனங்களுக்கும், கிராமங்களுக்கும் சேதம் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டதே; அது கவனிக்கப்பட்டு விட்டதா?...

குண : இல்லை!...

அர : ஆமாம்—அது இப்போது அவசரமில்லை—தேவாலயம் கட்டி ஆண்டவனைத் திருப்திப் படுத்தினால், அவரே கூட வெள்ளத்தைத் தடுத்து, ஆற்றையும் வற்றவைத்து விடுவார்! சரி—அமைச்சரே!... தேவாலயம் எந்த இடத்திலே?...

குண : கொடிக்கால் நகரத்திலே.

அர : அந்த நகர மக்கள்?

குண : நகரைக் காலி செய்துவிட்டு, அங்கே ஆலயம் கட்டுவதாகத் தீர்மானம்.

அர : ஓகோ, மனிதர்களை விரட்டிவிட்டு, மகேஸ்வரனுக்கு மாளிகை கட்டுவதாக தீர்மானம்!...

குண : அரசே!... (சற்று வியப்புடன்)

அர : தீர்மானத்தில் நான் கையெழுத்துப் போடவேண்டுமாக்கும்?...

குண : ஆமாம்!.....அதற்குத்தான் வந்தேன்...(புத்தகத்தை நீட்டுகிறார்)

அர : (வாங்கியபடி) நான் கையெழுத்துப்போடாவிட்டாலும், தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர, அமைச்சருக்கு விசேஷ அதிகாரம் இருக்கிறதே!...

குண : இருந்தாலும்—சீமான்கள் சபை, தங்கள் கையெழுத்தில்லாவிட்டால்...



அர : அமைச்சரே !...குறிப்பிட்ட இந்த தீர்மானத்தில் என் கையெழுத்துவேண்டாம். முடியுமானால், இந்த தீர்மானத்தை திரும்பப் பெற முயலுங்கள் !...

குண : சபை நிறைவேற்றி விட்டதே; திரும்பப் பெற்றால் அவமானமல்லவர் அரசே !...

அர : அப்படியானால், அமைச்சரின் விசேஷ அதிகாரம் பயன்படட்டும்—நான், கோயில் கட்டும் தீர்மானத்தில் மட்டும் கையெழுத்திட மாட்டேன்—மற்றவைகளில் கையெழுத்திடு கிறேன்.

(என்று கூறி, மற்ற தீர்மானங்களில் கையெழுத்திடுகிறார்)

குண : தயவுசெய்து, இந்தத் தீர்மானத்திலும்...

அர : வேண்டாம் !...என் கையெழுத்தை களங்கப்படுத்திக்கொள்ள மாட்டேன்—விளக்கம் கேட்காதீர் ! விசேஷ அதிகாரத்தை உபயோகித்து, கோயிலைக் கட்டி முடியும் !

(அரசன் உள்ளே போய்விடுகிறான் - மெய்காப்பாளனும் போகிறான், அரசனுடன். அமைச்சர் ஆழ்ந்த யோசனையுடன் நிற்கிறார்.)

குண : (தனக்குள்ளாக) "கையெழுத்துப் போடவில்லை !...விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்து !"—இப்போது அரசனிடம் கோபித்துக்கொண்டால், கலாராணி விஷயம் வெற்றிகரமாக முடியாது !...அதற்காக கோயில் தீர்மானத்தையும் கைவிடமுடியாது! —சரி; அரசன் கையெழுத்திட்டு விட்டதாகவே பொய்ப் பிரச்சாரம் செய்கிறேன். இருக்கவே இருக்கிறது - மக்கள் தொண்டன் பத்திரிகை!...வேறுவழி இல்லை!.....வழியே இல்லை !...

(அப்போது மெய்காப்பாளன் வந்து)

மெய் : வழி ஏன் இல்லை?—இதோ இருக்கிறதே வழி—வெளியே போகத்தானே பிரபு?

குண : சீ—முண்டாளே !—வழி சொல்ல வந்துவிட்டான், வடிகட்டிய முட்டாள்!

(போகிறார் வேகமாக)

(திரை)

காட்சி 7

[மணி மகுடபுரி வீதிகளில், 'மக்கள் தொண்டன்' ஏடு விற்பனையாகிறது.]

ஏடு விற்போன்: சீமான் சபை தீர்மானத்தில் அரசர் கையெழுத்துப் போடாது விட்டார் தேவாலயம் கட்ட தீவிர ஏற்பாடுகள்!—அமைச்சர் அறிக்கை! தேவாலய வரி விதிக்கப்படும்!—குருநாதர் எழுதுகிற தெய்வீகக் கட்டுரையுடன், மக்கள் தொண்டன் விலை இரண்டு பணம்!—மக்கள் தொண்டன், விலை இரண்டு பணம்!

(என்று கூவி விற்கிறான்—அப்போது அங்கு வந்த அல்லி, அந்த ஏட்டை வாங்கிப் படிக்கிறாள். திடுக்கிடுகிறாள். வேகமாகத் திரும்புகிறாள்.)

[பத்திரிகை செய்தி நாடெங்கும் பரவுகிறது]

காட்சி 8

[மக்கள் மன்றம் பொன்னழகன், கவிஞர், அல்லி முதலியோர்.]

பொன்: அமைச்சன் தான் நினைத்ததையெல்லாம் சாதித்துக் கொள்கிறான். தீர்மானத்திலே அரசனை கையெழுத்துப் போடவிட்டான்—நாளை, அமைச்சன் மகளை திருமணம் செய்துகொள்ளப்போகிறான், என்றசெய்தியும் வரப்போகிறது!-அமைச்சனுக்கும் அரசனுக்கும் சம்மந்தி உறவும் ஏற்பட்டு விட்டால், பிறகு அமைச்சன வைத்ததுதான் சட்டம்!—மணி மகுடபுரி, குணசீலனின் ஏக போக சொத்தாகி விடும்!..தேவாலயத் தீர்மானத்தை விட்டது போலில்லாமல், அந்தத் திருமணத்தையாவது உடனே தடுத்தாக வேண்டும்!

கவிஞர்: திருமணத்தைத் தடுக்க இரண்டே வழிதான உண்டு!—ஒன்று, அரசனை அபகரிக்க வேண்டும்—அல்லது அமைச்சன மகள் கலாராணியை அபகரிக்க வேண்டும்—

பொன்: அரசனை மறைப்பதைவிட, கலாராணியை மறைப்பது சுலபம்!—ஆம்! அதைத்தான் செய்ய வேண்டும்!...தோழர்களே! கலாராணியைத் தூக்கிவர யார் முன் வருகிறீர்கள்?—நீங்களே சொல்லுகிறீர்களா? அல்லது வழக்கம் போல சீட்டுக் குலுக்கிப் போடலாமா?—

கவி: அதுவே நல்ல முறை! சீட்டே போடலாம்—சீட்டு எழுதுங்கள்!

[அப்போது புதுமைப்பித்தன் வருகிறான். மன்றத்தில் ஒரே அமைதி நிலவுகிறது—யாரும் அவனை வரவேற்கவில்லை. புதுமைப் பித்தனுடன் கருப்பு ரோஜாவும் வருகிறான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு விழித்து. கடைசியாக]

புதுமை: என்ன, ஒரே அமைதி நிலவுகிறது?... அரசன் கையெழுத்துப் போட்டுவிட்டான், என்ற செய்தியைப் பார்த்துவிட்டீர்களாக்கும்! எனக்கெனனமோ அந்த செய்தியில் நமபிக்கையில்லை—செய்தியைப் படித்தீர்களா; இதோ—

(பத்திரிகையைப் புரட்டி) "சீமான் சபை தீர்மானத்தில் அரசர் கையெழுத்துப்போட்டு விட்டார்!" என்று இருக்கிறதே தவிர, குறிப்பாக, கோயில் கட்டும் தீர்மானத்தில் கையெழுத்துப் போட்டாரா, இல்லையா என்று தெரியவில்லை—அமைச்சரும், குருநாதரும், ஆஸ்தான அரிகரநாதரும் சேர்ந்து செய்த மோசடிதான் இது!—இதை நம்ப வேண்டாம்—நம்மிடமும் இன்னேரம் ஒரு பத்திரிகை இருந்தால், இப்போதே மறுப்பு எழுதி உண்மையை நிலை நாட்டியிருக்கலாம்—என்ன; அல்லீ! மக்கள் மன்றத்தின் சார்பாக, "மணிமகுடம்" என்று ஒரு தினசரி இதழ் துவங்கலாமா?—

பொன்: ஏடு துவங்குவது பிறகு இருக்கட்டும் நண்பரே!—நீர் முதலில் மக்கள் மன்றத்தின் அங்கத்தினர் பதவியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய நெருக்கடியான நிலைமை வந்திருக்கிறது; இப்போது!

புதுமை: என்ன?

பொன்: உம்மீது, மன்ற உறுப்பினர்களுக்கு சந்தேகம் பிறந்திருக்கிறது!

புது: சந்தேகமா?-அய்யோ-அது நமது சங்கத்தை பிளவு படுத்திவிடுமே!

பொன்: சந்தேகத்தை விட சதிக் குணம், பயங்கரமானது! அது சங்கத்தின் பலத்தையே சல்லடைக் கண்களாகத் துளைத்து விடும்!

புது: தவறான எண்ணம்-தகர்த்து நண்பரே தகாது!-நான் சந்தேகத்திற் குரியவனே அல்ல!—சதிகாரனல்ல!-மணி மகுடபுரி மக்களின் மேன்மைக்காக, என் உயிர் தரவும் தயாராயிருக்கிறேன்-தாயின் மேல் ஆணை-தந்தை மேலாணை-தூயஎன் மொழியின்மீது ஆணை!-என்னை நம்புங்கள்-நான் குற்றமற்றவன்!-கொள்கையிலே பற்றுக் கொண்டவன்!-அதற்காக எதையும் தியாகம் செய்யக்கூடிய நெஞ்சு பெற்றவன்!

பொன்: மன்றத்தின் ரகசியக் கூட்டத்திலே தீர்மானமாகிவிட்டது-நீர் சந்தேகத்திற்குரியவர் என்று! ஆனால் ஒன்று, என் தனிப் பட்ட நிபந்தனையாக இருக்கட்டும், ஒரு கடுமையான பரிட்சை வைக்கிறேன் உமக்கு-அதில் நீர் தேறினால், சந்தேகத்திலிருந்து விடுபடலாம்-

புது: கடுமையான பரிட்சை!!!

பொன்: ஆம்-உமது நேர்மையை நிலைநாட்டிக் கொள்ள தேவைப்படுகிற பரிட்சை! மந்திரி குணசீலரின் மகள் கலாராணியை, யாருக்கும் தெரியாமல் ரகசியமாக இங்கு கொண்டுவர வேண்டும்-

புது: கலாராணியையா? ஏன்?

பொன்: நீர் அரசாங்க ஒற்றன் அல்ல என் பதை நிரூபித்துக் கொள்வதற்கும், அதேசமயம், கலாராணிக்கும் அரசனுக்கும் நடக்க இருக்கும் திருமணத்தைத் தடுப்பதற்கும், மக்கள் மன்றத்தின சார்பில் உமக்கு இதக் கட்டளை தரப்படுகிறது; அதுவும், எனக்கு உம்மீது உள்ள அன்பு இன்னும் அடியோடு குறையவில்லை என்பதின் அடையாளமாக!

கவிஞ: சபாஷ்!-சந்தேகமும் நிவர்த்தியாகும்; திருமணமும் தடைப்படும்-ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

புது: இல்லை கவிஞரே! ஒரே இருதயத்தில் இரண்டு வேல்கள்! சந்தேகம்; சோதனை! இரண்டையும் தாங்க வேண்டும் நான்-முடியாத காரியம்!

பொன்: கட்டளையை நிறைவேற்றினால், மக்கள் மன்றத்தின் கதவு எப்போதும் திறந்திருக்கும்-இல்லாவிட்டால்...

புது: மூடப்படும்-என் ஆசைகளும் முடங்கி விடும!

பொன்: நான் என்ன செய்ய? மன்றத்தின் ஆணைக்கு நானும் கட்டுப்படத்தானே வேண்

ம் தோழரே! வெற்றியோடு திரும்புங்கள்! வருகிறேன்!

(பொன்னழகன் போக, மற்றவர்களும், அவன் பின்னே போகிறார்கள். புதுமைப்பித்தன், அல்லி, கருப்பு ரோஜா மூவரும் தனியே இருக்கிறார்கள்)

புது: அல்லீ-வருகிறேன்-

(அல்லி, கலக்கத்தோடு கிற்கிறாள்)

அல்: சோதனையில் வெற்றி பெற்று விரைவில் திரும்புங்கள்.

புது: என் வெற்றியை நீ ஏன் விரும்புகிறாய்?

அல்: மக்கள் மன்றம் ஒரு நல்ல மேதையை இழந்துவிடக் கூடாது என்றுதான்-

புது: மேதையா நான்?...

அல்: மேதை மட்டும் அல்ல-அறிஞர்-கவிஞர்-நாவலர்-சொல்லின் செல்வர்-சிந்தனைச் சிற்பி-எல்லாமே நீங்கள்தான்!-

புது: சந்தேகத்திற்குரிய சதிகாரன்-நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவன்-

அல்: அப்படித்தான் இங்கே கருதுகிறார்கள்; ஆனால் நான்...

புது: நீ கருதவில்லையா அல்லி?-

அல்: இல்லை-உங்கள் முகத்திலே மோசத்தின் சாயல் சிறிதுமில்லை.

புது: அல்லி-உன் வார்த்தைகள் போதும் எனக்கு-நீ உண்மையை உணர்ந்தால் போதும்-நான் சதிகாரனல்லவே; சொல் அல்லி! சொல்! உன் வாயால் இன்னொரு முறை சொல்!

அல்: இல்லை! நீங்கள் சதிகாரர் இல்லை! உத்தமர்! உண்மையின் உருவம்!-

(விம்முகிறாள்)

புது: ஆகா-அல்லி! மணி மகுடபுரியே விடுதலை பெற்றது போன்ற மகிழ்ச்சி அடைகிறேன்-விடை கொடு, வருகிறேன்!

அல்: திரும்பி வருவதாக வாக்களித்தால் தான் விடை கொடுப்பேன்-

புது: (வியப்புடன்) உன்னுடைய பேச்சில்.....

அல்: என்ன கற்பனை செய்கிறீர்கள்?

புது: ஒன்றுமில்லை.....

அல்: சொல்லுங்கள்!

புது: நெஞ்சு நடுக்கம் எடுக்கிறது-மணிமகுடம்-

அல்: என்னுடைய நெஞ்சும் நடுங்குகிறது-

க. ரோஜா: என்னுடைய உடம்பே நடுங்குகிறது; யாராவது வந்து விடப் போகிறார்கள் என்று! நான் போய் வெளியே காவல் இருக்கிறேன்-

(போகிறாள்)

புது: அல்லி-நான் வருகிறேன்-

அல்: மந்திரி மகளைக் கொண்டு வரும் முயற்சியில்.....

புது: நீயும் அப்படித்தான் கருதுகிறாயா?

அல்: கருதுகிறேன் அல்ல; உங்களைத் திரும்பவும் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் பிறக்கும் அன்புக் கோரிக்கை-

புது: அன்புக் கோரிக்கை—(இன்பமாக அந்த சொல்லை உச்சரித்தபடி) அல்லீ!—(என்று அவளிடம் அவன் திரும்பி நெருங்குகிறான். அவள் முகத்தை மூடிக் கொண்டு, சோக மயமாக வேறு பக்கம் போய் விடுகிறாள்—புதுமைப்பித்தன் அதைவிட்டு வாட்டமுடன் நகருகிறான்)

(திரை)

* * *

காட்சி 9.

அமைச்சர் வீடு. கலாராணியின் அறை

[கலாராணி நடனமாடிக் கொண்டிருக்கிறாள், இனிமையாகப் பாடிக்கொண்டு! அப்போது அங்கே வஞ்சி வருகிறாள்.]

வஞ்சி: சபாஷ்—சபாஷ்.

கலா: எப்படி நடனம்?

வஞ்சி: கலாராணியின் உடல் நெளிவது போல கருநாகமும் நெளியாது.

கலா: போதுமடி-கவிதா சிரோன்மணீ! உன் உதாரணங்களை மூட்டை கட்டிக்கொள்... உளராதே!

வஞ்: பிறகென்ன கலா! புதிய உதாரணமாக என்ன சொல்வது? எல்லாம் சொல்லிச் சொல்லி புளித்துப்போய் விட்டது!

கலா. அதற்காக, கரும்பாம்பு என்கிறாரா என்ன...?

வஞ்: நெளிவைச் சொல்லுகிறேன்.

கலா: ஏன்-மூல்லைக் கொடி என்று சொன்னால்...?

வஞ்: மூவாயிரம் வருஷமாக அதைத் தான சொல்லுகிறார்கள்... அதுவுமல்லாமல் முல்லைக்கொடி ஒரே இடத்தில் நின்றுதான் காற்றில் ஆடும்!...நெளியும்! பாம்போ பல இடங்களில் ஆடும்-நெளியும்-நகரும்...

கலா: சி!...

வஞ்: சீறும்!...

கலா: (சிரித்தபடி) விஷமக்காரியடி நீ!... வஞ்சி!...என்னுடைய ஆட்டத்தை அவர் பார்த்தால்?...

வஞ்: தன் தோட்டத்து மயிலாக்கிக் கொள்வார்!...

கலா: ஆடல் பாடல்களில், அவர் ரசிகரோ இல்லையோ தெரியாது.....

வஞ்: ரசிகர் இல்லாவிட்டால்-ரசிகராக ஆக்குவது!...அதோ தாமரைத் தடாகத்திலே இரண்டு மீனகள் துள்ளுகின்றன; அவைகளுக்கு அவர் தூண்டில் போடாமல் இருப்பாரா?

கலா: என்னடி பிதற்றல்? தாமரைத் தடாகமாவது-இரண்டு மீனுவது...

வஞ்: ஆமாம்-உன் முகத்தையும், முகத் திரண்டு கணகளையும் சொன்னேன்...கவிதை நடையில்!...

கலா: அடா அடா...ஏய் வஞ்சி! உன் கவிதைத் தலைவலியைக் கொஞ்சம் நிறுத்தேன்!...

வஞ்: நிறுத்திவிட்டு, வேறு எதை ஆரம்பிப்பது?...

கலா: வஞ்சி!...அவரும் நானும் சந்திக்கவே முடியாத தூரத்தில் இருக்கிறோம்; இருவரும் இரு துருவங்கள்...

வஞ்: சந்திப்பதா பெரிய காரியம்? இன்பேரது வந்தாலும் அவரை சந்திக்கலாம்-

கலா: எங்கேடி?

வஞ்: அரண்மனையில்...

கலா: அரசரைச் சொல்லுகிறாரா? (கோபமாக)

வஞ்: நீ யாரைச் சொல்லுகிறாய்?

கலா: நான் அவரைச் சொல்லுகிறேன்...

வஞ்: அவர்...அவர்...நல்ல அவர்!-கலா ராணி! உன்னுடைய அந்த 'அவர்' யார் என்றுதான் எனனிடம் சொல்லேன்...

கலா: இன்று, அவர் யார் என்று உன்னிடம் சொல்லத்தான் போகிறேன்.

வஞ்: சொல்லு!...

கலா: சொல்லுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை-நான் அவர் யார் என்று சொன்ன பிறகு, நீ மறுபடியும் அரசரைப்பற்றிய பேச்சை என்னிடம் எடுக்கவே கூடாது!... நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன்; எனக்கு அரசர்மீது சிறிதும் விருப்பமில்லை...

(அமைச்சர் குணசீலர் வந்துகொண்டே)

குண: ஏனம்மா, விருப்பமில்லை?...அரசன் என்ன அவலக்ஷணமா? அலங்கோல புருஷனா?...

கலா: அப்பா.....(ஏதோ சொல்லமுயல)

குண: நானும் எத்தனையோ நாட்களாய் முயலுகிறேன்-முயலுகிறேன்-நீ என் ஆசையையே அலட்சியப் படுத்துகிறாய்...கலா ராணி! உன் தந்தையின் அதிகாரமும், இந்த மந்திரி பதவியும் நிலைக்கவேண்டுமானால் நீ அரசனைத் திருமணம் செய்து கொண்டே தீரவேண்டும்—

கலா: முடியாதப்பா-

குண: கட்டளையிடுகிறேன்—அடங்கிறடி! கலாராணி! வருத்தப்படாதே!... இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையில் நீ அரசனைத் திருமணம் செய்துகொண்டே தீரவேண்டும்—அரசன், என்னையும் மீறுகிற ஆபத்தான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அரசனுக்கும் நமக்கும் உறவு ஏற்பட்டு விட்டால் பிறகு யார் தயவும் எனக்குத் தேவையில்லை. இப்போது இந்தமந்திரி பதவி

மைக் காப்பாற்றிக்கொள்ள, சிமான்களுக்கு தலையாட்ட வேண்டியிருக்கிறது—குருநாதருக்குக் குடுகொடிபிடிக்க வேண்டியிருக்கிறது-பத்திரிகாசிரியனிடம், பல் இளிக்க வேண்டியிருக்கிறது!—

அரசன் என்னுடைய மருமகன் ஆகி விட்டால், யாருக்கும் அஞ்சிடத் தேவையில்லை யல்லவா நான்? பிறகு சிமான்களும் குருநாதரும் என் காலடியில்தானே கிடப் பார்கள்?

கலா: ஏன் அப்பா ஆயிரம் விளக்கம்?... மக்களின் மதிப்பைப் பெற்று வாழ வழியில்லை; மகளே வைத்தாவது மந்திரி பதவியைக் காப்பாற்றிக்கொள்ள திட்டம் போட்டு விட்டீர்கள்...அவ்வளவுதானே!

குண: (கோபமாக) கலாராணி! என்ன சொன்னாய்?...

கலா: பாடையில் ஏறும் வரையில் தணியாத உங்கள் பதவி மோகத்துக்கு, நான் பலியாக வேண்டும்-சரி-நான் தயாராக இருக்கிறேன்-அரசருக்கு சம்மதம்தானா?...

குண: அவருக்கு எண்ணமில்லாமலா எனக்கப்பார்க்கும்போதெல்லாம், "கலாராணி சௌக்கியமா? கலாராணி சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்-நீபோய் அவரைப் பாரம்மா-எல்லாம் நன்மையாக முடியும்-

கலா: இதோ போகிறேன்-வஞ்சி-நீயும்வா என்னோடு அரண்மனைக்கு! (படபடபபோடு அழைக்கிறாள்)

குண: போய்வா மகளே; பூரிப்போடு போய்வா!

(திரை)

* * *

காட்சி 10

[அரண்மனையின் பின்புறமுள்ள தோட்டம். இரவு நேரம்—கலாராணியும், வஞ்சியும் அந்த வழியே வருதல்]

கலா: வஞ்சி! நீ இங்கேயே இரு. நான் போய் அரசரைப் பார்த்துவிட்டு வருகிறேன்-

வஞ்சி: நான் காத்துக் கொண்டிருப்பேனே என்ற கவலையில், சிக்கிரம் ஓடிவர வேண்டாம் பேச்சைக்கூட முடிக்காமல்! நான், இங்கேமயில், குயில், மாடப்புரு, மரமரம், பூஞ்செடி, இவைகளோடு பேசிக் கொண்டிருக்கிறேன்; நீ நிதானமாக கல்ல முடிவோடு வா!-

கலா: கல்ல முடிவுடன்தான் போகிறேன்-கல்ல முடிவோடு வரமாட்டேனா?-

வஞ்சி: ஆமாம்-அதை மறந்து விடாதே! விஸ்வாமித்திரனை வென்ற மேனகையைப் போல நீயும் வெற்றிப் புன்னகையோடு திரும்பி வர்-உனக்கு அணிவிக்க, நான் இங்கே மலர் பறித்து வெற்றிமாலை தயாரிக்கிறேன்-நீ வரும் வரை எனக்கும் வேலை வேண்டுமே கலா!-போனவுடனே அரசரிடம் சகஜமாகப் பேசிவிடாதே! முதலில் அரசருக்குரிய மரியாதையோடு வணங்கு! வணங்கும்போதே கண்களால் அவரை வசீகரித்துவிடு! உன் காந்தள் விரல்களின் அழகு தெரியும்படி, கை கூப்பி வணங்கு!.....இரவு நேரம்-முகந்தெரியாத மூலையில் நின்று விடாதே-முழுநிலா போன்ற இந்த முகம் பிரகாசமாகத் தெரியக் கூடிய விளக்கின அருகே நின்று கொண்டு பேசு!...இடையிடையே பார்வையை வீசு!... பிறகு அரசர் உனக்குத் தூசு!...

கலா: நீ, பாடம் சொல்லித் தருகிறாயா?-

வஞ்சி: காதல் அரிச்சுவடி கலா!-என் சொல்லாமலே உனக்குத் தெரியுமா?.

கலா: எனக்கு ஒரு சுவடியும் வேண்டாம்-நீ எங்கும் போய்விடாதே-இரு, இதோ வந்து விடுகிறேன்-

[கலா போகிறாள்—வஞ்சி மலர் பறிக்கிறாள், மாலை தொடுக்க.]

* * *

காட்சி 11

அரசன் மாளிகை

[மெய்காப்பாளன் உலவிக் கொண்டிருக்கிறான். அங்கே கலாராணி வருகிறாள்.]

மெய்: வாருங்கள்...என்ன வேண்டும் தங்களுக்கு?

கலா: அரசரைப் பார்க்க வேண்டும்...இப்போது பார்க்க முடியுமா என்று...

மெய்: இருங்கள்...போய் தெரிவிக்கிறேன்...

(கலாராணி உட்கார்ந்திருக்கிறாள். அரசன் வர நேரமாகிறது-மெய்காப்பாளன் வருகிறான் திரை விலகுகிறது)

மெய்: சந்திக்க சம்மதம் தெரிவித்தார்... இப்போது வருவார்.

[மெய்காப்பாளன் உள்ளேபோகிறான்]

கலாராணி நீண்ட நேரம் காத்திருக்கிறாள். எழுந்து உலவுகிறாள். அங்குள்ள சித்திரங்களை ரசிக்கிறாள் அரசன் வரும் வாயிற்புரத்தின் திரையையே நோக்கி நிற்கிறாள். மீண்டும் உட்காருகிறாள். கடைசியில், வாயிற் புரத்துத் திரை விலகுகிறது. அரசன் வருகிறான். கலாராணி மரியாதையுடன் வணங்கி நிற்கிறாள்.

அரசன்: கலாராணி...நலந்தானே?

கலா: தங்கள் ஆசியால் நலமேதான்.

அரசன்: இந்த நேரத்தில் இவ்வளவு அவசரமாக என்னைப் பார்க்க வேண்டிய காரணம்?

கலா: தனித்து சில விஷயங்கள் பேச வேண்டும்.

அரசன்: (மெய்காப்பாளனை பார்த்து) உலகப்பா! நீ கொஞ்சம் ஒதுங்கி இரு!

(மெய்காப்பாளன் அகலுகிறான்)

அரசன்: கலாராணி! இனி தாராளமாகப் பேசலாம்.

கலா: என்னுடைய திருமணத்தைப் பற்றி ஒரு முடிவு செய்வதற்காக இங்கு வந்தேன்.

அரசன்: புரியும்படி சொல்!...

கலா: ஒன்று கேட்கிறேன்; ஆத்திரப்படக் கூடாது!

அரசன்: கேள்!

கலா: தாங்கள் என்னை விரும்புகிறீர்களா?

அரசன்: விரும்புகிறேன்.

கலா: (திகைப்புடன்) உண்மையாகவா?...

அரசன்: ஏன் சந்தேகம்?

கலா: நீங்கள், என்னை விரும்புகிறீர்களா?

அரசன்: ஆம்.

கலா: (துடிப்புடன்) என்னை நேசிக்கிறீர்களா?

அரசன்: ஆமாம்.

கலா: நான் உங்களை விரும்பவில்லை.

அரசன்: கவலையில்லை! நான் விரும்புகிறேன்; நேசிக்கிறேன்.

கலா: நான் மறுத்த பிறகுமா?

அரசன்: ஆமாம்.

கலா: நான் வேறு ஒரு ஆடவரை நேசிக்கிறேன்.

அரசன்: என்னைப் போல் அவன் உன்னை நேசிக்க மாட்டான்-விரும்ப மாட்டான்!

கலா: நீங்கள் என்னை விரும்பவும் கூடாது-நேசிக்கவும் கூடாது!...

அரசன்: பொங்கி வரும் வெள்ளமல்ல எண்ணம்; அணை போட்டுத் தடுக்க! ஒரு அமைச்சரின் மகளை அரசன் ஏன் விரும்பக்கூடாது?-

கலா: ஆ!...(திகைப்பு)

அரசன்: ஒரு தங்கையை ஒரு அண்ணன், ஏன் சகோதர பாசத்தோடு நேசிக்கக் கூடாது?...

கலா: (வியப்புடன்) அரசே!...

அரசன்: கலாராணி, மணி மகுடபுரி மன்னவனின் தங்கைகளில் ஒருத்தி!

கலா: அரசே! என்னை மன்னித்து விடுங்கள்!

(காலில் விழுகிறாள்)

அரசன்: எழுந்திரு! அமைச்சர்தான் அவசரக்காரர் என்றால், அவர் மகள்—நீயும் அப்படியே இருக்கிறாய்!

கலா: தாங்கள் என்னைத் திருமணம்செய்து கொள்ள விரும்புவதாக அப்பர்தான் என்னிடம் சொன்னார்.

அரசன்: எனக்கு ஏன் இப்போது திருமணம்? அதுவும் அமைச்சர் மகளை திருமணம் செய்து கொண்டால், வெறும் வாயை மெல்லும் புரட்சிக்காரர்களுக்குக் கொஞ்சம் அவலும் அள்ளிப் போட்ட மாதிரிதான்!

கலா: நான் விடை பெற்றுக் கொள்கிறேன், மன்னவா!

அரசன்: ஹில் கலாராணி! வேறொருவனை விரும்புவதற்காச் சொன்னாயே; அவன் யார்?...

(கலாராணி தலை குனிந்து நிற்கிறாள்)

அரசன்: வெட்கம் தேவையில்லை...உன் விருப்பத்தை நிறைவேற்ற அரசாங்க ரீதியாகவும் அக்கறை காட்டப்படும்!...அமைச்சர் புதல்வியல்லவா நீ!...அவன் யார்?

கலா: அவர் பெயரைச் சொல்வதே பெரிய குற்றம்...

அரச: கணவன் பெயரைச் சொல்லக் கூடாது என்ற கருத்தின்படியா?...

கலா: இல்லை...அவர் ஒரு அரசாங்க எதிரி! அவர் பெயரை இங்கு சொன்னால்...

அரச: பரவாயில்லை...பயப்படாமல் சொல்!

கலா: அவர்.....(தயங்குகிறாள்)

அரச: சொல்!...எதிரியாய் இருந்தால் என்ன? மாற்றான் தோட்டத்திலே கூட மனோரஞ்சிதம் இருக்கலாம்.

கலா: அந்த மனோரஞ்சிதத்தை நான் குறிப்பிட்டால், அதிலே பூரகம் இருக்கிறது என்று கூட தாங்கள் தடுக்கலாமல்லவா?

அரச: பூரகம் இருந்தால் தடுக்க வேண்டியதுதானே முறை...

கலா: பூரகமுள்ள மலரல்ல; நான் குறிப்பிடும் பொன்னழகன்...

அரச: (திடுக்கிட்டு, திகைப்புடன்)

பொன்னழகன்!...அவனையா நீ காதலிக்கிறாய்?...எதிரிகளின் தலைவன்!...எந்த நேரத்திலும் இந்த நாட்டு ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று சங்கணம் கட்டியிருப்பவன்! மக்கள் மன்றம் என்ற ஆட்டு மந்தைக்கு அதிபதி!...குருநாதர்-அமைச்சர்-கொலு மண்டபம்-அத்தனைக்கும் பகைவன்!...அந்தப் பகைவனின் பிரியை நீ! சட்டம் அனுமதிக்காது!

கலா: காதலைத் தியக்கவும் சட்டமா?...

அரச: ஆமாம்!...காதலால், சம உரிமை என்ற பயிருக்கு விதைடப்படுகிறது!...அந்தஸ்து மாளிகை அனைதைக் குடிசையைக் காதலிப்பதால்- சமத்துவம் என்ற குழந்தை பிறந்து விட ஏதுவாகிறது! சம உரிமை-சமத்துவம்-இதுபோன்ற கொடிய சம்பவங்கள் எதுவும் நிகழாவண்ணம், சீமான் சபை சட்ட மூலம் கண் காணித்து வருகிறது-சம உரிமையும், சமத்துவமும் ஏற்பட்டு விட்டால் பிறகு குருநாதருக்கு வேலை என்ன? ஆயிரக் கணக்கான பவுன்கள் செலவிடப் பட்டு அமைக்கப்பட்டுள்ள ராணுவப் படைக்குத் தான் வேலை என்ன இருக்கிறது?...குருநாதர் மதிப்பிழப்பார்-கொலு மண்டபம் சேவை இழக்கும்!

கலா: அப்படியானால், என்வாழ்வு பாழாகத் தான் வேண்டுமா?...

அரச: பரிதாபத்திற்குரிய சகோதரி!...அந்தப் பொன்னழகனை நீ எங்கே பார்த்தாய்?... எப்படி உங்களிடையே சந்திப்பு ஏற்பட்டது?

(ஆச்சரியமாக)

கலா: அவரை நான் சந்தித்துப் பேசியதில்லை. அவர் என்னை விரும்புகிறார்-அதுவும் தெரியாது! ஒரு நாள் அவர், அப்பாவிடம் நாட்டு நிலை குறித்து விவாதிக்க வீட்டுக்கு வந்தார். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார் அப்பாவுடன்!...அன்று கண்டேன்; அவருடைய லட்சிய இருதயம் என்னைக் கவர்ந்துவிட்டது!...

அரச: லட்சிய இருதயம்-அரசாங்கத்திற்கு விரோதமாக அமைச்சர் வீட்டிலேயே ஆபத்து அரும்புகிறது!...(உலவிக்கொண்டே சிந்திக்கிறான்) இதை நான் அனுமதிக்க முடியாது!...உடனே தடுக்கிறேன்!... (உலவுகிறான்)

கலா: அரசே!...

அரச: இங்கு நிற்காதே-போய்விடு!...

[அரசன், உள்ளே போய்விடவே கலாராணியும் வெளியேறுகிறாள், கலக்கத்துடன். மீண்டும் அரசன் வெளியே வந்து]

அரச: உலகப்பா!...

உலக: (வந்தபடி) இதோ இருக்கிறேன்.

அரச: உலகம்!...எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாயா?...

உலக: ஆமாம்...

அரச: உடனே போ!...கலாராணி, தோட்டத்து வழியாகத்தான் போவாள்-நமது ஆட்களை விட்டு அவளைத் தூக்கிவரச் சொல்!...

உலக: உத்திரவு!...

அரச: மயக்க மருந்தையும் எடுத்துப் போ!...நந்தவனத்துப் பளிங்கு மண்டபத்திலே அவளை வைத்துவிட்டு, உடனே வந்து என்னிடம் சொல். ஓடு!...

(உலகப்பன் ஓடுகிறான்)

(அரசன், யோசித்தபடி உலவுகிறான்)

(திரை)

* * *

காட்சி 12

தோட்டத்தில் வஞ்சி மாலை சூட்டிக் கொண்டிருக்கிறாள்...

"மார் அது?" என்று கேட்டுக் கொண்டே, மெய்காப்பாளன் உலகப்பன், அங்கு வருகிறான். திடுக்கிட்ட வஞ்சி பேசாமல் நிற்கவே,

உலக: இந்த நேரத்திலே இங்கே யார்என்று கேட்டால் பதில் சொன்னால் என்ன?.. ஊமையா? செவிடா?...பேயா?...பிசாசா?...

வஞ்சி: (கோபமாக) நிற்பது கண் தெரிய வில்லையா?

உலக: நீ என்ன கிலவா...இருட்டிலேயும் தெரிவதற்கு?...

வஞ்சி: சரிதான்...காக்கை, கருங்குயிலைப் பழித்த கதைதான் இது! .....மழை காலத்து மேகம் மாதிரி இருந்து கொண்டு, கையாண்டி செய்ய வந்து விட்டார் என்னை!...நீலமேக சாமள வர்ணரே!...

உலக: ஆகா! என் நெருப்பில் குளித்த நீலோத்பல மலரே!...

வஞ்: நிறுத்தும்-நான் யார் தெரியுமா?...

உலக: பேயுமல்ல-பிசாசுமல்ல-ஊமையுமல்ல செவிடுமல்ல-உல்லாசி! ஊர்வசி!...

வஞ்: மரியாதை வேண்டும் பேசிஸில்-நான் மந்திரிகுமாரியின் தோழி!...நீர் மெய்காப்பாளன்!

உலக: மெய்காப்பாளன் என்றால் உனக்கு அர்த்தம் தெரியுமா?...

உண்மையைக் காப்பாற்றுபவன்-அதாவது அரசரிடம் உண்மையோடு பழகுபவன்-அந்தரங்க சேவகனாளன்-ரகசிய ஊழியன்—

வஞ்: அவ்வளவுதானு?...

உலக: இன்னும் இருக்கிறது-மெய் (என்றால் உடல் என்றும் கூறுவார்கள்!...உன்னை போன்ற அழகியின் உடலை பத்திரமாகக் காக்கக்கூடியவன்!...

வஞ்: மெய்காப்பாளர்-நான் சொல்லட்டுமா புதுபொருள்?...

உலக: சொல்லு!

வஞ்: ஆபத்து வரும்போது மெய்யைத் தான் காப்பாற்றிக் கொள்ளத் தெரியுமே தவிர, உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத்தெரியாதவர் சரிதானு?...

உலக: நீயும் ஒரு புலவிதான் போலும்!...

வஞ்: அப்படியானால் நீர் புலவரோ?...

உலக: ஆமாம்-மூச்சு விடுவதற்குள் முன்னூறு கவிதை எழுதுவேன்!

வஞ்: எங்கே...இப்போது எழுதும், மூச்சு விடுவதற்குள், முன்னூறு கவிதை...

உலக: அடடா-இது புரியவில்லையா?... மூச்சு விடுவதற்குள் முன்னூறு பாட்டு என்றால், இப்படி, மூச்சுவிட்டு இழுப்பதற்குள் அல்ல; மனிதன் கடைசியாக மூச்சு விடுவதற்குள்! அதாவது அவனுடைய வாழ்நாளுக்குள் முன்னூறு கவிதை எழுதுபவன் என்று பொருள்!...

வஞ்: ஆகா...நல்ல கருத்து...குப்பை மேட்டிலே குண்டுமணி போல!...யாரும் இதுவரை சொன்னதேயில்லை...

உலக: இதுபோல இன்னும் பல குண்டு மணிகளை நீபொறுக்க வேண்டுமானால்...

வஞ்: என்ன செய்ய வேண்டும்?

உலக: ஒரு தாலி செய்ய வேண்டும்-

வஞ்: என்ன, தாலியா?...

உலக: ஏன்; இதுகூடவேண்டாமா?...சரி!...

வஞ்: ஓகோ! சரிதான்! அய்யா மெய்காப்பாளரே! இரவு நேரத்தில், ஒரு நந்தவனத்தில், ஒரு பெண்ணுடன் ஒரு ஆண இப்படிப் பேசுவதுதான் முறையா?...

உலக: பிறகென்ன?...பகல் நேரத்தில்-ஒரு பசுவனத்தில்-ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் இப்படிப் பேசுவதுதான் முறை என்கிறார் நீ?...

வஞ்: உமது உள்ளம், கண்ணாடி போல் எனக்குத் தெரிகிறது!...

உலக: (நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு) இந்தக் கண்ணாடியிலே உன் முகத்தைப் பார்த்துக் கொள-சீக்கிரம் சிங்காரித்துக் கொள்-கண்ணுக்கு மை எழுதிக் கொள்!...பொட்டு வை!...பொலிவு பெறு!...

(வஞ்சி அவன் நெஞ்சுக்கு நேரே முகத்தை நீட்டி, கண்ணாடியில் பார்ப்பது போல நடித்துவிட்டு)

வஞ்சி: அடேடே-இது ரசமில்லாத கண்ணாடி!

உலக: நீதானே காதல்ரசம் பூசவேண்டும்...

(வஞ்சி, வெட்கப்பட்டு சிரிக்கிறாள்)

உலக: ஆகா!...இவைகள் என்ன முத்துப் பற்களா?...முல்லைச்சரமா?...

(அவளைத் தொடுகிறான்)

வஞ்சி: இதோ பாருங்கள்-இது மாதிரி-பழைய வர்ணனைகள் எனக்குப பிடிக்காது...

உலக: வா! எல்லாம் புதிதாகவே சொல்லு கிறேன்-

(இழுக்கிறான்)

வஞ்சி: எங்கே?...

உலக: அதோ அந்த மேடைக்கு...இங்கு யாராவது வருவார்கள்...

வஞ்: அய்யோ, கலாராணி தேடுவாளே-

உலக: தேடட்டுமே! சுர்மென்ன தேவலோகத்திற்கா போகிறோம்? தேவலோகத்தைத் தான் இங்கு வரவழைக்கப் போகிறோம்... வா!...வா!.....

(இருவரும் போய்விடவே-சிறிது நேரத்திற் கெல்லாம், கலாராணி அங்கு வந்து)

"வஞ்சி! வஞ்சி!" என்று கூப்பிடுகிறாள். வஞ்சியைக் காணவில்லை. மீண்டும், "வஞ்சி!" என்று உரக்கக் கூப்பிடுகிறாள். அப்போது, இரண்டு மூன்று கரிய உருவங்கள், அவள் மீது பாய்ந்து-அவள் முகத்திலே மயக்க மருந்தைக் காட்டி-அவளைத் தூக்கிக்கொண்டு போய் விடுகின்றன-அவள் கொண்டு செல் லப்படுவதை, அங்கு வரும் வஞ்சி, பார்த்து விடுகிறாள். அலறுகிறாள் வஞ்சி.

"கலா! கலா!" என்று கத்துகிறாள். பய னில்லை. கலாராணி, வெகு தூரம் கொண்டு செல்லப்பட்டு விடுகிறாள்-

(திரை)

* * *

காட்சி 13

அரசன் மாளிகை.

[அரசன், அங்குமிங்கும் உலவிக் கொண்டிருக்கிறான், சிரித்தபடியே!... உலகப்பன் ஓடிவந்து,]

உலக: அரசே!

அரச: என்ன முடிந்ததா?...எங்கே கலா ராணி?...

உலக: வெற்றிகரமாக முடித்து விட்டேன்-அவளை மெதுவாக மயக்கி,

அரச: அடே! மயக்க மருந்தை அவளுக்குக் கொடுத்து விட்டாயா?

(கோபமாக)

உலக: இல்லை அரசே! அது வேறு, மயக்க மருந்து!

(இளித்தபடி)

உம், அவளைத் தந்திரமாக நான் அழைத் துக் கொண்டு போய்விடவே, நமது ஆட்கள் கலாராணிக்கு மயக்க மருந்து காட்டி, கலா ராணியை பளிங்கு மண்டபத்தில் சேர்த்து விட்டார்கள்!...கலாராணிக்கு இன்னும் பிரக் ஞை வரவில்லை!...

அரச: சரி, புறப்படு!...உலகப்பா! உடை களை மாற்றிக்கொள்...நானும் இதோ வந்து விடுகிறேன்-

என்று கூறிவிட்டு அரசன் உள்ளே செல் லுகிறான். உலகப்பன், மெய்காப்பாளன் உடைகளைக் கழற்றிவிட்டு, வேறு உடைகளை போட்டுக்கொண்டு, கருப்பு ரோஜாவாக மாறி நிற் கிறான்.

உள்ளே சென்ற அரசன், வெளியே வருகி றான், புதுமைப்பித்தனாக!

புது: உலகப்பா!...

கருப்: அரசே!...

புது: இப்போது என்ன செய்யப் போகி றேன், தெரியுமா?...

கருப்: எனக்கென்ன தெரியும்?...நீங் கள் செய்வது எல்லாமே புதுமையாகத்தானே இருக்கிறது!...

புது: அதனால்தான் புதுமைப் பித்தன் என்று பெயர் வைத்துக் கொண்டேன்-

கருப்: அதேதான விட்டீங்களா?...(தன்னைக் காட்டி) இந்த உலகத்தையுமல்லவா கருப்பு ரோஜாவாக மாற்றி விட்டீர்கள்-

புது: (சிரித்தபடி)

கருப்பு ரோஜா!...வா--வா!--நேரமாகிறது கலாராணிக்கு மயக்கம் தெளிவதற்குள், காரியம் நடக்க வேண்டும்.

(இருவரும், ஒளிந்து, ஒளிந்து வெளி யேறுகிறார்கள்)

காட்சி 14.

(மக்கள் மன்றம்—விளக்கு எரிந்துகொண் டிருக்கிறது. கவிஞர் எழுதிய மக்கள் விடு தலைப் பாட்டு ஒன்றை அல்லி பாடிக் கொண்டிருக்கிறாள். கவிஞர், அந்தப் பாடலை ரசிக்கிறார்.)

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்

போம்

பொது உடைமைக் கொள்கை
திசையெட்டும் சேர்ப்போம்.
புனிதமோடதை எங்கள் உயிரென்று
கர்ப்போம்.
இதமெல்லாம் அன்பு நதியினில்
நனைப்போம்
'இதுனனித'ன்றுமோர் கொடுமையைத்
தவிர்ப்போம்.
உணர்வெனும் கனலிடை அமர்வினை
எரிப்போம்
'ஒரு பொருள் தனி' எனும் மனிதரைச்
சிரிப்போம்
இயல் பொருள் பயன்தர மறுத்திடல்
பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும்
புசிப்போம்." (புதிய)
— பாரதிதாசன்

பாட்டு முடிந்ததும்,

கவிஞர்: அல்லி! என்னதான் கருத்துக்களை அள்ளிக்கொட்டி கவிதை எழுதினாலும், அது உணர்ச்சிவயப்படுபவர்கள் வாயிலாக வெளிக் கிளம்பும்போதுதான், எழுச்சி விருந்தாக, எழையர் நலிவு போக்கும் மருந்தாக பயனபட முடிகிறது!...

(அப்போது மன்றத்தின் கதவு தட்டப் படும் சப்தம் கேட்கிறது.)

கவி: யார்—பொன்னழகனுயிருக்கும்...

அல்: இல்லையே, அவர் காலையில்தானே வருவார்—ஒருவேளை, புதுமைப்பித்தனுக...

கவி: அவன் ஏன் இங்கு வருகிறான்—இனி மேல் இங்குவர அவனுக்குப் பைத்தியமா?

(கதவு மீண்டும் தட்டப்படுகிறது.)

கவி: அல்லி...கதவைத் திறக்காதே—ஒரு வேளை, அரசாங்கத்து ஆட்களாக இருந்தால்...

அல்: யாராயிருந்தால் என்ன.....அதையும் பார்த்து விடுவோமே...

(அல்லி, கதவைத் திறக்கிறாள். புதுமைப்பித்தனும், கருப்புரோஜாவும் கலராணியைத் தூக்கிக்கொண்டு உள்ளே நுழைகிறார்கள்.)

(அல்லி, கவிஞர் இருவரும் திகைப்பு—புதுமைப்பித்தன, கலாராணியை அங்குள்ள ஒரு பலகையில் படுக்கவைக்கிறான். அவள் இன்னும் மயக்கம் தெளியவில்லை.)

கவி: யார் இது?...

புது: கவிஞரே! இன்னும் சந்தேகமா?..... இவள்தான் மந்திரிகுமாரி கலாராணி—நான் சதிகாரன் அல்ல என்று நிரூபிக்க அகப்பட்ட சாதனைக்குரிய பொருள்!—அல்லி!

...இனியாவது என்மீது சுமத்தப்பட்ட பழி நீங்குமல்லவா?...

அல்: மன்னித்துவிடுங்கள்...நான் தங்கள் மீது சந்தேகப்பட்டேனு இல்லையா என்பது தங்களுக்கே தெரியுமே.

கவி: புதுமைப்பித்தரே!... மன்னிக்கப்பட வேண்டியது நானேதான்.

புது: உங்களை மன்னிக்கமாட்டேன் கவிஞரே—சரியானபடி தண்டிக்கப் போகிறேன். நீங்கள், இனிமேல் நாள் ஒன்றுக்கு இருபது கவிதைகளாவது எழுதவேண்டும்!

கவி: எழுச்சி மிகுந்த வாலிபரே!...தூய்மையான செயலை, துரோகம் என்று கூறிவிட்டேனே; அந்தக் கூற்று, என் இருதயத்தை துளைத்தபடியிருக்குமே—இனி எங்கே நான் கவிதை எழுதுவது!...

புது: மக்கள் மன்றத்தின் நன்மைக்காக, நீங்கள் எச்சரிக்கையோடு நடந்துகொண்டதை நான் தவறு என்று கூறமாட்டேன். ஆனால், எனக்குத் தரப்பட்ட சோதனைதான் மிகக் கடுமையானது!.....அதையும் நிறை வேற்றி விட்டேன். என்மீது படிந்த மாசை அகற்றியும் விட்டேன்—வருகிறேன்.

அல்: எங்கே போகிறீர்கள்?

புது: அல்லி!...நான் எங்கே போவேன்—மணிமகுடபுரியின் புதுவாழ்வுக்காக எங்கெங்கு நின்று பணிபுரிய முடியுமோ—அங்கெல்லாம் போவேன்—மக்களுக்காக உழைப்பேன்—மதம், சமூகக் கட்டுப்பாடு, மன்னராட்சியின் கொடுமை, மந்திரியின் ஆதிபத்யம்—அத்தனையும் சாடுவேன்!

அல்: தனியொருவராக நின்று?...

புது: இல்லை—இந்த மக்கள் மன்றத்தின் சிலராக நின்று! அல்லி!...முடியாது என்று கூறுகிறாயா?...நான் எடுத்துக்கொண்டிருக்கிற வேலை, நானே தனியாக செய்து முடிக்கக்

கூடிய வேலைதான்—முன்பு கூறினேனே; 'மணிமகுடம்' பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்று; அந்த முயற்சியில் ஈடுபடப் போகிறேன். அந்த ஒரு ஏடு, நாடு முழுதும் நமக்குத் தொண்டர்கள் இருப்பதுபோல! குரு பீடம்—அதிகார பீடம்—அவைகளின் பிரச்சார பீடம்—இந்த மூன்று பீடங்களும் தூள் தூளாக நொறுங்கும்வரை, மணிமகுடபுரி மக்கள் கைக்கு மாறும்வரை, புதுமைப்பித்தன் மறையமாட்டான.

கவி: இதே வேலையைத்தானே மக்கள் மன்றமும் செய்கிறது. நீங்கள் மாத்திரம் பிரிந்து சென்று போராடுவானேன்?...

புது: வேலை ஒன்றுதான்—ஆனால் முறை வேறு!...இதோ இந்த மந்திரிகுமாரி மயக்கம் தெளிந்தால்தான் எழுந்து நடமாடுவாள் என்கிறேன் நான்!...ஆனால், மக்கள் மன்றமோ, மயக்கத்தைத் தெளிவிக்காமலே அவளைத் தூக்கி நிறுத்தினால் போதும்—நடக்க ஆரம்பிப்பாள் என்கிறது!

கவி: புரியவில்லையே.

புது: மந்திரிகுமாரிக்குப் பதில் மணிமகுடபுரி என்று நினைத்துப் பாருங்கள்; புரியும்! மதவெறி, ஜாதிவெறி, கடவுள்வெறி, முதலிய மயக்கங்கள் தெளிந்தபிறகே, மக்களாட்சி நிலை பெறமுடியும் மணிமகுடத்தில் என்கிறேன நான்.

கவி: நாங்களும் ஒத்துக்கொள்ளுகிறோம்.

புது: ஆனால் சொல்வதில்லை—செயலில் காட்டுவதில்லை! நான சொல்லப் போகிறேன் - எழுதப் போகிறேன் - செயலில் காட்டப் போகிறேன் - மக்களை மக்களாட்சிக்குத் தயார் படுத்தப் போகிறேன். என் வேலைகளுக்கு, மக்கள் மன்றத்தின் ஆதரவு இருந்தால் போதுமானது - வருகிறேன.

அல்: நான் சொல்லுகிறேன்—தரங்கள் போகக்கூடாது. முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் - உங்களது கொள்கைகளை மக்கள் மன்றம், விரைவிலே ஏற்றுக்கொள்ள நான பொறுப்பாளி!...

புது: ஏற்றுக்கொண்டால், என்னைப்போல மகிழ்ச்சி அடைகிறவர்கள் யாரும் இருக்க முடியாது. அல்லீ!.....மக்கள் மன்றத்திலே மாறுதல்களைச் செய்யுங்கள்!... அறிவு ஒளி பரப்புங்கள் - அறப்போர் நடத்துங்கள் - அத்தனைக்கும் நான் நடத்தும் 'மணிமகுடம்' போராதரவு தரும்!...என்னுடைய மணிமகுடம், மக்களுக்காகத்தான்! மக்களை திருத்துவதற்காகத்தான்!...ஆனால், நான் இங்கு இருக்கவேண்டுமென்று மட்டும் விரும்பாதே அல்லி!...ஒரு முறை சந்தேகத்துக்குரியவனாகி விட்டவன நான் - இனியும் இங்கிருப்பது சரியல்ல...

அல்: எத்தனை முறை வேண்டுமானாலும் இதுதான் பதிலா?...

புது: என்னை மன்னித்துவிடு!.....நண்பர் பொன்னழகனிடம் என் முடிவுகளைச் சொல்லு - முடிந்தால் விரைவில் சந்திப்போம். கலாராணி, மயக்கம் தெளிந்து எழும்வரை யாரும் அவளை எழுப்பவேண்டாம் - இன்னொன்று- கலாராணிக்கும் அரசனுக்கும் திருமணம் நடத்த மந்திரி முயல்வது உண்மைதான் - அந்தத் திருமணத்தை நடைபெறாமல்செய்ய, இவளை இங்கேயே ரகசியமாகப் பூட்டி வையுங்கள் - ஜாக்ரதை கவிஞரே! வணக்கம். அல்லீ ...கதவைத் தாளிட்டுக்கொள்!...

(அல்லியின் வாட்டம்)

(புதுமைப்பித்தன் பின்னாலேயே அல்லி, கதவைத தாளிட செல்லுகிறாள்)

புது: ஏன் அல்லி, இவ்வளவு வாட்டம்?

அல்: அல்லி எப்போது வாடும் என்று, கவிதை எழுதுபவர்களைக் கேட்டுப் பாருங்கள்...

புது: அல்லீ..... (திரும்புகிறான்)

(அவள், சோகத்தாடு முகத்தை மூடிக் கொண்டு திரும்பி வந்துவிடுகிறாள். அவனும், கருப்புரோஜாவும பேசிவிடுதல்.)

—(திரை)—

* * *

காட்சி 15.

விதி.

"மணிமகுடம்" என்ற பத்திரிகையை ஒருவன் கூவி, விற்றுக் கொண்டு போகிறான். மக்கள் பரபரப் போடுவாங்குகிறார்கள்..... கூடிக் கொண்டு ஒரு பத்திரிகையைப் படிக்கிறார்கள்.

ஒருவன் படிக்கிறான்.

"மணிமகுடம்"

"ஆசிரியர்—புதுமைப்பித்தன்"

தின இதழ்—விலை ஒரு பணம்.

கொடிக்காலை அழித்து கோயில் கட்ட கொற்றவன் கையெழுத்திட்டது உண்மை தானே?

"ஆயிரம் குடிசைகளை அழித்துவிட்டு அங்கே ஆலயம் அமைக்கும் அக்கிரமத் திட்டத்திற்கு, அரசன் உடன்படவில்லை யென்றும், கையெழுத்திட்டு விட்டார் என்று செய்தி பிரசுரித்தது அரசாங்க பிரச்சார பீடத்தின் பகிரங்க மோசடி என்றும் மணிமகுடத்தின் ஒற்றன் கூறுவதை, மந்திரியோ, குருநாதரோ, சீமான் சபையோ மறுக்க முடியுமா?....."

இந்தச் செய்தி படிப்பதை, அல்லி அங்கு தினறு மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டிருக் கிறாள். அவளுக்கு ஒரே குதூகலம்.

அவர்களிடம் அல்லி, ஓடி வந்து,

அலி: அய்யா....அய்யா....அந்தப் பத்திரி கையை எனக்குத் தருவீர்களா?...

அவ: முடியாது—முடியாது—நாங்க படிக் கணும்

(வேகமாகப் படித்தல்)

"குருநாதரின் கோரதாண்டவம்—ஒரு சிறு கதை"

(அல்லியைப் பார்க்காமலே, பதில் சொல்லிவிட்டு, பத்திரிகையைப் படித்த வன், பிறகு அல்லியை நிமிர்ந்து பார்த்து விட்டு, வியப்புடன்.)

அவ: அடேடே—நீங்களா?...இந்தாங்க—
(பத்திரிகையைத் தருகிறான்)

(தரும்போதே, படித்துக் கொண்டு தருகிறான்)

"மந்திரிகுமாரி—ஒரு தொடர்கதை—மர்மங் கள் நிறைந்தது!....."

அலி: சரி—சரி—நீங்கள் படியுங்கள்—நான் வேறு வாங்கிக் கொள்கிறேன்—

(ஓடி விடுகிறாள் உற்சாகத்துடன்.)

காட்சி 16

[மக்கள்மன்றம்-ஒரு அறையில் பொன் னழகனும், கலாராணியும் இருக்கிறார் கள்.]

கலா: நான் இங்கிருந்து தப்பி ஓடிவிடு வேனே என்று சந்தேகப்படவே வேண்டாம். நான் இங்கிருக்கும் விஷயம் அப்பாவுக்குத் தெரிந்து அவர் என்னை மீட்டு விடுவாரோ என்றும் கவலைப்பட வேண்டாம்-நான் இங்கி ருக்கவே விரும்புகிறேன்.

பொ: நீ சொல்வது உண்மையாகவும் இருக் கலாம். ஆனால், இதை நம்புவதற்கு இன் னும் பல நாட்கள் ஆக வேண்டும். மன்றத் தில் உறுப்பினராக விரும்புகிறவர்களையே நாங்கள் எளிதில் நம்புவதில்லை. ஒரு மந்திரி மகளை நம்புவதென்றால்...

கலா: எத்தனையோ முறை கேட்டுவிட்டேன்-சரியான பதில் இல்லை-இப்போதாவது சொல் லுங்கள்; என்னை அபகரித்த காரணம் என்ன?...

பொ: அதுதான் சொன்னேனே; அரசனுக் கும் உனக்கும் திருமணம் நடக்கக்கூடாது என்றுதான்!...

கலா: சரி! அரசனை மணக்கவில்லை-பிறகு என் கதி?

பொ: இந்த அவசரத்தில் அதையும் தீர்மா னித்துவிட வேண்டுமா?

கலா: தீர்மானித்துக் கொள்வது, என் உள் ளத்திற்கு ஒரு திருப்தி-

பொ: திருமண விஷயங்களைப் பெண்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்...

கலா: அதை ஆண்கள் எதிர்க்கக்கூடாது; இல்லையா?...

பொ: ஆமாம்!...

கலா: ஒன்று கேட்கிறேன்-நான் இங்கேயே இருக்கிறேன்; திரும்ப அரண்மனைக்குப் போக வில்லை என்று சொல்கிறேனே; அதற்கு என்ன காரணம்?

பொ: மக்கள் இயக்கத்தின் மீது உனக்குப் பற்றுதல் இருப்பதாகச் சொன்னாயே; அது தான் காரணம்-இன்னும் என்ன புதிய கார ணம்?...

கலா: தூரத்திலேயிருந்து பார்க்கும்போது சோலையின் பசுமை நிறைந்த அழகு, ஒரு இளம்பெண்ணை அருகே அழைக்கிறது-

சோலைக்குள்ளே நுழைந்துவிட்ட அந்தப் பெண்ணை அங்குள்ள ஒரு பொன்மலர் கவருகிறது!...அந்த மலரை தன்னுடைய மெல்லிய கரங்களால் கொய்து, கூந்தலில் சூடிக் கொண்டு குதூகலமடைகிறாள் அவள்!... இதிலிருந்து என்ன தெரிகிறது?

பொ: பெண்களுக்கு மலரின் மீது ஆசை என்று தெரிகிறது...

கலா. அய்யோ!...எவ்வளவு பெரிய உதாரணத்தை சாதாரணமாக்கி விட்டீர்கள்-அதாவது, அந்தப் பெண்ணை சோலையும் கவருகிறது-அந்த ஒருமலரும் கவருகிறது-

பொ: ஆமாம்-

கலா: சோலைக்கு வந்தவள், அந்த மலரை மட்டும் பறிப்பானேன்?...

பொ: பிறகென்ன? இலை தழைகளையா பறிப்பாள்?

கலா: அதல்ல நான் சொல்வது...

பொ: சொல்வதை சுற்றி வளைக்காமல் சொல்லு.

கலா: மக்கள் மன்றம் என்னைக் கவர்ந்த சோலை!...அங்கே நான்குமகிழ ஆசைப்படும மலர்...மலர்...

பொ: (சந்தேகத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டே, பேச்சைமாற்றும் எண்ணமுடன்) கலாராணி! மக்கள் மனறத்தை தோட்டமென்று எண்ணிக் கொண்டால்தானே மலரை நினைத்து வாட்டமடைய வேண்டியிருக்கிறது; மக்கள் மன்றம் ஒரு பாசறை என்று எண்ணிக்கொள்!... பாடிவீடு என்று கற்பனை செய்துகொள்!

கலா: அங்கேயும் போர்வாள் உண்டே; வீரபபெண்களைக் கவர அது போதாதா?

பொ: நீ குறிப்பிடும் போர்வாள்-மலர்-இவைகளுக்கெல்லாம் பொருள் என்ன?

கலா: போர்வாளுக்கும் மலருக்கும் நீங்காத தொடர்பு இருக்கிறதல்லவா?

பொ: வெற்றி பெற்ற வாளுக்கு மலர்மாலை சூட்டுவார்கள்; வீரர்கள்! அதைத்தானே சொல்லுகிறாய்...

கலா: ஆமாம்-நீங்கள் போர்வாள்!...நான்...

பொ: கலாராணி!...(விஷமப்புடன் பார்க்கிறான்)

கலா: நான் மலர் என்கிறேன்-

பொ: தவறான நினைவு-மிகத் தவறான நினைவு-உன் கருத்தை உடனடியாக மாற்றிக் கொள்!...

கலா: மாற்றிக் கொள்ள முடியாது! என்றைக்கு என்வீட்டில் உங்களைப் பார்த்தேனோ என்றைக்கு உங்கள் ஆவேசம் நிறைந்த அழகு மொழிகளைக்கேட்டேனோ; என்றைக்கு மக்களின் நலத்திற்காக ஒலித்த அந்த வீரக் குரலை ரசித்தேனோ; அன்று முதல் அடிமையாகிவிட்டேன்! அமைச்சர் மகள் என்பதை மறந்து விட்டேன்-கனவிலே-நனவிலே-கண்ணைத் திறந்தால் காணும் பொருள்களிலே-மூடினால், இமைக்கதவுகளின் உட்புறத்திலே-தங்களது திருவுருவத்தையே கண்டேன்!... மீண்டும் சந்திப்போமா என்று ஏங்கினேன்-சந்தித்தேன்-சந்தோஷத்தின் சிகரத்தில் நின்றேன்-ஆனால், இன்று தங்களின் சொற்கள், என்னைத் துன்பக்கடலில் ஆழ்த்தியே தள்ளி விடுகின்றன-தயவு செய்து என்னைத் தவறாக எண்ணுதீர்கள்-மந்திரி மகள் என்பதற்காக மட்டும் என்னை வெறுத்து விடாதீர்கள்... உப்புக் கடலிலேதான் ஒளி முத்தும் இருக்கிறது! அதை மறந்து விடாதீர்கள்!

பொ: வேறு ஏதாவது பேசு!-

கலா: எதைப் பேசினாலும், எதை நினைத்தாலும்-சுற்றி சுற்றி இங்கேதான் வருவேன். நீங்கள் ஒரு வார்த்தை கூறிவிடுங்கள் போதும்; நீங்கள போர்வாள்-நான் மலர்!...

பொ: என் மனதைக் கவர்ந்த மலர், இந்த மன்றத்திலேயே இருக்கிறது!..நீ குறிப்பிட்டாயே; அந்த லக்ஷணங்கள் அத்தனையும் பொருந்திய புரட்சி மலர்!...

கலா: அல்லி மலரா?...

பொ: ஆம்-அல்லிதான்!

[அப்போது அல்லி வருகிறாள், கையில் "மணிமகுடம்" ஏட்டுடன்]

அல்லி: புதிய பத்திரிகை பார்த்தீர்களா?... "மணிமகுடம்"-ஆகா!...மக்களின் குரல் இதுதான்!...புதுமைபபித்தனின் எழுத்தா? பெரங்கி வரும் புது வெள்ளமா?-கட்டுரையா? கடல் அலையா?...சொற்கூட்டமா? சூறைக்

காற்று? என்றெல்லாம் புகழ்ந்திருக்கள், மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று!...இனி, குருநாதர் தொலைந்தார்! போலிப் பத்திரிகை தலையெடுக்க முடியாது! அமைச்சரின் அடக்குமுறைகள் தூள்! தூள்!!

பொ: நீயே புகழ்ந்து கொண்டே யிருக்கிறாயே; இப்படிக் கொடேன் பத்திரிகையை!

அலி: (பத்திரிகையை கண்களில் ஒத்திக் கொண்டபடி)

ஆகாகா! நாட்டையே ஒரு கலக்கு கலக்கி விட்டது இந்த லட்சிய ஏடு!

[என்றபடி பத்திரிகையை பொன்னழகனிடம் கொடுக்கிறாள். பின், கலாவைப் பார்த்து]

அலி: என்ன, சலாராணி! மன்றத்துவாசம் எப்படியிருக்கிறது?...நீ இன்னும்உணவருந்தியிருக்க மாட்டாயே; வா! போகலாம்-(கையைப் பிடித்து அழைக்கிறாள்)

கலா: இல்லை—பிறகு சாப்பிடுகிறேன்—நீபோ!

அலி: ஊஹூம்-நீயும்வா! (என்று அழைத்துப் போகிறாள்)

பொன்: [தனக்குள்ளாக] நிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்பார்கள்... அரசனிடமிருந்து இவளைப் பிரித்தால்-இவள் நம்மை விட்டுப் பிரியமாட்டேன்-என்கிறாள்!...வேடிக்கையான பெண்கள்!

(மணி மகுடம் ஏட்டைப் புரட்டிப் படிக்கிறான்)

— திரை —

* * *

காட்சி 17

குருநாதர் மடாலயம்.

(அமைச்சர், குருநாதர், அரிஹரநாதர் மூவரும் இருக்கிறார்கள்)

அரிகரநாதர்: (கையிலே மணிமகுடம் ஏட்டுடன்) இந்த நிலைமைகளை வளரவிடக்கூடாது! மாற் அந்த புதுமைப்பித்தன்? அவன் எங்கே இருக்கிறான் என்று கண்டுபிடிக்க வேண்டும். அரசன் கையெழுத்துப் போடாத செய்தி அவனுக்கு எப்படிதெரியும்? அவசரமாகவும் அவசியமாகவும் கவனிக்க வேண்டும் அமைச்சரே! இல்லாவிட்டால், நாமெல்லாம் தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான்!

குரு: அரிஹரநாதரே! பதருதீர்-ஒரு பத்திரிகை ஆசிரியர் இப்படிப் பதறலாமா?

எத்தனையோ பொய்களைத் திரிக்கவும், உண்மைகளை மறைக்கவும் கற்றிருக்கிற நீர், இதற்கு பயப்படலாமா?...அமைச்சரே! நான் சொல்லுகிறேன்; உமது விசேஷ அதிகாரத்தை உபயோகித்து, உடனே கொடிக்கால் நகரை காலி செய்ய வேண்டும்! கோயில் எழுப்பும் தீர்மானமும் அழலுக்கு வரவேண்டும்...

அரி: சரியான யோசனைதான்!...தீர்மானம் செயலுக்கு வராவிட்டால், 'மணிமகுடம்' பத்திரிகைச் செய்தியை மக்கள் உண்மை என்று நம்பிவிடுவார்கள். இப்போதே உத்தரவிடுகிறேன்; கொடிக்கால் நகரம் காலி செய்யப்பட வேண்டும்-கோயிலுக்கான முன்னேற்பாடுகள் நடைபெற வேண்டும்.

அரிஹ: சபாஷ்! சபாஷ்!...மக்கள் தொண்டன் முன்பக்கத்திற்கு ஒரு முக்கியமான செய்தி கிடைத்தது.

(திரை)

* * *

காட்சி 18.

கொடிக்கால் நகரம்.

ஏழைகளின் குடிசைகளிலே அரசாங்க வீரர்கள் நுழைந்து கொடுமை புரிகிறார்கள். வீடுகளின் கூரைகள் பிரிக்கப்படுகின்றன. சுவர்கள் இடிக்கப்படுகின்றன. குழந்தை குட்டிகளோடு நடுத்தெருவிலே கிறகிறார்கள் கொடிக்கால் நகரத்து மக்கள்.

கிழவன்: (தள்ளாடியபடி) இது என்னய்யா அக்கிரமம்—முன் எச்சரிக்கை கூட செய்யாமல், இப்படி குழந்தை குட்டிகளோடு எங்களை நடுத்தெருவிலே விடுறீங்களே; இது கடவுளுக்கே அடுக்குமா?...

தலைமை வீரன்: கடவுளுக்கு அடுக்கு மாளிகை கட்டத்தான், உங்களையெல்லாம் ஓடச் சொல்கிறோம். ஏ, கிழவா!—எதிர்த்துப் பேசினால் என்ன நடக்கும் தெரியுமா?...

கிழ: இதைவிட இன்னும் என்ன நடக்க வேண்டும்?... அட பாவிகளே!...ஊரங்க எங்க போயி சந்தியிலே நிற்போம்?...

த. வீர: சீ, இழுட்டு நாமே!...தள்ளிப் போ—வேலே நேரத்திலே குறுக்கே நின்று கொண்டு!...போடா போ!...

[ஒரு வாலிபன், அவன் மனைவி, குழந்தை மூவரும் ஒரு வீட்டிலிருந்து வெளியேற்றப் படுகிறார்கள். குழந்தையின் பொம்மையை ஒரு வீரன், தூக்கி எறிகிறான், மற்ற சாமான்களோடு!—]

குழந்: அப்பா-அய்யோ-என் பொம்மை!... (என்று அழுகிறது.)

அப்பா: சீ-குடும்பமே நாசமாகுது-உனக்கு பெரம்மை வந்ததா பொம்மை-(என்று அடிக்கிறான். குழந்தை அழுகிறது.)

[இன்னொரு வீட்டுக்காரனை அடித்தபடி இழுத்து வருகிறார்கள். அவன் மனைவி பின்னால் அழுது கொண்டே வருகிறாள்.]

அ. மனைவி: அய்யா—அவரைவிட்டு விடுங்கய்யா—உங்க உத்திரவுப்படி நாங்க இந்த இடத்தை காலி செய்துவிடுகிறோம்...

த. வீர: சீ—பேசிக் கொண்டே உயிரை வாங்காதே—இந்த தடியன் எங்களை எதிர்த்துப் பேசுகிறானே...அவ்வளவு திமிரா இவனுக்கு?...(அடிக்கிறார்கள். அவன் உடம்பெல்லாம் ரத்தம் வழிகிறது.)

அடிபடும் மனிதன்: ஏனய்யா அடிக்கிறீர்கள்?...எங்கள் பிழைப்பிலே மண்ணைப் போட்டு, இருக்கவும் இடமில்லாமல் வயிற்றிலே அடித்து விட்டீர்களே; இன்னுமா அடிக்க வேண்டும்? அய்யோ! அம்மா!

[சவுக்கடிகள் விழுகின்றன. அவன் துவளுகிறான். அப்போது, அல்லி-பொன்னழகன் தலைமையிலே மக்கள் மன்றத் தொண்டர்கள் ஓடி வருகிறார்கள்.]

அல்: நிறுத்துங்கள்!...(அந்த மனிதனுக்கு நேராக நின்று, சவுக்கைப் பிடித்துக் கொண்டு) எதிர்க்கத் தெரியாத ஏழைகள் மீது வெறியாட்டம் நடத்தும் கோழைகளே!—நிறுத்துங்கள்!...ஏன் அடிக்கிறீர்கள் அவரை?

த. வீர: நீயார் காரணம் கேட்க? மணிமகுட புரியின ஆட்சிபீடம் கட்டளையிட்டிருக்கிறது!

அல்: முடியாது—மூர்க்கனே! ஆயிரம் குடிசைகளுக்குத் தீயிட்டுவிட்டு ஆலயம் அமைக்கும அதிமேதாவிகளின் படைத்தலைவனே! இருதயத்தை எடுத்தெறிந்துவிட்ட உன் போன்றவர்களுக்குத்தான், மணிமகுட புரி ராணுவத்திலே உயர்ந்தவேலையா? நீங்கள் என்ன மனிதர்கள்தானு; இயந்திரங்களா? ஏழைகளின் குடிசைகளைத்தான் காலி செய்ய வேண்டுமென்று உத்திரவே தவிர, அவர்களின் எலும்பு உடல்களையும் காலி செய்து, அந்த எலும்புக் கூட்டுக்குள்ளே ஆண்டவனுக்கு பூஜை விளக்கு ஏற்றி வைக்கவேண்டுமென்று, கூறியது யார்? யார் கூறியது?—

த. வீர: குருநாதர் உத்திரவு! அமைச்சர் அங்கீகாரம்! அரசனின் கையொப்பம்! எங்கள் சவுக்கு நுனிகளுக்கு சரியான வேட்டை!

அல்: வேட்டையாடுவீர்கள், வீரர்களே; வேட்டையாடுவீர்கள்! மக்கள், மாக்களாய் உள்ளவரையில்! கோழையின் கண்களில் அனலுக்குப் பதில், புனல் இளம்பும்வரையில்! வேட்டையாடப்படும் மனித சமுதாயத்தின் இரும்புக்கை, உங்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உயரும்வரையில்! வேட்டையாடுவீர்கள்! நடமாடும் கோயில்களை அழித்து விட்டு, குருநாதனுக்காக ஒரு கோயில் கட்டும் குருடர்களே!...குறைமதி கொண்ட வீணர்களே! நாட்டையாள வழியின்றி, மக்களை வேட்டையாடிய நாசகாலர்கள் எல்லாம், சரித்திரப் பள்ளத்தாக்குகளிலே, கள்ளிக்காடுகளாய் முளைத்துப் போய்க் கிடக்கிறார்கள் என்பதை நெஞ்சிலே நிறுத்துங்கள்!

த வீர: என்ன? ஆண்மை கொண்ட வீரர்களின் அணிவகுப்புக்கு எதிரே; ஒரு அற்பப் பெண்ணுக்கு இவ்வளவு நெஞ்சழுத்தமா?—

அல்: (சிரித்து) தவறான கணக்கு ராணுவத் தலைவரே, மிகத் தவறான கணக்கு!—பெண்கள் வெறும் மஞ்சத்து ராணிகள் மட்டுமல்ல; நெஞ்சத்தில் பழி ஏற்றுவிட்டால், நெஞ்சத்தில் விட மாட்டோம்; உம்போன்றோர் அதிகாரம் பஞ்சாய்ப் பறக்கும்வரை! ஏனை ஆட்டம் மட்டும் கற்றதில்லை இந்தக் கை! வெறியர்களின் ஆணையை உடைக்கவும் கற்றிருக்கிறது! கலை காட்டி, நாட்டின் நிலை காட்டும் அழகு சுந்தரிகள் மட்டுமல்ல பெண்கள்; உன போன்ற கொடியோர்கள் தலை காட்டினால் அதை கொறுக்கி எறியவும் தெரிந்தவர்கள்! "வீரப் பெண்மணிகள் ஒரு நாட்டின் வெற்றித் திருவிளக்குகள்" என்பதை பெண் என்றால் மாயமெனக் கூறும் பித்தனும் உங்கள் குருநாதர்தான் மறுப்பார்— வாள் பிடிக்கத் தெரிந்தவரே!—யோமா மறுக்கிறீர்!--வெட்கம்! வெட்கம்!—

த. வீர: பேர்தும் உன் பிரசங்கம்.—

பொன்ன: கண்பனே—பிரசங்கமாகத்தான் தெரியும்—பின்னடைந்து போனவரின புண்ணடைந்த நெஞ்சிலிருந்து புறப்படும் அழுகுரல்—பிரசங்கமாகத்தான் தெரியும்—யாருக்கு?—காதுகளின் கர்ண பேரிகை கிழிந்துவிட்ட காட்டு ராஜாக்களுக்கு!—கனக மணிக் கட்டிலேயும், அமுத மொழி மாதரையும் மட்டுமே கண்டு கண்டு கண்களிலே சதை வளர்ந்துவிட்ட சல்லாப சுந்தரர்களுக்கு—ஏழைகளின் ஆவேசக்குரல், வீழ்ந்த பேர்னவர்களின உரிமை முழக்கம், பிரசங்கமாகத்தான் தெரியும்—

1. வீர: இவன் என்ன உளருகிறன்?

2. வீர: இல்லே—கத்துகிறன்—

பொன்: கழுதைக்கு கற்பூர வாசனே தெரியாதுதான், அப்பனே!—பிரசங்கம்—உளரல்—கத்தல்—தூஷணை—இந்தக் கேடயங்களால் விடுதலைக் கணைகளை அதிக நாள் தடுத்துக் கொண்டிருக்க முடியாது.

வீர: சரி—இப்போது எங்கே வந்தீர்கள்?—என்ன செய்வதாக உத்தேசம்?

அல்: எங்கள் சொந்தக்காரர்களை, அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, அப்பா அம்மா, அனைவரையும் காப்பாற்ற வந்தோம்—ஆயிரம் வீட்டுக்காரர்களை அவதியிலிருந்து விடுவிக்க வந்தோம்—சுருக்கமாகச் சொல்லட்டுமா? இந்த சுருண்டு போனவர்மீது பாயும் உங்களைப் போன்ற சூரப்புலிகளை தடுத்து நிறுத்த வந்தோம்—

வீர: அரசாங்கத்திற்கு எதிராக?

அல்: இல்லே...அநியாயத்திற்கு எதிர்க்க!

வீர: ஆண்டவனுக்கு விரோதமாக?

அல்: இல்லே...அன்புக்குத் தோழர்களாக!—

வீர: எம்மைத் தடுக்க முடியாது உங்களால்!—உம்—நடக்கட்டும்!

அல். அதையும் பார்ப்போம்—

(என்று—அல்லி, கைகளை விரித்தபடி எதிரே நின்று.)

அல்: எங்களையெல்லாம் பிணமாக்கிவிட்டு, அந்த ஏழைகளைத் துரத்துங்கள். உம்! நடத்துங்கள், நீங்கள் கைக்கொண்ட கல்ல காரியத்தை!—

பொன்: வீரர்களே!-திரும்பிவிடுங்கள்-மன்னனிடம் சொல்லுங்கள்-மக்கள் போக மறுக்கிறார்கள் என்று!-கொடிக்கால அழித்து கோயில் எழுப்புவது-எவ்வளவு எதிர்ப்புக்குரிய செய்தி என்பதை அரசன் உணரட்டும்-ஆட்சிபீடம் உணரட்டும்!-

நலிவு வீர: முடியாது-எனப்பா நிற்கிறீர்களா? (மற்ற வீரர்களை நோக்கி) இவர்களையும் அடித்துத் துரத்துங்கள்!-

(பொன்னழகன், அல்லி, முதலியோர் அடி வாங்குகிறார்கள். அல்லிக்கு தலையிலே ரத்தம் வழிகிறது-இவைகளையெல்லாம், புதுமைப்பித்தன், ஒரு பக்கமிருந்து கவனிக்கிறான். அவன் கையிலே சிறிய துப்பாக்கி இருக்கிறது. ஒரு வீரன பொன்னழகனை முதுகுபக்கமாக குத்த வருகிறான். அப்போது, புதுமைப்பித்தன், அந்த வீரனை சுட்டு வீழ்த்தி பொன்னழகனைக் காப்பாற்றி விட்டு மறைந்து விடுகிறான். வீரர்கள் அதிர்ச்சியடைந்து மேலே விழுந்த வீரனைத் தூக்குகிறார்கள். குழப்பம் அதிகமாகிறது. பொன்னழகனும், அல்லியும் வீரர்களால் அதிகமாகத் தாக்கப்பட்டு விழுகிறார்கள். குடிசைகள் நாசமாகின்றன. மக்கள் ஓட்டம்-வீரர்களின் பயங்கரமான சிரிப்பு.]

(திரை விழுகிறது)

* * *

காட்சி 19.

மந்திரி வீடு

[மந்திரி குணசீலர் ஆயாசத்தோடு, வஞ்சியிடம்)

குண. ஒரே குழப்பம்-ஒரே குழப்பம்! கலாராணி எங்கு போனாள்-என்ன ஆனாள்-யாரிடம் சிக்கினாள்-எதுவுமே தெரியவில்லை, இதுவரையில்! நான் அதற்காகக் கவலைப்படுவதா; அரசாங்கத்தை எதிர்த்து நாலா புறங்களிலும் இளம்பிவிட்ட புரட்சி சக்திகளைப்பற்றிக் கவலைப்படுவதா? மக்கள் உள்ளத்தையே ஒரு எரிமலையாக மாற்றுகிறான், அந்தப் புதுமைப் பித்தன்! அந்த எரிமலை வெடிக்குமானால், அந்த நெருப்புக் குழம்பிலே உருகிப்போய், மறைந்துவிடும் என அதிகாரம்-அந்தஸ்து-அமைச்சர் பதவி-எல்லாமே!

வஞ்சி: பிரபு-கடற்கரையில் இருந்து கொண்டு, உப்புக்கு அலையலாமா? தங்களின் கவலைகள் அத்தனைக்கும், மருந்தாக இருக்கிறார் குருநாதர். அவரால் முடியாதகலாராணி இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க! புதுமைப்பித்தன், பொன்னழகன், கூட்

டத்தை சபித்தே பேசுக்கிவிடலாமே; அவர் கீனைத்தால்!

குண. சரிதான், நீ சொல்வதைப் போல் தான அந்த குருநாதரிடம் சொன்னால், அவர் என்னேப்பார்த்து என்னதெரியுமா கேட்டார்? புதுமைப்பித்தன் ஆவி, அமைச்சர் உருவத் தில் வந்திருக்கிறதா என்று கேட்பார்! இது மாதிரி கேள்விகளே, புதுமைப்பித்தன்தான் கேட்கிறான், அவன் பத்திரிகையில்! நாமும் கேட்டால், குருநாதருக்கு கோபம்தான் வரும்!

வஞ்சி: அப்படியானால், குருநாதர், சக்தி யற்றவரா?

குண: சத்தம் போடாதே - யார் காதிலா வது விழப்போகிறது! என்னமோ "நெய்க்குத் தொன்னை - தொன்னைக்கு நெய்" என்பார் களே, பழமொழி- அதுபோல அவருக்கு நான் ஆதாரம் - எனக்கு அவர் ஆதாரம்!

வஞ்சி: இந்தமாதிரி போலி ஆதாரங்களால் புரட்சியை அடக்க முடியாது பிரபு!

அமை: வஞ்சி! நீ ஒன்றும் ஜோசியம் சொல்ல வேண்டாம் - போ! போ!! (போகிறாள்)

(ஒரு காவலன் வந்து)

காவலன்: ப்ரபூ! பத்திரிகாசிரியரும், குரு நாதரும் பல்லக்கில் வந்திருக்கிறார்கள் - தங் களே அவசரமாக பேட்டிகாண வேண்டுமாம்.

குண: அழைத்துவா! அழைத்துவா!

(குருநாதர், அரிஹரநாதர் இருவரும் வந்து அமருதல்)

குண: என்ன திடீரென்று?

(184-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை, வெளியில் சென்றி ருக்கும் உன் கண்வன் வந்த தும் சொல்லிவிட்டுத்தான் இந்த இடத்தை விட்டுப் போகப் போகிறேன்.....பெண்களுக்கு கற்பை எப்படி பூஷணம் என்று மதிக்கிறார்களோ, அதைப் போலத்தான் ஆண்களின் உள் ளத்திலே வளர்ந்த காதலும்! உன்னைக் கற்பழித்து விட் டேன்...என்று உலகம் என்னைத் தூற்றும். ஆனால் 'நீயே என் இதய ராணி' என்றிருந்த என் காதலை அழித்துவிடத் துணிந்த உன்னையும் — உன் தந்தையை யும்—உலகம் ஒன்றும் சொல் லாது. அதனால்தான் உன்னைப் பழிவாங்கினேன். பழியின் சின்னமாக நீ உலவ வேண்டும்! என்னை ஏமாற்ற எண்ணிய உன் தந்தை, வாழ்நாள் முழுதும் நீ சிந்தப்போகும் துயரக் கண் ணீரைக் கண்டு, அணு அணு வாக வாடி உயிர் விடவேண் டும். அதுதான் என் ஆசை! லட்சியம்!!" என்றெல்லாம், கூச்சல் போட்டான். அவளோ, எதற்கும் பதிலளிக்கவில்லை— 'பெப்பே! பெப்பே!!' என்று மட்டும் ஏதோ. சொல்லியபடி விழித்துக் கொண்டிருந்தாள்.

"என்னடி கள்ளி! என்னை ஏமாற்றலாமென்று பாசாங்கு செய்கிறாய்? கையைத்தான் கெடுத்தான் ஒருத்தன் — சந்த ணம் என்று சொல்லி! என் கருத்தையும் கெடுத்துவிட வில்லே, அவன்!! ஊமையாக நடித்த என்னை ஏமாற்றிவிடலா மென்று எண்ணுகிறாய்? முடி யாதடி, கள்ளி! முடியாது!!" என்று ஆத்திரத்தோடு அவளை, நெருங்கும்போது 'நில்!' என்ற குரல் கேட்டுத் திரும்பினன். எதிரே அல்லி நின்று கொண்டி ருந்தாள்! தான் கெடுத்ததாகக் கருதிய அதே அல்லி நின்று கொண்டிருந்தாள்!! கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த் தான்...தன் வெறிக்குப் பலியா கிய அல்லி, அதோ மூலையில் நடுங்கியபடி நின்று கொண்டி ருக்கிறாள். இதோ, ஒரு அல்லி!—நிற்கிறாள்; அருகே சீரகச் செட்டியுடனும், அப்பா அதிமதுரப் புலவருடனும், ஒன் றும் புரியவில்லே அமுதனுக்கு! விழித்தான் — அவர்களையே விழித்துப் பார்த்தான்!!

அதிமதுரம், அமைதியோடு அருகே வந்தார்—

"தம்பி! என்னை மன்னித்துக் கொள். அந்தப் படுபாவியின் சதி யால் வீண் கர்வத்துக்கு ஆளாகி நானும் சபதம் செய்தேன். அதனாலேயே இந்தத் திருமணம் நடைபெற்று விட்டது. உனக்கு அல்லிதானே வேண் டும்! அல்லியிடம் நீ எந்த அழ கைக் கண்டாயோ அந்த அழகை — எந்த நயனங்களை பனி மலர் என்று வர்ணிப் பாயோ அதே பனி மலர்களை— அல்லியைப் போன்ற அதே உருவை, உனக்கும் அளிக் கிறேன். உன்னால் அலங்கோ லப்பட்டு, இதோ மூலையில் நிற்கிறளே—முழுமதி கலைந்தது போல: அவளும் அல்லியோடு பிறந்தவள்தான்; ஆனால். பெயர் ஆதி! அவளை நீ, மணந்துகொள். ஆனால், ஒரு வித்யாசம் — அல் லிக்கும் ஆதிக்கும். அல்லி, இசையறியாத இவருக்கு, 'பேசும் வீணை'யாக யிருப்பாள். பெரிய இசைமணியான உனக்கு பேசுகின்ற வீணை—உன் கரத் திலே யிருக்கிறது! ஆதி, பேசாத வீணை: ஊமை; அவளை, மறுக் காமல் ஏற்றுக் கொள்ளவேண் டும்", என்று இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு கெஞ்சினர்.

அமுதனுக்கு ஒன்றும் புரிய வில்லை! ஆதி, ஓடிவந்து அவன் கால்களைப் பிடித்து கொண் டாள்!! அவன் ஓடி வந்ததா லுண்டான காற்றுப்பட்டு, அமுதவாணனின், வீணையின் நரம்புகள் அசைந்ததால், ஆழ்ந்த அமைதியைக் கலைப் பது போல, சிறு ஒலி எழும்பி, காற்றில் கலந்தது.

அரி: சீமான்கள் சபை, அதிகாரப் பூர்வமில்லாமல் அவசரமாகக் கூடி, நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பங்களை ஆராய்ந்ததாம். கோயில் கட்டுவதற்கு, அரசன் சம்மதிக்கவில்லையென்ற செய்தியை வைத்து காரசாரமான விவாதம் நடைபெற்றதாம். கடைசியாக, அரசனே, சீமான்கள் சபைக்கு வரவேண்டுமென்றும், கோயில்கட்ட சம்மதித்து கையெழுத்திடவேண்டுமென்றும்- அப்படிக்கையெழுத்திட்ட பிறகே சீமான்கள் சபை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்குமென்றும் தீர்மானித்திருக்கிறார்களாம்.

குண: இந்த முடிவுக்குக் காரணம்?

குரு: அந்த மணிமகுடம் பத்திரிகைதான்.

குண: அய்யோ...சீமான்கள் சபையிலும் நமக்கு எதிர்ப்பு ஏற்பட்டால் பிறகு சமாளிக்கவே முடியாதே!

அரி: கொடிக்கால் நகரத்திலே பொன்னழகன் அல்லி நடத்திய மறியலும், அங்கே அரசாங்கம், பெரிய அட்டூழியம் புரிந்ததாக, மணிமகுடம் பத்திரிகையிலே வந்துள்ள செய்தியும் ஜனங்களிடம் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கின்றன. இந்த சமயம் அரசனும், சீமான்கள் சபையும் நம் பக்கம் இல்லாவிட்டால் நமது பதவிகளுக்கு ஆபத்துதான்!

குரு: ஆமாம். சீமான்கள் சபைக்கு அரசன் எப்படியும் வந்தாக வேண்டும். தேவாலயத் தீர்மானத்தில் கையெழுத்திட்டாக வேண்டும்- அதற்கு அமைச்சர்தான் பொறுப்பாளி!...

[அந்த சமயத்தில், பைத்தியக்காரன் போன்ற ஒரு மனிதனை இரண்டு காவலர்கள் உள்ளே இழுத்து வருகிறார்கள், அடித்தபடியே! அந்த மனிதனின் கையில் நூற்றுக்கணக்கான, மணிமகுடம் பத்திரிகைகள் இருக்கின்றன. இழுத்து வரப்படும் அவனை, அமைச்சர், குரு, அரிஹரநாதர் மூவரும் ஆச்சரியமுடன் பார்த்து]

குண: யார் இவன்...?

காவலர்: பிரபு- 'மணிமகுடம்' விற்றுக் கொண்டு போனான். தங்கள் உத்திரவுப்படி இவனைப் பிடித்து வந்தோம்.

குண: சபாஷ்!...குருநாதரே!...மணிமகுடம் எங்கெங்கே யார் யார் விற்கிறார்களோ, அவர்களை மெல்லாம் கைதுசெய்ய ரகசிய உத்திரவு போட்டிருக்கிறேன். அப்படிக் கிடைத்தவர்களிலே இவன் பத்தாவது ஆள்!...

அரி: ஆளைப் பாருங்கள்- பைத்தியக்காரனைப்போல இருக்கிறான். (அவனிடம் வந்து) ஏய்!.....இந்தப் பத்திரிகைக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?...

அவன்: துட்டு கிடைக்கும் விற்றால்! அவ்வளவுதான் சம்பந்தம்!

குண: இதன் ஆசிரியர் புதுமைப்பித்தன் எங்கே யிருக்கிறான்?

அவன்: தெரியாதுங்க...தெருவிலே படுத்திருந்தேன்- திடீர்னு ஒரு ஆள் வந்தார்- இந்தப் பத்திரிகைகளை விற்று துட்டுக்களை நீயே எடுத்துக்க- என்றார். விற்க வந்தேன்- வந்த சமயத்திலே இவர்கள் பிடித்துக் கொண்டார்கள் சாமீ! என்னை விட்டுவிடுங்கள்!...பிரபு! .. நான் போகட்டுமா?...

குண: சீ! எங்கேடா போகிறாய்? (கன்னத்தில் அறைகிறார். காவலரிடம்) ஏய்- இவனைக் கைது செய்து பூட்டி வையுங்கள்! இந்தப் பத்திரிகைகளுக்கு தீ வைக்கச் செய்யுங்கள்!

குரு: ஆமாம் – கண்குளிரப் பார்ப்போம். இங்கேயே கொளுத்தட்டும்!

[காவலர், அவனிடமிருந்த பத்திரிகைகளை வாங்கி, கீழே போட்டு அவன் கையாலேயே தீ வைக்கச்சொல்லி, வற்புறுத்துகிறார்கள். அவன் தயங்குவே, காவலர்கள் அடிக்கிறார்கள் பிறகு, சிறு நெருப்பைத்தால் அந்த ஏடுகளுக்கு அவனே தீயிடுகிறான். தீயிடும்போது- அவன் "யாருமிட்ட தீ முன்கை முள்கவே!" என்று கத்துகிறான். குருநாதன் வெறிச்சிரிப்புடன் பத்திரிகைகள் எரியும் காட்சியைப் பார்க்கிறார்.....அப்போது, அரண்மனை மெய்காப்பாளன் உலகப்பன் அங்கு வருகிறான். அவன் உடம்பெல்லாம் நடுங்குவதுபோல் தெரிகிறது. அவன் பரபரப்பைக் கண்ட]

குண சீலர்; உலகப்பர் – என்ன நடந்தது?

உல: ஆபத்து பிரபு, ஆபத்து! அரசர் அரண்மனையை விட்டு வெளியேறி விட்டார்! ...அரச பதவியைத் துறந்துவிட்டார்!

குண: என்ன?.....

உல: இதோ- அவர் கொடுத்துவிட்டுப் போன கடிதம்.

(குணசீலர் கடிதம் படித்தல்)

"அன்புள்ள அமைச்சர் அவர்களுக்கு,
நாட்டிலே ஏற்பட்டிருக்கும் கெருக்கடிகள் என்னைப் பயமுறுத்துகின்றன. எந்த

நேரத்திலும், புரட்சிக்காரர்கள் கையில் இந்த நாடு சிக்கிவிடலாம். அந்த சமயம் அவர்களால் கைது செய்யப்படுவது, அவமானப்படுவதைவிட இப்போதே ஓடி விடலாம் என்று நீர்மானித்து அதன் படி வெளியேறி விட்டேன். அரச பதவியை மட்டுமல்ல; இந்த உலகத்தையே துறந்து - நிம்மதியாக மேல் உலகு செல்ல முடிவு கட்டிவிட்டேன். என் ஆத்மா சாந்தி அடைவதற்கான சடங்குகள் எல்லாம், குருநாதரைக் கொண்டு நடத்தி வையுங்கள்! எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவி அதுதான்! வருகிறேன்.

மணிமாறன்,
மணிமகுடத்தின் மாஜி மன்னன்."

அரி: நம்முடைய திட்டங்கள் எல்லாம் கவிழ்ந்தன - இந்தச் செய்தி வெளியே தெரிந்தால் போதும் - அடுத்த விநாடியே நமது ஆட்சி ஒழிந்துவிடும் - நாமெல்லாம் சிறைக் கோட்டங்களுக்குத்தான் அலங்கரிக்க வேண்டும்.

உல: அதற்கும் சிறையிலே இடமில்லே - ஆயிரம்பேரை அடைக்கவேண்டிய சிறைகளில் நாலாயிரம் பேரை அடைத்திருக்கிறோம்; ஆடுமாடுகளைப் போல!...

மணிமகுடம் விற்ற மனிதன்: (குறுக்கிட்டு) இவுங்க எல்லாம் உள்ளே போனு, அவுங்க எல்லாம் வெளியே வந்து விடுவாங்களே!

(காவலன், ஆத்திரத்தோடு அவனை அறைந்து "பேசாதே" என்று எச்சரிக்கிறான்.)

குரு: தெருவிலே போவோரும் வருவோரும், ஏழையும், மோழையும், இதுபோன்ற பத்திரிகை விற்கும் அனுதைகளும், கூலிக் கூடுங்களும், அரசாங்கத்தைப்பற்றி பேச ஆரம்பித்தால் அது பெரிய ஆபத்து அமைச்சரே! நான் வெளியிலே சொல்வதில்லையே தவிர, எனக்கு நன்றாய்த் தெரியும். ஒரு தேசத்திலே இதுபோன்ற தேசந்துரோகிகள், (பத்திரிகை விற்பவனைக் காட்டி) கொஞ்சம் தெளிவு பெற்றாலே, பிறகு எப்பேர்பட்ட இரும்பு ஏகாதிபதிகளும் தூள் தூளாகி விடும்!... இந்தநேரத்திலேதான, அமைச்சரே, எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

குண: குருநாதரே! - மேலும் மேலும் பயமுறுத்தாதீர்கள். அரசன இல்லே என்ற செய்தி, நீ போல பரவுவதற்கு முன் ஒரு திட்டம் தீட்டுங்கள்!...

குரு: திட்டம் - நான் தீட்டவேண்டும்

(என்று கூறியபடி...மணிமகுடப் பத்திரிகை வியாபாரியிடம் முன்னேக்கி நடக்கிறார். அவன் முகத்தை உற்றுப் பார்க்கிறார், அவன் மிரளுகிற அளவுக்கு, அங்குள்ளோர் அனைவரும் வியப்படைகிற அளவுக்கு, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார். பிறகு, அங்கு மாட்டப் பட்டுள்ள அரசனுடைய படத்தையும் பார்க்கிறார். படத்தையும் அவன் முகத்தையும் மாறிமாறிப் பார்க்கிறார். திடீரென்று கூச்சலிடுகிறார்!)

குரு: அரசன் கிடைத்துவிட்டான் அமைச்சரே - அரசன் கிடைத்துவிட்டான்!

குண: என்ன?...

உல: எங்கே? எங்கே?.....எங்க ராஜா எங்கே?

குரு: அமைச்சரே!...அரசன், மேல் உலகம் செல்லப்போவதாக ஓலையிலே எழுதியிருக்கிறான் அல்லவா?...சபாஷ்! சபாஷ்!...அப்படியானால் இதோ அரசன் கிடைத்து விட்டான் - நம் மனம் போல் ஆட்டிவைக்க ஒரு மன்னன் கிடைத்து விட்டான்! - (அவனைப் பார்த்து) ஏ! நாடோடிப் பயலே!.....நீ நாடாளுகிறாயா?.....

அவன்: அப்படின்னு என்னங்க?

குரு: நாடு! நாடு!...தேசத்தின் ராஜாவாக ஆகிறாயா என்றேன்.

அவன்: ராஜாவா?.....ஐயையோ!...வேண்டாங்க...ராஜாவுக்க இருந்தா ஆபத்துங்க...

குரு: என்னடா ஆபத்து?... குணசீலரே! ...நமது அரசனைப் போலவே இருக்கிறான், ஏறத்தாழ!...ராஜ உடைகளைப் போட்டால், அரசனுகவே தோற்றமளிப்பான்!.....இது மாதிரி ஒரு பொம்மை, மணிமகுடத்தின் கொலுவை அலங்கரிக்கட்டுமே!..... அரசன் வெளியேறினான என்ற செய்தியையே மூடி விடலாம் அல்லவா?...

குண: ஆமாம் - சரியான யோசனை!...

அரி: யாருக்கும் தோன்றமுடியாத யோசனை ...இவனேதான இனி ராஜா!.....

உல: ஆகாகா!.....சுக்ர தசைதான் - ஆஹா பெரிய அதிர்ஷ்டசாலி!.....

அவன்: நான் ராஜாவா இருக்கமாட்டேங்க - என்ன விட்டுடுங்க...ராஜானா, சண்டைக்கு போகணும - ஜனங்ககிட்ட கெட்டபேரு வாங்

கணும் - எந்நேரமும் வாளும் கையுமா கிக்க ணும் - யாரு படையெடுப்பாரேனு; எவன் கோட்டையை வளைப்பானேனு; அப்படின்னு பயந்து சாகணும்!.....வேண்டாங்க, அந்த உயிர் கொடுக்கிற வேலை!...வேணும்னு; நான் குருநாதராக இருக்கிறேன்.

குண: குருநாதராகவா?...

அவன்: ஆமாங்க...அதாங்க - கஷ்டப்படாம புகழ் வங்குற வேலை!.....கத்தி கபடா தூக்க காம வாழலாம்!.....யார் ஆண்டா என்ன; யார் செத்தா என்ன; நம்ப வாழ்க்கை சுகமா யிருக்கும்!...அந்த வேலையே கொடுங்க!

குண: டே முட்டாள்!...சொல்வதைக் கேள்! நீ ராஜாவாகவே இரு!...ஒரு ஆபத்தும் வரா மல் நான் பார்த்துக்கொள்கிறேன். இதை மறுத்தாயானால், மரணதண்டனை கிடைக்கும் உனக்கு!.....இப்போது சொல், நீ மறுத்து மரண தண்டனை அனுபவிக்கிறாயா? அல் லது, ஒப்புக்கொண்டு - பலருக்கு மரண தண்டனை கொடுக்கிறாயா?...

அவன்: ஒப்புக்கொள்கிறேன் - ஆனால் நான் எல்லாருக்கும் மரணதண்டனை தரமாட்டேன். இந்த நாட்டிலே மூணேபேருக்குத்தான் மரணதண்டனை கொடுப்பேன்.

அரி: யாரப்பா அது?...

அவன்: அவுங்க செத்து போய்ட்டாங்க!... சொன்னா உங்களுக்குத் தெரியாது!...

உலக: செத்து போனவுங்களுக்கு மரண தண்டனையா? சரிதான் - சரிதான்!

அவன்: உஸ்! வீரன் ஒரு தடவைதான் சாவான் - கோழை பலமுறை சாவான்னு - இந்த மணிமகுடம் பத்திரிகையிலேதான் ஒரு தரம் படிச்சேன் (சொல்லிக்கொண்டே பல் இளிக்கிறான்)

குண: ஏய் - இனிமேல் மணிமகுடம் பத்தி ரிகையைப் பற்றி பேசக்கூடாது!

அவன்: மணிமகுட நாட்டைப்பத்தியே பேச ணும்!...சரிங்க!.....ஆமாம் - ஒண்ணு கேக்க மறந்துட்டேன் - நாடகம் எப்போது ஆரம்பத்தப் போறிங்க?.....

குண: நாடகமா?.....

அவன்: நான் ராஜா வேஷம் போடணு மில்லை - அது நாடகமில்லையா?.....

அரி: சரிதான் கொஞ்சம் பைத்தியங்கூட! - நமக்குச் சரியான ஆளதான் - ஏய்!.....நீ இங்கே, நிரந்தர ராஜவா இருக்கணும்—எங் களைப் போல!

அவன்: அப்படிங்களா? சரி சரி!...இப்ப- நிரந்தரமா மந்திரி வேஷம் போட்டிருக்கிறது யாரு?—குருநாதரு வேஷம் போட்டிருக்கிறது யாரு?...இவர் என்ன வேஷம்?...(அரிகரநாத ரைக் காட்டி)

குண: உலகப்பா!... அவனே பேச விடாதே! அவனே அரசனுக்க வேண்டியது உன் பொ றுப்பு! பழையபடி நீயே மெய்காப்பாளனாக இருக்க வேண்டும், இந்தப்புதிய அரசனுக்கு! பழைய அரசன் எப்படியெப்படி நடப்பானோ; எப்படி உடுப்பானோ; அப்படியெல்லாம் பழக்க வேண்டும். சீக்கிரம்-நாளைக்கே இவன் சீமான்கள் சபைக்கு வருவதுபோலத் தயார் பண்ணு!

அரிஹர: ஆமாம்-சபையில் கைமெழுத்துப் போட வேண்டுமே; அதற்கு என்ன செய் வது?

குண: ஆமாம்-என்ன செய்வது? (மோ சிதது) சரி-அரசனுக்கு மூளைக் கோளாறாக இருக்கிறது-சபையோர் விருப்பத்தை முன் னிட்டு, உடல் நிலையையும் பொருட்படுத்தா மல் அழைத்து வந்தோம் என்று கூறிவிடு வது!-எப்படியோ; தற்காலிகமாகத் தப்பிவிட லாமல்லவா?

ஏ, நாடோடி!-நீ நாளைக்கு சீமான் சபையில் மூளைக் கோளாறுள்ள அரசனைப் போலவே நடிக்க வேண்டும்-

அவன்: ஓ! இரண்டு நடிப்பா? சரி!-நாடகமே உலகம்!

(என்று, உலகப்பனைப் பார்க்கிறான்)

குண: உலகப்பா-அழைத்துப் போ!

உலக: வாங்க, ராஜாதிராஜரே வாங்க!

அவன்: ஆகா-என் கருப்பு ராஜாதி ராஜ ரே போங்க!

(போகும்போது, அவன், உலகப்பனைப் பார்த்து கண்சிமிட்ட, இருவரும் ஒருவருக் கொருவர் புன்னகை புரிந்தபடி போகிறார் கள். மணிமாறனேதான், மணிமகுட வியா பாரியாகவும் புதுமைபித்தனாகவும், இப் போது போலி அரசனாகவும் இருக்கின்றான் என்பது, உலகப்பனுக்குத் தெரியாதா என்ன?)

(திரை)

காட்சி 20

வீதி.

'மணி மகுடம்' ஏட்டை ஒருவன் கூவியபடி விற்கிறான். பலரும் வாங்குகிறார்கள். படிக்கிறார்கள், சூழ்ந்து நின்று!

"மணி மகுடம்"-ஆசிரியர் புதுமைப்பித்தன்-கொடிக்கால் நகரில் பொன்னழகன் அல்லி அறப் போராட்டம்-பொன்னழகனை கொல்ல முயற்சி- கொடிக்கால் நகரில் அரண்மனைக் குதிரைப் படைகள் நடத்திய கொடுமைகளைக் கேட்டு, அரசர் மணிமாறனே மனம் நொந்து போயிருக்கிறார்ம்-குருநாதர்-மந்திரி-அரசர் மூவரிடையே கலகம் நடந்து கொண்டிருப்பதாக செய்தி உலவுகிறது. இன்னும் பல உண்மைகள் விரைவில் வெடிக்க இருக்கின்றன.

தலைநகரத்திலே மாபெரும் பொதுக்கூட்டம்-புதுமைப்பித்தன் மீண்ட சொற்பொழிவு-குருநாதருக்கும், மக்கள் தொண்டன் பத்திரிகைக்கும் எதிராக லட்சோப லட்சம் மக்கள் எழுப்பிய முழக்கம், வானை எட்டியது! 'மக்களாட்சி முதலவை' என்று கடல் அலைபோல் ஒலி எழுப்பினர்-கடவுள் பெயரால், மதத்தின் பெயரால்-ஏமாற்றி வாழும் எத்தர்களுக்கு இனி வாழ்விலலை! வளமில்லை!-காட்டில் வேலையுமில்லை! எழுச்சியுற்ற மனிதன்தான்; இனி ஏறுநடை சிங்கந்தான்-கொழித்து விட்ட உமிகள்தான் இனிக் குள்ளநரிக் கூட்டத்தார்-பழித்து விட்டான் பகுத்தறிவால்;

இனி, பக்தி-மதம்-கடவுள் எல்லாம் பாழ்! பாழ்! பாழ்!

(அப்போது அரசாங்க வீரர்கள் படிப்பவர்களை மிரட்டி, அவர்களிடமுள்ள ஏடுகளைப் பிடுங்கி எறிதல்-மணிமகுடம் விற்கும் மனிதனையும் கைது செய்கிறார்கள்)

அதே வீதியில் 'மக்கள் தொண்டன்' ஏடு விற்பவன் கூவுகிறான். அதை யாரும் வாங்கவில்லை-கடைசியாக, வியாபாரியே, ஒரு பத்திரிகையை எடுத்து உரக்கப் படிக்கிறான்-

படிப்பது:

"மக்கள் தொண்டன்-ஆசிரியர் அரிஹர நாதர்-நாளைய தினம் சீமான்கள் சபை கூடுகிறது-கோயில் கட்டுவது பற்றி மேலிலேயே தனது சம்மதத்தை தெரிவிக்க, மணிமகுடபுரி மன்னர் மணிமாற மகாராஜா சீமான் சபைக்கு விஜயம் செய்யப் போகிறார். மன்னருக்கு, உடல் நலமில்லாமல் இருந்தாலுங் கூட, நாளைய தினம் சபைக்கு வந்தபிறகு மகாராஜர், மீண்ட நாள் ஓய்வு எடுத்துக் கொண்டு, உடல் நிலையை சரி செய்து கொள்வார்!"

செய்தி கேட்டவர்கள் வியப்படைதல்-

ஒருவன்: ஏய்-ராஜாவே வர்ராரு; சபைக்கு நாளைக்குப் போகலாண்டா!

(திரை)

* * *

காட்சி 21

சீமான்கள் சபை-பத்து சீமான்களும் அமர்ந்திருக்கிறார்கள். பொது மக்களும் தனியிடத்தில் கூடியிருக்கிறார்கள். குருநாதர், அரிகரநாதர், அமைச்சர் ஆகியோர் இருக்கிறார்கள்.

அமை: (எழுந்து)

பெருமைக்குரிய, மணி மகுடத்தின் பிரதிநிதிகளே! பொது மக்களே! இன்றைய தினம் அரசர் பெருமான மணிமாற ராஜன அவர்கள், நமது சபைக்கு விஜயம செய்கிறார்-சீமான்கள் சபைக்கும், அரசருக்கும் கோயில் கட்டும் சம்பந்தமாக, ஏதோ மனவருத்தமிருப்பதாக வெளி வந்துள்ள செய்திகள் அனைத்தும் பொய் என்பதை நிரூபிப்பதற்காகவே, உடல் நிலை சரியில்லாமலிருந்துங்கூட அரசர் அவர்கள் சபைக்கு வர இசைந்துள்ளார்கள். ஆண்டவன் ஆணையாக, இந்த சீமான்கள் சபையிலே பிளவு ஏதுமில்லை. அரசருக்கும், அதிகாரபீடத்திற்கும், எந்த விதமான அபிப்பிராய பேதமுமில்லை. ஒரே ஒரு வருத்தமான செய்தி என்னவென்றால், நமது மாட்சிமை தங்கிய மன்னர்பிரானுக்கு சிறிது மூளைக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது-சாமராஜ்ய சக்கரவர்த்திக்கு ஏற்பட்டுள்ள அந்த மூளை நோயையும், நமது சனாதன சக்கரவர்த்தி குருநாதர் அவர்கள் தீர்த்து வைப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். விரைவில் குணமாகிவிடும். குணமாக வேண்டும் என்று நாமெல்லாம், ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக! இப்போது அரசர்வரும் நேரமாகிவிட்டது. நான இத்துடன் என் முன்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

[அரசனும், உலகப்பனும் வருகிறார்கள்]

உலக: மணி மகுடபூபதி-மாட்சிமை தங்கிய மன்னர்பிரான்-மணி மாற ராஜன்-வருகை! வருகை!

[அரசன் அங்கு வந்ததும், அனைவரும் எழுந்து வணங்குகிறார்கள். அரசன், கம்பீரத்தோடு அனைவரையும்பார்க்கிறான். அரசபீடத்தில் போய் அமருகிறான். சபையில் நிசப்தம் நிலவுகிறது. அரசன் எழுகிறான். சபையைப் பார்த்து பல் இளிக்கிறான். "அமைச்சரே!" என்று அழைக்கிறான்.]

அமை: அரசே! கொடிக்கால்நகரைப் பற்றிய தீர்மானம்...

அரச: கொடிக் கால்!...கொடிக் கால்!...கொடிக்கு கால் ஏதய்யா? கொடிக்காலாம் கொடிக் கால்!...ஓ!...கொடிக்குக்கால்உண்டு! உண்டு! பெண்களைப் பூங்கொடி என்கிறார்கள். பெண்களுக்குகால் இருக்கிறது; ஆகையினாலே கொடிக்குக் கால் உண்டு...உம்-சரி-அமைச்சரே! என்ன சொன்னீர்?-கொடிக்காலே.....என்ன செய்ய வேண்டும்?

அமை: காலி செய்ய வேண்டுமென்று...

அர: அய்யோ! காலே, காலிசெய்துவிட்டால் எப்படி நடப்பது?...முடியாது முடியாது-நடக்க முடியாது!...இப்படித்தான் நடக்க வேண்டும்...

(என்று நொண்டியைப் போல நடக்கிறான். அதைக் கண்ட சீமான்களும், மக்களும் பரிதாபப்படுகிறார்கள்)

சீமான்: அமைச்சர் அவர்களே! அரசர் உடல் நலமில்லாமலிருப்பதால் அவரை அரண்மனைக்கு அழைத்துப் போவது நல்லது!...

அரசன்: அரண்மனை!...அரண் என்றால் கோட்டை-மனை என்றால் வீடு-கோட்டைவீடு! கோட்டை வீடு!...கோட்டை விடு!...எதைக் கோட்டை விடுவது?

அமை: அரசே! அரண்மனைக்குச் செல்லலாம்.

அர: முடியாது-நான் ஆரண்யத்துக்குத்தான் செல்வேன்-நான் திரும்பிவர பதினாலு வருஷங்கள் பிடிக்கும்-அதுவரையில் இந்த நாட்டை என் கிரீடம் ஆளட்டும்-இந்தாரும் அமைச்சரே!...இந்தக் கிரீடத்தின் மீது சிம்மாசனத்தைத் தூக்கி வைத்து, எனக்குப் பதிலாக நீர் ஆளும்! இல்லாவிட்டால் நெருப்பு ஆளட்டும்-(என்று கிரீடத்தை அமைச்சர் கையில் கொடுக்கிறான்-பிறகு வெளியே போவது போல நடக்கிறான். பின் திரும்பி வந்து)

அடடே! அமைச்சரே! கிரீடத்தையா கொடுத்துவிட்டேன்?-இதை சிம்மாசனத்தில் வைக்கக்கூடாதே-பாபமாயிற்றே-சிம்மாசனம் அழுக்காகிவிடுமே-இதோ இதை சிம்மாசனத்தில் வையும், (என்று கிரீடத்தை வாங்கிக் கொண்டு, தன் பாதரட்சைகளைக் கழற்றி, அமைச்சர் கையிலே கொடுக்கிறான். அவரும் அவைகளைத் தூக்கிக்கொண்டு நிற்கிறார்.)

அரச: (கிரீடத்தைப் பார்த்தபடி) உஹூம்! கண்டு மயங்காத பேர்களுண்டோ; ராஜபேகத்திலே, அதிகாரத்திலே-உனைக்கண்டுமயங்காத பேர்களுண்டோ?-(பாட்டை முடித்து) ஏ! கிரீடமே! நவரத்னங்களும், முத்துக்களும் வைத்து இழைக்கப்பட்ட தங்கக்கூறையே! என் தலைக்கு நீ ஒரு பாரமே!...(என்று கிரீடத்தைத் தன் தலையில் வைத்துக் கொள்கிறான். அமைச்சர் கையிலே இருக்கும் பாதுகைகளைப் பார்க்கிறான்.)

அர: (அமைச்சரிடம்) இது என்ன அதிசயம்! மந்திரியாரே!-பாதுகையை கையிலே போட்டுக்கொண்டு நிற்கிறீர்?-ஓகோ! பாதுகை-என்றதும், கையிலே மாட்டிக் கொண்டீரோ-மகா புத்திசாலி அய்யா நீர்-இது பாதக்கை!-அதனால், பாதத்தில் மாட்டிக் கொள்ளும்-'பாதுகையே!...பாதுகையே!" (என்று பாடுகிறான்.)

குருநாதர்: (எழுந்து) அமைச்சரே!...அரசரின் கிலே, எனக்கு மனக்கிலேசம் தருகிறது-காணச் சகிக்கவில்லை-உடனே அழைத்துப் போக ஏற்பாடு செய்யுங்கள்!

அரச: (அதைக்கேட்டுவிட்டு) ஏ, உலகம்!...

உலக: அரசே!...

அரச: யார் அது?...அந்தப் பிராணி யார்?

உலக: அவர்தான் பிரபு, நமது குருநாதர்

அரச: குரு-நாதர்,-ஓ-குரு என்ற பெண் மணிக்கு இவர் நாதரோ?-அது என்னடா; பெண்ணுக்குப் போய் குரு என்று பெயர் வைத்திருக்கிறார்கள்?

உலக: இல்லை பிரபு-குருநாதர் என்றால்; பெரிய மகான்!

அரச: ஆங்! (ஆச்சரியமாக) மானே பெரிசு!-

உலக: இல்லை சிறந்த பக்திமான்!

அர: மாருடா இவன்?-மானேயா என்று கேட்டால் மான் என்கிறான்-மான்!-ஏ மானே! (குருநாதரிடம் போய்) வள்ளிமானே! ஒரு புள்ளிமான்-(என்று கேலியாகப் பாடுதல்) ஆகா-நான் அமைச்சரிடம் ராஜ்யத்தை ஒப்பு

வித்துவிட்டு, காட்டுக்கல்லவா வந்திருக்கி றேனை- அப்படியானால் இந்த மான்-வள்ளி மானுமல்ல; புள்ளி மானுமல்ல; இது மாய மான! மாரீசமான!-இது ராமா! ராமா! என்று கத்தும்-(உலகப்பனைப்பார்த்து) ஏ! லக்ஷ்மண; பக்தியோடு கத்துகிறது என்று ஏமாந்து விடாதே! எடு வில்லை! தொடு கணையை!- (என்று வானை உருவி உலகப்பனிடம் நீட்ட, உலகப்பன், அந்த வானைத் தொடுகிறான்) ஏய்! தொடு கணையை என்றால், கணையைத் தொடுகிறாயா நீ!-தொடுக்க வேண்டும் என்று அர்த்தமடா, முட்டாளே!

அரிஹரநாதர்: (தமாஷாக) அரசே!-குருவைக் கேலி செய்யாதீர்கள்!- அவாள்! பெரியவாள்!-

அரச; என்னிடமிருப்பது என்ன; சின்ன வாளோ?-இதுவும் பெரிய வாள்தான்!-அதுவும் போர்வாள்! யார் தடுத்தாலும் பாயக் கூடிய போர்வாள்!.. (வானை சுழற்றிக்கொண் டே, ஆடியபடி) "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது!-" என்று பாடுகி றான்-

குரு: அமைச்சரே மன்னர்பிரானை இப்படி வேடிக்கை பார்ப்பது வேதனையாக இல்லையா? உடனே அழைத்துச் செல்லுங்கள்-ஏய், உல கப்பா!...என்ன செய்கிறாய்?...

அர: உலகப்பனா?-ஆடுகின்றாய் உலகப்பா! ஆர்ப்பரிட்டக்காரர் இதை ஒப்பாரப்பா! (சீமான் சபையைப் பார்த்து) தேடப்பா! ஒரு வழியை என்று சொன்னேன்-இந்த சேதி தப்பன் யோசித்து சித்தம் சோர்ந்தான்! (கம்பீரமாக) இங்கிலீயில் இருப்பதனால் உல கப்பா! நீ!-புதுக்கணக்குப் போட்டு விடு! பொருளையெல்லாம் பொதுவாக எல்லார்க் கும் குத்தகை செய்!

[இந்தசமயம் அமைச்சரும், குருநாதரும் அரசனை அழைத்துச் செல்லுமபடி செய் கை காண்பிக்கின்றனர்.]

உலக: வாருங்கள், பிரபோ-உடனேசென்று பொருளையெல்லாம பொதுவாக்க, குத்தகை செய்து விடுவோம்.

[அரசனை அழைத்துப் போக ஒருவீரன் வணங்கி நிற்கிறான். அவனைப் பார்த்த வுடன் அரசன் நடுங்குகிறான்.]

உலக: பயப்படாதீர்கள் பிரபு-இவர் உங்கள் வீரன்!

அர: என்னது? பயமா? நான பயப்படுகி றேன்? (குருநாதரை ஜாடை காட்டி) இந்த சிறுநரியைக் கண்டு இந்த சிங்கம் அஞ்சு வதா?

"அச்சமில்லை, அச்சமில்லை; அச்சமென்ப
தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தபோதும்
அச்சமென்பதில்லையே"!

[என்று உரத்த குரலில் பாட, உலகப்ப னும், வீரனும் அரசனை உள்ளே இழுத்துச் செல்கின்றனர். கூடி யிருபபோரெல்லாம் 'இச்'சென்ற பரிதாப ஒலி எழுப்புகின்ற னர்.]

(அரசன் போனபின்னர்...)

குருநாதர்: மாண்புமிக்க சீமான்களே-பகவர் னின அருள் பெற்ற செல்வர்களே-இந்த மணிமகுடபுரி சாம்ராஜ்யத்தில் பாவச் செயல் களின் தொகையும் பெருகிவிட்டது. காவி அணிந்தோரை தூற்றி வாழும் கூட்டமும் அதிகரித்துவிட்டது. அதனை பலனைத்தான் சற்று முனனர் நாம் இந்த திருச்சபையிலே கண்ணால் கண்டோம்.

எம்பெருமானைப் பிடித்த கோபாக்கினி தான இந்த கோவேந்தனை இப்படியெல்லாம் பிடித்தாட்டுகிறது. இனியும் இந்த ராஜ்யத் திலே நாத்திகம் பேசுவோரையும், நாத்தமும் பேறியோரையும் அனுமதித்துக் கொண்டே இருந்தால், இப்போது மன்னனைப் பிடித்தி ருக்கிற இந்த நோய் பின்னர் ஒவ்வொரு சீமா னையும் பிடித்து வாட்டும்-அதன் பிறகு ஒவ் வொரு பிரஜைகளையும் பிடித்து வருத்தும். அவ்வளவு ஏன? ஆண்டவனே இந்த மணி மகுடபுரி சாம்ராஜ்யத்தையும் அழித்துவிடு வான்.

ஆகவே-சீமான்களே-இந்த நாட்டுக்கு ஒரு குறைவும் வராமல் காப்பதற்கு நான இன்றி ரவு என அந்தராத்மாவை ஆண்டவனுடன் பேச அனுமதிப்பது என்று முடிவுசெய்து விட்டேன. ஆண்டவன் எனனுடன் விரை வில் வந்து பேசுவதற்காக மணிமகுடபுரியின் க்ஷேமலாபத்தில் அக்கரை கொண்ட நீங்கள் ஒவ்வொருவரும் இப்போது-இச்சபையில் அவன் திருநாமத்தைத் தோத்திரம் செய்ய வேண்டுகிறேன.

சீமான் சபையில் ஆண்டவன் பிரார்த்தனை நடைபெருகிறது.

எல்லா சீமான்களும் பஜனை பாடுகின்ற னர்.

(திரை விழுகிறது)

(தொடரும்)

ஆசிரியர் மு. க. அவர்கள் திடீரென்று சென்ற கிழமை கடுமையான கண் நோய்க்கு இலக்காகி நோய்ப் படுக்கையிலிருப்பதால் 'மணிமகுடம்' நாடகத்தை மேற்கொண்டு எழுத இயலவில்லை.

ஆசிரியர் உடல் நலம் பெற்றவுடன் நாடகத்தின் மிகுதிப் பகுதி 'முரசொலி' வார இதழில் தொடர்ந்து இடம் பெறும். நண்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம்.

மலர் பிரித்து மணம் நுகர்ந்தீர்கள். மலர் பற்றிய உங்கள் கருத்துக்களை ஒரு அஞ்சல் அட்டை மூலம் தெரியப் படுத்துங்கள்.


ஜனவரி 5 முதல்
சென்னை
பிராட்வே · கெயிட்டி · சயானி
மற்றும் தென்னகமெங்கும்
கஸ்தூரி பிலிம்ஸ்
மேனகா
வடுவூராரின் பிரசித்திபெற்ற நாவல்
தயாரிப்பு, டைரக்ஷன்
வி.சி.சுப்புராமன்
மதராஸ் பிக்சர்ஸ்
வெளியீடு
G.R.RAO


எதிர்பாருங்கள்
மேகலா பிக்சர்ஸ்
ராங்கோன் ராதா
கதை
அறிஞர் அண்ணா
வசனம்
மு.கருணாநிதி
டைரக்ஷன்: A.காசிலிங்கம்
நேஷனல் பிக்சர்ஸ் சென்னை.1.
G.H.RAO